# தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்

கே.எம். வேங்கடராமையா

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

❋❋❋

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

❋❋❋

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்

# Administration and Social Life under the Maratha Rulers of Thanjavur

❋


*ஆசிரியர்*

**கே. எம். வேங்கடராமையா, எம். ஏ.,**

*சிறப்புநிலைப் பேராசிரியர்*

*அரிய கையெழுத்துச் சுவடித் துறை*


❋


**தமிழ்ப் பல்கலைக் கழகம்**

**தஞ்சாவூர் — 613 001**

செப்டம்பர் 1984

முதற் பதிப்பு 500 படிகள்

விலை

*கிடைக்குமிடம்*
**தமிழ்ப் பல்கலைக் கழகம்**
**தஞ்சாவூர் — 613 001**

# பதிப்புரை

## வரலாற்று நூல்கள்

திருச்சிக்குக் கிழக்கே கொள்ளிடத்துக்குத் தெற்கே காவேரி பாயும் நாட்டினை மராட்டிய அரசர்கள் 1676 முதல் 1855 வரை ஆட்சி புரிந்தனர். அன்னோர் வரலாற்றை முதன்முதலில் உறிக்கி ( Hickey )என்பவர் 'தஞ்சாவூர் மராட்டிய அரசு' (Tanjore Maratha Principality) என்ற பெயரில் ஆங்கிலத்தில் எழுதினார். திரு. கே. ஆர். சுப்பிரமணியன் என்பார் 'தஞ்சாவூர் மராத்திய அரசர்கள்' (Maratha Rajas of Tanjore) என்ற நூலில் சிறிது விளக்க மாக எழுதினார். அவர்க்குப் பின்னர் திரு. சி. கே. சீனிவாசன் என்பார் 'கர்நாடகத்தில் மராத்தியர் ஆட்சி' (Maratha Rule in the Carnatic) என்ற நூலை அழகுற எழுதினார். ஸ்வார்ஷ் (Schwartz) பாதிரியாரைப் பற்றி எழுதிய வரலாற்றிலும் பிஷப் ஹீபர் பற்றிய நூலிலும் தஞ்சை மராட்டிய மன்னர் வரலாற்றுச் செய்திகள் பதியப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்ட மானுவல் என்ற நூலிலும் வெங்காசாமிராவ் மராட்டிய அரசர் வரலாற்றைச் சுருக்கமாக வரைந்துள்ளார். 'போன்ஸ்லே வம்ச சரித்திரம்' என்ற தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள மராத்திய கல்வெட்டின் தமிழாக்கம் 1802 வரை யிலான வரலாற்றை விளம்புகிறது.

இந்நூல்கள் யாவும் அரசர்களின் பெரு வாழ்வு, வென்ற போர்கள், தோற்ற சண்டைகள், செய்து கொண்ட ஒப்பந்தங்கள் ஆகியவற்றைக் கூறுவனவாக உள்ளனவேயொழியத் தம் ஆட்சிக்குட்பட்ட சமுதாயத்துக்கு மராத்திய அரசர்கள் செய்த நன்மைகள், அந்நாளைய இசை, நாடகம், வாணிபம், உழவு, பிற தொழில்கள், பன்மொழி இலக்கியம் முதலிய செய்தி களைக் கூறுவனவாக இல்லை. அங்ஙனம் கூற முற்படினும் சிறிதளவே குறிப்பிடுவனவாக உள்ளன.

## மோடி ஆவணங்கள்

ஆகவே மக்கட் சமுதாய நிலையை அறிவிக்கும் சான்றுகள் உள்ளனவா என்று வினவியபொழுது, தஞ்சை சரஸ்வதி மகாலில் தஞ்சையை ஆண்ட மராட்டிய அரசரது அன்றாடச் செய்திகள் குறிக்கப்பெற்ற மோடி ஆவணங்கள் பல குவிந்திருந்தன என்றும், 1950–52இல் மோடி ஆவணக்கட்டுக்களை யெல்லாம் மேஜர் எஸ். என். கத்ரே (Major S. N. Gadre) அவர்கள் ஆய்ந்தார் என்றும், அவர் அவ்வாவணங்களையெல்லாம் மூன்று பகுதிகளாகப் பிரித்தார் என்றும், A பகுதி B பகுதி என்றவை சென்னை எழும்பூர் ஆவணக் காப்பகத்துக்கு நிலையாகக் காப்பாற்றுதற் பொருட்டு அனுப்பப் பெற்றனவென்றும், C பகுதி ஏறத்தாழ 900 கட்டுக்கள் சரஸ்வதி மகாலில்

விட்டு வைக்கப்பட்டன என்றும், அவை 'பயனற்றவை; அழித்தற்குரியன' என்று கருதப்பட்டன என்றும், அவற்றைத் தஞ்சைப் பெருமக்கள் அழிக்கக் கூடாது என்று தடுத்தமையால் அவை சரஸ்வதிமகாலில் பேணிக் காப்பாற்றப் பெற்று வருகின்றன என்றும், அவற்றுள் சில மோடி ஆவணங்கள் 11 சுவடி களில் மராட்டிய மொழியில் எழுதப்பெற்று அவற்றுள்ளும் சில தமிழில் பெயர்க் கப்பட்டன என்றும், மேலும் ஒவ்வொரு சுவடியிலும் சராசரி 50 பக்கங்கள் கொண்டனவாயுள்ள 48 சுவடிகளில் 1977–78இல் பல மோடி ஆவணங்களின் சுருக்கம் எழுதப்பெற்றுள்ளன என்றும் தெரியவந்தன.

## ஆய்வுப் பணி

மேலேகண்ட 11 கையெழுத்துச் சுவடிகளையும், 48 கையெழுத்துச் சுவடிகளையும் ஒரு முறை வேகமாகப் படித்துக் குறிப்புக்களை எடுத்துக் கொண்டபொழுது 18, 19ஆம் நூற்றாண்டின் சமுதாய வாழ்க்கையை அறிய முடியும் என்ற கருத்து வேரூன்றியது. இதனை மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள் திருமுன் தெரிவித்துக் கொண்டேன். அவர்களும் ஒருமுறை சரஸ்வதிமகாலுக்குச் சென்று மோடி ஆவணக்கட்டுக்களையும், மோடி தமிழாக் கக்கையெழுத்துச் சுவடிகளையும் நோக்கி, அங்ஙனமே அவ்வாவணங்களின் துணை கொண்டும், தொடர்புடைய நூல்களைப் படித்தும் "**தஞ்சை மராட்டிய மன்னர் அரசியலும் அவர்கள் காலச் சமுதாய வாழ்க்கையும்**" என்ற தலைப்பில் நூலை எழுதுவதற்கு ஒப்புதல் அளித்தார்கள். மேலும் மேற்குறித்த 11 கையெழுத்துச் சுவடிகளில் உள்ள தமிழாக்கப் பகுதிகளையும், மோடி ஆவணங்களினூடே காணப்பெற்றனவாயும் தஞ்சை சரஸ்வதி மகாலில் படி யெடுத்து வைக்கப்பெற்றுள்ளனவும் ஆன தமிழ் ஆவணக் கையெழுத்துச் சுவடி (எண் 1633) யையும் தொகை கொடுத்துப் படியெடுத்துப் பெற ஆணை யிட்டருளினார்கள். அங்ஙனமே அப்பன்னிரண்டு சுவடிகளும் 7 சுவடிகளில் படியெடுத்துத் தரப்பெற்றன.

## மோடி ஆவண மொழிபெயர்ப்பு

மேலும் சில மோடி ஆவணங்களை மொழிபெயர்ப்பின் பல செய்திகள் கிடைக்கக்கூடும் என்று கருதித் திருமதி பத்மாவதிபாய் என்ற ஒருவர், மோடி எழுத்துப் பெயர்ப்பாளர் ஆக நியமனம் செய்யப் பெற்றார். அவர் 13—5—1982 முதல் 9—10—1682 வரை சில மோடி ஆவணங்களைத் தமிழில் மொழி பெயர்த்தார். அவை 9, 10, 11, 12, 13 என்ற எண் கொண்ட சுவடிகளாக உள்ளன. திருமதி எஸ். பத்மாவதிபாய் மொழிபெயர்ப்புச் செய்யுங்கால் மோடி ஆவணங்களின் இடையே கிடைத்த தமிழ் ஆவணங்கள் அரிய கையெழுத்துச் சுவடித்துறை முதுநிலை ஆய்வாளர் டாக்டர் திரு. ம. சா. அறிவுடைநம்பி யாலும் என்னாலும் படியெடுக்கப்பெற்றன. அவை இங்கு எட்டாவது சுவடியாகும்.

இங்ஙனம் மேலே குறிப்பிட்ட வண்ணம் பெற்றுள்ள 13 கையெழுத்துப் பிரதிகளில் கண்ட செய்திகளும், மேலே 48 சுவடிகளில் உள்ள செய்திகளில் பெரும்பாலனவும், அடைவு அட்டைகளில் குறிக்கப்பெற்றுப் பல தலைப்புக்களின் கீழ் வரிசைப்படுத்தப் பெற்று 34 தலைப்புக்களில் இந்நூல் எழுதப்படலாயிற்று.

## அணுகிய முறை

மேற்கூறிய மோடி ஆவணத் தமிழாக்கத்துள் கண்ட செய்திகளே இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவற்றை உறுதிப்படுத்தும் செய்திகள் அடிக்குறிப்பாகத் தரப்பெற்றுள்ளன. வரலாற்றாசிரியர்கள் பிற ஆதாரங்களைக் கொண்டு எழுதிய செய்திகள் பல இருப்பினும் அவை நமக்குக் கிடைத்துள்ள மோடி தமிழாக்கத்தில் இடம் பெறவில்லையெனில் அவை பெரும்பாலும் இந்நூலில் இடம் பெறவில்லை என்னலாம்.

தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள எல்லா ஆவணங்களும், சென்னை ஆவணக்காப்பகத்தில் உள்ள மோடி ஆவணங்களும், திருப்பதி அருங்காட்சியகத்தில் உள்ள மோடி ஆவணங்களும் மொழிபெயர்க்கப்பெறின் மேலும் பலப்பல செய்திகள் கிடைக்கக்கூடும்.

## அடிக்குறிப்புக்கள்

அடிக்குறிப்பாக 3–171, 6–325 என்று இன்னோரன்னவாறு கொடுக்கப் பட்டிருப்பின் நம்மிடம் இங்கு உள்ள கையெழுத்துப் பிரதி எண் 3இல் பக்கம் 171இலும், கையொழுத்துப்பிரதி 6இல் பக்கம் 325இலும் அச்செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன என்றும், ச. ம. மோ. த. 31–24 என்று இருப்பின் சரஸ்வதி மகாலில் உள்ள 48மோடித் தமிழாக்கச்சுவடிகளில் 31ஆவது சுவடியில் 24ஆவது பக்கத்தில் அச்செய்தி காணப்படும் என்றும் இந்நூலைப் படிப்பவர்கள் அறியவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## மேலும் செய்யவேண்டிய பணி

சரஸ்வதி மகாலில் உள்ள 11 கையெழுத்துப் பிரதிகளில் மோடியில் உள்ள சிலவற்றை மராட்டிய மொழியில் பெயர்த்து எழுதியிருப்பினும் பல இன்னும் மொழிபெயர்க்கப்படவில்லை. அவற்றை மொழிபெயர்க்கவேண்டியது இன்றியமையாத செயலாகும்.

தஞ்சையில் துணை நீதிமன்றத்தில் ( Subordinate Judge's Court ) 1912க்குரிய 26ஆம் எண் அசல்வழக்கு நடந்ததாகத் தெரிகிறது. அது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது, முதலிரண்டு பிரதிவாதிகட்கு முதல் சாட்சி ஆகிய திரு. எம். எஸ். கண்டிகை ( M. S. Ghantigai ) என்பவர் அந்த வழக்குக்குத் தொடர்புடைய பல ஆவணங்களை மொழிபெயர்த்துள்ளதாகத் தம் வாக்குமூலத்தில் கூறியுள்ளார் (பக்கம் 10, வரி29).

இவ்வழக்கிலேயே, தஞ்சை சமஸ்தானச்சுவடிப் பொறுப்பாளர் ( Record keeper, Palace Estate, Tanjore ) ஆக இருந்தவரும், மேற்கண்ட வழக்கில் 49ஆவது சாட்சியாக விசாரிக்கப்பட்டவரும் ஆன திரு. கிருஷ்ணராவ் என்பவர் சில மோடி ஆவணங்களை மொழிபெயர்த்துள்ளதாகவும், அவற்றை நீதிமன்றத்திலேயே மொழிபெயர்த்ததாகவும் கூறியுள்ளார் (பக்கம் 395 ). இம் மொழி பெயர்ப்புக்கள் கிடைக்கப்பெறின் அவற்றின் துணைகொண்டு அந்நாளைய அரண்மனைப் பழக்க வழக்கங்களைப் பற்றியும், அரசியல் அலுவலர்கள் பலரைப் பற்றியும் அறிந்துகொள்ள வாய்ப்பாகும்.

18, 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மராட்டிய அரசர் ஆட்சி செய்த தஞ்சைப்பகுதியில் வாழ்ந்த குடிமக்களின் வரலாற்றை அறிவதற்குரிய மோடி ஆவணங்கள் காகிதத்தில் உள்ளமையால் அவற்றைப் போற்றிப் பேணுதல் நம் கடமையாகும். இம்முயற்சியில் தஞ்சை சரஸ்வதிமகால் பெரிதும் ஈடுபட வேண்டும் என்பது எல்லாருடைய எண்ணமும் ஆக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## நன்றியுரை

இவ்வாவணங்களைப் படித்து ஆய்வு செய்யுமாறு பணித்தமையோடு, அவ்வப்பொழுது ஊக்கியும், இந்நூலிற் கண்ட கட்டுரைகள் எல்லாவற்றையும் வரி வரியாகப் படித்துத் தக்க மாற்றங்களைக் கூறிச் செம்மைப்படுத்தியும், பற்பல அறிவுரைகள் தந்தும், இடையறாது கண்காணித்தும், இந்நூல் இந்த அளவில் உருவாகியதற்கு உறுதுணையாய் இருந்த தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மாண்புமிகு **டாக்டர். வ அய். சுப்பிரமணியம்** அவர்கட்கு நன்றி உரியதாகும்.

அவ்வப்பொழுது எனக்குத் தோன்றிய ஐயங்களை நீக்கி அரிய செய்திகளைக்கூறி ஊக்கம் அளித்த தஞ்சை அரண்மனை மூத்த இளவரசர் **ராஜேஸ்ரீ ராஜாராம் ராஜாசாஹேப்** அவர்கட்கு நன்றியறிவுடையேன்.

தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்து நூலகர் திரு. பஞ்சநதம் அவர்களும், உதவி நூலகர் திரு. சீராளன் அவர்களும் நான் வேண்டும் பொழுதெல்லாம் வேண்டிய நூல்களை எடுத்துத் தந்து உதவியமைக்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன்.

மேற்படி நூல் நிலையத்துத் தமிழ், தெலுங்கு, மராட்டிய, சமஸ்கிருதப் புலவர்கள் தம் கருத்துக்களை அவ்வப்பொழுது வழங்கியமைக்கு நன்றி.

கோயில்கள் முதலியவற்றின் படங்களை அழகுற எடுத்துத் தந்த தஞ்சை ஜெயபாலன் அவர்களுக்கும் நன்றி.

காலதாமதம் செய்யாமல் இன்முகத்தோடு தட்டச்சுச் செய்து கொடுத்த திரு. கு. ச. மகாலிங்கம் அவர்கட்கு நன்றி.

*தமிழ்ப் பல்கலைக் கழகம்,*
*தஞ்சாவூர்.*

**கே. எம். வேங்கடராமையா**
*சிறப்புநிலைப் பேராசிரியர்*

# தஞ்சை மராட்டிய மன்னர் கால
# அரசியலும் சமுதாய வாழ்க்கையும்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நூன் முகம் (Introductory) | ... | 1 |
| 2. | ஆட்சிப்பரப்பும் உட்பிரிவுகளும் | ... | 12 |
| 3. | அரசமுறை | ... | 14 |
| 4. | அரசர் பற்றிய செய்திகள் | ... | 16 |
| 5. | சிவாஜி வெங்காஜிக்கு எழுதிய கடிதங்கள் | ... | 36 |
| 6. | கும்பினியுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் | ... | 47 |
| 7. | ஆங்கிலேய அதிகாரிகள் | ... | 56 |
| 8. | அரசு அலுவல்களும் அலுவலர்களும் | ... | 73 |
| 9. | அண்டை நாடுகளுடன் தொடர்பு | ... | 88 |
| 10. | சரபோஜியின் தல யாத்திரைகள் | ... | 98 |
| 11. | அரசாங்க வரவு | ... | 134 |
| 12. | நாணயங்கள் | ... | 149 |
| 13. | அளவைகள் | ... | 164 |
| 14. | நீதிமன்றங்கள் | ... | 167 |
| 15. | கோயிற் பணிகளும் சமயப்பொறையும் | ... | 187 |
| 16. | இசை நாடகம் நாட்டியம் | ... | 215 |
| 17. | கல்வி நிலையங்கள் – சரஸ்வதிமகால் | ... | 239 |
| 18. | நிலக்கொடை சத்திரங்கள் பலவகை அறங்கள் | ... | 259 |
| 19. | மருந்து அல்லது வைத்தியம் | ... | 285 |
| 20. | அரண்மனையில் நடத்திய விரதங்கள் பண்டிகைகள் | ... | 308 |
| 21. | உடன்கட்டையேறுதல் | ... | 317 |
| 22. | தேவதாசிகள் – பெண்களைவிற்றல் | ... | 321 |
| 23. | கலியாண மகால் – மங்களவிலாஸ் – அக்காமார் | ... | 329 |
| 24. | பழக்க வழக்கங்கள் | ... | 339 |
| 25. | அந்தணர் செய்த யாகங்கள் | ... | 372 |
| 26. | மிகு பெயலும் பெயலின்மையும் | ... | 377 |
| 27. | விலைவாசி | ... | 381 |
| 28. | தொழில்கள் | ... | 390 |
| 29. | வலங்கை இடங்கைப் பூசல்கள் | ... | 408 |
| 30. | சிற்பமும் ஓவியமும் | ... | 415 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 31. | மடங்களும் தம்பிரான்களும் | ... | 422 |
| 32. | தமிழுக்கு அளித்த ஆதரவு | ... | 442 |
| 33. | மஹால்களும் கானுக்களும் | ... | 452 |
| 34. | 1798க்குப் பிறகு | ... | 461 |


## இணைப்புக்கள்


| | | | |
|---|---|---|---|
| I | Administration and Social Life under tha Maratha Rulers of Thanjavur | ... | 473 |
| II | தஞ்சை மராட்டிய மன்னர் வழி முறை | ... | 505 |
| III | தஞ்சை மராட்டிய மன்னர்களின் சத்திரங்களும் அவை உள்ள ஊர்களும் | ... | 506 |
| IV | தோட்டங்கள் 92 | ... | 507 |
| | சொல்லடைவு | ... | 509 |
| | படங்கள் | | |

# 1

# நூன்முகம் (Introductory)

தஞ்சையில் ஆட்சிபுரிந்த விஜயராகவ நாயக்கருக்கும், மதுரையில் ஆட்சிபுரிந்த சொக்கநாத நாயக்கருக்கும் பகைமையிருந்து வந்தது. ஒருசமயம் மதுரை நாயக்கர், தஞ்சை நாயக்கரின் மகளாரை மணம் வேட்டார். தஞ்சை நாயக்கர் தன் மகளை மகட்கொடை நேர்தற்கு விரும்பவில்லை. மதுரை நாயக்கர் தஞ்சைமேல் படையெடுத்தார். தஞ்சை நாயக்கராகிய விஜயராகவர் தன் அரச குடும்பத்தவர் எல்லோரையும் பார்த்துத் தான் வெற்றி பெற்று வாராவிடில் இறந்துபடுக என்று கூறி இதற்கான வழிவகைகளை ஏற்பாடு செய்து போர்க்குச் சென்றார்; போர்க்களத்தில் இறந்தார். முன்னமே ஏற்பாடு செய்தவண்ணம் அந்தப்புர மகளிர் யாவரும் இறந்தனர். எனினும் விஜய ராகவருடைய மாதேவியருள் ஒருவர் தன் நான்கு வயது மகனை ஒரு தாதியிடம் கொடுத்துத் தப்பியோடுமாறு செய்தார்.

தஞ்சை நாயக்கர் இறந்ததும், மதுரைச் சொக்கநாத நாயக்கர் தனது தம்பி அளகிரி என்பவரைத் தஞ்சையில் ஆட்சி செய்யுமாறு அனுப்பினார். சில ஆண்டுகள் மதுரைக்கு அடங்கியிருந்த அளகிரி, சுயேச்சையடைய விரும்பினார். இங்ஙனம் அளகிரி மாறியது அவருடைய "அமைச்சர் ஆகிய ராயசம் வெங்கண்ணா" என்பவராலேயேயாம்.

இதற்கிடையில் விஜயராகவ நாயக்கருடைய மகன் செங்கமலதாசு என்ற பெயரில் நாகப்பட்டினத்தில் வளர்ந்துவருவதை அறிந்த வெங்கண்ணா அளகிரியை நீக்கிச் செங்கமலதாசை அரசனாக ஆக்க நினைத்தார்; நாகப் பட்டினத்துக்குச் சென்றார்; செங்கமலதாசுடன் பீஜபூருக்குச் சென்றார்; பீஜபூர் சுல்தான் உதவியை நாடினார். பீஜபூர் சுல்தானும் தன் தானைத் தலைவராக விளங்கிய ஏகோஜியைப் பெரிய தானையுடன் அனுப்பினார்.

ஏகோஜி, வழியில் ஆரணியை வென்றுகொண்டு தஞ்சை நோக்கி வந்தார்; தஞ்சைக்கு அருகில் அய்யம்பேட்டையில் அளகிரியின் தானையைத் தோல்வியுறச்செய்தார். அளகிரியும் கோட்டையை விட்டோடினார். ஏகோஜியும் தஞ்சையைக் கைப்பற்றினார்; செங்கமலதாசைத் தஞ்சைக்கு அரசன் ஆக்கினார்; பல பரிசுகளைப் பெற்றுக்கொண்டு கும்பகோணத்தில் தங்கி இருந்தார்.*

செங்கமலதாசு தன்னை வளர்த்த நாகப்பட்டினத்தாரை அமைச்சராகவும் தானைத்தலைவராகவும் ஆக்கினார். ராயஸம் வெங்கண்ணா இது குறித்து வருந்தினார்; செங்கமலதாசுக்குப் பாடம் கற்பிக்க நினைத்து, ஏகோஜியை அனுப்பித் தஞ்சையைக் கைப்பற்றி அரசு கட்டிலேறுமாறு வேண்டினார். ஏகோஜி முதலில் மறுத்தார்; பின்னர்த் துணிந்து தஞ்சைக்குச் சென்று அரசைக் கைப்பற்றினார். இது கி. பி. 1676இல் நிகழ்ந்தது.

ஏகோஜியின் தந்தை ஷாஜி கட்டளைப்படி ரகுநாத் நாராயண் ஹனுமந்தே என்பவர் ஏகோஜிக்கு உதவியாக இருந்தார். எனினும் ஏகோஜியின் போக்கு அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவர் சிவாஜியிடம் சென்று அவர்க்கு உதவியாக இருக்கத் தொடங்கினார்.

சிவாஜி, ஏகோஜிக்கு உரிய நாடுகளில் சரிபாதி தான் பெறவேண்டும் என்று கருதினார்; பல தடவை கேட்டனுப்பினார். ஏகோஜி கொடுப்பதாக இல்லை. சிவாஜி 1676இல் தென்னாட்டின்மேல் படையெடுத்துச் செஞ்சியை (GINGEE) வென்றார்; பின்னர் வேலூரைத் தாக்கினார்; வாலிகண்டபுரத்துத் தங்கி அரசாண்ட ஷெர்கான் லோடியைப் பல இடங்களில் பொருது பல இடங்களை வென்றார்; திருமழபாடியில் தங்கினார்; தன்னை வந்து காணுமாறு ஏகோஜிக்கு எழுதினார். ஏகோஜியும் சென்றார். சிவாஜி தனக்குரிய பங்கைக் கொடுக்குமாறு கேட்டார். ஏகோஜி மறுத்தார். சிவாஜிக்குரிய சினத்துக்கு இரையாகாமல் இருக்க ஏகோஜி கொள்ளிடத்தைக் கடந்து தப்பி ஓடிவந்துவிட்டார். சிவாஜி ஏகோஜியின் அமைச்சரைச் சிறைப்படுத்திப் பின் விடுதலை செய்தார்; கொள்ளிடத்துக்கு வடக்கிலுள்ள பகுதிகளையெல்லாம் தனக்குரியதாக ஆக்கிக்கொண்டார்; ரகுநாத் நாராயண் என்பவரிடம் வென்ற பகுதிகளை ஒப்படைத்தார். அந்நாளில் மராட்டியப் படைக்கும் ஏகோஜிக்கும் ஒரு போர் நடந்தது. முதலில் ஏகோஜி வென்றபோதிலும் மராட்டியப்படை ஏகோஜியின் படையை முறியடித்தது.

---

படைச் செலவுகளுக்குத் தொகை கொடுக்குமாறு கேட்டுத் திருமழபாடியில் தங்கியிருந்தார் என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம் கூறும் - பக்கம் 75, (சரசுவதி மகால் வெளியீடு, 1980).

இச்செய்திகளையெல்லாம் ரகுநாத் சிவாஜிக்கு எழுதினார். சிவாஜி ஒரு நீண்ட மடலை ஏகோஜிக்கு எழுதினார். அதில் ரகுநாதரொடு கலந்து உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு அறிவுரை கூறினார். ஏகோஜி தன் மனைவி தீபாபாயின் உதவியால் ரகுநாதரை வரச்செய்தார். ஓருடன்படிக்கை ஏற்பாடாயிற்று. அதன்படிக்குத் தஞ்சைப்பகுதி மட்டும் ஏகோஜிக்கு உரியது என்றும், அதற்காக 3 லக்ஷம் "பர்தோக்கள்" சிவாஜிக்குக் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இதற்கிடையில் சிவாஜி பீஜபூர் சுல்தானிடம் தஞ்சை உட்படத் தான் வென்ற பகுதிகளுக்குரிய ஆட்சியுரிமையைப் பெற்றார், இது ஏகோஜிக்கு மனவருத்தம் அளித்தது. ஆகவே ஏகோஜி அரசாட்சியில் வெறுப்புற்றார்; பைராகி போல ஆனார். இவ்வணம் வெறுப்புற்று இருப்பது கூடாது என்று சிவாஜி மீண்டும் ஒரு கடிதம் எழுதினார். பின்னர், கி. பி. 1680இல் சிவாஜியும் இறந்தார். ஏகோஜி சுயேச்சையாகச் செயல்படும் நிலையில் கி. பி. 1683 வரை ஆட்சி செய்தார். பெருவீரனாகத் திகழ்ந்திருந்தபோதிலும் தன் தமையனாரின் தொல்லைக்கு உட்படவேண்டியவராக ஏகோஜி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏகோஜிக்குப் பின் இவரது முதல் மகன் சாஹஜி அரசு கட்டில் ஏறினார். இவர் 1684 முதல் 1712 வரை ஆட்சி செய்தார். இவர் மிகச் சிறந்த அரசர். இவர் காலத்தில் பல மொழிகளிலும் இலக்கியங்கள் தோன்றின. இவரும் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்; பல மொழிகளிலும் பல நாடகங்களை இயற்றினார். இவர் காலத்தில் பல சிறந்த புலவர்களும் திகழ்ந்தனர். (இசை நாடகம் நாட்டியம் என்ற 16ஆம் தலைப்பில் காண்க). இவர்காலத்தில் சில போர்களும் நிகழ்ந்தன. ஒரு போரில் சேதுபதி தஞ்சைக்குரிய அறந்தாங்கிக் கோட்டையைப் பிடித்துக் கொண்டார்.

இவருக்குக் குழந்தைகள் இன்மையால் இவரது தம்பி முதலாம் சரபோஜியும் அவருக்குப்பின் அவர் தம்பி துக்கோஜியும் அரசர் ஆனார்கள், துக்கோஜி காலம் முதற்கொண்டு அண்டைநாடுகளோடு ஏதாவது ஒரு முறையில் போரிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ராமநாதபுரம், மதுரை, திருச்சி ஆகிய பகுதிகளில் அரசாட்சி செய்தவர்களுடன் சிறு போர்கள் நடந்தன. முதலாம் துளஜா (துக்கோஜி) ராமநாதபுரத்தின்மேல் சண்டைக்குச் சென்று வென்ற செய்தியை (செவி வழிச் செய்தியாக அறிந்ததை) ஒரு ஆவணம் குறிப்பிடுகிறது. *

18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆர்க்காட்டு நவாபுக்கு அடங்கியிருக்க வேண்டிய நிலை தஞ்சை மராட்டியருக்கு ஏற்பட்டது. தஞ்சை மன்னர்கள் நவாபுக்குக் கப்பம் செலுத்த வேண்டியவர் ஆயினர். 1732இல் சந்தா சாயேபு ஒரு தடவை தஞ்சையின் மேல் படையெடுத்தார். துக்கோஜி பெரும் பொருள் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டார்.

* 6 - 278, 279.

ஆங்கிலேயரது இடையீடும் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தொடங்கியது. பிரஞ்சுக்காரரும் தஞ்சைத் தரணியின் ஆட்சியில் தலையிட்டனர். கி. பி. 1759இல் காரைக்கால் பிரெஞ்சுக்காரருக்கு உரியதாயிற்று. கி. பி. 1749இல் ஆங்கிலேயர் தஞ்சை மன்னர்க்குரிய தேவிக்கோட்டையைத் தமக்கு உரியதாக ஆக்கிக்கொண்டனர்.

எப்பொழுதும் நவாபு, ' மராட்டிய அரசர் தமக்கு அடங்கியவர் ' என்றும், ' அவர்கள் தமக்குக் கப்பம் கட்டிவர வேண்டும் ' என்றும் வற்புறுத்தி வந்தார். பெரும்போர்கள் நிகழ்ந்தன. அப்போர்களுக்குப் பெரும் பொருள் வேண்டி வந்தது. ஆகவே கிழக்கிந்தியக் கம்பெனியுடன் மூன்று தடவை துளஜாவும், அவர்க்குப் பின் அமர்சிங்கும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அவ்வொப்பந் தங்களின்படி பல லக்ஷம் வராகன் கும்பினியாருக்குக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மராட்டிய மன்னர்கள் குடி மக்களிடத்தில் எவ்வளவு வசூல் செய்ய முடியுமோ அவ்வளவும் வசூல் செய்தார்கள். நவாபும் 1773 முதல் ஏறத்தாழ மூன்றாண்டுகள் நாட்டைக் கைப்பற்றியிருந்தார். அந்நாட்களில் குடிமக்களை எவ்வளவு கசக்கிப் பிழிய முடியுமோ அவ்வளவும் செய்து வசூல் நடைபெற்றது. பிரதாபசிங்கர் காலத்தில் 57½ லக்ஷம் வசூல் ஆகியிருக்க, நவாபு காலத்தில் 81 லக்ஷம் வசூல் செய்யப்பெற்றதெனின், வசூலின் கொடுமை அளவு தெரியவரும். இது இரண்டாம் துளஜா காலத்தில் நடந்தது.

நவாபின் ஆட்சி நீங்கித் துளஜா மீண்டும் அரசு எய்தியபோதிலும் பிறிதொரு தொல்லை வந்தது. அதுவே ஹைதர் படையெடுப்பு. 1781இல் ஏறத்தாழ ஆறு திங்கள்கள் தஞ்சைத்தரணி ஹைதர் அலியின் ஆட்சியில் இருந்தது. அப்பொழுது குடிமக்கள் அடைந்த இன்னல்கட்கு அளவில்லை. பஞ்சம் ஒருபுறம் ; நாட்டிலும் விளைவு குறைவு ; 1780இல் 10,439,057 கலம் விளைவு ; 1781இல் 1,578,220 கலம் விளைவு ; எனில் மக்கள் எவ்வளவு அல்லல் உற்றிருப்பர் என்பதை ஊகிக்கலாம். ஹைதர் படையெடுப்பின் விளைவால் பல ஏக்கர் நிலங்களும் பயிரிடப்படாதொழிந்தன ; நீர்ப்பாசன வசதிகளும் அழிக்கப்பட்டன. எனவே மக்கள் பலரும் நாட்டை விட்டு ஓடினர். மேலும் பாவா பண்டிட் என்பார் செய்த நிலச் சீர்திருத்தத்தின்படி கடுமையான வசூல் ; பின்னர் 1782இல் திப்புவின் படையெடுப்பு. திப்பு ஆங்கிலப் படையைத் தோல்வியுறச் செய்து மாயூரம் சீர்காழிப் பகுதிகளைக் கொள்ளை யிட்டார். இங்ஙனம் துளஜாவின் காலத்தில் மக்கள் தொல்லையுற்றனர். துளஜாவும் ஆங்கிலேயருடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களால் ஆங்கிலேயப் படைகள் தஞ்சையில் நிறுத்தப்பட்டன. மராட்டிய மன்னர், சேனைகள் இல்லாத வெறும் அரசராகி விட்டனர்.

இரண்டாம் துளஜா தனக்குப்பின் அரசராகச் சரபோஜியைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டார். துளஜாவின் தம்பி அமர்சிங்கு, சரபோஜியின் பாதுகாவலர் என்ற முறையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார் ; நாளடைவில் தாமே அரசர் ஆனார் ; இதனை உறுதிப்படுத்திக்கொள்ள அந்நாளைய கவர்னர்

ஜெனரலுக்கு முறையிட்டார். லார்ட் கார்ன்வாலிஸ் சென்னைக் கவர்னருக்கு எழுதினார். அந்நாளில் கவர்னராக இருந்த சர் ஆர்ச்சிபால்ட் காம்பெல் 1787இல் தஞ்சைக்கு வந்து 12 பண்டிதர்களின் கருத்தைக் கேட்டார். அவர்கள் சரபோஜியின் சுவீகாரம் செல்லாது என்று எழுதிக் கொடுத்தனர். ஸ்வார்ஷ் என்ற பாதிரியாரின் இடையீட்டினால் சரபோஜியின் உரிமைபற்றி மீண்டும் விசாரணை நடந்தது. சரபோஜியின் சுவீகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சரபோஜி அரசரானார்.

சரபோஜி அரசரானதும் கும்பினியாருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி தஞ்சை மாநகரம் மட்டும் இவர் ஆட்சிக்கு உட்பட்ட தாயிற்று. எஞ்சிய பகுதிகள் ஆங்கிலேயர் வசம் ஆயின. இரண்டாம் சரபோஜி ஒரு லக்ஷம் வராகனும், மொத்த நிகர வசூலில் 5இல் ஒரு பங்கும் பெறலாயினார்.

இரண்டாம் சரபோஜிக்கு ஒரே மகன் இருந்தார். அவர் இரண்டாம் சிவாஜி எனப்பெற்றார். இவர் 1832 முதல் 1855 வரை அரசராக இருந்தார். இவர்க்கு ஆண் குழந்தைகள் இல்லை. ஆகவே 1852ல் ஒரே நாளில் 17 பெண்களை மணம் செய்து கொண்டார்; எனினும் அவர்கள் திருவயிற்றில் குழந்தைகள் பிறக்கவில்லை. ஆகவே இவர் இறந்ததும் தஞ்சையில் பெயரளவில் இருந்த மராட்டிய மன்னர் ஆட்சியும் மறைந்தது. தஞ்சை மாநகரமும் ஆங்கிலேயர் நேர் பார்வைக்கு உட்படலாயிற்று.

இவ்வரசர்கள் ஆட்சி செய்த காலத்து எல்லாக் கணக்குகளும் பிறவும் மராட்டிய மொழியிலேயே மோடி எழுத்தில் எழுதப் பெற்றன. மராட்டியர் ஆட்சி, தஞ்சை நாயக்க மன்னர் ஆட்சிக்கு அடுத்து ஏற்பட்டது; ஆதலின் தெலுங்கு பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்ததாதல் வேண்டும். பெரும்பாலான மக்கள் பேசிய மொழி தமிழ் ஆகையால் தமிழ் மொழியும் வழக்கில் இருந்தது. அரசர்கள் வடமொழியிலும் வல்லுநராக இருந்தமையின் சமஸ்கிருதமும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவ்வெல்லா மொழிகளிலும் நூல்கள் எழுந்தன. நவாபு ஆட்சி செய்தமையாலும் முகமதியர் பலர் வாழ்ந்தமையாலும் அராபி மொழியும் பாரசீக மொழியும் சிலர் பேசினர். வேற்றுநாட்டவர் ஆகிய டேனிஷ்காரர் பிரஞ்சுக்காரர் ஆகியவர்களும் வாணிபத்திலும் உள்நாட்டு விவகாரங்களிலும் ஈடுபட்டமையால் அவர்கள் மொழியிலும் சில ஆவணங்கள் உண்டு. ஆங்கிலேயர்கள் மேலோங்கி நாட்டாட்சியைக் கைப்பற்றியமையால் ஆங்கிலம் கலந்து எழுதுதலும், ஆங்கிலத்திலேயே எழுதுதலும் ஏற்படலாயின. இங்ஙனம் பன்மொழிக் கலப்பு நிகழலாயிற்று. மக்களும் பல மொழிகளும் கலந்து பேசலாயினர் என்னலாம்.

மராட்டிய மன்னர்கள் மகாராஷ்டிரத்திலிருந்து வந்தவர்கள் ஆகலின் அவர்கள் மகாராட்டிர மகளிரையே மணம் செய்துகொண்டனர். முதல் அரசராகிய ஏகோஜிக்குத் தீபாபாயி அண்ணுபாயி என்ற இரு மனைவியர்;

அவரால் சேர்த்துக் கொள்ளப்பெற்ற மனைவியர் ஒன்பதின்மர். அவர்கள் ஈன்றெடுத்த மக்கள் எழுவர். இவர்கள் அரசுக்குரிமையுடையவர் அல்லர்.[1]

ஏகோஜியின் முதல் மகன் சாஹஜிக்கு ஒரே மனைவி சிமாபாயி. இவருக்குக் காமக்கிழத்தியர் பலர். இவர்க்குப் பிள்ளைகள் இல்லை.

சாஹஜியின் தம்பி முதலாம் சரபோஜி. இவருக்கு சுலக்ஷணாபாயி, அபரூபாபாயி, ராஜஸாபாயி என மனைவியர் மூவர்.[2]

சரபோஜியின் தம்பி துக்கோஜிக்கு ஐந்து மனைவியர். இவர் சேர்த்துக் கொண்ட மனைவியர் அறுவர். ஐவர் நாயுடு பிரிவைச் சேர்ந்தவர்.[3] ஒருவர் மராட்டிய குலத்தவர்; அன்னபூர்ணாபாயி என்று பெயர்; கத்திக் கலியாணம் செய்துகொள்ளப்பட்டவர்; இவ்வம்மையார் ஈன்றெடுத்தவரே பிரதாபசிம்மர்.

துக்கோஜிக்கு ஐந்து மக்கள்; பாபா சாகேபு, சையாஜி, அண்ணா சாகேபு, நானா சாகேபு, பிரதாபசிம்மர் என்பவர் ஆவர்.[3] முதல் இருவர் மராட்டிய மனைவியர்க்குப் பிறந்தவர். பிரதாபசிம்மர் பற்றி மேலே எழுதப் பட்டது. பாபாசாகேபு தன் தந்தைக்குப் பின் அரசரானார். இவருக்கு இரண்டாம் ஏகோஜி என்றும் பேருண்டு. இவர்க்கு ஐந்து மனைவியர்; தவிர, சேர்த்துக்கொள்ளப் பெற்றவர்கள் மூவர்.

பிரதாபசிம்மர்க்கு ஐந்து மனைவியர்; சேர்த்துக்கொள்ளப்பட்டவர் ஏழு பேர். இவர்க்குப்பின் அரசாண்ட இவர் மகன் இரண்டாம் துளஜா ஆறு பேரை மணந்தார்; இவரால் சேர்த்துக்கொள்ளப்பெற்றவர் யாவர் என்று தெரியவில்லை. இரண்டாம் சரபோஜிக்கு மனைவியர் இருவர். இவரது காமக்கிழத்தியர் பலர். அவர்கள் கலியாணமகால் மகளிர் எனப்பெறுவர். சிவாஜிக்கு முதலில் மனைவியர் மூவர். பின்னர் ஒரே நாளில் 17 பேரை மணந்தார். இவர்களை மணந்த மூன்றாண்டுகட்குப் பிறகு இறந்தார். இவருடைய காமக்கிழத்தியர் மங்களவிலாஸ சத்மத்தார் எனப்பெறுவர். அவர்கள் நாற்பத்திருவர்.

இவ்வரசர்களுடைய மனைவியர்களுட் பலரும், காமக்கிழத்தியர் பலரும், தத்தம் கணவன்மார் இறந்த பிறகு பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்தனர் என்று தெரிகிறது. கலியாண மகால் மாதராரும், மங்களவிலாஸ மாதராரும் இங்ஙனமே பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்தனர். எனவே அரச குடும்பம் அல்லது அரசரோடு பொருந்திய பெண்டிர் - செல்வ வளம் பொருந்தியவர் ஆயினும் கைம்பெண்களாக இருந்த அவலநிலை ஏற்படலாயிற்று.

---

1 பக்கம் 79, *போன்ஸ்லே வம்ச சரித்திரம்.*

2 பக்கம் 80, *போன்ஸ்லே வம்ச சரித்திரம்.*

3 Page 242, Maratha Rule in the Carnatic–C. K. Srinivasan.

மராட்டிய அரச குடும்பத்துக்குச் சொந்தமான குடும்பங்கள் தஞ்சை மராட்டியர் ஆட்சியெங்கணும் பரவி வாழ்ந்தனர்.

மராட்டியர் அரசியலிலும் பெரிய அலுவல்களில் மராட்டிய அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். இந்த அரசியல் அலுவலர்களில் சிலர் அப்பா அல்லது அண்ணா என்று குறிக்கப்பட்டவர்களும் உண்டு. இவர்கள் செல்வாக்குள்ளவர்கள் ; ஆனால் சிறு பிரிவினர் ஆவர்.

மேலே கண்ட அரசகுடும்பத்தவர் – அரச குடும்பத்தைச் சார்ந்தவர் – அரசரால் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாதரார், இவர்களுக்கெல்லாம் பணிவிடை செய்யப் பணிமகளிர் கூட்டம் பெருகியது. அவர்கள் அக்காமார் என்று கூறப்பட்டனர்.

மராட்டிய மன்னர்கள் மகாராஷ்டிரத்தில் இருந்து பிராமணர்களையும் பிராமணர் அல்லாதாரையும் குடியேற்றினர். அப்பிராமணர்களைத் தேசஸ்த பிராமணர்கள் என்று குறிப்பிடுவதுண்டு. அவர்களுக்குச் சுரோத்திரியம் இனாம் முதலியன கொடுத்து மராட்டிய மன்னர் ஆதரித்தனர்.

தேசஸ்த பிராமணர்கள் அல்லாது இந்நாட்டிலேயே இருந்த பிராமணர்கள் – வேதம் வல்லவர்கள் பலர் அரசின் ஆதரவு பெற்று வாழ்ந்தனர். அவர்கள் பெற்ற அறக்கொடைகள் பல. அவர்கள் செய்த யாகங்களும் பல.

அரசர்களும் தெய்வநம்பிக்கையுடையவர்களாய்ச் சமய ஒழுக்கங்கள் உடையவர்களாய் இருந்தமையாலும், அரசமாதேவிகளும் சமயச்சார்பான ஒழுக்கம் உடையராய் விரதங்கள் பண்டிகைகள் ஆகியவற்றை இடைவிடாது நடத்திவந்தமையாலும் அரண்மனையில் பிராமண–புரோகிதர் கூட்டம் பெருகியது. அவர்களுக்குத் தக்ஷிணைகள்–பொருட்கொடை அளித்தமையோடு சிறந்த உணவும் பல குறிப்பிட்ட நாட்களில் அளிக்கப்பெற்றன ; உலுப்பைகளும் தரப்பெற்றன. அந்தணர்கட்கும் யாத்திரை செய்பவர்க்கும் அன்னம் பாலித்தற்காக அமைந்த சத்திரங்களும் பல ஆயின.

எனவே மராட்டியர் அரசில் அரசகுடும்பத்தவரும், அவர்களைச் சார்ந்த குடும்பத்தவர்களும், பெரிய அதிகாரிகளும், கல்விவல்ல பிராமணர்களும், வைதீகச் சடங்குகளைச் செய்துவந்த புரோகிதர்களும் செல்வவளம் பொருந்தி வாழ்ந்தனர் என்பது சொல்லாமே அமையும்.

நல்ல அழகுள்ள பெண்கள் பலர் தேவதாசிகளாக இருந்தனர். அவர்கள் இசை நடனம் நாட்டியம் இவற்றுள் வல்லவராக இருந்தபோதிலும், பதியிலார் ஆகவும் பரத்தையராகவும் இருந்தமையின், சமுதாயத்துப் பெருமைக்குப் பெருங்குறையை உண்டாக்கினர் என்னலாம்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை இல்லை ஆயிற்று. பொதுமகளிரும் பலர் ஆகவே, "கற்பு" என்பது புகழ்ச்சிக்குரிய பண்பாக இருந்ததேயொழிய, உண்மையில் கடைப்பிடிக்கப்பெறவில்லை என்று மேனாட்டவர் ஒருவர் எழுதியதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.[1] இத்தகைய பதியிலார்க்கும் காமக்கிழத்தியர்க்கும் பிறந்த குழந்தைகளும் உண்டு.[2]

அந்நாட்களில் சாதிகள் பல. அவர்களிடையே கல்யாணம் முதலியன நடைபெறுங்கால் சில வேறுபாட்டுணர்ச்சி ஏற்படுவது இயல்பு. அச் சாதியினர் வலங்கை என்றும் இடங்கை என்றும் பேசப்பட்டனர். ஒவ்வொரு பிரிவிலும் 98 சாதிகள் இருந்தன. அவர்களுக்குள் சச்சரவுகள் ஏற்பட்டன. அரசு தலையிட வேண்டிவந்தது. இந்நாட்டுச் சமயங்களாகிய சைவ வைணவங் களைத் தழுவிய மக்களிடையே முகமதியர் தம் மதத்தைப் பரப்பினர். அவர்களுடைய தொழுகை இடங்களும் தோன்றின. மேனாட்டார் இந்நாட் டுக்குப் போந்ததும் கிறிஸ்தவ மதம் பரவலாயிற்று. தொடக்கத்தில் கிறிஸ்தவர் தொல்லைக்கு உள்ளானமை பெரிதும் பேசப்படுகிறது. இருப்பினும் தாழ்ந்த சாதியினர் பலரும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். கிறிஸ்தவர்க்குரிய வழிபாட்டிடங்களும் கட்டப்பெற்றன. இங்ஙனம் சைவம் வைணவம் கிறிஸ்தவம் இஸ்லாம் மதங்களைத் தழுவிய மக்கள் ஒருங்கு வாழும் நிலைமை தொடங்கியது.

சைவ சமய மடங்களும், பிராமண மடங்களும் பல தோன்றலாயின. பிரதாபசிங்கர் காலத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் கும்பகோணத்துக்கு வருவிக்கப்பட்டார். அங்கு ஒரு மடமும் நிறுவப்படலாயிற்று. திருப்பனந்தாள் காசிமடம் தஞ்சை மராட்டிய மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பு உடையதாக இருந்தது எனத் தெரிகிறது. இரண்டாம் சரபோஜி காசி யாத்திரை செய்த பொழுது காசியில் உள்ள குமாரசுவாமி மடத்தில் தங்கியிருந்தார். தருமபுரம், திருவாவடுதுறை முதலிய மடங்களின் மேற்பார்வையில் பல திருக்கோயில்கள் திகழலாயின. வைணவ மடங்களும் சிறப்புற்றிருந்தன.

கர்நாடக இசை மேலோங்கியிருந்தது. இக்காலத்தில் பல இசை நாடக நாட்டிய நூல்கள் பல மொழிகளிலும் எழுதப்பெற்றன. அரண்மனையில் விநாயக சதுர்த்தி திருவிழா 21 நாட்களிலும் நாடோறும் ஒரு நாடகம் வீதம் நடிக்கப்பெற்றது எனில் நாடகங்களுக்குச் சிறந்த ஆதரவிருந்தது என்பது தெரிகிறது. மேனாட்டவரின் இசையும் பரவியது. சமஸ்கிருதம்,

---

1. "Vico viciously observes that chastity was virtue more admired than practised by the Indians" - p. 283, History of Tamil Nad - Subramanian, N. Koodal Publishers, Madurai (1982).
2. "The inhabitants of those places make but little account of their wives but generally keep two or three harlots by whom they have sometimes 16 or 18 children" - p. 283, History of Tamil Nad - N. Subramanian.

தமிழ், தெலுங்கு, மராட்டி, அராபி, பாரசீகம் ஆகிய மொழிகளுடன் ஆங்கிலமும் கற்பிக்க வசதிகள் தோன்றின. சில சத்திரங்களும் இவ்வசதிகளை அளித்தன. படித்தவர்கள் பெரும்பான்மையோர் மேட்டுக்குடி மக்களாகவே இருந்திருத்தல் கூடும். வெள்ளையர் ஏற்படுத்திய கல்வி நிலையங்களும் மக்களது அறியாமையைப் போக்க உதவின.

அடிமைகள் இந்நாட்டில் இல்லாமல் இல்லை. பெரும்பாலும் சிற்றூர்களில் வயல் வெளியில் வேலை செய்தவர்கள் கொத்தடிமைகளாகவே இருந்தனர் என்று தோன்றுகின்றது. பணிப்பெண்களாக வேலை செய்யப் பெண் குழந்தைகளும் விற்கப்பட்டமைக்குச் சான்றுகள் உண்டு. கும்பினியாரும் அடிமை விற்பனையில் ஈடுபட்டனர். உடன்கட்டை ஏறுதல் பரவலாக இருந்தது. அரச குடும்பத்தவரும் பெருந்தனக்காரரும் இப்பழக்கம் உடையராயிருந்தனர். உடன்கட்டையேறும் "மாசத்தி" அணிந்த நகைகள் அங்குப் புரோகிதம் செய்த அந்தணரைச் சாரும் என்ற மேனாட்டார் கூற்று இங்கு நினைவு கூர்தற்குரியது.

இந்நாட்டு மக்களுட் சிலர் பெரிய மிராசுதாரர்களாய் இருந்தனர். எஞ்சிய சிலர் சிறு சிறு நிலப்பகுதியைப் பயிரிட்டு வாழ்ந்தனர். பெரும்பாலான மக்கள் பல்வேறு தொழில்களையும் செய்துவந்தனர். தஞ்சை அரண்மனையிலிலேயே ஆயிரக்கணக்கானோர் அலுவலர்களாக இருந்தனர்.[1]

அந்நாட்களில் பொருள்களின் விலை மிகவும் குறைவாகவேயிருந்தது. இதற்குக் காரணம் தேவைக்குறைவு என்பது ஒன்று. பிறிதொன்று நாணயங்களின் புழக்கக் குறைவு. நாணயங்கள் பொன் வெள்ளி செம்பால் செய்யப் பெற்றன. அந்நாணயங்களை அச்சிடும் நாணய சாலைகளும் இருந்தன. சிறு சிறு நாட்டுப்பகுதிகளுக்குச் சுயேச்சையான அரசர்கள் இருந்தமையின் தமக்கு வேண்டிய நாணயங்களைத் தாமே அச்சிடலாயினர். ஒரு பகுதியில் அச்சிட்ட நாணயம் இன்னொரு பகுதியிலும் செலாவணியாகும்; தேய்ந்தால் மதிப்புக்குறையும். ஆங்கிலேயர்கள் இந்த நாட்டைக் கைப்பற்றி ஆட்சி தொடங்கியபொழுது பல்வேறு நாணயங்கள் இருந்தன என்று தெரிய வருகிறது.[2]

---

1. 7-547 முதல் 557 வரை ; 155 வகைகள் ; 6877 பேர் ; மாதச் சம்பளம் ரூ. 87,562.

2. "An endless variety of coins is now met with in the bazaar throughout India, derived from the right assumed by every petti Raja and local chietains to issue money in his own territory" – P. 60 ;
 "The great number and diversity of coins now found in all parts of the country has been accounted for by the right of striking money assumed by so many provincial and even by village authorities in late times" – P. 143, Coins of South India, by Sir Walter Eliot.

ஏகோஜி காலத்தில் நாணயங்களை அச்சிட டேனிஷ்காரர்க்கு உரிமையை உறுதிப்படுத்தியதாக ஒரு வெள்ளிப்பட்டயம் கூறுகிறது.[3] தஞ்சைத் தரணியில் திருமருகல் முதலாகிய இடங்களில் நாணயங்கள் அச்சிடப்பெற்றன வென்று தெரிகிறது. எனினும் தஞ்சை மராட்டியர் வெளியிட்ட நாணயங்களுள் ஒன்றுதானும் கிடைத்துள்ளதாகத் தெரியவில்லை.

மராட்டிய மன்னர் காலத்தில் எல்லா வழக்குகளும் அரசனது அலுவலர்களால் விசாரிக்கப்பெற்றிருத்தல் கூடும். இத்துறை சரியாக இயங்கவில்லை என்பது அந்நாளைய வெள்ளையர் கருத்து. இரண்டாம் சரபோஜி காலத்தில் நீதிமுறை சரிவரப் பேணப்பெற்று வந்தது. நான்கு விதமான சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றுக்கு வேதம் வல்ல சிறந்த அறிஞர் தலைமை வகித்தனர். அவ்வறிஞர் நிர்ணயசிந்து, மனுவிஞ்ஞானேசுவரீயம் முதலாய நூல்களைப் பார்த்துத் தீர்ப்புக் கூறினர் என்று தெரியவருகிறது. பலவகையான தண்டனைகள் வழங்கப்பெற்றன. இவ்வழக்கு மன்றங்களின் விசாரணை எல்லை தஞ்சை மாநகரமும், " முகாசா " கிராமங்கள் மட்டுமேயாகும். எஞ்சிய பெரும்பகுதி ஆங்கிலேயர் மேற்பார்வையில் இருந்தமையின், அவர்களுக்கு வெள்ளையர் நீதிபதிகள் நடத்தும் வழக்கு மன்றங்களுடன் சென்னையில் உச்சநீதிமன்றமும் (Supreme Court) பயன்படலாயிற்று. மேலும் சரபோஜி மன்னர் காலத்தில் " வயித்திய ஆராய்ச்சி " நடைபெற்றது; ஆரோக்கிய சாலை ஒன்று ஏற்படுத்தப்பெற்றது. பல நோய்களைத் தீர்க்கும் வயித்திய முறைகள் தமிழ்ப்பாடல்களாகப் பல தமிழ்ப்புலவர்களால் யாக்கப்பட்டன.

சோத்திரியங்கள் ஆகவும் தானமாகவும் கொடுக்கப்பெற்ற நிலங்கள், அதாவது " இனாம் " நிலங்கள், மொத்தத்தில் நான்கில் ஒரு பங்காகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.[4] எனினும் அவை மதிப்புக் குறைந்த நிலங்களேயாகும். பெரும்பாலும் "தரிசு" அதாவது பயிரிலியாக இருந்தவற்றையே இனாமாக அளித்தனர். அவற்றை விற்பனை செய்வதாக இருந்தால் அரசுக்கே அவை விற்பனை செய்யப்பெற்றன. நிலங்களில் "முகாசா" நிலங்கள் என்றும் சில இருந்தன.[5] அவை இரண்டாம் சரபோஜி காலத்திலிருந்து அரசரது தனி உடைமையாகக் கருதப்பட்டன. அவற்றுக்கும் நிலவரி மிகுதியாக இல்லை என்று தெரிகிறது.

3. படேவியா அருங்காட்சியக வெள்ளிப் பட்டயம்-1, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்-50, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு-1 (1988).

4. " The area wholly or partially exempt from the payment of revenue under the general designation " Inam " consists of 612085 acres or a little more than one fourth of the entire area of the Dt. " - P. 673, Tanjore Dt, Manual.

5. " Mokasa or the private estate of the late Rajah now in the enjoyment of his family being made up of lands which Sarabhoji II retained at the cession of the province. It is wholly exempt from the payment of revenue save the small police fee, the water tax levied for any dry cultivation converted into wet with the aid of Government water and local cess "-P. 680, Tanjore Dt. Manual.

ஒருபுறம் ஏழை மக்கள்; "ஒரு பணத்திற்கு 3 படி அரிசி விற்றாலும் அன்னம் அபரூபமாக இருக்கிறது" என்று ஓராவணம்[6] கூறுகிறது. பிறிதொரு புறம், "ரூ. 90,000, ராமையா செட்டியார் 7–3–1876இல் சக்காராம் அவர்கட்குக் கடன் கொடுத்துள்ளார்" என்று பிறிதோராவணம்[7] கூறுகிறது. இங்ஙனம் தனிப்பட்டவர் பெருந்தொகையைக் கடன் கொடுக்கும் அளவு பெருஞ்செல்வம் உடையராய் இருந்தமையும் தெரியவருகிறது. மராட்டிய அரசர்களுக்கு வேண்டும்போதெல்லாம் பல்லாயிரக்கணக்காகத் தொகையைக் கடன்கொடுத்த தமிழ் நாட்டவரும் உண்டு; வெள்ளையரும் உண்டு. "தஞ்சாவூர் ஜனங்கள் ஏழைகள்; எங்கேயாவது சென்று பிராது செய்யக்கூட அவர்களுக்குச் செல்வுக்கு இல்லை" என்று ஏழ்மையைப் பாடியவர்களும் இருந்தனர்.[8]

இத்தகைய சமுதாயத்துச் செய்திகள் – வாழ்வு தாழ்வுகள் – இன்ப துன்பங்கள் – அருமை பெருமைகள் ஆகிய எல்லாக் கூறுகளையும் உள்ளது உள்ளவாறு அன்றாட நிகழ்ச்சிகளாக எழுதப்பெற்ற ஆவணங்கள் பல கட்டுக்களாகத் தஞ்சை சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில் உள்ளன. இவை மராட்டிய மொழியில்–மோடி எழுத்தில் எழுதப் பெற்றுள்ளன. மிகக் குறைந்த அளவில் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பெற்றவையும் கிடைக்கின்றன. அவற்றுள்ளும் 18ஆம் நூற்றாண்டின் முதற்பகுதிக்குரிய ஆவணங்கள் ஒன்று தானும் கிடைக்கவில்லை என்றே கூறலாம். தஞ்சை நவாபு ஆட்சியில் இருந்த காலத்தில் பல ஆவணங்கள் அழிக்கப்பெற்றமை இதற்குக் காரணம் என்பர். அழிந்தன – அழிக்கப் பட்டன போக எஞ்சிய ஆவணங்கள் இந்நூற்றாண்டில் 1952–53இல் வகைப்படுத்தப்பட்டன. அவை, "A பகுதி: நிலையாகக் காப்பாற்றற்குரியன; B பகுதி: எடுத்துக்காட்டாகப் போற்றற்குரியன; C பகுதி: வேண்டாதவை; அழித்தற்குரியன" – என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றன. முதலிரு பகுதிகளும் சென்னை ஆவணக்காப்பகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பேணிக்காக்கப் படுகின்றன. C பகுதியே தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ளவை. அவ்வாவணங்களுள் சில மராட்டி மொழியில் எழுதப் பெற்று, அவற்றுள்ளும் சில தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவை 11 தொகுதிகளாக உள்ளன.[9] எஞ்சிய ஆவணங்கள் பற்றிய குறிப்புக்கள் 48 தொகுதிகளில் "மோடி ஆவணத் தமிழாக்கம்" என்ற பெயரில் காணப் பெறுகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும் மோடி எழுத்துமுறை தெரிந்த ஒருவரைக் கொண்டு சில ஆவணங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்களின் இடையே சில தமிழ் ஆவணங்களும் கிடைத்தன. அவை படியெடுத்துக்கொள்ளப்பட்டன. இவை எல்லாவற்றின் துணைகொண்டு, அடுத்துவரும் பக்கங்களில் "தஞ்சை மராட்டிய மன்னர் அரசியலும் அவர்கள் காலச் சமுதாய வாழ்க்கையும்" என்ற தலைப்பில் தக்க ஆதாரங்களுடன் ஆய்ந்து பல தலைப்புக்களில் தரப்பெறுகிறது.

---

6. 3-39, 40. 7. 6-197 முதல் 204 வரை. 8. 5-561.

9. இவற்றை Modi Bound Volumes என்ற பெயரால் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் குறிப்பிடுவர்.

# 2

# ஆட்சிப் பரப்பும் உட்பிரிவுகளும்

தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சிபுரிந்த நிலப்பகுதி இந்நாளைய தஞ்சை மாவட்டம் என்று கூறின் பொருந்தும். கொள்ளிடம் இவர்களின் ஆட்சிப்பரப்புக்கு இயற்கையாக வடக்கின்கண் அமைந்துவிட்டது. கிழக்கே கடல்; கொள்ளிடம் கடலில் கலக்கும் இடத்தில் அமைந்த தேவிகோட்டை முதல் தெற்கே பாம்பாறு கடலில் கலக்கிற இடம்வரையில் உள்ள கடற்கரை இவர்கட்குரியது. மேற்கே திருச்சி புதுக்கோட்டை அரசுகளும், தெற்கே இராமநாதபுரம் அரசுக்குரிய ஆட்சிப் பகுதியும் எல்லைகளாக அமைந்தன.

இவர்களுடைய நாடு காவிரி பல கால்களாய் ஓடி வளம் பெருக்குவது நெல் விளைவுக்குக் குறைவில்லை. தமக்குப் போதிய அளவுக்குமேல் மிகுதியானவை அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கரும்பும் பருத்தியும் இந்நாட்டில் பயிரிட்டனர். தென்னந்தோப்புக்களும் மாந்தோப்புக் களும் நிறைய உண்டு. மாடுகள் நிறைய வளர்க்கப்பட்டன. சில இடங் களிலேதான் சிறு காடுகள் இருந்தனவாதல் வேண்டும். இந்நாட்டில் சோழர்கள் காலத்திலேயே வானளாவிய கோயில்கள் இருந்தன. கடற்கரை யோரங்களில் உப்பளங்கள் நிறையவுண்டு. அங்கு மீன் பிடித்தலும், முத்துக் குளித்தலும் பெரும்பான்மையான தொழில்களாம்.

இத்தகைய வளம்பொருந்திய நிலப்பகுதியை மராட்டிய மன்னர் 5 பிரிவுகளாகப் பிரித்து ஆட்சிபுரிந்தனர். ஒவ்வொரு பிரிவும் "சுபா" எனப்பெறும். அவ்வைந்து சுபாக்கள் ஆவன: பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், மாயூரம், திருவாதி (திருவையாறு) என்பனவாம். ஒவ்வொரு சுபாவும் சீமைகளாகவும், ஒவ்வொரு சீமையும் மாகாணங்களாகவும் பிரிக்கப்

பட்டன.[1] ஹைதர் கலாபுக்குப் பிறகு, துளஜா தம் காலத்தில் பாவா பண்டிதர் என்ற தன் அமைச்சரைக் கொண்டு சில திருத்தங்கள் செய்வித்தார். ஹைதர் கலாபத்தால் அழிவுள்ள ஊர்களோடு செழிப்பான ஊர்கள் சேர்க்கப்பட்டன. அவற்றுக்குப் "பத்தக்கம்" என்று பெயரிடப்பெற்றன.[2] அவற்றைப் "பத்தக்தார்" என்பவர் மேற்பார்வை செய்தனர். அவர் தம் கீழுள்ள ஊர்களின் விளைவை மேற்பார்வை செய்தனர். இங்ஙனம் மாற்றியமைத்தது தொடக்கத்தில் சிறப்பாகவே அமைந்தது என்று சொல்லப்படுகிறது.

பின்னர் அவை ஒன்பது தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டன. இதனை, " பேஸஜி காலத்தில் இருந்த தாலுகா – திருவாதி, கும்பகோணம், மாயவரம், பாபநாசம், திருவாரூர், நன்னிலம், கீவளூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை " என்ற குறிப்பால்[3] அறியலாம்.

மேற்குறித்த 9 தாலுகாக்களுடன் கேமல் என்ற கலெக்டர் வந்ததும், கொடவாசல், வலங்கிமான், குத்தாலம், சீயாழி, பேரளம், திருத்துறைப்பூண்டி, என்ற 6 தாலுகாக்கள் ஏற்படுத்தப்பட்டன.[4]

இவை மூன்று " டிவிஷன்களாக " ப் பிரிக்கப்பட்டன ; முதல் பிரிவில் 9 தாலுகாக்கள் " பிரின்ஸிபல் கலெக்டர் " விசாரணையிலும் மற்ற ஆறையும் 2 டிவிஷன்களாக்கி உதவி கலெக்டர் (?) விசாரணையிலும் அமைக்கப்பெற்றன.

இவர்கள் நாட்டில் பல இடங்களில் கோட்டைகள் இருந்தன, அவை : சாஹக்கோட்டை, பந்தநல்லூர், மகாதேவபட்டணம், பெரம்பந்தீதர் (?), அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி என்பனவாம்.[5]

ஒவ்வொரு கோட்டைக்கும் தலைவர் உண்டு ; அவருக்குக் கில்லேதார் என்று பெயர்.

---

1. P. 322, Maratha Rule in the Carnatic - Srinivasan, C.K. ச. ம மோ. த. 20–16.
2. " 1771 சுபா கும்பகோணம் பதக்–தாராசுரம் " (3–144) என்றமை காண்க.
3. 1-63 4. 1–64 5. 6-6, 7.

# 3

# அரசமுறை

தஞ்சை மராட்டிய அரசுக்குத் தலைமைவகித்து ஆட்சி செய்யும் உரிமையுடையவர் ஆகிய தந்தைக்குப் பிறகு, மூத்த மகனே ஆட்சிக்கு உரிமையுடையவர் ஆவர். வெங்காஜி இறந்ததும் அவருடைய மூத்த மகன் ஆகிய சாஹஜி அரசர் ஆனார். சாஹஜி பதினாறு ஆண்டுகள் ஆட்சி செய்தபிறகு, அவர்க்குப்பின் அரசனாவதற்குக் குழந்தை இல்லை. ஆகவே அவர் தம்பி முதலாம் சரபோஜி அரசர் ஆனார். இவர் அரசர் ஆன பொழுது சாக்கோட்டை சுபாவின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார் என்று சொல்லப் படுகிறது[1]. இதனால் தந்தை ஆட்சி செய்யும்பொழுது மகன் ஒரு பகுதியில் ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் பழக்கம் இருந்ததாதல்கூடும் என ஊகிக்கலாம்.

"சரபோஜி தன் தம்பியான துக்கோஜி ராஜாவுடன் ராஜ்யபாரம் நடத்திவரும்போது இவர்களுக்குள் குடும்ப மனஸ்தாபம் ஏற்பட்டது. உடனே துக்கோஜி ராஜா தன் மூத்த சகோதரரிடம் இருந்து ராஜ்யத்தில் ஒரு பகுதியை அடைந்து குடும்பத்தோடு மகாதேவபட்டணத்தில்[2] இருந்துவந்தார்." என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம்[3] கூறும். இதனால் உடன்பிறந்தார் இருவரும் ஒருங்கு ஆட்சி செய்வதுண்டு என்றும் தெரிகிறது. மனவேறுபாடுற்றதும் தம்பி வேறோரிடத்துக்குப் போய்த் தங்கியிருந்தமையின், மூத்தவருக்கே ஆட்சியுரிமையென்பது உறுதி எய்துகிறது.

---

1. P. 230, Maratha Rule in the Carnatic-Srinivasan, C. K.
2. இது மன்னார்குடி சுபாவில் உள்ளது.
3. பக்கம் 82, 88 ; (Sarabhoji) became the ruler conjointly with his brother Tukkoji" - P. 230, Maratha Rule in the Carnatic.

இச்சரபோஜிக்குப் பிள்ளைகள் இல்லை. ஆகையால் இவர் இறந்த பிறகு இவர் தம்பி துக்கோஜி அரசர் ஆனார்.

துக்கோஜிக்குப் பிறகு அவர் முதல் மகன் இரண்டாம் ஏகோஜி அரசர் ஆனார். இவருக்குப் பாபாசாகேபு என்றும் பெயர். இவர் அரசர் ஆகி ஈராண்டுகளே ஆட்சிபுரிந்தார். இவருக்குப் பிறகு இவர் மனைவி சுஜானாபாயி ஆட்சி செய்தார். அரசர் இறந்ததும் அவரது பட்டத்து அரசி ஆட்சியுரிமை எய்துவதுண்டு என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.[4] உள்நாட்டுக் கலகத்தால் அவரும் இறந்தார். அவருக்குப் பிறகு அரசு கட்டிலில் எய்துவதற்குத் துக்கோஜியால் சேர்த்துக்கொள்ளப்பட்டுக் கத்திக் கல்யாணம்[5] செய்து கொள்ளப்பட்ட மராட்டியப் பெண்ணான அன்னபூர்ணாபாயிடம் பிறந்த பிரதாபசிங்கரை அரசன் ஆக்கினர். இதுவும் தம் சாதி ஆசாரத்துக்குத் தகுதியல்ல என்று அந்நாட்களில் அரசகுடும்பத்தினர்களில் பலர் நினைத்தனர் ஆதல்கூடும். இது,

" பிரதாபசிங்கரது மகன் இரண்டாம் துளஜா 22 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர்க்குப் பிறந்த குழந்தைகள் இறந்துபோயினர். அப்பொழுது தம் தந்தைக்கு, விவாஹமாகாத ஸ்திரீயிடம் பிறந்தவர் என்ற குறை ஏற்பட்டு விட்டது. அத்தகைய பேச்சுக்கு இனி இடம் கொடுக்கக்கூடாது " என்று தீர்மானித்தார் துளஜா அரசர். ஆகவே தம் குலத்திலே, தம் கோத்திரத்தில்[6] தாயாதிகளுக்குள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து சுவீகாரம் செய்துகொண்டார் என்பதால் அறியப்பெறும்.

இதனால் கத்திக்கல்யாணம் செய்துகொண்ட மராட்டியப் பெண் வயிற்றில் பிறந்தவர்களும், வாரிசாக வருதற்கு உரிமையில்லை என்று அந்நாளில் கருதினர் என்பது தெரிகிறது.

சுவீகாரமாக வந்த சரபோஜிக்குப் பிறகு இரண்டாம் சிவாஜி 1855இல் இறந்தபொழுது ஆண்வாரிசு இல்லை ; பெண்கள் இருந்தனர். எனினும் ஆங்கில ஆட்சியாளர்கள் சிவாஜியின் மகளையும் அரசியாக ஏற்றுக்கொள்ள வில்லை ; தஞ்சை நகர அளவிலும் மராட்டிய அரசுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டனர்.

---

4. 2 - 284, 285.
5. " There is difference between Lagnam and Katga vivaham. In the former case, the tali is tied by the husband and in the latter case by a sumangali Brahmin woman. A sword will be placed in a chair or some such thing and the marriage ceremony is gone through " - P. 5, Deposition of Rangaswami Madik Row, 8th witness for Defendants 1 & 2 ; O. S. No. 26 of 1912 in the Subordinate Judge's Court, Tanjore.
6. பக்கம் 126, போன்ஸ்லே வம்ச சரித்திரம்.

# 4

# அரசர்கள் பற்றிய செய்திகள்

## முதலாம் ஏகோஜி

**பெயர் :** தஞ்சை மராட்டிய அரசர்களுள் ஏகோஜி முதல் அரசர் ஆவர் இவர் ஏகராஜ மகாராஜா என்று குறிப்பிடப்பெறுகிறார்.[1] மோடி தமிழாக்கச் சுவடிகளில் எங்கணும் வெங்காஜி என்ற பெயர் காணப்பெறவில்லை. 30—12—1676க்கு உரிய படேவியா அருங்காட்சியக வெள்ளிப்பட்டயத்திலும் பிற செப்பேடுகளிலும்[2] 'ஏகோசி மகாராசா' என்றே காணப்பெறுகிறது. சிவாஜி தம் தம்பி வெங்காஜிக்கு எழுதிய கடிதங்கள் இரண்டு கிடைத்துள்ளன. அவற்றுள் முதற்கடிதத்தில் "யேகோஜி"என்றும், [2அ] இரண்டாவது கடிதத்தில் "வ்யங்கோஜி" என்றும் காணப்பெறுகின்றன.[3] வேற்றுநாட்டவர் குறிப்புக்களில் 'வ்யங்காஜி' என்ற பெயர் குறிக்கப்படுகிறது.

"The Jesuit Missionary writes in 1676 : Vyankaji sought to make himself beloved by the people............... " இதனால்[4] வ்யங்காஜி என்ற பெயராலும் வழங்கப்பட்டமை தெளிவு.

---

1. 8-105; 7-671. 2. பக்கம் 7, 121, 185, 140, 160, 164 - தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 50, தஞ்சாவூர்த் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு (1988) (சொல்லடைவு பக்கம் 286 காண்க)

2அ. " Ekkoji " என்று பின்வரும் நூலில் காணப்பெறுகிறது, P. 67, Diary and consultation Book, Records of Fort St. George, dated 8th April 1678.

3. சிவாஜி வெங்காஜிக்கு எழுதிய கடிதங்கள் என்ற கட்டுரை (5) காண்க.

4. Page. 228. History of the Mahrathas Vol. I - Sardesai.

**மனைவியர்:** இவருக்குத் தீபாபாய், அண்ணுபாய் என்று இரு மனைவியர் இருந்தனர் எனப் போன்ஸ்லே வம்ச சரித்திரம் கூறும்[5]. எனினும், "1776 கைலாஸவாஸி ஏகோஜி ராஜா சம்சாரம் கங்காபாய் பரலோகம் அடைந்ததற்கு உத்தரகிரியைக்கு 50 சக்கரம்" என்ற குறிப்பால்[6] ஏகோஜிக்குக் கங்காபாய் என்ற ஒரு மனைவி இருந்தமை பெறப்படும்.

"இவருக்கு அபிமானத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட மனைவிகள் ஒன்பது பேர்" என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம் கூறுவதால்[7] கங்காபாய் அத்தகைய மனைவியருள் ஒருவராதல் கூடும் எனக்கொள்ளலாம். முதலாம் ஏகோஜி 1682இல் இறந்தார் என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம் கூறும்.[8] ஆனால் கங்காபாய் 1776இல் இறந்தார் எனின் ஏகோஜிக்குப் பிறகு 94 ஆண்டுகள் அவ்வம்மையார் உயிர் வாழ்ந்தார் என்று கொள்ளப்பட்டு ஏறத்தாழ 110 ஆண்டுகட்கு மேல் உயிர்வாழ்ந்தார் என்று கொள்ள நேரிடும். உண்மை புலப்படுத்தற்கு வேறு சான்றில்லை.

**சிவாஜியைக் கண்டமை:** ஏகோஜி திருமழபாடியில் சிவாஜியைக் கண்ட செய்தி சிவாஜி வெங்காஜிக்கு எழுதிய கடிதங்கள் என்ற தலைப்பில் (5) விரிவாகக் கூறப்படும். வரலாற்றாசிரியர்கள் ஏகோஜி கட்டுமரத்தினைக் கொண்டு கொள்ளிடத்தைக் கடந்தார் என்று கூறியிருக்க மோடி தமிழாக்கம், அவ்விருவருடைய சந்திப்பை விவரித்து ஏகோஜியைப் 'பாபாஜி பவார்' என்பார் தன் முதுகில் தூக்கிக்கொண்டு இரவில் 12 மணிக்குக் கடந்தார் என்று அதிகப்படியான செய்தியைக் கூறுகிறது. சில வரலாற்றாசிரியர்கள் 'திருவதி' யில் இருவரும் சந்தித்தனர் என்று கூறியிருக்க, மோடி தமிழாக்கம் திருமழபாடியென்றே வலியுறுத்துகிறது.[9]

**ஏகோஜி தஞ்சை அரசரானமை:** இதுபற்றி இரு வேறு கருத்துக்கள் உண்டு. தஞ்சையை வலியப் பற்றினார் என்பதொரு கருத்து. பிறிதொன்று நாயக்கமன்னர் பீஜப்பூர் சுல்தானின் உதவியைவேண்டியபொழுது அச்சுல்தான் ஏவியதால் வந்தார் என்பது பிறிதொன்று. பீஜப்பூரிலிருந்து ஏகோஜி வந்தார் என்று பின்வரும் பகுதியால்[10] அறியப்பெறும் :—

"1858: ரா ஏகோஜி ராஜா சாகேப் பீஜப்பூரிலிருந்து இங்கு வந்த பொழுது அவ்விடம் உள்ள பாதுஷாவின் உத்திரவுப்படி கார்கானா (அரசாங்கம்) நடத்துவதற்கு ஸேவகனுடைய முன்னோரை[11] அவர்களுடன் அனுப்பினார்".

---

5. பக்கம் 79
6. 2-134
7. பக்கம் 79
8. பக்கம் 79
9. 3-105, 106; 7-671
10. 4-457, 458
11. பீஜப்பூரிலிருந்து ஏகோஜியுடன் வந்தவர்கள் காதர், கஸாஸ்கான், அப்துல்ஹலீம் – பக்கம் 75, போன்ஸ்லே வம்ச சரித்திரம்.

இது மிகப்பிற்பட்ட காலத்தில் கி. பி. 1858இல் கூறப்பட்ட போதிலும் செவிவழியாக அறிந்த வரலாற்றுச் செய்தியை இவ்வாவணப்பகுதி நினைவூட்டுகிறது.

**ஏகோஜியின் பேரன் :** கி. பி. 1802 இரண்டாம் சரபோஜியின் காலத்தில் ஏகோஜி ராஜாவின் பேரர் கோவிந்தராவ் காட்கே என்பவர் இருந்தார் என்றும் அவருக்கு (ஓய்வு ஊதியம்) சக்கரம் 25 தரப்பெற்றது என்றும் ஒரு குறிப்பால் அறியப்பெறும்.[12] கி. பி. 1798க்குரிய குறிப்பொன்று, "கைலாஸவாஸி ஏகோஜி ராஜா அவர்களிடம் உள்ள பெண் மேஹ்ரா குமாராபாய் – 25 ; பேரன் கோவிந்தராவ் காட்கே – 15" என்று குறிப்பிடுகிறது.[13] பேரனைப் பற்றி மேலே கூறப்பட்டது. பெண் 100 ஆண்டுகட்கு மேல் உயிர்வாழ்ந்தனளா என்பது ஐயத்துக்கு இடம் தருவதாய் உள்ளது.

## துக்கோஜி

இவர் ஏகோஜியின் மூன்றாவது மகன் ஆவர். இவருக்குத் திருமணம் செய்துகொண்ட மனைவியர் ஐவரோடு சேர்த்துக்கொள்ளப்பெற்றவர் அறுவர். இவ்வறுவருள் கத்தி வைத்து விவாகம் செய்துகொண்ட மராட்டியப் பெண், அன்னபூர்ணா என்ற பெயரினர். இவரிடம் பிரதாபசிங்கர் பிறந்தார்; சாமா பாயி என்ற ஒரு பெண்ணும் பிறந்தார்.[14] கி. பி. 1776க்குரிய குறிப்பில்[15] இந்தச் சாமாபாய் குறிக்கப்பெறுகிறார்.

சாமாபாயிக்குத் திருமணம் நடக்கும்பொழுது துக்கோஜிராஜா "மன்னார்குடி சுபாவகையரா காடாரம்பை மகாலில் கள்ளப்பாளையம் மாகாணத்தில் சித்தத்தநெல்லூர் நன்செய் புன்செய்" கொடுத்தார் என்றும், "நந்தன சம்வத்ஸரம் வரையிலும்" அனுபவித்ததாகவும், பின்னர் ஊர் ஜப்தியில் சேர்க்கப்பட்டுவிட்டது என்றும், ஆண்டுதோறும் 1000 கலம் நெல் குத்தகை என்றும், அதுபோன்று கொடுத்துவரவேண்டும் என்றும் ராமச்சந்திரராவ் காடே கேட்டுக்கொண்டிருக்கிறார்.

கி. பி. 1779க்குரிய குறிப்பு[16] துக்கோஜியின் மனைவியருள் லக்ஷ்ம்பாய் என்பவரைக் குறிப்பிடுகிறது.

"கைலாஸவாஸி துக்கோஜிராஜா இவர்களிடத்து ஸ்ரீமாதோ லக்ஷ்ம் பாயிசாஹேப்-இவர்களுக்குச் சரீரம் சரியாக இல்லாதது குறித்து 100 சக்கரம்"

---

12. 2-168, 169　　13. 4-88

14. பக்கம் 81, போன்ஸ்லே வமிச சரித்திரம் (தமிழ்).

15. ச. ம. மோ. த. 18-9　　16. ச. ம. மோ. த. 18-32

என்று அக்குறிப்பில் உள்ளது. துக்கோஜி கி. பி. 1736இல் 'தெய்வகதி' அடைந்தார்.[17] ஆனால் அவர் மனைவியருள் ஒருவராகிய லக்ஷ்மிபாயி கி. பி. 1779இல் குறிக்கப்பெற்றதால் இவர் தம் கணவர் இறந்த பின்னர் 43 ஆண்டு கட்குமேல் உயிர் வாழ்ந்தனராதல்கூடும். இவர் இறந்தபொழுது இறுதிச் சடங்குகளுக்காக 60 சக்கரம் கொடுத்ததாகத் தெரிகிறது. துக்கோஜியின் மகன் பிரதாபசிங்கர் காலத்தில் 1756இல் இந்த லக்ஷ்மிபாயி சாயேப் அவர்களுக்கு "ஸர்வமான்யம் அக்ரஹாரத்துக்கும் தர்மத்துக்கும் மாதிரிமங்கலம் வகை யறாவில் 13¾ வேலி ½மா" என்ற குறிப்பினால் பிரதாபசிங்கர் தம் மாற்றாந் தாய்களுள் லக்ஷ்மிபாயி அவர்களுக்குத் தருமம் செய்ய நிலங்கள் அளித்த செய்தி தெரிகிறது.[17அ]

துக்கோஜிக்குப் பார்வதிபாய் என்ற பெண் இருந்ததாக ஒரு குறிப் பினின்று அறியவருகிறது.[18] அப்பார்வதிபாயியின் மருமகள் அம்பிகாபாய் என்றும், கி. பி. 1802இல் அவர் வாழ்ந்ததாகவும் அக்குறிப்பால் அறியப்பெறும். கி. பி. 1798க்குரிய குறிப்பிலும் அம்பிகாபாய் குறிக்கப்பெற்றுள்ளார்.[19]

## இரண்டாம் ஏகோஜி - சுஜான்பாயி

இவர் துக்கோஜியின் மகன் ஆவர். இவருக்குப் பாவாசாகேப் என்றும் பெயருண்டு. இவருக்கு ஆறு மனைவியர் இருந்தனர். அவர்களுள் மூத்தவர் சுஜான்பாயி.[20] பாவாசாகேபு 1736இல் இறந்தார். இவர்க்குப் பிள்ளைகள் இல்லை. ஆகவே சுஜான்பாயி சிம்மாசனம் ஏறினார்.[21] இவை கி. பி. 1857இல் இரண்டாம் சிவாஜியின் மூத்த மனைவியாகிய காமாட்சியம்பாபாயி அவர்கள், ஜான்புரூஸ் நார்ட்டன் என்பவரைக்கொண்டு சென்னை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தபொழுது அவ்வழக்கறிஞர் கூற்றில் விளங்கக் காணலாம்[22] :-

"தஞ்சாவூரில் ஐந்தாவது மன்னராகப் பாவாசாகேப் அவர்கள் புத்திர ஸந்தானமில்லாமல் ஆறு பெண்சாதிகளை விட்டுவிட்டு இறந்துவிட்டார்கள் அல்லவா? அவர்களுள் முதல் சம்சாரமான சுஜான்பாயி என்பவர்கள் அவருடைய எல்லா ராஜ்யமும் தான் முக்கியமுடையவர் என்று எல்லா வற்றையும் வசப்படுத்திக்கொண்டு இராஜ்யபாரம் நடத்தினார் அல்லவா?"

மேலும், 1857இல் பல பெருந்தரத்து அலுவலர்கள் சூர்மகாலுக்கு வந்து, கமிஷனர் இட்டிருந்த முத்திரையைச் சாட்சியுடன் உடைத்து மா. **சுஜ்யான்பாயி** அவர்கள் ராஜ்யபாரம் செய்தபொழுது கொடுத்த "சிகாசன்னதுகளில்" நான்கை

---

17. பக்கம் 84, *போன்ஸ்லே வம்ச சரித்திரம்* (தமிழ்)
17அ. 8-145, 146
18. 2-168
19. 4-88
20. பக்கம் 81, *போன்ஸ்லே வம்ச சரித்திரம்* (தமிழ்)
21. பக்கம் 85 ,, ,,
22. 2-284, 285

எடுத்து அவற்றுக்கு நகல் எடுத்து மீண்டும் அவற்றை வைத்துவிட்டனர் என்ற கூற்றினின்று சுஜான்பாயி ஆட்சிபுரிந்தமை அறியப்பெறும்.[22அ]

## நாநாசாகேப் - அப்பூசாகேப் - நாநாசாகேப்

துக்கோஜிக்கு நாயுடு சாதியில் சேர்த்துக்கொண்ட ஐந்து பெண்களிடத்து மாலோஜிராஜா, அரிச்சந்திரராஜா என்ற அண்ணாசாகேப், நாநாசாகேப் என்ற மூன்று ஆண்மக்கள் பிறந்தனர்[23]. இம்மூவரும் துக்கோஜி உயிர்வாழ்ந்த காலத்திலேயே இறந்துவிட்டனர்[24]. இந்த நாநாசாகேபுக்கு அப்பூசாகேப் என்றொரு மகன் பிறந்திருந்தார். இவ்வப்பூசாகேபுக்குப் "பலஜேவார் ஜாதியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட ஸ்திரீயினிடத்தில் நாநாசாகேப் என்றொரு மகன் பிறந்தார்".[25]

போன்ஸ்லே வம்ச சரித்திரத்தைக் கூறுவதும் தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளதும் ஆன மராத்தியக் கல்வெட்டு இரண்டாம் சரபோஜி காலத்தில் 1803ஆம் ஆண்டில் வெட்டி முடிக்கப்பெற்றது. அக்கல்வெட்டில் இந்த நாநாசாதேப் சுகமாக வசித்து வருகிறார் என்று நிகழ்வில் கூறப் பெற்றுள்ளமையால் அக்கல்வெட்டுக் கொடுத்த காலத்தில் நாநாசாகேப் உயிருடன் இருந்தார் என்பது போதரும்[26]. இந்த நாநாசாகேபு சென்னைக் கவர்னர் கௌன்ஸிலுக்குப் பின்வருமாறு கடிதம்[27] எழுதியுள்ளார் :—

"எங்களுக்கு வேறு வாசற்படிவைத்துச் சுவர் எழுப்பிச் சரபோஜி மகாராஜா ஜனங்கள் நமது பக்கம் வராமல், எங்களுக்கு ஒருவித அபாயமும் வராமல் பாதுகாப்புக்கு உங்கள் பாரா ஒன்று நியமிக்க வேணும். நாங்கள் வெளியே சுவாமிதரிசனத்துக்குப் போகும்போதும் வரும்போதும் தகுந்த பந்தோபஸ்துகள் செய்துகொண்டு வரவேண்டும். நாங்கள் ஏகோஜியின் வமிசத்தார்...... சரபோஜி மகாராஜா அவர்கள் எங்கள் பிள்ளைகளுக்கு அநியாய போதனை செய்து மித்திரபேதம் செய்து வருகிறார்...... சரபோஜி மகாராஜா எங்களுக்குச் சத்ரு. ஆகையால் எந்த நேரத்தில் எங்களுக்கு அபாயம் வருமோ என்று அவருக்கு உட்பட்டு நடந்துவருகிறோம்".

---

22 அ 2-280, 281

23. பக்கம் 81, போன்ஸ்லே வம்ச சரித்திரம்

24. பக்கம் 82, போன்ஸ்லே வம்ச சரித்திரம்;
"Anna Saheb and Nana Saheb predeceased their father"
— p. 242, Maratha Rule in the Carnatic – Srinivasan, C. K.

25. பக்கம் 82, போன்ஸ்லே வம்ச சரித்திரம்

26. பக்கம் 82, 116, போன்ஸ்லே வம்ச சரித்திரம்

27. ச. ம. மோ. த. 6-32

இக்கடிதத்தினால் இரண்டாம் சரபோஜிக்கும் நாநாசாகேபுக்கும் மனவேற்றுமை இருந்தது என்றும், அதனால் "கவர்னர் கௌன்சிலுக்கு" எழுதினார் என்றும் தெரிகிறது. பகைமையிருப்பினும் "ஏகோஜியின் வமிசத்தார்" ஆகையால் மற்றவர்கட்கு உதவித்தொகை கொடுத்தமைபோல நாநாசாகேப் அவர்களின் செலவுக்கு மாதம் 1க்குச் சக்கரம் 500 கொடுக்கப் பெற்று வந்தது என்று 1801க்குரிய ஆவணக்குறிப்பு[28] அறிவிக்கிறது.

## பிரதாப சிங்கர்

மோடி தமிழாக்கக் குறிப்பு ஒன்றில்[29] "பிரதாபசிங்க் பட்டாபிஷேகம் 1740" என்றுள்ளது. போன்ஸ்லே வம்ச சரித்திரத்தில்[30] "சகம் 1660 (கி. பி. 1738) சித்தார்த்தி வருஷம் பிரதாபசிங்க ராஜாவுக்குப்பட்டம் சூட்டினார்கள்" என்று கூறப்பட்டமையாலும், பிற்காணும் மோடி தமிழாக்கத்தில்[31], "1739: ரா பிரதாபசிங்க் அநந்த நாராயண சாஸ்த்திரிக்குச் சந்திரக்கிரகண காலத்தில் பூமிதானம் திருவிசநல்லூர் – மேலக்காவிரியில் நன்செய் 2 வேலி புன்செய் ½ வேலி" என்று கி. பி. 1739இல் செய்த தானம் குறிப்பிடப் பெற்றிருப்பதாலும், மேலேகண்ட 1740 என்றது தவறு என்பதில் ஐயமில்லை. இவர் பட்டத்துக்கு வந்ததை நினைவுகூர்தற்பொருட்டுத் திருவிசநல்லூர் அநந்தநாராயண சாஸ்த்திரிக்கு* நிலக்கொடை தந்தனர் என்று கொள்ளலாம்.

**பிற நிலக்கொடைகள்:** மேலும் இவ்வரசர் கி. பி. 1742இல் குத்தாலத்தில் நாராயணாசாரிக்கு 1½ வேலி சர்வமானியமாக அளித்தார்.[32] தரணி மாகாணத்தில் நன்செய் ½ வேலி புன்செய் 2½ மா காசிவாசி சாஸ்திரிக்குச் சர்வமானியம் கொடுத்தார்.[33] 1745இல் தரணி மாகாணத்திலேயே 12 பிராமணர்களுக்கு நன்செய் 9¼ வேலி புன்செய் வேலி 1க்கு ¼ வேலி வீதம் அளித்தார்.[34] கி. பி. 1751இல் இராமேசுவரத்தில் சத்திரம் தண்ணீர்ப்பந்தல் நந்தவனம் ஆகிய அறங்களை நிறுவினார்.[35] இங்ஙனம் இவரது நிலக்கொடைகள் பல.

28. ச. ம. மோ. த. 2-19
29. 8-328
30. பங்கு. 86
31. 8-144, 145
32. ச. ம. மோ. த. 5-12
33. 8-178
34. 8-165
35. 8-148

* முதலாம் சரபோஜி (1710—1728) ஆதரித்தவர்களுள் ஒருவர் "பஞ்சரத்னம் அநந்த நாராயண சாஸ்திரி" என்பவர் ஆவர். இவரே பிரதாப சிங்கர் காலத்தில் நிலக்கொடை பெற்றவர் ஆகல் கூடும். திருவிசநல்லூரில் நிலக்கொடை பெற்ற 45 பேரில் இவரும் ஒருவர். பக்கம் 38, 39, 45 - சரபோஜி விலாஸ — பதிப்பாசிரியர் டாக்டர் வி. ராகவன், சரஸ்வதி மகால் வெளியீடு (1952)

இராமச்சந்திரராவ் சிவாஜி ஸர்ஜேராவ் காட்கே என்றொருவருடைய பாட்டனாருக்குப் பிரதாபசிங்கர் காலத்தில் சுரோத்திரியம் செய்து கொடுக்கப் பட்டது. அந்தச் "சிகாசன்னதுகள்" காணாமற்போய்விட்டன. ஆகையால் அந்த நிலங்களைப் பிறர் தம்வசப்படுத்தலாயினர். ஆகவே அச் "சிகாசன்ன துகளி"ன் உண்மைப்படியை எடுத்துக்கொடுக்கவேண்டும் என்று கி.பி. 1822இல் கேட்டுக்கொண்டிருக்கிறார். இந்த நிலக்கொடை அறந்தாங்கிக்கு அருகில் ராஜேந்திரபுரத்தில் அளித்ததாகும்.[36]

**மனைவியர் :** இவருக்கு மனைவியர் ஐவர் என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம் கூறுமீ (பக்கம் 82). ஒரு குறிப்பில் யமுனாபாயி சக்வார்பாயி ஆகிய இருவர் பெயர் மட்டும் காணப்பெறுகிறது.[37] பிறிதோர் ஆவணத் தமிழாக் கத்தில்[38] சக்வார்பாயி சாகேபுக்கு 1758இல் திரிபுவனச் சத்திரத்துக்கும் அக்கிர ஹாரத்துக்கும் 5028 சக்கரம் மொயின் செய்து கொடுத்ததாகவும், அதற்காகத் தேப்பெருமாநல்லூர் சர்வமானியம் வழங்கியதாகவும், 1759இல் திரிபுவனம் சத்திரத்துக்குப் பக்கத்தில் அக்ரஹாரம் உண்டுபண்ணத் தாராசுரத்தில் புன்செய் 6 வேலியும், சுரங்கம் பேட்டையில் மரத்தடி நிலம் 2 வேலியும் அளித்ததாகவும் கூறப்பெற்றுள்ளன.

"1798 : பிரதாபசிங்கர் மனைவி கிருஷ்ணாபாய் இவர் தம்பி துப்குல்ராம சந்திர ந்யா-12½ ; மலிவேக மன்யா 7½ ; ஆக (சக்கரம்) 20" என்றொரு குறிப்புள்ளது.[39] மேலும் ஒரு குறிப்பு, "1802, கைலாஸவாஸி பிரதாபசிங்கின் ஸ்திரீகள் இருவரின் தம்பி சக்கரம் 33-3¼" என்பதாகும்.[40] பிரதாபசிங்கரின் மனைவியருள் ஐவர் பெயர் அறியவருகிறது.[41] கிருஷ்ணாபாய் பெயர் அவர்களுள் சேர்க்கப்பெறவில்லை. ஆகவே கிருஷ்ணாபாய் மணம் செய்து கொண்ட மனைவியாதற்கில்லை. மராட்டிய சாதியிலிருந்தும் நாயுடு சாதியி லிருந்தும் சேர்த்துக் கொள்ளப் பெற்றவர்கள் எழுவர் ஆவர். அவர்களுள் கிருஷ்ணாபாய் ஒருவராதல் கூடும்.

**திருவிடைமருதூர்த் தேர் :** (இற்றைநாள் பழுதுற்றிருக்கிற) தேர் பற்றி 18—10—1862இல் ஆங்கில அரசாங்கத்துக்கு ஒருமடல் எழுதப் பெற்றதாக ஓராவணக்குறிப்புப் பின்வருமாறு உள்ளது :[42]

"18—10—1862 கவர்ன்மெண்டுக்கு—

1838–1840இல் திருவிடைமருதூரில் தேரை இராஜாபிரதாபசிங்க்ஜீ அவர்கள் தயார் செய்ததைப்பற்றிச் சிவாஜிராஜா அவர்கள் ஆக்ஷேபணை

36. 5-297, 298
37. 8-228
38. 1-116, 117, 197
39. 4-88
40. 2-169
41. பக்கம் 82 போன்ஸ்லே வம்ச சரித்திரம்
42. 1-118, 119

செய்தாற்போல அந்தத்தேரின் வேலையைப் பற்றின கரஸ்பாண்டென்ஸ¬ம் ஏதாவது இருக்கிறதா என்று சொன்னபடி தேடினதில் இதுவரை அகப்படவில்லை"

என்ற இக்குறிப்பால் திருவிடைமருதூர்த் தேர் பிரதாபசிங்கரால் செய்து அளிக்கப்பெற்றது எனத் தெரிகிறது. அத்தேரைப்பற்றி ஏதேனும் வழக்கு வந்திருக்கக்கூடும்; அதற்குச் சிவாஜி அரசர் தம் எதிர்ப்புத் தெரிவித்தனர் போலும்.

## இரண்டாம் துளஜா

**பட்டத்திற்கு வந்தமை:** "1764 துளஜா மகாராஜாவின் சமாசாரம்: சுபானு வருஷம் துளஜா மகாராஜாவிற்குப் பட்டாபிஷேகம் மார்கசீர்ஷ வத்யம் 13ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை" என்றொரு குறிப்பால்[43] இரண்டாம் துளஜா பட்டத்துக்கு வந்த தேதி 18—12—1763 என்று தெரியவருகிறது[44].

**மனைவியர்:** "1776: துர்முகி வருஷம் கார்த்திக சுத்த திருதியை வியாழக்கிழமை நடந்த திருமணங்கள்: (1) சேகோஜி மாஹடிக் அவர்களின் மகள் சுலக்ஷணாம்பாபாயி; (2) காசிராவ் இங்க்ளே அவர்களின் மகள் மோஹனாபாயி" என்ற குறிப்பால்[45] 14—11—1776இல் இரண்டு[46] திருமணங்கள் செய்துகொண்டார் என்றும் தெரிகிறது.

## அப்துல் பிரதாபசிம்ஹர்

மேற்குறித்த மோகனாபாயி வயிற்றில் அப்துல் பிரதாபராம் பிறந்தார் என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம் கூறும்.[47] ஆனால் மோடி தமிழாக்கக் குறிப்பில் அப்துல் பிரதாபசிம்ஹஜி என்று இவர் குறிக்கப்பெற்றுள்ளார். இவரது அப்தபூர்த்தி (ஆண்டுநிறைவு) 1779 புஷ்யசுத்த பஞ்சமி என்று ஒரு குறிப்பில்[47அ] உள்ளது. எனவே அப்துல் பிரதாபசிங்கர் 1778 புஷ்யசுத்த பஞ்சமியில் பிறந்தனர் ஆதல் வேண்டும்; அதாவது 3—1—1778.[48] இவருக்கு முடியிறக்குதல் 1779 ஜமாதி லௌவல் தேதி 10 என்று ஒரு குறிப்புக்கூறும்.[49]

---

43. 3-225, 226
44. P. 329, Vol. VI, 1600 to 1799, Indian Ephemeris, L. D. Swamikannu Pillai
45. 3-226; பக்கம் 125, போன்ஸ்லே வம்ச சரித்திரம் (தமிழ்)
46. P. 342, Vol. VI, 1600 to 1799, Indian Ephemeris, L. D. Swamikannu Pillai
47. பக்கம் 125    47அ. ச. ம. மோ. த. 18-26
48. பக்கம் 858, Indian Ephemeris - L. D. S.    49. ச. ம. மோ. த. 18-19

இது 26—5—1779 ஆகும்.[50] 1780 சௌவல் தேதி 22இல் 21—10—1780இல் இவருக்குப் "பாவுல் ஓடை" என்ற சடங்கு செய்யப்பட்டது.[51] (பாவுல் ஓடையாவது குழந்தைகளுக்கு முதன்முதலில் நடை கற்பிக்கும் ஒருவிதச் சடங்கு என்பர்.) இவர் ஒருவரே ஆண் வாரிசாக இருந்தமையின் இவரை மற்ற அரசமாதேவிகளும் தம் குழந்தைபோலவே போற்றி வளர்த்தனர் ஆதல் வேண்டும்.

"சௌ. ராஜஸபாயி சாஹேப் அவர்களிடத்தில் சி. ராஜா அப்துல் பிரதாபசிம்ஹஜீ ராஜா அவர்களுக்குத் தீபாவளிக்குச் சுத்திப்போட்ட வகையில் செலவு 2½ சக்கரம்"[52]

"1779 மாதோஸ்ரீ ராஜ்குமாராபாயி சாஹேப் இவர்களிடத்தில் சிரஞ்சீவி ராஜா அப்துல் பிரதாபசிம்ஹராஜா இவர்களுக்கு அன்னப் பிராசன நாளில் சுத்திப்போட்ட வகையில் 2½ சக்கரம்"[53]

ராஜஸாபாயி, ராஜ்குமாராபாயி ஆகியோர் இவ்விளவரசரின் மாற்றாந் தாய்மார்கள் ஆவர். அதாவது துளஜாவின் முதல் இரு மனைவியர் ஆவர்.[54]

பிறந்தநாள் முதற்கொண்டு இவ்விளவரசருக்கு நவக்கிரகக்கோளாறு இருந்தமையின் ("கிரஹ பீடாபரிஹாரார்த்தம்") ("ஆயுஷ்யாபி விருத்தி") அதாவது, கோள்களின் ஆய குறைகளை நீக்குதற்பொருட்டும் வாழ்நாள் நீட்சியின்பொருட்டும் அந்தணர்களைக்கொண்டு "அமிருத மிருத்யுஞ்சய ஜபம் 1779 வைகாசி மாசம் முதல் அப்தபூர்த்தி புஷ்ய சுத்தபஞ்சமி" வரையில் 9 மாதங்களுக்கு நடத்தப்பெற்றது.[55] இங்ஙனம் ஜபம் முதலியவை நடத்தப் பெற்றபோதிலும் இவ்விளவரசர் ஆறாண்டுகள் வளர்ந்து பிறகு வைசூரியில் இறந்தார்.[56]

## மாருதி சாயேபு

துளஜா ராஜாவின் இரண்டாவது மனைவி ராஜகுமாரபாயி என்பவர் ஆவர்.[57] இவர்க்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இப் பெண்ணுக்கு அபரூபாயி என்று பேர். இவருக்கு எட்டு வயதில் திருமணம் நடந்தது. இவர் வயிற்றில் மாருதிசாமி என்று ஒரு பிள்ளையும் சாந்தாபாயி என்ற பெண்ணும்

---

50. பக்கம் 359, Indian Ephemeris
51. ச. ம. மோ. த. 12–79
52. ச. ம. மோ. த. 18–2
53. ச. ம. மோ. த. 18–1
54. பக்கம் 100, 109, போன்ஸ்லே வம்ச சரித்திரம்
55. ச. ம. மோ. த. 18–26
56. பக்கம் 125 ,, ,,
57. பக்கம் 109, போன்ஸ்லே வம்ச சரித்திரம்

பிறந்தனர். இவர்களைவிட்டு அபரூபாயி இறந்துபோனார். இவ்விரு குழந்தைகளும் (மாருதி சாயேபும், சாந்தாபாயும்) அப்துல் பிரதாபராஜா இறந்த ஆண்டிலேயே இறந்தனர்.[58] இந்த மாருதி ராஜாவாகிய பெண் வயிற்றுப் பேரனை அரசச் செல்வத்துக்கேற்பத் துளஜா வளர்த்தார் என்பது பின்வரும் குறிப்பால் அறியலாம்:[59]

"ராஜேஸ்ரீ மாருதி சாயேபுக்கு அக்ஷராரம்பத்துக்கு உயர்ந்த ஆட்டுக்கடா உலுப்பைகள் 50 கொடுக்கிறது. ஷை சாயேப் அக்ஷராரம்ப சாமான்களில் வெள்ளி சிலேட் 15 வராகன் எடை; எழுதுகோல் தங்கம் ½ வராகன் எடை".

**நாகூர் அளித்தமை:** இரண்டாம் துளஜா 1788இல் 277 ஊர்களைக் கும்பினிக்கு அளித்தார் என்று தெரிகிறது.[60] இதுபற்றிய இரு எழுத்துச் சான்றுகள் பின்வருமாறு:

"11—6—1779... நாகூரைக் கும்பினிக்கு ஜாகீர் கொடுத்ததற்குக் கறார்நாமாவை எழுதிக்கொடுக்காமல் நாகூரை நீங்கள் கும்பினிக்குக் கொடுத்த தொகைக்குக் குறைவாகக் காணப்படுகிறது......"[61]

"24—6—1779...கும்பினிக்கு நாம் ஜாகீர் கொடுத்ததில் 30 கிராமங்கள் குறைவாகக் கொடுத்தோம் என்று கௌனர் அவர்கள் சொன்னதாக ......கீளூர் மகாலில் இத்தனை கிராமங்கள் என்று எழுதியிருக்கிறது."

மேற்கண்டவாற்றான் "ஜாகீர்" செய்த 277 ஊர்களைப்பற்றி ஏதோ வேறுபாட்டுணர்ச்சி வந்திருக்கலாம் என்றும் அதனை அரசர் தீர்த்தனர் என்றும் ஊகித்தறியலாம்.

**கோட்டைகள்:** துளஜா ராஜாவின் காலத்தில் இருந்த கோட்டைகள் பற்றி ஒரு ஆவணத்தில்[62] சொல்லப்பட்டுள்ளது. அவை: பந்தநல்லூர், திருக் காட்டுப்பள்ளி, சாக்கோட்டை, மகாதேவபட்டணம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி என்பவை. இவற்றுக்கும் பாதைகள் அமைக்க முயற்சி எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

---

58. பக்கம் 125, போன்ஸ்லே வம்ச சரித்திரம்
"The premature death of his only son, a daughter and grandson filled him (Tulaja II) with remorse and agony"– P. 313, Maratha Rule in the Carnatic — Srinivasan, C. K.

59. ச. ம. மோ. த. 8–29

60. Further more he (Tulaja II) granted in 1788 to the Company 277 Villages known as the Nagore settlement saving the ryots' shares and inams to Temples Choultries and Brahmans"– P. 306, Maratha Rule in the Carnatic.

61. 5 - 395    62. 3-163

**கொடைகள்**: இரண்டாம் துளஜா காலத்தில் பல நிலக்கொடைகள் உண்டு. கி. பி. 1771இல் தாராசுரத்தில் சத்திரம் தண்ணீர்ப்பந்தல் அக்கிரகாரம் அமைக்கப்பெற்று ராஜஸாபாயின் மேற்பார்வையில் விடப்பெற்றன.[63] கி. பி. 1767இல் மன்னார்குடி சுபாவில் யமுனாம்பாபுரத்தில் 60 வேலி நிலத்தைச் சர்வமானியம் அளித்தார்.[64]

1771இல் வீணை காளஹஸ்தி அய்யருக்குப் 'பெரம்னூர்' என்ற ஊரில் 1 வேலி 8 மா ஸர்வமானியம் அளிக்கப்பெற்றது.[65]

வேளாங்கூடி மாகாணம் ஆவுடையார் கோயில் அம்மனுக்கு வெள்ளிக் கிழமை கட்டளை 58½ குழி அளிக்கப்பட்டது.[66]

1786இல் பாளம்பட் அவர்கட்குத் திருப்பூந்துருத்தி வைத்தியநாதம் பேட்டையில் ஸர்வமானியம் 1 வேலி 8 மா அளிக்கப்பட்டது.[67]

**சுவீகாரம் எடுத்துக் கொண்டமை**: தனக்குப் பின் அரசாளப் பிறந்த மகன் இறந்துவிட்டபடியால் தம் தாயாதிகளுக்குள் ஒருவர் ஆகிய சரபோஜியைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டார். கி. பி. 1784க்குரிய குறிப்பு,[68]

"ராஜஸ்ரீ மகாராஜாசாயபு புத்திர சுவீகாரம் தத்த ஹோமம் செய்து வாங்கிக்கொண்டது. இவருக்குச் சரபோஜி ராஜா சாஹேப் என்று நாமகரணம் செய்தார். இந்த மாதிரியே எல்லா சகல அதிகாரிகளுக்கும் பேர் எழுதுகிறது" என்றுள்ளது. சுவீகாரம் எடுத்துக்கொண்ட தேதி 23—1—1787 என்பர் வரலாற்றாசிரியர்.[69] ஆகவே 1784 என்பது தவறுபோலும்.

கி. பி. 1793க்குரிய குறிப்பு,[69அ]

"புத்திர ஸ்வீகாரம் செய்ய முகூர்த்தம் ஸ்ராவண சதுர்த்தி ஞாயிறு நாழிகை 13–33 உபரி பஞ்சமி ரேவதி நக்ஷத்திரம் நாழிகை 15–15, உபரி அசுவனி இந்தச் சுபதினம் 14 நாழிகைக்குமேல் 16 நாழிகைக்குள் விருச்சிக லக்னத்தில் முகூர்த்தம்" என்பதாகும். இது 25—8—1793 ஆகிறது. இது சரபோஜியை ஸ்வீகாரம் எடுத்த தேதியாகாது. இது யார்க்குரிய குறிப்பு என்று தெரிய வாய்ப்பில்லை.

**பொது**: 1801இல் துளஜாவின் "அஸ்தி" காசிக்கு எடுத்துச் செல்லப்பெற்றுக் கங்கையில் இடப்பெற்றது என்று ஒரு குறிப்பு அறிவிக்கிறது.[70] கி. பி. 1787இல் இறந்தபோதிலும் அதை வைத்திருந்து கங்கையில் கரைத்தனர் என்பது வியப்புக்குரியதாகும்.

---

63. 3-143, 144 64. 3-136 65. 3-265
66. 3-265 67. 4-367 68. ச. ம. மோ. த. 4-19
69. Page 83, A History of British Diplomacy in Tanjore — K. Rajayyan.
69அ. ச. ம. மோ. த. 18-62 70. ச. ம. மோ. த. 24-40

## அமர்சிங்கர்

இவர் 7—4—1787 பராபவ பங்குனி மாதம் 28ஆம் நாள் சனிக்கிழமை பட்டம் எய்தினார்.[71]

**மனைவியர் :** கி. பி. 1776இல் இவருக்குக் கோவிந்தராவ்காடேராவின் மகள் கிருஷ்ணம்மா திருமணம் செய்விக்கப்பெற்றார்.[72] இவரது இரண்டாவது மனைவி பார்வதீபாயி எனப்பெறுவர்.[73] இவர்க்குப் பவானிபாய் என்ற மனைவியும் இருந்தார்.[74]

**பிறப்பு :** இவர் திருமணம் செய்து கொள்ளாத மனைவியின் மகன் ஆகையால் இவர் மகனாகக் கருதப்படமாட்டார் என்பது ஒரு வாதமாகக் கூறப்பட்டு வந்தது.[75]

**அறங்கள் :** இவர் அரசர் ஆனதும் கி. பி. 1787 முதற்கொண்டு வைத்தீசுவரன் கோயிலுக்கு ஆண்டுதோறும் 5400 சக்கரம் கொடுத்துவந்ததாகத் தெரிகிறது ;[76] அநந்தய்யங்கார் என்பவருக்குத் திருமங்கலக்குடியில் வேலி 16 மா தானம் செய்தார் ;[77] வெங்கட தீக்ஷிதர் என்பவருக்குத் திருவையாற்றில் வீடு தானம் செய்தார் ; பெருமாள் நாயிக் என்பவருக்கு 2நடகாட்டாங்குடியில் 2 வேலி இனாம் அளித்தார்.[78]

" மிராசுதார்களுக்கு 40 வாரம் உயர்த்தியதற்கு அரண்மனைக்கு மேல்வாரம் நஷ்டம் " என்ற ஒரு குறிப்பு உள்ளது.[79]

40 வாரம் என்பது 100 கலம் கண்டுமுதலாயின் 40 கலம் மிராசுதார்களுக்கு என்று பொருள்படும்.

" அரசங்க வரவு " என்ற தலைப்பில் குடிவாரம் 2 என்றும் மேல்வாரம் 3 என்றும் கூறப்பட்டது. ஆதாவது 100இல் மேல்வாரம் 60 ஆகிறது. மிராசுதார்களுக்கு இந்த 60இல் 40 என்று கொண்டால் முன்னே 60இல் 40 அவர்களுக்கு இல்லை என்றும் இப்பொழுது அவர்களுக்கு அளித்தமையின் சர்க்காருக்கு நஷ்டம் என்றும் தெரியவருகிறது. இங்ஙனம் மிராசுதார்களுக்குச் சலுகை தந்த இதே சமயத்தில் குடிவாரதாரர்களுக்கும் சலுகை தந்ததாகத் தெரிகிறது. " 40 கலம் வாரத்துக்குக் கம்மியுள்ள ஊர்களுக்கு 40 கலம் வாரம் செய்து " என்றமை[80] இதனை வலியுறுத்தும்.

---

71. 8-27
72. 8-227
73. ச. ம. மோ. த. 18-11
74. ச. ம. மோ. த. 12-78
75. 5-618.
76. 8-178
77. 8-166
78. 8-166
79. 6-94
80. 2-298

**ஆவுசாகேப் :** ஆவுசாகேப் என்று குறிக்கப்பெற்றது இரண்டாம் துளஜாவின் தாய் ஆகிய திரௌபதியம்பாபாயி சாகேப் ஆவர். அமர்சிங்கர் பட்டம் எய்தியபின் இவர் இறந்தார். இவரது உத்தரகிரியைகளை அமர்சிங்கு தானே "முரட்டுத்தனமாகச்" செய்தார்.[81] சரபோஜிதான் நீத்தார்க்குரிய சடங்குகளைச் செய்யவேண்டும் என்பது சரபோஜி கட்சியின் வாதம்.[82] இது பற்றி விரிவாக வினந்தி என்பார் எழுதிய கடிதத்தில் காணலாம்.[82அ]

அதன் சுருக்கம் பின்வருமாறு :—

நேற்றுக்காலை விடியல் ஆவுசாகேப் இறந்தார். அமர்சிங் 10 பேருடன் வந்தார். இரண்டு துரைகள் அமர்சிங்கிடம் சென்று திரும்பிச் சரபோஜியிடம் வந்து "அமர்சிங் ஆவுசாயேப் உத்தரகிரியை செய்யவேண்டும் என்பது கவர்னர் கௌன்சில் இடமிருந்து ஆணை" என்றார்கள். சரபோஜி "நான் தான் உரியவன் ; ஆவுசாயேப் கருத்தும் இதுவே" என்றார். இதைக் கவர்னர் கௌன்சிலுக்கு எழுதுகிறேன் என்று கூறிய பாதிரி பிரேதத்தை அமர்சிங்கிடம் தரச்சொன்னார். பாயிசாயேபிடம் இதைச் சொன்னார்கள். இதற்குள் இச்செய்தியை அமர்சிங்கிடம் வெங்கடாசல முதலி சொல்ல, அமர்சிங்கு தன் அரண்மனையினின்று வந்தார். பாதிரி சாகேப், "பிரேதத்தை அமர்சிங்கிடம் ஒப்பித்தால் நல்லது ; இல்லையேல் சத்ரபதி காரியங்களுக்குக் கெடுதி" என்றார். 3 பாயிசாயேபுகள் "அமர்சிங்கு தகுதியற்றவர் ; ஆவுசாயேப் எங்களை நம்பி இருந்தார். ஸ்ரீமந்த் செய்வது சரியில்லை எனில் அரண்மனை யிலேயே வைத்துத் தீ மூட்டிவிடுகிறோம்" என்றனர். எனினும் பின்னர் ஒப்புக்கொண்டனர். அமர்சிங்கு தோட்டம் சத்திரம் அரண்மனை இம்மூன்றை யும் விடமாட்டேன் என்றார். சிறிது கலகம் நடந்தது. பின் அங்கிருந்த பொருள்களை எல்லாம் எடுத்துச் சென்றார்".

**சர்கேல் சிவராவ் :** அமர்சிங்கின் சர்கேல் சிவராவ் எனப்பெற்றார். இவர் மிகவும் கொடியவர். இவரிடத்தில் அமர்சிங்குக்கு மிகுந்த பற்றும் அன்பும் உண்டு. இவர் தன் பிள்ளையையும் "ரிகார்டு" அலுவலகத்தில் நியமித்தார்.[83] அமர்சிங்கின் நாடு முழுவதையும் கும்பினியார் "ஜப்தி" செய் தார்கள். அது விடுதலை செய்யக்கூடாது என்பதும் அப்படி விடுதலை ஆனால் அமர்சிங்கும் சிவராயரும் "வெகு அநியாயம்" செய்வர் என்பதும் சரபோஜி கட்சியின் கூற்று.[84] சிவராயருக்கு ஒருவித அபாயமும் நேரிடக்கூடாது என்பது அமர்சிங்கின் எண்ணமாகும்.[85] அமர்சிங்கும் சிவராயரும் தம்மிடத்தும் தம் மூன்று நாட்டுப்பெண்களிடத்தும் சரபோஜி இடத்தும் சரியாக நடந்து கொள்வதில்லை என்று "மிஸ்தர் ஓமல் கௌனர்"[86] அவர்களுக்குத்

81. 5-468　　82. 3-26, 27　　82அ. 3-277 முதல் 295 வரை

83. 8-108　　84. 5-560　　85. 7-683

86. Sir Charles Oakley was Governor from 1-8-1792 to 7-9-1794.

திரௌபதாம்பாபாயி எழுதியுள்ளார்.[87] சிவராவின் மகன் ஜீவட்ராவ் என்ற பெயரினர்.[88]

**வக்கீல் :** துளஜாவுக்கு வக்கீல் ஆக இருந்தவர் திரியம்பக ஸம்பாஜி ஆவர்.[89] அமர்சிங்குக்கும் அவரே வக்கீல் ஆக இருந்தார்.[90]

**இறப்பு :** 18-4-1802இல் அவர்சிங்கு திருவிடைமருதூரில் இறந்தார்.[91]

**மனைவியும் மகளும் :** அமர்சிங்கு மனைவியொருவர் 1820 வரையி யிலும் உயிர் வாழ்ந்திருந்தார். அவருக்கு 1820-21இல் ரூ. 87,500 அளித்ததாக ஒரு குறிப்பு உள்ளது.[92]

யமுனாபாய் என்று அமர்சிங்குக்கு ஒரு புதல்வி இருந்தார். அவர் 2—1—1853 ரெஸிடெண்ட் ஜே எஃப் பிஷப் அவர்கட்கு ஒரு கடிதம் எழுதி யுள்ளார். அவர் உடன் பிறந்தவருக்குச் சிவாஜி காசிராவ் என்ற மகனும் தனக்குப் பாலகிருஷ்ணசுவாமி என்ற வளர்ப்புப்பிள்ளையும் இருந்தனர். அவர்கட்கு ஒரு உடன்படிக்கை எழுதித் தன் தருமங்களை அவர்கள் மேற் பார்வை செய்யவேண்டும் என்று எழுதியுள்ளார்.[93] இவ்வுடன்படிக்கையில் இவருக்கு ஒரு தம்பி இருந்தார் என்றும், பிரதாபசிங்கு என்பது பெயர் என்றும் தெரிகிறது.

**பேரன் :** மேலேகண்ட பிரதாப சிங்குக்கு (அமர்சிங்கரின் மகனுக்கு) யேகோஜி என்றொரு சுவீகார மகன் இருந்தார். அவர்க்குத் திங்களொன்றுக்கு ரூ. 1000 வீதம் ஓய்வூதியம் (Pension) தரப்பெற்றுவந்ததாகத் தெரிகிறது. 1873 செப்டம்பர்முதல் 1877 ஜூலை வரை ஓய்வூதியம் கொடுத்தமைக்குரிய பற்றுச்சீட்டுக்களின்படிகள் உள்ளன.[93அ]

## இரண்டாம் சரபோஜி

அஞ்சு அங்கணத்தின் மாடி இரண்டாம் சரபோஜி கட்டினார் என்றும் அங்கே கல்யாண மகால்* மங்களவாஸம் சேர்ந்தவர்கள் இருந்தனர் என்றும் தெரிகிறது.[94]

---

87. 8-254 முதல் 258 முடிய
88. 8-8
89. 8-172
90. 4-405 ; 8-268
91. 8-228
92. 8-66
93. 1-190, 191 ; 7-697 முதல் 702 வரை
93அ. 6-480 481, 482
94. 4-180.

* "Sarabhoji had a Seraglio in true oriental fashion and the affairs of this establishment known by the name Kalyanamahal have been repeatedly before the Govt. in the Political Department. This institution first formed about the year 1824 consisted at his death two principal and 24

ராயல் ஏஷியாடிக் சொஸைட்டியின் (Royal Asiatic Society) கிளைகள் கல்கத்தாவிலும், சென்னையிலும், பம்பாயிலும் நிறுவப்பெற்றன. அப்பொழுது சரபோஜி II அதன் சென்னைக்கிளையில் ஒரு அங்கத்தினராக 31—1—1830இல் சேர்த்துக்கொள்ளப்பெற்றார் என்று ரெஸிடெண்டு ஜான் ஃபைஃப் வழி அறிவிக்கப்பெற்றது.

இங்ஙனம் தனக்குப் பெருமை தந்தமைக்கு நன்றிகாட்டிச் சரபோஜி அரசர் சென்னைக் கிளையின் செயலருக்கு 30—8—1830இல் கடிதம் எழுதினார்.[95] சரபோஜியின் காலத்தில் வக்கீலாக இருந்தவர் கோபாலராயர் என்று தெரிகிறது.[96]

**சரபோஜியின் இறப்பும், சிவாஜி பட்டாபிஷேகமும்:** இவைபற்றிக் காணும் குறிப்பு[97] பின்வருமாறு:— "சரபோஜி மகாராஜா அவர்களுக்கு உடம்பு சரியில்லாமலிருந்து உபத்திரவம் அதிகம் ஆகிவிட்டபடியால் பகல் 6 நாழிகைக்கு மாடியிலிருந்து கிருஷ்ணவிலாஸுக்குக் கொண்டுவரப்பட்டார். உடனே எல்லா மகால்களும் ஸீல் வைக்கப்பட்டன. சாயந்திரம் பட்டாளம் ஜனங்கள் நாலா பக்கத்திலும் காவல் வைத்தார்கள். இரவு 6 நாழிகைக்குப் பிராயச்சித்தம் கொடுக்கப்பட்டது. பிறகு 11 நாழிகைக்கு மகாராஜா கைலாஸ வாஸியானார். காலையில் முன்கண்டபடிக்குத் தண்டோரா அடிக்கப்பட்டது. பிறகு 7 நாழிகைக்கு எல்லா சேனைகளுடன் கைலாசவாசி சரபோஜி மகாராஜாவின் உடம்பு கோட்டைக்கு வெளியே கொண்டு போகப்பட்டது. அலிதர்வாஜா வடக்கு ஆஜரத்தில் 21 துப்பாக்கிகள் சுடப்பட்டன. அக்னி சமஸ்கார சமயத்தில் அவருடைய வயது 54 துப்பாக்கிகள் சுடப்பட்டன.

"மகாராஜா இறந்த 12ஆம் நாளன்று 10ஆம் நாள் காரியம் நடந்தது. 13ஆம் நாள் 11ஆம் நாள் காரியம் நடந்தது. 14ஆம் நாள் 12ஆம் நாள் காரியம் நடந்தது."

"மகாஸ்ரீ சிவாஜி பட்டாபிஷேகம் 7 நாழிகைக்குப்பிறகு 11 நாழிகைக்குள் நடந்தது."

---

inferior or dependent women of which latter 8 are now alive. The Rajah made a liberal provision for all of those women collectively in the shape of an endowment in landed and funded property but at the same time took care to provide that as lapses occured among the inmates of the seraglio, the accumulated surplus of the income and eventually the entire endowment with the splendid palace which he had erected for the residence of the women should be appropriated for charitable purposes"

Pages 826-827; The Tanjore District Manual.

95. 5-228 முதல் 281 வரை

96. 5-484

97. ச. ம. மோ. த. 10. 14-15

"மகாராஜா சபையில் எல்லாச் சேனைகளுடனும் வெள்ளைக்கார ஜனங்கள் உட்கார்ந்து சென்னைப்பட்டணம் கவர்னர் அவர்கள் பட்டம் கட்டும் காகிதம் அனுப்பியதைச் சதசில் படிக்கும்போது கோட்டையின் மேல் 21 துப்பாக்கி சுடப்பட்டது."

"11 நாழிகைக்குப் பிறகு எல்லா சேனைகளுடனும் சிவாஜிராஜா ரெசிடெண்ட் தங்கரதத்தில் உட்கார்ந்து, மேலும் மாப்பிள்ளைகள் 4 பேர் கலெக்டர் வகையறாக்கள் சர்கேல் சிரேஸ்ததார்கள் ஹௌதாவில் உட்கார்ந்து 4 வீதி சுற்றி இரவு 4 நாழிகைக்கு அரண்மனை வந்து சேர்ந்தார்கள். பாவாஜி ராமாஜி பண்டிதர்க்குச் சர்கேல் வேலை உத்தரவிடப்பட்டது. பட்டாபிஷேகச் செலவு நாகப்பட்டினம் கம்பெனி கஜானாவிலிருந்து ரூ. 50,000 வந்தது."

8—3—1832இல் இரண்டாம் சரபோஜி இறந்தபொழுது கும்பினி அரசாங்கத்தார் ஒரு அறிக்கை வெளியிட்டதாகத் தெரிகிறது.[98]

## இரண்டாம் சிவாஜி

இரண்டாம் சரபோஜிக்கும் அவரது இரண்டாவது மனைவி அகல்யா பாயிக்கும் சிவாஜி பிறந்தார். இவர் பிறந்த தேதி கி. பி. 1808இல் பிரபவ மாசி மாதம் 23ஆம் நாள்; மார்ச்சு மாதம் 22ஆம் நாள் சிவாஜி என்று பெயர் சூட்டப் பெற்றார்.[99] செப்டம்பர் 30 அன்னப்பிராசனம். குடுமிக்கல்யாணமும், பள்ளிக் கூடத்தில் வைத்தலும், இடுப்பில் சின்ன கத்தியைக் கட்டுதலும் 1811இல் நடந்தன.[100]

"சின்ன மகாராஜா கல்யாணத்துக்காக 1818 ஜூன் 30இல் மேசை பண்ணுகிற படியினாலே" என்ற குறிப்பினால்[101] சிவாஜிக்கு முதல் திருமணம் 1818இல் நடந்ததாகக் கொள்ளலாம்.

"1829 ராஜஸ்ரீ சிவாஜி மகாராஜா இரண்டாவது கல்யாணம் ராஜஸ்ரீ ராமச்சந்திர சூர்வே லக்னபத்திரிகை அனுப்புகிறார்" என்ற குறிப்பும்,[102]

"... ஷை இரண்டாம் கல்யாணம் மாப்பிள்ளை எசவந்தராவ் ராமச்சந்திர ராவ் சூர்வே பெண் காமாட்சிபாயி கலியாணம்" என்ற குறிப்பும்,[103] காமாட்சி அம்பாபாய் இவரது இரண்டாவது மனைவியென்றும், இவர்களது திருமணம் கி. பி. 1829இல் நடந்தது என்றும் அறிய உதவுகின்றன.

---

98. 6-93
99. 3-225
100. 2-47
101. 6-329
102. ச. ம. மோ த. 4-16
103. ச. ம. மோ. த. 10-15

இவரது முதல் மனைவியின் பெயர் சைதம்பாபாயி ஆகும். இச்சைதம்பாபாயி என்பவர் சரபோஜி மகாராஜாவின் மூத்த பெண்ணின் பெண். மூன்றாவது மனைவி பத்மாம்பாபாய். இவ்விருவரும் சிவாஜிக்கு முன்னரே இறந்தனர்.[105]

கி. பி. 1852இல் ஒரேநாளில் சிவாஜி 17 கல்யாணங்கள் செய்து கொண்டார்.[106]

“குஜராதி ராமநாத் இடம் கோலாபூர் சாதாரா கோங்கணம் வகைறா பிராந்தியத்திலிருந்து சர்க்காருக்குப் பெண்கள் பார்த்து வருவதற்காகப் போயிருக்கும் சேனாதுரந்தரர் ருத்ராஜா ஆனந்தராவ் ஜாதவிடம் பண்டரியில் சேர்ப்பிக்கும்பொருட்டுக் கொடுத்தது ரூ. 10,000; இதற்கு உண்டாவளி ரூ. 50 ஆக ரூ. 10,050” என்ற குறிப்பால்[107] 1851இல் கோலாபூர் சதாரா முதலாகிய இடங்களுக்கு ஓர் உயர் அலுவலரை அனுப்பிப் பல பெண்களைக் கொணர்வித்து மணம் செய்துகொண்டார் எனத் தெரிகிறது. “1852: சர்க்காரிலிருந்து கோலாப்பூர் சாதாரா கோங்கணம் முதலிய நாடுகளில் சம்பந்தம் செய்ய வஜராத் மற்றும் காரியஸ்தர்கள் சென்றுவந்ததற்கு ஹுஜூர் முன்னிலையில் இனும் ரூ. 20,515” என்ற குறிப்பினுல்[107அ] சென்றுவந்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர் என்றும் தெரிகிறது. மணம் செய்து கொண்டவர்கள் பெயர் ஒரு ஆவணத்துக்கும் பிறிதோர் ஆவணத்துக்கும் சிறிது மாறுபாடு காணப் பெறுகிறது. அப்பெயர்கள் இக்கட்டுரையின் இறுதியில் காட்டப்பெறும்.

**பூஷண பத்திரத்தில் விருதுகள்:** அரசர் சிலருக்கு உயர்ந்த பதவி கொடுக்கும்பொழுது யாருக்குப் பதவி கொடுக்கிறார்களோ அவர்களுடைய தகுதி திறமை முதலியவற்றைக் குறிப்பிட்டு நியமனம் செய்வர் என்று தெரிய வருகிறது. இத்தகைய நியமன ஆணையில் அரசரது சிறப்புக்கள் முதலில் கூறப்பெறும். அத்தகைய “பூஷண பத்திரம்” ஒன்று “சாலிவாகன சகம் 1756 ஜயவருஷம் வைசாக சுத்த சப்தமி வியாழக்கிழமையில்” கொடுக்கப் பட்டுள்ளது. இதனுள் கண்ட சிவாஜியின் விருதுகள்[107ஆ] பின்வருமாறு:—

“ஸ்ரீமத் போஸல குலோத்பவ, ஹிந்துபதிசிரேஷ்ட, ஸ்ரீமத் வீரஸிம்ஹ. கருணாகடாட்ச லப்த ஸீப்தாபா ஸாதித தில்லி சாதுர் பாக ஸ்வாதந்த்ரய விபக்ஷீக்ருத தில்லிசராஜா ஸார்வபௌம சௌர்ய தைர்ய வீர்ய சாதுர்ய

105 In his youth Sivaji was married to three wives (daughters of his 3 sisters) of whom the eldest named Saidamba Bai Saheb and the youngest Padmamba Bai Saheb died before him and the second is the present surviving senior Rani Kamakshi Amba Bai Saheb – Page 838 Tanjore Manual

106. 1–120

107. ச. ம. மோ. த. 8–36

107அ. 4–856

107ஆ. 5–236, 237

காம்பீர்ய விநயாதி ஸத்குண ரத்ன ரத்னாகர ஸகல கலா ப்ரவீண ப்ரதிபக்ஷ பக்ஷகண்டன தக்ஷ ஸத்ரக்ஷண ஸ்தாபக சோள தரணி பாலக தஞ்சபுரா தீஸ்வர க்ஷத்திரிய குலவரிஷ்ட ஸத்கீர்த்தி மந்த்த ஸ்ரீமந்த்த மகாராஜ சத்ரபதி பூலோக தேவேந்திர சிவாஜீந்திர ராஜே சாஹேப் அவர்களுடைய உத்தரவின் பேரில்."

இங்ஙனம் உள்ள பல விருதுகளும் இவர்க்கு மட்டுமன்றி எல்லாருக்கும் கொடுக்கப்பெற்றுவந்த அட்டவணை விருதுகளாக இருத்தல்கூடும் என்று கருதலாம். எங்ஙனமாயினும் நியமன உத்தரவுகளுள் ஒன்று கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

**எச்சரிக்கை :** இவர் பட்டத்துக்கு வந்தபிறகு வெள்ளையர் கருத்துக்கு ஏற்ப நடந்துகொள்ளவில்லை. அதிகாரிகளும் சரிவர நடந்துகொள்ளவில்லை போலும். ஆகவே 1838இல் அமைச்சர்கட்கு ரெஸிடெண்டு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.[108] "மகாராசாவின் நடத்தை கேட்டு மிகவும் ஆயாசப்படுகிறோம்" என்று 1837இல் ரெசிடெண்டுக்கு கவர்ன்மெண்ட் செகரட்டரி எழுதியுள்ளார்; அன்றியும் "நியாயம் தவறினாலும் ஆசிருதர்களுக்குத் துன்புறுத்தினாலும் அடம் செய்தாலும் ஒப்பந்தப்படிக்கு அதிகாரம் கவர்ன்மெண்டு எடுத்துக் கொள்ளும்" என்று அக்கடிதத்தில் அச்சுறுத்தப் பட்டுள்ளது.[109]

கி. பி. 1848இல் ரெஸிடெண்டு தஞ்சாவூரை விட்டுப் போகுமுன், தன்னைச் சிவாஜி அலக்ஷ்யப்படுத்தியதைச் சுட்டிக்காட்டி, மாதுஸாமி மாடிக் என்பவரை அரசர் நம்பிக் கெட்டுப்போகக்கூடாது என்றும் அரசர் தம் தாயாரின் நகைகளை அடகு வைத்துக் கடன்காரர் ஆகக்கூடாது என்றும் கூறி ஸர்கேல் தேவாஜிராவ் வராகப்பையாவை நீக்குவதற்கு முயல்வதையும் சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிறார்.[110]

**இறப்பு :** சிவாஜி 1855 அக்டோபர் மாதம் 25ஆம் நாள் திங்கட்கிழமை காலை 7 நாழிகைக்கு இறந்துபோனார்.[111]

## இரண்டாம் சிவாஜியின் மனைவியர்

சென்னைப்பட்டணம் உச்சநீதி மன்றத்தில் (Supreme Court) காமாட்சியம்பாபாயி சாயேப் கும்பினியாரையும் மற்ற பாயிமார்களையும் பிரதி வாதிகளாக்கி 1857இல் ஒரு வழக்குத் தொடுத்தார். நார்ட்டன் என்பார் வழக்கறிஞர். அவர் கையொப்பம் இட்டுள்ள 20—4—1857 தேதி இட்ட ஒராவணத்தில்[1] பிற்கண்ட பாயிமார் பெயர்கள் உள்ளன:—

108. ச. ம. மோ. த. 10-5
109. ச. ம. மோ. த. 10-4
110. ச. ம. மோ. த. 6-29, 30, 31
111. ச. ம. மோ. த. 4-28.
1. 2-231, 232

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சையம்பா | 2. | உமாம்பா | 3. | ஜயதம்பா |
| 4. | ஜிஜாயி | 5. | தீபாம்பா | 6. | ராமகுமாராம்பா |
| 7. | சகுணாம்பா | 8. | அபரூபாம்பா | 9. | யசவந்தம்பா |
| 10. | அனசாம்பா | 11. | கௌராம்பா | 12. | அருணாம்பா |
| 13. | ஸுகுமாரம்பா | 14. | கிரிஜாம்பா | 15. | சீமாம்பா |

(16) சோயிராம்பா (17) துகாம்பா ஆகியோர் அரசர் இறப்பதற்கு முன்னமேயே இறந்துவிட்டனர் என்றும் அவ்வாவணத்திற் கூறியிருக்கிறது.

1863ஆம் ஆண்டு ஜனவரி வரையிலும் ஆவுசாயேப் பாயி சாயேபு களுக்குச் சேரவேண்டிய தொகைபற்றி எழுதப்பட்ட குறிப்பில்[2] மேலே கண்ட 15 பேர்களில் (12) அருணாம்பா தவிர்த்து மற்றவர் பெயர்கள் காணப்படுகின்றன. இந்த இடைக்காலத்தில் அருணாம்பா[3] இறந்தனர் ஆதல் கூடும்.

28—7—1858இல் ரெஸிடெண்டு செரி அவர்கள் சிரஸ்தேதாருடன் அரண்மனைக்கு வந்தார்.[4] ஆவுசாயேப் பாயி சாகேபுகளுடன் பேசுகிற காலத்தில் மாமியாருடன் வசிக்கும் ஏழு பாயி சாகேபுகள் மாமியார் உடன் இல்லாமல் பார்க்கமுடியாது என்று மறுத்தனர்.[5] பின்னர்த் தனியாக இருக்கும் எட்டு பாயி சாகேபுகளுடன் பேசுவதற்குச் சென்றார். அக்காவின் மூலம் அவர்களுடைய பெயர்களைக் கேட்டார். அவ்வெண்மர் பெயர்[6] பின்வருமாறு :-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சுந்தராயி | 2. | தராயி | 3. | பராயி |
| 4. | பங்காயி | 5. | சம்பராயி | 6. | ஜமராயி |
| 7. | கௌராயி | 8. | லஸராயி | | |

இவர்களில் மூத்தவர் சுந்தராயி 20 வயது; இளையவர் கமராயி 12 வயது என்று அவர்களைக் கேட்டபொழுது விடை தந்தனர். பின்னர் மாமியாருடன் இருக்கும் ஏழு பாயிசாயேபுகளைக் காணச்சென்றபொழுது, ரெஸிடெண்டு அவர்களையும் "உங்களில் மூத்தவர் யார்? இளையவர் யார்? என்று வினவினார். "எங்களில் மூத்தவர் 20 வயதுள்ள சமராயிசாப் இளையவர் 12 வயதுள்ள சுந்தராயிசாப்" என்று பதில் வந்தது.[7]

எண்மர் பதிலில் கமராயி 12 வயதினள் என்று இருக்க எழுவர் பதிலில் சுந்தராயி 12 வயதினள் என்று மாற்றிக் கூறியுள்ளது கவனிக்கற்பால, எண்மர் பதிலில் கமராயி, எழுவர் பதிலில் சமராயியாகத் திகழ்கிறார் என் கொள்ளவேண்டியுள்ளது. மேலும் எண்மர் பெயருடன் முதற்கண் கூறப்பட பதினைவர் பெயரையும் ஒப்பிடின் கௌராயி தவிர்த்து மற்ற ஏழும் ம பட்டிருத்தலைக் காணலாம். இவ் எண்மர் பெயர்கள் வீட்டில் அழை,

2. 6-434, 435 3. இவர் 1860இல் இறந்தார் என்று தெரிகிறது
4. 4-117 5. 4-148 6. 4-150 7. 4-160

பெயர்கள் ஆகும். திருமணத்திற்குப் பிறகு மாமியார் தன் மருமகளுக்குப் புதுப் பெயர் இடுவது மராட்டியர் வழக்கம். அவ்வழக்கப்படி இம்மாதர்கட்கும் புதுப் பெயர்கள் தரப்பெற்றன.[8] ஆதலால் இப் பெயர் மாறுபாடு காணப்படலாயிற்று.

மேலேகாட்டிய எண்மரையும் பார்த்து "நீங்கள் ஏன் தனியாக இருக்கிறீர்கள் ?"[9] என்று கேட்டபொழுது "நமக்குத் தெரியாமல் நாம் கொடுத்த மாதிரி ஒரு பிராது கவர்ன்மெண்டுக்குப் போய் வந்தது ; அவ் விஷயத்தைப்பற்றி நம் காரியஸ்தர்கள் நம்மைக் கேட்டதில் நமக்குத் தெரியாதென்று சொன்னோம். அதனால் மனஸ்தாபம் ஏற்பட்டது" என்று மறுமொழி[10] பகர்ந்தனர். இது நிகழ்ந்த காலத்துக்கு ( கி. பி. 1856க்கு ) அறுபதாண்டுகட்குப் பிறகு நடந்த ஒரு வழக்கில்[11] யோகாம்பாள்[12] என்ற (தர்பார்) அக்காவை விசாரித்தபொழுது அவர் கொடுத்த "வாக்குமூலத்தில்" இவர்கள் பதினைந்து பேரும் எட்டும் ஏழுமாகப் பிரிந்து இருந்தமைக்குரிய காரணம்[13] பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :—

"சிவாஜி இறந்த ஓரிரு மாதங்கள் கழிந்ததும், "சுவீகாரம் எடுத்துக் கொள்ள அரசாங்கத்துக்கு உத்தரவுபெற எழுதவேண்டும்" என்று தர்பாருக்கு உரியவர்களிடம் யோகாம்பாள் வழி பாயி சாயேபுகள் சொல்லியனுப்பினர். அவர்கள் இது பற்றி எழுதியுள்ளதாகவும் மேலிடத்தினின்று பதில் வரவில்லை என்றும் மறுமொழி பகர்ந்தனர். அவர்கள் எழுதினார்களோ இல்லையோ என்று பாயிசாகேபுகளுக்கு ஐயம் தோன்றியது. ஆகவே 15 பாயி சாகேபுகளும் அரசாங்கத்துக்கு ஒரு "பத்திரம்" எழுதினர் ; மாப்பிள்ளை சக்காராம் சாகேபு தன் மனைவிக்கு அரசு பெற வேண்டி எழுதவில்லை போலும் என்று கருதினர். இதனையறிந்ததும் சக்காராம் சாகேபு அவர்கள் 15 பாயி சாகேபுகளை இரு பிரிவுகளாகப் பிரித்தார் ; எண்மரை "ராம் மாடியில்" தங்கச் செய்தார் ; எஞ்சியவரைச் "சதர் மாடியில்" இருக்கச் செய்தார். இதுவே எண்மரும் எழுவரும் ஆகப் பிரிந்துறை வரலாறு என்று தெரிகிறது.

---

8. "A new name is given to every girl at her marriage and she is known for the future only by that name. This is the custom among all Mahrathas. The old name is cast off from marriage. .." Page 37, Deposition of M. S. Ghantigai, O. S. No. 26 of 1912 in the Subordinate Judge's Court, Tanjore ( on 11—8—1916 ).

9. 4-150

10. 4-152

11. O. S. 26 of 1912 in the Court of the Subordinate Judge of Tanjore.

12. 4-156 ; *இவர் இரண்டாம் சிவாஜி காலத்தில் அக்கா கூட்டத்தில் சேர்ந்து இந்த வழக்கில் சாட்சி கூறும் காலத்து 85-86 வயதுடையவராக இருந்தவர்.*

13. P. 4, lines 23 to the end - Deposition of Yogambal, O. S. 26 of 1912 (on 15—2—1916)

# 5

# சிவாஜி வெங்காஜிக்கு எழுதிய கடிதங்கள்

## வரலாற்றுக் குறிப்பு

தஞ்சை மராட்டிய மன்னர்களில் முதல் மன்னராகிய ஏகோஜி எனப் பெறும் வெங்காஜிக்குச் சிவாஜி எழுதிய கடிதங்களில் இரண்டு பூனே நகரில் "மராட்டிய வரலாற்று அருங்காட்சியக"த்தில் உள்ளன. அவ்விரு கடிதங்களும் "தஞ்சாவூர்சே மராத்திராஜே" என்ற மராத்தி மொழியில் எழுதப்பெற்ற நூலில் அச்சிடப்பெற்றுள்ளன. அச்சிட்ட நூலில் உள்ள அவ்விரு கடிதங்களின் நிழற் படம் பூனேயிலிருந்து பெறப்பட்டுத் தமிழாக்கம் செய்யப்பெற்றுள்ளது.

அவ்விரு கடிதங்களுள் முதல் கடிதக் குறிப்பிலிருந்து, அதற்குமுன் சிவாஜி ஓரிரு கடிதங்களை எழுதியிருத்தல் கூடும் என்று கருதலாம்.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் பம்பாய் இராணுவத்தின் இந்திய காலாட்படையின் முதற்படைக்குத் தலைமை பூண்டவரும், சதாராவில் ரெஸிடெண்ட் ஆக இருந்தவரும் ஆகிய ஜேம்ஸ் கிராண்டு டஃப் (James Grant Duff) என்பார் "மராட்டியர் வரலாறு" என்ற நூலை எழுதியுள்ளார். இதன் மூன்றாவது பதிப்பு கி. பி. 1873க்குரியது. இந்நூல் பக்கம் 127இன் அடிக் குறிப்பில்,

"சிவாஜி வெங்காஜிக்கு நான்கு கடிதங்கள் எழுதினார். அக்கடிதங் களின் மூலப்படிகள் சதாரா அரசரின் வழியில் வந்த சிட்னிஸ் எனும் தனி அலுவலரிடம் உள்ளன. இப்பொழுதுள்ள சிட்னிஸ் அவர்களின் பாட்டனார் ரகுநாத் நாராயண் அனுமந்தே என்பவரின் வழியில் வந்தவரிடம் இருந்து பெற்றுப் பாதுகாத்துவந்தார். அவற்றை நான் ஆய்ந்து பார்த்தேன்; சிவாஜியின்

சிட்னிஸ், பல்லாஜி ஆவுஜீ என்பவரின் கையெழுத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். இக்கடிதங்கள் உண்மையானவையே என்று கொள்ளல்தகும்" என எழுதியுள்ளார்.

இக்குறிப்பினால் அவ்விரு கடிதங்களின் உண்மைத்தன்மை புலப்படுவ தோடு முதற் கடிதம் எழுதப்பெற்றதற்கு முன் மேலும் இரண்டு கடிதங்கள் சிவாஜி அனுப்பினார் என்பது போதரும்.

வெங்காஜி அல்லது ஏகோஜி என்பார் ஷாஹஜியின் (Shahaji) புதல்வருள் ஒருவர்; ஷாஹஜியின் இரண்டாவது மனைவியாகிய துக்காபாயி மோஹிதேயின் வயிற்றில் பிறந்தவர். சத்திரபதி சிவாஜியோ ஷாஹஜியின் முதல் மனைவி ஜிஜாபாயின் மகன் ஆவர்.

ஷாஹஜிக்கு வெங்காஜியிடம் மிகுந்த அன்பு இருந்தமையால் ஷாஹஜி தன் நாடுகளை வெங்காஜிக்கு அளித்து, அவர்க்கு உதவியாக இருக்குமாறு தன் அமைச்சர்கள் ரகுநாத் நாராயண், ஜனார்த்தன நாராயண் ஆகிய இருவரையும் அனுப்பிவைத்தார்.

ஷாஹஜி 1674இல் இறந்ததும் பிஜபூர் சுல்தான் ஷாஹஜியின் இடத்திருந்த ஜாகீர்களை வெங்காஜிக்கு உரிமையாக்கினார்.

கி. பி. 1676இல் வெங்காஜி தஞ்சை அரசன் ஆனார். வெங்காஜிக்கும் ரகுநாதுக்கும் மனவேற்றுமை உண்டாயிற்று. ஆகவே ரகுநாத் பந்த் வெங்காஜியை விட்டுச் சிவாஜியை அடைந்தார்; சிவாஜி தென்னாட்டின் மேல் படையெடுத்தபோது சிவாஜிக்கு உதவியாயிருந்தார்.

சிவாஜி, தென்னாட்டுப் பகுதியைத் தனக்கு அடங்கியதாக ஆக்க விழைந்தமையோடு, தன் இளவலாகிய வெங்காஜியிடம் இருந்த தம் தந்தையின் ஜாகீர்கள், செல்வங்கள், யானை குதிரைகள், அணிகலன்கள் ஆகியவற்றுள் தனக்குப் பாதிப்பங்கு சேரவேண்டும் என்று விரும்பினார்; தந்தை இறந்த பின்னர் 13 ஆண்டுகள் வரையில் பொறுத்திருந்தார். கி. பி. 1677இல் தென்னாட்டின்மேல் படையெடுத்தபொழுது ஆரணியை முற்றுகையிட்டுத் திருவதியில் தங்கியிருக்கையில் சிவாஜி வெங்காஜிக்குக் கடிதம் எழுதினார். அதில் தம் தந்தை இறந்தது முதற்கொண்டு தம் தந்தைக்குரியதாயிருந்த எல்லா நாடுகளும் 13 ஆண்டுகளாக வெங்காஜியிடமே இருக்கின்றன என்றும், அவற்றுள் பாதிப்பங்கு தனக்கு உரிமையுண்டு என்றும், கோவிந்தபட், காகாஜி பந்த், நீலோநாயிக், ரகுநாத்நாயிக், தோமாஜி ஆகியவர்களைத் தன்னிடம் அனுப்பி வழக்கினைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் எழுதினார்.

வெங்காஜி நன்கு சிந்தித்த பிறகு, சிவாஜியைக் காண்பதற்குத் திருவதிக்குச் சென்றார். சிவாஜி அரசநிலைக்கு ஏற்ப வெங்காஜியை

வரவேற்றார். பல நாட்கள் விவாதங்கள் நடந்தன; விருந்துகளும் நடைபெற்றன. சிவாஜியின் கருத்துக்கு வெங்காஜி சிறிதும் விட்டுக்கொடுக்க வில்லை. சிவாஜி வெங்காஜியை அனுப்பிவிட்டார்.[1]

திருவதி என்பது திருவதிகையாகும். இது தென்ஆர்க்காடு மாவட்டத் தில், பண்ணுருட்டி புகைவண்டி நிலையத்துக்கு அருகில் உள்ளது.

இத்திருவதியில் சிவாஜியைப் பார்த்ததாகக் கூறாமல் கொள்ளிடக் கரையில் உள்ள திருமழபாடியில் சிவாஜியை வெங்காஜி கண்டதாகவும், சிவாஜி ¾ பங்கு ஜாகீர்களைத் தனக்கு அளிக்குமாறு கேட்டார் என்றும், வெங்காஜி மறுத்தமையோடு சிவாஜியின் சினத்துக்கு அஞ்சி, ஐந்து குதிரை வீரரோடு ஒரு கட்டுமரத்தின் உதவியால் கொள்ளிடத்தைக் கடந்தார் என்றும், ஜகந்நாதபந்த், கோனேரிபந்த், சிவாஜி பந்த், நீலோஜி நாயக் ஆகியோரைச் சிவாஜி சிறையில் வைத்தார் என்றும் கூறப்படுகிறது.[2] இதனையே ஆர். சத்யநாத ஐயர் அவர்களும் தம் "மதுரை நாயக்க மன்னர்கள்" என்ற நூலில் கூறுவர் (பக் 252).

மோடி தமிழாக்கக்குறிப்பில், திருமழபாடியில் சிவாஜியைக்காண ஏகோஜி சென்றார் என்றும், இருவருக்கும் வேறுபாடு முற்றியதென்றும், ஏகோஜி கொள்ளிடத்தைக் கடக்கும்பொழுது பாபாஜி பவார் என்பவர் ஏகோஜியைத் தன் முதுகில் தூக்கிக்கொண்டு கரையேற்றினார் என்றும் காணப்பெறு கின்றன.[3] மகாராட்டிரத்தில் மகாராட்டிர அரசர் வரலாறு எழுதிய ஆசிரியர் கூற்றிலும், தமிழ் நாட்டில் மகாராட்டிர வரலாறு எழுதிய ஆசிரியர் கூற்றிலும் வெங்காஜியும் சிவாஜியும் சந்தித்த இடம்பற்றி வேறுபாடு காணப்படுவது சிந்தித்தற்குரியது.

மோடி எழுத்தில் இச்செய்தி 7—12—1847இல் இடம்பெற்றது; ஏறத்தாழ இச்சந்திப்பு நிகழ்ந்த 70 ஆண்டுகளுக்குப் பிறகு எடுத்தாளப் பெற்றது; தம் முன்னோர் ஏகோஜிக்குச் செய்த உதவியைச் செவி வழியாக அறிந்து கூறுவது. இதில், இருவரும் சந்தித்த இடம் திருமழபாடி என்று உள்ளது. இதுவே சரியாக இருக்கக்கூடும்.[4]

---

1. History of the Maratha People– Kincaid & Parasnis – Pages 256-257 (1968) S Chand & Co. Delhi. History of the Marathas — Grant Duff P. 125, III Edition, 1873
2. Maratha Rule in the Carnatic – Srinivasan, C. K., Pages, 160-161:
3. 8-105 ; 7-671
4. " Sivaji encamped at Tirumalwadi on the Coleroon about 10 miles north of Tanjore ", P. 237, New History of the Marathas Vol. II, by S. Sardesai (1946).

சிவாஜியின் கடிதத்திலேயே தந்தை ஜாகீர்கள் முதலியவற்றில் அரைப் பங்கு கேட்டதாகக் கூறியிருக்கக் 'கர்நாடகத்தில் மராத்தியர் ஆட்சி' என்ற நூலில் சிவாஜி முக்கால் பங்கு கேட்டார் என்று கூறியிருப்பதற்குரிய ஆதாரம் "வெளிநாட்டார் குறிப்புக்களே" ஆகும்.[5]

வெங்காஜி திரும்பிய பிறகு, கொள்ளிடக் கரைக்கு வடக்கிலுள்ள நாடுகளைத் தன்வசப்படுத்திச் சாந்தாஜி என்பவரை ஆட்சிபுரியுமாறு நியமித்து, ரகுநாத் நாராயணை அமைச்சராக்கி, அம்பீர்ராவ் என்பவரைப் படைத்தலைவராக்கிச் சிவாஜி வடபுலம் நோக்கிச் சென்று பன்ஹாலாவை அடைந்தார்.

இதற்குள்ளாக, வெங்காஜி மதுரை மைசூர் அரசர்களது உதவியை நாடினார். அன்னோர் உதவவில்லை. இதனையறிந்த சாந்தாஜி கொள்ளிடத்தைக் கடந்து வந்தார். 26—11—1677இல் பெரும்போர் நடந்தது. ஏகோஜி வென்றார். ஆயினும் அன்றிரவே சாந்தாஜி, வெங்காஜியின் படையைச் சின்ன பின்னமாக்கினார்.

இச் செய்திகளையறிந்ததும் சிவாஜி பெரிய கடிதத்தை (கடிதம் I) எழுதினார்.

அதில், சிவாஜி அதுகாறும் நிகழ்ந்துவந்த செய்திகளையெல்லாம் சுருக்கமாக எடுத்துரைத்தார். வெங்காஜியின் நாடுகளையெல்லாம் தான் வென்றிருப்பதாகவும், முகமதியர்களின் பேச்சைக் கேட்டதனால் வெங்காஜிக்கு இழப்பு ஏற்பட்டது என்றும், தாம் இருவரும் மனமொத்து வாழ்வதே சிறப்புடையது என்றும், தம் தந்தையின் ஜாகீர்கள் முழுவதும் தனக்குக் கொடுத்தால் பனஹலாவில் வெங்காஜிக்கு நாடு கொடுக்கப்படும் அல்லது குதுப் சாகேப் இடம் இருந்து 3 லக்ஷம் வராகன் வருவாய் தரக்கூடும் நிலம் வாங்கித் தரப்படும் என்றும், இந்தக் கடிதம் கண்டதும் ரகுநாத் நாராயண் இடம் தொடர்பு கொள்க என்றும் சிவாஜி எழுதியிருந்தார்.

வெங்காஜி மிகவும் வேண்டிக்கொண்ட பின்னரே ரகுநாத் நாராயண் ஹனுமந்தே வந்தார். அவர் சொற்படி சிவாஜி கேட்டவற்றைக் கொடுத்தார். ரகுநாத் நாராயணைத் தனது அமைச்சராகவும் வெங்காஜி ஏற்றுக்கொண்டார். பின்னர் வெங்காஜி அமைதியுடன் ஆட்சிபுரியலானார்.

கி. பி. 1680இல், தஞ்சையும் தான் வென்ற பிற நாடுகளும் சிவாஜிக்கே உரியன என்று பீஜபூர் சுல்தான் சிவாஜிக்கு "ஸன்னது" செய்துகொடுத்தார். இது வெங்காஜிக்குக் கலக்கத்தை விளைவித்தது. இதனால் தன் சுயேச்சை பறிக்கப்பட்டது என்று வெங்காஜி நினைத்தார்;[6] வாழ்க்கையில் வெறுப்புற்றார்;

---

5. Maratha Rule in the Carnatic - Srinivasan, C. K. - Page 160, foot-note 3. (Annamalai University, 1944)
6. இக் கட்டுரையின் இறுதியில் கண்ட அடிக் குறிப்பைக் காண்க

அரச காரியங்களைக் கவனித்தலை நீக்கினார்; ஒரு பைராகிபோல் ஆனார். வெங்காஜியின் இச்செயல்களை ரகுநாத் சிவாஜிக்குத் தெரிவித்தார். சிவாஜி வெங்காஜிக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதினார்.[7] (அது இங்குக் கண்ட கடிதம் II ஆகும்.) வெங்காஜியின் மனநிலை மாறியுள்ளமையும், ஒரு துறவி போன்று இருத்தலையும் குறிப்பிட்டு, அங்ஙனம் இருத்தல் அரசனுக்கு அழகன்று என்றும், எப்பொழுதும்போல் உற்சாகத்துடன் இருக்கவேண்டும் என்றும், காலத்தை வீணாக்கக்கூடாது என்றும், தன்னைச் சேர்ந்தவர்கட்கு வேலை கொடுத்து மக்கட்குச் சேவை செய்து புகழீட்டவேண்டும் என்றும், ரகுநாத்பந்த் சொற்படி நடத்தல் வேண்டும் என்றும் நல்லறிவு கூறினார்.

இந்தக் கடிதமே சிவாஜியின் கடைசிக் கடிதம் ஆதல் கூடும்.[8] சின்னாட்களுக்குப் பிறகு, 5—4—1680இல் சிவாஜி இறந்தார். வெங்காஜி அச்சமின்றித் தஞ்சையில் ஆட்சிபுரியலானார்.

## இணைப்பு : சிவாஜி வெங்காஜிக்கு எழுதிய கடிதங்கள் *

### கடிதம் எண் I

ஆயிரம் ஆண்டுகள் வாழ்பவரும், திருமகள் பொருந்திய பட்டத்தரசிகளுடன் கூடிய அரசச் செல்வம் பொருந்தியவருமான **ஏகோஜி** அரசர் அவர்கட்குச் சிவாஜி அரசரின் ஆசிகள். நலம். நலம் அறிந்து தங்கள் நலத்தை எழுதுக. மேலும் "கைலாசவாசி" சாகிப் அவர்கள் இறந்துபட்டு இப்பொழுது 13 ஆண்டுகள்[1] கழிந்தன. பேரரசரின் செல்வம், பிற பொருள்கள், யானை குதிரை விருதுகள் முதலியன யாவும் கொடுத்து ரகுநாத்பந்த் உங்களை அரசாட்சியில் அமரச்செய்து எல்லா அரசையும் தங்கள் கையில் ஒப்புவித்தார். இங்ஙனம் என் பாதிப்பங்கினையும் 13 ஆண்டுகளாகத் தாங்களே நுகர்கிறீர்கள். நானோ எனக்குச் சேரவேண்டிய பங்கைக் கேட்க முடியாமல் மிகத் தொலைவில் இருக்கிறேன். நல்ல பேச்சால் தாங்கள் கொடுக்கமாட்டீர்கள் என்று கருதிப் பதின்மூன்று ஆண்டுகள் தள்ளிக் கொண்டு வந்துவிட்டேன். நானும் "போனது போகட்டும்; தாங்களும் பேரரசரின் மைந்தர்தானே! உண்கிற வரையில் உண்ணட்டும்" என்று மனத்தில் கொண்டு, "நான் இப்பொழுது செல்வச் செழிப்புடன் இருக்கிறேன்; என் பங்கை எப்பொழுது பெறவேண்டுமோ அப்பொழுது வழக்கிட்டுப் பெறலாம்" என்று இருந்தேன். அரசு வேலையின்

---

7. கிராண்ட் டஃப் அவர்கள் எழுதிய நூலில் 131ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பில் இக்கடிதம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தரப்பெற்றுள்ளது
8. This letter was amongst the last that Shivajee ever dictated – Grant Duff, P. 131

* இக்கடிதங்கள் இரண்டும் மராட்டிய மொழியில் உள்ளன. இவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தவர் சரசுவதி மகால் நூல் நிலைய மராட்டி பண்டிதர் திரு. பீமராவ் அவர்கள் ஆவர்.

பொருட்டு, நான் "குதுப்சஹாவை"ப்[2] பார்த்தற்காகப் பாஹா நகருக்குச் சென்றேன் ; அங்கிருந்து கருநாடகத்துக்குச் சென்றேன் ; அங்கிருந்து செஞ்சியை[3] அடைந்து செஞ்சியைக் கைப்பற்றினேன் ; அங்கிருந்து வேலூர்ப் பகுதியையும் கைப்பற்றிக் கொண்டேன் ; மற்றும் சதர்கானைப்[4] போரில் தோல்வியுறச் செய்து கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டேன் ; சதர்கானிடத்தில் இருந்த அதிகாரத்தைக் கைப்பற்றினேன். பின்னர்க் காவிரிக் கரைக்கு வந்தேன் ; அங்கிருந்து[5] தங்கட்குக் கடிதம் எழுதலானேன். கோவிந்தபட்டு கோசாமி, காகாஜி பந்த், நீரோபாநாயிக், ரங்கோபா நாயிக், திம்மாஜியச்சார்ராவ் போன்ற நல்லவர்களை நம்மிடம் அனுப்புக என்று பல முறைகளில் கடிதம் எழுதி அனுப்பினேன். அதற்குமேல் தாங்கள் அந்நல்லவர்களை என்னிடம் அனுப்பினீர்கள். அந்த நல்லவர்களிடத்தில் நம்முடைய குடும்பச் செய்திகள் யாவும் கூறி நமக்குரிய பாதிப்பங்கை நமக்குப் பங்கிட்டுக் கொடுக்குமாறு சொல்லுங்கள் என்று கூறி அனுப்பினேன். அவர்களோடு பாளன்பட்டு பட்டுகோசாமி, கிருஷ்ண ஜோதிஷி, கிருஷ்ணாஜி, ஷேக்ஜி போன்றவர்களைத் தங்களிடத்தில் அனுப்பிவைத்தேன். அன்னோர் தங்களிடத்தில் நல்லமுறையில் பேசி, "வீட்டுப் பூசல் வேண்டாம் ; தம் பாதி உரிமைப் பங்கைத் தானே கேட்கிறார் ; அதைக் கொடுத்துவிடுங்கள் " என்று கூறினர். தாங்கள் வஞ்சகமாக (கபடமாக) இருந்தீர்கள். இப்பொழுது நான் பேரரசனாக இருக்கிறேன். தாங்களாகவே வந்து என்னைக் காணவேண்டும் ; எனக்கு மரியாதை காட்ட வேண்டும். தாங்கள் என் பங்கைக் கொடுக்காமல் மோசம் செய்யப் போகிறீரா ? பதின்மூன்று ஆண்டுகள் அரசச்செல்வம் யாவும் எடுத்துக் கொண்டீர்களே ! மேலும் தங்கட்கே எல்லாப் பங்கும் வரவேண்டும் என்ற கெட்ட எண்ணங்கொண்டு பங்கு கொடுக்க ஒப்பந்தம் செய்து கொள்வது போல் நேராகத் தாங்கள் என்னைக் காணவந்தீர்கள். இருவரும் கண்டு பேசினோம். என்னுடைய பாதிப் பங்கைக் கொடுங்கள் என்று கேட்டேன்.. தாங்கள் என் பங்கைக் கொடுப்பதாகவே இல்லை. தாங்கள் என் இளவல்; தாங்களாகவே என்னைக் காணவந்தீர்கள். இந்நிலையில் உங்களைப் பிடித்துக்கொண்டு பங்கு கேட்பது என் பெருந்தன்மைக்கு அழகல்ல. ஆகவே உங்களைத் தஞ்சாவூருக்குப் போகவிட்டேன். தாங்களும் தஞ்சாவூர்க்குச் சென்றீர்கள். இனியும் வீட்டுப்பூசலை வளர்க்கவிடாதீர்கள். அப்படி வளர்த்ததால் முன்னாளில் பாண்டவர்களும் கௌரவர்களும் தொல்லைகளை அடைந்தனர். பாரதக் கதைகள் யாவும் மனங்கொண்ட பிறகும் வீட்டுப் பூசலை வளர்த்தீர்கள் என்றால் இரண்டு பேருக்கும் தொல்லைகள் ஏற்படும். இதனை எண்ணி மறுமுறையும் சாம்ஜிநாயக், கோனேரிபந்த் மற்றும் சிவாஜிசங்கர் ஆகிய இவர்களைத் தங்களிடத்தில் அனுப்பி நாமிருவரும் மீண்டும் மனமொத்து வாழவேண்டும் என்று சொன்னோம். ஆனால் தாங்கள் துரியோதனனைப்போல் கெட்ட எண்ணம் கொண்டு பேசுவதற்கு வாய்ப்புக்கொடுக்காமல் போர் செய்யவேண்டும் என்று எண்ணங்கொண்டு இருந்தீர். இந்நிலையில் எனக்கு ராய்கட்[6] பகுதியில் அதிக வேலையிருந்தது. அதனால் சந்தாஜி,[7] ராஜ்யஸ்ரீ பந்த், ரகுநாத பந்த், ஹம்பீரராவ் போன்றவர்களை நம்முடைய

நாட்டில் இருக்கச் செய்து "தோர்கள" என்ற பகுதிக்குச் சென்றோம். தாங்கள் துலுக்கர்களின் கெட்ட புத்தியினால் என் படைகளுடன் போரிட வேண்டும் என்று நினைத்துப் பெரிய படையை என்னைச் சார்ந்தவர்கள்மேல் ஏவினீர்கள் என்று கேள்விப்பட்டேன். அந்தப்படை பால்கொண்டபுரத்துக்கு[8] வந்தது. அங்கு உங்கள் படையுடன் எங்கள் படை கடுமையாகப் போர் செய்தது; உங்கள் படை தோல்வியுற்றது.[9] பிரதாப்ஜீ, பீவஜீ, சிவாஜி டபீர்– இம்மூவர் பிடிபட்டனர்; மற்றும் பலர் கொல்லப்பட்டனர்; பலர் ஓடிவிட்டனர்; பெரும் பரபரப்பு உண்டாயிற்று– இச்செய்திகளையும் கேள்வியுற்றேன்; வியப்பு அடைந்தேன். தாங்களோ "கைலாசவாசி" பேரரசரின் உரிமை மகனாவீர்; மிகப் பெரிய மனிதரும் ஆவீர். இப்படி இருக்க எதையும் நினைத்துப் பார்க்காமல், அறம் மறம் ஆகியவற்றையும் நினைத்துப்பார்க்காமல், இப்படி வீணாகத் துன்புறுவது வியப்புத் தருவதல்லவா? எதைப்பற்றி நினைப்பது என்று தாங்கள் கேட்கலாம். "நாம் அறத்திற்கு மாறாகப் பதின்மூன்று ஆண்டுகள் அரசச் செல்வம் எல்லாவற்றையும் நுகர்ந்தோம். இப்போது பாதிப் பங்குதானே கேட்கிறார்; அவருடையதை அவர்க்குக் கொடுத்துவிட்டு நலமாக இருக்கலாம்" என்று தாங்கள் நினைக்கவேண்டும். ஆனால் தாங்கள் அதற்கு மாறாக நினைத்துக்கொண்டிருக்கிறீர். தங்கட்கு இறைவன் இறைவி ஆகியோருடைய அருள் முழுமையாக இருக்கிறது. நான் கெட்ட, துலுக்கர்களைக் கொல்கிறேன். ஆனால் தங்கள் சைனியத்தில் துலுக்கர்கள் இருப்பதால், தங்களுக்கு வெற்றி எங்ஙனம் உண்டாகும்? துலுக்கர்கள் தங்கள் பிழைப்பையே நினைக்கிறார்கள். இதனைத் தாங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். போரில் குதித்துத் துரியோதனனைப்போல் அறிவுகெட்டுக் குடிமக்களைக் கொல்கிறீர்கள். நடந்தது நடந்துவிட்டது. இனியும் பிடிவாதம் செய்ய வேண்டாம். பதின்மூன்று ஆண்டுகள் நீங்கள் எல்லாவற்றையும் நுகர்ந்தீர்கள். அதற்குப்பிறகு நான் சில நாடுகளை வென்றிருக்கிறேன். ஆரணி, பெங்களூர், கோலார், ஹஸ்கோட், கார்கோன் மற்றும் தஞ்சாவூர் போன்ற அப்பகுதிகள் உங்கள் கையில் இருக்கின்றன. அவற்றை மக்கள் கையில் விட்டு விடுவது நல்லது. மற்றும் தாங்கள் சேர்த்த நிலையியற்பொருள் யானை குதிரை முதலியவற்றுள் பாதிப்பங்கு கொடுத்துவிடலாம் என்ற எண்ணத்துடன் என்னைக் காண வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தாங்கள் என்னைக்கண்டு பேச வாய்ப்பு உண்டாக்கிக் கொண்டால் தங்கட்குத் துங்கபத்திரைப் பக்கத்தில் பான்ஹால் என்ற பகுதியில் மூன்று லட்சம் ஹொன்ன மதிப்புள்ள நாட்டைக் கொடுப்பேன்.[10] என்னிடம் உள்ள நாடுகள் தங்களுக்கு வேண்டாம் என்று நினைப்பதாயின் குதுப்ஷா[11] அவர்களிடம் வேண்டிக்கொண்டு தங்கட்கு மூன்று லட்சம் வெகுமதி கொடுக்கச் செய்வேன்.[12] இந்த இரண்டு விதமான எண்ணங்களைத் தங்கட்குத் தெரிவித்து இருக்கிறேன். இவ்விரண்டில் ஏதாவது ஒன்றை ஏற்று நடக்கவேண்டியது. பிடிவாதம் பிடிக்க வேண்டாம். நம்மில் நாம் பூசல் புரிந்து கொண்டு வருந்துவதால் பயன் இல்லை. இதற்குப் பிறகாவது என்னைக்கண்டு பேசவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு, பாதிப்பங்கினைக் கொடுத்துத் தாங்கள்

நலமுடன் இருக்கலாம். குடும்பத்தில் உட்பூசல் நல்லதல்ல. நான் தங்கட்கு மூத்தவன் என்ற முறையில் இதுகாறும் சொல்லிவந்துள்ளேன். இப்பொழுதும் சொல்கிறேன். கேட்டால் நல்லது ; நலம் பெறுவீர். கேட்கவில்லையெனில் தாங்களே வருந்துவீர்கள். நான் என்ன செய்யப்போகிறேன் ? மேலும் என்ன எழுதுவது ?[13]

## கடிதம் எண் II

செல்வமும் நீண்ட ஆயுளை உடையவரும், திருவுடைய பட்டத்தரசிகளைப் பொருந்தியவரும், அரசச் செல்வம் பொருந்திய பேரரசர் **வெங்கோஜி** அரசர் அவர்களுக்குச் சிவாஜி அரசரின் ஆசி. அங்குள்ள நலன்களுக்கு மடல் எழுதுவீராக.

செய்தி: பல நாட்களாகத் தங்களிடம் இருந்து மடல் இல்லை இதனால் மனம் அமைதியுறவில்லை. திரு இரகுநாத் பந்த்[14] அவர்கள் மடல் எழுதியுள்ளார். "நீங்கள் மனம் வெறுப்படைந்து இருக்கின்றீர். நீங்கள் முன்போல உடல் நலத்தில் மனம் செலுத்துவதில்லை. பண்டிகைகள் திருவிழாக்கள் போன்றவற்றைக் கொண்டாடுவதில்லை. தங்களிடம் படைகள் நிறையவுள்ளன. ஆனால் அவற்றைச் செயல்படுத்தவில்லை. "வைராக்கியம்" (பற்றற்ற நிலை) மேற்கொண்டிருக்கிறீர். ஏதாவது ஒரு "தீர்த்தக்கரை"யில் அமர்ந்து பொழுதை வீணடிக்கிறீர்" — என்று எனக்குத் தெரியவருகிறது. இச் செய்தி எனக்குப் பெரிதும் வியப்பைத் தந்தது. "கைலாசவாசி"யான சுவாமி[15] அவர்கள், எப்படி எப்படி நடக்கவேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளார். முன்பு யவனரிடத்தில் பணிபுரிந்து நீர் பெருமையடைந்து இருக்கிறீர். பிறகு நன்முறையில் செயல்புரிந்திருக்கிறீர். இவை யாவும் தாங்கள் அறிந்தனவே. முகம்மதியர்கட்கு உதவியாக இருந்து தங்கள் அறிவுக் கூர்மையால் அவர்களிடத்தினின்று நிறையப் பொருள் பெற்றீர். நாமும் மிகுந்த முயற்சியால் அரசைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். இதனைத் தாங்கள் பார்த்துக்கொண்டு வருகிறீர்கள். இத்தருணத்தில் என்ன நேர்ந்துள்ளது? தாங்கள் இல்லறத்துக்குரிய அறநெறிகளைப் போற்றி நடக்காமல், "வைராக்கியம்" (பற்றற்றநிலை) மேற்கொண்டு, (நமக்குரிய வீரச்) செயல்களால் விளையும் பயனை நுகராமல், படைகளுக்கு வேலை கொடுக்காமல் வீணாக அவர்கட்கு ஊதியம் கொடுத்துத் தங்கள் செல்வத்தை வீணடிக்கிறீர்கள். உடலை வருத்திக்கொள்வது அறிவின் தன்மையா ? இது என்ன நியாயம் ? உங்களுக்கு மூத்தவன் ஆகிய நான் இருக்க, வீணாகக் கவலைப்படுவது ஏன் ? இனி, "வைராக்கியம்" கொள்ளாமல், மனக்கவலையைப் போக்கி, உம் நேரத்தை நல்லவழியில் செலுத்தவேண்டும். பண்டிகைகள் திருவிழாக்கள் ஆகியவற்றை முன்போல் நடத்தித் தங்கள் உடல் நலத்தையும் நன்கு பேணுதல் வேண்டும். தங்களைச் சார்ந்தவர்களுக்கு உரிய பணிகளை நல்கிப் பயனுள்ள செயல்களைச் செய்து அவற்றின்வழி மக்கட்குப் பணிபுரிந்து, மிக்கபுகழ் ஈட்டுதல்

வேண்டும். தாங்கள் அப்பக்கத்தில் தங்கள் வீரம் புலப்படுமாறு செய்து மகிழ்வுடன் இருந்தால், எங்கட்கு "எம் உடன் பிறந்தான் வீரத்தோடு திகழ்கிறான்" என்று மனம் ஒருப்பாடு அடையும். அரசச் செல்வமுடைய ரகுநாத பண்டிதர் அந்தப்பக்கத்தில் இருக்கிறார். அவர் தங்கட்கு வேற்றவர் அல்லர்; தங்கட்கு மிக்கநாட்களாகப் பழக்கம் உள்ளவர்; தாங்கள் எந்தமுறையில் நடக்கவேண்டும் என்பதை அறிவுறுத்தத் தகுதியுடையவர். என்னை மதிப்பதைப்போல் தங்களையும் அவர் மதிக்கிறார். நான் அவரிடத்தில் மிகவும் அன்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிறேன். அதுபோன்று தாங்களும் நம்பிக்கை வைத்துப் பயனுள்ள செயல்கள் புரிந்து, இருவர்க்கும் நன்மை பயக்கும் செயல்களுக்கு வழிகோலவேண்டும். வீரமின்றிப் புகழின்றி, வீணாக இருந்து, மக்களின் செல்வத்தை வீண் செய்து, காலத்தை வறிதே போக்குதல் வேண்டாம். காலத்தைப் பயன் உள்ள வழியில் செலுத்தவேண்டிய நேரமிது. இறுதிக் காலத்தில் "வைராக்கியம்" பூண்பது பொருந்தும். இப்பொழுது கடமைகளைச் செய்து நமக்கு ஊக்கத்தைக் காண்பிக்க வேண்டியது. மேலும் என்ன எழுதுவது? தாங்கள் அறிவுடையவராய் இருக்கிறீர்கள்.

குறிப்பு :—

1. 1664 + 13 = 1677
2. குதுப்சாஹி—அப்துல் குதுப் ஷா—இவர் கோல்கொண்டாவின் நவாப் ஆவர். இவர் 1672இல் இறந்தார். அவருடைய மருமகன் அபுஹுசேன் அரசர் ஆனார். (A History of the Maratha People–Kincaid – Page. 252)
3. கி. பி. 1678இல் சிவாஜி செஞ்சியைக் கைப்பற்றினார்.
4. சதர்கான்—ஷேர்கான்லோடி (Maratha Rule in the Carnatic – C. K. Srinivasan – Pages 158, 159)
5. திருமழபாடியாகலாம்; திருவாதி என்று சிலர் கருதுவர்.
6. 1677 நவம்பர்த் திங்களில் ராய்கட் என்ற இடத்துக்குச் சிவாஜி சென்றார்.
7. தென்னாட்டில் சிவாஜி வென்ற பகுதிகளை மேற்பார்வை செய்யச் சிவாஜியால் நியமிக்கப்பட்டவர் சந்தாஜி; இவருக்கு அமைச்சர் ரகுநாதபந்த்; படைத் தலைவராக இருந்தவர் ஹம்பீரராவ்.
8. வாலிகண்டபுரம் ஆக இருக்கலாம் (P. 240, New History of the Mahrathas, Vol. I by G. S. Sardesai (1946)
9. இந்தப் போருக்குப் பிறகு இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கலாம்.

10. பாதிப்பங்கு கொடுத்தால் "பான்ஹால்" பகுதியில் மூன்று லக்ஷம் ஹொன்ன மதிப்புள்ளவற்றைக் கொடுப்பதாகச் சிவாஜி எழுதினார் என்று (பக். 129இல்) கிராண்டு டஃப் குறித்தார். ஆனால் கின்ஸெயிட், "தஞ்சையினின்று ஏகோஜியை வன்மையால் நீக்கிப் பன்ஹாலாவில் நிலம் தருவதாகச் சிவாஜி எழுதினார்" என்று தம் நூலில் எழுதியுள்ளார் (பக்கம் 259).

11. குறிப்பு 2 காண்க.

12. மூன்று லக்ஷம் வராகன் வருவாய் உள்ள நிலங்களைத் தரச் செய்வேன் என்று எழுதியதாக டஃப் கூறுவார்.

13. இதன்பிறகு வெங்காஜி, தன் மனைவி தீபாபாயின் சொற்படி ரகுநாத் பந்த் அவர்கட்கு எழுதி, அவரைத் தஞ்சைக்கு வரச்செய்து, அவர்வழி சிவாஜியுடன் சமாதானம் செய்துகொண்டார்.

14. **ரகுநாத் பந்த்:** இவர் வெங்காஜியின் தந்தையாகிய ஷஹாஜியின் அமைச்சர்களுள் ஒருவர். ரகுநாத் நாராயண் ஹனுமந்தே என்பது முழுப்பெயர். ஷஹாஜி, தன் மகன் வெங்காஜி சிறப்பாக அரசு நடத்தற்கு இவ்வமைச்சரை அனுப்பினர். வெங்காஜி 1675இல் தஞ்சையைக் கைப்பற்றிய பிறகு இவரும் தஞ்சையில் அமைச்சராக இருந்தார். இருவருக்கும் ஒருசமயம் மனவேறுபாடு ஏற்பட்டமையால், இவர் தஞ்சையை விட்டுச் சிவாஜியிடம் போய்விட்டார். பிறகு சிவாஜியோடு வெங்காஜி சமாதானம் ஏற்படுத்திக்கொள்வதற்காக, ரகுநாத்பந்த் மீண்டும் தஞ்சைக்கு வருமாறு அழைக்கப்பெற்றார். சிவாஜியின் இசைவின் பேரில் ரகுநாத் தஞ்சைக்கு வந்தார் (A History of the Maratha People – Kincaid - Pages 254, 259)

15. கைலாசவாசியான என்பது இறந்த என்று பொருள்படும்; இங்கு இறந்துபோன ஷஹாஜியைக் குறிக்கும். இவர் கி. பி. 1664 ஜனவரித் திங்களில் இறந்தார்.

**குறிப்பு : (1) இதிற்கண்ட இரண்டாவது கடிதம் எழுதிய சந்தர்ப்பம் :**

தஞ்சையும், சிவாஜி தென்னகத்தில் வென்றுகொண்ட அனைத்து நாடுகளும் சிவாஜிக்கு உரியனவாக்கி 1680இல் பிஜபூர் சுல்தான் சிவாஜிக்குச் 'சன்னது' செய்து கொடுத்தார். இது வெங்காஜிக்குக் கலக்கத்தை விளைவித்தது. இதனால் தன் சுயேச்சை பறிக்கப்பட்டது என்று வெங்காஜி நினைத்தார் ;* வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டார் ; அரசு காரியங்கள் கவனித்தலை நீத்தார் ; பைராகிபோல் ஆனார். வெங்காஜியின் இந்நிலையை ரகுநாத்பந்த் சிவாஜிக்குத் தெரிவித்தார். சிவாஜி தன் இளவலுக்கு ஊக்கம் தந்து இக்கடிதம் எழுதினார்.

* "ரகுநாத்பந்த் ஏகோஜிக்கும் சிவாஜிக்கும் நல்லுறவு ஏற்பட ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர். அதில் 19 ஷரத்துக்கள் இருந்தன. 16 ஆவது ஷரத்தில் சிவாஜி தான் தஞ்சையையும் சுற்றுப்புற நாடுகளையும் வெற்றி கொண்டதாகவும், அவற்றை மனப்பூர்வமாக ஏகோஜிக்குக் கொடுப்பதாகவும் கண்டுள்ளது. இதனால் தன் சுயேச்சை பறிக்கப் பட்டது என்று ஏகோஜி (வெங்கோஜி) நினைத்தார்" என்று சர் தேசாய் கூறுவர். (Pages 241-242, New History of the Mahrathas, Sardesai, (1946).

(2) இவ்விரண்டாவது கடிதம் முழுவதும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க் கப் பட்டுள்ளது. கிராண்டு டஃப் என்பார் எழுதிய மராட்டியர் வரலாறு, பக்கம் 131, அடிக்குறிப்புக் காண்க.

# 6

# கும்பினியுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்—உடன்படிக்கைகள்

துளஜா என்ற மராட்டிய மன்னர், 1763 முதல் 1787 வரை தஞ்சையில் ஆட்சிபுரிந்தவர் ஆவர். இவர் சேதுபதியுடன் போர் செய்தார். இது நவாபுக்கு வருத்தத்தைத் தந்தது. ஆகவே தஞ்சையின் மேல் நாவாபு போர் தொடுக்க எண்ணினார்; 1769 முதல் தஞ்சை மராட்டிய மன்னர் தமக்குச் செலுத்தவேண்டிய தொகையை (பேஷ்கஷ்) கொடுக்கவில்லை என்று கூறலானார். இஃது உண்மையன்று என்பது பின்வரும் ஆவணக்குறிப்பினால் அறியப்பெறும் :—

" கி. பி. 1771 நவாபின் தர்பார் செலவிற்காக ரூ. 2000 "[1]

" கி. பி. 1771 நவாபுக்குக் கொடுக்க வேண்டியதற்காக மிஸ்தர் ஜேம்ஸ் ஹேவ், மிஸ்தர் கான் மேஜர் இவர் வழியாக ஹூண்டி தயார் செய்து அனுப்பிய தொகை ரூ. 6,50,000."[2]

எனினும் தஞ்சையைக் கைப்பற்றுவதே தன் நோக்கமாகக் கொண்ட நவாப், கும்பினி அதிகாரிகளைத் தன் வசப்படுத்திக் கொண்டார். 1771 செப்டம்பர் மாதம் நவாபின் சேனையும் கம்பெனி துருப்புக்களும் ஒன்று சேர்ந்து திருச்சியினின்று தஞ்சை நோக்கிப் படையெடுத்தன. நவாபின் மூத்த மகன் உமதத் உல் உமாராவும்[2அ] ஜெனரல் ஸ்மித்தும் தலைமை தாங்கிப் படைகளை நடத்தினர். துளஜாவுக்கு எதிரிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை.

---

1. 1-168 2. 1-164

2அ. இவன் கி. பி. 1777க்குரிய ஆவணக்குறிப்பில் குறிப்பிடப்பெறுகிறான்; 8-177

ஆகையால் துளஜா ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இதன்படிக்கு இரண்டு ஆண்டுக்குரிய பேஷ்குஷ் எட்டு லக்ஷம் ரூபா கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.[3] இதனைப் பின்வரும் மோடி ஆவணத் தமிழ் ஆக்கக் குறிப்பு[4] உறுதி செய்யும் :—

"1772 : நவாப் முகம்மது அலிகானுக்கு வருஷத்திற்கு பேஸஜி கொடுப்பது ரூ. 4 லக்ஷம், தோபாவிற்காக ரூ. 30,000, ஆக ரூ. 4,30,000. மிஸ்தர் ஜாஜியிடம் இருந்து ரூ. 100க்கு 2½ வீதம் கடன் வாங்கிக் கொடுப்பது ; மன்னார்குடி சுபாவில் உள்ள தேசத்தை அடகு வைப்பது."[5]

ஒப்பந்தப்படிக்குத் தொகை கொடுத்துவந்தபோதிலும் முகம்மது அலிகான் தஞ்சையைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தமையின் கும்பினியினரைச் சரிகட்டிக்கொண்டு தஞ்சைமேல் படையெடுத்தார். கடுமையான போர்க்குப் பிறகு ஒருநாள் எதிர்பாராதவண்ணமாக ஜெனரல் ஸ்மித் கோட்டையைப் பிடித்தார். துளஜாவும், அவருடைய குடும்பமும், சேனாபதி மானாஜியும், பல அதிகாரிகளும் சிறைபடுத்தப்பட்டனர். பல லக்ஷம் மதிப்புள்ள பொன் அணிகலன்களும் கைப்பற்றப்பட்டன. நவாபு தஞ்சைக் கோட்டைக்கு உரியவரானார்.[6]

17—9—1773 முதல் மூன்றாண்டுக் காலம் தஞ்சைக் கோட்டையும் அரசும் நவாபின் ஆட்சியில் இருந்தன. கி. பி. 1774 ஓராண்டு மட்டுமே நவாபின் அலுவலர்கள் 81 லக்ஷம் ரூபாய் வசூலித்தனர்.

இங்ஙனம் கும்பினி அதிகாரிகள் நவாபுக்கு உதவியது இங்கிலாந்து அரசின் ஒப்புதல் இல்லாமலே நடந்த செயலாகும். இங்கிலாந்து அரசுக்கு இச்செய்தி தெரியவந்ததும் அவர்கள் நன்கு ஆராய்ந்து துளஜாவை மீண்டும் அரசராக ஆக்குமாறு ஆணை பிறப்பித்தனர். 11—4—1776இல் லார்ட் பிகட் (Lord Pigot) தஞ்சைக்குப்போந்து கோட்டையைக் கைப்பற்றித் துளஜாவை மீண்டும் அரசர் ஆக்கினார். இதனைப் பின்வரும் குறிப்பு மிகத் தெளிவாகக் கூறும் :

"1777 : துளஜா ராஜா சாயபு இரண்டாவது தடவை பட்டத்துக்கு வந்த பின்பு.........."[7]

---

3. P. 61, A History of British Diplomacy in Tanjore K. Rajayyan (1969)
4. 3-142 4 அ. தோபா – கப்பம் ; Tribute
5. The Rajah mortgaged villages to the Danes to find money to pay the tribute for the year 1772 (P. 65, A History of British Diplomacy in Tanjore — K. Rajayyan, 1969)
6. -Do- P. 65 7. 6-193

"1776 : சுவாமியின் வேண்டுகோளுக்கு முதலில் கஷ்டகாலத்தில் வேண்டினதற்குச் சக்கரம் 20"

என்ற மோடி தமிழாக்கக் குறிப்புக்கள்[8] அரச பரம்பரையினர் அடைந்த துன்பச் செய்திகளைச் சுருக்கிக் கூறுவனவாக உள்ளன.

இரண்டாவது தடவை துளஜா பட்டம் பெற்றபொழுது தஞ்சை அரசுக்கு உரிய ஆரணியும் அனுமந்த குடியும் நவாப் வசமே இருந்துவிட்டன.[9] துளஜா கம்பெனிக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்துவந்த போதிலும் அதிகப்படியாகத் தொகை கேட்கப்பட்டது. அதனால் அரசர் தம் வக்கீல் திரியம்பகசாம்பீஜிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார் :—[10]

"கும்பினி சேனைக்காக முழுதும் கொடுத்தாய் விட்டது. மேலும் கேட்கிறார்கள் ; கவர்னர் கௌன்சிலுக்குத் தெரிவிக்கிறது. ஆரணி அனுமந்தகுடி தேசங்களை நவாப் எடுத்துக்கொண்டிருக்கிறார். அவற்றை நமக்குக் கொடுத்தால் கொடுக்கலாம்."

இதனால் ஆரணியையும் அனுமந்தகுடியையும் துளஜா இழந்தார் என்பது உறுதி எய்துகிறது.

இங்ஙனம் மீண்டும் ஆட்சியைப் பெற்றபிறகு துளஜா கும்பினியாரோடு வேறே ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டியதாயிற்று. அவ்வொப்பந்தத்தின்படி[11] தஞ்சைக் கோட்டையில் ஆங்கிலேயர் படை இருக்கலாம். அப்படையின் செலவுக்காக நான்கு லக்ஷம் வராகன் கொடுப்பதாக அரசர் ஒப்புக்கொண்டார். இது பிற்கண்ட மோடி ஆவணத் தமிழ் ஆக்கக்குறிப்புக்களிலும் காணப்படுவதாகும் :—

" 1776 தஞ்சாவூர்க் கோட்டையும் தேசமும் பாதுகாக்க ஆங்கிலக் கம்பெனியினுடைய ஆட்களுக்குச் செலவு செய்வதற்காக நான்கு லக்ஷம் ஹோன்ன புலி கபூல் செய்து லாட் பிகட் பெயரில் கடிதம் எழுதி இந்த வருஷம் **பங்குனி மாதம்** வாய்தா ஹோன்னபுலி 1,00,000......... "[12]

" 1776 தஞ்சாவூர்க் கோட்டை தேசத்தைக் காப்பாற்ற ஆங்கிலக் கம்பெனியாரின் ஒப்பந்த ஆட்களுக்குச் செலவுத்தொயைாக 4 லக்ஷம் ஹோன்ன புலி ஒப்பந்தம் செய்துகொண்டு பீகட்டு பெயரிட்ட கடிதம் எழுதிக் கொடுத்த வகையில் மேற்கண்ட வருவாயில் மார்கழி மாதம் 30 தேதிக்குள் கொடுக்க வேண்டிய தவணை குறித்து ஹுண்டி செய்து சென்னைப்பட்டணத்திற்கு கேஷம்போரிடம்*(?) அனுப்புவது குறித்து, மேற்கண்ட தேதி 12 **ஜில்காத் மாதம்** 50,000 சக்கரம் உத்தரவான வகையில்போகத் தற்போது மேற்கண்ட

---

8. 2–137
9. P. 75, Rajayyan
10. 4–91
11. P. 76, K. Rajayyan
12. 12–18

* Cashier (?)

தேதியில் கொடுப்பு சக்கரங்கள் குமாஸ்தா பூகண்ணாஜி காசிதாஸ் தவே குமாஸ்தா விடோபா நாயகர் மேலும் ராமா நாயகர் இவரிடத்து **20,000** சக்கரம். குமாஸ்தா பூதர்ஜீதவே குமாஸ்தா அம்பாசங்கர் திரிவாடி, இவரிடத்து **20,000 ஆக 40 000.**"[13]

"1777 ......... லாட் பிகட் பந்தர் பெயரால் கொடுக்கப்பட்டதற்கு **மாசிமாசம் கெடு** புலி வராகன் **லக்ஷம்** "[14]

இவற்றுள் மார்கழி, மாசி, பங்குனி ஆகிய தவணைகளில் செலுத்திய தொகைகள் கூறப்பெற்றுள்ளன. தொகைகள் சரியே. ஒப்பந்தத்தில் நவம்பர் முதல் ஏப்பிரல் முடிய 6 மாதத் தவணைகளில் தரவேண்டும் என்றும், ஒவ்வொரு தவணையிலும் எவ்வளவு தரவேண்டும் என்றும் கூறப்பெற்றுள்ளது.[15]

நாட்டை மீண்டும் ஏற்று அரசராகிய போதிலும் கும்பினியின் ஆதரவிலேயே அவர்கட்கு அடங்கியே இருக்க வேண்டிய நிலை[15அ] துளஜாவுக்கு ஏற்பட்டுவிட்டது என்னலாம். இது,

"நாம் கும்பினியிலிருந்து இழந்த ராஜ்யத்தை அடைந்து கும்பினியின் ஆச்ரயத்தில் சேர்ந்து இருக்கிறோம்" என்று (துளஜா) கேபன் (Captain) வாலக்ரேவருக்கும் மிஸ்தர் வில்லியம் ப்ரூக் அவர்களுக்கும் எழுதிய கடிதப் பகுதியினின்று உறுதி எய்துகிறது.[15ஆ]

துளஜா 31—1—1787இல் இறந்ததும் சரபோஜியின் காவலராக அமர்சிங்கு அரசபதவியை ஏற்றார். 10—4—1787இல் ஸர் ஆர்ச்சிபால்ட் காம்பெல் அமர்சிங்கை ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளச் செய்தார். அதன்படி நாட்டின் பாதுகாப்புக்காக இருக்கும் வெள்ளையர் துருப்புக்களின் செலவுக்காக 4 லக்ஷம் வராகன் 6 தவணைகளில் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்.

---

13. ச. ம. மோ. த. 29-10 14. 2-285

15. Agreement with the Rajah of Tanjore 1776.

In the present condition of my country, the placing of a garrison of English troops in the Fort and city of Tanjore is exceedingly necessary. If the company only favour me thus far, I will with pleasure assign four lakhs of Pagodas per annum for their military expense. The mode of payment be as follows :

November 20,000 ; Dec. 40,000 ; January 40,000 ; Feb. 1,00,000 ; March 1,00,000 ; April 1,00,000 ( Page XVI, Appendix, Tanjore Maratha Principality-Hicky.)

15அ. The English became in every respect masters of the Carnatic-P. 306, Maratha Rule in the Carnatic-C. K. Srinivasan.

15ஆ. 5-339

அதன்படி சித்திரை மாசம் (ஏப்பிரலில்) 1 லக்ஷம் வராகன் செலுத்தவேண்டும்.[16] அங்ஙனம் அந்த ஆண்டே சித்திரை மாசத்தில் கொடுக்கவேண்டிய தொகை கொடுத்தமை பற்றி விரிவாகக் காணப்படுகிறது.[17]

ஒரிரு செய்திகள் பின்வருமாறு :—

" 8—5—1787 வக்கீல் திரியம்பக ஸம்பாஜிக்கு அமர்சிங் கடிதம்—கும்பினிக்குச் சித்திரையில் ஒரு லக்ஷம் வராகன் கொடுக்க வேண்டும். மக்லோட் இடம் இங்குள்ள பட்டாளச் செலவுக்காக 10 ஆயிரம் வராகன் ; அதுபோக 90,000 வராகனுக்கு ஹுண்டிகள் அனுப்பினதற்கு விவரம் .............. "

இந்த உடன்படிக்கையில் எட்டாவது ஷரத்து-போர் நிகழுமாயின் 5இல் 4 பங்கு வருமானம் போர்ச் செலவுக்காகப் பயன்படுத்தப்படும் என்பதாகும். இந்த ஷரத்து செயல்படுத்தப்பட்டது என்று பின்வரும் குறிப்புக்கள்[18] தெரிவிக்கின்றன:—

" பெங்காலிலிருந்து வந்ததில் இராஜ்யத்தை ஜப்தி செய்கிறது என்று வந்திருக்கிறது. இராசாவுக்கு ஐந்தாவது பாகம் என்று தீர்ந்திருக்கிறது. "[19]

கி. பி. 1787இல் ஏற்பட்ட உடன்படிக்கையைக் கும்பினியார் மாற்றி அமைக்க நினைத்தனர். ஆகவே 1792இல் வேறொரு உடன்படிக்கை நிறைவேறியது. அதில் 7ஆவது ஷரத்து அரசர் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுக்காவிடில் மன்னார்குடி, திருவாடி,* மாயவரம், பட்டுக்கோட்டை ஆகிய சுபாக்கள் வசூலைக் கும்பினியார் ஏற்றுக்கொள்ளலாம் என்பதாகும். இந்த ஷரத்தின்படி அந்தச் சுபாக்களைத் தம் வசம் ஒப்புவிக்க வேண்டும் என்று ரெஸிடெண்டு மக்லோட் அமர்சிங்கைக் கேட்டதுடன், புது உடன்படிக்கையின் மாதிரிப் படிவமும் கொணர்ந்தார். அமர்சிங் கையெழுத்து இட மறுத்தார். மக்லோட் துருப்புக்களைக் கொணர்ந்து நிறுத்தினார்; அரசரிடம் சென்றார். அரசர் கையொப்பமிட்டார். இங்ஙனம் அச்சுறுத்திக் கையொப்பம் பெற்றிருந்த போதிலும் மக்லோட் அரசர் விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் கையொப்ப்

---

16. Article 2. His Excellency the Rajah of Tanjore will contribute towards the Military Peace Establishment and shall pay into the Treasury of the said United Company the annual sum of 4 Laks of Pagodas ...... divided into kists payable at the following periods: Nov. 20,000; Dec. 50,000; Jan. 50,000; Feb. 90,000; March 90,000; April 1,00,000; Total 4 Lakhs Star Pagodas (Hicky-Tanjore Maratha Principality-Appendix)

17. 8-268 முதல் 277 முடிய     18. 5-528     * திருவையாறு

19. "The eighth article directed the Rajah to pay to the Company during the war fourfifths of his revenues......"—P. 87, K. Rajayyan.

மிட்டதாக மேலிடத்துக்கு எழுதினார்.[20] இதுபற்றிய மோடி ஆவணத் தமிழாக்கம்[21] வேண்டிய பகுதி மட்டும் இங்கே தரப்படுகிறது :—

> " மக்லோட் ஆனவர் ஒரு உடன்படிக்கை–கும்பினியின் தொகைக்காகப் பாபநாசம், மன்னார்குடி, மாயவரம்......விட்டுவிடுகிறது. மூன்று வருஷத்துக்கு ஒரு முறை கணக்குத் தீர்ப்பது. கும்பகோணம் சுபா பட்டுக்கோட்டை வரிகள் வகையறாக்களை விபக்ஷி ஆனவர் வைத்துக்கொண்டு காலம் கழிக்கிறது. அதிலிருந்து வருஷத்துக்கு 60,000 வராகன் கடனுக்குச் செலுத்துகிறது.[22] இந்தப்படி சம்மதித்தால் கையொப்பம் போட்டுக்கொடுங்கள்; இல்லாவிட்டால் சிவராயரிடத்தில் ஒப்புவித்து வீடுங்கள் என்று எழுதி அனுப்பினார். உடனே சாயங்காலம் 4, 5 தடவை சொல்லியனுப்பி இராத்திரி 9 மணிக்கு மிஸ்டர் மாக்லோட் கோட்டையின் வாசலை மூடி, ரிஜிமெண்ட் மிஸ்தர் ராமன் வீட்டுச் சமீபம் கொண்டுவந்து வைத்துப் பட்டாளம் முழு மையும் திட்டிவாசலுக்கு அருகில் கொண்டுவந்து வைத்து......
> "சமாதானமாகக் கையொப்பம் இட்டுக் கொடுத்தால் நலம்; இல்லா விட்டால் கும்பினியின் விரோதம் உண்டாகும்" என்று சொன்னார். பிறகு விபக்ஷி ஜப்தி செய்யப்பட்ட 3 சுபைகளின் கடுதாசியில் கையெழுத்து இட்டுக் கொடுத்தார்......"

இங்ஙனம் அச்சுறுத்தித் தன் சுயநிலை இழந்த பிறகு கையெழுத்துப் பெறப் பட்ட போதிலும் மக்லோட், அமர்சிங்கு சுயவுணர்வுடன் மகிழ்ச்சியோடு கையொப்பம் இட்டார் என்று எழுதிய அரசியல் சூழ்ச்சி கருதத்தக்கது.[23]

சரபோஜியைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டது செல்லாதென ஒரு நாடகம் நடிப்பித்து அமர்சிங்கை அரசராக்கினர் கும்பினியார். அமர்சிங்கிடம் இரண்டு உடன்படிக்கைகள் செய்துகொண்டும் தஞ்சைத் தரணி முழுவதும் தம் ஆளுகைக்குக் கீழ்க் கொணர முடியவில்லை. ஆகவே இந்நாடகத்தில் மேலும் ஒரு காட்சி நடிக்கப்பெற்றது. 1796 மார்ச்சுத் திங்களில் லாட் ஹோபர்ட் சரபோஜியின் உரிமையைப் பற்றி முன்னர்க் கருத்துக் கூறிய பண்டிதர்களையே அழைத்து விசாரிக்குமாறு மக்லோடுக்கு ஆணை பிறப்பித்தார். அப்பொழுது கவர்னர் ஜெனரலாக இருந்தவர் லார்ட் கார்ன்வாலிஸ் என்பவர் ஆவர்.

20. Pages 101–102, K. Rajayyan, ‡ எதிரி — அமர்சிங்
21. 7–596 முதல் 599 வரை; 8 - பக்கம் 7 முதல் 10 முடிய
22. (The treaty of 1793) required the Rajah to pay 60,000 star Pagodas towards the clearance of his debt instead of 80,000, P. 96. K. Rajayyan.
23. The Madras Council...... reported to Bengal Council that the Rajah signed the treaty not only with willingness but also with pleasure – P. 102. K. Rajayyan.

அப்பொழுது 12 பண்டிதர்கள் தம் கருத்தைத் தெரிவித்தனர். அவர்களின் பெயர் பின்வருமாறு :—[24]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பாடலாசார்ய | 2. | மாதவாசார்ய | 3. | தாதாராவ் |
| 4. | ஜனாசாரி | 5. | அப்பாசாஸ்திரி | 6. | ராமாசாஸ்திரி |
| 7. | ஸத்யநிதி ஆசார்ய | 8. | நரசிம்மாசாரி | 9. | ஜனாசாரி |
| 10. | புஜங்கராவ் | 11. | பாபன்னா | | |
| 12. | மாதவாசார்யருடைய மாப்பிள்ளை. | | | | |

இவர்களுள் (4) ஜனாசாரி சன்னியாசியானார். (6) ராமாசாஸ்திரிக்குப் பல்லக்கும் நாளொன்றுக்கு ஒரு வராகன் சம்பளமும் கொடுக்கப்படலாயிற்று. ஓரிருவர் இறந்துபட்டிருக்கக்கூடும். எஞ்சியவர்கள் விசாரிக்கப்பட்டனர்.

(3) தாதாராவை விசாரித்தபொழுது தான் பொய் சொன்னதாகப் பலமுறை ஸ்வார்ஷ்* முதலாகப் பலர் முன்னிலையிலும் அழுதுகொண்டே சொன்னார். (4) ஜனாசாரியர் தனக்குத் தர்மசாத்திரம் தெரியாதென்று கூறினார். (5) அப்பா சாத்திரி தனக்குச் சாத்திரம் தெரியாதென்றும், அரண்மனைச் செய்திகள் தெரியாதென்றும், பிறர்போல் தானும் கையெழுத்திட்டதாகவும் அதற்குப் பெரிதும் வருந்துவதாகவும் கடிதத்தில் எழுதிக் கொடுத்தார்.[25] ஸத்யநிதி ஆசார்ய (7) என்பவர் அமர்சிங்கின் பக்கம் சொல்லுங்கள் என்று தனாதிகாரி சொன்னதால் கூறியதாகவும், சொல்லாவிடில் தனக்கு விடப்பட்ட மான்யம் பறிபோகும் என்று அஞ்சியதாகவும் கூறினார். (8) நரசிம்மாசாரியார் "அமர்சிங்குக்கு அதிகாரம் உண்டு; கையினால் எழுதிக் கொடுக்கமாட்டேன்" என்று சொன்னார். (9) ஜனாசாரியர் பிறர் எழுதியதுபோல் தானும் எழுதியதாகக் கூறினார். (10, 11) புஜங்கராவ், பாபண்ணா இருவரும் தமக்குச் சாத்திரம் தெரியாதென்றும் 10 பேர் செய்ததுபோல் தாங்களும் செய்ததாகக் கூறினர்.

இங்ஙனம் தாம் முன்னர்க்கூறிய கருத்தை மாற்றிக் கூறியமையின், இதுபற்றிச் சென்னைக் கௌன்ஸில் இலண்டனுக்கு எழுதியது. 1798 அக்டோபர்த் திங்களில் சரபோஜியை அரசராக்குமாறு இலண்டனிலிருந்து ஆணை வந்தது.[26] சரபோஜி அரசாட்சியை எய்தினார். மோடி தமிழாக்கப் பகுதியில் சரபோஜி பட்டம் எய்திய தேதி 1798 மொஹரம் 15 என்று குறிப்பிடப் பட்டுள்ளது.[27] அதாவது 29—6—1798 (இந்தக் குறிப்புள்ள மோடி ஆவணத்தின் தேதி 30—6—1798 ஆகும்) பின்னர் 25—10—1799 இல் இரண்டாம் சரபோஜி கும்பினியாரொடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். இதில் 15 ஷரத்துக்கள் இருந்தன. இவ்வொப்பந்தத்தின்படி வசூல் செய்யும் உரிமை கும்பினியாருக்கு உரியதாயிற்று. இதில் ஏழாவது ஷரத்து ஒரு லக்ஷம் வராகனும், அமர்சிங்குக்குக் கொடுக்கும் தொகையும் வசூல் செய்வதற்குரிய

24. 3-296 முதல் 300 வரை
25. 6-195, 196
* Schwartz
26. P. 105 - K. Rajayyan
27. 3-223

தொகைகளும் போக எஞ்சியுள்ள நிகர வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கும் கொடுக்கப்படும் என்பதாகும். இது பிற்கண்ட மோடி தமிழாக்கப்பகுதியில் காணப்பெறும் :

"1801 : ஹானரபிள் ஈஸ்திந்திய கம்பெனி விஷயம் : நமது சமஸ்தானத்தின் ஐவேஜி வசூலில் ஒரு லக்ஷம் வராகன் ஐந்தாவது பாகம் ஸர்க்காருக்குக் கொடுப்பது என்று தீர்மானம் செய்துகொண்ட படிக்கு 1200ஆம் பசலிக்கு* ஐவேஜி ரிஸிடெண்டு கேபன் வில்லியம் பிளர்க்பர்ன் ஸ்கொயர் இடம் இருந்து வரவு தஞ்சாவூர் சக்."[28]

எட்டாவது ஷரத்து அமர்சிங்குக்கு 25,000 வராகன் ஆண்டுதோறும் தரவேண்டும் என்பதாகும். இது,

1799 ஜுலை 12 முதல் 1800 ஜுலை 11 வரை வசூல்

| | |
|---|---|
| மகாராஜ் அவர்களுக்கு | 1,00,000 |
| அமர்சிங்க்போன்ஸ்லே | 25,000 |
| ஆக | 1,25,000 |

என்பதில் காணப்பெறுகிறது.[29]

இவ்வுடன்படிக்கையின் 15ஆவது ஷரத்து அரசருக்கு வேண்டிய அளவு நெல் முதலிய தானியங்களைக் கால விலையின்படிக் கும்பினியாரே கொடுக்க வேண்டும் என்பதாகும். அங்ஙனம் தமக்கு வேண்டிய நெல் முதலானவற்றைப் பெற்றுவந்தார் என்பது,

"18—10—1826 : நம் தேசத்தில் 1236ஆம் பசலி வருமானம் ஐந்தில் ஒரு பாகத்திலும் ஒரு லக்ஷம் வராகன் கணக்கிலும் அலுவல் ஆண்டு (o ficial year) 1826-27 பெற்றுக்கொண்ட தானியம் வகையறாக்களின் விலை ரூ. 71,720-6-11 கும்பினியார்களின் கணக்கில் ரெஸிடெண்டு காப்டன் ஜான் ஃபைஃப் (Fyfe) இடத்தில் வரப்பற்றிக்கொண்டது"

என்ற மோடி ஆவணத் தமிழாக்கத்தால் அறியப்பெறும்.[30]

இவ்வுடன்படிக்கையின் 12ஆவது ஷரத்து வழக்குகள் பற்றியது. அதன் ஒரு பகுதி பின்வருமாறு :—

"அரசரது உறவினர், பணியாட்கள் அல்லது தஞ்சைக் கோட்டையில் வசிக்கும் பிறர் பேரில், இவர்கள் அல்லாத மற்றையோர் வழக்குத் தொடுக்க

---

28. ச. ம. மோ. த. 1-7
29. ச. ம. மோ. த. 15-9
30. 1-321

* பசலியுடன் 590 சேர்த்தால் ஆங்கில ஆண்டு வரும்

வேண்டும் எனின் முதலில் தஞ்சையில் உள்ள கம்பெனியின் பிரதிநிதியிடம் வழக்குக் கூறினால், அவர் அரசரிடம் முறையிடுவார். அரசர் உடனே அவ் வழக்கைத் தம்முடைய நீதிமன்றத்தில் விசாரிக்கச் செய்வார்."[31]

12ஆவது ஷரத்தில் உள்ள மேற்குறித்த பகுதி சரிவரக் கடைபிடிக்காத காலத்தில் சர்க்காரிலிருந்து சுட்டிக்காட்டித் தம் உரிமையை நிலைநாட்டியுள்ளனர் என்பது பின்வரும் சான்றுகளால் அறியப்பெறும் :—

"9—6—1828 சர்க்கார் இலாகாவின் ஜனங்களின்பேரில் வாரண்டு அனுப்புவது உடன்படிக்கைக்கு விரோதம் ஆகும்"[32]

"1828 ரெஸிடெண்டுக்கு ஸர்கேல் எழுதியது :[33] திருவையாற்றில் ஸர்க்காரின் நிலத்தை அளந்துகொண்டிருக்கும் ஐந்து ஆசாமிகளைப் போலீஸார் பலாத்காரமாகத் தாசில்தாரிடம் இழுத்துக்கொண்டுபோய் ஜெயிலில் போட்டு இருக்கிறார்கள். இது உடன்படிக்கைக்கு விரோதமான செயல்."

இங்ஙனம் கிழக்கிந்தியக் கம்பெனியார் மராட்டிய மன்னர்களிடம் அமயம் வாய்ப்புழியெல்லாம் உடன் படிக்கைகள் செய்துகொண்டு, மன்னர்களுடைய அதிகாரவரம்பையும் ஆட்சியுரிமையையும் சிறிது சிறிதாகக் குறைத்துத் தம்மிடமிருந்து வருவாயுள் ஒரு பகுதியைப் பெறும் நிலையில் அமைத்துத் தாமே உண்மையான ஆட்சியாளர் ஆயினர்.

31. Article 12 : "………Any complaint against the Rajah's relations, immediate servants, or others residing in the fort of Tanjore by persons of a different description shall in the first instance be made to the Company's representative at Tanjore who shall refer it to His Excellency. The Rajah hereby engages to order an immediate investigation to be made in his Court of Justice………

32. 1-264 33. 2-56

# 7

# ஆங்கிலேய அதிகாரிகள்

இந்தியாவில் வாணிபம் செய்து பொருளீட்டவந்த ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரர்களும் தென்னாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிட்டனர்; வெற்றியும் கண்டனர். தஞ்சை அரசில் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் முதன் முதலாகத் தலையிட்டது 1739 முதல் 1763 வரை ஆட்சி செய்த பிரதாபசிங்கர் காலத்திலாகும்.

## பிரெஞ்சுக்காரர் காரைக்கால் பெற்றமை

பிரதாபசிங்கர் ஆட்சி செய்த காலத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக் காரரும் தஞ்சை உள்நாட்டு விவகாரத்தில் நுழைய இடமேற்பட்டது. சந்தா சாகிபைச் சதாரா அரசரது சேனைத் தலைவர் முராரி ராவ் சிறைப்படுத்திக் கொண்டு போய்விட்டார். சந்தாசாகிபை விடுவித்து வந்தால் தமக்கு அரசியல் ஆதாயம் கிடைக்கக்கூடும் என்று கருதிய பிரெஞ்சு கவர்னர் டுப்ளேயின் சூழ்ச்சியின்படி கி. பி. 1748இல் 7 லக்ஷம் ரூபா கொடுத்துச் சந்தாசாகிப் விடுவிக்கப்பட்டார். சந்தாசாகிப்,அன்வாருத்தீனை ஆம்பூரில் 1749இல் தோல்வி யுறச்செய்தார். அவருடைய மகன் முகம்மதுஅலி திருச்சிக்கு ஓடிவிட்டார். பிறகு ஆர்க்காட்டுக்குச் சென்று அங்கு நவாப் ஆகப் பிரகடனம் செய்யப்பெற்றார். டுப்ளே திருச்சியின் மேல் படை எடுக்குமாறு சந்தாசாகேபைத் தூண்டினார். அவரும் 28—10—1749இல் பெரும்படையுடன் திருச்சிநோக்கிச் சென்றார். 12—12—1749இல் இப்படைகொள்ளிடத்தைக் கடந்து தஞ்சையை அடைந்து முற்றுகையிட்டது; கப்பம் செலுத்துமாறும், அப்படையெடுப்புச் செலவு தருமாறும் கேட்டது. இப்படையை எதிர்க்க முடியாது என்பதை அறிந்த பிரதாபசிங்கர் விரைவில் கப்பம் செலுத்துவதாக உறுதி கூறினார்; ஆங்கிலேயருடைய உதவி யையும் நாடினார். பிரதாபசிங்கருடைய சூழ்ச்சியை அறிந்த சந்தாசாகேபு

கோட்டையைத் தாக்குமாறு ஆணையிட்டார். பிரெஞ்சுப் படை இப்போரில் கோட்டையின்ஒருவாயிலைப் பற்றியது. அரசர் அஞ்சினார் ; சமாதானம் செய்து கொண்டார் ; சந்தாசாகிபுக்கு 7 லக்ஷம் ரூபா கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் ; பிரஞ்சுக்காரருக்கு எண்பத்தோரூர்களை அளித்தார் ; செலுத்தவேண்டிய கப்பமும் நீக்கினார்.[1] இதனை,

> "1749 ராஜஸ்ரீ பிரதாபசிங்ஜி ராஜா காலத்தில் நவாப் ஹுசேன் தோஸ்துகான் பகதூர்[1அ] அவர்கள் தஞ்சாவூர் சமீபம் வந்து இறங்கினதும் அவர்களுடைய சர்தார்களும் வந்து சமாதானம் செய்து கொண்டதற்காகக் கொடுத்த கிராமங்கள் 81 ; தவிரவும் அவர்கள் இடம் இருந்து வரவேண்டிய கப்பம் 2000 வராகன் தள்ளுபடி செய்யப்பட்டது"

என்ற மோடி தமிழாக்கக் குறிப்பு[2] வலியுறுத்தும். இக்குறிப்பில் 1749 என்று உள்ளமையும் நோக்கத்தக்கது. இங்ஙனம் பிரெஞ்சுக்காரர்கள் காரைக்கால் பகுதியைத் தமக்கு உரிமையாக்கிக்கொண்டனர்.

## ஆங்கிலேயர் தேவிக்கோட்டை பெற்றமை

ராஜா துக்கோஜி என்பவர் ஏகோஜியின் மூன்றாவது மகன் ஆவர் இவர் 1736 முதல் 1739 வரை ஆட்சி செய்தவர். இவர் தன் தமையன் முதலாம் சரபோஜி ஆட்சிக்காலத்திலேயே "தன் மூத்த சகோதரரிடம் இருந்து ராஜ்யத்தின் ஒரு பகுதியை அடைந்து, குடும்பத்தோடு மகாதேவ பட்டணத்தில் இருந்து வந்தார். இவருக்குப் பட்டத்தரசிகள் மூவர் இருந்தனர். இரண்டாவதான அபரூபாபாயி என்பாள் பொய்யாகக் கருவுற்றதாகக் கூறிக் குழந்தை பிறந்ததாகவும் சொல்லப்பட்டது. அக்குழந்தைக்கு ஸவாயி ஷஹாஜி என்றும் பெயர் சூட்டப்பெற்றது. ஆனால் உண்மையறிந்ததும் அவனைத் தகுந்தபடி "பரிஹாரம்" செய்துவிட்டனர்."[3]

துக்கோஜிக்கு 5 மக்கள் இருந்தனர் ; பாபாசாஹேப், சையாஜி, அண்ணா சாஹேப், நானாசாஹேப், பிரதாபசிங்கு என்பவர் ஆவர். அண்ணாசாஹேபும் நானாசாஹேபும் துக்கோஜிக்கு முன்னரே இறந்தனர். துக்கோஜி இறந்ததும் பாபாசாஹேப் அரசரானார். அவர் சில மாதங்களே ஆட்சிபுரிந்தார். அவர்க்குப் பின் அவர் மனைவி சுஜான்பாயி அரசு கட்டிலேறினார். சுஜான்பாயி அரசாட்சி செய்யும்பொழுது உறவினர்களுள் ஒருவரான கௌமாஜி காண்டகே என்பவர் மேலேகூறிய ஸவாயி ஷாஹஜி என்பவர் இப்பொழுது பிழைத்துள்ளார் என்று

---

1. Pages 255–259, Maratha Rule in the Carnatic, Srinivasan, C.K.

1அ. கர்னாடகத்தின் நவாபு தோஸ்து அலிகானின் மருமகன் சந்தா சாகேப் ; மற்றொரு மருமகன் ஹுசேன் தோஸ்தகான் – Pages 251 & 252, Maratha Rule in the Carnatic.

2. ச. ம. மோ. த. 9–3 3. போன்ஸ்லே வம்ச சரித்திரம், பக்கம் 88

கூறி, அவர் போலவே இருந்த குப்பி என்ற வேலைக்காரியின் மகனைக் கொணர்ந்து, சுஜான் பாயியை வீழ்த்தி அவனை அரசராக்கினார். இந்த ஸவாயி ஷாஹஜியைக் காட்டுராஜா என்றும் கூறுவர். உண்மை வெளிப் பட்டது. காட்டுராஜாவும் வெளியேற்றப்பட்டார். பிரதாபசிங்கர் அரசராக முடிசூட்டப்பெற்றார்.[4]

அரசிழந்த ஸவாயி ஷாஹஜி (காட்டு ராஜா) பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினார் ; பயனில்லை ; ஆங்கிலேயரை அணுகினார். டேவிட் கோட்டை (Fort St. David - கடலூர்) யில் இருந்த ஆங்கிலேயர், தேவிக்கோட்டையை அளிப்பதாகவும், போர்ச் செலவுகளைத் தருவதாகவும் காட்டுராஜா ஆசைகாட் டியதும், உதவி தர இசைந்தனர். தேவிக்கோட்டை கொள்ளிடம் கடலோடு கலக்குமிடத்தில் உள்ள ஒரு துறைமுகம். அது ஒரு மைல் சுற்றளவுள்ள மதிலையுடையதாயிருந்தது ; மற்றும் 18 அடி உயரமுடையது.

ஆங்கிலப்படை இருமுறை தேவிக்கோட்டையை நோக்கிப் படையெடுத் தது ; முதல் தடவை தேவிக்கோட்டையைப் பிடிக்க முடியாது திரும்பியது ; இரண்டாவது தடவை முயன்று பிடித்தது. பிரதாபசிங்கர் சமாதானம் செய்து கொண்டார். அதன்படி தேவிக்கோட்டையை ஆங்கிலேயருக்கு அளித்தமை யோடு போர்ச் செலவுகளும், காட்டுராஜாவுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4,000 ஓய்வூதியமும் தருவதாக ஒப்புக் கொண்டார்.[5]

தேவிக்கோட்டை விவகாரம், இந்திய உள்நாட்டு விவகாரங்களில் ஆங்கிலேயர்களின் முதல் தலையீடு ஆகக் கருதப்பெறும்.[6] தொடங்கிய வேளை ஒரு சிறந்த வேளை. ஆகவே ஒரு நூற்றாண்டுக்குள் ஆங்கிலேயர் தஞ்சை அரசையே துடைத்துப்போக்கும் நிலை உருவாயிற்று.

ஆனால் பின்குறித்த மோடி தமிழாக்கம்,[7]

"1751: பிரதாபசிங்கு காலத்தில் திவ்யகோட்டை[7அ] கப்பம் 5 வருஷத்துக்கு 5500 வராகன் வரவுக்கு மேஸ்தர் ஜியார்ஜ் பிகட் ( Pigot ) கவர்னர் சென்னப் பட்டணம் பந்தர்வகேராவுக்கு வழக்கப்படிக்கு முத்திரை இரசீது எழுதிக் கொடுக்கிறது"

---

4. பக்கம் 88-86. போன்ஸ்லே வம்ச சரித்திரம், தமிழாக்கம்.
5. பக்கம் 262-264. Maratha Rule in the Carnatic ; இந்த நூலில் காட்டுராஜா வுக்கு ரூ. 40,000 "பென்ஷன்" கொடுத்ததாக உள்ளது. ஆனால் ஓர்ம் ( Orme ) எழுதிய History of Indostan பகுதி 1 பக்கம் 118 இல் ரூ. 4000 என்றுள் ளது. (நான்காவது பதிப்பு, 1803)
6. This was the first interference of the English in Indian Politics and began under very favourable auspices - P. 51, The Maratha Rajahs of Tanjore - K. R. Subramaniam (1928)
7. ச. ம. மோ. த. 9-4 7அ. தேவிக்கோட்டை

என்றுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு தேவிக்கோட்டைக்காக 5500 வராகன் ஆங்கிலேயர் தஞ்சை மராட்டிய மன்னருக்கு அளித்தனர் என்று தோன்றுகிறது.[7ஆ]

## பல்வேறு ஒப்பந்தங்கள்

ஆங்கிலேயருடன் தஞ்சை மராட்டிய மன்னர்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் பற்றிக் "கும்பினியுடன் ஒப்பந்தங்கள்" என்ற தலைப்பில் (6) விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஒப்பந்தத்தாலும் தஞ்சை அரசர்கள் தம் சுய உரிமையை இழத்தல், படைக்குறைப்பு, பின்னர் ஆங்கிலேயப் படைகளைத் தஞ்சையில் இருக்கச்செய்து அவற்றின் பராமரிப்புக்காகப் பெருந்தொகை அளித்தல், நவாபுடன் தொடர்புகொள்ளுங்காலும் ஆங்கிலேயர் வழியே தொடர்பு கொள்ளுதல், வெளிநாட்டுக்கொள்கை ஆங்கிலேயர் சொற்படியே அமைத்துக்கொள்ளுதல், ஆங்கிலேயரின் நண்பர்க்கும் பகைஞர்க்கும் இவர்களும் நண்பரும் பகைஞருமாதல் ஆகிய கட்டுப்பாடுகட்கிடையே அகப்படலாயினர். நேரிடையாகவோ மறைமுகமாகவோ இங்ஙனம் ஆங்கிலேயர்கட்கு அடங்கி அவர்வழி ஒழுக வேண்டிவந்தது. தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சிக்கு உட்பட்ட சில பகுதிகளில் வரிவசூல் வேலை ஆங்கிலேயர்கட்கு அவ்வப்பொழுது கிடைத்தது, ஆங்கிலேயர் பலர் அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டனர். படைக்குறைப்பும், படையின்மையும் ஏற்பட்ட காலத்தில் ஆங்கிலப் படைஞர் தஞ்சையில் தங்குவாராயினர். ஆங்கிலேய அரசாங்க நிர்வாகப் பிரதிநிதியாக "இரஸிடெண்டு" ஒருவர் நியமிக்கப் பட்டார். இரண்டாம் சரபோஜி செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் வரிவசூல் உரிமை முழுமையும் ஆங்கிலேயர்க்குரியதாயிற்று; அரசரும் ஓய்வூதியம் பெறும் நிலையை அடைந்தார். அப்பொழுது மராட்டியர் நேர்பார்வையில் தஞ்சை நகரப்பகுதி மட்டும் இருந்தது. அங்கு மட்டுமே நீதி நிர்வாகம் செலுத்தினர். தஞ்சை நகரத்துக்குப் புறம்பேயுள்ள பகுதி முழுவதும் ஆங்கிலேயரின் நேரிடை ஆட்சிக்குள்ளாயிற்று.

ஆகவே சிறிது சிறிதாக நிர்வாகம் கைப்பற்றும் நிலையிலும் முழுமையாக ஆட்சியைக் கைப்பற்றியபிறகும் பல ஆங்கிலேயர்கள் கும்பினியின் சார்பில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கலாயினர். இத்தகைய காலகட்டத்தில் சில ஆங்கிலேய அதிகாரிகள் பற்றிய குறிப்புக்கள் மோடி ஆவணங்களில் காணப்படுகின்றன. அவற்றால் அறியப்பெறும் செய்திகளும் மிகச்சிலவே; எனினும் அவர்களை நான்கு பிரிவினராகப் பிரிக்கலாம்:

---

7ஆ. It is hoped that he ( the King of Tanjore ) has been brought to relinquish the Devikottai tribute of 1100 pagodas-P. 433, The Madras Despatches-Calendar for 1764 - 65.

(1) கவர்னர் ஜெனரல்கள் (2) கவர்னர்கள் (3) ரெஸிடெண்டுகள் (4) பிற அலுவலர்கள்.

## 1. கவர்னர் ஜெனரல்கள்

**1. வாரன் ஹேஸ்டிங்ஸ் :** முதல் முதலில் கவர்னர் ஜெனரல் பதவி வகித்தவர்கள் கல்கத்தாவில் இருந்தனர். முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் "வாரன் ஹேஸ்டிங்ஸ்" என்பவர் ஆவர். இவர் 1772 முதல் 1774 வரை வங்காள கவர்னர் ஆக இருந்தவர்; 1774 முதல் 1785 வரை கவர்னர் ஜெனரல் பதவி வகித்தார்.[8] இவரது படம் ஒன்று 2—3—1826இல் தஞ்சைக்குக் கொணரப்பட்டது. அதனை அரண்மனைக்குக் கொணருங்கால் "ஸர்கேலும் முஜிம்தாரும்" 'ரெஸிடெண்டு' இடம் சென்று பெற்றுக் கொண்டு அரண்மனைக்கு எடுத்துவந்தனர்; 21 குண்டுகள் போடப் பெற்றன.[9]

**2 லார்டு கார்ன்வாலிஸ் :** இவர் 1786 முதல் 1793 வரை கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலாக இருந்தார்; மீண்டும் கி. பி. 1805இல் சிலகாலம் கவர்னர் ஜெனரலாக இருந்தார். இவர் தஞ்சைக்கு இரண்டு தடவை வந்தார் என்று தெரிகிறது.[10] அமர்சிங்கு ஆங்கிலேயர் நினைத்தவண்ணம் நடக்காமற் போயினமையின், லார்டு கார்ன்வாலிஸ் சரபோஜியின் உரிமையை நிலைநாட்டிச் சரபோஜியை அரசராக ஆக்க முயற்சி செய்தல் பொருத்தமாக இருக்கும் என்று சென்னைக் கவர்னருக்குக் கூறினார். லார்டு கார்ன்வாலிஸ், முன்னர் அமர்சிங்கரின் பக்கம் இருந்து உறுதி கூறிய அப் பன்னிரு பண்டிதர்களையே விசாரிக்கச் செய்தார் என்று மோடி ஆவணக் குறிப்பு விளம்புகிறது.

"லார்டு கார்ன்வாலிஸ் அவருடைய விசாரணையின்படி தம் பங்களாவிலிருந்து வந்ததற்குப் பன்னிரண்டு பண்டிதர்களைக் கூப்பிட்டு விசாரணை செய்ததற்குப் பிரதி பதில் சொன்ன பெயர் ................"[11]

இதிலிருந்து வங்காளத்தில் இருந்த கார்ன்வாலிஸ் சரபோஜியைச் சுவீகாரம் எடுத்துக்கொண்ட செய்தியை மீண்டும் ஆய்வு செய்யுமாறு பணித்தார் என்பது தெரியவருகிறது.

## 2. கவர்னர்கள்

**1. லார்டு பிகட் (Pigot) :** இவர் சென்னைக் கவர்னராக இருமுறை பணியாற்றியவர். **ஜியார்ஜ்** பிகட் ஆக இருந்தபொழுது 14—1—1755 முதல் 13—11—1763 வரை[12] கவர்னராக இருந்தார். இக்காலம் பிரதாப சிங்கர்

8. Page 482, Chap. IV, Vol. II, Imperial Gazeteer of India
9. 3-180 10 5-468; 514 11. 3-296
12. பக்கம் 222, List of Governors of Madras, No. 29, History of Tamil Nad N. Subramanian, Koodal Publishers, Madurai, 1982.

ஆட்சியின் பிற்காலம் ஆகும். முகம்மது அலிக்கு உதவி புரிந்து பிரதாபசிங்கரிடம் இருந்து கப்பம் வசூலிக்கச் செய்தார்.[13] இவர் லார்ட் பிகட் ஆனபிறகு மீண்டும் 10-12-1775 முதல் சென்னைக் கவர்னராக இருந்தார்.

கி. பி. 1773இல் தஞ்சைக் கோட்டை முகமதியர்வசம் ஆயிற்று. துளஜா தன் குடும்பத்துடன் சிறையில் அடைக்கப்பட்டார். அணிகலன்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. மானாஜியும் சிறைப்படுத்தப்பட்டார். இச்செயல்கள் சென்னைக் கவர்னர் "விஞ்ச்" ( Vynch ) உதவியால் நடந்தேறின. கவர்னர் செயலை இங்கிலாந்திலிருந்த குழுவினர் ( Council of Directors ) ஏற்றுக்கொள்ளவில்லை. துளஜாவுக்கு உடனே அரசபதவி அளிக்குமாறு ஆணையிட்டனர். லார்ட் பிகட் 11-4-1776இல் தஞ்சைக்கு வந்து துளஜாவை அரசு கட்டிலில் அமர்த்தினார்.[13அ] ஆங்கிலேயருடன் துளஜாவும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி வெள்ளையர் துருப்புக்கள் தஞ்சையிலும் சில முக்கிய இடங்களிலும் வைக்கப்படலாயின. அத்துருப்புக்களின் செலவுகட்காக 4 லக்ஷம் வராகன் கொடுக்க அரசர் ஒப்புக்கொண்டார்.[14] இதனை,

"சுஹர்சன் 1177 ; தஞ்சாவூரினுடைய கோட்டையும் தேசமும் பாதுகாப்பதற்காக ஆங்கிலக் கம்பெனியினுடைய நியமிக்கப்பட்ட மக்களுக்குச் செலவு செய்வதற்காக வருஷத்திற்கு நான்கு லக்ஷம் ஹோன்ன புலி வசூல் செய்து லாட் பிகட் பஹதர் இவருடைய பெயரில் கடிதம் எழுதிக் கொடுத்ததற்காக இந்த வருடம் பங்குனி மாதம் வாயிதா ஹோன்னபுலி 1,00,000"[15]

என்ற மோடி தமிழாக்கம் வலியுறுத்தும்.

இறுதிக் காலத்தில் லார்ட் பிகட் அவர்களுக்கு எதிரிகள் பலர் உண்டாயினர். அதனால் அவர் கைது செய்யப்பட்டார் ; எனினும் இவர் இங்கிலாந்திலிருந்து திரும்ப அழைக்கப்பட்டார். அதற்குள் இவர் சிறையிலேயே 11-5-1877இல் இறந்தார். லார்ட் பிகட் ஏற்படுத்திய உடன்படிக்கையினால் தஞ்சையில் பிரிட்டிஷ் துருப்புக்கள் வைக்கப்பட்டன ; ஆண்டொன்றுக்கு அப்படையின் செலவுகளுக்கு 12 லக்ஷம் ரூபா மராட்டிய மன்னர் அளிக்கலாயினார் ; தன் துருப்புக்களின் எண்ணிக்கை 500 ஆகக் குறைத்துக் கொண்டார்.

---

13. P. 284, Maratha Rule in the Carnatic - C. K. Srinivasan

13அ. ' *பிக்கட்டு (Pigot) துரை வந்து ஸ்ரீ மகாராஜா சாகேபு அவர்களுக்குப் பட்டம் கட்டி வைத்தார்* " 6-279

14. 1-155 ; 5-387 ; Page 75, A History of British Diplomacy in Tanjore- K. Rajayyan

15. 9-13 ; 12-13 ; *ச. ம. மோ. த.* 7-4.

2. **அலெக்ஸாண்டர் டேவிட்ஸன்:** இவர் 18—6—1785இல் சென்னைக் கவர்னர் ஆனார். துளஜா அரசர் (பாராட்டி) ஒரு கடிதம் இவருக்கு எழுதியுள்ளார்.[16] இச்சமயத்தில் வங்காளம் சென்னை பம்பாய் ஆகிய இடங்களில் உள்ள சைனியங்கட்கு 'ஜெனரல்' ஆக ஸ்லோயர் வந்தமைக்குப் பாராட்டுத் தெரிவித்து எழுதியமையால் அரசர் வெள்ளையருக்கு மிகுதியாக அடங்கி இருக்க வேண்டிய நிலை தெளிவாகத் தெரியவருகிறது.

3. **ஆர்ச்சிபால்டு காம்பெல்** (Sri Archibald Campbell): இவர் கவர்னராகவும் சேனைத் தலைவராகவும் இருந்தவர். துளஜா 31—7—1787இல் "கைலாஸவாஸி" ஆன்பொழுது இவர் சென்னைக் கவர்னராக இருந்தவர். துளஜாவுக்குப் பிறகு சரபோஜி சார்பில் அரசை ஏற்றுக்கொண்ட அமர்சிங்கு ஆடம்பரச் செலவு செய்கிறார் என்று கேள்விப்பட்டு அங்ஙனம் செய்தல் கூடாது என்று கவர்னர் காம்பெல் (Campbell) அமர்சிங்குக்குக் கடிதம் எழுதினராதல் வேண்டும். அதற்கு மறுமொழியாகத் தாம் தம் முன்னவரைக் காட்டிலும் குறைவாகவும் சிக்கனமாகவும் செலவு செய்வதாகவும், ராஜ்யத்தைப் .பாது காக்காமல் வீணாகச் சுற்றுவதில்லை என்றும், அந்தந்தச் "சுபை" (நாடு) களுக்குச் சென்று "ரயத்து"க்களைக் கண்டு வருமானத்தை மிகுத்துவருவதாகவும், வேடிக்கை பார்ப்பதற்கும் விளையாடுவதற்கும் இராஜ்யத்தைச் சுற்றவில்லை என்றும், இரவில் தீவட்டிகளுடன் வாணவேடிக்கைகளுடனும் பெண்களுடனும் ஊர்வலம் போகும்பொழுது தன் முன்னவர்போலக்கூடச் செலவு செய்வதில்லையென்றும், தாம் நன்றியை மறக்கவில்லை என்றும், உதவி புரிந்து தமக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தால் கவர்னருக்குப் புகழ் வருமாறு தாம் நடந்துகொள்வதாகவும் எழுதியுள்ளார்.[16அ]

4. **லார்டு ஹோபர்டு:** இவர் 7—9—1794 முதல் 21—2—1798 வரை கவர்னராக இருந்தவர். 1796க்குரிய மோடி தமிழாக்கம்,

"லாட் ஹோபரபட் ஆனவர் ராஜா ஸ்ரீமந்த் சத்திரபதி சாஹேப் புறப்படுகிற நாள் நிச்சயம் செய்து சொல்லுவதற்கு மிஸ்தர் ஜெரிக் சாஹேபுக்குச் சொல்லியிருப்பதாகச் சொல்ல ஆரம்பித்தார்கள்........."என்றுள்ளது.[17]

இதனால் இரண்டாம் சரபோஜியை மகாராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்வதற்கு மேலிடத்து உத்தரவு வந்தது என்றும், கவர்னர் அவர்கள் ஒரு நாளை நிச்சயித்துச் சரபோஜியைத் தஞ்சைக்கு அனுப்ப இருந்தார் என்றும் அறியப்படும். இவர் சரபோஜியிடத்து மிக்க அன்புடையவராக இருந்தவர்; தாம் வேட்டைக்குச் செல்லுங்கால் சரபோஜியை உடன் அழைத்துச் சென்றவர் என்று ஓராவணம் கூறுகிறது.[17அ]

---

16. 5-325
17. 3-6

16அ. 1-7 முதல் 14 வரை
17அ. 1-32

5. **ஸர் தாமஸ் மன்ரோ**: இவர் 10—6—1820 முதல் 6—7—1827 வரை கவர்னர் ஆக இருந்தவர்; நிலச் சீர்திருத்தத்தில் தலைசிறந்தவர். இவர் 6—8—1826க்குரிய மோடி ஆவணத்தில்,[18]

"The Right Hon'ble Major General Sir Thomas Munro K. C. B. Baronet"

என்று குறிக்கப்பெற்றுள்ளார். இவர் 6—8—1826இல் தஞ்சைக்கு வந்தார். மன்ரோவை ஸர்கேலும் மஜூம்தாரும் எதிர்கொண்டழைக்கச் சென்றனர். ஸர்கேல் ராமோஜி ஸர்ஜேராவ் முதலியவர்கள் எடுபிடிகள் பல்லக்கு குதிரை முதலியவற்றுடன் விடியற்காலையே ஸந்த்யா மண்டபத்தில் காத்திருந்தனர். காலை 10 மணிக்குக் கவர்னர் வந்தார். முன்னதாகவே எதிர்கரைக்குச் சென்றிருந்த ரெஸிடெண்ட் முதலியவர்கள் கவர்னருடன் வந்தனர். ஜெய வாசலுக்கு வடகிழக்கில் அண்ணாஜி தியாகராஜரும் தென்னண்டை ஜிவாஜி நாராயணும் வரவேற்றனர். ஜெயவாசலுக்கு வந்ததும் 19 குண்டுகள் போடப்பட்டன. கோட்டைக்குத் தெற்கில் அமைக்கப்பட்ட கூடாரத்தில் கவர்னர் வந்து தங்கினார். பின்னர் இரண்டாம் சரபோஜி, இளவரசர், மூன்று மாப்பிள்ளைகள், இன்னும் பலருடன் கவர்னரைப் பார்க்கச் சென்றார்; துருப்புக்கள் செய்த மரியாதையை ஏற்றுக் கவர்னருடன் சிறிதுநேரம் பேசிவிட்டுத் திரும்பினார்.[19] கவர்னருடன் வந்தவர்களுக்கு இரண்டு குதிரைகளும் ஒரு யானையும் பரிசிலாக அளிக்கப்பெற்றன.[20]

6. **வாஷிங்க்டன்**: இவர் கி. பி. 1829இல் ஹுஜூரைப் பார்க்க வந்ததாக ஒரு ஆவணக்குறிப்புக் கூறுகிறது.[21] ஆனால் 1827 முதல் 1832 வரை கவர்னராக இருந்தவர் ஸ்டீஃபன் ரம்போல்டு வாஷிங்டன் ஆவர்.[22]

## 3. ரெஸிடெண்டுகள்

இவர்கள் கும்பினியாரின் பிரதிநிதிகளாகத் தஞ்சை முதலிய சிற்றரசர்களின் தலைநகர்களில் அச்சிற்றரசர்களை மேற்பார்வை செய்யும் அரசியல் தந்திரிகளாக விளங்கியவர் ஆவர். தஞ்சையில் முதன் முதலில் அப்பொறுப் பேற்றவர் யார் என்பது உறுதியாகக் கூற இயலவில்லை.

1. **ஜேம்ஸ் ஸ்டூவர்ட்**: லார்டு பிகட் இரண்டாவது தடவை கவர்னர் ஆக வந்து, துளஜாவுக்கு அரசளித்துக் கும்பினியாருக்குத் தஞ்சையில் வலிமையான இருப்பைத் தேடித்தந்த பொழுது அவருடைய ஆட்சிக்குழுவில் அவர்க்குச் சிலர் ஒத்துழைக்கத் தவறினர்; எதிர்ப்பும் தெரிவித்தனர்; சுயநலத்தில் திளைத்தனர்; இவர் கருத்துக்கு மாறாக ஜியார்ஜ் ஸ்ட்ராட்டன் ( George

18. 8-182 19. 8-182 முதல் 192 முடிய
20. 4-488 21. ச. ம. மோ. த. 4-15
22. List of Governors of Madras, S. No. 56, History of Tamil Nad, N. Subramanian.

Stratton ) என்பார் தலைமையில் இருந்த ஆட்சிக் குழுவினர், கர்னல்ஜேம்ஸ் ஸ்டுவர்ட் ( Colonel James Stuart ) என்பவரைத் தஞ்சையில் ரெஸிடெண்டு (Resident) ஆக நியமிக்கத் தீர்மானித்தனர். லார்டு பிகட் இதனை மறுத்தமையோடு எதிரிகளாகச் செயல்பட்ட ஸ்ட்ராட்டன் முதலியவர்களைத் தற்காலிகமாக நீக்க ஒரு தீர்மானம் கொணர்ந்தார். இது நிறைவேற்றப்பட்டது. அதனால் அப்பகைஞர் ஒன்று சேர்ந்து லார்டு பிகட்டைச் சிறைப்படுத்தினர்.[23] ஸ்ட்ராட்டனும் 23-8-1776இல் கவர்னர் ஆனார்.[24] ரெஸிடெண்டு ஆக நியமனம் பெற்றவர் தஞ்சைக்கு வந்ததாகத் தெரியவில்லை.

2. **மக்லோட்** (Macleod, Alexander): இவரே முதல் ரெஸிடெண்டு ஆதல் கூடும் எனத் தோன்றுகிறது. இவர் துளஜா ஆட்சியின் இறுதிக் காலத்தில் தஞ்சைக்கு வந்திருக்கலாம்.

கி. பி. 1787, ஜனவரி 22ஆம் நாள் துளஜா சரபோஜியைச் "சுவீகாரம்" எடுத்துக்கொண்டார்[25]. ஆனால் "1786 துளஜா ராஜா சாஹேப் அவர்கள் புத்திர ஸ்வீகாரம் செய்தமைக்காக 286 சக்கரம்"[26] என்றொரு குறிப்பில் 1786 என்றுள்ளது. (மூலச்சுவடியில் "ஸுஹர்சன்" ஆண்டு கொடுத்திருக்கக்கூடும். அதனை ஆங்கில ஆண்டு ஆக்குங்கால் இத்தகைய வேறுபாடு வருதல்கூடும்).

அச்சமயத்தில் கவர்னர் ஆக இருந்தவர் ஆர்ச்சிபால்டு காம்பெல் ஆவர். அவர் அரசர் இறந்ததும் யாரையும் அரசராக ஒப்புதல் அளிக்கக்கூடாதென்று ரெஸிடெண்டு மக்லோடுக்கு ஆணை பிறப்பித்தார் என்று தெரிகிறது[27].

அமர்சிங்கின் ஆட்சியில் ஸர்கேல் ஆக இருந்தவர் சிவராயர் ஆவர். அவர் தன்னலம் பொருந்தியவர். அமர்சிங் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கொடுக்காமற் போனால், மன்னார்குடி, திருவையாறு, மாயவரம், பட்டுக்கோட்டை ஆகிய சுபாக்களினின்று வசூல் செய்து கொள்ளலாம் என்று 1787இல் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பெற்றது.[28] இங்ஙனம் அடைமானம் செய்யப்பெற்ற சுபாக்களைத் ( the mortgaged districts ) தம் வசப்படுத்திக் கொள்ள ஆங்கிலேயர் முனைந்தனர். ஆகவே சிவராவை ஸர்கேலாக நியமித்தது முதலிய செயல்களைப்பற்றி ஆங்கிலேயர்கள் அமர்சிங்கைக் குறை கூறினர். அமர்சிங்கு ராயரை விட்டுக் கொடுப்பதாக இல்லை. இதுபற்றிக் கேட்டறிவதற்காக மக்லோட் ஒருநாள் இரவில் அமர்சிங்கைப் பார்த்து வந்தார்.

---

23. Pages 78-79, History of British Diplomacy in Tanjore - K. Rajayyan.
24 List of Governors of Madras, S. No. 35, History of Tamil Nad, N. Subramanian.
25. P. 83, History of British Diplomacy in Tanjore, K. Rajayyan
26. ச. ம. மோ. த. 17-86
27. P. 89, A History of British Diplomacy in Tanjore, K. Rajayyan
28. P. 95, A History of British Diplomacy in Tanjore,

"இரவில் மக்லோட் ஒரு கும்பனி சோல்ஜரையும் ஆபீஸரையும் 8 மணிக்குக் கீழவாயிலில் வைத்துத்தான் இராஜாவின் "பேட்டி" வாங்கி ரொம்ப புத்திமதிகளைச் சொல்லிச் சிவராயருக்காக இராஜ்ஜியத்தை இழக்காதீர்கள் (என்று கூறினார்)......(அதற்கு அமர்சிங்கு) "ராயரை ஒப்புவிக்கிறதில்லை என்ன ஆனாலும் ஆகட்டும்" (என்று கூறினார்). நாளைக்கு எல்லாம் பேசிக்கொள்ளலாம் என்று மக்லோட் சோல்ஜரை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப்போனார்......"[29].

இதனால் அமர்சிங்கைத் தமக்கு அடங்கியிருக்குமாறு செய்வதற்கு மேற்கொள்ளவேண்டிய முயற்சிகளையெல்லாம் மக்லோட் மேற்கொண்டார் என்பது தெரியவரும்.

மக்லோட் ரெஸிடெண்டாக 1797 வரையில் குறிக்கப் பெறுகிறார்[30].

3. **ராம்*** (G. H. Ram): மக்லோட் 1797 வரையில் குறிக்கப்பெற்ற போதிலும் 1—1—1792இல் மிஸ்தர் ராம் ஒரு ஆவணத்தில் குறிக்கப் பெறுகிறார்.[30அ] இவருக்கு மூன்று சுபாக்கள் தருவதாகச் சென்னைக் குழுவில் தீர்மானித்தனர்.[30ஆ] அமர்சிங்கு காலத்தில் இவர் ரெஸிடெண்டாக இருந்தார்.[30இ] சரபோஜி முதலியவர்களுக்குச் செலவுகட்காக ராம் வழி 50,000 வராகன் தர வேண்டும் என்று எழுதப்பெற்றுள்ளது.[30ஈ] மேஸ்தர் ராம் தங்கியிருந்த வீடு வடக்குத் தெருவில் இருந்தது.[30உ]

4. **பென்ஜமின் டூரின்** (Benjamin Torin): இவர் கி. பி. 1798 முதல் தஞ்சையில் ரெஸிடெண்ட் ஆக இருந்தார் என்பது,

"1199: மிஸ்தர் டூரியன் துரைக்குச் சாமான்களுக்காகச் சக்கரம் 20–4⅞"

என்ற ஆவணக்குறிப்பால்[31] அறியப்பெறும். (சுஹூர்சன் 1199 என்பது கி. பி. 1798 ஆகும்). "1798 மேஸ்தர் டூரியன் வீட்டு வேலைக்குக் கீத்து மூங்கில்" என்ற குறிப்பும் இதற்குச் சான்று.[32] இவரும் சார்லஸ் ஹாரீஸ், ஜியார்ஜ் ஸ்ட்ராட்டன் ஆகியோரும் ஆக மூவர் தஞ்சையின் ஆட்சிநிலையும் மக்கள் வாழ்க்கை நிலையும் பற்றி ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சென்னைக் கவர்னர் குழுவால் நியமிக்கப்பெற்றனர். இக்குழு தம் கருத்துக்களைக் கூறியதும் தஞ்சையைத் தமக்குரியதாக ஆக்குவதற்குரிய முயற்சிகளை

---

29. 2-114, 115 ; 7-596 முதல் 599 வரை (கும்பினியுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்- இதன் அடிக்குறிப்பு 21க்குரியதில் காண்க)
30. 2-308; 4-385; 7-687 30அ. 4-390 30ஆ. 4-398
30இ. P. 90, A History of British Diplomacy in Tanjore, K. Rajayyan
30ஈ. 5-450 30உ. 10-47 31. 4-285
32. ச. ம. மோ. த. 15-31

* பக்கம் 131, போன்ஸ்லே வமிச சரித்திரம் - தமிழ் - ஸரஸ்வதி மகால் வெளியீடு (1980)

மேற்கொள்ளுமாறு ரெஸிடெண்ட் டூரினுக்குச் சென்னையினின்று ஆணை வந்தது.[33] அதன்படி அவர் முயற்சி செய்து வென்றார்.

ரெஸிடெண்டுக்குச் சம்பளம் மராட்டிய அரசரே கொடுத்தனர். டூரினுக்குச் சம்பளம் 1000 பவுண்டு அதாவது புலிவராகன் 3157 என்று கணக்கிடப்பட்டது. இதனை, "மிஸ்தர் டூரியன் சாயேபுக்கு 1811 ஜனவரி மாதத்திற்குச் சேரவேண்டிய 1000 பவுண்டுக்கு மிஸ்தரானவர் சீமையில் ஒரு வியாபாரி மூலம் 1000 பவுண்டு வாங்கி அதற்குச் சென்னைப்பட்டணத்தில் மிஸ்தர் அடத்ரன் டிபாரிஸ் அண்கோவுக்கு 1000 பவுண்டு செலுத்துவதற்காகப் 'பில்' அனுப்பிய வகையில் புலிவராகன் 3157, மைலி $3\frac{1}{2}$, காசு 46" என்ற ஆவணக்குறிப்பு வலியுறுத்தும்.

24—4—1821இல் கயையினின்றும்[34], 2—9—1822இல் காஞ்சிபுரத்தினின்றும்[35] இரண்டாம் சரபோஜி எழுதிய கடிதங்களினின்று "டூரியன்" அவ்வாண்டுகளில் இலண்டனுக்குச் சென்றுவிட்டார் என்று அறியவருகிறது.

**5. வில்லியம் பிளாக்பர்ன்** (William Blackburn): மோடி ஆவணங்களில் இவரைப்பற்றி 1814இலிருந்து தெரியவருகிறது.[36] 30—6—1818இல் "சின்ன மகாராஜா (இரண்டாம் சிவாஜி) கல்யாணத்துக்காக வருகிற சர்தார்களுக்கு மரியாதை செய்கிற விவரத்துக்கு ரிசிடெண்டு பிளாக் பர்ன் சாயபுக்கு" ஒரு குறிப்பு அனுப்பியதாகத் தெரிகிறது.[37] அரசரைப் பார்ப்பதற்கு ஒரு சமயம் பிளாக்பர்ன் மலையாளம் கலெக்டர் மக்லோட் என்பவருடன் வந்தார்.[38]

6. **ஜான் ஃபைஃப்** (John Fyfe): ஜான் ஃபைஃப் பற்றி 1824 முதல் 1838 வரை குறிப்புக்கள் காணப்பெறுகின்றன. காப்டன் ஜான் ஃபைஃப் அவர்களுடைய பங்களா 1824இல் பழுதுபார்க்கப்பெற்றது.[39] கி. பி. 1825இல் முத்தாம்பாபுரம் சத்திரத்துக்கு இவர் சென்றுள்ளார்; அங்கு ஐந்து பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டார்; ஒவ்வொரு வகுப்பிலும் ஓரிரு மாணாக்கர்களைப் பரீக்ஷித்துப் பார்த்தார். அவரிடம் சத்திரத்தைப் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பெற்றன. பிற நிர்வாகச் செய்திகளையறிந்து அங்கிருந்து புறப்பட்டார்–என்று ஒரு ஆவணம் பகர்கிறது.[40] கி. பி. 1826இல் இவர் சேதுபாவா சமுத்திரம் என்ற ஊருக்குச் சென்றுவந்தார்.[41] 8-7-1826இல் இவர் தம்பி இன்ஸைன் ஃபைஃப் என்பவர் தஞ்சைக்கு வந்தார்.[42] 1827இல் மீண்டும் ரெஸிடெண்ட் இருக்கும் வீடு பழுதுபார்க்கப்பட்டது; செலவு ரூ. 1003, மைலி பணம் 4, காசு 53 என்று ஆவணக்குறிப்பு உள்ளது.[43]

---

33. P. 108, A History of British Diplomacy in Tanjore, K. Rajayyan
34. 5-85
35. 5-27
36. 4-291; ச. ம. மோ. த. 2-18
37. 6-329
38. ச. ம. மோ. த. 7-1
39. 4-16
40. 2-241 முதல் 248 முடிய
41. 4-432
42. 8-181
43. 4-214.

"7—11—1830 ரெஸிடெண்டு ஃபைஃப் சாயேப் கப்பலேறிப் போக வில்லை என்று கலெக்டர் சொன்னார் என்று ஸர்கேலுக்கு சிரஸ்தேதார்" என்ற குறிப்பால்[44] கி. பி. 1830 வரையில் இவர் ரெஸிடெண்டாக இருந்தார் என்று தெரிகிறது.

7 **ஜே. பிளாக்பர்ன் :** இரண்டாம் சரபோஜி மன்னர் 8—3—1832இல் கைலாசவாசியானார் (இறந்தார்); அச்செய்தியைச் சென்னைக் கவர்னருக்கு எழுதியவர் ஜே. பிளாக்பர்ன் என்பவர் ஆவர். இவர் ஆக்டிங் ரெஸிடெண்ட் ஆக இருந்தார் என்று அறியவருகிறது. மேலும் அந்தக் கடிதத்தினின்று சரபோஜி இறந்த பிறகு ரெஸிடெண்டு பதவி நீக்கப்படும் என்று 12—1—1831இல் ஆணை பிறப்பிக்கப்பட்டதாகவும், பின்னர் அப்பதவி நீட்டிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.[45]

8. **கிண்டர்ஸ்லி :** இவர் ரெஸிடெண்டாக 1842இல் பல ஆவணங் களில் குறிக்கப் பெறுகிறார். 6—3—1837 முதல் 24—9—1842 வரை சென்னைக் கவர்னராக இருந்தவர் லார்டு எல்பின்ஸ்டன் (Lord Elphinston) என்பவர் ஆவர்.[46] இவருக்குக் கும்பகோணம் சபாபதியாபிள்ளை என்பவர் 10-8-1842இல் ஒரு பிராது கொடுத்தார். அதில் கிண்டர்சலி துரை தன் கருத்தை எழுதிக் கவர்னருக்குப் பணிந்தனுப்பியுள்ளார்.[47] 31-8-1842இல் சிலம்பாயி என்பாள் ஒரு பிராது கொடுத்திருக்கிறாள்.[48] 9—8—1842இல் சிதம்பரம்பிள்ளை என்பாருடைய பிராதிலும்[49] இந்த ரெஸிடெண்டு குறிக்கப் பெறுகிறார்.

9. **மங்கமாரி:** 22-8-1846இல் ரெஸிடெண்டு மங்கமாரி கோடிக் கரைக்குச் சென்றபொழுது ஸர்க்காரின் தோட்டத்தைப் பார்வையிட்டார் என்று ஓராவணம் கூறுகிறது.[50] இக்காலத்தில் தஞ்சைக் கலெக்டராக இருந்தவர் பெயரும் மங்கமாரி என்று தெரிகிறது.[51]

10. **பரட்டுதுரை :** இவர் தஞ்சாவூரில் "ஆகபடியின்"[51அ] (acting) ரெஸிடெண்டு ஆக 1849இல் இருந்தவர் ஆவர். சுப்பிரமணிய சாத்திரி என்று ஒருவர், அரண்மனையில் சிறிய அலுவலில் இருந்தார். வாசுதேவகவி என்பவர் " ஜபசாலை" ஒன்று நிறுவிச் சில பிராமணர்களைத் துன்புறுத்தி இடையறாது ஜபம் செய்யச் செய்து, காளி சிலையைச் செய்துவைத்து ஒரு பெண்ணைப் பலியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார் என்று அச்சுப்பிரமணிய சாத்திரி

---

44. 2-106 45. P. 25, Saraswathi Mahal by R. Jayaraman (1981)
46. List of Governors of Madras, No. 60 47. 6-388, 389
48. 6-364, 365 49. 6-378 50. 4-297
51. 8-81 ; 5-211 51அ. ஆகபடியின் = ஆக்ட்டியின் = ஆக்டிங்

ரெஸிடெண்டுக்கு 1—6—1849இல் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.[52] (இந்தத் துரை அடுத்து வரும் பிஷப் காலத்தில் சிலகாலம் தற்காலிக ரெஸிடெண்ட் ஆக இருந்திருக்கலாம்.)

11. **ஜே. பிஷப் :** 1—11—1847இல் அம்மு என்ற ஒருவர் வழக்கைப் பற்றி விவரம் தெரிவிக்க ஸர்க்கேலுக்கு ஜே. எச். பிஷப் கடிதம் எழுதியுள்ளார்.[52அ] 26—11—1848இல் அருணகிரி விருபாக்ஷி தேவர் சிவபூசை மடத்து விஷயமாக நடந்த வழக்கை விளக்கமாகக் கூறித் தனக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று ரெஸிடெண்டு பிஷப் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்.[53] 22—9—1849இல் ரெஸிடெண்டு பிஷப் அவர்கள் அதிகச்செலவு செய்யக்கூடாது என்று ஸர்க்கேலுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.[54] இவருக்கு 22—1—1853இல் "கைலாசவாசி அமர்சிங்கு ராஜா அவர்களுடைய புதல்வி ராஜா அமணிசாஹேபு" தாம் ஒரு 'உயில்' (will) எழுதியுள்ள செய்தியைத் தெரிவித்துள்ளார்.[55] 24—11—1850இல் கும்பகோணத்தில் காமகோடி பீடம் ஸ்ரீமகாதேவந்திர ஸரஸ்வதி அவர்கள் பட்டத்துக்கு வந்தமை முன்னிட்டு ஊர்வலத்துக்கு வேண்டிய காவல் உதவிக்கு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று ஸர்க்கேல் அண்ணாஜி தியாகராஜ பண்டிதர் ரெஸிடெண்டுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.[56]

12. **ஃபார்பஸ்** (H. Forbes) : 12—4—1855இல் இவர் ரெஸிடெண்டாகப் பட்டுக்கோட்டையில் தங்கியிருந்தார்.[56அ] இரண்டாம் சிவாஜி 29-10-1855இல் கைலாஸவாஸி ஆனபொழுது இவர் ரெஸிடெண்ட் ஆக இருந்தவர் ஆவர். 10-7-1856இல் இவர் 'கமிஷனர்' பதவியில் அமர்த்தப் பெற்றார். இவர் 'ரெவின்யூ போர்டில்' மூன்றாவது உறுப்பினராக இருந்தவர் என்றும், பல ஆண்டுகள் தஞ்சையில் ரெஸிடெண்டாக இருந்தவர் என்றும், மராட்டியர் தர்பாரில் இருந்த பெரிய அலுவலர்களை நன்கு அறிந்தவர் என்றும் ஆகவே இவர் கமிஷனராக நியமிக்கப்பட்டார் என்றும் தெரிகிறது.[57] இவர் 14-5-1856இல் தரங்கம்பாடியிலிருந்து சென்னைக்குச் சென்றார்.[58] ஜூன் 26இல் ரெஸிடெண்டு **செரி சாகிப்** தரங்கம்பாடியிலிருந்து ரெஸிடெண்டு அலுவலகத்துக்கு வந்தார்[59] என்பதால் சென்னைக்கு ஃபார்பஸ் சென்ற காலத்தில் தஞ்சைக் கலெக்டர் ஆக இருந்த **செரிசாகிப்** ரெஸிடெண்ட் வேலையும் பார்த்தார் என்று தெரிகிறது.[60] இந்நாளில் ரெஸிடெண்டு செரி, வக்கீல்

---

52. 6-139 முதல் 147 வரை 52அ. 4-277 முதல் 282 வரை

53. 6-114 முதல் 129 வரை ; மடங்களும் தம்பிரான்களும் என்ற கட்டுரையில் அடிக்குறிப்பு 82க்கு உரிய செய்தியைக் காண்க. 54. 6-270 55. 1-190, 191

56. 4-116, 117 56அ. ச. ம. மோ. த. 6-81

57. Paragraph 15 of the letter by T. Pycrofts, Chief Secretary to the Secretary to the Govt. of India, dated 10th July 1856 - Page LIV of Appendix to The Maratha Principality by Hicky. 58. 8-127.

59. 8-128 60. 2-225

நார்டன் ஆகிய இருவரும் இரண்டாம் சிவாஜியின் மூத்த இராணியிடம் வந்தனர். இராணியார் தம் வழக்குக்கு உறுதி தருவதற்காக, உப்பும் துளசியும் கொடுத்து உறுதி வாங்கினர்.[61] 26-7-1858இல் செரி அவர்கள் தற்காலிக ரெஸிடெண்டு என்று குறிப்பிடப் பெறுகிறார்.[61அ]

12-4-1855லும்,[62] 14-5-1856லும்[63] ரெஸிடெண்டு ஃபார்பஸ் என்று குறிக்கப்பட்டவர், 17-10-1856இல் " **தஞ்சாவூர் ரெஸிடெண்டு கமிஷனர்** " என்று குறிக்கப்பெற்றார்.[64] அந்த நாளில் இவர் சர்க்கேலுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். 29-10-1856இல் ஒரு கடிதம் எழுதியதாகவும், அதிற்கண்ட வண்ணம் கணக்குகளைத் தயாரித்துக் கொடுக்கவில்லையென்றும், மூன்று வாரமாகியும் ஒரு " ஜாபிதா "வும் வரவில்லை என்றும், அரசாங்கத்தின் எல்லாவித சொத்துக்களையும் சுவாதீனம் செய்து கொள்ள வேண்டிய பொறுப்புத் தனக்குள்ளதென்றும், மறுநாட்காலை வந்து, கஜானா, சங்கிராமம், ஜமதார்கானா, நூல்நிலையம், தாருகானா, மற்றுமுள்ள ' ரிக்கார்டுகள் ' ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் தடையின்றி ஒப்புவிக்கவேண்டும் என்றும், அரசருடைய மனைவிமார்களுக்கு வீண் அச்சம் வேண்டியதில்லை என்றும் எழுதினார்.[65] சர்க்காரில் " தஸ்தாவேஜிகளின் ஜாபிதா " தயார் செய்ததாகத் தெரியவில்லை ஆகையால் 18-10-1856இல் ஒரு ' குமாஸ்தாவை ' அனுப்புவதாகவும் அவர் வீட்டுக்குத் திரும்பும்பொழுது ' ரிகார்டு ' அலுவலகத்துக் கதவுகளுக்குத் தன் ' முத்திரை'யைப் போட அவருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்றும் கமிஷனர் ஃபார்பஸ் எழுதி இருக்கிறார்.[66] கமிஷனர் ஃபார்பஸ் 22-11-1857இல் ஸரஸ்வதி மகாலிலுள்ள ஆங்கிலப் புத்தகங்களைப் பார்த்துச் சென்றார்.[67]

**13. ஃபிலிப்ஸ்** ( Phillips ): இவர் 1858, 1859 ஆண்டுகளில் ரெஸிடெண்டு-கமிஷனர் வேலை பார்த்தவராகத் தெரியவருகிறது.

> " 1852-ரிஸிடெண்டு எச். டி. ஃபிலிப்ஸ் ஸ்கொயர் ஆபீசுக்கு ரூ. 5000 வெளியே கொண்டுபோக உத்தரவாகவேண்டும். நாளை பகல் 7 நாழிகைக்கு ரெஸிடெண்டு ஃபிலிப்ஸ் அவர்களை மாதுஸ்ரீ ஆவுசாகேப் பாயிசாயேப் அவர்கள் பேட்டிக்கும், எல்லா மகால்களின் சீல் பார்ப்பதற்குப் வருவதால் எல்லா மகால் அதிகாரிகளும் தயாராக இருக்கவும் "

என்ற ஆணையால்[68] 1858 இல் இவர் அலுவல் ஏற்றதும் எல்லா மகால்களுக்கும் சென்று பார்வையிட்டார் என்றும் அரசமாதேவிகளோடு பேசிவந்தார் என்றும் தெரிகிறது.

---

61. 2-226, 227
61அ. 4-117, 118
62. ச. ம. மோ. த. 6-8
63. 8-127
64. 7-666
65. 7-658 முதல் 670 முடிய : 8-88 முதல் 97 முடிய
66. 8-97 முதல் 101 வரை
67. 2-228, 229.
68. ச. ம. மோ. த. 18-5

1859 நவம்பர் மாசத்திய கணக்குகள் பற்றியும் கமிஷனர் ஃபிலிப்ஸ் இடம் இருந்த சாமான்கள் விவரம் பற்றியும் ஓராவணம் குறிப்பிடுகிறது.[69]

**14. எம். கேடல்** : இவர் தஞ்சாவூர் கவர்ன்மெண்டு ஏஜெண்டாகக் குறிக்கப் பெறுகிறர். 27-7-1859இல் சென்னை உச்சநீதிமன்றத்* தீர்ப்புக்குப் பிறகு தஞ்சையில் அரசாங்க "ஏஜெண்டு" ஆகக் கலெக்டர் நியமிக்கப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இப்பதவி வகித்ததாகக் கேடல் என்பார் 27—9—1860இல் குறிக்கப்பெறுகிறார்.[70] மங்களவிலாஸ் மாதர்களின் நகைகளைப் பங்குபோடும் விஷயமாகப் பிறருக்கு எச்சரிக்கை தருபவராக வேறு ஒரு ஆவணத்தில் குறிக்கப்பெற்றுள்ளார்.[71] இதனால் அரண்மனை விவகாரங்கள் எல்லாமும் அரசாங்க ஏஜெண்டு வழியே நடைபெற்றனவாதல் வேண்டும் என்று அறியப்பெறும்.

## 4. பிற அலுவலர்கள்

இத்தலைப்பின் கீழ் ஆங்கிலேயச் சேனைத் தலைவர்கள், மாவட்டக் கலெக்டர்கள் முதலியவர்கள் அடங்குவர்.

12—6—1785இல் ஜெனரல் ஸர்ஜான் துலிங்கு என்பவர் அப்பதவியேற்று வந்ததும் துளஜா மகாராஜா அவருக்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார்.[72]

துளஜா காலத்திலேயே தஞ்சையில் கர்னல் ஈஸ்டெண்டு என்பவர் இருந்தார். மிஸ்தர் அட்லிஸ்டர் என்று ஒருவரும் 1785இல் குறிக்கப் பெறுகிறார்.[73]

30—12—1821, 14—1—1822 ஆகிய தேதிகளில் இரண்டாம் சரபோஜியின் காசியாத்திரையின்போது, காப்டன் மைக்கேலுக்கு ரூ. 4000 தருமாறு தஞ்சை சர்க்கேலுக்கு முகாம் சர்க்கேல் எழுதியுள்ளார்.[74]

காப்டன் ஜான்காமெல் இங்கிலாந்துக்குப் போகும்பொழுது ரூ. 4000 கொடுக்குமாறு நிர்மள் என்ற தங்குமிடத்திலிருந்து இரண்டாம் சரபோஜி 4—2—1822இல் ஆணை பிறப்பித்துள்ளார்.[75]

18—12—1824இல் கலெக்டர் காடன், உதவி கலெக்டர் பிளாக்பர்ன் ஆகியோர் இருவரும் ஸர்க்காரில் "எத்தனை நியாய சபைகள் இருக்கின்றன? அவைகளின் வேலைகள் என்ன?" முதலாகிய செய்திகளைக் கேட்டறிந்தனர் என்று தெரிகிறது.[76] 7—6—1827இல் ஏ. டி. காமல் என்பார் கலெக்டராக

---

69. ச. ம. மோ. த. 10-9
* Supreme Court.
70. 6-327
71. 6-286
72. 5-328
73. 2-9, 10
74. 5-22, 107
75. 5-25
76. 2-205, 206

இருந்தார்.[77] 23-12-1829இல் நெல்சன் என்பவர் கலெக்டராகக் காணப் படுகிறார். இவர் விலங்குகளைக் காப்பாற்றுதல் பேணுதல் ஆகியவற்றில் கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பதை,

"மிருக சம்ரக்ஷணம் செய்து நன்கு பராமரிக்கும் வகையில் கொழுத்த பிராணி என்று காண்பிக்கும் மிருக சம்ரக்ஷகனுக்கு இனாம் கொடுப்பது"

என்ற பகுதி[78] மெய்ப்பிக்கும்.

18-3-1830இல் மிஸ்தர் கிண்டர்ஸ்லி என்பவர் கலெக்டர் ஆக இருந்தார்.[79] இக்கலெக்டருக்கு 29-10-1831இல் கோனோட்டி நாயக்கர் ஒரு கடிதம் எழுதியுள்ளார் என்று தெரிகிறது.[80]

கி. பி. 1845இல் கலெக்டராக இருந்தவர் மங்கமாரி ஆவர்.[81] 9-12-1845இல் காலை 11 மணிக்குத் திருச்சி மேஜர் ஜெனரல் கீப்ஸன் ஹுஜூரைக் காணவந்தார்.[82]

1-11-1847இல் ரெஸிடெண்டு ஜே. எச். பிஷப் அவர்கள் சர்க்கேலுக்கு எழுதிய கடிதத்தில்[83] சில வழக்குகளின் வரலாறு தெரியவேண்டுமென்று சர். எச். சி. மகமாரி ஃப்ரானடே கேட்டிருப்பதாக எழுதியுள்ளார் என்று காணப் படுகிறது. இவர் உச்சமன்ற நீதிபதியாகலாம் என்று தோன்றுகிறது.

தத்தாஜி அப்பா அவர்களுக்கு வெங்காஜி என்ற அலுவலர் எழுதிய கடிதம் சரபோஜியை ஆட்சிக்குக் கொணரும் முயற்சிகளைப் பற்றியதாகும். அக்கடிதத்தில் மிஸ்தர் ராம், லார்டு வாலிஸ், ஜெனரல் மெட்ராஸி, மிஸ்டர் டார்க்கு, கர்னல் பிளாயிட், செரி, போஸர் முதலிய ஆங்கிலேயர் பெயர்கள் குறிக்கப்படுகின்றன.[84]

22-11-1856இல் ஜான்புரூஸ் நார்ட்டன் என்பார் அரண்மனைக்கு வந்து வக்காலத்து வாங்கிச் சென்னை உச்சநீதி மன்றத்தில் (Supreme Court) பிராது செய்தார். பிரமாணம் செய்யும்பொழுது துளசியும் உப்பும் கையில் கொடுத்து பாயி சாகேப் இடத்தில் பிரமாணம் வாங்கப் பெற்றது[85] என்று முன்னரே கூறப்பட்டது.

**ஸ்வார்ஷ் பாதிரியார்** (Frederick Schwartz) : இவர் ஒரு ஜெர்மனி பாதிரியார். இவர் தரங்கம்பாடியில் 11 ஆண்டுகள் இருந்தார்; பின்னர்த் திருச்சியில் இருந்தார். கி. பி. 1769இல் இவர் தஞ்சைக்கு வந்தார்; தம்

---

77. 3-62 78. ச. ம. மோ. த. 18-21 79. 2-103
80. 7-781 81. 5-211; 8-81 82. 5-214
83. 4-277 84. 5-553, 554 85. 8-129; அடிக்குறிப்பு 61 காண்க

சமயப் பணியைச் செய்தார் ; துளஜாவுக்கு நண்பர் ஆனார். இவர் பாரசீகம் உருது மராத்தி முதலிய மொழிகளில் வல்லவர். கும்பினியாரிடத்தே இவருக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. துளஜா கி. பி. 1787 இல் சரபோஜியைச் சுவீகாரம் எடுத்துக்கொண்ட பிறகு சரபோஜியை இவருடைய ஆதரவில் இருக்கச் செய்தார். அமர்சிங்கு அரசைத் தனக்கு உரியதாக ஆக்கிக்கொண்டதும் சென்னை அரசாங்கத்துடன் வாதாடிச் சரபோஜியே பட்டத்துக்கு உரியவர் என்பதை இவர் நிறுவச்செய்தார். சரபோஜி பட்டம் பெற்றதை இவர்தம் கண்ணால் காணவில்லை. சரபோஜிக்கு ஸ்வார்ஷ் பாதிரியிடத்தில் அன்பும், மரியாதையும், நன்றியுறிவும் மிகுதியும் உண்டு. ஸ்வார்ஷ் பாதிரியார் சரபோஜியை அரசு கட்டிலில் அமர்த்தச் செய்ய வேண்டிய முயற்சிகளை யெல்லாம் எடுத்தார். பல தடவைகள் தஞ்சையிலேயே தங்கியிருந்தார். அமர்சிங்கு பக்கம் கூறிய 12 பண்டிதர்கள் மீண்டும் விசாரிக்கப்பட்டபொழுது ஸ்வார்ஷ் தஞ்சையிலேயே இருந்தார். இவரிடமே சில பண்டிதர்கள் தம் வருத்தத்தைத் தெரிவித்தனர். சரபோஜி தஞ்சைக்குப் புறப்பட்டு வருகிறார் என்ற செய்தியையும் ஸ்வார்ஷ் தெரிவித்தார் என்று மோடி ஆவணக் குறிப்புக்கள் உள.[86] ஸ்வார்ஷ் 13—2—1798 இல் இறந்தார்.

இதுகாறும் கூறியவற்றால் துளஜா காலத்திலிருந்து தஞ்சையில் வெள்ளையர் ஆதிக்கம் படிப்படியாக மிகுந்தது என்றும், பல துறைகளிலும் பெரிய அலுவலராகித் தஞ்சைச் செல்வத்தைத் தாம் ஈட்டுவதற்குப் பல வழிகளை உண்டாக்கிக் கொண்டனர் என்றும் தெளிவாக அறியலாம்.

86. 3-6, 11, 14, 28, 80, 82, 297, 800 ; 7-595.

# 8

# அரசு அலுவல்களும் அலுவலர்களும்

தஞ்சை மராட்டியர் ஆட்சியில் அரசரே ஆட்சித் தலைவர் ஆவர். அவர்களுக்கு உதவி செய்யப் பல அலுவலர்கள் இருந்தனர். சர்க்கேல்; சுபேதார்; பதக்தார்; அமல்தார்; சிரஸ்தேதார்; தாசில்தார்; ஹவில்தார்; கொத்தவால்; கார்பாரி; கில்லேதார்; கார்கூன்; திம்மதி; காவல்காரர்; ஹர்காரா; வக்கீல்; மாஹல் மத்யஸ்தர்; கமாவிஸிதார்; கலாசி; கோட்டிவாலா; நிஷ்பதி; இமாரதி; பதக்நீஸ்; காஸ்நீஸ்; தஸ்தூர்; ராயஸ்; ஹேஜீப்; சிட்நீஸ்; பாக்குவான் என்று இன்னோரன்ன பல உத்தியோகப் பெயர்கள் மோடி ஆவணங்களில் காணப்பெறுகின்றன.

**சர்க்கேல்**[1] என்பதையே தலைமையான அலுவலாகக் கருதலாம். சர்க்கேல் என்ற சொற்கு " மந்திரி " என்று பொருள். எனவே தஞ்சை அரசில் " சர்க்கேல் " என்பது தலைமை அமைச்சரைக் குறிக்கலாம். இவ்வுயரலுவல் பிரதாபசிங்கர் காலத்தில் தோற்றுவிக்கப்பெற்றது என்றும், இவரை அரண்மனைக்குரிய செயல்களைக் கண்காணிப்பவர் என்றும் கருதுவர்.[2] கி. பி. 1689 முதல் 1707 வரை நடந்த மராத்தியர் போரில் கன்னோஜி ஆங்க்ரே ( Kanhoji Angre ) என்பவர் கப்பற்படையில் சிறந்து விளங்கினார். அதனால் இவர் சத்ரபதி ராஜாராம் அவர்களால் கடற்படைத் தளபதியாக (Admiral of the Maratha Navy) நியமிக்கப் பெற்று ' சர்க்கேல் ' என்ற சிறப்புப் பெயர் சூட்டப் பெற்றார். இச்செய்தியால் கடற்படைத் தளபதியும் சர்க்கேல் எனப்பட்டார் என அறியவருகிறது.[2அ]

---

1. 1-59
2. Chamberlain of the Royal Household-Sirkale was another name for domestic minister-P. 78, The Maratha Rajahs of Tanjore-K. R. Subramanian.

2அ. P. 70. Shivaji & Facets of Maratha Culture-Marg Pub-Bombay (1980)

தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சிக்குரிய நிலப்பகுதி பட்டுக்கோட்டை, மன்னார்குடி, மாயூரம், கும்பகோணம், திருவையாறு என ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. ஒவ்வொரு பகுதியும் "**சுபா**" எனப்பட்டது. ஒவ்வொரு சுபாவுக்கும் ஒரு அரசியல் அதிகாரி இருந்தார்; அவர் **சுபேதார்**[3] எனப்பெற்றார். சுபாவின் ஆட்சித்தலைமை மட்டுமன்றி இராணுவத்துறையும்[4] இவர் அதிகார வரம்பில் இருந்தது எனப்படுகிறது.

"**பதக்**" (பத்தக்) அல்லது "பதகம்" (பத்தக்கம்) என்பது சில ஊர்களின் ஒன்றியம் என்னலாம். ஹைதர் கலாபினால் நாடு பாழடைந்தது; ஆகவே நாட்டைச் செம்மைப் படுத்தத் துளஜாஜி தன் அமைச்சர்களுள் ஒருவரான பாவா பண்டிதரைக் கொண்டு நிலச்சீர்திருத்தம் செய்தார். ஹைதர் கலாபினால் அழிவுக்குட்பட்ட நிலப்பகுதிகளோடு செழிப்புள்ள நிலங்கள் ஒருங்கு சேர்க்கப்பெற்றன. அத்தொகுதிகள் "பதகம்" (Pattak) என்று பெயரிடப்பட்டன. ஒவ்வொரு பதகத்தையும் கண்காணிக்க ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டார். அவர் "**பதக் தார்**" (Pattakdar) எனப்பட்டார்.[5]

**அமில் தார்**[6] என்பது பிறிதோரலுவல் ஆகும். இவரை வருவாய்த்துறை அலுவலர் என்பர் ஒரு சாரார்.[6அ] ஜில்லா அதிகாரி (District Officer) என்று சி. இராமச்சந்திரன் என்பவர்[7] கூறுவர். இது எங்ஙனம் என்பது விளங்கவில்லை.

**சிரஸ்தேதார்**[8] என்பவர் ஆவணக் காப்பாளர் என்பர் திரு. சி. இராமச் சந்திரன் அவர்கள்.[9] ஆனால் "தாசில்தாருக்குத் தாசில்தார் வேலை செய்து கொடுத்து அவர்களிடமிருந்து வருஷத்திற்கு இருவரும் ரூ. 1000 கொடுப்பது" என்ற குறிப்பால் தாசில்தார் போன்ற அலுவலர்களை நியமனம் செய்யும் அதிகாரமோ, அல்லது பரிந்துரைக்கும் செல்வாக்கோ சிரஸ்தேதார் உடையராதல்கூடும் என்று தோன்றுகிறது. இவர் ரெஸிடெண்டு அலுவலகத்தில் இருப்பவர்.

**தாசில்தார்**[10] என்பவர் ஒரு தாலுகா அல்லது சிறிய பிரிவில் வரி வசூல் செய்யும் அலுவலர்.

---

3. 1-15.
4. The Subhadar was a most powerful man for, he was not only the controller of the administration machinery of the Subha but was also in charge of the military dept -P. 353, Maratha Rule in the Carnatic-C. K. Srinivasan
5. 1-15; P. 365-66, The Pattack System-Maratha rule in the Carnatic-Srinivasan, C. K. 6. 1-21

6அ. Administrator of Revenue, Glossary, Administration & Society in the Carnatic K. Rajayyan

7. Glossary-East India Company & South Indian Economy, C. Ramachandran. New Era Publications, Madras (1980)
8. 1-91 9. Glossary - C. R. 10. 1-91

**ஹவில் தார்**[11] என்பது இராணுவ அதிகாரியைக் குறிக்கும்.[12]

**கொத்தவால்**[13]: "கோட்டையின் கொத்தவால்" என்பதால், கோட்டைக்காவல் அதிகாரம் உடையவர் என்று தெரிகிறது. ஸர்க்கேல் நீலகண்டராவ் ஜாதவ்ராவ் 2—12—1856இல் "கொத்தவால் நடந்துகொள்ள வேண்டிய விஷயம்" என்று கொத்தவாலின் அதிகாரங்களைப்பற்றி ஆணை பிறப்பித்துள்ளார்.[14] அதன்படி, (1) கொத்தவால் ஒரு சேவகனுக்கு 15 நாட்களின் சம்பளம் வரையில் அபராதம் விதிக்கலாம்; (2) திருடியவனிடத்தில் 'வாக்குமூலம்' வாங்கிக்கொண்டு திருடியவனையும் "பிராது" கொடுத்தவரையும் நியாயாதிபதியிடம் அனுப்பவேண்டும்; (3) தாணாக்காரனைக் கொத்தவால் மாற்றினால் காரணம் கூறவேண்டும்; (4) நகரத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளக் கொத்தவாலும் நகரசுத்தி மஹால்தாரர்களும் ஒன்றித்துச் செய்ய வேண்டும்; (5) கோட்டைக்கு வெளியே "லயனின்" தூய்மையைக் கெடுத்தால் கெடுத்தவர்களை நியாயாதிபதியிடம் கொண்டுவந்து நிறுத்தவேண்டும்; (6) திருட்டு நடக்காமல் இருக்க எச்சரிக்கை செய்யவேண்டும்; (7) சூதாட்டத்தைத் தடைசெய்வது கொத்தவால் கடமை; (8) நகரத்தைத் துப்புரவாக்கும் வேலைக்குரிய வண்டிகளையும் துப்புரவாளர்களையும் கொத்தவாலின் வசம் விடவேண்டும் – என்பவை கொத்தவாலின் அதிகார வரம்புக்கு உட்பட்டவையாம்.

**கார்பாரி**[15] என்பதும் ஒரு பெரிய அலுவல். இவர் அரசரது மெய்காப்பாளர்களின் தலைவன் ஆதல் கூடும்.

**கில்லேதார்**[16] என்பவர் மிகப்பெரிய அதிகாரியாவார். ஒரு கோட்டையின் முழுப்பொறுப்பு இவர்க்கு உண்டு.

**மாஹல்மத்யஸ்தர்**[17] ஒவ்வொரு மஹால் அல்லது பிரிவுக்கும் இருந்த அலுவலர்.

**கமாவிஸிதார்**[17] மேற்பார்வை செய்யும் அதிகாரி அல்லது சத்திர மேற்பார்வை அதிகாரி ஆகலாம்.

**கார்கூன்**[18] என்பது சாதாரண அலுவலரைக் குறிக்கும் "குமாஸ்தா" போன்ற அலுவல் ஆகும்.

---

11. 1-45 12. Glossary - C. Ramachandran. 13. 1-811
14. 2-77 முதல் 83 வரை
15. 1-332; "Karbari is the head of Bargirs i.e. the people employed to accompany the Raja armed with swords when out for a drive" — P. 2, Deposition of Ramachandra Rao Kokatai, 14th witness, O. S. No. 26 of 1912, Sub-Court, Tanjore.
16. 10-16 17. 12-326 18. 12-327

**ஹர்கார்ரா**[19] என்பது ஒற்றரைக் குறிக்கும் என்பர்.[20] பிறிதொருவர், வழக்குமன்றங்களில் வருகைப் பதிவேடு வைத்திருப்பவர் என்பர். இவர் "அரிகர்" (Arrikars) என்பவரே ஒற்றர் என்பர்.[21]

**திம்மதி** (Dimathi)[22] என்றொரு அலுவல் உண்டு. இவ்வலுவலர் வழக்கு மன்றத் தீர்ப்பில் கையொப்பம் இடுபவர் ஆவர்.[23]

**இமாரதி**[24] என்பது பழுதுபார்த்தல் (மராமத்து) முதலியவற்றைக் கவனிக்கும் அலுவலரைக் குறிக்கும்.

**ஹேஜிப்**[25] என்பவர் கணக்குப் பிள்ளை.

**சிட்னீஸ்**[26] என்பது அரசர் அல்லது பெரிய அதிகாரிகள் சொல்பவற்றை எழுதும் அதிகாரி அல்லது செயலரைக் குறிக்கும் எனத் தெரிகிறது.[27]

**காவல்காரர்**[28] என்பவர் ஊர்க்காவலர்; இந்நாளைய காவல் துறையினர் (Police)க்குரிய அதிகாரம் பெற்றவர். கொள்ளைக் கூட்டத்தினரிடம் இருந்து மக்களைக் காப்பாற்றுவது இவரது முதற்கடமை. திருடுபோய் விட்டால் திருடுபோன பொருளைத் தேடிக் கொணர்ந்து கொடுப்பது இவருடைய பொறுப்பு. வலிமை பொருந்திய அரசர்கள் காலத்தில் இவர்கள் மிக்க எச்சரிக்கையுடனும் தம் கடமைகளைச் செய்தனர்; அரசருக்குச் சேர வேண்டிய (வரிப்) பொருளை வசூலித்தனர். இதனால் இவர்களுக்குச் சில உரிமைகள் உண்டு. வலிமையற்ற அரசர்களின் ஆட்சியில் இவர்கள் சுயநலம் உடையராய்ப் பொருளீட்டினர். காவல்காரர்களைப் பற்றிய குறிப்பொன்று,[28அ]

---

19. 12-322
20. P. 166, Administration & Society in the Carnatic - K. Rajayyan. Harkara was in charge of attendance Register of each court - P. 356, Maratha Rule in the Carnatic - C. K. Srinivasan.
21. P. 350, Maratha Rule in the Carnatic; P. 79, The Maratha Rajahs of Tanjore - K. R. Subramanian.
22. 11-39
23 "The Dimati" was the Officer who signed the Court's decree ordering the payment of the amount due to the successful litigant"-P. 356, Maratha Rule in the Carnatic - C. K. S.
24. 11-25; "Imarathi is the Maramath account" - Page 6 of Deposition of D. W. 19, T. R. Ananthasami Rao, O. S. No, 26 of 1912
25. 1-1
26. 1-1
27. "The original of this and other three letters written by Sivaji to Venkajee are in possession of the hereditary **Chitnis** or the Secretary of H. H. Rajah of Satara" - P. 127, History the Marathas by Grant Duff.
28. ச, ம, மோ. த, 5-11
28அ. ச, ம, மோ. த, 5-11

"காவல்காரர்கள் ரொம்பநாளாக மிராசு; அவர்களை எடுப்பதற்கு ரயத்துக்களாலும் சர்க்காராலும் முடியாது. அவரவர்களுடைய பந்து ஜனங்கள் சர்க்காருக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 20, 30 கிராமங்கள் ஒரு பங்கு உள்ளவர்கள்"

என்று கூறுவதால் அவர்தம் செல்வாக்கும், செல்வச் செழிப்பும் அறியப்பெறும். இத்தகைய காவல்முறை 1814இல் ஒழிக்கப்பெற்றது.[29]

**வக்கீல்** என்பது ஒரு அலுவல்; எல்லா அரசர் காலங்களிலும் இருந்தது.

இவை போன்று வேறு பல அலுவல்கள் பெரியனவும் சிறியனவும் இருந்தனவாதல் வேண்டும்.

**கமாவிஸி :** "1798: அணக்குடி வட்டம் கமாவிஸ் சாமிநாதபிள்ளை[30] கட்டளை 2 ஊர்கள் 46"

"1798 திரிலோகி வட்டம் கமாவிஸி காசி செடயப்ப பண்டாரம் சுபா கும்பகோணம்"[31]

"1798 ஐவேலி வட்டம் கமாவிஸி சுப்ரமணிய ஒடையார்"[32]

"1798 கீழக்காட்டூர் வட்டம் கமாவிஸி[33] செடயப்பிள்ளை மொத்த ஊர்கள் 3"

"1798: திருப்பனந்தாள் கமாவிஸி வைத்திலிங்கம் பிள்ளை"[34] என்ற எழுத்துக்களால் கமாவிஸி என்பது பல ஊர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரியைக் குறிக்கும் என்று ஊகித்தறியலாம்.

மேலே விவரிக்கப்பட்ட அலுவலர்களில் திகழ்ந்த உயர் அலுவலர்களைப் பற்றிய செய்திகளுட் சில தெரியவருகின்றன.

**டபீர் பண்டிதர் :** இவர் பிரதாபசிங்கர் காலத்தில் திகழ்ந்த சிறந்த அமைச்சர். இவர் முதலில் "அமானி" முறையைக் கையாண்டார். கி. பி. 1771இல் தஞ்சை நவாபின் ஆட்சியில் அடங்கியபொழுதும் இவ் அமானி முறை பெரிதும் கையாளப்பெற்றது. "அமானி" முறையின்படி அறுவடைக் காலத்தில் அரசு அலுவலர்கள் நேரில் வந்து கண்டுமுதல் செய்து அரசுக்குரிய பங்கை வசூல் செய்துகொள்வர். டபீர் பண்டிதர் ஒரு புதுமுறையை உண்டாக்கினார். 10 ஆண்டுகளின் வருமானத்தை அறிந்து அதன் சராசரியை நிலத்தைப் பயிரிடுபவர் தரவேண்டும் என்று ஆணையிட்டார். இது டபீர்முறி[35]

---

29. P. 358-59, Maratha Rule in the Carnatic - Srinivasan, C. K.
30. 33-13 31. 33-14 32. 33-15 33. 33-20
34. 38-22 35. Pages 651-652, Tanjcre Dt. Manual

எனப்பெற்றது. கி. பி. 1776இல் மீண்டும் பட்டம் எய்திய துளஜாஜீ இந்த முறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

டபீர் என்ற சொற்குச் செயலர் (Secretary) என்று பொருள் தருவர்.[36] இவருக்கு இயற்பெயர் நாரோ பண்டிதர் (Naroo or Dabir Pandit) என்பதாகும்[37] கி. பி. 1777க்குரிய ஆவணக்குறிப்பு ஒன்று,[38]

"டபீர் பண்டிதரின் கிராமங்கள்"

என்று கூறுவதால் இவர்க்குச் சொந்தமாக நிறைய நிலபுலங்கள் இருந்தன வாதல் வேண்டும். கி. பி. 1828க்குரிய குறிப்பு,[39]

"ராஜஸ்ரீ டபீர்பந்தின் பேரன் நாரோ விஷ்வநாத்"

என்றும், இவர் "தெய்வகதி அடைந்தார்" என்றும் கூறுகிறது. டபீர் பண்டிதர் பேரில் கும்பகோணத்தில் ஒரு அக்கிரகாரம் உள்ளது.[40]

**அப்பா என்பவர்களைப் பற்றிய குறிப்பு:** மராட்டியர் அரசியலில் தத்தாஜி அப்பா, மானாஜி அப்பா, ரகுநாத அப்பா, சோனஜி அப்பா, முத்தோஜி அப்பா, மல்ஹர்ஜிஅப்பா என்று பலர் இருந்தனர்.

தஞ்சையில் வந்து குடியேறிய மராட்டியர் இரு பிரிவினர் ஆக இருந்தனர். ஒரு பிரிவினர் "சன்னௌள குல்யா"* எனப்பட்டனர். அரசகுடும்பத்தவரும் அவரது உறவின் முறையாரும் இப்பிரிவைச் சேர்ந்தவர். இராணுவத்தில் சேர்ந்த மராட்டியரும் அவர்களைச் சேர்ந்தவரும் பிறிதொரு பிரிவினர். மேற்கண்ட இரு பிரிவினரும் தனித்த நிலைமையிலேயே பிரிந்து வாழ்ந்தனர். இவ்விரு பிரிவினருள் ஒரு பிரிவினர் பிறிதொரு பிரிவினரோடு கொள்வினை கொடுப்பனை மறுத்தனர். இங்ஙனம் கலப்பு மணம் கடுமையாகத் தடுக்கப் பட்டமையின் மேற்கண்ட இருவகையாரும் ஒரோவழி இந்த நாட்டுப் பெண்களைத் தமக்குத் துணைவியராக்கிக் கொண்ட பொழுது பெற்ற மக்கள் மராட்டிய குடும்பத்தைச் சேர்ந்தவராகக் கருதப்பெறவில்லை. இத்தகைய கலப்பினால் பிறந்தவர்கள் மராத்திய மொழியைப் பேசினர்; **அப்பா** அல்லது **அண்ணா** என்ற பட்டம் உடையவராய்த் தனி இனத்தவராகவே வாழ்ந்தனர். இவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவேயாகும்.[41] பெரும்பாலும் இவ்வினத்தவர் அரசில் செல்வாக்கு உடையவராகவும் பெருந்தரத்ததிகாரிகளாகவும் திகழ்ந்திருந்தனர் என்று தெரிகிறது.

---

36. F. N. Page 78, The Maratha Rajah's of Tanjore, Subramanian, K. R.
37. டக்கம் 90 டி டி
38. 2-114 39. ச. ம. மோ. த. 21-27 40. 1-28

* "Cannaugulya" 41. பக்கம் 178, தஞ்சை ஜில்லா மானுவல்

**மானாஜி அப்பா :** இவர் பிரதாபசிங்கரின் தானைத் தலைவர்; அஞ்சாமையுடையவர் ; தேவிக்கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்ற வந்த பொழுது நிகழ்ந்த போரில் மிகச்சிறந்த முறையில் போரிட்டார்; 26-4-1752இல் பிரஞ்சுக்காரரிடமிருந்து கோவிலடியைக் கைப்பற்றினார். பிரதாபசிங்கரின் அமைச்சர் சக்கோஜிக்கு இவர் பேரில் பொறாமையுண்டு. ஆகவே 1753இல் இவருக்குப் பதில் கோவிந்தராவ் தானைத்தலைவர் ஆனார். லாரென்ஸ் என்ற ஆங்கில தளபதியின் இடையீட்டால் மானாஜி மீண்டும் தானைத்தலைவராகிப் பகைஞர்களை வென்றார். எனினும் சக்கோஜியின் கெடுமதியால் மீண்டும் மானாஜி இப்பதவியினின்று நீக்கப்பட்டார். 1754இல் நடந்த போரில் கோவிந்தராவ் தோற்றமையின் மானாஜி மீண்டும் தானைத்தலைவரானார். கி. பி. 1740இல் தொண்டைமானின் உதவியோடு அறந்தாங்கிக் கோட்டையை இராமநாதபுரத்தவரிடம் இருந்து கைப்பற்றியவர் இவரே.[42] இங்ஙனம் இவர் வெற்றிச் சிறப்புடையவராகத் திகழ்ந்தமையால் ஒரு சிற்றூருக்கும் தோட்டத்துக்கும்[43] இவர் பெயர் இடப்பட்டன எனத் தெரிகிறது.

**தத்தாஜி அப்பா :** சரபோஜி அமர்சிங்கு பிடியினின்று விடுபட்டுச் சென்னையிலிருந்தபொழுது சரபோஜியிடம் உயர் அலுவலராகத் தத்தாஜி அப்பா காணப்பெறுகிறார்.

> "ராஸ்ரீ தத்தாஜி அப்பா சாயேப் அவர்களுக்கு **ஸேவகன் பாபண்ணா** அநேக ஆசீர்வாதம். இங்கு ஸமஸ்த்தானத்தின் விஷயம் ராஸ்ரீ சிவராயர் மாஜி சர்கேல் பாபாவுக்குத் தன்னுடைய கார்பாரி என்று உத்தரவிட்டு 200 வராகன் சம்பளம் போட்டு அவருடைய பிள்ளைக்கு ரிகார்டு ஆபீசில் நியமித்தாயிற்று......"

என்று பாபண்ணா என்பவர் (தஞ்சையிலிருந்து) கடிதம்[44] எழுதியிருப்பதால் தத்தாஜி அப்பா சென்னையில் இருந்தார் என்றும், அவ்வப்பொழுது தஞ்சை நிலவரத்தை அவருக்கு எழுதி வந்தனர் என்றும் தெரிகிறது. கோபால் வெங்காஜி என்பவரும் மேற்கண்ட தத்தாஜி அப்பாவுக்கு எழுதிய கடிதம் இருக்கிறது.[45]

தத்தாஜி அப்பா அவர்களுக்கு ராகோஜி மஹாடிக் என்பவரும் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.[46]

29—10—1795க்குரியது இராமச்சந்திர சிவாஜி என்பவர் தத்தாஜிக்கு எழுதிய கடிதம் ஆகும்.[47]

---

42. பக்கங்கள் 258, 264, 266, 278, 281, 285; Maratha Rule in the Carnatic – Srinivasan, C. K.
43. 6-831
44. 3-108; 5-447
45. 5-461
46. 7-616; 3-33, 34
47. 3-19, 20

மேற்கண்ட கடிதங்களில் உள்ள குறிப்புக்களால் தஞ்சையில் அமர்சிங்கு சிவராயர் ஆகியோருடைய நடத்தைகளைப் பற்றியும், வெள்ளைக்கார அதிகாரிகளின் கருத்துக்களைப்பற்றியும் தெரிந்து அவ்வப்பொழுது சரபோஜி ராஜா அறியும்பொருட்டுத் தத்தாஜி அப்பாவுக்கு எழுதிவந்தனர் என்று கொள்ளக் கிடக்கிறது.

இரண்டாம் சரபோஜி பட்டம் பெற்ற பின்னர் நன்றியறிவுடையவராய்த் தத்தாஜி அப்பாவுக்கு 1805இல் கும்பகோணத்தில் 50 வேலி நிலத்தைச் சுரோத்திரியம் செய்து கொடுத்து அதற்குச் சரபோஜிராஜபுரம் என்று பெயரிட்டார்.[48]

கி. பி. 1834க்குரிய குறிப்பு[49] "தத்தாஜி அப்பாவின் மகன், மகள் ஆகியோருடைய கலியாணச் செலவு விபரம்" என்று காணப்படுவதால் அவ்விருவரின் திருமணச் செலவுகளைச் சர்க்காரே ஏற்றது என்றும், சரபோஜி காலத்துக்குப் பிறகு தத்தாஜி அப்பா உயிர்வாழ்ந்திருந்தார் என்றும் கொள்ளலாம்.

தஞ்சையில் ஒரு தெருவுக்குத் "தத்தாஜி அப்பா சந்து" என்று பெயரிடப்பெற்றுள்ளது.

**முத்தோஜி அப்பா:** 4—11—1846க்குரிய ஆவணம்[50] இரண்டாம் சிவாஜிக்குத் திருவீழிமிழலையில் இருந்த தாசி சின்னிக்குட்டி என்பாள் எழுதிய கடிதம் ஆகும். இதில் முத்தோஜி அப்பா "மாஜி ஜெனரல்" என்று கூறப் பெறுகிறார். இதனால் இவர் "சேனாதிபதி" என்ற பட்டப்பெயருடையராய் இருந்தார் என்றறியலாம்.

துளஜா காலத்திலேயே காவல் உரிமையை வெள்ளையர் மேற்கொண்டனர்; ஆகலின் போர்ப்படை இல்லையென்றே சொல்லலாம்; எனினும் பெயரளவில் "சிப்பாய்கள்" இருந்தனர். அவர்கட்குத் தலைமைப் பதவி வகித்தவர் உண்டு. அத்தகைய தலைமைப்பதவி முத்தோஜி அப்பா வகித்திந்தனர் ஆதல் வேண்டும். இவ்வாவணத்தால் இவருக்கு இரு மனைவியர்களாவது இருந்திருத்தல் வேண்டும் என்றும், முதல் மனைவியின் மகன் ராமலிங்கண்ணா என்றும், இரண்டாவது மனைவியின் மகன் கோவிந்தசாமியண்ணா என்றும் தெரிகிறது. இவ்விருவருக்கும் வழக்கு நடந்துள்ளது. கோவிந்தசாமியண்ணா தாசி அன்னம் என்பவளுடன் தொடர்புடையவராய் இருந்தார். ராமலிங்கண்ணாவுக்குச் சில பிள்ளைகள் இருந்தனர். "தயா விஷயமாய்" மனதிரங்கிக் கோவிந்தசாமி அண்ணாவுக்கு ஆவிக்கரைக் கிராமம் பத்துவேலி நிலத்தைக் கொடுத்தனர். அந்நிலத்தையும் தன் நிலமாகிய சாலியமங்கலம் நாலுவேலி நிலத்தையும் கோவிந்தசாமி அண்ணா அடைமானம்

48. 2-221 49. 5-302 50. 6-408 முதல் 417 முடிய

வைத்துவிட்டார்; மேலும் இக்கடிதம் எழுதிய தாசி சின்னிக்குட்டிக்கு மேற்படி கோவிந்தசாமி 250 ரூ. கடன்பட்டவரானார். அத்தொகையைக் கொடுக்க வேண்டி எழுதியது இக்கடிதம் ஆகும்.

இக் கடிதத்தால் அந்நாளில் மேட்டுக்குடி மக்களுடைய போக்கும், சில பெண்டிருடைய வயிறு வளர்க்கும் நிலையும், தாசித்தொழில் பரவலாக இருந்தமையும் தெரியவரும்.

**மாலார்ஜி அப்பா:** மேலே குறிப்பிடப்பெற்ற தாசி சின்னிக்குட்டியின்[51] கடிதத்தில் மாலார்ஜி அப்பா ஈரிடங்களில் குறிக்கப்பெறுகிறார். அவ்வீரிடங்களிலும் அவரைப்பற்றிய சிறப்புச் செய்தி ஒன்றும் தெரியவில்லை. எனினும் அவருக்கு **அடிமை அய்யாசாமி** என்றொருவர் இருந்தார் என்றும், அவ்வடிமைக்கு முத்தோஜி அப்பாவின் இரண்டாவது மனைவியின் மகன் மேலே குறிப்பிடப்பெற்ற கோவிந்தசாமி அண்ணா தனக்குரிய சாலியமங்கலம் நான்கு வேலி நிலத்தையும் விற்றார் என்றும்,[52] அவ்வடிமை "சாயே கடை" (டீக்கடை) வைத்திருந்தனன் என்றும் அறியப்பெறும்.

அந்நாளில் "கொத்தடிமைகள்" உண்டு. மிராஸ்தார்கள் ஒருவர் மற்றொருவர்க்கு அடிமைகளை விற்பதுண்டு. அவ் அடிமைகள் வளம் பொருந்தியவர்கள் ஆதல் இல்லை. ஆனால் மாலார்ஜி அப்பாவின் **அடிமை அய்யாசாமி** நிலம் வாங்கும் அளவு செல்வவளம் பெற்றிருந்தனன் என்பதும், வாங்குவதற்குரிய உரிமை உடையனாய் இருந்தமையோடு, "சாயே கடை" நடத்தினான் என்பதும் வியப்பும் இன்பமும் தரும் புதிய செய்திகளாம்.

"1214 (1214 + 599 = 1813): மல்ஹாஜி அப்பா நாகூர்க்குப் போகிறார்கள். அவர்களுடன் கூடப்போகிறவர்கள் ஜாப்தா"[53] என்ற குறிப்பும், இவர் மாஜி ஜெனரல் என்று குறிப்பிடப்பெற்றமையும், இவர் பெருந்தரத்து அலுவலர் என்றமைக்குப் போதிய சான்றுகளாகும்.

**பெரிய அண்ணா; சின்ன அண்ணா:** இவ்விருவரும் இரண்டாம் சிவாஜி காலத்திலும் அவர்க்குப் பின்னரும் பெரிய அலுவல்களில் இருந்தவர்கள் ஆவர்.

> "பெரிய அண்ணா என்கிற முத்தோஜி கோவிந்தராவ், சின்ன அண்ணா என்பவரான ரா. வெங்கட்ராவ் கோவிந்தராவ்"[54]

என்ற எழுத்துச் சான்றுகளால் இவ்விருவருடைய இயற்பெயர் தெரியவரும்.

---

51. கடிதத்தின் தொடக்கத்தில் "தாசி சின்னிகுட்டி" என்றும், இறுதியில் "இந்தக்கீறல் செல்லக்குட்டி" என்றும் உள்ளன.

52. 6-411 53. 5-216. 54. 2-280

**வராஹப்பையா ராமசாமி அய்யா :** சேனாதுரந்தரர்[55] என்றும் "சத்திரம் வகையறாவைச் சேர்ந்த திம்மதிகாரர்களின் வேலைபார்க்கும் சேனாதுரந்தரர்"[56] என்றும் இவர் குறிப்பிடப்பெறுகிறார். சேனாதுரந்தரர் என்பதற்குப் பதில் "சேனா முகவர்ய"[57] என்று குறிக்கப்பெறுதலும் உண்டு. மேலும் "மாஹல் சரஸ்வதி பாண்டாரத்தின் திம்மதிதார் சேனாதுரந்தரர்"[58] என்றும் இவர் கூறப்பட்டுள்ளார். "சங்கீத வித்யை வகையறா கண்காணிப்பும் மாஹல் சரஸ்வதி பாண்டாரம் கண்காணிப்பும்"[59] இவருடையனவே.

இவர் தெலுங்கு மொழியில் கையெழுத்து இட்டமையால் இவர் தெலுங்கு மொழி அறிந்தவர் என்றும், இவர் தெலுங்க பிராமணர் என்றும் தெரியவரும். இவர் வழியினர் இவ்வூரில் உள்ளனர் என்பதும், ஒரு தெருவுக்கு இவர் பெயர் வைக்கப்பெற்றுள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும்.

இவர் பல்வேறு அலுவல்கள் வகித்தவர் என்பது தெளிவு. இவர் மிகுந்த செல்வாக்குள்ளவர் ஆகவும் காணப்பெறுகிறார். இவர்க்குத் திங்களொன்றுக்கு ரூ. 95 ஊதியம்"[60] என்று தெரிகிறது.

இவர் தந்தையின் பெயர் ராமசாமி ஐயா என்பதும், அவரும் இசையில் வல்லுநர் என்பதும், இசை என்ற தலைப்பில் எழுதப்பெற்றுள்ளன.

இவர் சில வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளமை சில ஆவணங்களால்[61] தெரியவரும்.

இவருடைய மகன் ராமசாமி என்ற பெயருடையவர்.[62]

இவருடைய தாயார் 1836இல் இறந்துபட்டார் என்றும்[63] இவர் மகள் வயிற்றுப் பெயர்த்தி திருமணம் 1854இல் நிகழ்ந்தது[64] என்றும் தெரிகின்றன.

இவர் இசையில் வல்லுநர் ஆக இருந்தமையின், "இந்துஸ்தான் கர்நாடகம் ஆங்கிலேயப் பாட்டும் நான்கு வாத்தியங்களுக்குக் குறையாமல் கற்றுக்கொண்டு தயாராக இருக்கவேண்டும்" என்று இவர் பணிக்கப்பட்டிருந்தார். ஆனால் இவர் குறிப்பிட்டபடி தேர்ச்சியடையவில்லை ; அதனால் 1846இல் இவருக்கு ரூ. 120 அபராதம் விதிக்கப்பட்டது என்று ஒரு ஆவணம் கூறுகிறது.[65]

இவர் வைதிக பிராமணர் ஆகையால் இவர் வேத முறைப்படி, "1830 வைசாக சுத்த நவமி[66] திங்கட்கிழமையிலிருந்து ஆபஸ்தம்ப[67] ஸோம பூர்வக யக்ஞம்[68]" செய்தார்[69] என்று தெரிகிறது.

---

55. 1-814 56. 12-96 முதல் 102 முடிய 57. 9-95; 10-81
58. 12-154 59. 12-1 60. 2-164 61. 2-162; 10-68, 65, 66
62. ச. ம. மோ. த. 5-20 63. 1-220 64. ச. ம. மோ. த. 1-28 65. 4-428.
66. வைகாசி சுத்த துவாதசி வியாழன்" என்று ச. ம. மோ. த. 12-88இல் உள்ளது
67. ஆபஸ்தம்பம் – தைத்ரேய சாகையில் ஒரு பிரிவு; தைத்திரேயம் – எசுர்வேத சாகைகளுள் ஒன்று 68. யக்ஞம் — யாகம்; வேள்வி 69. 12-849; ச. ம. மோ. த. 11-86

நாடோறும் செய்யப்பெறுவதாகிய வைதிகச் சடங்குகளில் ஒன்று "பிரமயக்ஞம்" என்பது. அதாவது வேதம் ஓதுவது. இதனை, "1836 துர்முக மொஹரம் தேதி 4 சகம் 1758, வைசாக சுத்த ஷஷ்டி வெள்ளி"[70] தொடங்கி நடத்தியதாகத் தெரிகிறது.

**சோமநாத ஸதாசிவ கேசவ் தீக்ஷித பண்டிதர்:** இவர் கி. பி. 1828இல் சரபோஜி II காலத்திலேயே "மந்திரிவர்ய சதாசிவ கேசவ தீக்ஷித் பண்டித்" என்று குறிப்பிடப் பெற்றுள்ளார்[71]. கி. பி. 1832இல் திருவையாற்றில் இவருக்கிருந்த வீட்டைச் சர்க்காரில் விலைக்கு வாங்கினர்[72]. இவர் கட்டடத் துறையில் அமைச்சராக இருந்திருத்தல் கூடும் என்பது,

"கட்டடம் இலாகாவில் ராஜேஸ்ரீ சதாசிவ கேசவ் பண்டிதர் மந்திரியாக இருப்பவருக்கு இனிமேல் மஷருல ஹஜரத் ராஜஸ்ரீ கதம்தார் ஷாயி மர்கே மந்த்ரோத்ஸாஹ நீதியுக்தாதி புத்திசாகர தைர்ய தராதர மந்த்ரிவர்ய ராஜஸ்ரீ சதாசிவ கேசவ பண்டிதர் என்று நடத்திவரவேண்டியது"

என்ற 1832க்குரிய ஆவணக்குறிப்பால்[73] தெரிகிறது. இங்ஙனம் இவர் பல அடைமொழிகளுடன் வழங்கப்பெற்றார் என்பது 1836க்குரிய பிறிதோர் ஆவணக்குறிப்பாலும்[74] அறியப்பெறும்.

கி.பி. 1836இல் "(சகம் 1756 துர்முகி வைசாக வத்ய சதுர்த்தசி சனிக் கிழமையிலிருந்து) ஆதானபூர்வக அக்னிஷ்டோமம்"[74அ] என்ற யாகத்தைச் செய்துள்ளார்[75]. இந்த யாகத்தைச் செய்வதற்குரிய செலவுகள் ஸர்க்காரிலேயே ஏற்றனர் என்பது செலவுக்கணக்கினால் தெரியவருகிறது[76].

"1834 ஸங்கீத வித்யாதிக பிரிவு லக்ஷ்மண கோஸ்வாமி–மேளவாத்தியங் களுடன் பகல் 2 மணிக்கு மந்திரிவர்ய சதாசிவ பண்டிதருடைய வீட்டில் தயாராக இருக்க வேண்டியது"

என்ற குறிப்பு[77] இவருக்கிருந்த செல்வாக்கைத் தெரிவிப்பதாக உள்ளது.

கி. பி. 1835இல் இவருக்கு இரண்டாவது கல்யாணமும் மூன்றாவது கல்யாணமும் நடைபெற்றனவாதல் வேண்டும்[78].

---

70. ச. ம. மோ. த. 11-28, 84 71. ச. ம. மோ. த. 10-2
72. ச. ம. மோ. த. 8-44 73. ச. ம. மோ. த. 8-41 74. 12-881
74அ. அக்னிஷ்டோமம் என்பது 18 வகை யாகங்களில் ஒன்று. (18 வகை யாகங்கள் பிங்கலநிகண்டு ஐயர்வகை நூற்பா 131 இல் காணலாம்). அக்னிஷ்டோமம் தலையாய யாகம். "அக்னிஷ்டோம ப்ருஷ்டஸாமா" என்ற ஸாமவேத மந்திரத்தினால் முடிவடைவதால் இந்த யாகத்திற்கு அக்னிஷ்டோமம் என்று பெயர். இந்த யாகம் 5 நாட்கள் நடத்தப்பெறும்.
75. 12-881 76. 12-881 முதல் 848 77. 2-220 78. ச. ம. மோ. த. 25-15

1828க்குரிய ஆவணம் இவரைச் "சதாசிவ தீக்ஷித்பண்டித்" என்று குறித்த போதிலும் பின்னர் இவர் பெயரில் "தீக்ஷித்" என்பது விடுபட்டிருந்தது. ஆகவே 1836இல் "ராஜெஸ்ரீ சாதாசிவ கேசவபண்டிதர் அவர்களுக்கு "தீக்ஷிதர் பண்டிதர்" என்று எழுதவும்" என்று ஓராணை[79] பீறப்பிக்கப்பெற்றது.

இவர் குப்பா ஜெட்டி என்றவரிடம் இருந்து 1836இல் சாவடி குளம் தோட்டம் ஆகியவற்றை விலைக்கு வாங்கினார். அவற்றுக்கு "ரமணீய வனம்" என்று பெயரிட்டார்.[80] இதேயாண்டில் வைரப்பதக்கம் ஒன்று அரசரால் இவர்க்கு அளிக்கப்பெற்றது.[81] 1837இல் இவருக்குக் கணந்தங்குடி கிராமத்தில் சுரோத்திரியம் கொடுக்கப்பெற்றது ;[82] (செய்கால் 11 மா ; அனாதி தரிசு 3 வேலி ).

இவர் 1841இல் கோட்டையின் வெளியில் வில்வக்காடு தோட்டத்தில் சிவாலயம் கட்டிக் "கேசவ ஸ்துதேசுவர சுவாமியை எழுந்தருளச்செய்து பூசை நிவேதனத்துக்குத் திருவையாறு அரண்மனைத் தோட்டம் வருமானத்தைத் தருமாறு" வேண்டிப் பெற்றார்.[83]

இவருக்கும் சமஸ்தானத்துக்கும் ஏதோ வேறுபாட்டுணர்ச்சி வந்திருத்தல் வேண்டும். இவருக்கு அளிக்கப்பெற்ற விருதுகள், வெள்ளி ஹௌதா, ரதம், கல்லிழைத்த நகைகள், தங்க நகைகள் ஆகியவை சர்க்காருக்குத் திருப்பித் தந்துவிடவேண்டும் என்று 3—11—1841இல் ஆணை வந்தது. 24–11–1841இல் "நான் அபிமானபுத்திரன் ; ஆகையால் என்னுடைய பெருமைக்காகக் கொடுத்தவையே தவிர உங்களுடைய வேலைக்காரன் என்பதற்காகக் கொடுத்தவை அல்ல ; ஆகவே கொடுக்கமுடியாது" என்று மறுத்து எழுதினார். 27—11—1841இல் "பிள்ளை என்கிற சொந்தம் ஆனால் தகப்பனார் கொடுத்ததைத் திரும்பிப்பெற அவருக்கு அதிகாரம் உண்டு" என்று சர்க்கேல் பதில் எழுதி, 17—12—1841இல் "நீங்கள் சரியாகப்பதில் கூறவில்லை; ஆகவே எல்லாக் காகிதங்களும் ரிஸிடெண்டுக்கு அனுப்பப்பட்டன" என்றும் எழுதினார்.

மேலும் சோமநாத தீக்ஷித் பண்டித் இனாம் பெற்றது 96 வேலி 3 மா 25¼ குழி என்ற குறிப்பும் காணப்பெறுகிறது.[84]

இவர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தபோதிலும் தம்மிடம் இருந்த வெள்ளி சாரட், ரதம், யானை, தந்தப்பல்லக்கு, மேனாபல்லக்கு, ஹௌதாக்கள் ஆகியவற்றைத் திரும்பித் தந்துவிட்டனர் ஆதல்வேண்டும்.[85]

---

79. ச. ம. மோ. த. 11–45
80. ச. ம. மோ. த. 8–25
81. 2–269, 270
82. 5–288, 289
83. ச. ம. மோ. த. 18–6
84. ச. ம. மோ. த. 2–38
85. ச. ம. மோ. த. 9–25

இவர் சிறந்த கல்விமான். இவர் சரஸ்வதி மகாலிலிருந்து பலநூறு சிறந்த நூல்களை எடுத்துச் சென்று படித்திருக்கிறார்[86].

இவரைப்பற்றி 1849 வரையிலும் தெரியவருகிறது. இவர் தமக்குத் திருவையாற்றிலிருந்த தோட்டமும் நிலமும், வெண்ணாற்றங்கரைப் படித்துறை பங்களாவும் 1847 இல் விற்பனை செய்துள்ளார்[87].

இவருடைய தந்தை 1849இலும் உயிர் வாழ்ந்திருந்தார் என்றும், அவருக்கு ரூ.4 லக்ஷம் மதிப்புள்ள சொத்து இருந்தது என்றும் இவர் எழுதிய ஒரு கடிதத்தால் அறியப்பெறும்[87அ].

இவருக்குப் புதுச்சத்திரத்தில் ஒரு பங்களாவும்[88] தஞ்சை மேலவீதியில் ஒரு வீடும்[89] இருந்தனவாதல் வேண்டும்.

தெற்குவீதியில் இருந்த இவரது வீடு 1849இல் "மங்களவாச சத்மத்தின் சாலாவின் மொயின் தொகை"யினின்று ரூ.50, 000க்கு வாங்கப்பட்டது[90].

## சர்க்கேல் வேலையில் இருந்தவர்கள்

**அ. சர்க்கேல்** பாபா: அமர்சிங்கர் காலத்தில் சிவராவ் சர்வாதிகாரியாய் இருந்தபோதிலும்,'பாபா'என்பவர் சர்க்கேலாகவும் இருந்துள்ளார். அப்பொழுது தான்3 சுபாக்களை மக்லோட் "ஜப்தி" செய்தார். அதனால் ஸர்க்கேல் பாபாவை "வீட்டிலிரும்" என்று சிவராவ் கூற, அமர்சிங்கர் "சரி ஆகட்டும்" என்று கூறினராம். சிவராயர் கை மேலோங்கியே இருந்தமையின் "பாபாவும் காலத்தை அநுசரித்துச் சிவராயர் மனதுப்படி நடந்தார்". பாபா கூறியது போல் எதுவும் நடக்கவில்லை. ஆகவே "என்னையும் தெருவுக்கு இழுத்துக் கெடுத்து விட்டார்களே என்று விசனப்பட்டார்"[91].

**ஆ. சர்க்கேல் ராமோஜி ஸர்ஜேராவ் காட்கே:** இவர் இரண்டாம் சரபோஜி காலத்தில் இருந்தவர்.

இவருடைய தகப்பனார் தளகேசுவரசுவாமியை எழுந்தருள்வித்து லக்ஷ்மி ராஜபுரம் அக்கிரகாரமும் அன்னசத்திரமும் தன் ஊதியத்தில் நடத்தி வந்தார். அவர் இறந்துபட்டதால் அவர் ஏற்படுத்திய தருமங்களை ஸர்க்கார் நடத்த வேண்டும் என்று கி. பி. 1813 இல் கேட்டுக்கொண்டார். ஆகவே இவர் கி. பி. 1813இல் சர்க்கேல் ஆகியிருக்கக்கூடும் என்று ஊகிக்கலாம்.[91அ]

---

86. ச. ம. மோ. த. 2-39
87. 4-387, 388
87அ. 5-264, 265.
88. 5-283
89. 6-140
90. 1-142
91. 7-591 முதல் 595; 3-2 முதல் 5, 10, 16
91அ. 4-479, 480

16—8—1826இல் ஸர்தாமஸ் மன்ரோ தஞ்சைக்கு வந்த பொழுது அவரை வரவேற்ற சர்க்கார் அலுவலர்களில் இவரும் ஒருவர்[93].

12—4—1831இல் இவருக்குச் சிவகங்கைக் குளம் பற்றிச்சேனைத் தலைவர் பாபுராவ் இங்ளே ஒரு கடிதம் வரைந்துள்ளார்[93].

இரண்டாம் சரபோஜி 1820—22இல் காசியாத்திரை சென்றபோது யாத்திரையில் உடன் இருந்த ஸர்க்கேல்[94] பாபாஜிராமாஜி பண்டிதர் ஆவர்.

**இ. சர்க்கேல் பாபாஜி * ராமாஜி பண்டிதர்:** கி. பி. 1834இலும் இவர் சர்க்கேலாகக் காணப்பெறுகிறார்[95]. இவருக்குப் "பந்த்சுவாமி" என்று பெயருண்டு எனத் தோன்றுகிறது[96]. இவருக்கு அனுப்பிய கடிதங்களில்

"அனுப்பினது நவம்பர் தேதி 5, இரவு மணி 2"[97]

"அனுப்பினது தேதி 30, ராத்திரி மணி 2"[98]

"இரவு மணி 2 சகே 1744 சித்ரபானு நாம ஸம்வத்ஸர, ஸப்பர் 17ந்தேதி"[99]

"நிஜ ஆஸ்விஜ சுத்த சஷ்டி சோமவாரம் **அருணோதயம்** வந்த ஒரு பட்ச காகிதம்; சப்தமி மங்களவாரம் **அருணோதயம்** வந்த பத்திரம்-1... **அனுப்பியது** நிஜ ஆஸ்விஜ சுத்த விஜய தசமி சுக்ரவாரம் **அருணோதயம்**"[100]

என்ற குறிப்புக்கள் கி. பி. 1812க்குரியனவாகக் காணப் படுதலின் இவர் இரண்டாம் சரபோஜி காலத்தில் சர்க்கேல் என்பது உறுதி எய்தும். **மேலும் இரவெல்லாம் சர்க்காரில் அலுவல் நடந்தமையும் இவற்றால் தெரியவரும்.** இதனை,

"The greatest part of the State Business is transacted during the night"

என்ற ஹிக்கி (Hicky) அவர்களின் கூற்று வலியுறுத்தும்.[101]

இவர் சர்க்கேலாக இருந்த காலத்தில்தான், புதுக்கோட்டை ராஜதானி வலங்கை இடங்கை எனப்பட்ட இரு கட்சிக்காரர்களுள் ஏற்பட்ட பூசல் தீர்த்து வைக்கப்பட்டது.[102]

9—5—1844இல் சென்னை ஜார்ஜ்கோட்டையினின்று இரண்டாம் சிவாஜிக்கு எழுதிய கடிதத்தினுல் சர்க்கேல் பாபாஜி ராமாஜி பண்டிதர் கி. பி. 1844இல் இறந்துபோயிருத்தல்கூடும் என்று அறியப்பெறும். இவருடைய

---

* பாவாஜி என்றும் பாடம் உண்டு

92. 8-182 முதல் 192 முடிய; "ஆங்கிலேய அதிகாரிகள்" என்ற கட்டுரையில், "ஸர்தாமஸ் மன்ரோ" அதன் அடிக்குறிப்பு 19க்குரியதும் காண்க.

93. 5-16, 21 94. 1-220 95. 1-289 96. 10-60, 61, 62

97. 10-61 98. 10-62 99. 10-80 100. 10-81

101. The Maratha Principality P. 40 102. 8-19, 23, 26

இறப்பு சர்க்காருக்கு இழப்பு என்றும், அவர் நீதிமான் ; புத்திமான் ; விசுவாசமுள்ள சர்க்கேல் ; நன்றாக உழைத்தார்–என்றும் அக்கடிதத்தில்[103] இவருக்குப் புகழாரம் சூட்டப்பெற்றுள்ளது.

இவர் காலத்தில் சேனாதுரந்தரர் கங்காதர் ரக்மாஜி, சேனாதுரந்தரர் வராஹப்பையா ராமசாமி அய்யா, சேனாமுகவர்ய நீலகண்டராவ் ஆனந்தராவ் ஜாதவ்[104] முதலியவர்கள் இருந்தமை பல ஆவணங்களால்[105] அறியப்பெறும்.

**சேனாமுகவர்ய நீலகண்ட ராவ் ஆனந்த ராவ் ஜாதவ் :** இவர் சேனைத்தலைவர்களுள் ஒருவர். கி. பி. 1838இல் இவர்க்கு மூன்றாவது கல்யாணத்தைப்பற்றி ஒரு ஆவணம் கூறுகிறது.[106] சத்திரதருமம் எவ்வாறு நடத்தப்பெறவேண்டும் என்பதுபற்றி விரிவான நடைமுறைக்குறிப்புக்கள் இவர் தந்திருக்கின்றமை ஓராவணத்தால் அறியப்பெறும்.[107]

"அவசியமானசெலவு செய்யவேண்டும்; மராமத்து முதலியவற்றுக்காகவும் வருமானம் குறைந்தால் ஈடுகட்டுவதற்காகவும் கால்பாகம் தொகையை மீதி வைத்துக்கொள்ள வேண்டும் ; கால்பங்கு மீதி வைத்துக்கொள்ள முடியவில்லையென்றால் சிறிதாவது சேமிக்கவேண்டும் ; கதி இல்லாதவர், பரதேசி, பொருள் கெட்ட உடல் வலிமையற்றவர், வழிப்போக்கர், குருடர், முடவர், குழந்தை, கிழவர் இத்தகையோர்க்குச் சத்திரத்தில் உணவு அளிக்க வேண்டும் ; வழிப்போக்கர் எவராயினும் நோய்வாய்ப்படின் சத்திரம் வைத்தியரைக்கொண்டு சிகிச்சை செய்து பத்தியமாக உணவு அளிக்கவேண்டும்; உத்யோகஸ்தர் யாராவது வரின் அவரவர் பெருமைக்குத் தக்கவண்ணம் உணவு மரியாதை செய்ய வேண்டும் ; சத்திர அலுவலர் யாரும் உணவுண்ணக்கூடாது; ஊரிலுள்ள சோம்பேறிகளுக்கு உணவு அளிக்கக்கூடாது.........."

என்பவை அவர் தந்த நடைமுறைக் குறிப்புக்களின் சுருக்கம் ஆம். இவற்றால் சத்திர தருமம் நன்கு நடைபெறக் கண்ணுங் கருத்துமாய் இவர் இருந்தார் என்பது போதரும்.

சர்க்கேல் அண்ணாஜி தியாகராஜ பண்டிதர்[108] சர்க்கேல் காளேராவ் அப்பா[109] சர்க்கேல் கோவிந்தராயர்,[110] சர்க்கேல் வீராசாமிப்பிள்ளை[111] என்பவர்களைப் பற்றிய குறிப்புக்களும் கிடைத்துள்ளன.

வீராசாமிப்பிள்ளை தவிர்த்து மற்றையோர் அரசமரபினர் அல்லது உறவின்முறையாராவர்.

வீராசாமிப்பிள்ளை முதலில் "மானேசர்" பதவியில் இருந்தார் ;[112] பின்னர் "ஆக்டிங் சர்க்கேல்" ஆனார் ;[113] 17—7—1871இல் சர்க்கேல் பதவியில் இருந்தவராகக் காணப்பெறுகிறார்.[114]

---

103. 8-123 104. 1-314 105. 1-208, 216, 275
106. ச. ம. மோ. த. 28-16 107. 8-231 முதல் 240 முடிய. 108. 4-117 ; 7-780
109. 4-125 110. 6-391 111. 8-30 112. 6-351 113. 6-286 114. 8-80

# 9

# அண்டை நாடுகளுடன் தொடர்பு

## சேதுபதிகள்

மதுரை நாயக்கருக்கு அடங்கியிருந்தது இராமநாதபுரம். அங்குக்கிழவன் சேதுபதி என்பவர் ஆட்சி செய்தபொழுது சுயேச்சையடைய விரும்பினார்; புதுக்கோட்டை தொண்டைமானுடன் மணவுறவு கொண்டார். தஞ்சை மராட்டிய அரசர் ஸாஹஜியின் உதவியால் மதுரைக்குஅடங்கி இருத்தலினின்று விடுபட்டார். அதன்பொருட்டுப் பாம்பாற்றுக்கும் பட்டுக்கோட்டைக்கும் இடைப் பட்ட நிலப்பகுதியை மராட்டிய மன்னருக்கு அளித்தார். இது தஞ்சை மராட்டிய முதன் மன்னர் வெங்காஜியின் காலத்தில் நிகழ்ந்தது[1].

அடுத்து வந்த ஸாஹஜி காலத்தில் கிழவன் சேதுபதி அறந்தாங்கிக் கோட்டையை 1709 இல் கைப்பற்றினார்[2].

ஸாஹஜியின் தம்பி முதலாம் சரபோஜி காலத்தில் இராமநாதபுரத்தில் ஆட்சிப்பொறுப்பு எய்துவதுபற்றிச் சச்சரவு ஏற்பட்டது. கிழவன்சேதுபதியின் சுவீகார மகன் விஜயரகுநாதர் 1720இல் இறந்தார்; இறப்பதற்குமுன் தன் உடன்பிறந்தவனின் மகன் தண்டைத் தேவரை அரசராக்கினார். கிழவன் சேதுபதியின் காமக்கிழத்தியின் மகன் பவானிசங்கர் தான் அரசராக விரும்பினார். தஞ்சை அரசர் உதவி புரிந்தார். ஆனால் பவானி சங்கர் தாம் கூறியவண்ணம் பாம்பாற்றுக்கு வடக்கில் உள்ள நாடுகளைத் தரவில்லை. ஆகவே சரபோஜி தண்டைத் தேவருக்கு உதவி புரிந்து, பவானி சங்கரோடு போர்புரிந்து சிறைப்படுத்தினார். பின்னர்ப் பாம்பாற்றுக்கு வடபகுதியைச்

---

1. The Maratha Rajas of Tanjore- K. Subsamanian P. 22, 23
2. The Maratha Rajas of Tanjore- K. Subramanian P. 28

சரபோஜி I பெற்றார். எஞ்சிய பகுதி 5 பகுதிகள் ஆக்கப்பட்டன. 3 பகுதிகள் தண்டைத்தேவர் பெற்றார். எஞ்சிய இரண்டு பகுதிகள் அவருக்கு உதவி புரிந்த சசிவர்ணத் தேவர் பெற்றார். அவரே சிவகங்கைச் சீமைக்கு உரியவர் ஆனார்[3]. ஆனால் இங்ஙனம் வென்ற பகுதிகள் எல்லாவற்றையும் சரபோஜி யின் தம்பி துக்கோஜி இழந்தார். ஆகவே அவர் மகன் பிரதாபசிங்சர் தம் சேனைத் தலைவர் மானோஜியை ஏவி அறந்தாங்கிக் கோட்டையை வென்று கொண்டார்.

சேதுபதிகளோடு இருந்த பகைமை துளஜாஜி II காலத்திலும் நீடித்தது. மானோஜி 1755இல் வென்றுகொண்ட அறந்தாங்கிக் கோட்டையையும் பிற பகுதிகளையும் சேதுபதி கி. பி. 1763இல் மீட்டுக் கொண்டார். தஞ்சையரசர் இராமநாதபுரத்தின் மேல் படையெடுக்க முயன்றபொழுது முகம்மது அலி தடுத்தார். பின்னர் 1771இல் துளஜா ராமநாதபுரத்தின் மேல் படையெடுத்தார். ஒவ்வொரு கோட்டையாகப் பிடித்துக்கொண்டு சென்று இராமநாதபுரக் கோட்டையை முற்றுகையிட்டார். ராமநாதபுரத்து அரசியார் சமாதானம் செய்து கொண்டார். துளஜா வென்று கொண்ட பகுதிகள் யாவும் அவர் வசமே ஆயின. மேலும் ஒரு லக்ஷம் ரூபாயும் சில அணிகலன்களும் இரண்டு பீரங்கிகளும் கொடுக்கப் பெற்றார்[4].

இதுகாறும் கூறப்பெற்றவையெல்லாம் மோடி ஆவணத் தமிழாக்கத் தினின்று அறிவதற்கில்லை. எனினும் இரண்டாம் துளஜா இராமநாதபுரத்தின் மேல் 1771இல் படையெடுத்துவென்ற செய்தி பின்வருமாறு ஒரு ஆவணத்தில் காணப்பெறுகிறது:—

"ஸ்ரீ துளசா மகாராஜா சாயேப் அவர்கள் பட்டத்திலே ராமநாதபுரத்தின் பேரில் சண்டைக்குப் போறது. என் தகப்பனார் சாமிசிறாங்கும் 33 சனமும் வீரலட்சுமி விஜயலட்சுமி என்கிற பீரங்கியை இழுத்துக்கொண்டு போய்ச் சண்டைக்குப் போனோம் மறுபடி தஞ்சை நகரம் வந்து சேர்ந்தார்கள்"

என்னும் இப்பகுதி இரண்டாம் சிவாஜிக்கு வலம்புரியிலிருக்கும் சாமி சிராங்கு மகன் ராமசாமி சாமிநாயக்கன் ஆனந்த வருஷம் ஆனி மாசம் 29ஆம் நாள் (11—7—1854இல்)[4அ] எழுதிய கடிதத்தில் கண்ட சில வரிகளாகும். இக்கடிதம் இராமநாதபுரத்தின்மேல் இரண்டாம் துளஜா படையெடுத்த காலத்துக்கு 80 ஆண்டுகட்குப் பின்னர் எழுதப்பெற்றது. ஆகவே செவிவழியாக அறிந்த செய்திகள் இக்கடிதத்தில்[5] குறிப்பிடப் பெற்றன எனலாம்.

3. Maratha Rule in the Carnatic- C. K. Srinivasan, P. 232, 235.
4. Maratha Rule in the Carnatic - P. 295-297
4அ. Page III; The Indian Ephemeris, 1800 to 2000, L. D. Swami Kannu pillai (1915).
5. 6-278, 279

கி. பி. 1777க்குரிய ஓராவணக் குறிப்பு,[6]

" அதிராம்பட்டினம் வியாபாரி கப்பலில் அரிசியை ஏற்றிக் கொழும்புக்குச் சென்று திரும்புங்கால் கொட்டைப்பாக்கு ஏற்றிவந்தான். காற்றினால் கப்பல் தத்தளித்தது. இராமநாதபுரம் தாலுகாவின் மணியகாரன் நான்கு துப்பாக்கிக் காவல்காரர்களை அனுப்பிப் படகோட்டியை அடித்துப் பொருள்களை எடுத்துச் செல்ல முயன்றான். நாம் அப்பொருள்களை விட்டு விடாமல் சம்பு மகாதேவி பட்டணத்தில் வைத்திருக்கிறோம்; இராமநாதபுரம் கோட்டைத் துப்பாக்கிக்காரர்களும் இருக்கின்றனர்; மாலுமியைப் பிடித்துக் காவலில் வைத்திருக்கிறார்கள். கும்பினி துப்பாக்கிக்காரர்களும் மருந்து குண்டுகளைக் கொண்டு பண்ணையைப் பலவந்தமாகப் பிடிக்க இராமநாதபுரத்துக்கு எழுதியுள்ளார்கள்"

என்பதாகும். இதனால் இராமநாதபுரத்துக்கும் தஞ்சைக்கும் பகைமையிருந்தது என்றும், தஞ்சை அரசர் வலிமையிழந்து இருந்தார் என்றும், இக்காலத்துக்கு அண்மையில்தான் லார்ட் பிகட் அவர்களால் துளஜா இரண்டாவது தடவை அரசு கட்டில் எய்தினார் ஆதலின் கும்பினியின் தயவை நாடியவராகவே இருந்தார் என்றும் தெரிகிறது.

## நவாபு

நவாபு முகம்மதுஅலிகான் எப்படியாவது தஞ்சையைக் கைக்கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளிலியே இருந்தார் என்றும், ஏதாவது காரணம் கூறித்தஞ்சையைத் தாக்குவதே நவாபின் எண்ணம் என்றும், துளஜா கப்பம் செலுத்தி வந்தார் என்றும், 1773இல் நவாபு வெற்றி எய்தி 17—9—1773 முதல் மூன்றாண்டுகள் தஞ்சையைத் தன்கீழ்க் கொண்டிருந்தார் என்றும், நவாபின் மூத்தமகன் உமதத் உல் உமராவுக்கு இதில் பெரும் பங்கு இருந்தது என்றும், "கும்பினியுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்" என்ற தலைப்பில்(6) விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன[7].

தஞ்சையைக் கைப்பற்றியது உமதத் உல் உமாரா[7அ] என்று வரலாற்று ஆசிரியர்[8] கூறியுள்ளபோதிலும் மோடி ஆவணத் தமிழாக்கக் குறிப்பு "மதாரமல்க" என்று வேறொரு பெயரைக் குறிப்பிடுகிறது.

" மதாரமல்க வந்து கோட்டையைப் பிடித்தான்"[9] என்பதில், மதாரமல்க என்ற பெயர் வந்துள்ளது. இப்பெயர் போன்ஸ்லே வம்ச சரித்திரத்தில்[10]

---

6. 1-147 முதல் 149முடிய 7. 1—168; 1—164; 8—142; 8—177

7அ. "நவாப்பின் மூத்த குமாரர் உமதடில் உமாராஜுக்குக் கொடுத்தது 6714 சக்" 8-177

8. P. 299, Maratha Rule in the Carnatic-Srinivasan, C. K.
P. 62-68, A History of British Diplomacy in Tanjore - K. Rajayyan

9. 6-279 10. பக்கம் 120

" தஞ்சாவூர் சமஸ்தானத்தை ஆக்ரமித்துக் கொள்வதற்காகத் தன் இரண்டாவது பிள்ளையான மதார் முலுக் என்பவருக்கு அதிகாரம் கொடுத்து யாதொரு காரணமுமின்றிப் படைகளை அனுப்பினார் "

என்று காணப்படுவதினின்று இப்போரில் பெரும்பங்கு கொண்டவர் மதார் முலுக் என்பவர் ஆவர் என்பதும், அவர் முகம்மது அலியின் இரண்டாவது மகன் என்பதும் போதரும்.

தஞ்சை ஆட்சி முகம்மது அலியிடம் மூண்றாண்டுகள் இருந்தன என்று வரலாற்றாசிரியர்கள் கூறியிருக்கப் போன்ஸ்லே வமிச சரித்திரம், "தஞ்சாவூர் ராஜ்யம் இரண்டு வருஷ காலம் நவாபின் ஆட்சியின் கீழிருந்தது" என்று கூறுகிறது.[11]

## ஹைதர் கலாபு

(மேலே கூறிய சாமிசிராங்கு மகன் ராமசாமி சாமி நாயக்கன் கடிதத்தில்) அடுத்துக்கூறியுள்ள வரலாற்றுச் செய்திகள் கவனிக்கத்தக்கனவாம்:

" பிக்கட்டு துரை வந்து ஸ்ரீமகாராஜா சாயேபு அவர்களுக்குப் பட்டம் கட்டி வைத்தார். மகாராஜாவே கோட்டை அலங்கிருதமில்லை ; மாட்டியன் துரை சென்னைப்பட்டணம் போய் வந்தார். அவர் பாரிசம் எங்கள் தகப்பனார் சாமி சிறாங்கையும் 33 சனத்தையும் மாட்டியன் துரைவசமாக ஒப்பித்தார். கோட்டையும் கட்டி முடிந்தது. அயிதர் வந்தவன் பெரிய அணைக்கரையை வெட்டிக்கவிழ்த்தான் ; அரசர் அணைக்கரையை அடைத்துப் போட்டு வரவேண்டும் என்று உத்தரவு பண்ணினார் ........... அக்கரையில் மண்ணை எடுக்கப்போனதற்குக் கிராமத்தாள் தகராறு பண்ணினான். சாயபு டிப்பு சாயபு அவர்களிடத்திற்போய் ........... வாங்கிக்கொண்டு வந்து கிராமத்தாருக்குக் கொடுத்து அடைத்துப்போட்டுத் தஞ்சை நகரம் வந்து சேர்ந்தோம்......... "[12]

இதிலிருந்து ராமநாதபுர விவகாரத்துக்குப் பிறகு முகம்மது அலி படையெடுப்பு, துளஜா தோற்று அரசிழந்தமை, லார்டு பிகட் வந்து பட்டம் கட்டியமை அரண்மனையைப் பழுதுபார்த்தமை, ஹைதர் படையெடுப்பு, அணைக்கரையை வெட்டி விடுதல், பழுதுபார்த்தற்குத் தடை செய்தமை, பின்னர் அனுமதி பெற்று அணைக்கரையைச் செப்பனிட்டமை ஆகிய செய்திகள் நிரலே கூறப்பெற்றுள்ளன.

ஹைதரின் படை அணைகள் முதலியவற்றை அழித்தமையோடு[13] நாட்டையும் கொள்ளையடித்தது. அந்தக் கொள்ளையருடன் இந்த நாட்டிலுள்ளவர்களும் சேர்ந்துகொண்டு கொள்ளையடித்தனர் என்றும் தெரிகிறது.

11. பக்கம், 121   12. 6-279, 280, 281

13. " A most luxuriant crop with which the ground was at that time covered was instantly swept off and every water dyke and embankment totally destroyed " - F. N. P. 310, Maratha Rule in the Carnatic-Srinivasan, C. K.

" கும்பகோணத்தைச் சேர்ந்த கள்ளூர் மகாஜனங்களின் அர்ஜி: கிராமத்தில் ஹைதர் பட்டாளம் வந்து இறங்கி அக்கிரகாரம் பண்டாரவாடை மரம் செடிகள் எல்லாம் போய்ச் சுத்தமாக ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன"[14]

" 1785 மாதளம்பேட்டை கோனார் செட்டி வகையறா ஹைதருடைய காலத்தில் பாஹத்தருடைய[14அ] செலவுக்காக வரியை வாங்கினதால் அபராதம் சக்கரம் 120 "[15]

" 1783 திருமங்கலக்குடி சேவகன் ஹைதருடைய காலத்தில் வேலை பார்த்ததற்காக ஸர்க்காருக்கு வரும்படி கட்டுக்காணிக்கை கொடுப்பதாக ஒப்புக் கொண்டது ரூ. 100 "[16]

" ஹைதருடைய காலத்தில் நம்முடைய ஆங்கிலேய துரைகள் ஹைதரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு ஆசாமிக்கு ½ படி வரகு வீதம் கொடுத்துவந்தான்...... "[17]

இவற்றால் ஹைதர் படையெடுப்பால் பல ஊர்களில் மக்கள் இடம் பெயர்ந்தனர் என்றும், சிலர் ஹைதர் பக்கம் நின்று வரி வசூலித்தனர் என்றும், ஆங்கிலேயரது சர்தார்களும் மிகுந்த தொல்லைகட்கு உள்ளாயினர் என்றும், ஹைதருக்கு உதவியாக இருந்தவர்கள் பின்னர்த் தண்டிக்கப்பட்னர் என்றும் அறியப்பெறும்.

இப்படையெடுப்புக்குப் பின் பஞ்சம் ஏற்பட்டதாதல் வேண்டும். பஞ்சத்தால் பலர் பாதிக்கப்பட்டுச் சென்னைக்குச் சென்றனர் போலும். அப்பொழுது கும்பினிஅரசாங்கம் வேண்டியபடி தஞ்சை அரசர் உதவி செய்தார். இதனை,

"1775 : சென்னைப் பட்டணத்தில் கலாபுக்காகப் பலர் வந்து விட்டதனால் அரிசி வகையறா அகப்படாமல் ஜனங்கள் மிகச் சிரமப்படுவதனால் கவர்னர் இஸமேதினி (?) நவாப் வகையறா ஜனங்கள் எல்லோருக்கும் அன்னம் இடத் தொடங்கி நம்மையும் வரவழைத்து 1500 வராகன் கொடுக்க வேண்டும் என்று சொல்ல 1500 வராகன் கடன்வாங்கிக்கொடுத்திருக்கிறோம்'[17அ]

என்றமையான் அறியலாம். இஸமேதினி என்பது யாரைக்குறிக்கும் என்று தெரியவில்லை.

அந்நாட்களில் சில கோவில்களில் இருந்த சுவாமி விக்கிரகங்களைப் பிறிதோர் கோயிலில் வைத்து வழிபாடு நடத்தியதாகவும் பின்வரும் சான்றுகளால் தெரிகிறது :

---

14. ச. ம. மோ. க. 6-45 14அ. பாகத்தர்-பஹதூர் (ஹைதர்)
15. 2-116 16. 2-111 17. 5-508 17அ. 8-175, 176

"ஹைதர் கலாபு காலத்தில் ஸ்ரீமுஷ்டம் விருத்தாசலம் இந்த இரண்டு தலங்களில் இருந்த சுவாமிகள் யாவும் மயூரநாதசுவாமி கோயிலில் இருப்பதால் நைவேத்தியம் நடத்திவர ........... நாள் 1க்கு 15 பணம்வீதம் சுவாமி அவ்விடம் இருக்கிற வரைக்கும் கொடுக்கும்படி உத்தரவு"

"காட்டு மன்னார் கோயில் ஸ்ரீராஜகோபால சுவாமி பந்தநல்லூரில் வந்து இருப்பதால் பூசைக்காக நாளொன்றுக்குப் பணம் 5 வீதம் அவ்விடத்தில் இருக்கிற வரையிலும் கொடுக்கும்படி உத்திரவு".[18]

பஞ்சநிவாரணப் பணிகள் செய்யுங்கால் எடுத்துச்செல்லும் பண்டங்கட்குச் சுங்கவரி நீக்கப்பட்டது. இது,

"1780 கலாபுக்காகக் கொண்டுவரும் சாமான்களுக்கெல்லாம் வரி வாங்குவதில்லை என்று உத்திரவாகியிருக்கிறது"[19] என்பதால் அறியப்பெறும்.

திப்புசுல்தானின் மக்கள் இருவர்-ஒருவன் 10 வயதுடையவன்; மற்றும் ஒருவன் 7 வயதுடையவன் — தஞ்சைக்கு வந்தனர் என்றும், அவர்கள் ரெஸிடெண்டு ராமன் (ராம்) என்பவரின் பக்கத்து வீட்டில் தங்கினர் என்றும் ஒரு ஆவணக்குறிப்பு உள்ளது.[19அ]

## அணையைப் பழுது பார்த்தல்

தஞ்சை வளமாக இருப்பதற்குரிய காரணம் காவிரிப் பாய்ச்சலேயாகும், என்பது யாவரும் அறிந்ததே. பெருவெள்ளம் வருங்கால் காவிரியணையிலும், காவிரியின் இரு கரைகளிலும் உடைப்பு ஏற்படுவதுண்டு. ஹைதர் படை எடுத்தபோது அணையை உடைத்துவிட்டான் என்று தெரியவருகிறது.[20] அதைப் பழுதுபார்க்க ஆள்கள் அனுப்பப்பெற்றபொழுது ஊரார் தடைசெய்தனர் என்றும், பின்னர் "திருச்சினாப்பள்ளிக்குப்போய் ......சாயபு டிப்பு சாயபு அவர்களிடத்திற்போய்.........வாங்கிக்கொண்டு வந்து மண் வெட்டிப்போட்டுத் தஞ்சை நகரம் வந்து சேர்ந்தோம்"[21] என்ற குறிப்பால் ஹைதர் அவர் மகன் டிப்பு ஆகியோருடைய ஒப்புதலின்பேரில் உடைப்புக்கள் அடைக்கப்பட்டன என்பது பெறப்படும். எப்பொழுதுமே நவாபும் இந்த உரிமையைத் தாம் உடையராய் இருந்து அணை பழுதுபார்க்கும் பொழுது தஞ்சை அரசுக்குத் தொல்லை கொடுத்து வந்தவராகவே தெரிகிறது. கும்பினியாரும் தஞ்சை அரசர் பக்கலில் இருந்துகொண்டு அணை உடைப்பு கரை உடைப்பு ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் உரிமை தஞ்சை அரசுக்கே உரியதாக இருக்க வேண்டும் என்று வாதாடியுள்ளனர்.[2]

---

18. 6-170, 171 19. 8-151 19அ. 5-584, 585 20. 6-280 21. 6-281

22(அ) Pages 3 and 4 : Memoirs of the King of Tanjore to the Directors of the Honourable the East India Company :—

## சிவகங்கை ஜமீன்

இந்த ஜமீன் தோன்றிய வரலாறு இக்கட்டுரையின் முதற்பகுதியிலேயே கூறப்பட்டுள்ளது.[23] சரபோஜி II காலத்தில் சிவகங்கை ஜமீன்தாரின் மகன் சிறையில் வைக்கப்பெற்றனன். அவனை விடுவிக்க வேண்டும் என்று மகாராஜாவுக்குச் சிரஸ்தேதார் எழுதியதாக1828க்குரிய ஆவணக் குறிப்புள்ளது.[24] ஜமீன்தார் மகன் சிறைப்படுத்தப்பட்ட காரணம் புலப்படவில்லை.

---

Permission to repair his dykes ……… the fertility of the Kingdom of Tanjore ( which produces not only its own but for a great part the sustenance of neighbouring countries ) depends on the keeping up in perfect repair the banks and dykes of the several ramifications of the river Cauvery. He only desires, according to ancient usage to be authorised to repair the banks of that river at his own expense.

The king of Tanjore cannot admit the reasonableness of the cause assigned by the Nabob for interrupting these necessary works, namely, that such a power in his hands, is a first means of over awing the King of Tanjore and bringing him to an unlimited submission to his will. The ground of the claim he conceives to be as insulting as the exercise of it is pernicious. The power of bringing famine on an whole people, at the arbitrary pleasure of a stranger, is an improper power ; and such as no man ought to possess or can in decency pretend to. Temporary and occasional stops have indeed been put to the acts of violence which used to prevent the repairs but nothing is settled or decided as to the right and no security given for the enjoyment of it. Until that right is asserted and that security given, no considerable expense can be safely laid out and no permanent work can be undertaken.

The King of Tanjore therefore earnestly requests an immediate instruction to the Presidency of Madras that it shall be publicly notified and avowed that he shall always be intitled to the repairs of the banks of the river, on the former footing, without interruption from any person, or upon any pretence what ever : when this is done, he engages immediately to undertake a well constructed and substantial work which will be of benefit to all that part of India.

The Madras Despatches : Calendar for 1764-65 ; Page 433 : The Nawab is unreasonabe to oppose the Tanjore repairs of the banks of Cauveri. The Nawab should be desirous of maintaining friendship with Tanjore and content himself with establishing order in his own government ………… The company considers that the King of Tanjore should have atleast the same liberty of repairing the Cauveri banks as he enjoyed formerly.

23. அடிக்குறிப்பு 8க்குரியது காண்க. 24. 2-55

## எட்டையபுரம் ஜமீன்

எட்டையபுரம் பாளையக்காரருடன் நட்புறவு இருந்ததாதல் வேண்டும் என்று 1811க்குரிய ஆவணக்குறிப்பால் அறியப்பெறும்.[25]

## ஆரணி ஜாகீர்

முதலாம் சிவாஜி இறந்தபிறகு ஆரணி தஞ்சை மராட்டியர் ஆட்சிக்கு உரியதாயிருந்தது. இரண்டாம் துளஜா 20-10-1771இல் நவாபுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி ஆரணி தேவனூர் முதலியவற்றை நவாபுக்கு அளிக்க வேண்டியதாயிற்று.[26] 1776 இல் ஏற்பட்ட ஒப்பந்தப்படிக்கு ஆரணி தஞ்சை அரசுக்குக்கொடுக்கப் பெறவில்லை[27]. ஆனால் கி. பி. 1795க்கு உரிய ஆவணம் ஒன்று,

"ஸ்ரீமகாஸ்ரீமந் சத்திரபதி சாயேப் அவர்களுக்குச் சிநேகிதரான அபிநவ பூர்ண பிரியமுள்ள வெங்கடராவ் ஸ்ரீநிவாஸராவ் ஆரணி தேசத்தார் ராம்ராம். என்னுடைய ஜாகீரை எனக்குச் கொடுக்கும்படி வங்காள தேசத்திலிருந்தும் சீர்மையிலிருந்தும் எழுதிவந்து ஸம்பாஜி பண்டிதர்பிள்ளை விரோதம் செய்து கொண்டு வந்தார்கள். ஏழையின்பேரில் பூர்ண கிருபை கடாட்சத்துடன் ஷை ஜாகீரை நம்முடைய சுவீதானம் செய்ய வேண்டியது"

என்றுள்ளது[8].

இதனால் ஆரணி ஜாகீர் தஞ்சை அரசுக்கு உரியதாய்விட்டது என்றும், இதனை மேற்கண்ட ஸ்ரீநிவாசராவ் தமக்குத் தரவேண்டும் என்று கேட்டுக் கும்பினி மேலாளர்கள் இசைவு தந்துவிட்டனர் என்றும் தெரிகிறது[28அ].

மேலும், "1797 ஆரணி ஜாகீர்தாருடைய வரவு செலவு கணக்கு" என்ற குறிப்பால்[29] அமர்சிங்கர் ஆட்சியின் இறுதியிலும் ஆரணி ஜாகீர் தஞ்சைக்கு உரியதாயிருந்ததாகக் கொள்ளுதல் பொருந்தும். உரிமை எவ்வளவினது என்பதை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் இல்லை.

## இலங்கை - கண்டி, கொழும்பு

1777க்குரிய ஆவணக்குறிப்பால் இலங்கையோடு வாணிகத் தொடர்பு இருந்தமை அறியப்பெறும்.[30]

---

25. 2-52
26. P. 62, A History of British Diplomacy in Tanjore, K. Rajayyan
27. P. 88, Do. 28. 1-7

28அ. An agreement taken by John Hollered, President and Governor in Council from Streenivasa Row, Heir of Tremul Row, Jagirdar of Arni Dated 20—6—1780, Page XII, XIII - Appendix to the Maratha Principality by Hicky.

29. 1-260 30. அடிக்குறிப்பு 6க்குரியது காண்க: 1-147, 148, 149

"கொழும்பு கவர்னர் தஞ்சைக்கு வந்தால் ரெஸிடெண்டு சொல்கிறபடி மரியாதை செய்யலாம்" என்று 15—5—1822 தேதியிட்ட ஒரு ஆவணம்[31] குறிப்பிடுகிறது. 15—9—1823இல் கொழும்பு கவர்னர் நாகப்பட்டினத்துக்கு வந்ததாகவும், அவருடன் மூன்று அலுவலர்கள் வந்ததாகவும், நீடாமங்கலத்தில் தங்கி வருவர் என்றும், பல்லக்குத் தூக்கிகள் மூன்று சதை ஆட்களும் சாமான்கள் தூக்கிவர 10 காவடிக்காரர்களும் வேண்டும் என்றும், ஸர்க்கேல் சிரஸ்தேதாருக்கு எழுதியதாக ஓராவணம் கூறுகிறது.[32] அவர் கோட்டைக்கு வந்தபொழுது 15 குண்டுகள் போடப்பட்டன.

கி. பி. 1841க்குரிய குறிப்பொன்று,[33] "சிலோன் கவர்ன்மென்ட் பென்சின் ஜாபிதா" என்றிருப்பதால் இலங்கையிலிருந்து ஓய்வூதியம் பெறும் இலங்கை அரசமரபைச் சேர்ந்தவர்கள் தஞ்சையில் இருந்தனர் எனத் தோன்றுகிறது.

**கண்டி பென்ஷன்தாரர்கள்:** கி. பி. 1816இல் ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றினர்; விக்கிரமசிங்கர் என்ற அரசரை அப்பதவியினின்று நீக்கி அவரையும் அவர் தாயையும் அவரது நான்கு மனைவியரையும், ஐம்பது பேருடன் சென்னைக்கு ஒரு படகில் அனுப்பி விட்டனர். பின்னர் அவர்கள் யாவரும் வேலூருக்கு அனுப்பப் பெற்றனர். மேலும் 44 பேர் தஞ்சைக்கு அனுப்பப்பெற்றனர். இவர்களெல்லாம் முதற்கண் அரசாங்கக் கைதிகளாகவே கருதப்பெற்றுப் பின்னர் அரசரைத் தவிர்த்து மற்ற யாவரும் எங்கும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.[34]

10—8—1842இல் கும்பகோணம் சபாபதிபிள்ளை என்பவர், சென்னைக் கவர்னர் லார்டு எல்ஃபின்ஸ்டன் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் வேலூரினின்று கண்டிய மகாராஜா அவர்களின் தாய் தஞ்சை நகரம் மகர நோன்புச் சாவடிக்கு வருங்கால் அந்தச் சவாரியில் சேர்ந்து வந்ததாகக் கூறுகிறார்[35]. எனவே மேலே கூறிய விக்கிரமசிங்கரின் தாய் தஞ்சைக்கு வந்தமை இதனான் அறியப்பெறுகிறது.

விக்கிரசிங்கருக்கு ஒரு தம்பி இருந்தார். அவர் பெயர் கீர்த்திசிம்மராஜா என்பதாகும். இவரது பெரிய தாயார் அதாவது கண்டி இரண்டாவது இராணியின் மகளுக்கு ராஜரத்தின சிம்மள கமுசலாதேவி என்பது பெயர். இக் கமுசலாதேவி 1839இல் இறந்தார். அன்றியும் மேற்கண்ட கண்டி அரசர்களின் தகப்பனார் "அப்பானுறனேந்திர சுவாமி ராஜா" என்பவர் 1859இல் இறந்தார். இவ்விருவருக்கும் கோரி அமைக்கவேண்டும் என்று 31—5—1878இல் கீர்த்திசிம்மராஜா தஞ்சாவூர் "கவர்ன்மெண்டு ஏஜெண்டு துரை" அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்[35அ].

31. 5-58 32. 2-97, 98 33. 2-288

34. Page 51, para 58, Political Pensioners & Stipendiaries-Manual of Administration of the Madras Presidency, Vol. I, 1885.

35. 6-386 35அ. 6-189, 190

"1—3—1862 கண்டியின் இரண்டாவது இராணி பரலோகம் அடைந்த தற்காக உத்தரகிரியைக்கு ரூ. 1000 கொடுத்த விஷயமாகக் கடிதப்போக்கு வரவு அனுப்பியிருக்கிறது.

"மேற்கண்ட ராணியின் கோரியைக் கட்டுவதற்கு ரூ. 150 கொடுக்கப் பட்டிருக்கிறது.

"நான்காம் ராணியின் முதல் ஸ்வீகாரபுத்திரன் இராமச்சந்திர ராஜா என்பவருக்குக் கோரிகட்ட ரூ. 100 கொடுத்திருக்கிறது"

என்ற ஆவணக்குறிப்புக்களால்[36] கண்டிராஜா(விக்கிரமசிங்கருக்கு) நான்கு மனைவியர்கள் இருந்தமை உறுதியெய்துவதோடு இரண்டாவது இராணியும் தஞ்சையில் இறந்தார் என்பது தெரியவருகிறது. கடைசி இராணி 1863இல் தஞ்சைக்கு வந்ததாகத் தெரிகிறது[37].

கண்டியினின்று அரசாங்கக் கைதிகளாக வேலூரில் இருந்தவர்கள் ஏன் தஞ்சைக்கு வந்தனர் என்பது தெரியவில்லை. "பாராண்டு பகடேறி" அரசச்செல்வத்தில் திளைத்துப் பெருமித வாழ்வு வாழ்ந்தவர்கள் தம் முன்னைய பெருமைக் கேற்ப வாழ்வதற்குரிய இடம் தம்மோடு ஒத்து, அரசிழந்தும் பெருமித வாழ்வு வாழ்ந்த மராட்டிய மன்னர்க்குரிய தஞ்சையே பொருத்தமாக இருத்தல் கூடும் என்று கருதித் தஞ்சைக்கு வந்து தங்கி யிருந்தனர் என்று கொள்ளலாம்.

**ரஷ்ய இளவரசர் தஞ்சைக்கு வருகை:** கி. பி. 1841இல் ரஷ்ய இளவரசர் ஒருவர் தஞ்சைக்கு வந்ததாகத் தெரிகிறது[38]. அவருடைய பெயர் "அலேகஸிஸலொலடமாப்" என்றுள்ளது. வேறு செய்தி எதுவும் தெரியவில்லை.

36. 1-112, 118
37. The last surviving queen moved to Tanjore from Vellore in 1863. P. 51, para 58, Political Pensioners and Stipendiaries–Manual of Administration of the Madras Presidency, Vol. I, 1885.
38. 2-268

# 10

# இரண்டாம் சரபோஜியின் தல யாத்திரைகள்

## சோழநாட்டுத் தலயாத்திரை

இரண்டாம் சரபோஜி தல யாத்திரையாகச் சோழநாட்டிலுள்ள தலங்கள் பலவற்றிற்கும் சென்று இறைவனை வழிபட்டவர் ஆவர். 1801 டிசம்பர் மாசத்தில் தலயாத்திரை தொடங்கினார். இத்தலயாத்திரை பற்றிய விவரத்தைச் "சரபேந்திர தீர்த்தாவளி" என்ற நூலில், சரபோசி மன்னர் காலத்தில் வாழ்ந்தவரும் துண்டிராஜபட்டர் என்பவருடைய மகனுமாகிய (துண்டி சுத) சிவ என்னும் கவிஞர் மராட்டிய மொழியில் பாடியுள்ளார்.[1] சோழநாட்டுத் தலயாத்திரை பற்றி,[2]

"1801 : மகாராஜா சரபோஜி சோழமண்டல சவாரி ஆரம்பம்; சோழ மண்டல தெய்வங்களின் பெயர்கள்"

என்ற குறிப்பால்[2அ] அறியப்பெறும்.

## காசி யாத்திரை

மோடி எழுத்துச் சான்றுகளில், 188c என்று எண் கொடுக்கப்பெற்றுள்ள மூட்டையில், சரபோஜி மன்னர் காசியாத்திரை செய்த விவரங்கள் பற்றித்

---

1. இந்நூலில் 86 தலங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இந்நூலில் ஐந்து பகுதிகள் உள்ளன. இது சரஸ்வதிமகால் வெளியீடாக உளது. சிறந்த ஆங்கில முகவுரை உண்டு.
2. 1-841 : "1202 (+599=1801) திவான் சாகேப் தீர்த்தயாத்திரை செய்வதற்காக "நெய்த்தேவசம" மார்க்கசீரஷ பகுள திவிதியை செவ்வாய்க்கிழமை"; "1801 சோழமண்டலம் சவாரி செய்த வகையில் மொத்தச் செலவு சக்கரம், 4000" - ச. ம மோ. த. 24-11

2அ. ச. ம. மோ. த. 5-5 ; (ச. ம. மோ. த. 1-11 ; 16-27 ; 24-11 காண்க)

தஞ்சை சரஸ்வதி மகாலில் பல ஏடுகள் உள்ளன.[3] அவ் எழுத்துச் சான்று களில் 10ஆவது தொகுதியில் சரபோஜி மன்னரின் காசி யாத்திரை பற்றிய பல செய்திகள் உள்ளன. அவற்றுள் எல்லா விவரங்களும் காணப்பெறவில்லை. மோடி எழுத்துச் சான்றுகள் முழுமையும் தமிழாக்கம் செய்யப்பெறின் மேலும் பல செய்திகள் கிடைக்கப்பெறும் என்பது உறுதி.

சென்னை ஆவணக்காப்பகத்தில் மோடி ஆவணங்களில் பாதுகாத்து வைக்கப்பெறவேண்டியவை என்று கருதப்பெற்ற பல ஆவணங்கள் உள்ளன. அவற்றுள் 1281...... எண் கொண்ட ஆவணம் கட்டடம் (Bound) செய்யப் பெற்றதாக உள்ளது.[4] அது மோடியெழுத்தில் எழுதப்பெற்றுள்ளது. அட்டை யின் மேல்மட்டும் " சரபோஜி காசியாத்திரை " என்று தமிழில் எழுதப் பெற்றுள்ளது.

சரபோஜி மன்னர் காசிக்குச் செல்லத் திட்டமிட்டார்; அந்நாளைய ஆங்கில அரசாங்கக் கவர்னர் அவர்களின் ஆணைப்படி இம்மன்னருக்கு ஆங்காங்கு உரிய மரியாதைகள் வழங்கப்பெற்றன. இம்மன்னர் தங்கும் இடங்களில் பற்றுச் சீட்டுப் பெற்று இவர் கேட்ட தொகைகளை அவ்வக் கோட்ட அலுவலர்கள் அளித்தனர். எனவே "அறந்தலைத் தந்த அரும் பொருள் தாங்கிச் சேறல்", சரபோஜி மன்னர்க்குச் சாலவும் எளிதாயிற்று.

## பயணத்திட்டம்

காசிக்குச் சென்று வருவதற்குப் பெரிய அளவில் சரபோஜி மன்னர் திட்டம் தீட்டியிருந்தமைக்கு மோடி எழுத்துச் சான்றுகள் உள்ளன. செல்லும் பொழுது ஒரு திட்டம் தீட்டியிருக்கக்கூடும். அத்திட்டம் கொண்ட ஏடு கிடைக்கவில்லை. எல்லா மூட்டைகளையும் ஆய்ந்தால் கிடைக்கக்கூடும்.

1820 முகாம் — கைர்ஹட்
குலியாப் பாடா
மேதினியூர்
ஸல்கீயாகாட்
ஸ்ரீகயாஜி என்றும்[5]

1820 முகாம் — செர்கீ
ஸர்காடி
மதனபூர்
சிரிஸ்
ஸஹஸ்ரா
துர்மாபாத்
டுஹ்ரீ
மொஹல்ஸ் ராஜி

என்றும்[6] காணப்படுதலால் வடநாட்டு யாத்திரைக்குத் திட்டம் தீட்டியே புறப்பட்டார் என்று அறியலாம்.

---

3. 8-66 முதல் 88 வரை ; 4-186 முதல் 197 வரை; 5-12 முதல் 207 வரை; 7-642 முதல் 657 வரை.
4. Table of contents of the catalogue indicating the nature of the contents of the Raj Records, Tanjore ; Page 528 ; Bundle 1281 ; Serial No. of item 81.
5. 4-186-187
6. 4-188

"1820 நவம்பர் 2ஆம் நாள் சரபோஜி மகாராஜா காசி யாத்திரைக்குச் சென்றபொழுது நெல்லூர் ஜில்லாவைச் சேர்ந்த தலமஞ்சிதுகடி[7] என்னும் ஊரின் தாசீல்தாருக்குக் கொடுத்த சர்டிபிகேட் — மகாராஜாவிற்குக் கும்பினி சர்க்காரின் உத்தரவுப்படி வேண்டிய சாமான்களைத் தருவித்துக் கொடுத்துப் பயபக்தியுடன் நடந்ததற்காக"[7அ]

என்றுள்ள செய்தியால் திட்டப்படி சரபோஜி மன்னர் யாத்திரை செய்தார் என்றும், வெள்ளையரின் ஆணைப்படி அரசர்க்கு வேண்டிய உதவிகளை அரசாங்க அலுவலர்கள் பொறுப்புடன் கவனித்தார்கள் என்றும், மன்னரும் நற்சான்றிதழ் அளித்தார் என்றும் அறியப்பெறும்.

கிடைத்துள்ள ஆவணக் குறிப்புக்களின் துணைகொண்டு காசிக்குச் செல்லுங்கால் தங்கிய இடங்களும் தேதிகளும் :—[8]

| (மோடி தமிழாக்கம்) கவடி எண் பக்கம் | தேதி | தங்கிய இடம் | குறிப்பு |
|---|---|---|---|
| 5-12 | 2—11—1820 | தலமஞ்சிதுகடி (நெல்லூர்) | |
| 5-116 | 9—11—1820 | ராசபுடி | |
| 5-114, 115 | 20—11—1820 | பெஜவாடா – மங்களகிரி | |
| 5-77 | 4—1—1821 | மிர்குவா | |
| 5-171 | 5—1—1821 | மிட்டகூப | |
| 5-171 | 8—1—1821 | ஸ்ரீ ஜகந்நாத (நரசிங்கபட்டணத்திலிருந்து ஜகந்நாதுக்கு மாலை மணி 4க்குச் சேர்தல் | |
| 5-173 | 12—1—1821 | ஜகந்நாத்–பொங்கல் பண்டிகை | |
| 5-174 | 14—1—1821 | அம்ருத்பூர் | |
| 5-76 | 17—1—1821 | கடக் (பூரிஜகந்நாத்க்ஷேத்திர மகிமை) | |
| 5-182, 183 | 20—1—1821 | கடக் | |
| 5-175 | ” | கடக் | |
| 5-63 | 29—1—1821 | ஸோரோ | |
| 5-180, 182 | 30—1—1821 | தளேஸ்வர (ஜகந்நாதில் நிவேதனத்துக்குக் கட்டளை) | |
| 5-198 | 3—2—1821 | ஜ்யாலேஷ்வர சமீபம் படணாமகமதுநகர் | |
| 5-195, 196 | 12—2—1821 | மேதினிபூர் | |
| 5-197 | 20—2—1821 | மூவர்பட்டா | |
| 5-139 | 23—2—1821 | ஸல்காகாட் (கல்கத்தாவில்) | |

7. 5-12, 13
7அ. Selections from the Asiatic Journal, Vol. XII, July to Dec. **1821**; P. 419-20. Rajah of Tanjore's visit to Benares - Account of the reception of His Highness at Nellore. 8. 5-12 முதல் 207 வரை.

| கவடி எண் பக்கம் | தேதி | தங்கிய இடம் . குறிப்பு |
|---|---|---|
| 5-144, 145 | 26—2 —1821 | கல்கத்தா கவர்னர் ஜெனரலைப்பார்த்தல் |
| 5-113 | ,, | காலை 10 மணிக்கு ஷை |
| 5-146 | 27—2 —1821 | கல்கத்தா மகாகாளி தரிசனம் |
| 5-146 | 28—2 —1821 | ,, ,, |
| 5-147 | 1 —3 —1821 | பாரசீக காரியதரிசி வருகை; ஸல்காகாட் பியாரவேல் வீட்டுக்குச் சென்று கும்பினி தோட்டம் பார்த்தல் |
| 5-148 | 2 —3 —1821 | கல்கத்தா கோட்டை ஸ்டோர் பார்த்தல் |
| 5-151 | 4 —3 —1821 | ,, சூரியகிரஹணம்; நேவிடாக்யார்டு பார்த்தல் |
| 5-199 | 5 —3 —1821 | ஸல்காகாட் |
| 5-113 | ,, | ,, |
| 5-77 | 6 —3 —1821 | சில்காகாட் |
| 5-206 | 6 —3 —1821 | மிராஜ்பூர்: ஸல்காகாட்டிலிருந்து புறப்பட்டு மஹேஸ்வர தலா; பகல் 11 மணிக்குப் புறப்பட்டுக்கைர்ஹடிசேர்தல்; கங்கை அக்கரையில் தார்ஹஜீரில் கவர்னர் ஜெனரலைப் பார்த்து விடைபெற்றமை. |
| 5-153, 155 | 8 —3 —1821 | கவர்னர் ஜெனரலிடம் விடை பெறுதல்; ஸ்ரீ ராம்பூரில் அச்சகம் பார்த்தல் |
| 5-158 | 9 —3 —1821 | வெடிமருந்துசாலை பார்வை |
| 5-207 | ,, | கயைக்குப் புறப்பாடு |
| 5-200, 201 | ,, | கைர்ஹடி |
| 5-158, 165 | 10—3 —1821 | கைர்ஹடி முகாமிலிருந்து கயைக்குப் புறப்படல் |
| 5-77, 201 | 12—3 —1821 | மிர்ஜாபூர் |
| 5-78 | 23—3 —1821 | புரஸ்தாபாதுக்கு அருகிலுள்ள ஹஸீம்பூர் |
| 5-104 | ,, | புருகாபாத் ,, |
| 6-106 | ,, | ,, |
| 5-108 | 31—3 —1821 | கதள்காவ் |
| 5-63 | ,, | ,, |
| 5-108 | 18—4—1821 | முங்கோசமீபம் ஹஸன்கஞ்ச் |
| 5-166, 167 | 4 —5—1821 | கயைக்கு அருகில் சாஹேப்கஞ்ச் அரண்மனையில் தங்குதல் |
| 5-165 | ,, | கயைசேரல் (மசூதாபாத், பாகல்பூர், அஜிமாபார் ஆகியவை பார்த்துக் கொண்டு) |

| சுவடி எண் பக்கம் | தேதி | தங்கிய இடம் | குறிப்பு |
|---|---|---|---|
| 5-104 | ,, | கயையில் 50 நாட்கள் | |
| 5-96 | ,, | முகாம் கயை ; தேவகர் - ( ஜாடகண்ட வைத்தியநாத ) பாகல்புரத்திலிருந்து 5 முகாம்களுக்குப் பிறகு | |
| 5-92-95 | ,, | கயை | |
| 5-167 | 5—5—1821 | கயாவர்ஜனம் ( 48நாள் தங்கல் ) | |
| 5-16 | 22—5—1821 | கயை | |
| 5-122 | 21—6—1821 | சாஹேப் கஞ்ச் | |
| 5-120 | 28—6—1821 | சிரஸ் | |
| 5-124 | 28—6—1821 | சிரஸ் (கயையில் வைசாக சுத்த திருதியை முதல் ஜேஷ்ட பகுள சப்தமி வெள்ளிவரை தங்கல்) | |
| 5-180 | 30-6—1821 | தலேஸ்வர | |
| 5-124 | 12—7—1821 | முகாம் காசி | |
| 5-65 | ,, | ,, | |
| 5-67 | 25—7—1821 | ,, | |
| 5-170 | ,, | ,, | |
| 5-61 | 6—8—1821 | ,, | |
| 5-66 | 21—8—1821 | ,, | |
| 5-69 | 11—9—1821 | ,, | |
| 5-117 | 4—10—1821 | ,, | |

(13—9—1821இல் பிரயாகைக்குப் புறப்பட உத்தேசம்)

## திரும்புவதற்குத் திட்டம்

திரும்புங்கால் தீட்டிய திட்டம் மட்டும் கிடைத்துள்ளது. அது பின் வருமாறு:[9]

| | | |
|---|---|---|
| 1822 ஜனவரி | 3 | போடில |
| | 5 | இங்கன்காட் |
| | 7 | நாகபூர் |
| | 7 | யேஹிலா |
| | 12 | நாகபூர் |
| | 31 | யதலாபாத் |
| 1822 பிப்ரவரி | 7 | நீம்குள் |
| | 8 | மஙிமேட் |
| | 10 | ராமாபேட் |
| | 16 | ஷாபாத் |
| | *29 | படகாடூர் |

9 5-18 முதல் 12 முடிய

* 1822 லீப் ஆண்டு அல்ல; பிப்ரவரிக்கு 29 என்றது தவறு

1822 மார்ச்சு 6 நந்தியால்
8 கடப்பா
20 செட்டிகுண்டா
21 திருப்பதி
25 காளஹஸ்தி
28 புத்தூர்
30 திருத்தணி

ஏப்ரல் 2, 3 காஞ்சிபுரம்
7 ரட்லூர்
10 பணி உருட்டி
13 பெரமாபூர்
18 மாயோர்
23 திருவாதி
26 முத்தாம்பாபுரம்
28 பட்டுக்கோட்டை
28 மோஹனாம்பாபுரம்
29 சுலக்ஷணாம்பாபுரம்
30 திரௌபதாம்பாபுரம்

1822 மே 1 இராஜகுமரம்பாபுரம்
2 மீனமேஸல் சத்திரம்
4 நவபாஷாணம்
5 ஆதங்கரைப் பட்டணம்
9 இராமேஸ்வரம்
10 இராமேஸ்வரம்
11 மைகுடாம்
13 நவபாஷாணம்
14 ஹீரோஜ் இங்களே சத்திரம்
15 காலயநேரீ
16 இராகுமராம்பாபுரம்
18, 19 சால்வநாயக்கன் பட்டணம்
20 பட்டுக்கோட்டை
29 முக்தாம்பாபுரச் சத்திரம்

மேலே குறிக்கப்பட்ட திட்டத்தில் சில தேதிகளும் ஊர்களும் குறிக்கப் பெறவில்லை எனினும், பிற எழுத்துக்களின்று தங்கிய ஊர்ப்பெயர்கள் தெரிய வருகின்றன.

"ஜனவரி 4 தேதி முகாம்-பேரலூள்[10] இங்கிருந்து நாளை தினம் புறப்பட்டு 9 முகாம்களுடன் நாகபூருக்கு வரப்போகிறோம்"

என்ற குறிப்பினின்று ஜனவரி 4ஆம் நாள் பேரலூள் என்றவிடத்தில் தங்கினார் என்றும்,

"ஜனவரி 2 தேதி முகாம் கயா : நாகபூர் - ஹைதராபாத் ஒவ்வொரு இடத்திலும் தங்கி, 24 இடங்களில் தங்கிக் கிருஷ்ணா நதியின் தென்கரையில் இருந்து கடப்பை, திருப்பதி, ஸ்ரீ காளஹத்தி, சென்னைப்பட்டணம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், தஞ்சாவூர் வந்து ஸ்ரீராமேசுவரத் துக்குச் சென்று யாத்திரையை முடித்து அங்கிருந்து தஞ்சாவூருக்கு வந்து சேருவதாய் நிச்சயித்திருக்கிறோம்"

என்ற குறிப்பினின்று[11] 2—1—1822இல் கயையில் தங்கினார் என்றும் அங்கிருந்து திட்டம் தீட்டியனுப்பப்பெற்றது என்றும்,

10. 5-25 11. 5-24

" ஜனவரி 26 முகாம் இங்கன்காட்: ஹுஜூரின் புத்தகங்களை எழுதுகிறஇளைய அச்சுதாசரே என்பவருடைய தம்பியின் திருஷ்டிக்கு ரூ. 20 கொடுக்கிறது "

என்ற உத்தரவால்[12] *26 – 1 – 1822*இல் இங்கன்காட் என்ற இடத்தில் தங்கினர் என்றும்,

" பிப்ரவரி *1*வ முகாம் கலிபேட் "

என்ற குறிப்பால்[13] *1 – 2 – 1822*இல் முகாம் கலிபேட் என்றும்,

" பிப்ரவரி *10*: மகாராஜாவின் சவாரி கோதாவரியின் தென்கரை வழியாக 5 இடத்தில் தங்கி இராமாபேட்டையில் இருக்கிறோம். இவ்விடம் இருந்து 5 இடங்களில் முகாம் செய்து ஹைதராபாத் வருவோம்; கடப்பை வழியாய்த் திருப்பதிக்கு மார்ச்சு *15*வ வருவோம் "

என்ற குறிப்பால்[14] *10 – 2 – 1822*இல் திட்டமிட்டபடி இராமாபேட்டைக்கு வந்தமையும், *21 – 3 – 1822*இல் திட்டத்தில்[15] கண்டவண்ணம் திருப்பதியை அடைய வேண்டியவர் 6 நாட்கள் முன்னதாகவே திருப்பதியை அடையவிருந்தனர் " என்றும்,

" பிப்ரவரி *15* முகாம் ஸம்ஸாபாத்: மா ஆவுசாப் அவர்களின் ஆக்ஞைப் படிக்கு வயிரத்தினால் செய்யப்பட்ட நாமம் ஸ்ரீவெங்கடாசலஸ்வாமிக்குச் சேர்ப்பித்துச் சங்கதிக்கு எழுதுகிறேன் என்று ஹுஜூரின் நமஸ்காரத்துடன் மா பாயிசாபுக்குத் தெரிவிக்கிறது "

என்ற குறிப்பினால்[16] *15 – 2 – 1822*இல் ஸம்ஸாபாத்தில் முகாம் இட்டனர் என்றும், திட்டத்தில் காணாத தங்கும் இடங்களின் பெயர் அறிய வாய்ப்புள்ளது.

கிடைத்துள்ள ஆவணக் குறிப்புக்களின் துணைகொண்டு திரும்புங்கால் தங்கிய இடங்களும் தேதிகளும் கீழேதரப்பட்டுள்ளன :—

| சுவடி எண் பக்கம் | தேதி | ஊர் | குறிப்பு |
|---|---|---|---|
| *5-116, 117* | *4-10-1821* | காசி | |
| *5-120, 121* | *19-10-1821* | உனே | |
| *5-121* | *31-10-1821* | (*23*வ பிரயாகை வருகை) *1-11-18*வ புறப்பாடு) | |
| *5-90, 91* | *15, 16-11-1821* | பந்தா | |
| *5-89* | *26-11-1821* | மஹத்காவ் | |
| *5-87* | *30-11-1821* | ஹீராபூர் | |

12. 5-23 13. 5-26 14. 5-27 15. 5-19 16. 5-48

| கவடி எண்.பக்கம் | தேதி | ஊர் | குறிப்பு |
|---|---|---|---|
| 5-88 | 26-12-1821 | ஸ்ரீஸங்காபாத் | |
| 5-89 | 28-12-1821 | ,, | |
| 5-107 | 30-12-1821 | கேசலாசௌகீ | |
| 5-18 | 3-1-1822 | பேர்டில | |
| 5-25 | 4- 1-1822 | போஹூன் (இங்கிருந்து மறு நாள் புறப்பட்டு 9 முகாம் நாகபூர்) | |
| 5-18 | 5- 1-1822 | இங்கன்கட் | |
| 5-19 | 7- 1-1822 | யேஹிலா | |
| 5-18 | 7- 1-1822 | நாகபூர் | |
| 5 19 | 12- 1-1822 | ,, | |
| 5-22 | 14- 1-1822 | ,, | |
| 5-24 | 22- 1-1822 | கயர் | |
| 5-23 | 26- 1-1822 | இங்கன்காட் | |
| 5-19 | 31- 1-1822 | யதலாபாத் | |
| 5-26 | 1- 2-1822 | குலிபேட் | |
| 5-25 | 4- 2-1822 | நிர்மள | |
| 5-19 | 7- 2-1822 | நிம்ருள் | |
| 5-19 | 8- 2-1822 | மலிபேட் | |
| 5-19 | 10- 2-1822 | இராமாபேட் | |
| 5-27 | ,, | இராமாபேட்டை | |
| 5-43 | 13- 2-1822 | ஸம்மஸாபாத் (ஸமம்ஸாபாத் பக் 45) | |
| 5-19 | 16- 2-1822 | ஷாபாத் | |
| 5-46 | *29- 2-1822 | பாகாட்டூர் | |
| 5-19 | ,, | புடகாட்டூர் | |
| 5-19 | 6- 3-1822 | நந்தியால் | |
| 5-19 | 8- 3-1822 | கடப்பா | |
| 5-19 | 20- 3-1822 | செட்டிகுண்டா | |
| 5-19 | 21- 3-1822 | திருப்பதி | |
| 5-19 | 25- 3-1822 | காளஹஸ்தி | |
| 5-46 | ,, | ,, | |
| 5-47 | 27- 3-1822 | புத்தூர் | |
| 5-19 | ,, | ,, | |
| ,, | ,, | திருத்தணி | |
| 5-27 | 2- 4-1822 | காஞ்சிபுரம் | |

* பிப்ரவரிக்கு 29 என்றது தவறு.

| சுவடி எண் பக்கம் | தேதி | ஊர் | குறிப்பு |
|---|---|---|---|
| 5-20 | 2, 3 - 4-1822 | காஞ்சிபுரம் | |
| 5-28 | 7- 4-1822 | ரட்லூர் (ரடனே) | |
| 5-20 | ,, | | |
| 5-20 | 10- 4-1822 | பணி உருட்டி | |
| 5-37 | ,, | ,, | |
| 5-20 | 13- 4-1822 | பெரமாபூர் | |
| 5-26 | | பெருமாத்தூர் (இன்று புறப் பட்டு நாளை விடியல் சிதம்பரம்) | |
| 5-20 | 18- 4-1822 | மாயோர் | |
| 5-40 | 23- 4-1822 | திருவையாறு | |
| 5-20 | ,, | திருவாதி | |

## இராமேசுவரப் பயணம்

| | | | |
|---|---|---|---|
| 5-20 | 26- 4-1822 | முத்தம்பாபுரம் | |
| 5-37 | 27- 4-1822 | மூப்பமானூர் | |
| 5-20 | ,, | பட்டுக்கோட்டை | |
| 5 20 | 28- 4-1822 | மோஹனாம்பாபுரம் | |
| 5-20 | 29- 4-1822 | சுலக்ஷணாம்பாபுரம் | |
| 5-38 | 29- 4-1822 | சுலக்ஷணாம்பாபுரம் | |
| 5-20 | 30- 4-1822 | திரௌபதாம்பாபுரம் | |
| 5-20 | 1- 5-1822 | இராமகுமாரம்பாபுரம் | |
| 5-48, 49, 52 | 2- 5-1822 | மலினேரி ஒட்டையன் தேவன் சத்திரம் | |
| 5-20 | ,, | மீனமேஸல் | |
| 5-52 | 4- 5-1822 | நவபாஷாணம் | |
| 5-20 | ,, | ,, | |
| 5-20 | 5- 5-1822 | ஆதங்கரைப்பட்டணம் | |
| 5-55 | 9- 5-1822 | இராமேசுவரம் | |
| 5-21 | 9, 10- 5-1822 | ,, | |
| 5-55 | 10- 5-1822 | ,, | |
| 5-58 | 10- 5-1822 | மைக்கூடு (5-21 மைகுடாம்) | |
| 5 21 | 11- 5-1822 | மைகுடாம் | |
| 5 54 | 13- 5-1822 | நவபாஷாணம் | |
| 5-21 | 14- 5-1822 | ஹீராஜி இங்களே சத்திரம் | |
| 5-58 | 15- 5-1822 | கலினேரி | |
| 5-21 | ,, | காலயநேரி (?) | |
| 5-21 | 16- 5-1822 | இராஜகுமாரம்பாபுரம் | |

| ஓலைச்சுவடி எண் பக்கம் | தேதி | ஊர் குறிப்பு |
|---|---|---|
| 5-99 | 18 5-1822 | சாலுவநாயக்கன்பட்டணம் |
| 5 21 | 18, 19- 5-1822 | ,, |
| 5-21 | 20- 5-18 2 | பட்டுக்கோட்டை |
| 5-21 | 21- 5-1822 | முக்தாம்பாபுரம் சத்திரம் |

சரபோஜி மன்னர் காசியாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன்னர்த் தம் ஒரே மகனாகிய சிவாஜியை அரசியலில் பழக்குவதற்காகப் பட்டாபிஷேகம் செய்து, ரெஸிடெண்டு முதலியவர்களிடம் இதனை அறிவித்துத் தாம் காசி யாத்திரை முடித்துத் திரும்புகிறவரையிலும் சிறப்பாக விழாக்கள் எவ்வெவை எப்படி நடக்க வேண்டுமோ அவ்வவற்றை நடத்துவதற்காக உத்தரவு அளித்துக் காசி யாத்திரை புறப்பட்டுச் சென்றார். இதனால் மன்னர் தங்கிய முகாம்களுக்கு எழுதி ஒவ்வொரு சிறப்பு நிகழ்ச்சிக்கும் உத்தரவு வாங்க வேண்டிய தொல்லை நீங்கித் தாமாகவே எல்லாக் காரியங்களும் நிறை வேறும் நிலை உண்டாயிற்று. இத்தகு எளிய நிலையை உண்டாக்குவதற்கு உரியவண்ணம் பிறப்பித்த உத்தரவு பின்வருமாறு[17]:—

1. நவராத்திரி முதலிய எல்லாப் பண்டிகைகளும் ஆயுத பூஜை விஜயதசமி சீமோல்லங்கணம் வகையறா உற்சவங்கள் நம்முடைய குழந்தை யின் மூலமாக வழக்கப்படி நடத்தவேண்டும்.

நவராத்திரியின் பண்டிகையும் ஆயுதப்ரக்ஷாளனம் பூஜையும் சீமோல்லங் கணமும் இதற்கு ரெஸிடெண்டு வந்து பின்பு எல்லாவற்றையும் நிறைவு செய்தல் வேண்டும்.

2. சிலங்கண சாவடியிலிருந்து அரண்மனைக்குத் திரும்பும்பொழுது ரெஸிடெண்டு சாயேப் எங்கள் குழந்தையோடு இரதத்தில் உட்கார்ந்து அரண்மனைக்குக் கொண்டுவந்து சேர்ப்பிக்க வேண்டும். இப்பண்டிகையை முன்னிட்டு இனாம் வகையறா வழக்கப்படி சேர வேண்டியவர்களுக்குக் கொடுக்கலாம்.

3. தீபாவளி முதல் எல்லாப் பண்டிகைகளும் பாபுவீஜ அரண்மனை யிலுள்ள சுவாமிகளுக்கு மகோற்சவம் புண்ணிய காலத்தில் வழக்கப்படி தான தருமங்களை நடத்தலாம்.

4. சி. சௌ. சைதம்பா பாய் சாயேப் மா. ஸ்ரீ. ஆவுசாஹேப் ஐந்து மாப்பிள்ளைகள் சி. சௌ. ஐந்துவர்க்கம் அமணீராஜே ஐந்து குழந்தைகள் இவர்களுடைய மொயின் தானதர்மங்கள் வகையறா ஒன்றும் குறைவில்லாமல் வழக்கப்படி நடக்க வேண்டும்.

17. 8-66 முதல் 83 முடிய ; 7-642 முதல் 657 முடிய

5. நம்முடைய அந்தப்புரத்தில் பண்டிகை முன்னிட்டு மாப்பிள்ளை ஜனங்களுக்கும் பட்டுவாடா செய்யவேண்டிய வாழைப்பழம் தேங்காய் எண்ணெய் ஆடுகள் உலுப்பை வகையறாக்களைக் கொடுத்து வந்த மாமூல்படி சி. சௌ. சைதம்பா பாய் சாஹேப் அவர்களிடத்தில் கொடுத்தல் வேண்டும்.

6. குழந்தைகளின் பிறந்த நாளில் எல்லோருக்கும் நடக்க வேண்டிய வழக்கப்படி மரியாதை செய்ய வேண்டியது.

7. ஜனவரி கிறிஸ்மஸ் இந்த இரண்டு பண்டிகைகளுக்கு ரெஸிடெண்டு முதலிய ஆங்கிலேயர்களுக்குச் சர்க்காரிலிருந்து செய்ய வேண்டிய மரியாதை வழக்கப்படி செய்யலாம்.

8. ரெஸிடெண்டு சாயேபினுடைய அனுமதியின் பேரில் புதிய துரைகள் பேட்டி வாங்கி அவர்களுக்கு ரெஸிடெண்டு சாயேப் சொல்கிறபடி மரியாதை நடத்த வேண்டும்.

9. விஜயதசமி சிலங்கணத்திற்காக ரெஸிடெண்டு சாயேப் முதலிய துரைகளிடமிருந்து எங்களுக்கும் எங்கள் குழந்தைகளுக்கும் நடந்து வந்த மரியாதை இப்போது எங்கள் குழந்தைகளுக்கு நடக்கவேண்டும், அவர்களுக்குச் சர்க்காரிலிருந்து செய்துவந்த மரியாதையை வழக்கப்படி நடத்தவேண்டும்.

10. சீமோலங்கணமான இரண்டாவது தினத்தில் நம்முடைய சமஸ்தானத்தின் ஜனங்களுக்கும் கலெக்டரிடமுள்ள உத்தியோகஸ்தர்களின் பேட்டியை ரெஸிடெண்டு அருகிலிருந்து செய்துவைக்க வேண்டும். ஷ உத்தியோகஸ்தர்களுக்கும் சர்க்காரிலிருந்து வழக்கப்படி செய்ய வேண்டிய மரியாதையைச் செய்ய வேண்டியது.

11. கோட்டையிலும் லயனிலும் குடியிருக்கும ஜனங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டிய காரியம் அதற்காக வைத்திருக்கிற 4 சபைகளிடத்தில் திருஷ்டி வைத்து நியாயமுண்டாகும்படி ஜாக்கிரதை செய்யவேணும்.

ஒருவேளை சபையில் யாருக்காவது அநியாயமாயிருப்பதாக ருஜுவானால் அப்படிப்பட்டவருக்கு யுக்தமான தண்டனை செய்வது அல்லது அவரை நீக்கவேண்டியதாக ஏற்பட்டால் நீக்கிவிடுகிறது.

12. கோட்டையிலும் லயனிலும் வசிக்கிற ஜனங்களின் நகை நாணயங்களைக் காப்பாற்றுவதால் எல்லா ஜனங்களும் கவலையற்றவர் ஆகவும் சந்தோஷ முண்டாகும்படியாகவும் திருடர்களின் பயத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் நடக்கின்றார்களா என்று பார்த்து அந்தப்படித் தவறு செய்கிறவர்களுக்கு உடனே தண்டனை செய்வது அல்லது வேலையிலிருந்து நீக்கிவிடுகிறது.

13. முகாசா சத்திரம் தோட்டம் வகையறாவின் அமீனா முதலியோர் சிப்பந்திகள் அவரவர்களது வேலைகளைச் சரிவரச் செய்யாவிட்டாலும் காரியத்தைக் கெடுத்துவிட்டாலும் அவர்களின் பேரில் தப்பிதம் இருப்பின் அவர்களை வேலையிலிருந்து நீக்கி யோக்கியமானவரை நியமித்து இராஜாங்கத்தின் வரவு தர்மம் விருத்தியடையும்படியாகச் செய்ய வேண்டியது. ஷை வரவும் தர்மமும் இவ்விரண்டிற்கும் கெடுதல் செய்பவர்களைத் தண்டிக்க வேண்டியது.

14. யாத்திரைக்கு எங்களுடன் வருகிறவர்களுடைய சம்பளத்தை அவர்களின் வீட்டில் சேர்ப்பித்தல் வேண்டும். ஷை ஜனங்கள் யாத்திரையில் இருப்பதால் அவர்கள் திரும்பும்வரையிலும் அவர்களின் பேரிலோ அல்லது அவர்கள் வாரிசின் பேரிலோ யாராவது வியாஜ்ஜியம் செய்தால் அதைத் தள்ளிவிடவும். ஷை யாத்திரை ஜனங்களின் வாரிசு வியாஜ்ஜியம் செய்தாலும் அதை உடனே விசாரித்து அவர்களின் பேரில் வம்பு செய்கிறவர்களைத் தண்டனை செய்து ஷை ஜனங்களைக் காப்பாற்றவேண்டும். தினந்தோறும் அவர்களுடைய க்ஷேமத்தை விசாரித்து அவரவர் சுபாசுபங்களுக்குச் சாமான்ய ஜனங்களுக்கு 5 சக்கரத்திலிருந்து 10 சக்கரம் வரையில் அவரவர்கள் யோக்கியதைப்படி இனாம் கொடுத்துதவுகிறது. அவரவர்களுடைய க்ஷேமங் களைக் கடிதமூலம் தெரிவித்துக்கொண்டிருக்க வேண்டும்.

15. இராஜாங்கத்தின் ஒவ்வொரு காரியமும் வரவு செலவு வகையறா சிறியதாகவுமல்லது பெரியதாகவுமிருக்கலாம். அதை ரெஸிடெண்டு சாயேப் அவர்களுக்குத் தெரிவிக்காமலும் அவருடைய சம்மதமின்றியும் செய்யக் கூடாது. எல்லாம் அவருடைய சம்மதத்தின்படி நடக்கவேணும்.

16. நம்முடைய குழந்தையும் மாப்பிள்ளையும் கோட்டைக்கு வெளியில் உலாவப் போகவேண்டுமென்றிருந்தால் போகலாம்.

17. மேற்சொன்ன வகைகளில் கண்டது அல்லது நம்முடைய மா. ஸ்ரீ. சி. குழந்தை, சௌ. நாட்டுப்பெண், சி. சௌ. பெண்கள், அவர்களின் குழந்தைகள் இவர்கள் ஒருவேளை பருவகாலத்திலும் உற்சவ காலத்திலும் திருவையாறு வரையில் போய் மூன்று தினங்கள் வரையிலிருந்து வரவேண்டு மென்றால் அவர்களுடைய மாமூல் பிரகாரமுள்ள சாஹித்தியங்களைச் செய்து கொடுத்து அனுப்பி மூன்று தினங்களுக்கு மேல் கோட்டைக்கு வெளியே தங்காமல் ஏற்பாடு செய்யவும்.

18. மாதா மாதம் கிஸ்தித் தொகையும் வருடக் கடைசிக் கணக்கையும் தீர்த்துப் பாக்கித் தொகையையும் கும்பனியிலிருந்து வருகிறதற்கு நம்முடைய குழந்தையின் பேராலும் கையெழுத்திட்டு ரசீது தயார் செய்து அந்த ரசீதில் ரெஸிடெண்டின் கையெழுத்து வாங்கிக் கொடுக்க வேணும்.

19. நம்முடைய குழந்தையைக் காப்பாற்றுகிற விஷயத்திலும் அவர் வித்யாவான் ஆகவேண்டிய விஷயத்திலும் நம்முடைய தர்பாருடைய வேஷத்தைப் போட்டுக் கொள்வதற்கு ரெஸிடெண்டு தயையுள்ளவராக இருக்க வேண்டும்.

20. நம்முடைய பிறந்தநாளன்று பெரிய கோட்டையின் பேரில் நம்முடைய வயதின் கணக்குப்படி குண்டுபோடவேண்டியது. அதற்காக அதே தினத்தில் சிவகங்கைக் கோட்டையின்மேல் 21 (இருபத்தொரு) குண்டுகளைப் போடவேண்டும்.

21. வசந்த பஞ்சமி தினம் நடக்கும் (ஸதர்) தர்பார் வழக்கப்படி நடத்தவேண்டும்.

22. ரா. ஸ்ரீ. சுவாமிகளுக்கு ஸ்ரீ ராமநவமி புண்ணியதிதி பண்டிகை வகையறாக்களுக்கு மொயினும் மரியாதையும் நடக்கவேண்டியது.

23. இங்கிருக்கும் சிப்பந்திகளில் ஸர்க்கேல், பங்க் நாயிக், கில்லேதார், சேனாபதி, ஸர்க்காருடைய உறவினர்கள் இவர்களுடைய வீட்டில் சுபா சுபங்களானால் இனாமும் வஸ்திரமும் வழக்கப்படி நடக்கவேண்டும்.

24. எல்லா தேவஸ்தானங்களுக்கும் இரத உற்சவத்திற்காகப் பூஜையும் தக்ஷிணையும் வஸ்திரங்களும் பானக பூஜையும் கொள் கஞ்சி வகையறாவும் வழக்கப்படி நடக்கவேண்டும்.

25. துக்கோஜி பாலிய வயது குழந்தையானதால் அவர் வெளியே போவது வருவது சுகம் சந்தோஷத்திற்கும் பாத்திரராக இருக்க வேண்டுமென்பது என்னுடைய முக்கியமான எண்ணம். ஆதலால் அதற்காக அவர்களிடமுள்ள சில ஜனங்கள் கெடுக்க எண்ணங்கொண்டு அந்தக் குழந்தையைக் கைதியைப் போல் செய்ய முயற்சிக்கிறார்கள். இப்படியிருந்தாலும் அந்தக் குழந்தை வெளியே உலாவப் போய் வருமாகில் அவருக்குப் பதக்கமும் கைக்கு ஏதாவது ஆபரணங்களையும் கொடுத்து அவருடன் கூடப் போகிறவர்களுக்கு 2, 4 காரியத்திற்குப் போதுமானதைக் கொடுத்து உத்தரவிடலாம்.

26. சௌ. ராஜம்பாவும், உபலம்பாவும் சுபான்ஜி போஸலேயின் சம்சாரம் நானம்மா இவர்களிடம் தான தர்மத்திற்காகக் கொடுத்து வர வேண்டும்.

27. வியாச பூசை பதிலாக அந்தந்த மடங்களுக்குத் தானம் தர்மத்திற்குக் கொடுக்கிற வழக்கப்படி கொடுத்து வரவேணும்.

28. நம்முடைய பாயிமார்களுக்குத் தானம் தர்மத்திற்குக் கொடுக்கிறபடி வழக்கப்படி கொடுத்து வரவேண்டும்.

29. மஹாலோ மஹால்களில் நடக்கவேண்டிய அவசியமான செலவுகள் அதிகமாக இருப்பதாலும் சைனியத்திலுள்ள சிப்பந்திகளுக்கு மாதச் சம்பளம் அதிகமாக இருப்பதாலும் மஹாலோ மஹால் அவசியமான செலவுக்கு இடைஞ்சலாவதினால் சம்பளக்காரர்களின் தொகையில் மாதத்திற்கு ஐயாயிரம் அல்லது ஏழாயிர சக்கரம் கம்மி செய்து கொண்டு அந்தத் தொகையை மாதத்திற்குக் கும்பினியிலிருந்து வருகிற கிஸ்தியின் தொகைக்கு அதிகம் ஆகாமல் சம்பளக்காரர்கள் வகையறாவும் மஹாலில் நடக்கிற யுக்தமான செலவுகளைச் செய்யவேண்டியது. ஷை செலவுக்கு ஷை தொகை போதாமல் இடைஞ்சலானால் கும்பினியிலிருந்து வருஷக் கடைசியில் இதரத் தொகைகள் வருகிறதில் நடக்கிறது. பாக்கி மீதியாகிற தொகையைச் சம்பளக் காரர்களுக்குப் பாக்கிக்குக் கொடுக்கலாம்.

30. சம்பளக்காரர்களுடைய மாதச் சம்பளத்தொகையில் ஐயாயிரம் அல்லது ஏழாயிரம் சக்கரம் குறைப்பதற்குத் தங்கள் இஷ்டப்படி சம்பளம் குறைக்கலாம். வேலை விட்டுப்போகிற சிப்பந்திகளுக்கு வேறு ஏதாவது வேலை கொடுக்கிற விஷயத்தில் ரெஸிடெண்டு சாகேப் தயவுசெய்து நமக்கு நம்முடைய சமஸ்தானத்திலிருந்து கொடுக்கிறதொகையில் முந்தியே வாங்கிக் கொடுத்துச் சகாயம் செய்ய வேண்டும்.

31. பௌர்ணமிக்கு இரவில் போடவேண்டிய குண்டுகளை வழக்கப் படி போடவேண்டும்.

32. சமஸ்தானத்திற்காகப் பானகபூஜை மாமூல்படி நடக்கவேண்டும்.

மேலெழுதிய விவரப்படி நடக்கிறது.

ஸர்க்கேல் ராஜேஸ்ரீ ராமோஜி ஸர்ஜே ராவ் காட்கே

## மருத்துவ வசதிகள்

சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் 818எண் கொண்ட ஒரு கையெழுத்துச் சுவடியிருக்கிறது. அதில் மன்னர் காசியாத்திரை சென்ற பொழுது எடுத்துச் சென்ற மருந்துகளின் பெயர்கள், அளவு, எடுத்துச் சென்ற பெட்டிகளின் எண் ஆகியவை குறிக்கப் பெற்றுள்ளன. அம்மருந்துகள் அடங்கிய பெட்டிகள் எட்டாகும்; எண் 37 முதல் 44 முடிய.

மன்னருடன் ஒரு ஆங்கிலேய மருத்துவர் சென்றதாக அறியவருகிறது. அவர் பெயர் டாக்டர் ஸட்டன்* என்பதாகும். அவர் காசியில் இறந்து விட்டார். வங்காளத்தில் உள்ள கவர்னர் ஜெனரலுக்குத் தெரிவிக்கப்பெற்றது.

* Mr. Surgeon Sutton–Selections from the Asiatic Journal, Vol. XII, July to Dec. 1821, P. 419: Rajah of Tanjore's visit to Benares

உடனே டாக்டர் தலநைன் மக்லோட்[18] என்பவர் அனுப்பப் பெற்றார். இச்செய்திகள் 21—8—1821ஆம் நாளிட்ட காசி முகாமுக்கு வந்துசேர்ந்த கடிதத்தான் அறியப்பெறும்.

"பங்கால் கவர்னர்ஜனரல் ஹுஜூருக்கு எழுதிய கடிதம். ஹுஜூருடன் யாத்திரையில் கூடவந்த டாக்டர் ஸட்டன் பரலோகம் அடைந்தாரென்று எழுதியதைப் பார்த்து மனதுக்கு மிகத்துயரம் உண்டாயிற்று. இனி, தங்களுடன் இருக்க டாக்டர் தலநைன் மக்லோட் பகதூரை அனுப்பியிருக்கிறேன்"

என்பது அக்கடிதம்.[19]

17—1—1821இல் கடக் முகாமினின்று எழுதிய கடிதத்தால்[20] டாக்டர் ஸட்டன் பெற்ற சம்பளம் முதலியன தெரியவரும் :

"17—1—1821 மு. கடக்: டாக்டர் ஸட்டன் சாயேபுக்குச் சம்பளம் ரூ.720 ; முகாமில் ரூ. 200 கொடுத்ததுபோகப் பாக்கி ரூபா 520ஐ மதறாஸில் பின்னி கம்பெனியாரிடம் கொடுக்கிறது" என்பதனின்றும்,

"4—1—1821 மு. மிர்குவா: டாக்டர் ஸட்டன் சாயேபுக்குச் சம்பளம் ரூ. 700 ; அவருடைய உதவி இந்தியரான வைத்தியருக்கு ரூ. 20 ஆக ரூ. 720 ; அய்யாயரிடம் கொடுக்கிறது" என்பதிலிருந்தும்,[21]

"12—7—1821 மு. காசீ ; புதிய சமாசாரம்; டாக்டர் ஸட்டன் சாஹேப் ஜூலை 10ஆம் தேதிக்குக் காசியில் பரலோகமடைந்து தகனம் செய்யப்பட்டது. அவருடைய சம்பளம் பின்னி கம்பெனியாரிடம் கொடுத்துக் கொண்டிருப்பதைக் கொடுக்காமல் அவரிடமுள்ள இந்திய வைத்தியரின் எண்ணப்படி ஸட்டன் சாகேப் வீட்டில் கொடுக்கிறது" என்பதிலிருந்தும்,[22]

டாக்டர் ஸட்டன் என்பவர் உடன் சென்ற ஆங்கிலேய மருத்துவர் ஆவர் என்றும், அவருக்கு மாத ஊதியம் ரூ. 700 என்றும், அவருக்கு இந்திய உதவியாளர் இருந்தார் என்றும், அவர்க்குத் திங்கள் ஊதியம் ரூ. 20 என்றும், டாக்டர் ஸட்டன் 10—7—1821 இல் காசியில் இறந்தார் என்றும், அவருடைய சம்பளம் பின்னி கம்பெனியாரிடம் கொடுத்துவந்தனர் என்றும், இறந்ததும் சம்பள பாக்கியை இந்திய மருத்துவ உதவியாளர் கூறியவண்ணம் டாக்டரின் மனைவியிடம் கொடுக்கப்பட்டது என்றும் அறியப்பெறும்.

இங்ஙனம் முன் எச்சரிக்கையுடன் பலவித மருந்துகளுடன் சென்றிருந்த போதிலும், மருத்துவர் அவருடைய உதவியாளர் ஆகியோருடன் சென்றிருந்த போதிலும், மருத்துவரையே காலன் என்னும் கண்ணிலி கவர்ந்து சென்றனன்.

---

18. 5-119. 19. 5-66 20. 5-76 21. 5-76, 77
22. 5-85, 86.

மேலும் உடன் யாத்திரை சென்றோருள் மூவர் இறந்தனர் என்று காசியினின்று எழுதிய 12—7—1821ஆம் நாளிட்ட செய்திக் குறிப்பிலிருந்து[23] அறியப்பெறும். அது பின்வருமாறு :

"12—7—1821 மு. காசி: கயையை விட்டுத் நாரேணீ என்னும் ஊருக்கு வருகையில், நல்ல பலசாலியாயிருந்த வழி நடந்து வருகையில், வெய்யிலின் வெப்பம் பட்டு இருந்தாற் போலிருந்து ஸர்க்காரின் ஊழியர்கள் 3 பேர் இறந்தார்கள்."

## மங்களகிரி

பெஜவாடாவில் தங்கியபொழுது 20—11—1820இல்[23அ] எழுதிய கடிதத்தினின்று மங்களகிரியைப் பற்றிய செய்தி தெரிகின்றது. மங்களகிரியில் "பானக நரசிம்மசுவாமி கோயில்" என்ற ஒரு திருமால்கோயில் இருக்கிறது. அங்குத் திருமாலுக்குச் சங்கினில் "பானகம்" நிவேதிப்பர். இதற்காக வலம்புரிச்சங்கு ஒன்று கொடுக்கவேண்டும் என்று சரபோஜி நினைத்தார். தஞ்சை அரண்மனை சந்திரமௌளீசுவரசுவாமி அறை, பிரதாபராமசுவாமி மகால், இளைய ஆவுசாகேப் இடம் ஆகிய இடங்களில் இருக்கக்கூடிய வலம்புரிச்சங்குகளில் பெரியதாக எடுத்துத் தங்கத் தகட்டினால் அச்சங்கினை மூடிப் பஞ்சரத்னத்தின் கொத்தைக்கட்டி ஹுஜூருடைய பெயரையும் எழுதி மங்களகிரிக்கு அனுப்பி வைத்து முகாமுக்குத் தெரிவிக்க வேண்டியது என்று ஆணை பிறப்பித்தார். அதன்படிக்கு வலம்புரிச்சங்கு அனுப்பப்பெற்றிருத்தல் கூடும் என்பது உறுதி.[23ஆ]

## திருக்காளத்தி

25—7—1821ஆம் தேதியிட்ட எழுத்துச் சான்றில்[24] திருக்காளத்தியில் நிகழ்ந்த தொரு செய்தி காணப்படுகிறது.

திருக்காளத்தியில் இறைவனை வழிபடுவதற்கு மன்னர் சரபோஜி திருக்கோயிலுக்குச் சென்றார். செல்லுங்கால் மன்னரது தகுதிக்கேற்ப ஆயுதங்களைப் பரிவாரங்கள் ஏந்திச் சென்றனர். திருக்காளத்தி சமீன்தார் ஆயுதங்களை ஏந்திக் கோயிலுக்குள் செல்லக் கூடாதென்று தடுத்தார். தாம் செய்யும் வழிபாடு வீணாதல் கூடாதென்ற கருத்துடையராய மன்னர், தம் நிலையினின்று தாழ்தற்கு மனம் ஒருப்படாது, ஆயுதமின்றிச் செல்லுதல் தம் பெருமைக்கொவ்வாது என்று கருதி, இறைவனுக்கு வழிபாடாற்றாது சென்று விட்டார். அப்பொழுதே 'ஆயுதத்துடன் சென்று சுவாமி தரிசனம்

---

23. 5-124, 125 23அ. 5-114, 115, 116

23ஆ. சரபோஜியின் பெயர் பொறித்த வலம்புரிச்சங்கு இருக்கிறதா என்று மும்முறை எழுதியும் மங்களகிரியினின்று மறுமொழி வரவில்லை

24. 5-182, 183

செய்யலாம்' என்று தல மகாத்மியத்தில் இருக்கும் குறிப்பைத் தேடி எடுத்து அக்குறிப்பைக் காட்டி மீண்டும் காளத்திக்கு வருங்கால் இத்தகைய தடை நீக்கப்பெற வேண்டும் என்று கவர்னர் ஜெனரலுக்குக் கடிதம் எழுதினார்.

பின்னர்க் கவர்னர் ஜெனரலிடம் கல்கத்தாவில் விடைபெற்றுக் காசி யாத்திரை தொடர்ந்து செல்கையில் கவர்னர் ஜெனரலும் திருக்காளத்தியில் மன்னரது பெருமைக்கேற்ப இறைவழிபாடு நடைபெறும் என்று கூறியதாக உள்ளதால், மன்னரது மனக்கருத்து நிறைவேறியதாகவே கருதலாம். 25—3—1822இல் இரண்டாவது முறை காளத்திக்குச் சென்றுள்ளார்[24அ].

## கல்கத்தாவில்

25—7—1821இல் எழுதிய கடிதத்தில் கல்கத்தாவில் நிகழ்ந்த செய்திகளின் சுருக்கம் தரப்பெற்றுள்ளது.

அந்நாட்களில் கவர்னர் ஜெனரல் தங்கியிருந்த தலைநகர் கல்கத்தாவாகும். அங்கு ஸல்காகாட்[25] என்ற இடத்தில் மன்னர் முகாம் செய்தார்; மன்னருக்கென்று ஏற்பாடு செய்யப்பெற்ற பங்களாவில் தங்கினார்; பின்னர்க் கவர்னர் ஜெனரலை நேரில் பார்த்தார்; ஒருவர் மற்றொருவரை நலன் விசாரித்துக்கொண்டனர்.

பின்னர், மன்னர், கவர்னர் ஜெனரலிடம் தமக்கு ஒரே மகன் என்றும், ரெஸிடெண்டு சாஹேப் இடம் ஒப்புவித்துத் தாம் யாத்திரையில் வந்திருப்பதாகவும், தம்முடைய மகன் தம்முடைய சிங்காதனத்தை அடையவேண்டும் என்றும், அரசாங்கத்தின் தயவுக்குத் தம் மகன் உரியவராக வேண்டும் என்றும் கூறியதற்கேற்பக் கவர்னர் ஜெனரல் ஆனவர் கைமேல் கையைக் கோத்து நம்பிக்கையைக் காட்டினார்[26].

கல்கத்தாவுக்குச் சென்றபொழுது ஸல்காகாட்டில் ஸல்காகாட்டின் ஜட்ஜ் ப்யாரவேல் அவர்கள் எதிர்கொண்டு அழைத்துச் சென்றார்[27]. இது 23—2—1821இல் நிகழ்ந்தது. 26—2—1821இல் கல்கத்தாவுக்குப் போகவர இரண்டு கப்பல்கள் நியமனம் செய்யப்பெற்றன. கல்கத்தாவைச் சுற்றிப்பார்க்க நான்கு சாரட் வண்டிகள் ஏற்பாடு செய்யப்பெற்றன.

ப்யாரவேல், சென்னையினின்று வந்த ஜார்ஜு ஸட்டன், ஜிவாஜி மொஹிதே ராவ் சாஹேப், பாபுராவ் இங்களே, ராமராவ் ஜாதவ், ஐயாக் கண்ணுப்பிள்ளை, தாவத்பிள்ளை ஆகியோர் உடன் சென்றனர். கப்பலில் எதிர்க்கரையை அடைந்தனர். பாரசீகச் செயலாளர் பிரின்சிப் சாஹேப், மன்னரை எதிர்கொண்டழைத்து 4 குதிரை சாரட்டில் உட்காரவைத்து அழைத்துச் சென்றார். கவர்னர் ஜெனரலின் பங்களாவுக்குப் போனதும்,

24அ. 5-46 25. 5-184 26. 5-185 27. 5-189

இரண்டு வெள்ளையர் — காரியதரிசிகள் — எதிர்வந்து, கட்டித் தழுவிக் கொண்டு, மாடிக்கு அழைத்துச் சென்றனர். அங்குப் பெரிய அவை கூடி யிருந்தது. மன்னர் வந்ததும் யாவரும் எழுந்திருந்தனர். கவர்னர் ஜெனரல் 20, 30 அடி எதிரே வந்து மன்னரைக் கட்டித் தழுவிக்கொண்டு வணக்கம் செலுத்தினார்; வந்தவர்களுடைய வணக்கத்தை ஏற்றுக்கொண்டு, மன்னரின் கையைப் பிடித்துக்கொண்டு, தன் இருக்கைக்குப் பக்கத்தில் ஓர் இருக்கையில் அமர்வித்தார். பேசவேண்டிய செய்திகளைப் பேசிய பிறகு இசைவுபெற்றுப் புறப்பட்டுக் கப்பல் ஏறி இருப்பிடத்துக்கு மன்னர் வந்து சேர்ந்தார்[28].

27—2—1821 விடியற்காலை[29] பாரசீகச் செயலாளர் வந்து பதக்கம் சால்வை முதலியவற்றை எல்லோருக்கும் கொடுத்தார். பிஷப் ஊரில் இல்லை; ஆகையால் அவருடன் இருந்த சில பாதிரிகள் மன்னரைப் பார்த்துச் சென்றனர். பிற்பகல் மன்னர் கல்கத்தாவில் மகாகாளியைத் தரிசனம் செய்தார்.

28—2—1821 ஸல்காகாட்டின் ஜட்ஜ் அவர்களின் வீட்டிற்குச் சென்று, பின் கும்பினியின் தோட்டத்தைப் பார்த்தார். அத்தோட்டம் மிகப்பெரிய செலவில் அமைக்கப்பட்டது. ஆகவே அத்தோட்டத்தில் இல்லாத மரம் செடி கொடிகள் இல்லை என்னலாம்[30].

2—3—1821 காலை கல்கத்தா கோட்டையையும் அதிலுள்ள "ஸ்டோ" ரையும் மன்னர் பார்த்தார். அக்கோட்டைக்கு மேற்குப் பக்கம் அகழியாகக் கங்கை இருந்தது. கோட்டையின் வாசலில் அகழியை மூன்று தரம் கடக்க வேண்டும். அகழியில் தண்ணீர் இல்லை; புல் வளர்ந்திருந்தது. எனினும் தண்ணீர் நிரப்பவேண்டும் எனில் எளிதில் நிரப்ப வசதியுண்டு. ஆயுத சாலையில் துப்பாக்கிகள் 40,000; பீரங்கிகள் 500; எப்பொழுதும் பீரங்கிகள் துப்பாக்கிகள் குண்டுகள் முதலியன செய்யப்பட்டு வருதலைக் கண்டு, மாலையில் கப்பல்களைக் கண்டார்.[30அ]

27—2—1821 பிஷப் ஊரில் இல்லை; சிலரை அனுப்பியிருந்தார். ஆகையால் 3—3—1821இல் மன்னர் பிஷப்பைப் பார்க்கச் சென்றார். அங்குச் சில பாதிரிகள் மன்னரை எதிர்கொண்டழைத்தனர். பாதிரியார் உட்காருகிற இடம், பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள், அவர்கள் தங்கும் இடம் முதலியவற்றை மன்னர் கண்டார்.[31]

---

28. 5-143, 144, 145    29. 5-145

30 5-146; Botanical Gardens – These gardens were laid out on 270 acres of land at Subpur, district Howrah, 10 Kms to the south of Howrah Railway station in 1786. It is the oldest of Indian Botanical Gardens. There are from 30 to 50 thousand varieties of plants and trees. Besides the trees, there are hundreds of species of flowers and orchids" — Imperial Gazateer of India

30அ. 5-140, 149    31. 5-151

4—3—1821 சூரிய கிரகணம்.

5—3—1821 கப்பல் கட்டுதல் கப்பற்படைக்குரிய பொருள்கள் வைத்திருத்தல் ஆகிய செயல்களுக்குரிய ("Navy Dockyard") கப்பல் துறையகத்தை மன்னர் பார்த்தார். கப்பலின் நீள உயரம் அகலம் ஆகியவற்றுக்குத் தகுந்தபடி ஒரு பள்ளம்; சுற்றிலும் படிகள்; வேலை செய்யும் ஆட்கள் இருந்து வேலை செய்வதற்குரிய விசாலமான இடம்; பள்ளத்தின் மேற்குப்புறம் கங்கை நதியின் தண்ணீர் வருவதற்குரிய வழி; தண்ணீர் வராமல் தடுக்கப் பலகை; மழையினாலும் ஊற்றினாலும் தண்ணீர் தேங்கினால் இறைப்பதற்குக் குழாய்கள். வேலை முடிந்ததும் திறந்துவிட்டால் பள்ளத்தில் தண்ணீர் நிறைய் வரும். இங்ஙனம் கப்பல் கட்டும் இடத்தையும் பார்வையிட்டார் மன்னர் பெருமான்[32].

8—3—1821இல் மன்னர் கல்கத்தாவினின்று புறப்படக் கவர்னர் ஜெனரல் அவர்களிடம் விடைபெற்றார். கவர்னர் ஜெனரல் மன்னருக்கு ஒரு துப்பாக்கி, கடிகாரம், தங்க முலாம் பூசிய வெள்ளி ஹௌதா, கங்கா யமுனா என்ற பெயருள்ள ஒரு தந்தமுள்ள யானை, பலவிதமான மரங்களின் விதைகள் ஆகியவற்றைப் பரிசிலாகக் கொடுத்து, அத்தர் பன்னீர் வெற்றிலைப்பாக்கு இவற்றையும் கொடுத்து விடையளித்தார்.

பின்னர் ஸ்ரீராம்பூருக்கு மன்னர் சென்று காகிதம் செய்யும் இடத்தையும், ஆங்கிலம், பிரஞ்சு, பார்சீ, மராட்டி, குஜராத்தி, தெலுங்கு, தமிழ், பங்காலி, நாகரம் முதலிய எழுத்துக்களைத் தயாரிக்கும் இடமும், அவற்றைக் கொண்டு அச்சிடும் இடத்தையும் பார்த்தார்.

9—3—1821இல் படகேறிச் சென்று வெடி மருந்துச் சாலையை மன்னர் பார்த்தார்; வெடிமருந்து தயார் செய்யும் வகையையும் கண்டார். பித்தளை குண்டுகளைப் போட்டு மூன்று பீரங்கிகளில் வெடித்துக் காட்டப்பெற்றது. அன்றிரவு அங்கேயே இருந்து, 10—3—1821 மறுநாட்காலை கயைக்குப் புறப்பட்டார் மன்னர்.[33]

## கயை

காசிக்குச் செல்பவர் காசியாத்திரை முடித்துக்கொண்டு கயைக்குச் செல்வதே பெருவழக்கு. சரபோஜி காசியை அடைவதற்கு முன்னரும் காசியிலிருந்து திரும்பிய பின்னரும் ஆக இருமுறை கயைக்குச் சென்று தங்கி இருந்தார் என்பதை 24—4—1821, 4—5—1821, 22—5—1821, 24—4—1821, 4—11—1821 ஆகிய தேதியிட்ட எழுத்துச் சான்றுகளால் அறிய வருகிறது.

"இன்றைய தினம் ஹுஜூரின் சவாரி கயைக்கு வந்தது. நாளை முதற்கொண்டு "கயாவர்ஜனம்" தொடங்கும். ஹுஜூரானவர் "அஷ்டகயை"

---

32. 5-152 33. 5-153, 158

செய்வதாக இருக்கிறார். அது விடாமல் நடந்தால் 45 நாட்கள் ஆகும். இதன் நடுவில் வருஷத் திவசம் ஏதாவது வந்தால் அந்த நாட்கள் அதிகம் ஆகும். எனவே இந்த க்ஷேத்திரத்தில் 50 நாட்கள் தங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. பின்னரே ஸ்ரீகாசிக்குப் பயணம்"

என்று 4—5—1821இல் எழுதிய எழுத்துச் சான்றில்[34] காணப்படுகின்றமையின் காசியை அடைவதற்கு முன்னரே கயையில் 50 நாட்கள் தங்கிப்பின் காசியை அடைந்தார் மன்னர் என்பது அறியப்பெறும்.

"மார்ச்சு மாதம் 10ஆம் நாள் கைரஷ்டி முகாமில் இருந்து மகூதாபாத், பாகல்பூர், அஜிமாபாத் முதலிய நகரங்களைப் பார்த்துக்கொண்டு மே மாதம் 4ஆம் நாள் கயைக்கு வந்தோம்"

என்ற எழுத்துச் சான்றினால்[35] 4—5—1821இல் மன்னர் கயை க்ஷேத்திரத்தை அடைந்தார் என்பது உறுதியெய்தும்.

கயை ஒரு மலையின்மேல் இருக்கிறது. அங்குள்ள வீடுகள் வசதி யில்லாதவை; சிறியவை; தெருக்கள் அகலம் இல்லாதவை; ஒரு யானையைச் செலுத்திச் செல்லாதவாறு குறுகியவை. கயை அரசரின் அரண்மனை சாஹேப் கஞ்ச் என்னும் இடத்தில் உள்ளது. அதில் மன்னர் தங்கினார். கயை அரசனின் பெயர் மித்ரஜித் சிங்கு என்பது ஆகும். இந்த அரசர் டிமிரி என்னும் ஊரில் இருப்பவர் ஆகையால் தன் அரண்மனையைச் சரபோஜி மன்னர் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தார். கயையைச் சரபோஜி அடைந்த நாள் "அக்ஷய திருதியை" ஆகும்.

சரபோஜி அரசர் "அஷ்ட கயை" செய்தார். சிலர் பஞ்ச கயை; சிலர் ஏகோத்திஷ்ட கயை. அஷ்ட கயைக்கு 47 திவசம்; பஞ்ச கயைக்கு 37 திவசம்; ஏகோத்திஷ்டத்திற்கு 3 திவசம். அரசர் அஷ்ட கயை செய்ய உடன் போந்தவர்கள் தம்மால் ஆன முறையில் 2, 4, 7, 5 வீதம் திவசம் செய்து முடித்தார்கள்[36].

## பூரி ஜகந்நாத்

இது ஒரு மிகப் பழமையான தலம்; மிகச் சிறந்த தலமும் ஆகும். அக்கோயிலுக்குப் பல அரசர்களின் அறக்கட்டளைகள் உண்டு. சரபோஜி மன்னர் அவர்கள் இத்தலத்தில் தருமம் ஒன்று ஏற்படுத்த நினைத்தார். நாடோறும் 12 பானைகள் சாதமும் பருப்பும் கறிகளும் சமைத்து நிவேதனம் செய்யவேண்டும் என்றும், அந்நிவேதனத்தைக் குருடர்கள் முடவர்கள் முதலியோருக்குக் கொடுத்தல் வேண்டும் என்றும், நிபந்தம் ஏற்படுத்தி நாளொன்றுக்கு ரூ. 2 வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 720 வீதம் ஆண்டு

34. 5-03, 104 35. 5-165 36. 5-167, 168

தோறும் அனுப்புவதாகக் கூறி ஓராண்டுக்குரிய தொகையைக் கோவில் அதிகாரியும் தாசில்தாருமான ஸ்ரீராம்போஸ் என்பவரிடம் கொடுத்தார்[37].

20—1—1821 தேதி கொண்ட ஆவணம்[38] பூரி ஜகந்நாத் எனும் க்ஷேத்திரத்தில் சரபோஜி மன்னர் புஷ்பாஞ்சலி செய்து வழிபட்ட சிறப்பினைக் கூறுகிறது. மன்னர் தம் இரண்டு கைகளாலும் மலர்களைத் தூவி வழி படலானார்; மனநிறைவு ஏற்படவில்லை; உடன் வந்தவர்கள் கையிலும் மலர்களை அளித்துப் புஷ்பாஞ்சலி செய்வித்தார்; பின்னர் இறைவனின் திருவடிகளில் தனது தலையை வைத்து வணங்கினார். உடன் வந்தவர் அனைவரும் அங்ஙனமே இறைவனின் திருவடிகளில் தலை வைத்து வணங்கினர்.

ஜகந்நாத் என்னும் திருத்தலத்தில் ஏழுகாலம் நிவேதனம் செய்யப் படுகிறது. நிவேதனம் செய்வதற்குப் "போக சமர்ப்பணம்" என்று பெயர். 1. விடியற்காலை - பால போகம்; 2. 8 மணிக்குப் பொங்கல் போகம்; 3. 10 மணிக்குச் சத்திர போகம்; 4. 12 மணிக்கு மத்தியாந்ந போகம்; 5. சாயங்கால வேளை ஸந்த்யா போகம்; 6. இரவு 11 மணிக்குத் தாண்டே சிங்காரம்; 7. இரவு 1 மணி அர்த்தஜாமம் - போகபேண்ட போகம்.

முதலில் சாதம் வகையறா; இரண்டாவது பொங்கல்; மூன்றாவது பதார்த்தங்களுடன் அன்னம்; நான்காவது நெய் போட்ட சாதம்; ஐந்தாவது பூரி முதலியன; ஆறாவது இனிப்பான பாயஸம் முதலியன; எழாவது இளநீர் நிவேதிக்கப்படும். ஆறு நிவேதனங்களுக்கு 56 வகையான பண்டங்கள் நிவேதனம் தரப்பெறும். இவற்றுக்கு 56 போகமென்று பெயர். சுவாமிக்குப் பூசை நிவேதனம் முதலியவற்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 56341 செலவு. இந்தத் தலத்தில் பொங்கல் சமயத்தில் சிறப்பு விழா நடைபெறும்; அதற்கு "மகர யாத்ரா" என்று பெயர். வங்காளம், காசி, கல்கத்தா முதலிய இடங்களிலிருந்து மக்கட்கூட்டம் வரும்.

இத்தகைய சிறப்புத் திருநாளைக் கண்டு களித்த மன்னர் போகி பொங்கல், மாட்டுப்பொங்கல் ஆகிய மூன்று நாட்களும் அத்தலத்தில் தங்கி யிருக்க நினைத்தவர், மறுநாள் பால போகமும், அடுத்தநாள் புதன்கிழமை பொங்கல் போகமும், வியாழக்கிழமை தாண்டே சிருங்கார போகமும், வெள்ளிக் கிழமை சாயங்கால போகமும் இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காலத்தில் மன்னர் தரிசனம் செய்து கொண்டார்.

## தேவகர் என்ற தல வரலாறு[39]

பூரி ஜகந்நாதம் என்ற தலத்தைப்பற்றியும் அத்தலத்தில் புஷ்பாஞ்சலி செய்த விவரமும் விளக்கமாக எழுதியதுபோலத் "தேவகர்" என்ற தலத்து வரலாறும் சிறப்பாக மோடி எழுத்துச் சான்றுகளில் காணப்படுகிறது.

---

37. 5-181 38. 5-182 முதல் 195 வரை 39. 5-96 முதல் 104 வரை.

ஸல்காகாட்டிலிருந்து [39அ] பாகல்புரம் வரையிலும் கங்கைக்கரையிலேயே செல்ல வேண்டும். பாகல்புரத்துக்குத் தெற்கே " ஜாடகண்ட வைத்தியநாத " என்ற பெயருடைய தலமிருக்கிறது. இதற்கு மறு பெயர் " தேவகர் " என்பது.

இராவணன் திருக்கயிலையினின்று புறப்படுகிறான்; சிவபெருமானுடைய திருவருளால் நினைத்ததை அருள வல்லதும் சுயம்புவும் ஆகிய சிவலிங்கத்தைப் பெற்றுக்கொண்டு இலங்கைக்குச் செல்கிறான். வழியில் அச்சிவலிங்கத்தைக் கீழே வைக்கவேண்டிய வற்புறுத்தல் ஏற்பட்டது. அப்பொழுது அந்தண வடிவத்தில் திருமால் தோன்றினார். அவரிடத்தில் இராவணன் சிவலிங்கத்தைக் கொடுத்தான். திருமால் அதனைக் கீழே வைத்தார்; வைத்தவுடன் அச்சிவலிங்கம் அவ்விடத்திலேயே நிலைத்து விட்டது. இராவணன் அச்சிவலிங்கத்தைப் பூசனை புரிந்தான். "வைத்யன்" என்னும் வேடன் ஒருவனும் பூசித்தமையின் அச்சிவலிங்கப் பெருமானுக்கு "வைத்யநாத" என்ற பெயர் வரலாயிற்று. அப்பெருமானுக்குக் கங்கா அபிஷேகம் மிக விருப்பம் ஆகையால் கங்கோத்திரி, ஹரத்வார், பிரயாகை, கல்யாண்பூர், கங்காசாகர் என்ற இவ்வைந்து இடங்களிலிருந்து ஒவ்வொரு நாளும் பலநூறு காவடிகள் வருகின்றன. மகா சிவராத்திரி நாளில் மட்டும் $1\frac{1}{4}$ லக்ஷம் காவடிகள் வருகின்றன.

யாத்திரைக்கு வருபவர்கள், சுவாமி அம்மன் கருவறைகளுக்குரிய விமானங்களில் கொடிகளைக் கட்டுவர். அதற்குக் கோடி என்று பெயர். அவ்விரண்டு விமானங்களின் சிகரங்களுக்கும் சேர்ந்தாற்போலத் தலைப்பாகையைக் கட்டுவதும் உண்டு. இதன் நீளம் சுமார் 105 முழம். யாத்திரை செய்பவர்கள் காலை 2 நாழிகை முதல் 12 மணி வரையிலும் தம் கையாலேயே பூசை செய்வார்கள். வருகிற பெருமை பொருந்திய பக்தர்களுக்குச் சன்னிதியில் பிரசாதம் கொடுக்குங்கால் சிகரத்துக்குக் கட்டிய கொடியிலிருந்து ஒன்றைத் தலைக்குக் கட்டுவது வழக்கம். கௌரி, பார்வதி என்று இரண்டு அம்மன்கள். சிவலிங்கம் மிகச் சிறியது; தலையிற் கொஞ்சம் அமுங்கினாற்போல் இருக்கும்; பிராகாரத்தில் துர்க்கை முதலிய பரிவார தேவதைகள் உண்டு. கோவில் பெரிய பிராகாரத்தில் மூன்று வாயில்கள் உண்டு. தெற்குப்புறம் வாயில் இல்லை. கோவிலின் தென் கிழக்கில் " சந்திரகூபம் " என்று ஒரு தீர்த்தம். அதில் பஞ்ச கங்கை வசிப்பதாக ஐதீகம்.

மன்னர் சந்திரகூபத்தில் நீராடினார்; கோதானம் செய்தார்; விபூதி உருத்திராக்கங்களைச் சூடிக்கொண்டு சுவாமிக்குப் பஞ்ச கங்கையின் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தார்; பூசை செய்தார்; பின்னர்த் தம்முடன் வந்தவர்கள் எல்லோருக்கும் கங்கா தீர்த்தத்தை வாங்கிக்கொடுத்து அபிஷேகம் செய்வித்தார்; பின்னர், சுவாமி அம்மன் விமான சிகரங்களுக்கு ஜரிகைக் கொடியைக்

39அ. 5-189 (கல்கத்தாவினுள்ள ஒரு பகுதி)

கட்டுவித்தார்; பட்டுத் துணியினால் இரண்டு விமான சிகரங்களும் ஒன்று சேரும்படி சுற்றினார். யாவரும் மகிழ்ச்சி எய்தினர்.

## காசியில் தங்கியமை

மன்னர் 10—7—1821இல் காலை 8 மணிக்குக் காசியை அடைந்தார். 12—7—1821இல் எழுதிய மடலினின்று[40] ஆஷாடசுத்ததசமி செவ்வாய்க்கிழமை (ஜூலை 10ஆம் நாள்) காசியை அடைந்ததாகவும், காசியில் காசித் தம்பிரானுடைய மடத்தில் இறங்கியதாகவும், வந்தநாள் க்ஷேத்திர உபவாசமும் தீர்த்த விதியும் செய்ததாகவும், மறுநாள் மணிகர்ணிகா ஸ்நானமும தீர்த்த சிரார்த்தமும் செய்ததாகவும், மழைக்காலமாக இருந்ததால் அத்தலத்தில் சிலகாலம் தங்குவதாக நிச்சயித்திருந்ததாகவும், விஜயதசமிவரையில் தங்கியிருக்கத் தீர்மானித்திருந்ததாகவும் அறியவருகின்றன.

காசியினின்று 11—9—1821இல் எழுதிய குறிப்பொன்றில்,[41]

"நம்முடையவும் நம்முடன் கூட இருப்பவர்களுடைய சந்தோஷத்திற்காகவும் பாத்ரபத பஹுளா திவிதியை வியாழன்–செப்டம்பர் 13வ வரையில் இங்குத் தங்கி 14வ பிரயாகைக்குப் போய் அந்த யாத்திரையை முடித்துக் கொண்டு"

என்றிருப்பதால் 13—9—1821 முடியக் காசியில் மன்னர் தங்கியிருந்தார் என்பது பெறப்படும். ஆனால் அதற்கு அப்பாலும் மன்னர் காசியில் தங்கியிருந்தார் என்பதும், அதற்குரிய காரணமும், 4—10—1821இல் காசியிலிருந்து எழுதிய கடிதச் சான்றினால்[42] தெரியவரும்.

"செப்டம்பர் 13ஆம் தேதிக்குப் பிரயாகை யாத்திரை புறப்படுகிறோம் என்று எழுதியிருந்தோம். அதன்படியே ஸவாரியும் தயாராயிற்று. ஆனால் அதற்கு முன் நன்றாக நின்றிருந்த மழை, கிழக்குத் திசையிலிருந்து அடிக்கும் கெட்ட காற்றுடன் ( மழை ) பெய்வதால் பாத்ரபத பஹுளா அமாவாசைக்குப் பிறகு, ஆஸ்விஜ சுக்ல பாட்டிமை முதல் எப்பொழுதாவது வெய்யில் எப்பொழுதாவது மப்பு இமமாதிரி இருக்கிறது. இதனால் மேற்படி (அக்டோபர்) மாதம் 26வ புறப்படுவதாக இருந்தோம்"

என்பதனால் 26—10—1821இல் காசியிலிருந்து புறப்பட நினைத்தார் என்பது பெறப்படும்.

19–10–1821வ கடிதம்[43] "ஆஸ்விஜ கிருஷ்ணபக்ஷ பஞ்சமி திங்கட்கிழமை காலை 4 மணிக்குப் புறப்பட்டுப் பிரயாகைக்குப் போகிறோம்; அங்கிருந்து புறப்பட்டு நாகபூர், ஹைதராபாத், கர்நூல், கடப்பை, திருப்பதி, ஸ்ரீகாளஹஸ்தி, சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், மாயவரம் வழியாகத் தஞ்சை வர நிச்சயித்திருக்கிறது" என்றும்,

---

40. 5-125, 126 41. 5-72, 78 42. 5-117 43. 5-120

"31-10-1821 கடிதம்[44] 23வ க்குப் பிரயாகைக்கு வந்து அங்குள்ள தீர்த்த விதிகளை ஒழுங்காகச் செய்தாயிற்று"

என்றும் எழுதியுள்ள பகுதிகளால் 23-10-1821வ காசியைவிட்டுப் பிரயாகைக்குப் புறப்பட்டார் என்பது தெளிவு.

## சிதம்பரத்தில் இளவரசர் வரவேற்றது

7-4-1822ஆம் தேதியிட்டதும் ரடணே என்ற முகாமிலிருந்து எழுதப் பெற்றதுமான கடிதத்தில்[45] சரபோஜி மன்னர் சிதம்பரத்தையடையும்பொழுது செய்ய வேண்டிய வரவேற்பு முறைகள் விவரமாக எழுதப்பெற்றுள்ளன.

14-4-1822ஆம் தேதி காலையில், சி. சின்னதிவான் சாயேப் (இளவரசர்) மகாராஜாவைப் பார்க்கச் சிதம்பரத்திலிருந்து முன்னால் வருவார். மன்னரின் சவாரிக்குரியவர்கள் ஒரு பக்கமும் சேனைகள் ஒருபக்கமும் ஆக இரண்டு பக்கங்களிலும் கோவையாக நிற்றல் வேண்டும். நடுவிலுள்ள இடத்தில் சின்ன திவானின் சைன்யங்கள், முன்னால் கொடியுடைய யானை, ஹுஜூரின் யானை வரைக்கும் நிற்றல் வேண்டும். சின்ன திவான் சாயேப் உள்ளே புகும்பொழுது சிப்பாய்கள், "**ஜோஹர் பரங்க! ஜோஹர் யந்த்ர!**" என்று சொல்வர். அம் மரியாதையைச் சின்ன திவான் ஏற்க வேண்டும்.

பின்னர் லெப்டினண்ட் கர்னல் வில்லியம் பிளாக்பர்ன், ரெஸிடெண்டு சாயேப், சின்ன திவான் சாயேபைச் சர்க்காரின் கார்பாரியோடு அழைத்துக் கொண்டு, ஹுஜூரிடம் (மன்னரிடம்) வருவர். அப்பொழுது பீரங்கிகள் முழங்கும். சி. ரா. இளைய திவானுடைய கையை ரெஸிடெண்டு பிடித்து ஹுஜூருடைய கையில் ஒப்பிப்பார். எட்டுக்குண்டுகள் முழங்கும். ஒவ்வொரு பக்கத்தில் மூன்று சலாம்கள் வீதம் இரண்டு பக்கம் ஆறு சலாம்களை ஏற்க வேண்டும். ரெஸிடெண்டு சாஹேப் இளைய திவான் சாஹேபை ஹுஜூரிடம் ஒப்பித்த உடன் ஹுஜூரானவர் ரெஸிடெண்டுக்குக் கல் அழுத்திய நகையைக் கொடுப்பார்.

பின் சி. ரா. இளையதிவான் சாயேப் ரெஸிடெண்டு சாயேப் இருவரையும் டாக்டர் பி. மக்லோட் சாஹேப் வந்து காண்பார். பின் இளைய திவானை அழைத்துக்கொண்டு, மன்னர் சௌ. மா. பாயி சாஹேபிடம் செல்வர். சௌ. பாயி சாஹேப் இளவரசருக்கு முத்துமாலை யொன்றை ஆசி கூறித்தருவர்.

பிறகு இளவரசர் ரெஸிடெண்டு சாஹேப் நின்று கொண்டிருக்கும் இடத்துக்குச் செல்வர். கவர்னர் ஜெனரல் மன்னருக்கு அளித்ததும், "கங்கா ஜமுனி" என்று பெயர் உள்ளதுமான யானையை ஹௌதாவுடன் சி. ரா.

---

44. 5-121 45. 5-28 முதல் 87 வரை

இளைய திவான் சாயேபுக்கு மன்னர் அளித்து அதில் உட்காரவைப்பார். இரண்டு வேறு ஹெளதாக்களில் ரெஸிடெண்டு சாயேபும் டாக்டர் சாயேபும் அமர்வர். அப்பொழுது சிப்பாய்கள் எல்லோரும் "ஜோஹர் பரங்க! ஜோஹர் யந்த்ர !" என்று கூறுவர்; "ஹரஹர மஹாதேவ" என்று கூறித் தம்மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். பின்னர் இளைய திவான் சாயேபின் கொடியேற்றிய யானையும் அதன் பின் அவருடன் வந்தவர்களும் ஒருங்கு சேர வேண்டும். மன்னருடன் வந்தவர்கள் வரிசையாக ஒருங்கு சேர்ந்து செல்லவேண்டும். அப்பொழுது கார்பார் முதலியவர்கள் மன்னரிடம் வந்து மரியாதை செலுத்தித் தம் இடங்களுக்குப் போகவேண்டும். செள. மா. பாயி சாயேப் அவர்களுடைய பல்லக்கு முன்ஹ ஹுஜுரின் சவாரி; ஹுஜுர் இங்கிலீஷ் தேசத்துக் குதிரையில் சவாரி செய்வார். அவர்களுக்குப் பின் குதிரையில் ஏறும் பெரிய கார்பாரிகள், அவர்களுக்குப் பின் 'பார்சீர்கள்(?) அவர்கட்குப் பின் "கில்லே நார்கள்", அவர்கட்குப் பின் பல்லக்குகளும் வண்டிகளும் வருதல்வேண்டும். இந்த முறையில் சவாரி வருங்கால் யாவரும் தம் சவாரியைக் குறுக்கே கொணர்ந்து முறையைக் கெடுக்கக்கூடாது.

குறிப்பு :- இந்தச் சந்திப்பு விவரங்களைப் படம் போட்டுக் காட்டியிருப்ப தாக அந்த ஆவணத்தில் ஒரு குறிப்பு இருக்கிறது. மோடிக் கட்டுக்களைப் பார்ப்பின் கிடைக்கலாம். மேலே விவரித்த முறையில் நடந்தேறவும் இரு சாராரும் விளங்கிக் கொள்ளவும் வஜராத்மா பாபுராவ், அமிருதராவ் இங்களே ஆகியோர் ஒருநாள் முன்னே வந்து படத்தில் கண்டவண்ணம் இரு சவாரி களும் சேரும் விதத்தை நன்கு விளக்குவர் - என்றுள்ளதால் ஒருநாள் முன்னதாகவே ஒத்திகை (rehearsal) நடந்ததாதல் வேண்டும்.

## மன்னர் தஞ்சையை அடைந்தமை

திருவையாற்றிலிருந்து 23-4-1822இல் எழுதிய எழுத்தினின்று[46] மறுநாள் அதாவது 24-4-1822இல் மன்னர் தஞ்சையை அடைந்தார் என்று அறியவருகிறது.

"முகாம் திருவையாறு 23-4-1822 : ஹுஜுரின் சவாரி நாளை புதன்கிழமை 3 மணிக்கு இங்கிருந்து புறப்பட்டு 4 நாழிகைப் பொழுது இருக்கும்போதே கோட்டைக்கு வரப்போகிறார். ஆகையால் பட்டணத்தை அலங்காரம் செய்தும், அரண்மனையில் தோரணம் வாழை மரம் கட்டிப் பூரண கலசம் வைத்து அலங்கரித்தும், இரவில் சாப்பாடு தண்ணீர் வகையரா தயாரா யிருக்கும்படி ஏற்பாடு செய்யவும் ........... மாடியில் ஹுஜுரின் உட்காருகிற ஜமுக்காளம் விரித்துத் தயாராயிருக்கட்டும். ஹுஜுர் சவாரியுடன் வெள்ளை யர்கள் வருகின்றார்கள். மாடியில் நாற்காலிகளைப் போட்டுச் சபை சித்தமாய் இருக்கவேண்டும். புஷ்பம், நெட்டி 15, சந்தனம், வெற்றிலை, பன்னீர், அத்தர் சித்தமாயிருக்கட்டும். இவைகளில் அத்தர்தானி என்பதை இவ்விடம் இருந்து அனுப்புகிறோம்"

---

46. 5-40

என்ற விவரக் குறிப்பால்[47] மன்னர் சுகமாகத் தஞ்சையை அடைந்தமை பற்றிய செய்தி புலனாகிறது.

## காசியாத்திரையின் பயன்

காசி இந்தியாவிலுள்ள ஏழு புண்ணியத் தலங்களுள் ஒன்று. இந்துக்களுக்குச் சிறந்த யாத்திரைத் தலம். காசி யாத்திரையின் பயன் தீர்த்த யாத்திரை செய்த புண்ணியம் ஒன்றே யாவருக்கும் கிடைப்பது. தஞ்சையினின்று யாத்திரை மேற்கொண்ட அரசர், வழி நெடுகவுள்ள சிறந்த தலங்களைத் தரிசித்தார்; இடையில் உள்ள நதிகளில் நீராடினார். இத்தகு புண்ணியங்களைப் பெறுதற்கு மட்டும் மன்னர் சென்றார் எனில் அதனைப் பெருமையாகக் கருதுவதற்கில்லை.

உடன் சென்றவர்கள் 3000 பேர். அவர்களும் காசியாத்திரையான் ஆய புண்ணியத்தைப் பெற்றனர். இங்ஙனம் "புண்ணியம் பெறுமாறு செய்தார்" மன்னர்பிரான். இதனால் பல நூறு மக்கள் மகிழ்ச்சியடைந்தனர் என்பது சொல்லாமலே அமையும். இது மன்னர்க்குச் சிறப்புத் தந்ததென்று கோடலும் பொருந்தாது.

மன்னர் ஒரு கல்விமான். சென்ற இடங்களிலெல்லாம் ஏடுகள் தேடியவர். தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள நூல்களையும் பிறர் அறியச் செய்தார். 26—1—1822இல் இங்கண்காட்டிலிருந்து அனுப்பிய ஆணையில்,[48]

"ஆங்கிலக் கதைகளை மராட்டிய மொழியில் தேவநாகரி எழுத்தில் அச்சிட்ட புத்தகம் நவவித்யா கலாநிதி பள்ளியில் இருக்கிறது. அதில் ஒரு புத்தகத்தை ஸவாரி முகாமுக்கு அனுப்பவும்"

என்றிருப்பதால் இது உறுதியெய்தும்.

சில துறைகளில் திறமையுடையவர்களை யாத்திரை செய்கையில் மன்னர் நியமித்துள்ளார்.

31--3--1821 முகாம் கதளகாவ்: இங்கிருந்து வந்த ஆணையினின்று[49]

"கப்பல் வேலையை நன்கு பார்க்கிற தச்சன் வெள்ளைக்காரன்-யுஷ்டவிகஷ என்பவன் 180 ரூபா மாதச் சம்பளத்தில் நியமிக்கப் பெற்றான்"

என்பது அறியப்பெறும்.

30—3—1822 முகாம் திரௌபதாம்பாபுரம்: இங்கிருந்து வந்த குறிப்பில்[50]

---

47. 5-40, 41 48. 5-28 49. 5-68 50. 5-12

"காசி ஸவாரியிலிருந்து வேலைக்காரனாகி வந்தவன் தற்காலம் தஞ்சாவூரிலிருக்கும் வாத்தியக்காரன் அகனீஸ் புருஸ் என்பவனுக்கு "ஐரிஷ்பைப்" என்னும் வாத்தியத்தை அவனிடம் இருக்கிறது. அவனுக்குச் சம்பளம் ரூ. 45"

என்றுள்ளது. (மோடி எழுத்தில் உள்ளதை மராட்டிய மொழியில் எழுதிப்பின் இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழாக்கம் செய்த மோடி அறிஞருடைய தமிழ் ஆக்கத்தில் வாக்கிய அமைப்புச்சரியாக இல்லை எனினும்) ஒரு வெள்ளையன் - அகனீஸ் புருஸ் என்ற பெயரினன் - "ஐரிஷ் பைப்" என்ற வாத்தியத்தை இயக்குபவன் - அவனைத் தஞ்சையில் இருக்கச்செய்து மாதஊதியம் ரூ. 45 அவனுக்கு மன்னர் அளிக்கச் செய்து மேல்நாட்டிசையை அறிமுகப்படுத்தினார் என அறியலாம்.

18—4—1821ஆம் தேதியிட்ட "ஹஸன்கஞ்ச்" என்ற ஊரிலிருந்து எழுதிய குறிப்பினின்று,[51] சில அழகிய காட்சிகளைத் தீட்டுவதற்கு ஓவியம் வல்லான் ஒருவனைத் திங்கள் ஒன்றுக்குச் சம்பளம் 10 புலி வராகன் கொடுத்து நியமித்தமை அறியலாம்.

மரம் செடி கொடிகளைப்பற்றிய செய்திகளைச் சேகரிப்பதில் மன்னர் மிகுதியான கவனம் செலுத்தினார். தமிழ்நாட்டில் - தஞ்சைத் தரணியில் - கிடைக்காத சிலவற்றின் விதைகளைச் சேகரித்துத் தன் அரண்மனைக்கு அனுப்பி அவற்றைப் பயிரிடச் செய்தார் என்று சில எழுத்துச் சான்றுகளால் அறியலாம்.

"12—3—1822இல் மிர்ஜாபூரிலிருந்து "அங்குர்" என்னும் திராக்ஷைப் பழத்தின் உப்பி ஒன்றும், மாதுளம் பழம் ஒன்றும், "சேவ்" என்னும் பழம் ஒன்றும் தஞ்சாவூருக்கு அனுப்புவதாகக் கடிதம்"

"23—3—1821 முகாம் புரஸ்தாபாதுக்கு அருகிலுள்ள ஹஸீம்பூர்:[52] "லுக்வ்யாத்" என்னும் மஞ்சள் நிறமுள்ள பழங்கள்; "பொதச்சி" வட்டமான கருப்பாயிருக்கும் பழங்கள்; வங்காளத்தில் கிடைப்பவை; நம் தேசத்தில் இல்லாதவை - இவற்றின் விதைகளைச் சேகரித்துப் பரங்கி தபாலில் அனுப்பி யிருக்கிறது. கிடைத்தவுடன் எல்லாத் தோட்டங்களிலும் போட்டு அம்மரங் களை விருத்தி செய்கிறது"

"26—11—1821 முகாம் மகத்காவ்:[53] பையிலுள்ள சுரைக்காய் விதை களை நட்டு அபிவிருத்தி செய்து சத்திர தருமத்துக்கு வைத்துக்கொள்வது"

"4—11—1821 முகாம் கயை: நம் தேசத்தில் இல்லாதது, இத்தேசத்தில் நிறையவிருக்கும் "தேண்டங்" என்னும் வெள்ளரி தினுசு புடலங்காய்

51. 5-108, 109. 52. 5-79 53. 5-89

போன்று இருக்கிறது. அதன் விதையும் வெண்கொண்டைக் கடலையும் பங்கி தபாலில் அனுப்பியிருக்கிறது. இவற்றை ரெஸிடெண்டுக்குக் கொஞ்சம் கொடுத்து எஞ்சியதை ஸர்க்காருடைய தோட்டங்களில் போட்டு அபிவிருத்தி செய்கிறது. சின்ன சுட்டுப் பாகற்காயின் விதை 10 அனுப்பியிருக்கிறது"

"18—4—1821 முகாம்–முங்கேரா சமீபம்[54] ஹஸன்கஞ்ச்: ............இப்பொழுது "குலேகைரா" என்னும் பார்வைக்கு அழகாயிருக்கும் மலரின் படம் ஒன்று அனுப்பியிருக்கிறது. அதை ஹுஜுரின் ஸலாமுடன் ரெஸிடெண்டு சாயேபிடம் சேர்ப்பிக்கிறது. இப்பூவின் விதையும் வேறொரு பூவின் விதையும் தனித்தனி 2 பொட்டலங்களும், கத்தரிக்காயின் பொட்டலம் ஒன்றும் அனுப்பியிருக்கிறது. ரெஸிடெண்டு சாயேபு தோட்டத்தில் போடுவதற்கு அவருக்கு வேண்டிய அளவு கொடுத்து எஞ்சியவற்றைச் சர்க்காரின் தோட்டங்களிலெல்லாம் போட்டு அபிவிருத்தி செய்கிறது"

"21—6—1821 முகாம் சாகேப் கஞ்ச்:[55] "சகத்தானு, படஹார, பளஸா" இம்மூன்றின் விதைகளைப் பையில் போட்டு ரோசங்கள் (?) போட்டிருக்கின்றன......... "சகத்தானு" என்னும் விதையை நிலத்தில் விதைத்தால் 7 மாதங்களுக்குப் பிறகு 2 மாசங்களில் முளை கிளம்பும். ஆக 9 மாதங்களில் முளை கிளம்பும். ஆகையால் தண்ணீர்த் தேக்கம் இல்லாத இடத்தில் விதை போட்டுத் தினந்தோறும் சிறிது தண்ணீர் போட்டு வரவேணும்"

"25-7-1821 முகாம் காசி: 'பிலக" என்கிற பழத்தின் விதை கொண்ட பை-1. "வஹ்டேல்" என்னும் சாப்பிடுகிற பழத்தின் விதை உள்ள பை-1. இவ்விரு தினுசு விதைகளையும் தோட்டங்களில் போட்டு விருத்தி செய்யவும்"

8-3-1821இல் கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலிடம் விடைபெற்றுக் கொண்டபொழுது தினுசுவாரி மரங்களின் விதைகளையும்[56] மன்னருக்குக் கொடுத்தார்.

"20-2-1821 முகாம் மூவர் பட்டா[57]: "மஸுரா என்னும் தான்யம் இப் பிரதேசங்களில் ஏராளமாயுள்ளது. இது நம்முடைய ராஜ்யத்தில் இல்லை. விதைக்குத் தகுந்ததான கொஞ்சம் நெல் இக்கடிதத்தில் வைத்திருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் அபிவிருத்தி செய்கிறது"

"5-3-1821 முகாம் ஸல்காகாட்:[58] டெி மூட்டையில் இரண்டு விதமான விதைகள் உள்ளன; "சிம்சுபா" மரத்தின் விதையொன்று. "பொடானிக்யால கார்ட்" என்னும் மரம் பாக்கு மரம்போல் இருக்கும்; அதனுடைய விதையும் சேர்த்து அனுப்பியுள்ளது. தண்ணீர் தேங்காத மேடான இடத்தில் சாகுபடி செய்தால் மரம் முளைக்கும். அபிவிருத்தி செய்யவும்"

54. 5-110 55. 5-122, 128 56. 5-154
57. 5-187 58. 5-199

"9-3-1821 : முகாம் கைரஹடி :[59] சீர்மை தேசத்திய சிறந்த இரண்டு சாதி விதைகள் கனம் பொருந்திய கவர்னர் ஜெனரல் சாஹேப் ஸர்க்காருடைய தோட்டத்தில் போடுவதற்காகத் தயையுடன் கொடுத்துள்ளார். அவற்றை ரெஸிடெண்டு சாஹேப் தோட்டங்களிலும் போட்டு விருத்தி செய்யவும்"

12-3-1821 முகாம்[60] மிரஜாபூர் : "ஸாரஸ என்னும் பக்ஷி ஒரு ஜோடி தாஸ்தான் மஹால் தோட்டத்திலும் எஞ்சிய 4 சிவகங்கைத் தோட்டத்திலும் விட்டு அவற்றுக்கு நாடோறும் உயிருள்ள மீன்களையும், அரிசி, நெல், சாதம் வைத்து விருப்பப்படி தனியாக விட்டிருக்கச் செய்யவேண்டும். .........சாமா என்னும் பக்ஷி 5உம் ஸர்க்காரில் வைத்துக்கொள்கிறது"

— மேலே கண்ட எழுத்துச் சான்றுகளால் பல வகையான மரங்கள் செடிகள் ஆகியவற்றின் விதைகளை அனுப்பித் தஞ்சையில் பயிரிடச் செய்தார் என்றும், பலவிதமான பறவைகளையும் கொணரச்செய்து வளரச் செய்தார் என்றும், இங்ஙனம் பிறநாட்டிலிருந்து புதிய உயிரினங்களைக் கொணர்வதில் யாத்திரைக் காலத்திலும் நாட்டம் செலுத்தினார் என்றும் அறியலாம்.

பலவிதமான நாணயங்களையும் மன்னர் சேகரித்து வந்தார் என்றும் சில குறிப்புக்களால் அறியலாம்.

20—1—1821 முகாம் கடக்கினின்று எழுதியதில்,[61]

"ஸ்ரீ ஜகன்னாதத்தில் தினுசுவாரி மோஹரா மூன்றில் வட்டமானவை 2; சதுரமானது 1; ராமடங்கா மாதிரிவாரி 1 இந்தப்படிக்கு 4 இடங்களில் வாங்கப் பெற்ற தங்க நாணயங்கள் ஹஜூருடைய அப்பாவிடம் கொடுத்து நாணயங் களின் பெட்டியில் வைத்துச் செய்தி எழுதவேண்டியது"

என்று காணும் குறிப்பால் ஆங்காங்குக் கிடைத்த பல்வேறு நாணயங் களை யெல்லாம் மன்னர்பிரான் சேர்த்துவந்தார் என்று அறியப்பெறும்.

15—8—1854இல் நாணயக் கண்காட்சி நடத்தப்பெற்றதாகக் குறிப்பு[62] இருப்பதால் மன்னர் பலவிதமான நாணயங்களைச் சேகரித்து வந்தமை தெளிவு.

## இராமேசுவர யாத்திரை

27—3-1822 முகாம் புத்தூரிலிருந்து[63] இராமேஸ்வரம் போகத் தங்கும் இடங்களை ஏற்பாடு செய்யவேண்டும் என்று பிற்கண்டவண்ணம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது :-

"ஸ்ரீ ராமேஸ்வர யாத்திரை போக ஒவ்வொரு இடத்திலும் தங்குவதற்குச் சத்திரம் பார்த்து இறங்குவது இந்தக் கோடையில் சுகமாக இருக்கும் ஆகை யால், முதலில் வழியின் அளவு முதலில் ஹர்காராவை அனுப்பி 10, 12 நாழிகை

59. 5-200, 201  60. 5-203, 204  61. 5-177  62. 8-229  63. 5-47

செல்லும் வழியில் சத்திரம் பார்த்து முகாமைத் தீர்மானித்துச் சத்திரத்தின் பெயரையும் அதன் விஸ்தீரணமும், அந்தச் சத்திரத்தில் ஹுஜூரின் சவாரிக்கும் மா. சௌ. பாயி சாயேபுகளுடைய சவாரிக்கும் இறங்கத் தகுதி யுள்ளது அல்லது தகுதியில்லாதது, ஒரு சவாரி மட்டும் இறங்கப்போதும் போதாது, தண்ணீர் வசதி ஆகியவற்றைத் தெரிந்துகொண்டு, சாமான்கள் வைக்கோல் தீனி வகையறா கிடைக்கும்படியான இடமும் தெரியுமாறு விவரமாக முகாம்களை எழுதி அனுப்புகிறது"

என்ற ஆணையால் காசி யாத்திரை முடித்துத் தஞ்சைக்கு வந்ததும் மன்னர் இராமேசுவர யாத்திரைக்குப் புறப்பட்டார் என்பது உறுதியெய்துகிறது.

1822 ஜனவரித் திங்கள் முதல் 21–5–1822 வரை முகாம் விவரங்கள் எழுதப்பெற்றதினின்றும்[64] மன்னர் 26–4–1822இல் இராமேசுவர யாத்திரையில் முக்தாம்பாள்புரத்திற்குச் சென்றதாகத் தெரிகிறது. 10–5–1822இல் இராமேஸ் வரத்தில் மன்னர் தங்கியிருந்தார் என்று ஒரு குறிப்பால் அறியலாம். 13—5—1822இல் அனுப்பிய உத்தரவில்[65] "அரண்மனையில் நுழைவதற்கு நல்ல முகூர்த்தம் 2, 4 நாட்களில் தெரிவிக்கிறது" என்றுள்ளது. 15—5—1822 முகாம் கலியனேரியிலிருந்து போந்த உத்தரவில்[66] "ஹுஜூரின் ஸவாரி கோட்டைக்கு வந்ததும் காளபைரவருடைய சமாராதனை ஆகும்; ஆகையால் கொட்டியத்திற்குத் தொகை கொடுத்து முந்தியே ஜாக்கிரதை செய்யவேணும்" என்றுள்ளது. 18—5—1822 முகாம் சாலுவநாயக்கன் பட்டணத்திலிருந்து வந்த எழுத்தில்[67],

"ஹுஜூரின் சவாரி ஜேஷ்ட சுத்த துவிதியை புதன்கிழமை முத்தம்மா புரம் சத்திரத்தில் இருந்து புறப்பட்டுச் சைதாம்பாபுரம் சத்திரத்தில் காலை யில் போஜனம் செய்துகொண்டு நண்பகல் சிற்றுண்டிக்குப் பிறகு புறப்பட்டு நீங்கள் எழுதின முகூர்த்தத்தின்படி அரண்மனையில் பிரவேசிக்கப் போகிறது. இரவில் சாப்பாடும் நகரம் அலங்காரமும் செய்து தயாராய் இருக்கவேண்டும்" என்றுள்ளதாலும்,

"முத்தாம்பாள்புரம் 21–5–1822" என்று முகாம் பட்டியலில் உள்ளதாலும்,

21—5—1822 மாலையில் மன்னர் இராமேசுவர யாத்திரை முடித்துக் கொண்டு தஞ்சையை அடைந்தார் என்பது உறுதி.

## பட்டு வளர்ப்பு

23—3—1821 முகாம் புரஸ்தாபாதுக்கு அருகிலுள்ள ஹஸீம்பூரில் இருந்து எழுதியவற்றினின்று[68] பட்டு வளர்ப்புப் பற்றிய விளக்கங்கள் அறியப் பெறுகின்றன.

---

64. 5-18 முதல் 21 முடிய
65. 5-55
66. 5-58, 59
67. 5-59, 60
68. 5-79 முதல் 82 முடிய.

வங்காள தேசத்தில் உண்டாகிற பட்டுப்பூச்சிகள் அனுப்பப்பெற்றுள்ளன. அவற்றுள் சில மஞ்சள் நிறமுள்ளன; சில சிறிது மஞ்சள் நிறம்; சில வெள்ளை நிறம். இவற்றுள் வெள்ளை மாதிரி மிக உயர்ந்தவை; ஆண்டுக்கு ஒரு முறைதான் உற்பத்தியாகும். வெள்ளைப் பட்டுக்குரியவை தஞ்சை சேரும்வரையில் பிழைத்திருந்தால், முட்டைகளை ஒரு பானையில் காகிதத்துடன் போட்டுப் பானையின் வாயை மூடிக் காற்றோட்டம் இல்லாத இடத்தில் உரியில் வைக்கவேண்டும். மாசி மாதத்தில் காற்றோட்டமாக வைத்தால் புழுக்கள் உண்டாகும். புழுக்கள் உண்டானதும் மூங்கில் தட்டியில் வைத்து இலந்தை இலைகளைப் பொடியாக நறுக்கிப் போடுதல் வேண்டும். இவைகள் வளர்ந்து பட்டு ஆகும். மற்ற நிறத்துப் பட்டுப்பூச்சிகளையும் இந்த முறையிலேயே வளர்க்கலாம்.

இங்ஙனம் பட்டுவளர்ப்புப் பற்றி ஒரு ஆவணம் கூறுவது இன்பம் பயப்பதாயுள்ளது. இதனாலும் தம் அரசுக்கு உட்பட்ட பகுதியின் வளர்ச்சி பற்றிக் கண்ணும் கருத்துமாய் இருந்தார் மன்னர் என்பது போதரும்.

## இளைய திவானைப்பற்றிய நினைவு

சரபோஜி மன்னருக்குச் சிவாஜி ஒரே மகனாவார். தாம் காசி யாத்திரைக்குப் புறப்படுமுன் செய்த ஏற்பாட்டில் தம் மகனாரை அரச அலுவல்களைச் செவ்வனே பார்த்துக் கொள்ளுமாறு செய்ததுடன், பல முகாம்களினின்றும் தமது மகனுக்கு அறிவுரை வழங்கிவந்தார் என்பது அறியவருகிறது.

24—5—1821க்குரிய கயையினின்று எழுதிய கடிதத்தில்[69] சிறிய திவான் (இளவரசர்) ரெஸிடெண்டுக்கு எழுதும் கடிதங்களில் பிழைகள் காணப்படுகின்றன என்றும், அப்பிழைகளைச் சிறிய திவானுக்கு எடுத்துக் காட்டித் திருத்தவேண்டும் என்றும் காணப்பெறுகின்றன.

11—9—1821 காசியிலிருந்து எழுதிய கடிதத்தில்[70] இளவரசர் கல்வி கற்கும்பொழுது கவனமாய்க் கற்க வேண்டும் என்றும், பாடங்களை அவ்வவற்றுக்கு உரிய ஆசிரியர்களிடத்தில் கேட்டறிய வேண்டும் என்றும், அப்பொழுதுதான் ஆசிரியர்கள் மகிழ்வர் என்றும், காலத்தை வீணாக விளையாட்டிலும் வீண்பேச்சுப் பேசுவதிலும் கழித்தல் கூடாதென்றும், இரவில் மூன்று நாழிகை வரையில் கற்கவேண்டும் என்றும், ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தாம்தாம் கற்பித்தவை இவை என்று குறிப்புவைத்து ஹுஜுருக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியுள்ளது.

---

69. 5- 70. 5-69, 70

20—2—1821இல் மூவர்பட்ட என்ற ஊரில் இருந்து வந்த எழுத்து[71] இளைய திவான் சௌ. சி. சௌதம்பாபாயி சாயேப் ஆகிய இருவருக்கும் வைத்தியம் செய்யப்பெற்ற செய்தி அறிந்து பதில் எழுதியதாக உள்ளது.

25—7—1821க்குரிய காசி முகாம் கடிதத்தினின்று[72] இளையதிவான் ஒழுக்கத்தில் மன்னர் மிகவும் எண்ணம் செலுத்தியதை அறியலாம்:

"இளைய திவான் சாரட்டில் உலாவச் செல்வதுண்டு; ஆனால் அவர் மாலைக்குமுன் அரண்மனைக்கு வருவதில்லை. இரவில் உணவுக்கு வராமல் கட்டமுது எடுத்துச்சென்று, இரவில் 11 மணிக்குத் திரும்புகிறார் - இவற்றை ஹுஜூர் கேள்விப்பட்டு மனம் வருந்தினார்; இனிமேல் அங்ஙனம் செய்யக் கூடாது; ஸாரட்டில் செல்லக்கூடாது என்று உத்தரவிட்டார்" - இங்ஙனம் மேற்குறித்த கடிதத்தில் உளது.

இவற்றான் தம் ஒரே மகனாகிய சிவாஜியின் கல்வி முன்னேற்றத்திலும், ஒழுக்கத்திலும், உடல் நலனிலும், யாத்திரைக் காலத்திலும் மன்னர் கவனம் செலுத்தினார் என்பது தெளிவு.

## பிறரைப் பற்றியும் கவலை

நாகபூர் முகாம் கடிதத்தில் ரெஸிடெண்டுக்கு மார்பு வலி வந்து மருத்துவம் செய்யப்பட்டதறிந்து மன்னர் மகிழ்ந்ததாகக் குறிப்புள்ளது.

15—5—1822க்குரிய கலினேரி முகாமிலிருந்து வந்த கடிதத்தில்[73] ராமோஜி ஸர்ஜேராவ் காட்கே அவர்கட்கு உடல்நலம் குன்றியிருந்து தேறியதை அறிந்து மன்னர் மகிழ்ந்தார் என்ற செய்தி சொல்லப்பெற்று உள்ளது.

16—11—1821இல் கயையினின்று எழுதிய கடிதத்தில்[74] சௌ. சி. சக்வார் பாயி அம்மணிசாயேப், வைத்தியருக்குக் கையும் முகமும் காட்ட மறுக்கிறார் என்பதை அறிந்து, உடல் நலம் பெற வைத்தியருக்கு முகமும் கையும் காட்டுவது அவசியம் என்று கண்டுள்ளது.

4—1—1821இல் மிட்டாகூப என்ற இடத்திலிருந்து[75] சௌ. சௌதம்பா பாயிசாப் அவர்களின் நோய் தீர டாக்டர் அல்லது தத்வ பிள்ளையைக் கொண்டு வைத்தியம் செய்து கொள்ளவேண்டும் என்று ஆணை அனுப்பப் பெற்றுள்ளது.

20—1—1821கடக் முகாமிலிருந்து எழுதியதில்[76] சி. ஸக்வார்பாய் அமணி ராஜே சாயேப் வைத்தியருடைய சம்மதம் இல்லாமல் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல் தயிர்ச் சாதம் உண்ணுதல் முதலியன செய்தலை யறிந்து ஹுஜூர் அவர்கள் எச்சரிக்கை விடுத்தது காணப்பெறுகிறது.

---

71. 5-197, 198  72. 5-67, 68  73. 5-58, 59
74. 5-94  75. 5-171  76. 5-175

12—2—1821 மேதினியூர்[77] முகாமினின்று சௌ. சௌதம்பா பாயி சாயேபுக்குச் சிகிச்சை செய்த வைத்தியருக்கு ரெஸிடெண்டு சொல்கிற வண்ணம் இனாம் கொடுக்கலாம் என்று உத்தரவிடப்பெற்றுள்ளது.

இங்ஙனம் அவ்வப்பொழுது உடல்நலக்குறைவு சிலருக்கு ஏற்பட, அன்னோர் உடல்நலம் பெற ஆவன செய்வதற்கு உடனுக்குடன் ஆணை பிறப்பித்தமை பல ஏடுகளான் அறியப்பெறும்.

## உடன் சென்றவர்கள் எண்ணிக்கை

18—4—1821ஆம் தேதியில் முங்கோா அருகில் உள்ள ஹஸன்கஞ்ச் என்ற ஊரிலிருந்து எழுதிய கடிதத்தில்[78],

"யாத்திரையுடன் 3000 பேர் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய நலனைக் கவனிக்கவும், மழை பனியினால் உடல் நலம் குறையின் மருந்து கொடுத்தல் முதலியவற்றுக்காகவும், உடன் வருவோரைக் குளிர் தாக்காத வாறு கம்பளிகள் முதலியன வாங்குவதாலும், பார வண்டிகள் மாடுகள் முதலியன வாடகைக்குப் பெறுவதாலும், யாத்திரை செலவு மிகுதியாயுள்ளது"

என்று எழுதப்பட்டிருத்தலின் சரபோஜி மன்னருடன் யாத்திரைக்கு மூவாயிரம் பேர் சென்றனராதல் கூடும்.

மேலும் அங்கிருந்து எழுதிய கடிதத்தில்,

"பார்வைக்கு அழகா யிருப்பனவும், முன்னர்ப் பார்க்காதவையுமான செடிகள் கொடிகள் பறவைகள் முதலியன காணப்படுகின்றன. நம்முடைய அன்பர்களும் உறவினர்களும் பிறரும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மன்னருக்குத் தோன்றுகிறது. ஆகவே அத்தகைய அரிய உயிரினங்கள் முதலியவற்றை வரைவதற்காக மசூலிபந்தர் சித்திரக்காரன் ஒருவனை மாத ஊதியத்துக்கு நியமித்திருக்கிறது. அவன் பெயர் தாமஸ்; அவனுக்குச் சம்பளம் 10 புலி வராகன்"

என்ற குறிப்பிலிருந்து மன்னருடன் யாத்திரை இடையில் தாமஸ் என்னும் ஓவியக்காரன் சேர்ந்து கொண்டனன் என்றறியவரும்.[79]

மன்னரது பாயி சாயேப் (மாதேவியார்) உடன் சென்றார் என்று சில எழுத்துச் சான்றுகளால் அறியலாம்.

"ஸ்ரீ காஞ்சிபுரம் க்ஷேத்திரத்தில் சௌ. பாயிசாகேபுகளுடன் ஸர்தார் அவர்கள் ஏகம்பப் பெருமானின் தரிசனத்துக்குச் சென்றார்கள்"

"மா. சௌ. பாயி சாஹேப் ஸ்நானம் செய்யப் படித்துறை கட்டினார்கள்"[79அ] என்று காஞ்சியிலிருந்து எழுதப்பட்ட குறிப்புக்களாலும்,

---

77. 5-196 78. 5-112 79. 5-109 79அ. 4-191

7—4—1822இல் ரடணே முகாமிலிருந்து எழுதியதும் சிதம்பரத்தில் வரவேற்பு நிகழ்த்திய செய்தி கூறுவதும் ஆகிய எழுத்துக்களில்,

" சி. ரா. இளைய திவான் சாயேப் அவர்கள் ஹுஜூரின் சௌ. மா. பாயிசாயேப் அவர்களையும் பார்த்துவிட்டு "[79ஆ] என்று எழுதியிருப்பதாலும்,

" இது ஹுஜூருடைய பரம குளிர்ந்த நிழலினாலும், சௌ. வஜ்ரகூடே மண்டித மஞ்சள் குங்குமத்தோடு சோபிக்கிற மா. பாயிசாப் இவர்களுடைய ஸாந்நியத்தினாலும் எல்லா ஜனங்களும் ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திற்குப் போய் ஆனந்தத்துடன் சுகசந்தோஷத்தோடு ஹுஜூரின் சேவையினால் தத்பரமாய் இருக்கிறார்கள் என்று பாபா வணக்கமாய்த் தெரிவிக்கிறார் "

என்றதாலும்,[79இ] மன்னருடன் அவருடைய அரசமாதேவியாரும் சென்றார் என்பது உறுதி.

## காசியாத்திரையின் செலவு

ஏறத்தாழ 3000 பேருடன் இரண்டாண்டுகள் பல தலங்களிலும் தங்கித் தங்கிச் சமய ஒழுக்கங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு தலத்திலும் வழிபாடாற்றிக் கொண்டு சென்று அங்ஙனமே திரும்பியமையின் மிகப் பெருந்தொகை செலவானது வியப்புக்குரியது அன்று. எனினும் செலவு அதிகமாயுள்ளது என்று தஞ்சை ஸர்க்கேல் மன்னருடன் சென்ற ஸர்க்கேலுக்குக் கடிதம் எழுதியிருப்பதாலும், மன்னர், செலவு தவிர்க்க முடியாதது என்றும், சிக்கனமாகக் கவனத்துடன் செலவிடுவதாகவும் பதில் எழுதச் செய்ததனின்று செலவின் மிகுதி ஓராற்றான் அறியப்பெறும்.

20—1—1821 கடக் முகாமினின்று 26681 ரூபாய்களுக்கு 8 இரசீதுகள் அனுப்பியதாகவும்,[79ஈ] 1820 அக்டோபர் 5 முதல் 1821 மார்ச்சு 17 வரை பல தேதிகளில் பல தலங்களில் கும்பனி அலுவலரிடமிருந்து 1, 01, 421 ரூபாய் பெற்றமைக்கு 19 இரசீதுகள் அனுப்பியதாகவும்[79உ] குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதனால் பல நூறாயிரம் ரூபாய்கள் காசியாத்திரையில் மன்னர்க்குச் செலவாயிற்று என்பது போதரும்.

## தாயாருக்கு மரியாதை

15—2—1822 ஸமம்ஸாபாத் முகாமிலிருந்து,[80]

" மா ஆவு சாப் அவர்களின் ஆக்ஞைப்படிக்கு வயிரத்தினால் செய்யப் பெற்ற நாமம்[81] ஸ்ரீவெங்கடாசல சுவாமிக்குச் சேர்ப்பித்துச் சங்கதிககு எழுதுகிறேன் என்று ஹுஜூரின் நமஸ்காரத்துடன் தெரிவிக்கிறது " என்றும்,

---

79ஆ. 28, 29 79இ. 79ஈ. 5-176 79உ. 5-178, 179

80. 5-45 81. 'அதில் 149 வைரம் 50 மாணிக்கம் பதிக்கப்பட்டன' என்று தெரிகிறது: (8-185, 186)

11—9—1821 காசி முகாமினின்று எழுதியவற்றுள்,[82]

"...... பிரயாகைக்குப் போய் அந்த யாத்திரையை முடித்துக்கொண்டு பிரயாகையிலே காவடிகளைக் கட்டி முதலில் மா ஆவுசாகேப் அவர்களுடைய திவ்ய சரணத்திற்கும், பின்பு மா. கிரிஜாபாயி அம்மா, பின்பு ஸ்ரீராமநாத ஸ்வாமிக்கு அபிஷேகமும் தன் கையினாலே செய்யவேணும் என்ற அவசரம் ஹ ஜ ருக்குத் தோன்றியிருக்கிறது" என்றும்,

18—4—1821 ஹஸன்கஞ்ச் முகாமிலிருந்து எழுதியவற்றுள்,[83]

"கங்கோதகத்தை மா. ஆவுசாப் அவர்களிடம் கொடுத்து அவர்களிடம் இருந்து எல்லோருக்கும் சேரும்படி செய்கிறது" என்றும் காணப்படுதலின் மன்னர்க்குத் தம் தாயாரிடத்தில் மிகுந்த பக்தியும் பற்றும் மரியாதையும் இருந்தமை தெற்றெனத் தெரியவரும்.

## திருத்தல யாத்திரை லாவணி

சரபோஜி மன்னர் காசி யாத்திரைக்குச் சென்று திரும்பியதும் தாம் தரிசித்த தலங்களைப் பற்றிய சிறப்புக்களைத் தம் குடிமக்கள் கேட்டு அறிந்து இன்புறுதற் பொருட்டு "**த்ரிஸ்தல யாத்ரேச லாவண்ய**"* என்ற பெயரில் மராட்டி மொழியில் ஒரு நூலை இயற்றச் செய்தார். இந்நூலில் மன்னர் சந்திரமௌலபக்தன், சரபநிருபன், சரபேந்திரன், சரபோஜி என்று குறிக்கப் பெற்றுள்ளார். இந்நூலின்கண் 62 தலங்களைப் பற்றிய செய்திகள் உள்ளன. 64ஆவது (இறுதி) லாவணியில் இளவரசர் சிவாஜியும், மன்னரின் உறவினர்களும், பிறரும் சிதம்பரத்தில் மன்னரை வரவேற்றனர் என்றும், தஞ்சைக்கு வந்ததும் மன்னர் தம் அன்புத் தாயைக்கண்டு அவருடைய ஆசியைப் பெற்றார் என்றும் சொல்லியிருக்கிறது.

இந்நூல் மராட்டிய மொழியில் எழுதப்பெற்றுள்ளது. தஞ்சை சரஸ்வதி மகால் 37ஆவது வெளியீடாக 1951இல் திரு. கிருஷ்ணசுவாமி மாடிக் ராவ் சாகிப் பகதூர் அவர்களால் பரிசோதித்து ஆங்கில முன்னுரையும் சுருக்கமும் கொண்டதாக அச்சிடப்பெற்றுள்ளது. இந்நூல் ஆங்கிலச் சுருக்கத்தினால் இந்நூலில் கூறப்பட்ட விரிவான செய்திகளை அறிய வாய்ப்பு இல்லை. அண்மையில் டை அன்பரால் இந்நூற்பாடல்கள் விரிவாகத் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளமையால் பெரிதும் பயன் அளிக்கும் என்பது உறுதி.

இந்நூலைச் சரபோஜி மன்னர் யாத்தவர் அல்லர் என்றும், அவரது ஆதரவு பெற்ற "துண்டி சுத சிவ" என்ற புலவரால் எழுதப் பெற்றது என்றும்,

---

82. 5-78 83. 5,112

* இந்த "லாவணி" நூல் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில், திரு. கிருஷ்ணசாமி மாடிக் ராஜே சாகேப் அவர்களைக் கொண்டு அண்மையில் தமிழாக்கம் செய்யப் பெற்றுள்ளது.

அச் "சிவ" என்ற புலவரே "சரபேந்திர தீர்த்தாவளி" என்ற நூலையும் எழுதினார் என்றும், இச்சரபேந்திர தீர்த்தாவளியில் சோழநாட்டில் சரபோஜி செய்த தலயாத்திரை கூறியுள்ளது என்றும் ஓர் ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.[84]

ஆனால் உட்கே கோவிந்தாசாரியர் என்ற கவிஞர் காசிப்பயண வர்ணனை செய்து லாவணி இயற்றினார் என்று சில ஆவணக்குறிப்புக்களால் தெரியவருகிறது.[85]

இரண்டாம் சரபோஜியின் காசியாத்திரை பற்றிச் சிவக்கொழுந்து தேசிகர், தாம் பாடிய "சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்" எனும் நூலுள் செய்யுள் 9-இல்,

"உலகமன் னவர்கள் ஊற்றெதிர் பணிய
நலமுறு காசி நண்ணியொண் கங்கை
மென்புனல் படிந்து விச்சுவ நாதன்
தன்பத பங்கயம் தனையெதிர் பணிந்து
வேண்டிய வரங்கள் விருப்புடன் ஏற்று
நீண்டிடு மகிழ்ச்சி நிலவுற வந்தோன்" (வரி 35-40)

என்று பாடியுள்ளார்.

---

84. சரஸ்வதி மகால் நூல் நிலைய மராட்டி புலவர் திரு. பீமராவ் அவர்கள்

85. "இசை நாடகம் நாட்டியம்" என்ற கட்டுரையின் அடிக்குறிப்புக்கள், 82, 83, 84, 85, 86 ஆகியவற்றுக்குரிய செய்திகளைக் காண்க.

# 11

# அரசாங்க வரவு (Income)

## நில வருமானம்

மராட்டிய அரசர்களுக்குத் தம் ஆட்சியில் இருந்த நிலங்கள் யாவும் சொந்தமேயாகையால், நிலச்சுவான்தார்களுக்குரிய மேல்வார உரிமை இருந்து வந்தது. குடிவாரம் உடைய குடிமகன் நிலத்தைப் பயிரிட்டு அரசுக்குரிய மேல்வாரத்தைப் பெரும்பாலும் நெல்லாகவே அளந்தான்; சில சமயங்களில் அரசன் நிர்ணயம் செய்யும் விலைக்கேற்பப் பணமாகவும் கொடுத்தனன்.

இரண்டாம் சரபோஜி காலத்தில் ஆங்கிலேயரே வரிவசூல் செய்யும் பணியை மேற்கொண்ட காலத்தில் எவ்வளவு வசூலாயிற்று என்பதைக் காட்டும் ஆவணமொன்று[1] உள்ளது. அது 1826–27 ஆண்டுக்குரியது. பல வகைகளிலும் வரவு வந்த தொகை ரூ, 40,36,105 என்று அக்கணக்குக் குறிப்பினின்று அறியப்பெறும்.

மொகாஸா நிலங்கள் என்று சில ஊர்களைச் சரபோஜி II தமக்கு உரிய தனி உடைமையாகவே வைத்திருந்தார். அந்நிலங்கள் பற்றிய விவரம் தஞ்சை ஜில்லா மானுவல் என்ற நூலில் பின் வருமாறு கொடுக்கப்பெற்றுள்ளது.[2]

| தாலுக்கா | ஊர்கள் | சிற்றூர்கள் | நிலப்பரப்பு | பயிரிடுவதற்குரியவை |
|---|---|---|---|---|
| தஞ்சாவூர் | 85 | 29 | 24789 | 12151 |
| கும்பகோணம் | 32 | 8 | 7353 | 6054 |
| மாயூரம் | | 2 | 45 | 43 |
| சீகாழி | | 3 | 3 | 3 |

1. 1-பக்கம் 322 முதல் 326 வரை
2. பக்கம் 680

| தாலுக்கா | ஊர்கள் | சிற்றூர்கள் | நிலப்பரப்பு | பயிரிடுவதற்குரியவை |
|---|---|---|---|---|
| நாகப்பட்டினம் | | 1 | 33 | 33 |
| திருத்துறைப்பூண்டி | | 1 | 6 | 6 |
| மன்னார்குடி | 16 | 9 | 1907 | 1109 |
| பட்டுக்கோட்டை | | 2 | 455 | 329 |
| | 133 | 55 | 34591 | 19728 |

மேலே அட்டவணையில் கண்ட 19728 ஏக்கர் வருவாய் முழுவதும் "பென்ஷன்" பெறுகிற நாட்களிலும் மராட்டிய அரசர்க்கு வந்தது என்பது அறிதற்பாலதாகும். இதனுடன் சத்திர வருமானமும்[2அ] இவர்கட்கு உண்டு என்பதும், சத்திர மேற்பார்வை அரசமாதேவிகளிடம் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

மேலே கண்ட 'முகாஸா' கிராமங்கள் சரபோஜி அவர் மகன் சிவாஜி ஆகியவர்தள் காலத்திற்கே பொருந்துவன என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

மராட்டிய அரசர் ஆட்சிசெய்த காலங்களில் சில கிராமங்கள் முழுமையாகவோ, சில கிராமப் பகுதிகளோ அவ்வூர்களில் செல்வாக்குள்ளவர்களிடம் ஒப்படைத்திருந்தனர். அவர்கள் மிராசுதாரர்கள் எனப்பெற்றனர். அவர்கள் தம்வசம் இருந்த நிலங்கட்குத் தாம் வசூல் செய்தும், பயிர் செய்தும் ஓரளவு அரசுக்கு அளித்து வந்தனர்.

இவ்வரசர்கள் இத்தகைய மிராசுதாரர்களிடத்தில் மேலும் சிறிது நிலம் குத்தகைக்கு விட்டு வருமானத்தைப் பிற்காலத்தில் பெருக்கினர். இது,

"27—6—1843 வருமானத்தைப் பெருக்குவதற்கு ஒரு காரியஸ்தரை நியமிக்கலாம் என்று கேட்டபொழுது அக்கிராமத்தில் யாராவது ஒரு பெரிய மிராசுதாரிடத்தில் நிலம் குத்தகைக்கு விடலாம்"

என்ற குறிப்பால்[2ஆ] அறியப்பெறும்.

மேல்வாரம் பெறும் பொழுது பெரும்பாலும் அரசர்களே பயிரிடும் செலவைப் பயிரிடும் பணியில் ஈடுபட்டுள்ள குடிமக்களுக்குத் தந்துள்ளனர் என்பது உறுதி. இதனைப் பின்வரும் ஆவணக்குறிப்பால் தெளிவாக அறியலாம்[3] :—

---

2அ. "The Revenue of the Chatrams in 1858 when the Govt. took charge was Rs. 95, 841 (P. 48, Para 153 - Note on the Present & Past Administration of Rajah's Chatrams (1908)

2ஆ. 2-117, 118 3. 11-248

உற்பத்திச் செலவு சக்கரம் :

| | | |
|---|---|---|
| 1251, 1 | - | வட்டம் மன்னார்குடி மேல்முகம் |
| 70½ | - | வட்டம் மன்னார்குடி கீழ்முகம் |
| 830½, 4½, 3வீசம் | - | சம்மத பெருமாள் பத்து |
| 252 | - | தாலுக்கா கணக்குடித்த வணித்தம் |
| 21½ | - | வட்டம் வழிவேல் மாஹல் |
| 1607½, 1 | - | வட்டம் திருவாரூர் மாஹல் |
| 587½ | - | வட்டம் நாகப்பட்டினம் மாஹல் |
| 1310½, 2¾ வீசம் | - | வட்டம் கச்சேன் மாஹல் |
| 676½, 1 | - | வட்டம் காடாரம்ப மாஹல் |
| 784½ | - | வட்டம் தலைஞாயர் |
| 7393½, 2வீசம் | | |

இக்குறிப்பினை அடுத்து எந்த எந்த நாட்களில் எவ்வளவு தொகை செலவிடப் பெற்றது என்ற குறிப்பும் எழுதப்பெற்றுள்ளது.[4]

" 1758 : கணக்கு அணக்குடி வகையறா கண்டுமுதல் கலம் 12,50,000" என்ற ஆவணக்குறிப்பில்[5] " கண்டு முதல் " என்றிருப்பதால் அரசாங்கமே பயிரரன மொத்த ' மகசூல் ' இவ்வளவு என்று அறிந்து தமக்குரிய பங்கைப் பெற்றுக் கொண்டது என்று அறியப்பெறும்.

" 1183, 1184, 1185 ஆம் " பசலிகளில் "[6] அதாவது கி. பி. 1773, 1774, 1775 ஆம் ஆண்டுகளில் நிலம் 71,838½ வேலி 4½ மாவுக்கு முறையே 31 லக்ஷம், 54 லக்ஷம், 24 லக்ஷம் சக்கரங்கள் வசூலாயின என்று ஒரு ஆவணத்தால்[7] அறியப் பெறும். இவை இரண்டாம் துளஜா இரண்டாவது தடவை பட்டம் பெற்ற ஆண்டுக்கு முந்தைய மூன்று ஆண்டுகட்குரிய, அதாவது தஞ்சை நவாபின் ஆட்சிக்குட்பட்டிருந்த ஆண்டுகளில் "வசூல்" செய்யப்பெற்ற தொகைகளாகும். மேற்கண்ட குறிப்பின்படி 1774இல் வசூல் ஆன தொகை 54 லக்ஷம் சக்கரங்கள் ஆகும். இது நவாபின் ஆட்சியில் கி. பி. 1774இல் 81 லக்ஷம் ரூபா வசூல் செய்யப்பெற்றது என்று வரலாற்றாசிரியர் கூறியதற்கேற்ப அமைந்துள்ளது.[8] (ஒரு சக்கரத்துக்கு 1½ ரூபாய் வீதம் கணக்கிட்டால் இது சரியாகும்).[9]

முகாஸா நிலங்கள் மட்டும் தமக்குரியனவாக இருந்த பிற்காலத்தில் நிலவருவாயை மிகுத்தற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இது,

---

4. 11-241 முதல் 244 வரை
5. 2-12
6. பசலி எண்ணுடன் 590 சேர்த்தால் ஆங்கில ஆண்டு பெறப்படும்.
7. ச. ம. மோ. த. 15-6
8. " The Nawab's Government realized the sum of 81 lakhs of Rs. in 1774 from the dumb and prostrate inhabitants " P. 303, Mahratha Rule in the Carnatic, Srinivasan, C. K.
9. சக்கரம் ரூபா விகிதம் நாணயங்கள் என்ற தலைப்பில் (12) காண்க

"ஒரு மாதத்துக்கு 4 கலம் நெல் கொடுத்து ஒரு கணக்குப்பிள்ளை வைததுக்கொள்ளலாம். மேற்சொன்னவரிடம் இருந்து கண்டுமுதலுக்கு 150 கலம் அதிகம் ஆகும் என்று அனுப்பின பிறகு உத்தரவு அனுப்பப்படும்" என்ற குறிப்பால்[10] அறியப்பெறும்.

மேல்வாரம் எவ்வளவு குடிவாரம் எவ்வளவு என்பது பற்றிய குறிப்புக்கள் உண்டு. கி. பி. 1798க்குரிய ஆவணக்குறிப்புப்[11] பின்வருமாறு :-

"1199 ........... நிலம் வேலி 25க்கு குத்தகை கலம் 5716¾ யில் சம்பா பசானம் நிலம் வேலி 22க்குக் குத்தகை நெல் (கலம்) 5110. இதற்குக் குடிவாரம் 2044, போக மேல்வாரம் 3066 ......"

இதனால் குடிவாரம் இரண்டு என்றால் மேல்வாரம் மூன்று என்று அறியப்பெறும்.

## பலவகை வருமானம்

நிலவரி அல்லது நிலவருவாய் மட்டுமன்றிப் பல்வேறு வழிகளில் மராட்டிய அரசருக்குப் பொருள் வருவாய் இருந்தது. கும்பினியார் தஞ்சை சமஸ்தான வசூலை ஏற்றுக்கொண்டதும், நிலவரி மட்டுமன்றி உப்புவரி, முத்திரைப் பத்திரம், நாணயம் அடித்தல் முதலிய பல வழிகளில் பொருள் குவிக்கலாயினர்[12]. இவ்வழிகளில் எல்லாம் மராட்டிய மன்னரும் பொருள் பெற்றிருந்தனராதல் வேண்டும்.

## உப்பு வருமானம்

தஞ்சை மாவட்டத்தில் பல உப்பளங்கள் உண்டு.

"1805 : உப்பளங்கள் ; அதிராம்பட்டணம் ; ராஜகோபாலபட்டணம்; மகசில்கோட்டை ; தரமணக்கோட்டை ; ராஜாமடம் ; தம்பிக்கைநல்லகோட்டை - இந்த உப்பளங்கள் கணக்கு 1805 அக்டோபர் 12இல் மேஸ்தர் பிளாக் பர்னிடம் அனுப்பியது"[13]

என்ற குறிப்பால் பல உப்பளங்கள் இருந்தமை பெறப்படும்.

---

10. 12-118, 119 11. 4-286
12. "The taxation income under the Company's rule during the first half of the 19th Century consisted of land revenue, salt tax, customs duties, tobacco monopoly, Abkarry, Moturpha (tax on looms) and sayer-inland duties. Besides these were the Post Office revenue, stamp duty, the mint duties and other smaller source of income" - page 157, East India Company and South Indian Economy - C. Ramachandran, New Era Publications, Madras (1980).
13. ச. ம. மோ. த. 6-89

"1799: உப்பளம் அதிராம்பட்டினம் நடை 1க்குத் தீர்வை 2 பணம்; தற்பொழுது 1 பணம். மூட்டைக்குத் தீர்வை 4 காசு, தற்பொழுது 2 காசு" என்ற ஆவணக்குறிப்பால்[14] உப்புவரி வசூல் செய்யப்பெற்றமை தெளிவு.

அரசுக்குச் சொந்தமான உப்பளங்களினின்று உப்பு விற்றுமுதல் தொகை வருதலுக்கும் ஆவணக்குறிப்பு உண்டு. இதனை,

"கட்டளவு மரக்கால் 8 வீதம் மரக்கால் 4082க்கு கலம் 340—2—0. நலி 1க்கு மரக்கால் 48வீதம் நலி 85க்கு மரக்கால் 2.[15] வித்துமொதல் சக்ரம் 51, பணம் $\frac{1}{4}$"

என்றதால்[16] அறியலாம். ஒரு பணத்துக்கு 8 மரக்கால் உப்பு என்பது இக்குறிப்பால் அறியலாம்.

1826-27இல் கும்பினியார் வசூல் செய்த பொழுது உப்பு வருமானம் ரூ. 2,35,659-10-4 என்பது அறிதற்பாலது.[17]

## பருத்தி

பருத்தி ஆடைகளும் பட்டாடைகளும் தஞ்சைப் பகுதியில் நெய்யப்பட்டு நல்ல வருவாய் தந்து கொண்டிருந்தன. பட்டுவளர்ப்பில் இரண்டாம் சரபோஜி மிக்க ஊக்கம் உடையவராய் இருந்தமை "தொழில்கள்" என்ற தலைப்பில்(23) கூறப்பெறும். பருத்தி பயிரிடுதலும் அதற்கு வரி விதித்தலும் உண்டு என்று தெரிகிறது. அவ்வரி பணமாகவே பெறப்படும், இது, "சுவர்ணாதாயம் பருத்தி 1799" என்ற குறிப்பால்[18] அறியப்பெறும். பருத்தியை நூலாக்கி ஆடைகள் நெய்யும்பொழுதும் ஒரு வரி செலுத்தவேண்டியிருந்தது. அது "மோதுர்ஃபா"[19] என்று குறிக்கப்பெறும், இதனைத் தறி வரி எனலாம். தறி வரியாகக் கி. பி. 1826–27இல் கும்பினியார் 8296 ரூபா வசூலித்தனர் என்று தெரிகிறது[20].

## சில வரிகள்

சில சிறிய வரிகள் விதிக்கப்பட்டு வந்தமைக்குச் சான்றுகள் உண்டு. கொடிக்கால் (வெற்றிலை பயிரிடல்), புஞ்சை பத்துக்கட்டு (புன்செய் நிலங்களில் பயிரிடல்), நவராத்திரி வரி, சங்கராந்தி வரி, போஸ்டு வரி, தீபாவளி வரி முதலாகிய வரிகளும் வசூலிக்கப்பெற்றனவாதல் வேண்டும்[21].

---

14. 5-292.

15. நலி 85க்கு மரக்கால் 2 என்பது தவறு; 48x85 = 4080 ஆகும். இதனை நலி 85, மரக்கால் 2க்கு என்று படிப்பது பொருந்தும். நலி என்பது 6 கட்டளவு என்று தோன்றுகிறது.

16. 1-129, 130

17. 1-322

18. 1-135

19. அடிக்குறிப் 12இல் காண்க

20. 1-322

21. ச. ம. மோ. த. 28-6

## முத்திரைப் பத்திரம் விற்றுமுதல்

வழக்கு மன்றங்களில் வழக்குத் தொடுத்தல், ஆவணங்களின் படிகளைப் பெறுதல், ஒப்பந்தங்கள் முதலியவற்றுக்கெல்லாம் அரசாங்க முத்திரையிட்ட ஓலை அல்லது காகிதத்தில்[21அ] எழுதவேண்டும் என்பது அந்நாளைய நியதியாகும். இதனை,

" முத்திரைப் பத்திரங்கள் வித்துமுதல் காகிதம் 13 ; ஓலை 12 க்கு 4½ சக்கரம் "

என்ற குறிப்பால்[22] அறியலாம். கும்பினியார் 1826–27இல் இந்தத்தலைப்பில் வசூலித்ததொகை[23] ரூபா 52695 எனின் இந்தத் தொகைக்குக் குறையாமல் எப்பொழுதும் வசூல் செய்யப் பெற்றிருக்கக்கூடும் என்று கருதலாம்.

## அபராதம்

குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனையாக அபராதம் விதித்தல் பெரும்பான்மை.

" 1755 : அபராதம் வகையில் வசூல் : இராயமுண்டான்பட்டியில் குடியானவன் காவல்காரனைத் தள்ளினதால் அபராதம் தஞ்சாவூர்ச் சக்கரம் 3–1 பணம் "[24] என்பதுபோன்ற பல ஆவணங்கள்[25] அபராதம் விதித்தல்பற்றிப் புகலும். இந்த வகையில் வந்த தொகை நியாயம் வழங்கும் அலுவலர்கட்கு ஊதியம் வழங்கப் பயன்படுத்தப்பெற்றது என்று கருதலாம்.

## பாசிக்குத்தகை

குளம் குட்டைகளில் மீன் பிடித்தற்காக ஏலம் விடப்பெறும். இதுவே பாசிக்குத்தகை எனப்பெறும்.

" 1839 : பாபநாசம் தாலூகாவில் பொதுப் பாசிக் குத்தகைக்காரர் மருதமுத்துப் படையாச்சி "[26]

" 1829 : மொட்டையனிடம் மீன் குத்தகைக்கு விட்டகுளம் குட்டைகள் திருச்சேறைத் தோட்டம் குளம், ராஜகிரி தோட்டம் குளம் ...... கும்பகோணம் கருப்பூர் தோட்டம் குளம் 28 சக். 4 பணம் "[27]

என்ற ஆவணக்குறிப்புக்களால் பாசிக்குத்தகையால் சர்க்காருக்கு ஒரு சிறிது வருமானம் வந்தமை பெறப்படும்.

---

21அ நீதி மன்றங்கள் (14) அடிக்குறிப்பு 64-66 காண்க

22. ச. ம. மோ. த. 7-24 23. 1-322 24. 4-177, 178

25. நீதிமன்றங்கள் (14) அடிக்குறிப்பு 98 முதல் 112 வரை காண்க

26. ச. ம. மோ. த. 28-46 27. ச. ம. மோ. த. 4-12

## சுங்கவசூல்

உள்நாட்டில் சுங்கச் சாவடிகள் இருந்தன. எல்லாப் பொருள்களுக்கும் சுங்கவரி கொடுத்தே எடுத்துச் செல்லவேண்டும். கும்பினி நிலவரி வசூல் உரிமை மேற்கொண்டபிறகு மராட்டிய சர்க்காருக்குச் சுங்கவரி குறைந்து விட்டது. அவர்தம் ஆட்சி உச்சநிலையில் இருந்தபொழுது 67 ஆயிரம் சக்கரம் சுங்கவரியாக வந்து கொண்டிருந்ததாகத் தெரிகிறது. பின்னர் அதற்குப் பாதி கூட வரவில்லை என்று அவ்வாவணத்தினின்று அறியவருகிறது.[28] பொருள் களின் எடைக்கேற்பவும், அவற்றை எடுத்துச்செல்லும் தொலைவுக்கு ஏற்பவும் சுங்க வரி வசூலித்ததாகக் கொள்ளலாம். சுங்க வரிக்கு விலக்குத் தருவதும் உண்டு என்பது பிற்கண்ட ஆவணக்குறிப்புக்களால் அறியப்பெறும் :-

" 1780 : பாரிஸ் துரைக்கு வருகிற நெல் கலம் 6000 ; சுங்கத்தில் வரவு வைத்து விட்டுவிடுகிறது. "

" 1780 : ராஜகோபாலசுவாமி வகையறா மூன்று சுவாமிக்கு வரும் சாமான்களைச் சுங்கத்தில் வரவு வைத்துக்கொண்டு விட்டுவிடுகிறது."[29]

அரண்மனை வேலையிலிருந்த ஏழை மக்கள் தம் ஊர்களிலிருந்து நெல் அரிசி சோளம் மொச்சை ஒரு ஆள் தூக்கும்படியானவற்றைக் கொணர்ந்தால் சுங்கவரி 5 நாட்களுக்குக் கொடுக்க வேண்டியதில்லை என்றும், ஒரு மூட்டைக்கு மேல் கொணர்ந்தால் தீர்வை கொடுக்கவேண்டும் என்றும் ஓராவணக்குறிப் பினால்[30] அறியப்பெறும்.

எந்தப் பொருளுக்கு எவ்வளவு வரி வாங்க வேண்டுமோ அவ்வளவு வரிக்கு மேல் மிகுதியாக வாங்கினால் அச்சுங்க அதிகாரி தண்டனைக்கு உள்ளாவர்.

" 1768 : திருவாரூர்ச் சுங்கத்தில் திருச்சிராப்பள்ளிக்கு நவாப் சாஹே புடைய மட்டக்குதிரையைக் கொண்டு போனதற்குச் சுங்க அதிகாரி அதிக வரி எழுதினதால் அவனுக்கு அபராதம் சக்கரம் 1–2 பணம் விதிக்கப்பட்டது "[31] என்கிறது ஓராவணம்.

வெள்ளையர்கட்கு மராட்டிய அரசில் கடுமையாகச் சுங்கவரி விதிக்கப் பட்டது என அறியவருகிறது.

" ஐரோப்பியர் யாராவது ஒருவர் வந்தால் அவர் எங்கிருந்து ராஜ்யத்தில் புகுகிறாரோ அங்கங்குச் சுங்கவரி வசூலிக்க வேண்டும். அது எவ்விதம் என்றால், ஐரோப்பிய சர்தார் நடந்துவந்தால் ஒவ்வொரு ஆளுக்கும் ஐந்து வராகன் வீதமும், குதிரையின்மேல் சவாரி செய்து வருபவர்க்கு அதற்கு

---

28. 5–867, 868 29. 3-158 30. ச. ம. மோ. த. 5-25 31. 2-1

அதிகமாகவும், ஐரோப்பியர்கள் யாராவது பல்லக்கில் உட்கார்ந்து வந்தால் அவர்களுக்கு விசேஷ வரியும், மற்றும் சேனையை அழைத்துக்கொண்டு யாராவது ஒரு ஐரோப்பிய சர்தார் வருவதாயிருந்தால் மகாராஜாவுக்கு முன்பே சொல்லியனுப்பி, வரி வசூலிப்போருக்கு வரியை வசூலிக்காமல் இருக்குமாறு உத்தரவு போடுவது வழக்கமாயிருந்தது. தற்காலம் கடற்கரையில் இருக்கும் ஐரோப்பியர்கள் சமஸ்தானத்துக்கு வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். மேலும் அவர்கள் வருவதும் போவதும் இனிமேல் எப்போதும் இருக்கும். அதிலும் சைனியத்தோடு வருபவர்கள் நிச்சயமாய் நமக்குத் தெரிவித்துவிட்டுத்தான் வருவார்கள். மற்றும் வரும் ஐரோப்பியர்கள் எத்துறைமுகத்திலிருந்து எப்படி வந்தாலும் அவர்கள் கொடுக்க வேண்டிய வரியைத்தள்ளிவிட உத்தரவு வேண்டியதில்லை"

இது இரண்டாம் துளஜாவின் உத்தரவு.[32] இதனால் இரண்டாம் துளஜா காலத்துக்கு முன் ஐரோப்பியரிடம் இருந்து வசூலித்த வரியின் சுமையை ஒருவாறு அறியலாம். இரண்டாம் துளஜா கும்பினியாருக்கு அடங்கி அவர்களுடைய தயவிலே வாழவேண்டிய நிலை ஏற்பட்டமையின் மேற்கண்ட வண்ணம் வரிநீக்க உத்தரவு பிறப்பித்தார் என்று ஊகித்தறியலாம்.

## சாராயக்குத்தகை

சாராயம் காய்ச்சும் உரிமை அரசாங்கத்துக்கே உரியது. ஆகவே அதைக் குத்தகைக்கு விட்டனர்.

"1776 : கள்ளுக் குத்தகையில் வந்த வருமானம் ஒரு வருஷத்துக்கு ரூ. 39,972"

என்று ஒரு ஆவணக்குறிப்பில்[33] உள்ளது. தஞ்சை நகரம் மட்டும் தமக்கு உரியதாய் இருந்த காலத்திலும் இக்கள்ளுக்குத்தகை வருமானம் மிகுதியாகக் குறையவில்லை. இதனை,

"1828 : சாராயம் கள்ளு வகையறா குத்தகை – மூன்று வருஷத்துக்கு 30,420 ரூபாய்க்கு ஒப்புக்கொள்ளும்படிக்கு அன்வாஜி நோபாள இரண்டுபத்திரம் எழுதிக்கொள்ளுகிறது"

என்ற குறிப்பு[34] வலியுறுத்தும்.

கி. பி. 1841இல் மாதம் 1க்கு ரூ. 760 வீதம் குத்தகை தருவதாகவும்,[35] 1847இல் மாதம் 1க்கு ரூ. 190 தருவதாகவும்[36] குத்தகை ஒப்பந்தங்கள் ஏற்பட்டன.

---

32. போன்ஸ்லே வம்ச சரித்திரம் (தமிழ்) பக்கம் 111, 112

33. ச. ம. மோ, த. 5–24

34. ச. ம. மோ, த. 2-95

35. ச. ம. மோ, த. 4-6

36. ச. ம. மோ, த. 9-80

குத்தகைக்கு விடாமல் சாராய விற்பனை சர்க்காரிடத்திலேயே இருந்த தாகவும் தெரிகிறது.

கோட்டையில் காளேராவப்பா என்பவர் காலத்தில் 10 சேர் செம்பினால் செம்பொன்றுக்கு 8 பணம் வீதம் விற்பனை செய்யப்பெற்றது; விற்பனை செய்பவனுக்கு 1 பணம் சம்பளம். பின்னர் நீலகண்ட பிள்ளையின் காலத்தில் மூன்றுவிதமாகப் பிரித்தனர். ஒரு செம்பு 12 பணம்; 11 பணம்; 10 பணம்; விற்பவனுக்கு வழக்கம்போல் செம்பொன்றுக்கு 1 பணம். கி. பி. 1811இல் திருவையாறு தாலுகா சாராயக்கடைக்காரன் கோட்டைக்கு வெளியே சாராயக்கடை வைத்தான்; குறைந்த விலைக்கு விற்றான்; அதனால் குடிப்பவர்கள் கோட்டைக்கு வெளியே சென்று குடித்தார்கள். சர்க்கார் கடையிலுள்ள சாராயம் விற்பனை ஆகவில்லை. ஆகவே செம்பொன்றுக்கு 9 பணம் வீதம் விலை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.[37]

தஞ்சாவூர்க் கிடங்கில் காய்ச்சும் சாராயம் யானை குதிரை முதலியவற்றிற்கு வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு எஞ்சியது விற்பனை செய்யப் பெற்றது. அவ்விற்பனைத்தொகை,

"மேஸ்தர் ராமனுடைய மாடியில் வைத்திருக்கும் தர்ம பள்ளிக்கூடத்திற்குக் கொடுப்பது வழக்கம்"

என்ற குறிப்பு[38] சாராய விற்பனைத்தொகை கல்விக்கெனச் செலவிடப் பெற்றமை அறிய உதவுகிறது.

சாராய வரி என்ற ஒருவகை வரியும் வசூலிக்கப்பட்டது.

"1765: நாகூர்பந்தர்; தெற்கிலிருந்து வடக்கே சாராயத்தின் குப்பிகள் 10ஐக் கொண்டுபோனதற்கு வரி துரையினிடமிருந்து வெள்ளிப் பணம் 6"

என்றமையால்[39] சாராயம் எடுத்துச்செல்ல வரி வசூலிக்கப்பட்டது என்று அறியப்பெறும்.

இந்தத் தலைப்பில் கி. பி. 1826–27இல் கும்பினி பெற்ற வருமானம் ரூ. 34,206 என்று அறியவருகிறது.[40] இது 'ஆப்காரி' எனப்பெற்றது.

## தோட்ட வருமானம்

சர்க்காருக்குப் பல தோட்டங்கள் இருந்தன. அவற்றுள் சில அரசமாதேவிகளுக்குரியனவாயிருந்தன என்னலாம். 1815க்குரிய ஓராவணத்தில் 70 தோட்டங்களின் பெயர்கள் தரப்பெற்றுள்ளன.[41] 1818க்குரிய ஆவணத்தில் 94 தோட்டங்கள் என்றும் அவற்றுள் 7 வருமானம் இல்லாதவை என்றும்

37. 2-83, 84 38. 7-672 39. 2-15 40. 1-822

41. ச. ம. மோ. த. 28-பக்கம் 15 முதல் 17 வரை

கூறப்பட்டுள்ளது.[42] 1820க்குரிய குறிப்பொன்றும் இங்ஙனமே கூறும்.[43] கி. பி. 1828க்குரிய எழுத்தொன்று 34 தோட்டங்களின் பெயர்களைக் கூறுகிறது.[44] கி. பி. 1825க்குரிய குறிப்பு 92 தோட்டங்களின் பெயரைக் கூறுகிறது[44அ] இத் தோட்டங்கள் எல்லாம் குத்தகைக்கு விடப்பெற்றன[45] என்று தெரிகிறது.

"10—7—1843 மாமரங்கள் 55; புள்ளி சுமார் 8500; குத்தகை ரூபா 10½"[46]

"19—5—1843 மாமரங்கள் 101; பழம் 16670; குத்தகை ரூ. 10; மாமரங்கள் 107; பழம் 8445 ரூ. 15¼; ரூ. 15¼க்குக் கொடுக்கக்கூடாது; 8 நாட்களுக்குள் சத்திரத்தில் விளம்பரப்படுத்தி அதிகமாகக் கேட்பவருக்குக் கொடுப்பது"

என்ற குறிப்புக்களால்[47] தோட்டங்களில் உள்ள மரங்களை எண்ணி அவற்றின் பலன்களைப் பார்த்துக் குத்தகைக்கு விட்டனர் என்பது தெரியவரும்.

## முத்துக்குளிப்பு

முத்துக்குளிப்பினால் மராட்டிய மன்னர்க்குப் பெருந்தொகை வந்திருத்தல் வேண்டும்.

"1798 : முத்துக்குளிப்பின் தொகை வந்தால் நல்லதாயிற்று. முத்துக்குப் பதிலாகத் தொகை வரவழைப்பதற்குக் கௌனருக்குப் பேஸஜி கடிதம் எழுதினதற்குப் பதில் வரவில்லை. இன்னொரு கடிதம் கௌனருக்கு அனுப்புகிறது"

என்ற குறிப்பு[48] முத்துக்குளிப்பினால் முத்தோ அல்லது அதன் விலையோ பெற்றனர் என்று தெரிவிக்கிறது. முத்துச்சிப்பியும் விற்று முதல் செய்யப் பெற்றதாகத் தெரியவருகிறது.

"1803 : சாமிநாத செட்டியாருடைய கப்பலில் ஏற்றிய முத்துச் சிப்பி 15 தூக்கு கணக்குப்படி இஸ்காடி (?) வராகன் சுமார் கூடுதல் 1723⅞; ஸேக் மயாரன்கதா என்பவருடைய கப்பலில் ஏற்றிய முத்துச் சிப்பிகள் 5 தூக்கு 1603½ வராகன்; வித்துமுதல் செய்து 100க்கு 5 வராகன்"

என்ற குறிப்பால்[48அ] முத்துச் சிப்பிகளை எடுத்து 'மலாக்கா' முதலிய தொலை கிழக்கு நாடுகட்கு அனுப்பிவந்தமை தெரிகிறது. கடலில் முழுகிச் சங்கு எடுக்கிறவர்களுக்கு ஆயிரத்துக்கு 12 சக்கரம் 5 பணம் கொடுக்கப் பெற்று வந்தது என்றும், 14 சக்கரம் வேண்டும் என்றும் ஆதம் முத்துத்துரை என்பார் கேட்டுக்கொண்டதாக ஒரு குறிப்பு[49] உள்ளது. இதனால் முத்துக்குளித்தல்

42. ச. ம. மோ. ச. 28-2 43. ச. ம. மோ. த. 28-12 44. ச. ம. மோ. த. 25-14
44அ. ச. ம. மோ. த. 81-30 45. ச. ம. மோ. த. 15-83 46. 12-117 47. 12-128
48. தொழில்கள் என்ற கட்டுரையில் (28) அடிக்குறிப்பு 7 காண்க.
48அ. 2-120, 121 49. 3-164

வெகுவாக நடைபெற்றது என்றும், சர்க்காருக்குக் கணிசமான வருவாய் வந்ததாதல் வேண்டும் என்றும் தெரிகிறது.

## ஓடத்தீர்வை

இந்நாட்களில் இருத்தல் போல அந்நாட்களில் ஆறுகளைக் கடக்கப் பாலங்கள் இல்லை; வெள்ளம் போகும் பொழுது ஓடங்கள் மிகவும் வேண்டற்பாலனவாம். அரசாங்கத்துக்கும் ஓடங்கள் இருந்திருத்தல் வேண்டும். தனிப்பட்டவர்களும் ஓடம் உடையவராய் இருந்தனர். பாடல்பெற்ற தலங்கள் பலவும் காவிரியின் இருமங்கும் இருக்கின்றன. அத்தலங்கட்குச் செல்பவர்க்கும் ஆற்றைக் கடக்கப் பயன்படும் ஓடங்களுக்குத் தீர்வை வசூல் செய்யப் பெற்றது.

"கி. பி. 1776 : திருவையாற்றுத் துலா காவேரி ஸ்நானத்திற்குப் போவோர் வருவோர் 3 நாட்களுக்கு ஓடத்தீர்வை வாங்க ஆள் இல்லை. ஆகவே காவேரி ஓடக்காரர்கள் 8; குடமுருட்டி ஓடக்காரர்கள் 4 ; கடங்கால் ஓடக்காரர்கள் 4 ; சந்தியா மண்டபம் ஓடக்காரர்கள் 6 ; ஆக மொத்தம் 22. இவர்கள் நாளொன்றுக்கு ஆளுக்கு 1 பணம் வீதம் தினப்படி 2 சக். 2 பணம் வீதம் 66 சக்கரம் கொடுத்தல் வேண்டும். மேற்கண்ட வருஷத்தில் விசேஷ ஜனங்கள் இல்லையாகையால் 33 சக்கரம் கொடுக்குமாறு விண்ணப்பம்"

என்ற எழுத்துச் சான்றினால்[50] ஒரு ஓடத்துக்கு ஒரு நாளுக்கு ஒரு பணம் வீதம் ஓடத்தீர்வை வசூல்செய்யப்பெற்றது என அறியப்பெறும்.

## கடைகட்கு வரி

கடைகளுக்கு வரி விதிக்கப் பெற்றமை பற்றிய செய்திகள் தெரிய வருகின்றன. கடைகள் கட்டிக் கொடுத்தால் அவற்றுக்கு வாடகை உண்டு.

"1762 : சிவகங்கைத் தோட்டம், ......... கடை - ராமசெட்டி குத்தகை 12 மாதம் - மாதத்திற்கு 1½ வீதம் 18 சக்கரங்கள்"

என்ற குறிப்பால்[51] கடைகள் கட்டி வாடகைக்கு விடப்படுவதுண்டு என்று தெரிகிறது. இதுமட்டும் அன்றிக் கடைகட்கு வரி விதிப்பதும் உண்டு.

## எள் கரும்பு பயிரிடல்

எள் பயிரிட்டால் ஸர்க்காருக்கு ஒரு பங்கும் பயிரிடுபவனுக்கு இரண்டு பங்கும் கொடுப்பது வழக்கம்.[52] ஆனால் சரிபாதி வாரம் தருவதானால் எள் பயிரிடலாம் என்று புறக்குடி ராமசாமி மகாகே என்பவனுக்கு ராமையா

50. ச. ம. மோ. த. 29-31 51. ச. ம. மோ. த. 15-28 52. 12-126

வராகப்பையா ஆணை பிறப்பித்துள்ளார். இதனால் எள்ளுப் பயிரிடுபவருக்கு ⅔ வாரம் என்பது உறுதி. கரும்பு சாகுபடி செய்யின் அதனைப் பணக் குத்தகைக்கு விடுவதும் பழக்கம். இதற்கு,

"சந்த்யா மண்டபம் படுகை மேல் கரும்பு விளைந்துள்ளது. அந்தப் புறக்குடி ராமசாமி என்பவன் 45 ரூபாய்க்குக் குத்தகைக்கு ஒரு வாரத்துக்குள் விளம்பரம் செய்ய வேண்டியது. அதற்குக் குத்தகை அதிகம் பேச வந்தால் அதையும் எழுதி அனுப்புவது[53]" என்பது சான்றாகும்.

## செக்கு வரி

"எண்ணெய் செக்கு நாலு இடங்களில் போட்டு அதற்கு வேண்டிய சர்க்கார் கிஸ்தி செலுத்திவருவேன்"

என்ற குறிப்பினால்[54] செக்குவரி விதிக்கப்பெற்றமை தெரியவருகிறது.

## வாண வியாபாரம்

வாண வேடிக்கை திருக்கோயில் திருவிழாக்களில் பெரும்பான்மை. அதற்காக வாணங்களை வாங்கி விற்பனை செய்யும் வியாபாரி 10 பணத்துக்கு 1⅝ பணம் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டும். "பொட்டிலுப்பு" க்கு மணு 1 க்கு 1¼ பணம் தீர்வை கொடுக்கவேண்டும் என்று ஒரு ஆவணம்[55] கூறுகிறது.

## வீட்டு வரி

ஒருவர் வீடு கட்டிக்கொண்டு குடியிருந்தாலும் அவ்வீட்டுக்குச் சிறிது தீர்வை விதிக்கப்படும்.

"எமுனாம்பாபுரம் சத்திரம் ஊழியன் — குயவன் லக்ஷ்மணன் எழுதிக் கொண்டது. நான் வீடு கட்டிக் கொண்டிருக்கிறேன் என்றதற்கு, "தீர்வை இல்லாமல் இருக்கக் கூடாது. சுவல்ப தீர்வை கொடுத்துவரவேண்டும்" என்றமையால்[55அ] சொந்தவீடு கட்டிக்கொண்டு குடியிருப்பினும் ஒரு சிறு தொகை வரியாகச் செலுத்த வேண்டியிருந்தது என்பது பெறப்படுகிறது. இது "மனை வரி" யாகலாம்.

## அகழி குத்தகை

ராஜ்யம் போனபிறகு அரண் பாதுகாக்க வேண்டிய நிலை இல்லாது ஒழிந்தது. ஆகவே அகழியும் சிறிது சிறிதாகத் தூர்ந்து போதல் எதிர்பார்க்கக் கூடியதே. ஒருவர் கி. பி. 1807இல் அகழியில் பரங்கி பயிரிட்டு 5 இல் ஒரு பங்கு தந்தார் ஆதல் வேண்டும்[56].

---

53. 12-126
54. ச. ம. மோ. த. 2-11
55. ச. ம. மோ. த. 6-11
55அ. ச. ம. மோ. த. 5-18
56. 4-65

1846இல் அகழியில் பயிர் செய்ய ஆண்டொன்றுக்கு ரூ. 192 வீதம் கொடுப்பதாக 3 ஆண்டுகளுக்கு ஒருவர் குத்தகைக்கு எடுத்துக்கொண்டார்[57].

## தரங்கம்பாடி தோஃபா

தோஃபா என்பது கப்பம் என்று பொருள்படும்[57அ]. தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்கள் தஞ்சை மராட்டிய மன்னருக்கு உரிய சிறு நிலப்பகுதியைப் பல ஆண்டுகளாக அனுபவித்துக்கொண்டு ஆண்டொன்றுக்கு 2000 சக்கரம் கொடுத்து வந்தனர்[57ஆ] என்பதற்குச் சான்றுகள் உண்டு. இரண்டாம் சரபோஜி 25—10—1799இல் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அரசாங்க வசூலை ஆங்கிலேயருக்கு ஒப்படைத்தபொழுது, அந்த ஒப்பந்தத்தின் 14ஆவது ஷரத்தின்படிக்கு[58] மேற்கண்ட தொகையைப் பெறும் உரிமை உடையவராய் ஆண்டுதோறும் பெற்றுக்கொண்டுவந்தார் என்று தெரிகிறது.

> "1828 : தரங்கம்பாடி பந்தர் பாபத்து .........
> தோபா என்னும் தொகை 2000............"

என்பதால்[59] இது உறுதி எய்தும்.

## குளங்களில் அகப்பட்ட விக்கிரகங்கள்

குளமோ நிலமோ அவற்றில் கிடந்த அல்லது புதையுண்ட பொருள் கிடைப்பின் அவையாவும் அரசுக்குரியனவாம். கி. பி. 1803இல் கும்பகோணம் தாலுகா சமுத்திரக்குடியில் சில விக்கிரகங்கள் அகப்பட்டன என்று ஒரு ஆவணம்[60] குறிப்பிடுகிறது.

---

57 ச. ம. மோ. த. 5-82

57அ. Topha - Tribute - P. 61, The Modi Documents from Tanjore in Danish Collections by Elizabeth Stranberg (1983)

57ஆ. From the treasury of His Majesty King Saraphaji - may his good fortune remain perpetual - to the honourable Christian Ulrich v. Nissen, governor of Tranquebar (1.3). In the year 1126 of the Suhura sana era (A. D. 1725-1726) it should be known that the tribute money for last year, year 1125, totalling 2,000 Tanjore cakras, two thousand cakras, has been received through the intermediacy of Ari Pill (1.7)

— Page 284, The Modi Documents from Tanjore in Danish Collections Edited Translated and Analysed by Elizabeth Stranberg, Franz Steiner Verlag, Wiesbaden, 1983

58. Treaty dated 25th of October 1799; Article 14: Whereas certain annual peshcush amounting to 2000 chukrams is payable by the Danish government of Tranquebar for lands held of the Rajah of Tanjore in the vicinity of that place, it is stipulated and agreed that the said peshcush shall continue to be received by H. E. the Rajah without any deduction from H. E's proportion of the Revenue as herein before stipulated - Appendix, Tanjore Maratha Principality – Hicky.

59. 4-425, 426 60. 1-286

## புதையல்கள் கிடைத்தமை

புதையல்களும் அரசுக்குரியனவே. புதையல்கள் கிடைத்தமைக்கு மூன்று எழுத்துச் சான்றுகள் கிடைத்துள்ளன.

திருவையாறு சுபா—காங்கேயநகர்[61] என்ற ஊர்; 6½ சேர் எடையுள்ள குடம். அதில் 2¼ மணங்கு எடையுள்ள 7735 காசுகள் இருந்தன. அந்தப் புதையலைக் கண்டெடுத்த ஊரார் அதை அரசரிடத்தில் கொணர்ந்து கொடுத்தனர். காசுகளும் தோண்டியும் ஜிராத்கானாவில் சேர்ப்பிக்கப்பெற்றன. பின்னர் தாராசுரம் சுங்கத்துறையாரிடம் கொடுக்கப்பெற்று அவை 3 படி 4 படி செப்புத் தவலைகளாகச் செய்விக்கப் பெற்றன. இங்ஙனம் கி. பி. 1797க்குரிய ஆவணங்களில் கூறப்பட்டுள்ளன.[62]

காசுகளைச் செப்புக்குடங்களாக மாற்றியமைத்தமையால் அச் செப்புக் காசுகள் செலாவணியில் இல்லாதவை அல்லது செலாவணி ஆகாதவை என்று கொள்ளப்பெறும்.

திருவையாறு தாலுகாவில் மணவாளம்பேட்டை[63] என்ற ஊர். இது ஒரு சுரோத்திரியம். இங்குப் பாதையில் பனை மரத்தின் வேர்களை வெட்டும் பொழுது ஒரு பானையில் 56 சேர் செப்புக்காசுகள் கொண்ட புதையல் கிடைத்தது. அக்காசுகளில் முத்திரை நன்றாகத் தெரியவில்லை. அக்காசுகள் பின்னர் கலெக்டருக்கு அனுப்பப்பட்டன; கஜானாவில் (அரசாங்கப் பொருள் நிலையத்தில்) சேர்க்கப்பட்டன. அக்காசுகட்குப் 'பேபர்மன்' காசு என்று பெயர். ஒரு நாணயத்தின் எடை ஒரு வராகன் எடை ஆகும். 12, 13-3-1827 தேதி இட்ட இரு ஆவணங்களில் இச்செய்திகள் கூறப்பட்டுள்ளன.[65]

கி. பி. 1846இல் கீழவீதியில் மங்களவிலாஸத்தைச் சேர்ந்த சமையல் செய்யும் வீட்டில் புதையல் ஒன்று கிடைத்தது. அதில் அரை புலி வராகன் 4; ¼ புலி வராகன் 20; இரண்டரைப் பணம் 45; ஒத்தைப் பணம் 111 இருந்தன. இவற்றின் மதிப்பு 1096¾ ரூ. 6 பைசா - என்று ஒரு எழுத்துச் சான்றினால் தெரியவரும்.[66]

## பலவிதத் தீர்வைகள்

இத்தலைப்பில் பல வரிகளின் பெயர்கள் இரண்டு குறிப்புக்களால் தெரியவருகின்றன. "மஹால் சுங்கம்" என்று குறிக்கப்பெற்றிருத்தலால்[67] எவ்வெவற்றிற்குச் சுங்கவரி விதிக்கப்பட்டன என்று தெரிந்து கொள்ளலாம். 1756க்குரிய ஆவணத்தில்[68] சுங்கம் வசூலிக்கும் பொருள்களின் பெயர் தரப்

61. காகயேந்தார் என்பது வேறு பாடம்
62. 1-1; ச. ம. மோ. த. 19-39
63. லை பேட்டை என்றும் பாடம்
64. ஒரு ஹேன்ன பாரம் என்றும் பாடம்
65. 1-54; ச. ம. மோ. த. 28-66
66. ச. ம. மோ. த. 8-38

பட்டுள்ளன. "துணி, நெல், மூங்கில், எருமை, ஆடு, செருப்பு, வண்டி, குதிரை, ஓடு, அரிசி, பயறு, எலுமிச்சை, குஸும்பி புஷ்பம், எண்ணெய், விறகு, உப்பு, சாராயம், பட்டுநூல், பல்லக்கு, வாழை, பருப்புகள், நெய், மாடுகள், மாமிசம், வரகு, வைக்கோல், எள், கோதுமை, வெல்லம், வெங்காயம், துவரை, மொச்சை, போர்வை, மண்வெட்டி, கயிறு, காராமணி, விளாம்பழம், பேரீச்சை, பாக்கு, இரும்பு, மஞ்சள், பாய், வெற்றிலை, காய்கறிகட்டு, பிண்ணாக்கு, கொப்பரை, சந்தனக்கட்டை" என்பன வரிவிதிக்கப்படுவன என்று தெரிகிறது. இவை உள்நாட்டுவரி – ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கு எடுத்துச் செல்லுங்கால் விதிக்கப் பெறுவனவாம். இத்தலைப்பில் 1826-27இல் பெற்ற தொகை ரூ. 3,76,395 என்று தெரிகிறது.[69]

---

67. 4-260  68. 2-216 முதல் 220 வரை  69. 1-822

## 12

# நாணயங்கள்

தஞ்சாவூரில் மராட்டிய மன்னர் ஆட்சிசெய்தபொழுது பலவகையான நாணயங்கள் பழக்கத்தில் இருந்தனவாதல் வேண்டும். பொதுமக்கள் பெரிதும் அறிந்தவை 'சக்கரம்' என்ற நாணயம், அதன் கூறுகள் ஆகிய பணம், காசு என்பனவாம். இவற்றுடன் ரூபாயும் அதன் கூறுகளும் பிற்காலத்தில் பழக்கத்தில் வந்தன.

### புலிவராகன் - சக்கரம் - பணம் - காசு

**பத்துப்பணம் ஒரு சக்கரம்** என்பது தெளிவாக அறிந்தவொன்று.

| | | |
|---|---|---|
| "1784 : படகின் வேலைக்காரனுக்குத் துறையிலிருந்து தண்ணீர் கொண்டுபோய் ஏற்றுவதற்கு 192 குழாய்களுக்கு | ... | சக்கரம் 4 – 8 பணம் |
| ஊர் ஸோல்ஜருக்கு | ... | சக்கரம் 1 – 3$\frac{5}{8}$ பணம் |
| | | சக்கரம் 6 – 1$\frac{5}{8}$ பணம்" |

இந்தக் குறிப்பினால்[1] 'பத்துப்பணம் ஒரு சக்கரம்' என்று தெரியவருகிறது.

"1799 : நெல் கலம் ஒன்றுக்கு 3$\frac{1}{2}$ பணம் விதம் 500 கலங்களுக்குச் சக்கரம் 175"

என்று பிறிதொரு குறிப்பு உள்ளது.[2] 500 கலங்களின் விலை ( 500 × 3$\frac{1}{2}$ ) 1750 பணம்; அதாவது 175 சக்கரம் என்று தெரிதலின், இதனாலும் 10 பணம் ஒரு சக்கரம் என்பது உறுதி பெறும்.

---

1. 1-180, 181 2. 1-185

"1793 ஜூலை 19௨ ......... ஒரு பணத்துக்கு 32 காசு"
என்ற குறிப்பு "32 காசு கொண்டது ஒரு பணம்" என்பதை அறிவிப்பதாக உள்ளது.[3]

**சென்னப்பட்டணம் வெள்ளிப் பணம்** என்று ஒரு வகை நாணயம் குறிப்பிடப் பெறுகிறது. 2½ பணம் கொண்டது சென்னப்பட்டணம் வெள்ளிப் பணம் (அதாவது கால் சக்கரம்) ஆதல் கூடும். இதனை,

"1809: தஞ்சை கோட்டை தேவஸ்தானம் சென்னப்பட்டணம் வெள்ளிப் பணம் 400க்கு ஒன்று 2½ பணம் வீதம் சக்கரம் 100"
என்ற குறிப்பு[4] வலியுறுத்தும்.

"18—6—1816: சென்னப்பட்டணம் வெள்ளிப்பணம் 6,30,000க்கு, வராகன் ஒன்றுக்கு 45 பணம் வீதம் புலிவராகன் 14000 வரவு வைக்கிறது"[5]
என்ற குறிப்பினால் 45 பணம் ஒரு புலிவராகன் என்பது பெறப்படும். (புலிவராகன் 14,000 × 45 = 6,30,000 வெள்ளிப்பணம்).

இதுகாறும் கண்டவாற்றான் பின்வரும் வாய்பாடு அமையும் :—

| | |
|---|---|
| 32 காசு | - 1 பணம் |
| 2½ பணம் | - 1 சென்னப்பட்டணம் வெள்ளிப்பணம் |
| 4 வெள்ளிப்பணம் (அ) 10பணம் | - 1 சக்கரம் |
| 4½ சக்கரம் (அ) 45 பணம் | - 1 புலிவராகன்[5அ] |

## 2¼ சக்கரம் மதிப்புடைய புலிவராகன்

4½ **சக்கரம்** அதாவது 4 சக்கரம் **5** பணம் அதாவது 45 பணம் **ஒரு புலிவராகன்** என்று மேலே காட்டப்பட்டது. இதனடியில் காணும் குறிப்புக்களால் 2 சக்கரம் 2½ பணம் அதாவது 2¼ **சக்கரம் ஒரு புலிவராகன்** ஆதலைக் காணலாம். அவை,

"1815: வெள்ளி புலிவராகன் செலவழித்ததில் வராகன் ஒன்றுக்குச் சக்கரம் 2-2½ பணம் வீதம் சக்கரம் 5033-2½க்கு வராகன் 2237"[6]

"2—5—1822: சுப்பராவுக்கு சக். 60; இஜாபா சக்கரம் 7½ ஆகப் புலிவராகன் 30"[7] என்பனவாம்.

எனவே 4½ சக்கரம் கொண்டது புலிவராகன் என்பதோடு அதன் சரிபாதி 2¼ சக்கரம் கொண்ட புலிவராகனும் இருந்திது என்பது அறியப்பெறும்.

---

3. 1-66 4. 1-247 : 2-181 5. 1-254
5அ. புலி - phuli - flowery - 'அழகுபடுத்தப் பெற்ற' என்பது பொருள்
6. 4-292 7. 5-48, 49 (67½ சக் ÷ 30 = 2¼ சக்.)

சரபோஜி காசிப்பயணத்தில் இருந்த சமயம்; அரசுக்குக் கும்பினியார் 1400 மோஹராக்கள் அனுப்பினர். மோஹராக்கள் எல்லோர்க்கும் கொடுக்கப் பயன்படுத்தப்படுபவை அல்ல[7அ]; ஆகவே 1400 மோஹராக்களுக்குப் பதிலாக 13,500 சக்கரங்கள் அல்லது வெள்ளிப்புலிவராகன் 6000 அனுப்புமாறு உத்தர விடப்பெற்றது. 6000 புலிவராகன் 13,500 சக்கரம் எனின் ஒரு புலிவராகன் 2¼ சக்கரம் மதிப்புடையது என்பது போதரும்.[8]

## புலிவராகன் மதிப்பு மாறுபடுதல்

"புலிவராகன் 7 க்கு வராகன் 1 க்குச்சக்கரம் 2, பணம் 4 வீதம் சக்கரம் 16—8" என்பதால் இந்நாணயமாற்றத்தில் சிறிது வேறுபாடு காணப்படுகிறது என அறியப்படும்[9].

வராகன் ஒன்றுக்குச் சக்கரம் 2, பணம் 4 வீதம் கணக்கிடுதல் கி. பி 1798இல் காணப்படுகிறது. கும்பினியார் சர்க்காருக்கு 1, 64, 419 புலிவராகன் கொடுத்தனர். அதற்கு வராகன் ஒன்றுக்கு சக்கரம் 2–4 பணம் வீதம் சக்கரம் 3, 94, 605-6 பணம் என்று அக்குறிப்பின்கண் காணப்படுகிறது[10]. இதனாலும் கும்பினியார் ஒரு புலி வராகனுக்கு 2 சக்கரம் 4 பணம் வீதம் கணக்கிட்டனர் என்பது போதரும்.

வராகன் ஒன்றுக்குச் சக்கரம் 2, பணம் 1 வீதம் கணக்கிட்டதாக ஒரு குறிப்பு உள்ளது. இது கி. பி. 1778க்கு உரியது[11].

## பரங்கிப்பேட்டை வராகன்

இது சிறிது மதிப்பு அதிகம் உடையது. ஆகவே இதற்கு வராகன் ஒன்றுக்குச் சக்கரம் 2-8 பணம் கொடுக்கவேண்டி வந்தது. இதனை 1785க்கு உரிய குறிப்பால் அறியலாம்[12].

## நாகப்பட்டினம் வராகன்

நாகப்பட்டினம் வராகன் ஒன்றுக்குச் சக்கரம் 2–8¾ பணம் கணக்கிடப் பட்டதாக ஒரு ஆவணக்குறிப்பு உள்ளது. "நாகப்பட்டினம் வராகன் 15க்கு ஒன்று சக்கரம் 2–4⅝ வீதம் சக்கரம் 35–9⅝"என்பது அது[12அ].

இதில் கணக்குத் தவறு உள்ளது எனினும் நாகப்பட்டினம் வராகன் மதிப்பும் அதிகமானது என்பது இதனால் தெரியவரும்.

## பெரிய பணம் – சின்னப்பணம் – அரைப்பணம்

2¾ பணம் கொண்டது சென்னப்பட்டணம் வெள்ளிப்பணம் என்று மேலே கூறப்பட்டது. இதனைப் பெரியபணம் என்று கூறும் வழக்கம் இருந்தது.

---

7அ. அடிக்குறிப்பு 14 (அ) காண்க    8. 7-558, 559    9. 2-116
10. 4-286    11. 5-10    12. 2-216    12அ. 4-184

"பெரிய பணம் 171 சக்கரம் 42–7½ பணம்"[13] என்ற குறிப்பால் இது அறியப்பெறும். ஏனைய "பணம்" என்பது "சின்னப்பணம்" என்று வழங்கப் பெற்றது இதனை,

"சின்னப்பணம் 183 சக்கரம் 18-3 பணம்"[13]

என்ற குறிப்பு அறிவிக்கும்.

"1841: ..............அர்பத் நாட் அவர்களுக்குத் தபால் செலவுக்காகப் புலி 2, சின்னப்பணம் 8, காசு 35 கொடுக்கிறது"

என்ற குறிப்பு[13அ] பணம் என்பதைச் சின்னபணம் என்று குறிப்பிடும் வழக்காற்றுக்கு எடுத்துக்காட்டாகும்.

சின்னபணத்தின் சரிபாதி "அரைப்பணம்" எனப்பட்டது.

இது, "அரைப்பணம் 63 சக்கரம் 3–1½ பணம்"[13அ] என்பதால் அறியப்பெறும்.

மேலே கூறிய சின்னபணம் "ஒத்தைப்பணம்" என்றும் கூறப்பட்டது.

இது, "ஒத்தைப்பணம் 66க்குச் சக்கரம் 6 - 6 பணம்" என்பதால் பெறப்படும்[14].

## மோஹரா—தங்கருபாய்

இது நாணய வகைகளில் ஒன்று என்று மேலே கூறப்பெற்றது. மோஹராக்கள் எல்லோருக்கும் கொடுக்கக்கூடியவையல்ல; நாடோறும் கையாளப்படுவதற்கும் உரியவையன்று.[14அ]

"1400 மோஹராக்கள் 6000 புலிவராகனுக்குச் சமம்"[15] எனில் ஒரு மோஹரா என்பது 4²⁄₇ புலிவராகன் ஆகிறது. மோஹரா ஒரு பொன் நாணயமாகும். 5 ரூபா, 7½ ரூபா, 10 ரூபா, 15 ரூபா மதிப்புடைய மோஹராக்கள் இருந்தன.

"1233 (அதாவது கி. பி. 1832)

| | | |
|---|---|---|
| 5 ரூபா மோஹராக்கள் | 21க்கு | ரூ. 105 |
| முழு மோஹரா | | ரூ. 30 |
| பாதி மோஹரா | 5க்கு | ரூ. 37½" |

---

13. 5-308 13அ. 2–54, 55 14. 5–138

14அ. "No gold coin is legal tender but mohurs are accepted at Govt. Treasuries in payment of Government dues provided they have not lost one part in five hundred of their weight" – P. 614, Manual of Admn. of the Madras Presidency, Vol. I (1855)

15. 7–558, 559.

என்ற குறிப்பினால் ரூ. 15 மதிப்புடையது முழு மோஹரா என்றும், ரூ. 7½ மதிப்புடையது பாதி மோஹரா என்றும் வழங்கப்பெற்றன[16] என்றறியப்பெறும். "முழு மோஹரா" தங்கரூபாய் எனப்பட்டது.[17]

## வடபுலத்து மோஹராக்கள்

1829க்குரிய ஒரு குறிப்பினால் வடபுலத்துத் தங்க நாணயங்கள் சிலவற்றின் பெயர் தெரியவருகிறது. "கஞ்சம்" என்ற நகரில் தங்கியிருந்த பொழுது இரண்டாம் சரபோஜி தேடிப்பெற்றவை அவை. அவை வருமாறு:[18]

| | | | |
|---|---|---|---|
| அக்பர் மோஹரா | 1க்கு | ரூ. | 15 |
| பத்ரிநாத் மோஹரா | ,, | ரூ. | 15 |
| ராம்டங்க ,, | ,, | ரூ. | 49 |
| சதுரம் ,, | ,, | ரூ. | 25 |
| திவாணி ,, | ,, | ரூ. | 15 |

## மதுரைச் சக்கரங்கள்

தஞ்சாவூரில் பயன்படுத்தப் பெற்ற சக்கரங்களின் வேறாக மதுரைச் சக்கரங்கள்[18அ] இருந்தன. தஞ்சாவூர்ச் சக்கரம் ஒன்றுக்கு மதுரை 1 சக்கரம் 2¼ மூன்று வீசம் பணம் கொடுக்கவேண்டும்.

"1779: மணிகண்டப் பெருமாள்கோயில் சந்தியா மண்டபம்–நதியின் கரை சீர்படுத்தத் தஞ்சாவூர்ச் சக்கரங்கள் 50; இதற்குத் தஞ்சாவூர்ச் சக்கரம் ஒன்றுக்கு மதுரை 1 சக்கரம் 2¼ மூன்று வீசம் விதம் மதுரைச் சக்கரங்கள் மொத்தம் 62 சக்கரங்கள் ஒரு பணம்"

என்ற குறிப்பால்[19] தஞ்சாவூர்ச் சக்கரங்கள் மதுரைச் சக்கரங்களினும் அதிக மதிப்புடையவை என்பது புலப்படும்.

## சக்கரத்தின் ரூபா மதிப்பு

ஒரு சக்கரத்தின் ரூபா மதிப்பெவ்வளவு என்பது மிகுந்த சிக்கலாக உள்ளது. ஒரு குறிப்பு, "1811: ரூ. 100–11–6க்கு ரூபாய் ஒன்றுக்கு 5½ பணம் விதம் சக்கரம் 58–3⅞" என்றுள்ளது.[20] வேறொரு குறிப்பு,

"1779: அசர்பஸா நாகூர்க்குச் செல்கிறார்; செலவுக்கு இனாம் ரூ. 250க்கு, ரூபாய்க்கு ½சக்கரம் 1 பணம் விதம் 150 சக்கரம்"[20அ]

---

16. 4–83 17. 5-51 18. ச. ம. மோ. த. 4–46

18அ. 1-236 "ரூ. 600க்கு மதுரைப் பணம் ரூ. 1க்கு 8 பணம் விதம் சக். 480" என்றதால் ரூ. 1க்கு மதுரைப் பணம் 8 என்பது போதரும்

19. ச. ம. மோ. த. 15–88 20. 2-51 20அ. ச. ம. மோ. த. 18–24

என்பதாகும். இதனால் 1 ரூபாய்க்கு 6 பணம் என்று கணக்கிட்டமை பெறப்படும். மேலும் ஒரு குறிப்பு :

"1215 (கி. பி. 1814) திருவ(ழு)ந்தூர் புதிய பணத்தைச் செலவழித்ததில் ரூ. 396க்கு ரூ. 1க்கு 6½ பணம் வீதம் சக்கரம் 257–4 பணம்"

என்று காணப்படுகிறது.[21] இதனால் ரூபா ஒன்றுக்கு 6½ பணம் என்று தெரிகிறது. ஆனால்,

"1827–சக்கரம் 20க்கு ரூ. 31–1–0" என்ற குறிப்பிலும்,[22]

"1835–தக்ஷிணை செலவுக்காக ரூ. 200க்குச் சக்கரம் 128-7½"

என்ற குறிப்பிலும்[23] ஒரு ரூபாய்க்கு 6½ பணம் வீதம் கணக்கிடப்பெறாமல், சிறிது குறைவாகவே கணக்கிடப்பட்டமை காணப்பெறுகிறது. முன்னதில் 1 ரூபாய்க்கு 6·44 வீதமும், பின்னதில் $6\frac{7}{17}$ பணம் வீதமும் கணக்கிடப்பெற்றதாகத் தெரிகிறது. இங்ஙனம் ஏற்றத்தாழ்வு இருந்தமைக்குரிய காரணம் ஊகித்து அறியவும் முடியவில்லை. அந்தப் பணத்தின் தூய்மை எடை இவற்றைப் பொருத்து இருப்பினும் அமையும். எங்ஙனம் ஆயினும் ரூபாய்க்கு 6½ பணம் என்பதே பெரிதும் வழக்கில் இருந்ததாதல் கூடும்.[23அ]

## ரூபாயின் பகுதிகள்

ரூபா ஒன்றுக்கு 48 துட்டு[24] என்பதோடு ரூபா 1க்கு 64 பைசா[25] என்றும் கணக்கிடப்பட்டுவந்தது (பைசா–காலணா); 3 வீசம், துட்டு 9 என்பதால்[26] ஒரு ரூபாயின் 16இல் 1 பங்கு வீசம் எனப்பட்டது என்றறியலாம்; (வீசம்–அணா) ¼ ரூபாய் ½ ரூபாய் நாணயங்களும் இருந்தன.

"தெய்வம் 4க்கு ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் தட்சணை பைசா 2 வீதம் நாளொன்றுக்கு துட்டு 2; மாதம் 1க்கு துட்டு 60க்கு ரூபாய் ஒன்றுக்குத் துட்டு 48 வீதம் துட்டு 60க்கு ரூபாய் 1¼"

என்று ஒரு குறிப்பு உள்ளது.[27] இதனால் 8 பைசா = துட்டு 2; அதாவது 4பைசா = 1 துட்டு என அறியலாம். 48 துட்டு 1 ரூபாய் எனின், 192 பைசா ஒரு ரூபாய் ஆகிறது.

மேலே ரூபாய் 1க்கு 64 பைசா என்று கூறப்பட்டது. இங்கு ரூபாய் 1க்கு 192 பைசா என்று கூறப்பட்டுள்ளது. இதனால் ¼ அணாவும் பைசா எனப்பட்டது; $\frac{1}{192}$ ரூபாயும் பைசா எனப்பட்டது என அறியப்பெறும்.

---

21. 5-222 22. 2-277 23. 4-273

23அ. 9 சக்கரம் = 14 ரூபாய், பக்கம் 689 இன் அடிக்குறிப்பு, தஞ்சாவூர் மாவட்ட மானுவல்

24. 2-129, 181 25. 5-91 26. 11-61 27. 10-111

## பௌண்டுடன் நாணயமாற்று

ஆங்கிலேயருடன் கொண்ட நாணயமாற்று முறையும் சிறிது தெரிய வருகிறது. ஒரு புலிவராகனுக்கு 8 ஷி. 6 பென்ஸ் வீதம் 1807லும்,[28] 7 ஷி. 3 பென்ஸ் வீதம் 1808லும்[29] கணக்கிடப்பெற்றன. இங்ஙனம் மறு ஆண்டே குறைந்தமைக்குக் காரணம் புலிவராகனின் எடைக்குறைவாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

## ஹோன்னம்

இதுவும் ஒருவகை நாணயம். இது புலி ஹோன்னம்[30] என்றும் கூறப்பெறும்.

"1779 : புலி ஹோன்னம் 1581க்கு ஹோன்னத்துக்கு 2 சக்கரம் 4 பணம் வீதம் தஞ்சாவூர்ச் சக்கரங்கள் 3794, பணம் 4"

என்ற குறிப்பினால்[31] 2 சக்கரம் 4 பணம், ஒரு ஹோன்னத்தின் மதிப்பு எனத்தெரிகிறது.

பரங்கிப்பேட்டை ஹோன்னம் வாங்குவதாயின் தஞ்சாவூர்ச் சக்கரம் 2 சக்கரம் $\frac{3}{4}$ பணம் கொடுத்தாற் போதுமானது.[32] இது 1779க்குரியது.

மதுரைச் சக்கரம் கொடுத்துப் பரங்கிப்பேட்டை ஹோன்னம் வாங்குவதாயின் மதுரைச் சக்கரம் $2\frac{1}{2}$, $\frac{7}{8}$ பணமும் கொடுக்கவேண்டும்.[32]

நாகப்பட்டணம் ஹோன்னம் வாங்குவதாயின் தஞ்சாவூர்ச் சக்கரம் 2 $1\frac{3}{4}$ பணம் கொடுக்கவேண்டும்.[33]

தஞ்சாவூர் ஹோன்னம், 1780இல் தஞ்சாவூர்ச் சக்கரம் 2, $4\frac{1}{4}$ வீசம் மதிப்புடையது.[34]

கி. பி. 1798இல் ஒரு ஹோன்னம் $2\frac{1}{2}$ சக். $4\frac{1}{4}$ அரையே மூன்று வீசம் ($4\frac{15}{16}$ பணம்) மதிப்புடையதாயிற்று.[35]

கி. பி 1780இல் பரங்கிப்பேட்டை ஹோன்னம் வாங்கிய வகையில் ஒரு ஹோன்னத்திற்கு 2 சக். அரையே மூன்றுவீசம் பணம் ($\frac{11}{16}$ பணம்) கொடுத்த

---

28. 4-487 29. 2-122
30. The earliest designs on the reverses is that of an elegant floral or arabesque pattern whence perhaps the name of **phuli hun** - flowery pagoda was derived ( P: 55, South Indian Coins )
31. ச. ம. மோ. த. 18-20
32. ச. ம. மோ. த. 18-4
33. ச. ம. மோ. த. 12-91
34. ச. ம. மோ. த. 12-77
35. ச. ம. மோ. த. 19-17

தாக ஒரு குறிப்புக்கூற[36] அதே ஆண்டுக்குரிய வேறொரு குறிப்பு ஒரு ஹோன்னத்திற்கு 2 சக். என்று கூறுகிறது.[37] இதற்குக் காரணம் ஹோன்னத்தின் எடை குறைவாகலாம்.

கி. பி. 1819இல் 2 சக்கரம் $2\frac{1}{4}$ 3 வீதம் ($2\frac{7}{16}$ பணம்) மதிப்புடையதாயிற்று[38]. கி. பி. 1825இல் "சக்கரம் 36க்கு ஹோன்னம் 15க்கு ரூ. $52\frac{1}{2}$" என்று கொடுக்கப் பட்டது[39]. இதனால் ஒரு ஹோன்னம் 2 சக்கரம் 4 பணம் ஆகிறது.

இதுகாறும் கண்டவாற்றான் ஹோன்னத்தின் மதிப்பும் புலிவராகன் போல் ஏற்றமும் இறக்கமும் உடையதாய் இருந்தது என்பது போதரும்.

1779க்குரிய குறிப்பினால்[39அ] சில ஹோன்னங்களின் பெயர்களை அறியலாம். அக்குறிப்பில் "ஜமா தஞ்சாவூர்ச் சக்கரங்களில்" என்றிருப்பதால் அவை வரவு செலவு செய்யப்பெற்றன என்றறியப்பெறும். அந்த ஹோன்னங்களின் பெயர் வருமாறு:—

1. பரங்கிப்பட்டி ஹோன்னம் (பரங்கிப்பேட்டை)
2. பிலி ஹோன்னம் (புலி)
3. பிரளயகட்டி ஹோன்னம் (பழவேற்காடு)
4. ஹைதர் எட்டு ஹோன்னம்
5. அலம்புலி ஹோன்னம்
6. ஆர்க்காட்டு ஹோன்னம்
7. புதுச்சேரி ஹோன்னம்
8. பழைய பரங்கிப்பட்டி

ஹோன்னம் முதலியனவாம். மேற்கண்ட ஹோன்னங்களும் தஞ்சாவூர்ப் பகுதியில் மேட்டுக்குடி மக்களிடம் பழக்கத்தில் இருந்தனவாதல் வேண்டும்.

## சில காசுகள்

கோணிக்காசு என்றும் சாணார்காசு என்றும் சில காசுகள் இருந்தன[40]. கிடைத்த குறிப்புக்களைக் கொண்டு அவற்றின் மதிப்பு நன்கு அறியக்கூடவில்லை.

கோணிக்காசு என்பதுபோல் கிணிக்காசு என்பது வழக்கில் இருந்தது. இதன் நாணயக்கார மதிப்பு ரூ. $21\frac{1}{2}$; அரண்மனை மதிப்பு ரூ. 20 ஆகும்[40அ].

சாணார்காசு 1க்கு $5\frac{1}{2}\frac{1}{8}$2 பைசா முதல் $5\frac{1}{4}\frac{1}{8}$ பைசா 20 வரை மதிப்பிடப் பட்டதாக 1851 க்குரிய குறிப்பு விளம்புகிறது[40ஆ].

"கிணி காசு ஒன்றுக்கு ரூ. 17—2—0 விலை ஆகிறது; சாணார்காசு 100க்கு புலிவராகன் 132" என்றொரு குறிப்பும் உள்ளது[40இ].

---

36. ச. ம. மோ. த. 12-77
37. ச. ம. மோ. த. 12-87
38. ச. ம. மோ. த. 18-88
39. ச. ம. மோ. த. 26-21
39அ. ச. ம. மோ. த. 18-88
40. ச. ம. மோ. த. 6-8; 22-18
40அ. ச. ம. மோ. த. 2-26
40ஆ. ச. ம. மோ. த. 8-88
40இ. ச. ம. மோ. த. 1-21

## சாணார்காசு - ருக்கே - டக்கே

இத்தாலியிலிருந்து செங்கடல் வழியாக வாணிபம் நடந்தமையின் இந்தியாவின் மேலைக் கடற்கரைப் பகுதியில் இத்தாலியத் தங்க நாணயங்கள் கிடைத்தன. அவற்றுள் ஒரு பக்கம் சிலுவையின் முன் நீதிபதி நிற்பது போன்று ஒரு உருவம் இருக்கும் என்பர். இது ஒரு "சாணார்" மரத்தின்மேல் ஏறுவதற்குத் தயாராக இருக்கும் காட்சிபோல் இந்நாட்டவர்க்குத் தோன்றியதாதல் கூடும். அதனால் இத்தகைய நாணயத்தைச் "சாணார் காசு" என்றனர்.[40அ]

ருக்கே, டக்கே என்ற நாணய வகைகள் தெரியவருகின்றன. 48 ருக்கே 1 டக்கா ஆகும். இது, "ருக்கே 100க்கு டக்கே 2, ருக்கே 4" என்ற குறிப்பினால்[41] தெரியவரும்.

மேலும் ஒரு குறிப்பு "டக்கே 1க்கு 1½ பணம்" என்று கூறுகிறது[42]. மற்றொன்று "1 ருக்கே ஒரு அணாவின் 12இல் 1 பங்கு" என்கிறது.[43] (தெலுங்கில் உள்ள 'ரூக' என்பது இதுவாகலாம்)

## தங்க சாலைகள்

திருமருகல் என்ற ஊரில் அமர்சிங்கு காலத்தில் ஒரு தங்கசாலை இருந்தது. அங்குக் கி. பி. 1783இல் "துர்கா டக்கா" என்ற காசு தயாரிக்கப் பட்டது. அப்புதுக்காசுகள் 5000 தயாரிக்க 104 டக்கே எட்டு ருக்கே செலவாயிற்று.[44]

கி. பி. 1786லும் திருமருகலில் நாணயங்கள் தயாரிக்கும் வேலை தை மாதம் முதல் தொடங்கி நடந்து வந்தது. அதனைக் குத்தகைக்கு விட்டனர் குத்தகைதாரர் வேலை தொடங்கவில்லை போலும்! மீண்டும் நாணயங்களைத் தயாரிக்கும் வேலையைத் தொடங்கவேண்டும் என்று ஒருவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.[45]

---

40அ Sanar Kasu,* the Venetian ducat or Sequin, the large number of which in the Malabar coast testify to the once extensive commerce with Italy by way of Red Sea.

* F. N.: So called from the figure of the doge standing in front of St. Marks Cross in which the native imagination sees the Sanar or toddy drawyer preparing to climb the palmyra tree (P. 59, Coins of South India)

41. 5-215, 821 42. ச. ம. மோ. த. 18-2 43. ச. ம. மோ. த. 12-76

44. ச. ம. மோ. த. 6-5 45. ச. ம. மோ. த. 8-27

1000 காசுகள் தயாரிக்க 3 பணம் (அதாவது 96 காசுகள்) செலவு என்றும், ஒரு பலம் எடைக்கு 24 காசுகள் செய்யப்பெற்றன என்றும் ஒரு குறிப்பினால்[46] அறியப்பெறுகிறது.

எனவே நாணயங்கட்குத் தேவை ஏற்படும்பொழுது சர்க்காரே அச்சிட்ட தாதல் வேண்டும்; அல்லது வேண்டிய அளவு தயார் செய்து கொடுக்குமாறு குத்தகைதாரரிடம் விட்டிருத்தல் வேண்டும் எனத்தெரிகிறது.

அமர்சிங்கு காலத்துக்கு 50 ஆண்டுகட்குமுன் தரங்கம்பாடியில் பிர்தாப் சிங்கு காலத்தில் சர்க்கார் நாணயங்கள் அடிக்கும் தொழிற்சாலை ஒன்று இருந்தது. இத்தொழிற்சாலையில் அவ்வேலை செய்பவருக்கு மாதம் ஒன்றுக்கு மூன்று வராகன் ஊதியம் தரப்பெற்றது[47]. அத்தரங்கம்பாடி தங்கசாலையில் செய்த நாணயங்கள் யாவை என்று தெரியவில்லை.

இந்நாட்களில் செலாவணியாகாத தேய்ந்த நாணயங்களை அரசே பெற்றுக்கொண்டு. அச்செல்லாத நாணயங்களின் மதிப்புக்கொண்ட நாணயங் களையோ பிற நாணயங்களையோ கொடுப்பது பழக்கமாகும். நாணயங்களை அச்சிடுதலும் வெளியிடுதலும் அரசாங்கப் பொறுப்பாகும். நாணயங்களை அச்சிடும் தங்கசாலைகள் (Mirt) அரசுக்கே உரியனவாம். நாணயங்கள் வெளி யிடுதலால் ஆகிய வரவும் இழப்பும் (இலாபமும் நஷ்டமும்) அரசுக்கே உரிய னவாம். சில்லறை நாணயங்களை வெளியிடுதல் முன்னாட்களில், குறிப்பாகத் தஞ்சை மராட்டியர் காலத்து அரசாங்கப் பொறுப்பாக இருந்ததா என்பது ஐயத்துக்கு இடம் தருகிறது. கி. பி. 1780இல் திருமருகலில் நாணயங்களைத் தயாரிக்கும் வேலை குத்தகைக்கு விடப்பட்டது[48] என்றமையாலும், "ஆயிரம் காசு தயார் செய்ய மூன்று பணம்[49] என்றாற்போன்ற குறிப்புக்களாலும் நாணயங்கள் தயார் செய்வதால் ஆகும் செலவும் குத்தகைதாரருடைய இலாபமும் சேர்த்துத்தான் நாணயத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்பட்டது என்பது அறியப்பெறும். அங்ஙனமாயின் நாணய வெளியீடு அரசாங்கத்துக்கு ஓரளவு வருமானம் தரும் செயல் ஆகிறது ; நாணயங்களைப் பயன்படுத்தும் ஏழைக்குடி மகன் அந்தச் செலவை ஏற்பவனாகக் காணப்படுகிறான்.

முதலாம் ஏகோஜி தஞ்சையில் மராட்டிய அரசை நிறுவியவர். இவர் டச்சுக்காரர்களோடு 30—12—1676இல் செய்துகொண்ட ஒப்பந்தத்தால் 'பணம் வராகன்' ஆகியவற்றை அச்சிட்டு வழங்கும் உரிமையை டச்சுக்காரர்களுக்கு அளித்தார் என்றும் இலாபத்தில் பாதி ஏகோஜிக்கு உண்டு என்றும் தெரிகிறது.[50]

---

46. 6-5 47. ச. ம. மோ. த. 9-5 48. ச. ம. மோ. த. 8-27 49. 6-5

50. A. R. E. for 1935-36, Part II, Paragraph 81 ;
–மராட்டியர் செப்பேடுகள் ஐம்பது – தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு – முதல் செப்பேடு –ஏகோஜியின் வெள்ளிப்பட்டயம் : வரி 45—52 ; ஐந்தாவது பகுதி ;–

## பழைய நாணயங்கள்

நாணயங்கள் பல நாட்கள் பழக்கத்தில் இருந்தால் தேய்வு ஏற்படும்; செல்லாதவை ஆகும். அத்தகையவற்றை அரசே திரும்பப் பெற்றுக்கொண்டு செலாவணியாகும் புது நாணயங்களை வழங்கியிருத்தல் கூடும். இதுபற்றிய குறிப்புக் கிடைக்கவில்லை. எனினும் தேய்ந்துபோன செப்புக்காசுகள் 1828இல் 3892 இருந்தன.[51] அரண்மனையில் ஒரு பகுதியில் கி. பி. 1823இல் தேடிய பொழுது பலவிதமான பொருட்களுடன் செம்பால் ஆன பலவித காசுகள் 2202-ம் "பணம்" 663ம் காணப்பட்டது.[52] இவற்றால் தேய்ந்துபோன செலாவணியாகாத நாணயங்களைச் சேர்த்து வைத்திருந்தனர் என்று தெரிகிறது. இவை இரண்டாம் சரபோஜி காலத்தன ஆகலின் மீண்டும் நாணயங்கள் செய்யப்பயன்பட்டிருக்க முடியாதெனக் கூறலாம்.

## பல்வகை நாணயங்களின் மதிப்பு

நாட்டுக்கு நாடு அரசு மாற்றமும், நாணயவகை மாற்றமும் இருந்தமையின் இந்நாள்போன்று பாரதநாடு முழுவதும் எளிதில் செலாவணியாகும் நாணயங்கள் இருந்தமைக்குச் சான்று இல்லை. நாகப்பட்டினம் வராகன் பரங்கிப்பேட்டை வராகன் என்று பலவிதமான நாணயங்கள் பழக்கத்தில் இருந்தபோதிலும் அவ்வவற்றின் மதிப்பு வேறுபட்டவை என்று வியாபாரிகளும் பொதுமக்களும் அறிந்திருந்தனர் ஆதல் கூடும். நாணயங்களின் அரண்மனை மதிப்பும் நாணயக்காரர் மதிப்பும் வெவ்வேறாகக் காணப்பெற்றது. யானை வராகன் என்ற தங்க நாணயத்தின் நாணயக்கார மதிப்பு ரூ. 15; அரண்மனை மதிப்பு ரூ. $5\frac{3}{4}$ மட்டுமே; கினிகாசு நாணயக்காரர் மதிப்பு ரூ. $21\frac{1}{3}$ ஆக இருக்க அரண்மனை மதிப்பு ரூ. 20; இங்ஙனம் மதிப்பு வேறுபாடு காட்டும் பட்டியலும் ஒன்று கிடைத்திருக்கிறது.[53] தனியாகவே நாணயங்களின் அரண்மனை மதிப்புக்கான பட்டியலும் ஒன்று உண்டு. இது 1851க்குரியது. அதில் வெள்ளிப் புலிவராகன் மதிப்பு ரூ. $3\frac{3}{4}$ முதல் $3\frac{1}{2}$; பரங்கிப்பேட்டை வராகன் 1க்கு ரூ. $2\frac{3}{4}$ $\frac{1}{2}$ முதல் $2\frac{3}{4}$ $\frac{1}{4}$ பைசா 2; வெள்ளி டாலர் 1க்கு ரூ. $2\frac{1}{4}$ பை 1 முதல் $2\frac{3}{4}$; சாணார்காசு 1க்கு ரூ. $5\frac{1}{2}\frac{1}{8}$ 2 பைசா முதல் $5\frac{1}{2}\frac{1}{8}$ பைசா 10 வரை - என்றிங்ஙனம் பல நாணயங்களுக்கு அரண்மனை மதிப்பு வைத்திருந்தனர் என்று தெரியவருகிறது.[54]

---

"அஞ்ச வு நாக பண கம்பட்டமும் வராகன் கம்பட்டமும் உத்தம குர்பினி நடக்கும் படிக்கு ஏகோசி மகாராசா அவர்கள் சம்மதித்து தத்துவம் கொடுத்து நடப்பிக்கிறது. அது ஏனென்றால் தஞ்சாவூர்ச் சீமையிலே வழங்குறபடிக்கு மூணரைமாத்துப் பணமாக வும், பவழங்காட்டுபல சேர்கிற வராகன் படிக்கு வராகன் ஒன்றுக்கு எட்டரையே அரைக்கால் மாத்தாகவும் சிஞ்ஞார் அமரால் மகாராஜா அவர்களும் காவேட்டி நாயக்கரும் ஒத்துப் பசிக்கொண்ட ஒப்பந்தப்படிக்கு இந்த நாணயம அடிக்கிற கம் பட்டத்தில் கண்ட ஆதாயத்திலே சிலவு தள்ளி நின்ற ஆகாயம உத்தம குபினிக்குப் பாதியும் ஏகோசி மகாராசா அவர்களுக்குப் பாதியும பெறுகிறது......"

51. ச. ம. மோ. த. 7-2 52. 10-87 53. ச. ம. மோ. த. 2-26 54. ச. ம. மோ. த. 8-88

## பலவகை நாணயங்களைச் சேகரித்தல்

இரண்டாம் சரபோஜி நாணயங்களைச் சேகரித்தலை ஒரு பொழுது போக்காகக் கொண்டிருந்தார் என்று அறியவருகிறது[54அ]. இங்ஙனம் சேமித்த நாணயங்களை ஒரு பெட்டியில் வைத்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.

20—1—1821 இல் ஜகந்நாத் என்ற ஊரில் தங்கியபொழுது பலவித மான மோஹராக்களைச் சேகரித்தார். அவற்றையெல்லாம் தஞ்சாவூருக்கு அனுப்பித் தன்னிடம் இருந்த பெரிய அதிகாரியிடம் கொடுத்து "நாணயங் களின் பெட்டியில் வைக்க" என உத்தரவு அனுப்பினார்[55].

இரண்டு பட்டியல்களில் சில்லறை நாணயங்களின் பெயர்கள் காணப் படுகின்றன[56]. மயில்பணம், பொரை பணம், புதுச்சேரி பணம் பெரிது, சிறிது, உடையார்பாளையம் பணம், நாகப்பட்டினம் சல்லி முதலியன.

ஒரு குறிப்பினின்று[57] ஒரு பெரிய அதிகாரி பலவிதமான தங்க நாணயங் களை ராஜ்மகாலில் அரக்குச்சீல் வைத்து முத்திரைபோட்டு வைத்திருந்ததாகக் காணப்படுகிறது. ராம்டக்கா, அநந்தகிரி வராகன், தார்வாட் வராகன், துர்கா வராகன், வெங்டகிரி வராகன், யானை வராகன், சுல்தான் வராகன் முதலியன அவை.

கி. பி. 1830 க்குரிய இரு குறிப்புக்களில் கல்யாண மகாலில்[59] இருந்த நாணயங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

பெரே பணம்[59-1]
போரே பணம்
தகடுசுள பணம்
பதல்வட்ட போரே பணம்
மைலி பணம்
செளிரி பணம்
லோங்குளாவின் பணம்
சம்பு வெள்ளி சேர்க்கப்பட்ட பணம்
தெலுங்குகாசு
நாகபுரியின் பைஸா
பள்ளேனா சந்திரன் விராகன்
கோளே ஒத்தைபத்தி விராகன்
அச்ரபீக்கு பிரதிப்பெயர் முசேரீபஹ
சுல்தானி விராகன்
சுல்தானி பணம்
தலைக்காசு

---

54 அ. Last Days of Bishop Heber – P. 166: The Bishop paid private visit to the Rajah .........He showed a valuable collection of coins........."

55. 5-177 56. ச. ம. மோ. த. 6-15; 4-32 57. ச. ம. மோ. த. 2-25

58. 2-297 முதல் 305 வரை; 7-569 முதல் 576 வரை.

59. இரண்டாம் சரபோஜியின் காமக்கிழத்தியர் இருந்த அரண்மனை "Sarabhoji had a seraglio in true oriental fashion and ............ .. this establishment is known by the name Kalyan Mahal. This institution was first formed in the year 1824 - Tanjore Manual P. 826.

59-1 பேரே பணம் என்பது சென்னையினின்று வெளியிடப்பெற்ற பெரிய பணமாக இருக்கலாம் (அடிக் குறிப்பு 18க்கு உரியது காண்க)

ரூபாய்
பழைய ரூபாய்கள்
தெலுங்கு துட்டு
முழு துட்டு
பாதி துட்டு
கால் துட்டு
ஒத்தைக் காசி
அரைக்காசி
செல்வி காசி
கால் காசி
செம்பின் மேல் தங்கமுலாம் காசு
சின்ன யானையின் செப்புக்காசு[59-2]
புதுச்சேரி செப்புக்காசு
தங்கம் புலி மொலாம் வராகன்
புலி வராகன் வெள்ளி
கட்டி சுழி
தஞ்சாவூர் காசு
ஆங்கிலேய வெள்ளைக்காரக்காசு
செப்பு தஞ்சாவூர் அரைக்காசு
ஆற்காடு பைஸா
,, ½ ,,
மஹாதேவர் அம்பாள் காசு[59-3]
காளைமாட்டுக் காசு
யானைக்காசு[59-4]
நாகூர் பைசா
மகம்மதிய செப்புக்காசு
வெங்கடகிரி காசு
மயில் காசு
அநேக வித காசு
வெள்ளைக்காரன் காசு
பாஹத்திரி காசு
சின்ன யானைக் காசு
சுவாமி பிள்ளையார் கூட
மொள ஒத்தை விராகன்
துர்கை விராகன்[59-5]
அனந்தகிரி விராகன்
கிணி காசு
ராமடக்கா[59-6]
ஸ்ரீராதா பணம்
பிரெஞ்சு டாலர்
டாலர்
துஹோரான் பார்க
ஹாலண்ட் பணம்
ஸ்டீகர் டாலர்

---

59-2. யானை உருவம் பொறிக்கப்பெற்ற காசு; கொங்குநாட்டில் இருந்தது; மைசூர் அரசர்களும் யானை பொறித்த காசுகளை வெளியிட்டனர்; ஆனை பைசா என்று (Small elephant cash) திப்புவும் இக்காசுகளை வழங்கினார் (பக்கம் 105); Coins of South India – Sir Walter Eliot (1970)

59-3. சிவனும் பார்வதியும் பொறிக்கப்பட்ட நாணயம்; உமாமகேசுவர வராகன் எனவும் கூறப்பெறும்; இவை இக்கேரி அரசர்களால் வெளியிடப்பெற்றன - பக்கம் 105, 146; C. of. S. I.

59-4. பொன்னால் ஆகியது ஆனைக்காசு; ஹோன்னங்களாகவும் ஃபணங்களாகவும் கிடைக்கின்றன (பக்கம் 116 C. of S. I.)

59-5. ஆங்கிலேயரது ஆளுகையின்கீழ் வந்தபொழுது "ஒப்புவிக்கப்பட்ட மாவட்டங்களில்" (Ceded Districts) துர்க்கா வராகன்கள் நிறையக் கிடைத்தன. சிதல்துர்க்கத்துப் பாளையக்காரரும் துர்க்கை வராகன் அச்சிட்டனர். (145; 105 C. of S.I.)

59-6. ராம டக்கா என்பது ராம டங்கா என்று இருத்தல் கூடும். இவை பெரிய கிண்ணம் போன்ற உருவத்தையுடையவை. இராமரும் சீதையும் தம்பிமார்களுடனும் அனுமனுடனும் இருக்கும் காட்சி இந்த நாணயத்தில் பொறித்திருக்கும். வைணவ பிராமணர்கள் இதனைப் பூசனைக்குரியதாக வைத்துக்கொள்வர். இது 4 தோலா, 2, 1 தோலா எடையுடையனவாக இருக்கும். இது தட்டையாகவும் ஒரோவழி செய்யப்படுவது உண்டு. (பக்கம் 99, Coins of South India)

த்தார்வாட விராகன்
அரியலூர் பணம்
ஒடையார் பாளையம் பண
கட்டிராயி பணம்
மரவஞ்சுழி
கிருஷ்ண ராஜ
அகந்தர் விராகன்
நகர் விராகன்
துலுக்காணி ஆற்காடு மோஹர்
அமதா ராதஹீ மோஹர்
**இங்கிலாந்து மூன்றாவது ஜார்ஜ்**
மிராஜாபுரி
குந்தரிசாயி
கல்பா ரூபாய்
நாகபுரி
தொம்பசாயி
முட்டைஸா
ஜ்யான்ஸீ
பாஜார்கட
பகவான் சாயி
நேஹனா பாத்
பிரதாப கட
ஜனாயீர் அரைரூபாய்
பூபாளி
பெரிய மலை
ஜயரூஸ்
ஸம்சேர
கமலசாயி
சித்தூரி
ஸ்ரீங்கார கொண்டை ரூபாய்
பனேஜ்யா ராஜ்யாசயி
முரஸேராஸஹ

ஸில்தானமதனூ சாயீ பணம்
மிஸர்
மைசூர் பணம்
தெலுங்கு ஜெல்லி
கண்ட ஸ்ரீநாராயண
பிரெஞ்சு டாலர் நாபராட்
ரிங்க்ஸ் டாலர்
தரங்கம்பாடி பணம்
வெஸ்ம் ப்ரஷ்யா பணம்
ஸ்பெயின்
டேனிஷ்
முரசதாபாத்
ஸ்ரீராம் சிவ சக்ரவர்த்தி
பிரயாகம் சின்ன பைசா
ராஜகட்
கத்தி
**லகது**
காசிக்ஷேத்ரத்தின் துட்டு
சீமை பைசா
யானை பைஸா
பதல் வட்ட போரே
நந்தி காசு[59-7]
அலங்கானி
புளசாயி
க்ஷீபா சாயி
மதுரசாயி
ஸிகென்
விஜயம்
பாக்ஷாயி காசு
கும்பினி பைஸா
கலி பணம்
மதரீ பணம்

---

59-7. நந்தி காசு: காகதீய அரசர் காலத்து ஒரு பக்கம் நந்திவாகனம் பொருந்திய காசுகள் கிடைத்துள்ளன. ஒருபக்கம் நந்தி படுத்தநிலையிலும் நாணயங்கள் உண்டு(பக்கம்85). நந்தி வாகனத்தின்மேல் இலிங்கம் அமைந்ததாகவும் காசுகளுண்டு (பக்கம் 102). ஒருபுறம் இலங்கை மனிதன் நின்றாற் போன்று இருக்கும், அடுத்த பக்கம் நந்தி உருவம் பொறித்த காசுகளும் உண்டு. ஒரு புறம் நந்தியும் பிறிதொரு புறம் திரிசூலம் உடையனவும் உண்டு. ( பக்கம் 184, Coins of South India )

## நாணயக் கண்காட்சி

மேலே கண்ட நாணயங்கள் ஒவ்வொரு வகையிலும் பலப்பல இருந்திருத்தல் கூடும். இரண்டாம் சரபோஜி அவர் மகன் இரண்டாம் சிவாஜி ஆகியோர் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்காலம் சேமித்து இருந்த பல்வகை நாணயங்கள் 18—12—1854இல் ஒரு கண்காட்சிக்காக இரண்டாம் சிவாஜி "ரெஸிடெண்டுக்கு அனுப்பினார்" என்று ஒரு குறிப்பு[60] விளம்புகிறது. கண்காட்சி எங்குநடந்தது எப்பொழுதுநடந்தது என்பவை பற்றிய விபரம் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. அந்த நாணயங்கள் திரும்பிவந்திருத்தற்கும் ஏதுவில்லை. ஏனெனில் 1855இல் சிவாஜி இறந்துபோய் அரசே குழப்பத்தில் இருந்தமையான் ஏன்னலாம்.

# 13

# அளவைகள்

## முகத்தலளவை

8¼ சேர் கொண்டது 1 மரக்கால் என்பது 1775[1], 1788க்குரிய குறிப்புக் களாலும்,[2] இங்ஙனமே 1802[3], 1828[4], 1842[5] ஆகியவற்றுக்குரிய குறிப்புக் களாலும் தெரியவருகின்றது.

8¼ சேர் கொண்ட மரக்கால் மட்டும் அன்றி வேறு அளவு கொண்ட மரக்காலும் இருந்ததாதல் வேண்டும்; அதன் விவரம் புலப்பட்டிலது:

"அப்பாஜி புலாஜி போன்ஸ்லே இவர்களுக்கு 8¼ சேர் கொண்ட மரக்காலால் 300 கலமும் தற்போதுள்ள மரக்காலால் 259¼ மரக்காலும்"[6]

என்றமையால் இது அறியப்பெறும்.

கலம் என்ற பேரளவும்[6அ] படி என்ற சிற்றளவும்[7] வழக்கில் இருந்தன.

## எடுத்தலளவை

"லாயத்தில் 211 காளை மாடுகளுக்கு ............ 7 நாட்களுக்கு மசாலை தயார் செய்து கொடுக்கத் தினம் 1க்கு வெங்காயம் 9 டாங்க் வீதம் 26¼ சேர் 9 தோலா; சீரகம் 4½ டாங்க் வீதம் 13 சேர் 13½ தோலா ............" என்ற ஒரு குறிப்பு உள்ளது.[8]

---

1. 2-148 2. 2-293 3. ச. ம. மோ. த. 1-39 4. ச. ம. மோ. த. 9-28
5. ச. ம. மோ. த. 6-17 6. ச. ம. மோ. த. 18-38
6அ. 1-276; ச. ம. மோ. த. 12-120 7. 1-228 8. 1-273

இதைக் கணக்கிட்டு நோக்கின் இதில் ஒரு தவறு காணப்பெறுகிறது. 9 தோலா என்பதை 9 டாங்க் என்று திருத்தினல் காளைமாடுகள் கணக்கு 211 சரியாகும்.[A] 9 தோலாவை அப்படியே கொள்ளின் காளைமாடுகளின் எண்ணம் 213 ஆகும்.[B] எப்படித் திருத்தினாலும் திருத்தலாம். அங்ஙனம் திருத்தி நோக்கின் **1 தோலா என்பது 3 டாங்க்** ஆகிறது. இது 1834க்குரிய குறிப்பு.

கி. பி. 1776க்குரிய குறிப்புப்[9] பின்வருமாறு :-

" தங்க முலாம் கொடுக்கத் தங்கம் 1½ டாங்க் தோலா 1க்கு 10 சக். 4 பணம் வீதம் 15-6 பணம் " இதனைக் காணும்பொழுது 1 டாங்க் என்பது 1 தோலாவாதல் கூடும் என்று தோன்றுகிறது. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அங்ஙனம் இருந்திருத்தல் கூடும். துணிந்து சொல்வதற்கு இல்லை. " டாங்க் " என்ற எடை பயின்றுள்ள பிற குறிப்புக்களால்[10] " டாங்க் " என்ன அளவினது என்பது பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. தங்கம் முதலியன எடைபோடுங்கால் டாங்கும் தோலாவும் ஒன்றாகக் கொண்டனர் போலும்.

மணங்கு சேர் முதலிய எடைகள் உண்டு. 1797க்குரிய குறிப்புப் பின்வருமாறு :[11]

" பெரிய தேருக்கு அழகுபடுத்தும் வேலைக்குப் பித்தளை நகை புதிதாகச் செய்து கொடுத்த நிறை ¾ மணங்குக்குச் சேருக்கு 3¾ பணம் வீதம் 11 சக். 2½ பணம்."

(சேர் 3¾ பணம் வீதம் 30 சேருக்கு 112½ பணம் அதாவது 11 சக். 2½ பணம். 30 சேர் = ¾ மணங்கு எனின் 40 சேர் 1 மணங்கு ஆகிறது). இதுகாறும் கூறியவாற்றால் பிற்கண்ட வாய்பாடு ஊகித்துப் பெறப்படும் :

3 தோலா – 1 பலம் ; 8 பலம் – 1 சேர்
5 சேர் -1 வீசை ; 8 வீசை – 1 மணங்கு.

A

26¼ சேர் × 8 = 210 பலம்
210 பலம் × 3 = 630 தோலா
630 தோலா × 3 = 1890 டாங்க்
\+ 9 டாங்க்
1899 டாங்க்

211 மாடுகளுக்கு 1899 டாங்க்

1 மாட்டுக்கு = $\frac{1899}{211}$ = 9 டாங்க்

B

26¼ சேர் × 8 = 210 பலம்
210 பலம் × 3 = 630 தோலா
\+ 9 தோலா
~~639 தோலா~~

213 மாடுகளுக்கு 639 தோலா

1 மாட்டுக்கு = $\frac{639}{213}$ = 3 தோலா

3 தோலா = 9 டாங்க் ; 1 தோலா = 3 டாங்க்

9. 8-166 10. 1-173, 174 11. ச. ம. மோ. த. 20-1

" புகையிலை தூக்கு 10க்கு, சேர் 62½க்குத் தூக்கு 2 பணம் வீதம் "
என்ற குறிப்பால்[12] 10 தூக்கு 62½ சேர் எனின், 1 தூக்கு 6¼ சேர் ஆகிறது.

மிளகு, சீரகம் முதலிய சில பொருள்களைக் " கழஞ்சு " என்ற எடையிலும் எடை போட்டனர் என்று தெரிகிறது :-

" 1814 : மாட்டு வாயினின்று மஞ்சள் நிறமாக எச்சில் ஊறுகிறதை நிறுத்த மிளகு 9 கழஞ்சு, சீரகம் 9 கழஞ்சு, வெங்காயம் ¼ சேர், நெய் 1 சேர் "
என்ற குறிப்பு[13] உள்ளது. எத்தனைக் கழஞ்சு ஒரு சேர் என்று தெரியவில்லை.

" 1834 : நவராத்திரி செலவிற்கு : பேரீச்சம்பழம் சுமார் 3 கண்டியும், பேரீச்சங்காய் சுமார் எடை 10 மணுவும் திராக்ஷை சுமார் 10 மணு, கற்கண்டு ஒரு கண்டியும் செலவிருக்கிறது ........."
என்ற குறிப்பால் மணங்குக்கு மேல் கண்டி என்ற எடுத்தலளவை காணப் படுகிறது. 20 மணங்கு ஒரு கண்டியாகலாம். 20 மணங்கு ஒரு பாரம் என்பது போல உறுதியாகச் சொல்லச் சான்றில்லை.[13அ]

## நில அளவு

நிலம் 14 அடிக்கோலால் அளக்கப்பெறும்[14] என்று தெரிகிறது. வேலி, மா என்பன பெருவழக்கு. குழி அளவும் வருவதுண்டு.[15] 20 மா ஒரு வேலி என்பது தெரிந்ததே.

## நீட்டல் அளவை

முழம், சாண் என்பன பெருவழக்கு.

" யந்திரத்தின் கட்டை உடைந்து போனதற்குப் பேரம் 1½ முழ நீளம் ஒரு சாண் அகலம் கருப்புக்கட்டை "
என்ற குறிப்பை[16] இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம்.

---

12. 2-11 13. 2-215 13அ. 5-4

14. 6-194 ; 1-187 ; நிலம் அளந்த கோல் ஒன்று தஞ்சை அரண்மனையில் மூத்த இளவரசர் ராஜேஸ்ரீ ராஜாராம் ராஜேசாகேப் அவர்களிடம் இன்றும் உளது. (தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50, செ. இராசு – முன்னுரை, பக்கம் XXIII அடிக்குறிப்பு 1 காண்க) (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு 1988)

15. 2-252 ; 2-311. 16. 1-288

# 14

## நீதி மன்றங்கள்

ஆட்சி நன்கு நடைபெற வேண்டின், அரசனாலும் அரசனது அலுவலர்களாலும், கள்வராலும், பகைவராலும், விலங்குகளாலும், பிற உயிர்களாலும் குடி மக்கட்குத் தீங்கு நிகழாதவாறு அரசன் கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்துக் கொள்ளல் வேண்டும். குடிமக்கள் அமைதியோடு வாழ வேண்டும் எனின் அவர் தமக்குள்ள குறைகளைப் போக்குவதற்கு வழிவகைகளை வகுத்தல் அரசனது கடமைகளுள் ஒன்று ஆகும். அரசன் பல துறைகளையும் கவனிக்க வேண்டியவன் ஆகலின் நீதி வழங்குவதற்கு நீதி மன்றங்களை அமைத்து நீதியை நிலைநாட்டுவது எங்கும் காணும் சிறந்த முறையாகும்.

இரண்டாம் சரபோஜி காலத்துக்கு முன் இருந்த நீதிவழங்கும் முறை பற்றி விவரமாக அறிய முடியவில்லை. அமர்சிங்கு காலத்தில் நியாயாதிபதிகள் ஒழுங்கற்றவர் என்றும், அவர்தம் ஒழுங்கீனத்தைப் போக்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு ஸர் ஆர்ச்சிபால்டு காம்பெல் (கவர்னர்) அவர்களிடம் ஸ்வார்ஷ் பாதிரி முறையிட்டார் என்றும் தெரியவருகிறது[1]. அமர்சிங்கை வெளியேற்றித் தஞ்சை அரசுக்குரியரான சரபோஜி II காலத்தில் சிறந்த முறையில் நீதி வழங்க நான்கு நீதிமன்றங்கள் தோற்றம் பெற்றன[2]. அந்நான்கு மன்றங்கள், முத்திரித சபை, தரும சபை, நியாய சபை, நியாயாதீச சபை என்பனவாம்[3].

---

1. In Amar Singh's time atleast, the judges were hopelessly corrupt. Schwartz had to appeal to Sir Archibald Campbell, Governor of Madras to control Judicial Corruption there - Page 242, History of Tamil Nad by N. Subramanian
2. " The four-fold judiciary came into existence only after 1800 " - Page 242' History of Tamil Nad By N. Subramanian
3. 9-92; 9-94

18–12–1824இல் கலெக்டர் காடன் அவர்களும் உதவி கலெக்டர் பிளாக்பர்ன் அவர்களும் சில அலுவலர்களைப் பார்த்து, "ஸர்க்காரில் எத்தனைச் சபைகள் இருக்கின்றன?" என்று வினவினர். அதற்கு மறுமொழியாக 4 சபைகள் இருக்கின்றன என்று மறுமொழி வந்தது. "எந்தச் சபையில் எந்த வழக்கு விசாரிக்கப்படும்" என்று மேலும் வினவ, "**தரும சபை** எனப்படும் பெரிய சபையில் பெரிய வழக்குகள் தீர்க்கப்பெறும்; **முத்திரித சபையில்** சிறிய வழக்குகள் விசாரிக்கப்பெறும்; **பிரதிஷ்டித சபையில்** எல்லா வழக்குகளும் விசாரிக்கப்பெறும்; இங்கும் தீர்க்கப்பெறாமற்போனால் **கார்பார் பிரசங்கத்தில்** தீர்ப்பது" என்று மறுமொழி கூறினர்[4].

நியாயநிசி மஹால் என்று ஒன்று இருந்ததாகவும் தெரியவருகிறது. இதுபற்றி அவர்கள் வினவியபொழுது, அதில் எல்லா வழக்குகளையும் அரசர் விசாரித்துத் தீர்ப்புக் கூறுவர் என்றும், பலசபைகளுக்கும் வேலை பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதால் நியாயநிசி மகால் இல்லை என்றும் பதில் வந்தது.[5] ஆகவே மேற்கண்ட நான்கு சபைகள் ஏற்படுத்தப்பெறுவதற்கு முன்னர் நியாயநிசி மஹால் என்று ஒரு சபை இருந்தது என்றும், அது அரசரின் நேர் முகப் பார்வையில் இருந்தது என்றும் அதுவே மராட்டிய அரசாட்சியில் உயர்நீதி மன்றம் என்றும் கருதலாம்.

மேலே கூறிய முத்திரித சபை, தரும சபை, நியாய சபை, நியாயாதீச சபை என்ற நான்கு மன்றங்கள் மட்டும் அன்றிப் பிரதிஷ்டித சபை என்றும் கார்பார் பிரசங்கம் என்றும் இரு வேறு சபைகள் இருந்தனவாதல் வேண்டும்.

**பிரதிஷ்டித சபையில்** எல்லா வழக்குகளும் விசாரிக்கப்பெறும் என்று சொல்லப்பெறினும்[6] அது பொருத்தமாக இல்லை என்றே தோன்றுகிறது. இப்பிரதிஷ்டித சபை 1813இல் பிறிதொரு ஆவணத்தில் கூறப்பெறுகிறது.[7] 1827க்குரிய ஆவணத்தினின்று இதில் இரண்டுக்கு மேற்பட்ட நியாயாதிபதிகள் இருந்தனர் என்றும் தெரிகிறது.[8] எனவே மற்ற நான்கு சபைகளின் சட்ட ஆட்சி (விசாரணை) எல்லைக்குள் (Jurisdiction) வாராதவை பிரதிஷ்டித சபையில் விசாரிக்கப்பெற்றிருத்தல் கூடும்.

கார்பார் பிரசங்கம் என்பது பல இடங்களில் பேசப்பெறுகிறது. ஒரு ஆவணத்தினின்று தருமசபையின் தீர்ப்புக்கு மேல் முறையீடு (appeal) கார்பார் பிரசங்கத்தில் செய்யப்பெறும் என்று அறியவருகிறது.[9] இப்பிரசங்கத்தார் வழக்குக்குரிய ஆவணங்களை வருவித்து ஆய்ந்து "இசுபசால்" என்ற அவையில் மேல் முறையீட்டுக்கு அனுப்பச் செய்வர் என்று தோன்றுகிறது.[10] கார்பார் பிரசங்கம் என்ற சர்க்கேல் ஆபீஸ் என்றும் காணப்படுகின்றது.[10அ]

4. 2-205, 206 5. 2-206, 207 6. 2-206 7. 1-178
8. 4-203 9. 6-489 10. 6-489 10அ. 6-629

மேற்கூறிய பல சபைகளின் சட்ட ஆட்சி எல்லையைப் பற்றிச் சிந்தித்தால் பெரும்பாலான வழக்குகள் முதன் முதலில் **முத்திரித சபையில்தான்** அனுமதிக்கப்பெறும் என்னலாம், பின்னர்த் **தருமசபையில்** மேல் முறையீடு செய்யப்பெறும். அங்குத் தோற்றவர் கார்பார் பிரசங்கத்துக்கு முறையிடுவர்.[11]

குற்றவியல் வழக்குகள் முதலில் நியாய சபையிலும், மேல்முறையீடு தரும சபையிலும் நிகழ்ந்தன என்று ஓர் ஆவணமும், தரும சபையில் மேல்முறையீடு செய்யாமல் நியாயாதீச சபையில் பிராது செய்யக்கூடாது என்றும், இத்தரும சபையின் தீர்ப்பை எதிர்த்து நியாயாதீச சபையில் மேன்முறையீடு செய்யலாம் என்றும், அங்குச் செய்த தீர்ப்புக்கு மேன்முறையீடு கார்பார் பிரசங்கத்தில் செய்யப்பட்டது என்றும் பிறிதோர் ஆவணமும் கூறுகின்றன.[12] இதனால் தரும சபை, நியாய சபை, நியாயாதீச சபை ஆகிய மூன்றும் குற்றவியல் வழக்குகளையும் விசாரித்தனர் ஆதல் கூடும்.

" தரும சபை எனப்படும் பெரிய சபையில் பெரிய வழக்குகள் தீர்க்கப் பெறும் " என்பதால்[13] இந்நாளில் அசல் வழக்குகள் ( Original Suits ) எனப் படுபவை தரும சபைக்குரியன என்னலாம். 1846, 1848க்குரிய சிலஆவணங்கள் " 100 **சக்கரங்களுக்கு** மேலுள்ள வழக்குகளைத் தருமசபையில் தீர்ப்பது " என்றமை இதனை வலியுறுத்தும்.[14] " தரும சபைக்கும் முத்திரித சபைக்கும் சொல்லி 100 ரூபாய்க்குள் இருக்கும் விவகாரம் முத்திரித சபையில் தாக்கல் செய்து தீர்ப்பது ; 100 ரூபாய்க்கு மேற்படின் தரும சபையில் தாக்கல் செய்து தீர்ப்பது " என்ற 1811ஆம் ஆண்டில் கொடுத்த ஆணையும் இதனை வலியுறுத்தும்."[15]

இறுதியான தீர்ப்பை எதிர்த்து அரசனிடத்திலும் முறையிடுதல் உண்டு ; ரெஸிடெண்டு துரையிடத்திலும் முறையிடுதல் உண்டு.[17]

இனி " திருட்டு கொலை முதலிய குற்றங்களை யார் விசாரிப்பது? " என்று வினவிய கலெக்டருக்கு, " போலீஸ் ( கொத்தவால் ) விசாரணை செய்து அந்த விஷயத்தை ஸர்க்காரில் தெரிவித்து, ஸர்க்காரின் உத்தரவின்படி தண்டனை செய்வதுண்டு " என்ற மறுமொழியால் கொலை திருட்டு முதலிய குற்றம் செய்பவரை விசாரிப்பவரும் தண்டனை வழங்குபவரும் யார் எவர் என்பவை அறியவரும்.[18]

இந்த நீதி மன்றங்களில் பல்வகையான வழக்குகள் விசாரிக்கப் பெற்றன. அவ்வழக்குகள் பல தலைப்புக்களின்கீழ்[19] அமைக்கப்பட்டிருத்தல் கூடும் என்று தெரியவருகிறது.

---

11. 6-487, 488 ; 12. 7-782 முதல் 787 முடிய 13. 2-205, 206
14. 1-170 ; 6-417 ; ச. ம. மோ. 81-81 15. 2-184
17. 6-114 முதல் 129 வரை 18. 2-207 19. 10-22 முதல் 25 முடிய

"வாதி வீரபத்ர கொத்தனார்; பிரதிவாதி அப்பாவு பிள்ளை வகையறா: இவருக்கு **ரிணாதான பதத்தில்** சேர்ந்த விவகாரம் தீர்ந்து வாதிக்குப் பிரதிவாதி 50 சக்கரம் நிர்ணயம் செய்த விவரப்படி முத்திரையுடைய மனுவின் காகிதம் விலை ரூ. 2 இரண்டும் தரவேண்டும் என்று ஜயபத்திரமாகியுள்ளது"[20]

என்றதினின்று **ரிணாதான பதம்**[21] என்பது கடன் பாக்கி பற்றிய வழக்கு என்று அறியவரும்.

"வாதி சுந்தர சாஸ்திரி; பிரதிவாதி அஹம் சாஸ்திரி; **பிரகீர்ண பதத்தில்** சேர்ந்த விவகாரத்துக்குப் பிரதிவாதி புனர் நியாயத்திற்காகக் கொடுத்த லிஸ்டு முழுவதும் முன்னால் விசாரணைக்கு ஆதாரம் முத்ரித சபையிலிருந்து வந்தது. அதைப்பார்த்து விசாரணை செய்த இடத்தில், முன்னால் சபையில் வாதியினுடைய பிரியாதியில் தெரிவிக்கப்பட்ட நான்கெல்லையில், கிழக்குமேற்கு 10 காலடிகள் அகலமான பொதுச்சந்தில் பிரதிவாதி போட்டுள்ள சுவர் கதவு நான்கு மூலை, ஓடு கட்டுக்கோப்பு வகையறா பிரதிவாதி இடித்து மாமூல்படி குளத்திற்கும் வடவாற்றுக்கும் மக்கள் தாராளமாக நடமாடக் கிழக்கு மேற்கு 10 காலடிகள் அகலமான சந்தைச் சுத்தம் செய்யவேண்டுமென்று தீர்ப்பாகி உள்ளது[22]"

என்றதினின்று **பிரகீர்ணக பதம்**[23] என்பது "**பொதுச் சொத்துக்களை ஆக்ரமித்தல்**" (encroachment) பற்றியது என்பது போதரும்.

"வாதி வடுகநாத பிள்ளை வகையறா; இவர்களுக்கு **ஸாஹஸ பதத்தில்** சேர்ந்த விவகாரத்துக்குப் பிரதிவாதி புனர் நியாயத்திற்காகக் கொடுத்த லிஸ்டு முழுவதும் முன்னால் விசாரிக்கப்பட்டதின் ஆதாரம் நியாயசபையிலிருந்து வந்தது. அதைப்பார்த்து விசாரணை செய்த இடத்தில், மேற்சொன்ன முதல் பிரதிவாதி மேற்படி **சீட்டுப் பிடுங்கிக் கொண்டதற்கு** ருஜுவாகி வருவதால் அந்தத்தவறுக்கு மேற்சொன்ன முதல் பிரதிவாதிக்கு அபராதம் ரூபாய் ஒன்று[24]"

என்பதினின்று **ஸாஹஸ பதம்**[25] என்பது வன்முறை (சிறு குற்றங்கள்) பற்றிய வழக்கு என்பது தெரியவரும்.

"வாதி அம்மணி; பிரதிவாதி ஸ்ரீநிவாச அய்யங்கார்; இவர்களுக்கு **நீக்ஷ பதத்தில்** சேர்ந்த விவகாரத்துக்குப் பிரதிவாதி புனர்நியாயத்திற்காகக் கொடுத்த மேற்சொன்ன லிஸ்டு முழுவதும் முன்னால் விசாரிக்கப்பட்டதின் ஆதாரம் முத்ரித சபையிலிருந்து வந்ததைப் பார்த்து விசாரணை செய்த இடத்தில், பிரதிவாதிக்கு **ஆஸ்தி இருப்பது** தெரியவருகிறதால் அந்த

---

20. 9-66 21. 9-11, 39, 46, 51, 53, 55, 65, 66, 67, 125, 129, 186, 188.
22. 9-28 23. 9-28, 44, 47, 49, 50, 55, 56, 57, 72, 78, 128, 182, 185
24. 9-80 25. 9-80, 37, 42, 59, 118, 116, 117, 127, 129, 180

மேற்சொன்ன புனர் நியாயத்திற்குக் கொடுத்து முத்திரையில்லாத லிஸ்டு அனாதேயம் செய்யப்பட்டது"[26]

என்பதிலிருந்து **நீக்ஷ பதம்**[26அ] என்பது ஏழ்மை அல்லது ஏழைகளைப்பற்றியது என்பது தெளிவு. இதுபற்றி இவ்வாவணம் ஒன்றே கிடைத்துள்ளது.

"வாதி சுந்தரம் பிள்ளை ; பிரதிவாதி கோவிந்தசாமி ; இவருக்கு **நிக்ஷேப பதத்தில்** சேர்ந்த விவகாரத்துக்குப் பிரதிவாதி புனர்நியாயம் கொடுத்த மனு முழுவதும் முன்னால் விசாரணையின் ஆதாரம் முத்ரித சபையி லிருந்து வந்ததைப் பார்த்து விசாரணை செய்வதற்குப் புனர் நியாயம் பிரதி காரனுக்கு நியமம் ஜாமினும் கொடுத்து வழக்குத் தீர்த்துக் கொள்வதற்கு முடியாமல் போனால் உன்னுடைய புனர் நியாயம் மனு எப்பொழுதாவது விசாரிப்பதற்கு யோக்யதை யில்லாமல் தள்ளுபடியாகும் என்று கெடு அறிந்து உத்தரவு பத்திரம் அனுப்பினதற்கு அதன்படி நடக்கவில்லை யாதலால் அதனுடைய அந்தப் புனர் நியாயம் மனு தள்ளுபடி செய்யப்பட்டது."[27]

—இதினின்று **நிட்சேப பதம்**[27அ] என்பது பிரதிவாதிக்குரிய ஜாமீன் கொடுத்தல் முதலியன பற்றியவை போலும் என்று கொள்ளக்கிடக்கிறது. இதுபற்றி இவ்வாவணம் ஒன்றே கிடைத்துள்ளது.

"வாதி அப்பு கண்ணியன் ; பிரதிவாதி சின்னிய பல்லவராயன் ; இவருக்கு **ஸ்தேய பதம்** வாதியினால் கொடுக்கப்பட்ட முத்திரையில்லாத மேற்படி மனுவில் தான் சபா மஞ்கூரி கொடுத்த பாஞ்சாதபி அபராதத்திற்கு 15 தினங்களுக்குக் கெடு தரவேண்டும் என்று எழுதினதற்கு மேற்படி மனு இந்த வழக்கினுடைய விசாரணையில் தப்ளக்கில் தாக்கல் செய்ததால் செலவு-1".[28]

—இதினின்று கெடு (காலவரம்பு) தரவேண்டும் என்ற கேட்டுப்பெறுவது **ஸ்தேய பதம்**[29] ஆதல் கூடும் என்று நினைக்கலாம்.

"வாதி நாகோஜி கங்காதர் ; பிரதிவாதி புஜங்க கங்காதர் ; இவருக்குப் **பூர்வீக சொத்துப் பங்கு பதத்தில்** வாதியினால் கொடுக்கப்பட்ட முத்திரையில்லாத மேற்படி மனுவில் தான் பிரதிவாதிமேல் **சபா மஞ்கூரி** பியாதி செய்து தீர்ப்பான தொடர்பில் நிர்ணயப்படி பங்கு போக ஜாஸ்தி பட்டினுடைய ஐவேஜ் கொடுத்ததனால் இந்த மனு அனாதேயம்"[30]

—இதினின்று **பூர்வீக சொத்துப்பதம்**[31] என்பது மூதாதையர் ஈட்டிய சொத்துப் பற்றிய வழக்கு என்பது விளங்கும்.

---

26. 9-82  26அ. 9-82  27. 9-81  27அ. 9-81  28. 9-47
29. 9-47, 48, 57, 68, 77, 127, 140  30. 9-56  31. 9-49, 56

"முன்னால் விசாரணையின் ஆதாரம் நியாய சபையிலிருந்து கொண்டு வந்து பார்த்த பொழுது முன்னால் சபையில் வாதியினால் நியமிக்கப்பட்டவர் ஆஜராகி வாதியினுடைய பிர்யாதியில் தெரிவிக்கப்பட்ட ஆஸ்தி, முதலில் பிரதிவாதியினுடைய மனைவியின் ஸ்வாதீனம் செய்திருந்தது என்றும், இப்பொழுது அந்த ஆஸ்தி முதலில் பிரதிவாதியினுடைய ஸ்வாதீனத்தில் இருக்கிறது என்று கைப்பட எழுதிக் கொடுத்ததனால், அந்த விஷயத்தில் நிபந்தனைப்படி **அர்த்த சம்பந்திக்க பதத்தில்** பிர்யாதி செய்து கொள்வது என்று முன்னால் சொல்லப்பட்ட வாதியினுடைய நியமிக்கப்பட்டவர்க்குத் தெரிவித்து அனாதயம் செய்த்து சரியென்று சபாவில் நிறைவேற்றப்பட்டது."[32]

—இதனால் **அர்த்தசம்பந்திகபதம்**[33] என்பது பொதுவாக நிலையியற் பொருள் (immovable) பற்றிய வழக்கு என அறியப்பெறும்.

"வாதி நாலங்க அலி; பிரதிவாதி ரஸிப்பூ; இவர்களுக்குப் **பூமிவாத பதத்தில்** சேர்ந்த விவகார விஷயம் பிரதிவாதி புனர்நியாயத்திற்காகக் கொடுத்த மனு முழுவதும் வந்ததை முன்னால் விசாரணையினுடைய ஆதாரம் பார்த்துச் சிந்தித்த இடத்தில் 10 சக்கரம் பொறுமானமுள்ள இடம் அதிலுள்ள மரம் செடி கொடிகள் கூட வரவேண்டும் என்று வாதியினால் செய்யப்பட்ட பிர்யாதி விசாரணை செய்து, மேற்படி இடம், முத்திரையுடைய காகிதத்தின் விலை ரூ. $\frac{1}{2}$ வாதிக்குப் பிரதிவாதி தரவேண்டும் என்று முத்ரித சபையிலும் மேலும் தரும சபையிலும் ஆன தீர்ப்புச் சரிதான் என்று சபா மஜ்கூரியிலும் நிர்ணயம் ஆனது."[34]

—இதனான் **பூமிவாத பதம்**[34] என்பது நிலபுலங்களைப்பற்றிய வழக்கு என்பது தெரியவரும். இது பூவிவதபதம் என்றும் காணப்படுகிறது[35].

மேற்கண்ட வண்ணம் பலவாறு வழக்குகளை வகைப்படுத்தி அமைத்ததுடன், தாயபாகம், நானாவிதம் என்ற பிரிவுகளிலும் வழக்குகள் அமைந்தன என்று தெரியவருகிறது.[36]

இதுகாறும் கூறியவற்றால் பின்வரும் பல தலைப்புக்களில் வழக்குகள் வகைப்படுத்தப் பெற்றன என்பது போதரும்:—

1. ரிணாதான பதம்
2. பிரகீர்ணக பதம்
3. ஸாஹஸ பதம்
4. நிக்ஷே பதம்
5. நிட்சேப பதம்
6. ஸ்தேய பதம்
7. பூர்வீக சொத்துப் பங்கு பதம்
8. அர்த்தசம்பந்திக பதம்
9. பூமிவாத பதம்
10. தாயபாகம்
11. நானாவிதம்

---

32. 9-77, 78 33. 9-77, 78, 116 34. 9-181
35. 9-125, 126, 183, 184 (பூமிவாதபதம்—நிலங்களைப்பற்றியன)
36. 10-22 முதல் 25 முடிய

வழக்குத் தொடருபவர் முத்திரைக் காகிதத்தில் எழுதி வழக்குத்தொடுக்க வேண்டும். வாதி வென்றால் பிரதிவாதி முத்திரைக் காகிதக் கட்டணத்தை வாதிக்குச் செலுத்தவேண்டும். நமக்குக்கிடைத்த ஆவணங்களினின்று முத்திரைக் காகிதத்தின் தொகையும் விலையும் பின்வருமாறு:—

| தொகை ரூ. | முத்திரைக்காகித விலை | தொகை ரூ. | முத்திரைக்காகித விலை |
|---|---|---|---|
| 3 | 0 . 50[37] | 33 | 2 . 00[41] |
| 10 | 0 . 50[38] | 89 | 5 . 00[42] |
| 16 | 1 . 00[39] | 121 | 8 . 00[43] |
| 32½ | 2 . 00[40] | 155 | 10 . 00[44] |

திரு ஷெலிவங்கர் அவர்கள்[45] இதனை வகைப்படுத்திப் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

| ரூ. | ரூ. அ. பை. | ரூ. | ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 10 வரை | 0 — 8 — 0 | 200 வரை | 10 — 0 — 0 |
| 20 வரை | 1 — 0 — 0 | 500 ,, | 20 — 0 — 0 |
| 50 வரை | 2 — 0 — 0 [45அ] | 1000 ,, | 40 — 0 — 0 |
| 100 வரை | 5 — 0 — 0 | 3000 ,, | 100 — 0 — 0 [45ஆ] |

இது மிகவும் சிறந்த முறையில் அமைந்துள்ளமை கவனிக்கத் தக்கது. இதுபற்றித் தஞ்சை வழக்கறிஞர் திரு ஆர். செயராமன் அவர்களின் கருத்து அறியத் தக்கது. அது,

"இன்று தமிழ்நாட்டில் நீதிமன்றக் கட்டணச் சட்டப்படி சொத்துரிமை மற்றும் தொகையைக் குறித்த வழக்குகளில் 7½ % கட்டணம் வசூலிக்கிறார்கள். ............தஞ்சை மராட்டிய மன்னர்களின் மன்றங்களில் வசூலிக்கப்பட்ட கட்டண விகிதம்......... தாவாவின் மதிப்பு அதிகரிக்க அதிகரிக்கக் கட்டணம் குறைவதைக் கவனிக்கவேண்டும். இதுதான் நியாயமான முறை"

என்பதாகும்.[46] எனவே மராட்டிய மன்னர் வழக்குகளுக்குரிய பத்திரத் தொகை சாலச்சிறந்த முறையில் தொகைக்கு ஏற்றவாறு படிமுறையில் அமைத்தது போற்றுதலுக்குரியது.

---

37. 9-126 38. 9-181 39. 9-77 40. 9- [illegible]
41. 9-68 42. 9-125 43. 9-68 44. 9- [illegible]9
45. Report on Modi Mss. P. 4 45அ. அடிக்குறிப்பு 20 காண்க ; 9-66
45ஆ. 4-279, 280 ; "அடமு என்பவனும் இரு பிரதிவாதிகளும் ரூ. 951 பெறுமான முள்ள நிலங்களும், 800 ரூ. பெறுமானமுள்ள வீடும், ரூ. 777 பெறும்படியான இன்னும் இரு நிலமும் கொத்தவாலுக்குக் கொடுக்கிறதென்று முத்திரைப் பத்திரத்தின் கிரயம் ரூ 100ஐ அந்த மூன்று பிரதிவாதிகளும் கொடுக்கவேணும்" (951 + 800 + 777 = 2028 ரூ. இத்தொகைக்கு முத்திரைப் பத்திரம் ரூ 100.)
46. தஞ்சை மராட்டியமன்னரின் மோடி ஆவணக்கருத்தரங்கு - தஞ்சை மராட்டிய மன்னர் காலத்திய மக்கள் வாழ்க்கை நிலை: திரு ஆர். செயராமன் பக். 3, 4.

"10 பணத்துக்குக் குறைவான தொகை வழக்கு முத்திரைக் கடுதாசியில் கொடுக்க வேண்டியதில்லை" என்பதும் கவனிக்கத் தக்கது.[46அ]

ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் இருந்தனர். இது,

"பிரதிஷ்டித சபை இரண்டாவது நியாயாதிபதி அப்பாசாஸ்திரிக்கு[47]"
"முத்திரித சபையில் துவிதீயாத்யக்ஷராக இருக்கும் சிவராமசாஸ்திரி[48]"
"முத்திரித சபையில் தலைமை நீதிபதி அய்யாசாஸ்திரி; இரண்டாவது நீதிபதி குப்புசாஸ்திரி[49]"
என்பனவற்றான் உறுதி எய்தும்.

"தரும சபையின் நியாயாதிபதி மகாதேவ பட் லாண்டகே - இவருக்கு முதலில் சம்பளம் சக்கரம் 50; பிறகு ரூ. 35"[50]

"பலமனே அண்ணாசாஸ்திரி – தருமசபை – மாதச்சம்பளம் 20 சக்கரம்; முத்திரித சபையின் தலைமை நீதிபதி அய்யா சாஸ்திரி 15 சக்கரம்"[51]

"பிரதிஷ்டித சபை இரண்டாவது நியாயாதிபதி அப்பா சாஸ்திரிக்கு வருஷத்திற்கு சக். 120"[52]
என்பனவற்றான் நியாயாதிபதிகளின் சம்பளம் எவ்வளவு என்பது ஒராற்றான் தெரியவருகிறது.

"தருமசபையின் நியாயாதிபதி மகாதேவபட்லாண்டகே — இவருக்கு முதலில் சம்பளம் சக்கரம் 50; பிறகு ரூ. 35"[53]

என்பதால் சிலசமயங்களில் சம்பளம் குறைக்கப்பெறுவதும் உண்டு என்றும்,

"முத்திரித சபையில் துவிதீயாத்யக்ஷராக இருக்கும் சிவராமசாஸ்திரியை நவ வித்யாகலாநிதி சாலாவில் நியமிக்கிறது"[54]
என்பதால் சாத்திரத்தில் வல்ல நீதிபதிகளை நவவித்யாகலாநிதி சாலாவுக்கு அதாவது அவர்களுக்கு ஏற்ற இடத்துக்கு மாற்றுவதுண்டு என்றும்,

"வேதம் ஓதக்கூடாத நாளில் தரும சபையார் தீர்ப்புச் சொல்லியுள்ளனர்; ஸ்மிருதி சந்திரிகை - தர்சனவிதியில் வேதம் படிக்கக்கூடாத நாளில் தீர்ப்புச் செய்யக்கூடாது என்று கூறுகிறது"[55]

என்றதினின்று வேதம் ஓதக்கூடாத நாட்களாகிய முழுமதி, மறைமதி, பிரதமைகள், அஷ்டமி ஆகிய நாட்களில் தீர்ப்புச் சொல்லும் மரபு அந்நாளில் இல்லை என்றும்,

---

46அ. 2-84 47. 4-208 48. ச. ம. மோ. த. 9-24 49. 4-26 50. 4-824
51. 4-26 52. 4-208 53. 4-824 54. 8-72 55. 8-820

பெருந்தொகைகளாக இருப்பின் ஐந்து நீதிபதிகளுக்கு முன் விசாரணை நடைபெறும் என்றும்,[56]

நூறு பொன் அல்லது சக்கரத்திற்கு மேலுள்ள வழக்குகள் தரும சபையில் தீர்க்கப்பெறும் என்றும்,[57]

" 100 ரூபாய்க்குள் இருக்கும் வியாஜ்யம் முத்திரித சபையில் தாக்கல் செய்து தீர்த்துக்கொள்ளலாம் " என்றும்,[58]

" சாட்சி அனுபவம் முதலான ஆதரவுகள் கொண்டே தீர்ப்புச்சொல்லப் படும் " என்றும்,[59]

" வாதி பிரதிவாதிகள் ஒருமனப்பட்டுத் தீர்ப்பு வழங்குமாறு (ராஜிநாமா) " கேட்பதுண்டு[60] என்றும்,

" முப்பது நாட்களுக்கான கெடுவுக்குள் புனர் நியாயம் பிராது (மேல் முறையீடு) செய்தல் வேண்டும் "[61] என்றும்,

" வாதி அப்பண்ணா முதலிக்குப் பிரதிவாதி அய்யாமுதலி – இவர்கள் பத்திரம் விலைகூட ரொக்கம் $40\frac{3}{4}$, 1 வீசம், $\frac{1}{2}$ க்கு ரூ. $62\frac{1}{4}$, 3 தரவேண்டும் என்று 1838 செப்டம்பர் 5க்குத் தீர்ப்பு. இதற்குப் பிரதிவாதியிடமிருந்து வசூல் ரூ. $20\frac{1}{4}$, ஒரு வீசம் ... போக மீதி ரூ. $41\frac{3}{4}$, 3 வீசம் 3 வசூல் ஆக வேண்டியது. பிரதிவாதிக்கு வியாபாரத்தின் ஐவேஜ் மாஹல் சர்பத் கானா – இதில் தரவேண்டிய ஐவேஜ் மேற்சொன்ன தீர்ப்புப் பாக்கியின் விவரம் தடை செய்து வைக்கும் விஷயம் "[62]

என்றதினின்று பாக்கிக்காக அவருக்குப் பிற இடத்தினின்று வரவேண்டிய தொகையைத் தடைசெய்வது ( attachment ) உண்டு என்றும்,

சேனாதிபதி பிரவஹர ராஜேஸ்ரீ கிருஷ்ணாஜி கேசவ் பண்டிட் 7–12–1834இல் நியாய சபையின் நியாய கர்த்தா ஹரி சக்ரபாணி அவர்களுக்கு எழுதிய மடலிலிருந்து, தன்னிடம் ஒரு வழக்கு உள்ளதால், அது தொடர்பாக நியாய சபையில் உள்ள வழக்கை நிறுத்தி வைக்குமாறு எழுதியதினின்று[63] வழக்குகளுக்குத் தடையுத்தரவு (stay) போடுவதும் உண்டு என்றும்,

" தரும சபை முத்திரித சபை பிரதிஷ்டித சபை இவைகளில் 20 ஆண்டு கட்கு முற்பட்ட வீட்டு வழக்குகளை விசாரிக்க வேண்டியதில்லை " என்று 1813 இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டது என்றும்[63அ]

(வழக்குகளைத் தக்க முத்திரைப் பத்திரங்களில் தருவது போல) மனுக்களை "ஒரு அணா முத்திரைப் பத்திரத்தின் மேல் கொடுக்கவேண்டும்"[64] என்றும்,

---

56. 2–199 முதல் 202 வரை 57. 1–170 58. 2–184
59. 7–798 60. 7–800 61. 9–182 ; 185 62. 12–14, 857
63. 9–104 63அ. 1–178 64. 2–71

ஷெவாதியள் யாவத்தும் என் பாட்டனார் சம்பாதித்தது. அதுகளைத் தர்ம சாத்திரப்படிக்கும் என் தகப்பனால் என் அனுமதியுன்னியில் அவருடைய அபிப்பிராயப்படிக்குச் செய்ய யாதொரு பாத்தியம் இல்லாதவர் "[65] என்றமையான் பாட்டன் சொத்துக்குப் பேரன் உரிமையுடையவன் என்றும், பல செய்திகள் தெரியவருகின்றன.

கடனைப் பிறருக்கு மாற்றுவது, பற்றுச் சீட்டு, வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல் முதலியவற்றுக்குப் பின்வரும் தொகைக்குரிய பத்திரங்களில்[66] எழுதுவது அந்நாளைய முறையாகும்:

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ரூ. | 16 | முதல் | 65 | வரை | 2 | அணா | பாத்திரம் |
| ரூ. | 65 | ,, | 125 | ,, | ¼ | ரூ. | ,, |
| ரூ. | 126 | ,, | 250 | ,, | ½ | ரூ. | ,, |
| ரூ. | 251 | ,, | 500 | ,, | 1 | ரூ. | ,, |
| ரூ. | 500 | ,, | 1000 | ,, | 2 | ரூ. | ,, |
| ரூ. | 1000 | ,, | 2000 | ,, | 4 | ரூ. | ,, |

ரூ. 2000 முதல் எவ்வளவுக்கு எழுதினாலும் 8 ரூ. பத்திரத்தில் எழுதவேண்டியது.

பல ஆண்டுகள் அதாவது 30 ஆண்டுக்குக்குறையாமல் ஒருவர் ஓரிடத்தில் குடியிருந்தால் அந்த இடம் அவருக்கே உரியதாகும். இதனை அனுபவ பாத்தியம் என்பர். இந்த உரிமை பரவலாக இந்நாளில் காணப்பெறுகிறது. அந்நாட்களில் அஃது இல்லை என்றே சொல்லலாம். எனினும் அவ்வுரிமையைக் கொண்டாடுபவருக்கு ஓரளவு பொருள் (compensation — ஆகக்) கொடுத்து விடுதலை பெற்றுக்கொள்வதுண்டு. இப்படி ஒரு தீர்ப்பு 1801ல் வழங்கப்பட்டுள்ளது:

" ஜீபு பாயி தகப்பனாருக்கு 30 வருஷம் குடியிருக்க இடம் கொடுத்ததும் அவர் இறந்த பிறகு ஜீபுபாயிக்கு மத்யஸ்தர்கள் மூலம் 20 சக்கரம் கொடுத்து வீடு ஒப்புவிக்கிறது என்று முத்திரித சபை தீர்ப்பு" என்பது அது.[67]

சில வழக்குகள் சில காரணங்களால் தள்ளுபடி செய்யப் பெறுவதுண்டு.

" பிராது விசாரிப்பதற்கு யோக்யமில்லை என்று தள்ளுபடி செய்தல் "[68]

" சபாமஜ்கூரில் நடந்த தீர்ப்பின் நகல் கேட்டவன் சபைக்கு வரவில்லை; அன்றியும் வழக்கினுடைய ஆதாரம் நியாயாதீச சபைக்குப் புனர் நியாயத்துக்குச் சென்றிருக்கிறது; ஆகவே அனாதயம் "[69]

---

65. 7-767
66. ச. ம. மோ, த. 6-10
67. ச, ம. மோ. த. 2-19
68. 9-18
69. 9-18

" பிராதுக்காரன் வெகுநாட்களாகச் சபைக்கு வருவதில்லை "[70]

" சபாமஜ்கூர் தீர்ப்பினுடைய நகல் வேண்டும் என்று எழுதியதற்கு நகல் தர முத்திரையுடைய காகிதம் கொடுத்தால் எழுதித்தரமுடியும் என்று அனாதயம் "[71]

" புனர் நியாயத்துக்குரிய (appeal) கெடு தவறிவிட்டபடியால் வழக்கு விசாரணை இல்லை என்று அனாதயம் "[72]

– என்றவற்றான் பல காரணங்கள் காட்டி வழக்குகள் அல்லது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுவந்தன என்று தெரியவரும். இந்த வழக்குமன்றங்களின் சட்டஆட்சி எல்லை தஞ்சாவூர் மட்டும் தான் எனினும் மேற்கண்ட வண்ணம் பல காரணங்களால்[73] வழக்குகள் அனாதயம் (disposal) செய்யப் பெற்றன.

இங்ஙனம் பலகாரணங்களால் தள்ளுபடி செய்தும், இந்த வழக்கு மன்றங்களின் சட்ட ஆட்சியெல்லை தஞ்சை மட்டிலும் ஆக இருந்தபோதிலும், " வந்த மனுக்கள் எத்தனை முதலியன குறித்து ஒவ்வொரு மாதமும் கடிதம் எழுதவேண்டும் என்று சர்கேல் பாபாஜி ராமாஜி பண்டிட் " ஆணை பிறப்பித்த போதிலும்,[74] நாடோறும் வந்த வழக்குகள் பற்றிய குறிப்பு எழுதப்பெற்[75] றிருந்தபோதிலும், பொதுவாக நாடோறும் ஒரு வழக்கையே விசாரித்துத் தீர்ப்புக் கூறினர்[76] என்று தெரிகிறது. முத்திரித சபையில்தான் பெரும்பாலான வழக்குகள் தீர்க்கப்படாமல் தேங்கியிருந்தன.[77]

பிற்காலத்தில் குறைபாடுகள் பெருகியகாலத்து ரெஸிடெண்டின் தலையீடு இருந்ததாகவும் தெரிகிறது.[78] " ஸர்கார் நியாயஸ்தலத்திற்கு ஒரு அப்ரதிஷ்டை உண்டாகிறது ; மேற்படி நியாயஸ்தலம் ஜனங்களுக்கு நியாயம் கிடைக்கவேணும் ; அது இல்லாமல் அந்நியாயஸ்தலமாகிறது " என்று ரெஸிடெண்டு தன் தலையீட்டுக்குக் காரணம் கூறியுள்ளார்.[79]

சில சமயங்களில் ஒரு வழக்கு ஒரு சபைக்கு வரின் அச்சபையார் தமது சட்ட வரம்புக்கு அது உரியதல்லதாயின் வேறு உரிய இடத்தில் பிராது செய்து கொள்க எனக் கூறுவதும் உண்டு.

" பாதிச் சம்பளம் கொடுக்க என நியாய சபையில் தீர்ப்பு — பதில் ஒருவனை நியமித்து அவனுக்குப் பாதிச் சம்பளம் — பெண்சாதியின் பெண் இறந்தது. ஆகையால் மீதியில் தனக்குப் பாதி $7\frac{1}{2}$ பணம் தரவேண்டும் என்று கேட்க, நியாய சபை மத்யஸ்தர், " நீ காயிதாவில் சேவகம் ஆகையால் காயிதா சபையில் பிராது செய்து கொள்க " என உத்தரவு.[80] "

---

70. 9–14 71. 9–45 72. 9–128 73. 9–13, 14, 20, 21, 27, 28, 32, 39, 40, 45, 73, 74, 75, 90, 128 74. 12–114
75. 9–10 முதலியன 76. 9–11, 23, 25, 26, 30 77. 9–88, 92, 94
78. 4–277 முதல் 282 முடிய 79. 4–279 80. 8–63, 64

" செங்கமலம்மாள் – கோயில் ஸ்தானிகம் – இவள் மாமியார் – தாயம்மாள் – இவளுடைய தங்கை மகன் முத்துசாமி அய்யங்கார் — செங்கமலம்மாளுடைய புருஷன் தன் ஸ்தானீகத்தை முத்துசாமிக்குக் கொடுத்துவிட்டதாக ஒரு சாசனம் செய்து கொண்டான்; செங்கமலம்மாள் பேரில் முத்திரித சபையில் பிராது கொடுத்தான். இது தேவஸ்தானத்தைச் சேர்ந்த விஷயமாகையால் தேவஸ்தானக் கச்சேரிக்கு மாற்றவேண்டும் அல்லது தேவஸ்தானக் கச்சேரியில் பிராது கொடுக்குமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள் பிரதிவாதியான செங்கமலம்மாள்.[81]"

மேற்கண்ட இரண்டு செய்திகளால் மேலே கூறிய நான்கு சபைகள் மட்டுமன்றிப் பிற துறையிலுள்ளவர்களும் வழக்குவிசாரணை செய்யும் உரிமையுடையராய் இருந்தனர் என்பது புலம்படும்.

மேலும் தோட்டம், ஊர் இவற்றுக்குரிய மத்யஸ்தர்கள் முன்னிலையில் ஊர் மிராசுதார்களும் விசாரிப்பதுண்டு. இதற்காதரவாகச் சுங்கந்தவிழ்த்தான்[82] மிராசுதார்கள் நால்வர் ஆவு சாயேப் தோட்டம் வகையறா மத்யஸ்தம் அண்ணாஜி பண்டிதர் முன்பாகச் சுங்கம்தவிழ்த்தான் கிராமத்துக் குடிமக்கள் சிலரை விசாரித்ததாக ஓராவணம் உள்ளது.[83]

தஞ்சாவூரும் சில ஊர்களும் தவிர்த்து மற்றெல்லா ஊர்களின் நிலவரி வசூல் கும்பினியாருக்கே உரியதாயினமையின் மற்றப் பகுதிகளின் வழக்குகளை விசாரித்தல் மராட்டிய அரசர்தம் நான்கு சபைகளுக்குரியதன்றாயிற்று. குற்றவியல் அல்லாதன ஊர்த்தலைவர்களாலே விசாரிக்கப்பெறலாயின. குற்றவியல் வழக்குகள் விசாரணை செய்யும் அதிகாரம் கும்பினி அலுவலர்களுக்கே உரியதாயிற்று. இது,

" ரிசிடெண்டு சர்கீலுக்கு எழுதியது: 1845 டிசம்பர் 8 மெமொராண்டம் கிடைத்தது. சாளுவநாயக்கன்பட்டணம் அல்லது எந்த இலாகாவிலும் கிரிமினல் விஷயம் விசாரணை செய்யும் அதிகாரம் கம்பெனி உத்தியோகஸ்தர்களுக்குத்தான் என்று தெரிவிக்கப்பட்டது "

என்ற மோடி தமிழாக்கக் குறிப்பால்[84] உறுதிபெறும்.

கும்பகோணம் போன்ற நகரங்களில் மாவட்ட நீதி மன்றங்கள் (ஜில்லா கோர்ட்டுகள்) ஏற்படுத்தப் பெற்றன; அவற்றுக்கு நீதிபதிகள் (ஜட்ஜ்கள்) ஆக வெள்ளையரே நியமிக்கப் பெற்றிருந்தனர்.

---

81. 6–106 முதல் 109 முடிய

82. சுங்கந்தவிழ்த்தான் — சுங்கந்தவிர்த்தான் — இது முதற் குலோத்துங்கனுக்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று; இப்பெயர் கருந்தட்டாங்குடிக்கு உரியதாயிருந்தது என்று 1916க்குரிய கல்வெட்டெண்கள் 281, 288 ஆல் அறியலாம்; இந்நாளில் அங்கு ஒரு பகுதிக்குச் சுங்கந்தவிர்த்தான் திடல் என்ற பெயர் வழங்கி வருகிறது.

83. 7–842 முதல் 846 வரை

84. ச. ம. மோ. த. 5–6

" கும்பகோணம் ஜில்லா கோர்ட் ஜட்ஜ் மேஸ்தர் மேண்டாஸ் பாண்டு, மேஸ்தர் ரிசிடெண்ட் கிஸ்டர்சிலி ஹுஜுருக்குப் பேட்டிக்கு வந்ததற்கு அவர்களுடைய தலாயத்து சேவகர்களுக்கு இனாம் 23¼ ரூ." [86]

என்ற குறிப்பால் கும்பகோணம் போன்ற ஊர்களில் கும்பினியார் நீதிமன்றங்கள் அமைத்தனர் என்பது தெரியவரும்.

சென்னைப் பட்டணத்தில் அந்நாளில் ஒரு உச்ச நீதி மன்றம் இருந்தது. அதை Supreme Court என்றனர். இந்த உச்ச நீதி மன்றத்துக்கு மேல் முறையீட்டுக்காக அடிக்கடி மராத்திய அரசு அலுவலர் சென்றுவந்தனர் என்றும், சரபோஜி II காலத்தில் அன்னோர் மிக மரியாதையாக நடத்தப் பெற்று விரைவில் விசாரணை செய்யப்பெற்றனர் என்றும், சிவாஜி II காலத்தில் அங்ஙனம் நடைபெறவில்லை என்றும் இரண்டு ஆவணங்கள்[87] பகர்கின்றன.

1801இல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சட்டம் ஒன்றினால் சென்னையில் ஒரு சுப்ரீம் கோர்ட்டு (உச்சநீதி மன்றம்) ஏற்படுத்தப்பெற்றது. இது சென்னை மாகாணத்தில் வெள்ளையருக்கு அடங்கிய பகுதிகளிலும் சார்புடைய பகுதிகளிலும் உள்ள மக்களின்மேல் சட்ட ஆட்சிமுறையை உண்டாக்கியது. இது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நீதி மன்றமாக இயங்கியது; கவர்னர் சபைக்குப் புறம்பாகச் சுயேச்சையாக இயங்கியது.[88] மாவட்ட நீதிமன்றங்களும் நிறுவப்பெற்றன என்று முன்னரே கூறப்பட்டது. ஆகவே இரண்டு வகையான நீதிமன்றங்கள் தோன்றலாயின என்னலாம். ஒன்று பிரிட்டிஷ் அரசு நிறுவிய உச்ச நீதி மன்றம் ( Supreme Court ); பிறிதொன்று கும்பினியார் நிரலே நிறுவிய நீதிமன்றத் தொடர். சதர் அதலட் என்ற நீதிமன்றமும், பௌஜ்தரி அதலட் என்ற நீதி மன்றமும் தோன்றின. மாகாண நீதி மன்றங்களினின்று மேல் முறையீட்டுக்குச் சதர்அதலட் மன்றத்துக்குப் பொது வழக்குகள் (சிவில்) செல்லும்; பௌஜ்தரி அதலட்டுக்குக் குற்றவியல் மேல்முறையீட்டு வழக்குகள் செல்லும். இவ்விரு மன்றங்களுக்கும் கவர்னரும் அவருடைய சபையினரும் நீதிபதிகள் ஆக அமர்ந்து வழக்கு. விசாரணை செய்வர்.[89]

---

86. ச. ம. மோ. த. 2-48 87. 1-216, 217

88. An act of Parliament constituted the Supreme Court of Judicature at Madras (P.200) ……… For the first time in the history of the Presidency a central Court, bestowed with jurisdiction over all the inhabitants in territories, subject to or dependent upon it, was created. It functioned as a Court of the Crown and it exercised its powers independent of the Governor in Council (p 261) - History of Tamil Nadu ( 1565—1965 ) by K. Rajayyan

89. The Governor and members of his Council constituted themselves into Sadar Adalat or Chief Court of Civil Judicature for hearing appeals from provincial courts of appeal and Foujdary Adalat or Chief Criminal Court for hearing appeals from the circuit Courts - P. 267, History of Tamil Nadu by K. Rajayyan

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்கும் ஸ்ரீ சிருங்கேரி மடத்து அதிபர்களுக்கும் திருஆனைக்கா அகிலேண்டேசுவரி அம்மனுடைய தாடங்கம் (காதணி) புதுப்பித்தணிவித்தல்பற்றி 7 ஆண்டுகள் வழக்கு நடந்தது[90]. அது திருச்சி சதர் அமீன் கோர்ட்டில் நடந்தது[91]. சதர் அமீன் கோர்ட்டில் தோற்றதும் திருச்சி சிவில் கோர்ட்டில் அப்பீல் வழக்கு; அதிலும் தோற்றபிறகு சிருங்கேரி மடத்தினர் சதர் அதலட் என்ற உயர்மன்றத்தில் முறையீடு செய்தனர். இதனான் மாகாண வழக்கு மன்றங்களினின்று மேல் முறையீட்டுக்கு வருபவை சதர் அதலட் என்ற மன்றத்துக்கு வரும் எனத் தெரிகிறது.[92]

நீதி மன்றங்களைப் பற்றிய ஆவணங்கள் 1801 இலிருந்துதான் காணப்படுகின்றன. ஆனால் குற்றவாளிகட்குத் தண்டனை வழங்குவது பற்றி 1768 முதல் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தண்டனைகளில் பல வகைகள் காணப்படுகின்றன: பணத் தண்டனை (அபராதம்) விதித்தல்[93], தேங்காய் இத்தனை என்று வசூலித்தல்,[94] விலங்கிட்டு வேலை வாங்கிக் கொண்டு அடித்து விட்டுவிடுதல்[95], ஊர் சுற்றச்செய்து பின் அடி அடித்து விட்டுவிடுதல்,[96] சிறையிலடைத்தல் முதலியனவாம்.

திருட்டுப் பொருளை வாங்குதல் குற்றம். சில பெண்கள் கொத்தங்குடியில் குறத்தியிடமிருந்து திருட்டு நகைகளை வாங்கியதால் 1 சக்கரம், 2 பணம் அப்ராதம் விதிக்கப்பட்டது (கி. பி. 1777)[97] என்றதினின்று தண்டனை எத்தகையது என்றறியலாம்.

கி. பி. 1777; ஒருவன் வரிப்பணத்தைச் செலுத்தவில்லை; அதனால் அதிகாரி அவனை அடித்தார். அதனால் அவன் பிராமணனுக்குள்ள மரியாதை நீங்கியதாகக் கருதினான்; ஊரார் யாரையும் ஒருங்கு சேர்த்தான்; "ஊரைவிட்டுப் போகிறோம்; வரித் தொகையைச் செலுத்த மாட்டோம்" என்று கட்டுப்

90. 4-265, 266

91. "In the year 1844 the authorities of Sri Sringeri Matha filed a Civil Suit in the Trichi Dt. Sadar Amin Court that the right for the Tatanka Pratishta of Goddess Akhilandeswari belonged only to that Matha-P.405, Preceptors of Advaita (59) Sri Kama Koti Pitha.

92. "The Principal Suder Ameen rejected the plaintiff's claim, and decree of this officer was confirmed by the Acting Civil Judge in appeal ............ "The special appellant now impugns the justness of these decrees, but the court of Sudr Adlat having carefully considered his objections urged against them are of opinion that no good or legal grounds exist which would justify the admission of special appeal in the case" - Extract from the pro. of Sadar Adalat dated 11—8—1848, பக்கம் 20-21, காஞ்சி ஸ்ரீ பெரியவர்களின் ஸ்ரீபராபரகுரு ஸ்வாமிகளின் விருத்தாந்தம், பிருந்தாவனம் டிரஸ்டு வெளியீடு, கும்பகோணம் (1981)

93. 1-59 94. 1-175 95. 1-317 96. 4-388 97. 1-59

படுத்தினான் ; இவனுக்கு உதவியாக இன்னொருவனும் சேர்ந்துகொண்டான் ; இங்ஙனம் கட்டுப்பாடு உண்டாக்கி அரசை எதிர்த்ததால் ஒவ்வொருவருக்கும் 3 பணம் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இங்ஙனம் அரசை எதிர்ப்பது பெருங் குற்றமாகக் கருதப்பட்டது[98].

அரிசிக்காரி நனைந்துபோன அரிசியை விற்றாள்[99] ; தட்டான் ஒருவன் நகை செய்வதற்காகப் பெற்ற தங்கத்தில் சிறிது திருடினான் ;[100] கோயிலில் சுவாமிக்கு அழுக்குத் துண்டு கட்டப்பட்டிருந்தது[101]; ஒருவன் யானைக்குப் பழைய வெல்லம் கொடுத்தான்[102] ; ஒருவன் மாடுகளைத் தென் அகழியில் மேய்த்தான்[103] ; ஒருத்தி பசுவை அரணின் சுவரில் மேய்த்தாள்[104] ; ஒருவன் குத்தகைச் சீட்டைப் பிடுங்கிக் கொண்டான்[105] ; பாராக்காரன் வரவில்லை, கேட்டதற்கு எதிர்த்தான்[106] ; பாராக்காரன் தூங்கிவிட்டான்[107] ; மணியைச் சரியாக அடிக்கவில்லை[108] ; - இத்தகைய குற்றங்கள் செய்தவர்கட்குச் சிறு தொகையே ஒரு சக்கரத்துக்குக் குறைவான தொகையே அபராதம் ஆக விதிக்கப்பட்டது.

கலப்படம் செய்வது என்றும் குற்றமாகவே கருதப்பெற்றது. நெய் விளக்கு எரிக்கையில் கலப்படம் செய்தமையால் ஒருவருக்கு அபராதம் ரூ. 5 விதிக்கப்பட்டது[109].

ஏமாற்றுதலும் குற்றமே. சம்பளம் வாங்கி ஒரு நாணயத்தை வாயில் போட்டுக்கொண்டு பதிலுக்கு ஈயரூபாய் கொடுத்தவன் ரூ. 7 அபராதம் விதிக்கப் பட்டான்.[110]

அரசாங்க உத்தரவில்லாமல் ஒரு மரக்காயருடைய கப்பலிலிருந்த 50 முத்திரைகளையும் ஒருவன் உடைத்தான். இதற்குக் கடுமையான தண்டனை விதிக்க எண்ணி 25 சக்கரம் 2 பணம் அபராதம் விதித்தனர்.[111]

சுகாதாரத்தைப் பேணுவதும் நன்கு கருதப்பட்டது. சிவகங்கைக் குளத்தில் குடங்களை அலம்பினதால் குடிதண்ணீரின் தூய்மை கெடுத்தனர் என்று கருதிப்போலும் இரண்டு பெண்கள் 4½ சக்கரம் அபராதம் விதிக்கப் பெற்றனர்.[112]

பொய்ச்சீட்டுகள் தயாரித்தவனுக்கு 24 சக்கரம் அபராதம்[113] விதிக்கப் பட்டது. பொய் சாட்சி சொன்னவன் விலங்கிடப்பட்டான் ; ஓராண்டுக்காலம் மராமத்தில் வேலை செய்தான் ; இறுதியிலே பிரம்படி 6 கொடுக்கப்பட்டான்.[114] பொய்யான முத்திரை தயாரித்தவன் கடுமையாகத் தண்டிக்கப்பட்டான்.[115] அவன் நெற்றியிலும் கன்னத்திலும் 35 எழுத்துக்கள் குத்தப்பெற்றான்.[116]

---

98. 1–158 99. 1–128 100. 1–181 101. 1–182 102. 2–23
103. 4–222 104. 4–6 105. 9–80 106. ச, ம. மோ. த. 2–25
107. ச. ம. மோ. த. 8–20அ 108. 12–165 109. ச. ம. மோ. த. 5–22
110. ச. ம. மோ. த. 8–15 111. 2–112 112. 4–426
113. 9–87 114. 1–169 ; ச. ம. மோ. த. 81–84
115. 4–216 ; 9–9 116. உயிர் 12 ; மெய் 18 ; ஜஷஸஹக்ஷ ; ஆக 35

தனக்குரிய தல்லாத நகையை அடகு வைத்தல் பெரிய ஏமாற்றுவித்தை யாகும்; இங்ஙனம் செய்த ஒருவன் 6 ஆண்டு சிறையிலடைக்கப்பட்டான்; தீர்ப்பைத் தம்பட்டம் அடித்துத் தெரிவித்தலும் ஒரு அங்கமாயிற்று.[117]

**கன்றுக்குட்டி இறத்தல்**: மனுவின் மகன் ஊர்ந்த தேரில் அகப் பட்டுக் கன்றுக்குட்டி இறந்தது; மனுவோ அந்தக் குற்றத்துக்குத் தன் மகனையே தேர்க்காலிடைக் கிடத்திக் கொன்றான் – இது பெரிய புராணத்தா லறிவது. இதுபோன்று இரண்டு நிகழ்ச்சிகள் மோடி ஆவணத்தமிழாக் கத்துள் காணப்பெறுகின்றன.

ஒரு பிராமணனுடைய கன்றுக்குட்டியை ஒருவன் அடித்துக்கொன்றான். சரஸ்வதி மகால் தரும சாஸ்திரிகள் விஞ்ஞானேசுவரீயம் முதலிய நீதி நூல் களைப் பார்த்துத் தீர்ப்புக் கூறினர். "கன்றைக் கொன்றவனிடம் இருந்து ஒரு கன்றுக்குட்டி வாங்கிக் கொடுக்கலாம் அல்லது அதன் விலை கொடுக்கலாம்; கொடுக்காவிடில் அவன் சொத்தைப் பறிமுதல் செய்வது; நெற்றியில் முத்திரை யிட்டுத் தமுக்கு அடித்துக் கோட்டை வெளிக்கு அப்பால் கொண்டுபோய் விட்டுவிடுதல்" என்பது அன்னோர் தீர்ப்பு.[118]

மேலும் ஒரு வழக்கு: ஒருநாள் இரவு 8மணி; வீரவாகு என்ற வண்டிக் காரனுடைய தம்பியின் மகன் வண்டி ஓட்டிச் சென்றான்; அவனுக்கு வயது 18. வண்டியோடு வீரவாகு வந்துகொண்டிருந்தான். வண்டி 4 மாதக் காளைக் கன்றின் மேலே ஏறக் கன்று இறந்தது. இந்தக் குற்றத்திற்காக வீரவாகு 1 சக்கரம் 2 பணம் அபராதம் விதிக்கப்பெற்றான். மேலும் கன்றுக்குட்டியின் விலையைக் கன்றுக்குட்டியின் சொந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்புக் கொடுக்கப் பெற்றது[119]. முதலதில் கன்றை அடித்துக் கொன்றமையால் தண்டனை கடுமையாக இருந்தது!

திருட்டுக் குற்றத்திற்குக் கடுமையான முறையில் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. ஒருவன் அதிராம்பட்டணம் முத்து வியாபாரியின் முத்துக்களைத் திருடினான்; அவன் சிவப்புக்கம்பத்தில் கட்டி 6 அடி அடிக்கப்பட்டான்[120]. ஒரு பெண்ணின் கழுத்திலுள்ள தங்க மணியை ஒருவன் திருடினான்; அவனுக்கு 2 மாதம் சிறை; காலில் விலங்கு; மராமத்து வேலை செய்தல்; பின்னர் 12 அடி அடித்து விடுவிக்கப்பெறல்; இங்ஙனம் ஒரு ஆவணம் கூறுகிறது[121]. இன்னொரு வன் ரோந்து போகையில் ஒரு வீட்டில் திருடினான்; அவனுக்கும் பிரம்படி 12 கொடுக்கப்பட்டது[122]. ஒருவன் செம்பு திருடினான்; அவன் கழுத்தில் செம்பைக் கட்டி, நான்கு வீதிகளிலும் சுற்றச்செய்து, ஒவ்வொரு வீதியிலும் 3 அடி கொடுக் கப்பட்டது[123]; செம்புக் காரனுக்குச் செம்பு கொடுக்கப்பட்டது[124]; இங்ஙனம்

117. 5-288 118. ச. ம. மோ. த. 8-16. 119. 1-288
120. 2-256 121. 1-817 122. 1-189
123. ச. ம. மோ. த. 9-19 124. 4-888

திருட்டுக் குற்றத்துக்குப் பெண்களுக்கும் பிரம்படி தண்டனை விதிக்கப்பட்டமை புலனாகும். ஒருத்தி சாதம் திருடினாள்; அவளோ 3 தேங்காய் கொடுக்க வேண்டும் என்று தண்டனை விதிக்கப் பட்டது[125].

அபராதம் வாங்குதல், அடிகள் அடித்தல், சிறை செய்தல், மராமத்து வேலை வாங்குதல் ஆகிய தண்டனைகளோடு, மேலே கண்டவண்ணம் தேங்காய்கள் அபராதமாக விதிக்கப்படுதலும் பரவலாகத் தெரியவருகிறது.

யுத்தசாலையினின்று தச்சன் வேலை முடித்துத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அவன் தன் ஆடையை உதறியபொழுது $2\frac{1}{4}$ டாங்க்[126] நிறையுள்ள பித்தளைத் தகடு கீழே விழுந்தது. வேலை செய்யும் இடத்தில் ஆடையை உதறாமல் அஜாக்கிரதையாய் வந்தமையால் அபராதம் ஆறு தேங்காய் விதிக்கப்பட்டது[127]. வண்ணான் வெளுத்த துணியில் முள் இருந்தமையால் அவனுக்கு அபராதம் 6 தேங்காய்[128]. காவலுக்குப் பகலில் மட்டும் அரிசி சாமான்கள் கொடுக்க உத்தரவாகி இருந்தது; இரவிலும் சாமான்களைக் கொடுத்தமையால் தண்டனை 12 தேங்காய்[129].

சமையல் செய்ய 11 நாழிகைக்கு அரிசி தருக என்ற உத்தரவுக்கு ஏற்பக் கொடுக்காமல் காலம் கழித்துக் கொடுத்தமை தெரிவிக்காமல் இருந்தமையால் அவனுக்குத் தண்டனை 12 தேங்காய்கள்.[130]

பெண்களுக்கும் கடுமையான தண்டனை விதிக்கப்பெற்றது. ஒரு ஆசிரியரின் மனைவி இன்னொரு ஆசிரியரின் குழந்தையை அடித்தாள். அவள் பார்ப்பனி; சுமங்கலி; ஆகையால் அவள் பின்னல் 4 விரற்கிடை அறுத்து, நெற்றியில் அடையாளம் செய்து, சிவப்புப்பூமாலை போட்டுக் கழுதையின் மேல் ஊர்வலம் வரச்செய்து விட்டுவிடுவது என்பது அவள் பெற்ற தண்டனையாகும்.[131]

கோயிலில் விக்கிரகங்கள் களவுபோனால் அவற்றுக்குப்பூசைசெய்பவரும் பரிசாரகரும் பொறுப்புடையவராயினர்.[132]

ஓராசிரியர் மராட்டிய எழுத்துக்களைக் கற்பிப்பவர்; அவர் தம் வீட்டுக்குச் சென்றார்; விரைவில் திரும்பிவரவில்லை; பள்ளி மாணவர்கள் வெளியே வந்து சாக்கடையில் விழுந்து காயம் பட்டனர்; இதனால் அவ்வாசிரியர்க்கு அபராதம் 6 பணம் விதிக்கப்பட்டது.[133]

சுகாதாரக் கேடு விளைவிப்பவனுக்குக் கடுமையாகத் தண்டனை விதிக்கப்பட்டது. நாலு வீதிகளிலும் சாக்கடையில் மண்ணை உடனுக்குடன் எடுத்துச் சுத்தம் செய்யாமலிருந்தவனுக்கு ரூபா 6 அபராதம் விதிக்கப்பட்டது.[134]

---

125. 1-178 126. 1 டாங்க் = 1 தோலா; 2-126 127. 2-270 128. 1-282
129. ச. ம. மோ. த. 2-11 130. ச. ம. மோ. த. 2-11 131. ச. ம. மோ. த. 8-16
132. 12-152, 154 133. 1-256 134. 2-181

தண்டனை விதித்ததை மன்னித்து அவன் கொடுத்த அபராதத்தைத் திருப்பிக் கொடுப்பதும் உண்டு என்பதற்கு ஒரு சான்று கிடைத்திருக்கிறது.[135] ஒரு இந்துஸ்தானி பாடகன், தஞ்சாவூரில் அபராதம் விதிக்கப் பெற்றான்; அவனை மன்னித்து அவன் கொடுத்த அபராதம் சக்கரம் 6½ திருப்பிக் கொடுக்கலாம் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரமாணம் செய்யும்பொழுது அல்லது உறுதிமொழி கூறும்பொழுது சில முறைகளை அந்நாளில் கையாண்டுள்ளனர். அவற்றுள் ஒன்று, பிரமாணம் செய்கிறவர்களை நெருப்புச் சட்டியை வெறுங்கையில் தூக்கச் செய்வது. இது ஓராவண்த்தில் கூறப்பட்டுள்ளது. அது சரியன்று என்று கலெக்டர் கூறிய தாகவும் அவ்வாவணத்தில் காணப்பெறுகிறது.[136] தெய்வ சன்னிதானத்தில் சத்தியம் செய்து தருகிறேன் என்று கூறுவதும் உண்டு[136அ]

தாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறினாலும் அபராதம் விதிக்கப்பெறுவதுண்டு. ஒருவன் முக்தாம்பாள் சத்திரத்துக்கு வேலைக்குப் போவதாகக் கூறிவிட்டுப் போகாமல் ஊரில் தங்கியமையால் தண்டனை ஆறு தேங்காய்கள் என்று ஓராவணக் குறிப்பினின்று அறியவருகிறது[137].

சாதிக்கொடுமை அந்நாளில் தலைவிரித்து ஆடிக்கொண்டிருந்தமையால் ஒரு சாதியினர் வேறொரு சாதியினர் கைச்சோறு உண்பது தவறாகக் கருதப் பட்டது. ஒருவன் கீழ்ப்பால் ஒருத்தியின் கைச்சோறு உண்டனன். அவன் பிராமணன்; ஆகையால் மீண்டும் உபநயனச்சடங்கு – முந்நூல் அணியும்சடங் குக்கு உட்படுத்தப்பட்டான்; பிராயச்சித்தம் (வழுவாய் மருங்கின் கழுவாய்) செய்து கொண்டான்; அரச தண்டனையும் அளிக்கப்பெற்றது[138].

சாதியின் பேரால் சிலரைத் துன்புறுத்தியதும் உண்டு. அத்தகைய முறைகேடுகள் செய்தார் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

ஒரு கன்னடியன் - பஞ்சு வஸ்தாது என்று பெயர்; அவன் "ஜாதிப்பிரஷ் டன்" என்று அவனை வரிசையில் உட்காரவைத்துக்கொள்ளவில்லை. இது ஸர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஸர்க்கார் கடுமையாகத் தண்டனை விதித்தது[138அ].

அந்நாளில் தீர்ப்புக்கூறியவர்கள் சரஸ்வதி பாண்டாரத்திலிருந்த சாத்தி ரம் வல்லாரைக் கேட்டு அறிந்து தீர்ப்பு வழங்கினர்; விஞ்ஞானேசுவரீயம் முதலான கிரந்தங்களைப் பார்த்துத் தீர்ப்பு வழங்கினர் என்று தெரிகிறது.[139]

சபாமஜ்கூர் என்ற தொடர் பல இடங்களில் வந்துள்ளது.[140]

---

135. 1-841 136. 2-60 136அ. 9-140 137. ச. ம. மோ. த. 14-80
138. ச. ம. மோ. த. 7-80 138அ. 4-258, 259
139. ச. ம. மோ. த. 7-80; 8-820: 1-288 140. 9-18, 45

"வீட்டின் முன் உள்ள இடத்தில் பிரதிவாதியினால் போடப்பட்டுள்ள சுவர் சதுரக்கதவு மட்டும் எடுத்துக் கிழக்கு மேற்கு 10 காலடிகள் அகலமான சந்து சுத்தம்செய்து தரவேண்டும் என்று **சபாமஜ்கூரி** தீர்மானிக்கப்பட்டது[141]

"என்னுடைய சகோதரி லக்ஷ்மிக்கு கங்காதர் பாபுராவ் தரவேண்டும் என்று **சபாமஜ்கூரி** தீர்ப்பு ஆன ஐவேஜ் வந்தது போக.........[142]

"முதல் பிரதிவாதிக்கு அபராதம் ரூபாய் ஒன்று போட்டு மோற்சொன்ன பிரதிவாதியிடமிருந்து ஆஜரான மேற்படி சீட்டு வாதிக்குக் கொடுத்து நிபந்தனைப்படி பீஸ் வாங்குவது என்று முடிவெடுத்தது சரியானதுதான் என்று **சபாமஜ்கூரி** தீர்மானிக்கப்பட்டது[143].

"மேற்சொன்ன வழக்கில் சம்பந்தம் இல்லையென்று மேற்படி சபையில் உள்ளவர்கள் தீர்ப்புச் செய்த விஷயத்தில் மேற்சொன்ன பிரதிவாதி **சபாமஜ்கூரி** புனர் நியாயம் செய்த பிறகு ஆதாரம் பார்க்கும்பொழுது "[144]

"நியாய சபையில்-.................. தீர்ப்புச் செய்தது சரிதான் என்று தர்ம சபையிலுள்ளவர்கள் பிரதிவாதிக்கு இரண்டு பங்கு தண்டனை வீதம் செய்த பிறகு, பிரதிவாதி **சபாமஜ்கூரி** புனர் நியாயத்திற்கு வந்தபொழுது"[145]

– என்ற இவற்றால் நான்கு சபைகளின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டுக்குரிய மன்றமாகத் திகழ்ந்தது " சபாமஜ்கூர் " என்று ஊகித்தறியலாம்.

பல வழக்குகள் தீர்க்கப்படாமல் பல காலம் இருந்தமையின் 1845இல் பின்வருமாறு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது[146] :—

" நியாய சபையின் நீதிபதி சங்கராஜி சப்பராஜி அவர்களுக்கு ராஜஸ்ரீ சர்கேல் அவர்கள் : இனி அந்த அந்த மாதங்களில் வரும் வியாஜ்யங்களை அந்த அந்த மாதத்தில் தீர்த்துவைக்கப்படாவிடில் வியாஜ்யம் பாக்கி இருக்குமானால் அஃது குற்றமாக மட்டுமல்லாமல் சர்க்காரின் ஆயாசத்துக்கும் தாங்கள் பாத்தியதை ஆகாமல் இருக்க மாட்டீர்கள்."

இதனால் வழக்குகளை விரைவில் தீர்க்கவேண்டும் என்ற அரசின் கொள்கை தெற்றெனப் புலப்படும்.

வாதி பிரதிவாதிகள் தனியார்களாக இருப்பின் நியாயமன்றங்களுக்குச் செல்வர். அரசு தன் கீழ் அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் தவறு செய்யின் அரசாங்கம் அல்லது அரசர் நியமிக்கும் பெரிய அலுவலர்கள் விசாரணை செய்து தீர்ப்பு அளிப்பர். அரசாங்கத்தின் மேல் அல்லது அரசு அலுவலர்கள் மேல் குறைகாணின் அரசனிடமோ அல்லது தமக்கு மேலாளர் ஆகிய அரசு அலுவலரிடமோ முறையிட்டுக் கொள்வது வழக்கமாயிருந்தது. அரசாங்க வழக்குகள் சில குறிப்பிடத் தக்கனவாயும் நன்கு விசாரித்துத் தீர்ப்பு வழங்கப் பெற்றனவாகவும் காணப்பெறுகின்றன. அவற்றுள் சில : புதுக்கோட்டை

141. 9–28 142. 9–25 143. 9–30
144. 9–188, 189 145. 9–140 146. ச. ம. மோ. த. 81–88

யினின்று தஞ்சைக்கு வந்து விசாரணை செய்யப்பெற்றுத் தீர்ப்புக்கூறப் பெற்ற வலங்கை இடங்கைப்பூசல்,[147] சதாசிவ சானங்கே என்பவன் வேலை செய்யும் இடத்தினின்று ஓடிப்போன செய்தி,[148] நாட்டியக்காரி வேஷத்துடன் வந்த இரு கோஷ்டிகளுக்கிடையில் பூசல்[149] என்பனவாம்.

அரசியலில் தலைமை வகித்தவர்கட்குச் சில மரியாதைகள் உண்டு; அன்னோர் வரும்பொழுது எதிரில் வண்டிகள் முதலியன வராமல் நிறுத்துதலும் உண்டு. ரெஸிடெண்டு பெருவழியே ஹௌதாவில் சென்று கொண்டிருந்தார்; தேவதாசி 'அங்கு' என்பவளின் மகள் 'நாகு' என்பவள் ஒரு வண்டியில் வந்து கொண்டிருந்தாள். அவள் ஏறி வந்த வண்டி ஓரமாகப் போகாமல் ரெஸிடெண்டுக்கு எதிரே வந்தது. ஆகவே அந்த "நாகுவு"க்கு 1 சக்கரம் 2 பணம் அபராதம் விதிக்கப்பெற்றது.[150]

குற்றம் செய்தவர்களுக்குக் கசையடி தண்டனை கொடுத்தல் பெரும்பான்மை; சிலர் அத்தண்டனையை விரும்பவில்லை. அதற்குப் பதிலாக அபராதம் கட்டுவதற்கு வேண்டுகோள் விடுத்து அங்ஙனமே தீர்ப்புப் பெற்றதுமுண்டு. இதனை, ஓராவணம் விவரிக்கிறது.[151]

நீதி மன்ற அழைப்பாணை (Summons) ஒன்று மோடி ஆவணங்களிடையே தமிழில் கிடைத்துளது.[152] அதன் திருத்தமான படிவம் பின்வருவது:—

ஸ்ரீமகாராசா சாயேபு அவர்கள் நியாயசபையார் இதன் மூலமாய்
ஜயவருஷத்திய 20௳ லக்கத்தில்

| வாதி | பிரதிவாதி |
|---|---|
| கோட்டைவெளி கருந்தட்டாங்குடி செல்லியம்மன் கோவில் தெருவில் இருக்கும் சொ நாயக்கன் பெண்சாதி சொயி | ஷெ தெருவிலிருக்கும் பரிமணம் |

பிரதிவாதிக்கு அனுப்பின அறிக்கைப் பத்திரம் என்னவென்றால், வாதியானவள் உன் பேரில் நகை சங்கதியைக் குறித்துப்பிராது செய்திருப்பதால் அதற்கு உத்தரவு எழுதிக் கொடுத்துச் சபையில் காத்திருந்து வியாச்சியம் தீர்த்துக் கொள்ள வேண்டியதற்காக நீ உடனே நியாயசபையில் வந்து ஆஜராகவும்.

1834 சூலை 2௳ ஹரிசக்கரபாணி ஜாக்கே

29—10—1855இல் சிவாஜி II இறந்ததும் மராட்டியர் ஆட்சி தஞ்சை நகரிலும் முடிவுற்றது; நீதி மன்றங்களின் செயற்பாடும் நீங்கியது; தஞ்சை வெள்ளையரின் சட்ட ஆட்சிக்கு உட்பட்டது.[153]

---

147. 2-1 முதல் 29 முடிய 148. 8-90 முதல் 106; 10-20, 21, 26, 27, 28, 45, 46
149. 10-47 முதல் 58 முடிய 150 1-268 151. 4-818, 819, 820 152. 8-71
153. Page XLIX of Appendix to Hicky's Tanjore Maratha Principality, Para 10, last sentence: "The jurisdiction of the British Courts should however extend over all the Fort" 22nd Nov. 1855.

# 15

# கோயில் பணிகளும் சமயப் பொறையும்

### அல்லது

# சமயப் பொது நோக்கும்

தஞ்சை மராட்டிய மன்னர்கள் தம் காலத்துக்கு முன்னிருந்த கோயில்களை நன்கு புரந்து வந்தனர்; சிலவற்றைத் தம் நேர்பார்வையில் வைத்துப் புரந்தனர்; சிலவற்றைப் புரந்து கொண்டிருந்தவரிடத்திலேயே விட்டுத் தாம் விரும்பியவண்ணம் உதவிகள் புரிந்தனர். பொதுவாக நோக்கின் அன்னோர் சிறந்த சிவ பக்தர்களாகத் திகழ்ந்தனர் என்னலாம்; எனினும் வைணவ சமயத்தையும் போற்றியேற்றுத் திருமால் வழிபாட்டிலும் ஈடுபாடுடையராய்ப் பல திருமால் கோயில்களைப் பாதுகாத்தனர்; பல புதிய கோயில்களையும் எடுப்பித்தனர்; சிலவற்றுக்குத் திருப்பணி புரிந்தனர். இவர்கள் காலத்தில் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடத்தப் பெற்ற திருக்கோயில்கள் பல. இவர்களின் உதவியும் ஆதரவும் பெற்ற திருக்கோயில்கள் இவர்கள் ஆட்சிக்குட்பட்ட தஞ்சை மாவட்டப் பகுதியிலேயே இருந்தன. இவ்வரசர்கள் தில்லைக்குச் செய்த திருப்பணியாக ஒரு ஆவணக்குறிப்பேடு உள்ளது.[அ] மதுரை மீனாட்சி சுந்தரேசர் கோயிலுக்குச் சில அறங்கள் செய்தது உண்டு. காசி யாத்திரைக்குப் பிறகு இரண்டாம் சரபோஜி வடநாட்டிலுள்ள பூரி ஜகன்னாதம் என்னும் திருத்தலத்துக்கு நாள் வழிபாட்டுக்கு ஆண்டுதோறும் தொகை அனுப்பிவந்தமை பல ஆவணங்களில் காணப்பெறுகிறது. இங்ஙனம் சைவசீலராய்ச் சிவபக்தராய்த் திகழ்ந்த மராட்டிய மன்னர்களின் நேர் பார்வையில் இருந்த திருக்கோயில்கள் 64 என்று சகம் 1771 (கி. பி. 1849) க்குரிய ஆவணம் பகர்கின்றது.[ஆ]

---

அ. ச. ம. மோ. த. 1-10 ஆ. 10-93, 94, 95

அத் திருக்கோயில்கள் வருமாறு :

1. பிரஹதீஸ்வரர்
2. அஷ்டோத்தர சிவாலயம்
3. சங்கர நாராயணா
4. காலிகாதேவி
5. விஜயமண்டப தியாகராசர்
6. செட்டிவீதி அனுமார்
7. கற்பகப் பிள்ளையார்
8. பீதாலிங்கசுவாமி
9. நடுவநாதகணேசர்
10. கொங்கணேசுவரர்
11. பஜார் ராமசுவாமி
12. காசி விசுவநாதர்
13. சுப்பிரமணியர்
14. பாகா அனுமார்
15. தெற்குவீதி விசுவநாதர்
16. மாஹாடி அனுமார்
17. குருகுல சஞ்சீவி
18. மணிகர்ணிகேசுவரர்
19. கலியுக வேங்கடேஷ்
20. கீழசிங்கப்பெருமாள்

---

1. தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள பெருமான்
2. தஞ்சைப் பெரிய கோயிலில் சரபோஜி II எழுந்தருளுவித்த 108 சிவலிங்கங்கள்
3. சிவகங்கைக்கோட்டை வடக்கு வாயிலுக்கு அணித்தாய் உள்ளது (த. தி. = தஞ்சைத் திருக்கோயில்கள் – ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை. (பக். 78.)
4. இது உக்கிர காளியம்மன் கோயிலாகலாம். இது தஞ்சைக் கீழவாசலுக்குக் கீழ்ப்புறம் கருவக்காடு என்னும் குயத்தெருவில் அமைந்துள்ளது (த. தி. பக். 68.)
5. இது தஞ்சை மகர்நோம்புச்சாவடியிலுள்ளது (த. தி. பக். 90)
8. சிவகங்கைக் கோட்டை சிவகங்கைத் திருக்குளத்துள் தென்புறத்தில் ஒரு மேடைமீது சிவலிங்கம் உள்ளது; பீடாலிங்க சுவாமி என்பது இதுவாகலாம்.
10. மேலராஜவீதியில் நடுவண் உள்ளது; கொங்கணசித்தர் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தது (த. தி. பக். 74)
11. இது பூக்கடை அல்லது பஜார் பட்டாபிராமசுவாமி கோயில் ஆகும்; அய்யங்கடை வீதியிலுள்ளது. (த. தி. பக். 79.)
12. விண்ணாற்றங்கரையில் திருவையாற்றுக்குச் செல்லும் பெருவழியில் திரும்பும் முனையில் உள்ளது (த. தி. பக் 45); மேலராஜவீதி மேற்குப் பகுதியிலும் ஒரு கோயில் உளது (த. தி. பக். 76)
13. மேலவாசல் சுப்பிரமணியர் ஆகலாம்; மேற்கு அலங்கத்தில் கோட்டைத் தெய்வமாக அமைந்துள்ளது. (த. தி. பக். 74)
17. இது ஒரு அநுமார் கோயில்; வடக்குவீதியில் கிழக்குக் கோடியில் உள்ளது. (த. தி. பக். 79)
18. சரபோஜி II காசியாத்திரை சென்று திரும்பியபின் கீழராஜவீதியில் கட்டிய கோயில். கங்கைக்கரையில் மணிகர்ணிகைப் படித்துறை இவரால் கட்டப்பெற்றது; அதன் நினைவாக நருமதையிலிருந்து கொணர்ந்த சிவலிங்கம் இதில் அமைக்கப் பெற்றுள்ளது (த. தி. பக். 65)
19. இது சுல்தான்ஜியப்பா கோயில் எனப்பெறும்; தெற்குராஜவீதியில் நடுவண் உள்ளது. (த. தி. பக். 66)
20. லக்ஷ்மிநரசிம்மப் பெருமாள் கோயில் என்பர். இதற்கு எதிர்ப்புறத்தில் கீழகோதண்ட ராமர் கோயிலுள்ளது; இவை தஞ்சைக் கீழவாயிலிலுள்ளன (த. தி. பக். 65)

21. பஜனசாலாவிலம்ப
22. எல்லம்மாதேவி
23. பிரதாபவீர அனுமார்
24. வெள்ளைப்பிள்ளையார்
25. அய்யங்குளம் விசுவநாதர்
26. ரத்னகிரீசுவரர்
27. பிரசன்ன வெங்கடேசர்
28. வரதராஜப் பெருமாள்
29. மதனகோபால சுவாமி
30. நவநீத கிருஷ்ணசுவாமி
31. கோவிந்தராஜ பெருமாள்
32. லக்ஷத்தோப்பு அநுமார்
33. விஜயராமசுவாமி
34. சன்னிதி கணேசர்
35. சித்தி விநாயகர்
36. வசிட்டேசுவரர்

---

21. பஜனசாலை விட்டோபா கோயில் கீழராஜவீதியில் அரண்மனைவாயிலுக்கு எதிரே உள்ளது. வீட்டோபா திருவுருவத்தைப் பண்டரிபுரத்தில் இருந்து சரபோஜி II அமைத்தார். (த. தி. பக்கம் 65)

22. தஞ்சையின் நடுவில் எல்லையம்மன்கோயில் வீதியில் அமைந்த பழமையான கிராம தேவதைக்கோயில்; தொடக்கத்தில் ரேணுகாம்பாள் என்ற பெயர் இருந்தது. (த. தி. பக்கம் 89)

23. மேலராஜவீதி கோடியிலுள்ளது; ஷஹஜி காலத்துக்குப்பிறகு சேதுபாவா சுவாமிகளால் பிரதிட்டை செய்யப்பெற்றது. (த. தி. பக். 78)

24. தஞ்சைப் பெரியகோட்டை வாயிலில் உள்ளது; வல்லபை மூலத்தானத்துப் பிள்ளையார் என்பது வெள்ளைப்பிள்ளையார் ஆயிற்று. (த. தி. பக். 64)

25. மேலராஜவீதியில் உள்ள சிறு கோயில். (த. தி. பக். 76)

26. இது சரபோஜி மன்னர் காலத்தது. இது வடக்கு ராஜவீதி தூய பேதரு மேனிலைப் பள்ளிக்கு அருகிலுள்ளது. (த. தி. பக் 78)

27. அய்யன் கடை வீதிக்கு அடுத்து உயர்ந்த மேடைப்பகுதியில் இருப்பது. (த. தி. பக். 47)

28. இவர்கோவில் கீழராஜவீதி தெற்குக் கோடியிலுள்ளது. (த. தி. பக். 66)

29. இரண்டாம் சிவாஜி காளிகாதேவிபூசை ஏற்படுத்துங்கால் இராசகோபாலசுவாமி கோயிலில் (?) இடம் போதாமையால் அங்கிருந்த மதனகோபாலப்பெருமாளை ஸ்ரீபிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயிலில் தென்மேற்குப் பகுதியில் அமைத்தார். இராசகோபாலசுவாமி கோயிலுக்கு வெளியிலுள்ள தெற்கு மண்டபக் கோயிலில் இருந்த ஸ்ரீஆதிகேசவப்பெருமாளையும் ஸ்ரீபிரசன்னவெங்கடேசப்பெருமாள் கோயிலின் தெற்குத் திருச்சுற்றில் அமைத்தார். (த. தி. பக். 87-88)

30. தஞ்சை மேலராஜவீதியில் மேற்குப் பகுதியில் உள்ளது. (த. தி. பக். 78)

31. இவர் கோயில் ஸ்ரீபிரசன்ன வெங்கடேசப் பெருமாள் சன்னிதிக்கு அண்மையிலுள்ளது. (த. தி. பக். 88)

32. தஞ்சையிலிருந்து வல்லம் போகும் வழியில் 4 மைலில் இருந்த மானோஜிபட்டி கோயில் அழிந்து போக, அங்கிருந்த லக்ஷத்தோப்பு அநுமார் அய்யங்குளம் கீழ்க் கரையில் அமைக்கப் பெற்றார். (த. தி. பக். 76)

33. டபீர் இராமசாமி கோயில் எனவும் வழங்குவர்; மேலராஜவீதியிலுள்ளது. (த. தி. பக். 77)

35. தஞ்சை விண்ணாற்றங்கரைப் பெருவழியில் கில்லண்ணா அப்பா மண்டபத்திலுள்ளது. (த. தி. பக். 50)

36. இவர் கருவேல நாதசுவாமி எனப் பெறுவர். கருந்திட்டைக்குடியில் கிழக்குப் பகுதியில் உள்ள பழமையான கோயில். (த. தி. பக். 50-51)

37. நீலமேகப் பெருமாள்
38. மேலசிங்கப் பெருமாள்
39. அனந்தவல்லி தேவி
40. மணிகண்டப் பெருமாள்
41. நாகநாத சுவாமி
42. அகத்தீசுவர சுவாமி
43. விநாயக சுவாமி
44. ஆஞ்சநேயர்
45. கருந்தட்டான்குடி சுந்தரேசுவரர்
46. கால்யாண வெங்கடேசர்
47. வரதராசப் பெருமாள்
48. வேணுகோபால சுவாமி
49. பஞ்சநதேசுவரர்
50. படித்துறை வெங்கடேசர்

---

37. இவர் கோயில் தஞ்சை விண்ணாற்றங்கரை மேற்குக் கோடியில் திருவையாற்றுப் பெருவழியின் அருகில் உள்ளது. ( த. தி. பக். 41 )

38. தஞ்சை மேல வெளித் தோட்டத்தில் சிங்கப் பெருமாள் குளத்தின் மேல் கரையில் இருந்தது; பின்னர் விண்ணாற்றங்கரைக்கு மாற்றப் பெற்றது. ( த. தி. பக். 48 )

39. இவர் ஆனந்தவல்லி எனப்பெறுவர்; கோயில் விண்ணாற்றங்கரையிலுள்ளது சுவாமி பெயர் தஞ்சாபுரீசுவரர். ( த. தி. பக். 44 )

40. மணிக்குண்ணப் பெருமாள் என்றும் வழங்குவர் ( P. 42, The Great Temple a Tanjore by J. M. S.; No. 66 ). மணிபர்வதப் பெருமாள் என்பது சரியான பெயர் ஆகலாம். இக்கோயில் முன்னாளில், களிமேடு என்னும் ஊரில் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்ததாகவும், பின்னர் விண்ணாற்றங்கரையில் புதிதாகக் கட்டப் பெற்றதாகவும் கூறுவர். ( த. தி. பக். 42 )

41. தஞ்சைக் கீழ வாயிலில் பூமாலைராவுத்தன் கோயிலாகிய ஸ்ரீவைத்தியநாத சுவாமி கோயிலுக்கு அணித்தாய் வடவாறு என்னும் மணிமுத்தாநதியின் தென்கரையில் உள்ளது; ஆதிசேடன் பூசித்தது: அனந்தன் பூசிக்கவந்தமையால் திருமாலும் அங்கப்போந்து அரங்கநாதராய் அமர்ந்திருக்கிறார். ( த. தி. பக். 64 )

42. தஞ்சையிலிருந்து திருவையாற்றுக்குச் செல்லும் வழியில் 4 கல் தொலைவில் அரசூரில் உள்ளது. ( த. தி. பக். 47 )

45. கருந்திட்டைக்குடி பெருவழியில் மேற்குப் பகுதியில் மதுரைத் திருவிளையாடலில் குறித்த மாணிக்கவாசகரின் வரலாற்றுக் குறிப்புக்களை நினைவூட்டும் பழைய கோயில், ( த. தி. பக். 59 )

46. திருவையாற்றுப் பெருவழிக்கு வடக்கே நீலமேகப் பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ளது. ( த. தி. பக். 45 )

47. இவர் கோயிலும் நீலமேகப் பெருமாள் கோயிலுக்கு அடுத்து இருக்கிறது. ( த. தி. பக். 45 )

48. இவர் கோயில் திருவையாற்றில் காவிரியின் தென்கரையில் மாவட்ட நீதி மன்றத்துக்கு வடக்கிலுள்ளது. உற்சவத்திருமேனிகள் திருப்பூந்துருத்தி பெருமாள் கோயிலில் உள்ளன. ( த. தி. பக். 46 )

49. திருவையாறு திருக்கோயில் இந்நாளில் தருமபுர ஆதீனம் பரிபாலனத்தில் உள்ளது.

50. முதலில் வடவாற்றின் தென்கரையில் இருந்த கோயில் பின் வடகரையில் அமைக்கப் பெற்றது. ( த. தி பக். 59 )

51. கோடியம்மன்
52. லக்ஷ்மி நாராயணசுவாமி
53. சந்த்யாமண்டபம் சுந்தரேசர்
54. காளஹஸ்தீசுவரர்
55. யமுனாம்பாபேட்டை
56. மாரியம்மா தேவி
57. கைலாசநாத சுவாமி
58. சப்தரிஷீசுவரர்
59. ஐராவதேசுவரர்
60. உமாமகேசுவரர்
61. நர்த்தன விநாயகர்
62. சித்தயோகநாத சுவாமி
63. சுவாமிநாத சுவாமி
64. மகாலிங்க சுவாமி[1]

மேலே கண்ட 64 திருக்கோயில்கள் யாவரும் சென்று வழிபடற்குரியனவை. ஆனால் மராட்டிய மன்னரது வழிபாட்டுக்கு மட்டும் உரியவர் "சந்திரமௌலீசுவரர்" ஆவர்[2]. இவரே மராட்டிய மன்னர்தம் வழிபடு தெய்வமும் ஆவர்.

---

51. கருந்திட்டைக்குடியிலுள்ளது. முன்னர்த் தஞ்சையில் வடமேற்கில் பொந்திரிப் பாளையத்தின் அருகே அமைந்திருந்தது. பின்னர் விண்ணாற்றங்கரைப் பெருவழியில் அமைக்கப் பெற்றது. (த. தி. பக். 48)

58. விண்ணாற்றங்கரையில் தஞ்சை நகராட்சி குடிநீர்த் தொட்டிக்குக் கீழ்ப்புறம் அமைந் துள்ளது. (த. தி. பச். 45)

55. மாரியம்மன் கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் உள்ளது. இக் கோயிலிலுள்ள கோதண்ட ராமர் யமுனாம்பாள்புரம் அதாவது நீடாமங்கலத்துக்கு அடுத்த பூவனூரிலிருந்து கொணர்ந்து அமைக்கப்பெற்றது. (த. தி. பக். 62)

56. தஞ்சாவூருக்குக் கிழக்கே புன்னைநல்லூர் என்ற ஊரில் உள்ளது; இந்நாளில் மாரியம்மன் கோயில் என்று வழங்கப்பெறுவது. (த. தி. பக். 60)

57. மாரியம்மன்கோயில் திருக்குளத்துக்குத் தெற்குப்பகுதியில் உள்ளது. இது முன்னாளில் களிமேட்டிலிருந்தது; பின் விண்ணாற்றங்கரை இராசா சத்திரத்துக்கு எதிரில் இருந்தது; பின்னர் மாரியம்மன் கோயிலில் குளத்துக்குத் தென்புறத்தில் அமைவதாயிற்று. (த. தி. பக். 62)

58. சக்காரம்பாள்புரம் ( P. 42, No. 86 The Great Temple at Tanjore ) Page 83 of J. M. S. அம்மாசத்திரம்.

62. திருவிசநல்லூர். 63, இக்கோயில் ஒரு குழுவின் ஆட்சியில் உள்ளது.

64. திருவிடைமருதூர்; இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குரியது.

1. இங்கு 64 கோயில்கள் குறிப்பிடப்பெற்றிருந்தபோதிலும் தஞ்சை அரண்மனை தேவஸ்தான ஆட்சியில் இந்நாளில் உள்ள கோயில்கள் 88 என்று "தஞ்சையிலுள்ள பெரிய கோயில்" என்ற தம் ஆங்கில நூலுள் பக். 41.42இல் திரு ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள். மேலும் அவற்றுக்கு கி. பி. 1865க்கு முன் ஆண்டுதோறும் ரூ. 82,655-7-9 மோகினிப் பணம் 1799 ஒப்பந்தப்படி அளிக்கப் பெற்று வந்தது என்றும், அவ் ஒப்பந்தப்படி சரபோஜி II 102 தேவஸ்தானங்களைத் தன் நேர்பார்வையில் வைத்துக்கொண்டார் என்றும் (பக். 89இல்) எழுதியுள்ளார்.

2. ச. ம. மோ. த. 8-23. The Chandramouleeswara Swami Shrine within the Palace premises is a private shrine for family worship by the Raja's of Tanjore - Page 98, The Great Temple at Thanjavur by J. M. Somasundaram Pillai.

கோட்டையின் வெளியில் விண்ணாற்றங்கரையில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் (கி. பி. 1777இல்) சில புதிய கோயில்கள்[3] கட்டப் பெற்றன என்றறியப்பெறுகிறது. அவை நீலமேகப் பெருமாள்[4], மணிகண்ட பெருமாள்[5] என்பனவாம். இவற்றுடன் மேலசிங்கப்பெருமாள் கோயிலும்[6], கோட்டையின் வெளியில் விண்ணாற்றங்கரையில் எடுக்கப்பெற்றது[7]. இம்மூன்று கோவில்களுக்கும் கி. பி. 1779 ஜில்ஹஜ்(அக்டோபர்)மாதம் குடமுழுக்கு நடைபெற்றதாதல் வேண்டும்[8]. கி. பி. 1779இல் பட்டாபிராமசுவாமி கோயில்[9] எடுப்பிக்கப்பெற்றது[10]. நவநீத கிருஷ்ணசுவாமி கோயில்[11] கி. பி. 1769இல் குறிக்கப்பட்டுள்ளது[12]. விஜயராமசுவாமி கோயில்[13] கோபுரம் கி. பி. 1768இல் எடுப்பிக்கப்பெற்றது[14]. ஸ்ரீகாசி விசுவநாதசுவாமியின்[15] கோயிலுக்கும் வேதசாலைக்கும் நிலம் 28வேலி 15 மா, 12½ குழி கி. பி. 1806இல் அளிக்கப்பெற்றது[16]. சௌ. அஹல்யாபாயி சாஹேப் அவர்கள்[17] அருட்டிரு பிரதாபராமசாமிகோயிலுக்கு[18] ஏகாரத்தி, பஞ்சாரத்தி, தூபாரத்தி, கற்பூரார்த்தி ஆகிய இந்நான்கையும் வெள்ளியினாற் செய்து அளித்தமையோடு, வெள்ளித்தண்டுடன் சாமரம் ஒன்றும் அளித்தார்[19]. ஆனந்தவல்லி[20] யோடுறை தளிகேசுவரசுவாமிக்குத் தேர்விழாவுக்கும் நாட்படிக்குமாக 308 சக்கரம் அளிக்கபெற்று வந்தது[21]. இக்கோயில் நித்திய பூசை முதலியவற்றுக்காக 1844இல் அக்கம்மாதோட்டம் நன்செய் புன்செய் 11 வேலி 1¼ மா நிலம் விடப்பெற்றது[21அ]. வசிட்டேசுவரர்[22] கோயில் தளவரிசை போடக் காலாட்படையைச் சேர்ந்த 41 பேர் 1813இல் ஒரு திங்கள் ஊதியம் தந்தனர்[23]. கீழவாசல் அருள்மிகு லக்ஷ்மி நரசிம்ம சுவாமி[24] கோயில் எடுப்பிக்க அர்பி 1213 (கி. பி. 1812இல்) 2900 + 150½ சக்கரம் வழங்கப்பெற்றன[25]. வடக்கு வீதியில் கி. பி. 1826இல் ரத்னபுரீசுவர சுவாமி கோயில் என்று ஒரு புதிய சிவாலயம் எடுக்கப்பெற்றது; அதற்குச் செலவு சக்கரம் 356, பணம் 2½[26]. இரத்னகிரீசுவரர்[27] கோயில் கும்பாபிஷேகம் 1819இல் நடைபெற்றது. தெற்குவீதி விசுவநாத சுவாமிக்கு[28] 1835இல் ஸ்ரீமத் விஜய விசுவநாதசுவாமி என்று பெயர் மாற்றம் தரப்பெற்றது[29]. பிரதாபவீர அனுமார்,[30] பிரசன்ன வெங்கடேசர்[31] கோபுரங்கள் 1849இல் பழுதுபார்க்கப் பெற்றன.[32] கீழவாசல் சிங்கப்பெருமாள்[33] கோயில்

3. 2-290, 291 4. 64 கோவில்களுள் 87 பார்க்க 5. 64இல் 40 பார்க்க
6. 64இல் 88 பார்க்க 7. 4-298; 2-290, 291 8. ச. ம. மோ. த. 18-15
9. 64இல் இல்லை 10. ச. ம. மோ. த. 18-10 11. 64இல் 80
12. 2-18 13. 64இல் 83 14. 2-16
15. 64இல் 12 16. 1-187 17. பிரதாபசிங்கரின் மனைவி (போன்ஸ்லே வம்ச சரித்திரம், தமிழ்) பக். 82 18. 64இல் இடம்பெறவில்லை
19. 2-17 20. 64இல் 89 21. ச. ம. மோ. த. 28-9, 1-40 22. 64இல் 86
23. 4-481, 482 24. 64இல் 20; கீழ சிங்கப்பெருமாள் 25. ச. ம. மோ. த. 8-21
26. 4-481, 281, 2-278 27. ச. ம. மோ. த. 9-18 (64இல் 26) 28. 64இல் 15
29. ச. ம. மோ. த. 4-40 30. 64இல் 28 31. 64இல் 27
32. ச. ம. மோ. த. 1-6 33. 64இல் 20

ஸ்தானீகம் பற்றி ஒரு ஆவணம் கூறுகிறது[34]. 1818இல் லக்ஷ்மி நரசிம்மசுவாமி கோயில்[35] 3050½ சக்கரம் செலவில் எடுப்பிக்கப்பெற்றது[36]. கொங்கணேசுவரருக்கு[37] ஆண்டு மொயின் 250 சக்கரம் கி. பி. 1779இல் தரப்பெற்றது[38].

மிகுபுகழ் பெற்ற மாரியம்மன்கோயில் பற்றிச் சிலஆவணங்கள் உள்ளன. மேல் 64 திருக்கோயில்கள் கூறப்பட்ட நிரலில் (56) மாரியம்மா தேவி என்பது இதுவாகும். மாரியம்மன் கோயிலுக்குத் தினப்படி மொயின் 20 சக்கரம் 8 பணம் என்று ஒரு ஆவணம் கூறுகிறது[39]. "மாரியம்மன் கோவிலுக்கு நகை வகையறா பெரிய கோயிலில் உள்ளவற்றைக் கொடுக்குமாறு தாசில்தார் எழுதியிருக்கிறார்" என்றமையால்[40] மாரியம்மன் கோயிலுக்கு நகைகள் பெரிய கோயிலிலிருந்து விழாக் காலங்களில் வழங்கப் பெறுதலுண்டு என்றுதெரிகிறது.

தஞ்சாவூர்க் கிராம தேவதைகள் உக்கிரமாகாளி, நாச்சாரம்மா, சோலையம்மா, கோடியம்மா, மாகாளியம்மா, ஐயனார், ரேணுகாதேவி, பத்ரகாளி, எல்லம்மா[41], காளிகாதேவி[42] என்பனவாம் என்று 1793க்குரிய மோடிதமிழாக்கக் குறிப்பு ஒன்று[43] தெரிவிக்கிறது.

தஞ்சைப் பெரியகோயில் எனப்பெறும் பிரகதீசுவரசுவாமி கோயில்பற்றிப் பல குறிப்புக்கள் உள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு உரிய நிலம் வில்லிய நல்லூர் ஆலங்குடி என்ற ஊர்களில் இருந்தன[44]. மேலும் சூரக்கோட்டையில் நன்செய் புன்செய் 3 வேலி விலைக்கு வாங்கப் பெற்றது[45]. "மேற்படிகோயில் சருவமான்யம் சூரக்கோட்டையில் நஞ்சை புஞ்சை மாவடை மரவடை குத்தகை வருஷம் 1க்கு ரூ 26" என்ற குறிப்பினின்று[46] அந்த நிலங்கள் தரக்குறைவானவை என்றறியப்பெறும். நாடோறும் நடத்தப்பெறும் பூசையின்பொருட்டுத் திங்கள் ஒன்றுக்கு 400 சக்கரம் வீதம் 4800 சக்கரம் 1820இல் அளிக்கப் பெற்றது[47]. 1829இல் ரூ. 6599—12—4[48]; 1835இல் சக்கரம் 5994 $\frac{1}{16}\frac{3}{}$[49]; 1836இல் 6328 $\frac{1}{16}\frac{3}{}$[50] என்றும் அறிய வருகிறது. பெரியகோயில் தேர்த் திருவிழாவுக்கு 1811இல் 3150 சக்கரம் செலவு செய்யப்பெற்றது[51]. 1801லும் 3150 செலவு செய்யப்

---

34. 6-106 35. 64இல் 20 36. 4-466 37. 64இல் 10
38. ச. ம. மோ. த. 13-39 39. 4-466 40. 4-90.
41. 64இல் 22 42. 64இல் 4 43. ச. ம. மோ. த. 7-48
44. ச. ம. மோ. த. 8-24 45. ச. ம. மோ. த. 4-3
46. ச. ம. மோ. த. 9-37 47. ச. ம. மோ. த. 6-9
48. ச. ம. மோ. த. 16-13 49. ச. ம. மோ. த. 11-18; 11-40
50. ச. ம. மோ. த. 11-29 : 11-35
51. 2-41: 1811 தேவஸ்தானம் பெரிய கோவில் சுவாமிக்கு உற்சவத்திற்கு.

பெற்றதாகப் பிறிதோர் ஆவணம் புகல்கிறது.[52] சித்திரையில் பெருவிழா நடந்து வந்தது[53].

இக்கோயில் வருமானம் சொத்துக்கள்பற்றித் தஞ்சைத்திருக்கோயில்கள் என்ற நூலில் திரு ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பக்கம் 72–73இல் பின் வருமாறு எழுதியமை ஒப்புநோக்கற்பாலதாகும்:

" இக்கோயிலுக்கு அரசாங்க மோகினி ரூ. 8093—12—0 உடன் மொத்த வருமானம் சுமார் ரூ. 10722—10—0 ; சொத்துக்கள் சூரக்கோட்டை வேலி 20—6—10 ; கீழவன்னிப்பட்டு வேலி 7—1–29 ; கண்டியூர் செ. 10; நாகத்தி வேலி 3–0–3–30; விலிய நல்லூர் ந. வேலி 4; ஆலங்குடி ந. வேலி 1–18–7–35; மற்றும் தஞ்சையில் கடைகள் முதலியன."

பெரிய கோயிலில் உள்ள நந்தி மிகப் பெரியது என்பது யாவரும் அறிந்ததே. அந்நந்திக்கு அபிஷேகம் பூசை நிவேதனத்துக்கு நாள்ஒன்றுக்கு $3\frac{1}{2}$ சக்கரம் செலவு செய்யப்பெற்றது[54]." "பெரிய கோயில் நந்திக்கு, மழைபெய் வதற்காக அபிஷேகம் பூசை நிவேதனம் ஜபத்திற்காக $\frac{1}{4}$மண்டலத்துக்கு நாளொன்றுக்கு $3\frac{1}{2}$ சக்கரம் செலவுசெய்யப்பெற்றது. இது1811இல் நிகழ்ந்தது[54அ]. இந்நந்திக்கு மிளகு அபிஷேகத்துக்காக நாள் ஒன்றுக்கு 7 சக்கரம் வீதம் 3 நாட்களுக்கு ச் செலவு செய்யப்பெற்றது[55]. இது 1775இல் நிகழ்ந்தது. மழை பெய்தற் பெருட்டு மிளகு அபிஷேகம் நடத்தியதாகக் கருதுவர் சிலர்[56].

| | | |
|---|---|---|
| திருநாள் மொயின் சக்கரம் | | 1700* |
| திளப்படி ,, ,, | | 1200 |
| திருநாளுக்கு மண்டகப்படி அஹல்யா பாயிசாயேபிடம் | | |
| பூதவாகனத்துக்கு | 50 | |
| யானை ,, | 50 | |
| விருஷப ,, | 75 | |
| தீர்த்தவாரிக்கு | 75 | |
| | 250 | 250 |
| கூடுதல் | | 3150 |

இத்தொகை 1779லும் திட்டத்திலிருந்தது ; ஆனால் இதில் 4 இல் 1 பங்கு கழித்துக் கொண்டு மிகுதி $\frac{3}{4}$ பங்கு கொடுத்தவகையில் 1275 சக்கரம் என்று ஒரு குறிப்புள்ளது. ( ச. ம. மோ. த. 18–17 ) ஏன் $\frac{1}{4}$ பங்கு குறைக்கப்பட்டது என்பது குறித்து உரிய இடத்தில் கூறப்பெறும்.

52. ச. ம. மோ. த. 24–19 ; 2–167
53. 4–207
54. 4–425.
54அ. 2–85
55. 2–147
56. நாளேடு–தினமணி தேதி 10—7—1988

கி.பி. 1779இல் தஞ்சைப் பெரியகோயில் அம்மனுக்கு(பிருஹந்நாயகிக்கு) வெள்ளிக்கவசம் 15 சேர் எடையில் செய்யப்பெற்றது.[56அ]

பெரிய கோயில் பெருமானுக்கு 16 மஹாதானங்களில்[57] ஹிரண்ய விருஷப[58] தானம் 1826இல் செய்யப்பெற்றது.[59]

உடல் நலம் குன்றியிருப்பின் பெரியகோயில் ஜ்வரஹரேஸ்வரருக்கு அபிஷேகம் பூசை புரியும் வழக்கமும் உண்டு.[60]

கோயிலில் திருவிழா நடக்கும்போது சுவாமி திருவுலாப் போகும்கால், சுவாமிக்குப் பின்னால் வேதம் வல்லார் "ஸ்வஸ்தி வாசனம்" சொல்வர் என்று அறியவருகிறது[61]. திருமுறைகள் ஓதும் பழக்கம் இருந்திருத்தல் கூடும்; எனினும் இதற்கு மோடி ஆவணங்கள் சான்று பகரவில்லை. கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் தாம் எழுதிய தஞ்சைப் பெருவுடையார் உலாவில் 47ஆம் கண்ணியில் வேதியர்கள் வேதமிசைப்பர் என்றும், ஓதுவார்கள் மூவர் தேவாரம் இசைப்பர் என்றும்,

"வாரம் இசைவேத வாசகரும் மூவர்தே
வாரம் இசைக்கின்ற மாதவரும்"

என்ற வரிகளில் பாடியுள்ளார்.

கோயில்களில் சில பகுதிகளில் வேற்றுச் சமயத்தவர் வரக்கூடாது என்பது பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்கமாகும். கி. பி. 1797இல் ஒரு வெள்ளைக்காரன் பெரிய கோயில் விமானத்தின்மேல் ஏறினன்; அதனால் பெருமானுக்குக் கும்பாபிஷேகமும் சம்ப்ரோக்ஷணமும்[62] செய்யப்பெற்றன என ஒரு குறிப்பு உள்ளது[63]. வெள்ளைக்காரன் ஒருவனுடைய உருவம் தஞ்சைப் பெரியகோயில் விமானத்தில் காணப்பெறுகிறது. அதைப்பார்க்க இவ்வெள்ளை யன் ஏறினனோ என்பது தெரியவில்லை.

கி. பி. 1801இல் முக்தாபாய் என்பவர்[63அ] பெரியகோயில் பெருமானுக்கு லக்ஷம் விளக்கு ஏற்றினார் எனவும், அஹல்யாபாயி சாஹேப் அவர்கள்[63ஆ] ஒரு லக்ஷம் தாமரைப்பூக்களை அருச்சனை செய்தார் எனவும்[64] ஒரு லக்ஷம் விளக்கு

---

56அ. 5-294

57. 16 வகையான அறக்கொடைகள் :- நிலம்; இருக்கை; தண்ணீர்; ஆடை; விளக்கு; உணவு; தாம்பூலம்; குடை; சந்தனம்; ஜபமாலை; பழம்; படுக்கை; செருப்பு; பசு; தங்கம்; வெள்ளி (வடமொழி ஆங்கில அகராதி, மோனியர் மோனியர் வில்லியம்ஸ், பக். 1110)

58. தங்கத்தினால் ஆய இடபவாகனம்

59. 4-252, 480

60. 4-232

61. 4-210 ; ச. ம. மோ. த. 8-29.

62. தூய்மை செய்வதற்காகக் கோயிலில் செய்யும் சடங்கு

63. 4-380

63அ. சரபோஜி IIஇன் காமக்கிழத்தி

63ஆ. சரபோஜி IIஇன் மாதேவி

64. 2-168

களை ஏற்றினார் எனவும்[65] தெரிகிறது. 1826இல் சர்க்காரிலிருந்து கிராம்பி னால் செய்த விசிறியொன்று அனுப்பப்பெற்றது[66]. கி. பி. 1799இல் ஒருலக்ஷம் வில்வார்ச்சனை நடைபெற்றது[67]. 1834இல் சிவங்கோட்டையில் புதிதாகச் சாம்ராஜ்ய லக்ஷ்மியும், தைரியலக்ஷ்மியும் எழுந்தருள்விக்கப்பெற்றனர்.[68]

பெரிய கோயிலில் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இது சரபோஜி மன்னர் தொண்டுகளுள் ஒன்றாகும்.

1801இல் இவ் அஷ்டோத்திர சதலிங்கம் (108சிவலிங்கங்கள்)அமைக்கப் பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது[69]. ஜில்காத் தேதி 3இல் மகா கும்பா பிஷேகம் மண்டலாபிஷேகம் ஆகியவற்றுக்கு 2586 சக்கரம் $2\frac{1}{2}$ பணம் செலவா யிற்று[70]. இந்த நிகழ்ச்சி 1800லேயே தொடங்கப்பெற்றதாதல் வேண்டும்[71]. 108 சிவலிங்கங்களும் பல்வேறு இடங்களினின்று கொணரப்பெற்றனவென்று சில ஆவணங்களால் அறியப்பெறும். நரசிங்கம்பேட்டை[72], அம்மாப்பேட்டை[73], உடையூர்[74], நாதன்கோயில்[74] முதலிய ஊர்களில் இருந்த சிவலிங்கங்கள் பல வற்றையும் அகழ்ந்து எடுத்துக்கொண்டு வந்து தஞ்சைப் பெரியகோயிலில் பிரதிஷ்டை செய்தனர்.

இச்சிவலிங்கங்கட்கு நிலையாகப் பூசை நிவேதனம் முதலியவற்றை நடத்துவதற்குச் சரபோஜி மன்னர் ஒரு அறக்கட்டளை நிறுவினார். முதற் பொருள் 5000 புலிவராகன்; சென்னையிலிருந்த ஹாரிங்டன்[74அ] (Harrington) என்பவரிடம் 29—5—1802இல் வழங்கினார். அவர் ஆண்டொன்றுக்கு 100க்குப் பத்து வராகன் வீதம் வட்டி தருவதாகப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்.[75] 29-11-1802இல் 6 திங்களுக்கு உரிய வட்டி 250 புலிவராகனும் வரவு வந்தது. அது திருவாரூர்ப் புது ரூபா 875 ஆயிற்று.[76]

இங்ஙனம் எத்தனை அரையாண்டுகள் வட்டி பெறப்பட்டது என்பது தெரியவில்லை. ஒரு தடவை மட்டும் வந்திருக்கலாம் போலும். மேல்கண்ட முறையில் வட்டி வரவு வந்தபொழுது 108 சிவலிங்கபூசைக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 73 வீதம் செலவு செய்யப்பெற்றிருக்கக்கூடும் என்று எதிர்பார்க் கலாம். ஆனால் கிடைத்த சில ஆவணக்குறிப்புக்களைக் கொண்டு நோக்கின் மேலேகண்ட வண்ணம் அறுதிங்கள் ஒருமுறை 250 புலிவராகனோ ரூ. 875

---

65. ச. ம. மோ. த. 2-19  66. 4-283  67. 1-243  68. ச. ம. மோ. த. 9-28

69. ச. ம. மோ. த. 2-17  70. ச. ம. மோ. த. 24-40; 24-24; 16-91

71. ச. ம. மோ. த. 14-7  72, 73. ச. ம. மோ. த. 14-7, 8  74. ச. ம. மோ. த. 14-8

74அ. "1807: மேஸ்தர் ஹாரிங்க்டன்: இவரிடத்து 1805இல் அக்டோபர் 8க்குச் சாமான்கள் வாங்கிய வகையில்" (ச. ப. மோ. த. 47-18) என்ற குறிப்பால் ஹாரிங்க்டன் என்பவர் சென்னையில் இருந்த வெள்ளைக்கார வியாபாரி என அறியலாம்!

75. 2-165; 166; 3-147, 148;  76. 3-147; 7-583, 584

றுபாயோ பின்னர் வரவு வந்ததாகத் தெரியவில்லை. கிடைத்துள்ள குறிப்புக் களை நோக்கின் பூசைச்செலவுக்கு மாதம் 1க்கு ரூ. 50 வீதம் ஏறத்தாழ்க் கி. பி. 1812இலிருந்து ஸர்க்காரினின்று கொடுக்கப்பெற்றுவந்தது என்பது தெரியவரும்.[77]

கீழவாசலில்[78] 1814இல் வெள்ளைப்பிள்ளையார் கோவில் கட்டு வதற்கு[78அ] வேண்டுகோள் விடப்பட்டது.[79] "கி. பி. 1818இல் வெள்ளைப் பிள்ளையாருக்குத் தாழம்பூ அருச்சனை"[79அ] என்ற குறிப்பால் அக்கோயில் விரைவில் கட்டி முடிக்கப் பெற்றதாதல் கூடும்.

மாரியம்மன் கோயில் மராட்டிய மன்னர் ஆதரவில் சீருற வளர்ந்தது. அங்குள்ள ஸ்ரீகோதண்டராமசுவாமி கோயிலுக்கு மொயின் ஆண்டுதோறும். ரூ. 4725–1–9 வழங்கப்பட்டு வந்தது.

தெற்குவீதியில் விசுவநாதசுவாமி கோவிலுக்கு விஜயவிசுவநாதசுவாமி என்று 1835இல் பெயர் மாற்றம் செய்யப்பெற்றதுடன் அதற்கு நித்தியப்படி பூசைச் செலவுக்குத் தொகை போதாமை கண்டு எமுனாம்பாபேட்டை ஸ்ரீ கோதண்டராமசாமி கோவிலுக்குரிய வருமானத்தினின்று கொடுக்கப்பட்டது.[81]

இரண்டாம் சரபோஜிக்கு முன்னர் மராட்டியரின் நேர் ஆளுகைப்பகுதியில் இருந்த பல சிறந்த கோயில்களுக்கு மராட்டிய மன்னர் தம் ஆதரவு மிகப் பெருகி இருந்தது.

திருவையாறு திருவாதி என்றே பெரும்பாலும் குறிக்கப்பெற்றுவரும். இது தஞ்சைக்கு வடக்கில் 10 கி. மீ தொலைவிலிருக்கும் ஒரு சிறந்த சிவத் தலம். (இங்குள்ள திருக்கோயில் இந்நாளில் தருமபுர ஆதீனத்துப் பரிபால னத்தில் உள்ளது). இத் திருக்கோயிலுக்கு அவ்வப்பொழுது மாராட்டிய மன்னர்கள் சென்று வழிபாடாற்றியுள்ளனர்..[82] இக்கோயில் இவர்தம் நேர் பார்வையில் இல்லாதிருந்தமைக்குக் காரணம் புலப்பட்டிலது. ஸ்ரீபஞ்சநதீசுவர சுவாமி சோமாஸ்கந்தமூர்த்தி அம்மனுக்குக் கல்லிழைத்த கிரீடமும் காதணியும் 1804இல் கொடுக்கப் பெற்றுள்ளன.[83]

---

77. ச. ம. மோ. த. 2–12; 17–41; 5–89; 18–86; 18–49; 2–44; (5–298 பார்க்க)

78. கீழவாசல் வெற்றி வாசல் எனப்பெறும். ஏகோஜி தஞ்சையில் வடக்கு வாயில் வழி நுழைந்து கோட்டையை வென்று கிழக்கு வாயில் வழியே வெளியே வந்தார். ஆகவே கிழக்கு வாயில் "பத்தே தர்வாஜா" அதாவது 'வெற்றி வாயில்' எனப்பெற்றது – பக். 77, போன்ஸ்லே வம்ச சரித்திரம் (தமிழ்), தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு, 2ம் பதிப்பு 1980 (குறிப்பு: திருவலஞ்சுழியிலும் வெள்ளைப் பிள்ளையார் சந்நிதி உண்டு; மிகச் சிறப்புடையது.)

78 அ. வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி என்ற நூலால் வெள்ளைப்பிள்ளையார் கோயில் நாயக்கர் காலத்தது எனவும், இங்குக் "கட்டுதல்" என்பது புதுப்பித்தல் ஆகலாம் என்றும் சிலர் கூறுவர்.

79. 2–255 (64இல் 24) 79 அ. 1–172 80. 4–288

81. ச. ம. மோ. த. 4–40 82. ச. ம. மோ. த. 2–28, 45 83. ச. ம. மோ. த. 8–26

திருப்பழனம்[84] என்பது திருவையாற்றுக்கு அருகில் உள்ள சிவத்தலம். இந்தத் திருக்கோயிலில் நாடோறும் ஒரு கோதானம் கொடுக்கப்பட்டு வந்ததாகவும், அது நின்று விட்டது என்றும் 1813க்குரிய ஒரு ஆவணக்குறிப்பால் அறியப்பெறும்.[85]

கும்பகோணம் பல கோயில்களை உடையது. கும்பேசுவர சுவாமி கோயிலுக்குத் திங்கள் தோறும் 150 சக்கரம் மொயின்[86] அளிக்கப்பெற்றது; நாகேசுவர சுவாமி கோயிலுக்கு மாத மொயின் 83 சக்கரம், 3¼ பணம்;[87] சாரங்கபாணி கோயிலுக்கும் மராட்டிய மன்னர் உதவி இருந்திருத்தல் வேண்டும்.[88] கும்பேசுவர சுவாமி மகாபிஷேக பூசைக்கு 10 சக்கரம் என்று 1801க்குரிய ஆவணக் குறிப்பு[89] ஒன்று கூறுவதால் கும்பேசுவர சுவாமிக்கு அவ்வாண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றதாதல் வேண்டும். ராஜஸம்பாபுரம்[90] ஐராவதேசுவர சுவாமி நித்தியப்படி மொயின் ஓராண்டுக்கு ரு. 131¼ என்று 1841க்குரிய ஒரு குறிப்பால் தெரிகிறது.[92] இவ்வூர் கும்பகோணத்துக்கு அருகில் உள்ளது.

திருவிடைமருதூர் ஒரு சிறந்த சிவத்தலம்; மத்தியார்ச்சுனம் என்று சொல்லப்பெறுவது; தல விருட்சம் மருது; (தலை மருது – மல்லிகார்ச்சுனம் – ஸ்ரீசைலம்; இடைமருது – திருவிடைமருதூர்; கடைமருது - புடார்ச்சுனம் – திருப்புடைமருதூர், திருநெல்வேலி மாவட்டம்). இத் திருவிடைமருதூரில்தான் அமர்சிங்கு தன் இறுதி நாட்களைக் கழித்தார். இத் திருக்கோயிலுக்கு மராட்டிய மன்னர் ஆதரவு இருந்தமை தெளிவு.[93]

திருபுவனம் கம்பஹரேசுவரர் திருக்கோயிலுக்கும் மராட்டிய மன்னர் ஆதரவு இருந்தது.[94] திருபுவனத்தில் சரபமூர்த்திக்குத் தனிச் சிறப்பு உண்டு. அங்குச் சிறப்பு வழிபாடு செய்ததாக ஒரு ஆவணக் குறிப்புள்ளது.[95] கி. பி. 1853இல் இரண்டாம் சிவாஜி காலத்திலேயே திருவிடைமருதூர் திருபுவனம் ஆகிய கோயில்கள் (முறையே திருவாவடுதுறை, தருமபுரம்) திருமடங்களின் நேர் பார்வையில் வந்து விட்டன என்று அறியலாம்.[96]

---

84 திருப்பயணம் என்றுள்ளது
85 ச. ம மோ த. 1-84;
86 ச. ம. மோ. த. 19-38
87. ச. ம. மோ. த. 19-38
88 2-8, 25
89. ச. ம. மோ. த. 1-10
90. தாராசுரம் என்றவூர் ராஜஸாப்பாபுரம் என்று அழைக்கப் பெற்றதாதல் வேண்டும். ராஜஸாபாயி என்பவர் துளஜாவின் மாதேவி ஆவர்; 3-144
91. தாராசுரத்துக்கோயில் இறைவன் பெயர் ஐராவதேசுவரர் என்பதாகும்
92. ச. ம. மோ. த. 8-32
93. 2-25; ச. ம. மோ. த. 12-6; 5-8
94. ச. ம. மோ. த. 5-8
95. ச. ம. மோ. த. 20-3
96. ச. ம. மோ. த. 5-8

கி. பி. 1765இல் மயிலாடுதுறை எனப்பெறும் மாயூரத் திருத்தலத்தில் மாயூரநாதசுவாமி கோயில் கோபுரப் பணி நடந்தது.[97] அதற்குச் செலவு சக்கரம் 2026–8¼ ஆயிற்று.[97அ]

திருவாரூர் சிறந்த சிவத்தலங்களில் ஒன்று; இறைவன் புற்றிடங் கொண்ட பெருமான். இது ஏழு விடங்கத் தலங்களுள் முதன்மைத் தலம்; ஆகலின் தியாகேசப் பெருமானுக்குச் சிறப்பிடம் உண்டு. துளஜா மன்னர் கி. பி. 1776இல் திருவாரூர்த் தியாகேசப் பெருமானுக்கு வில்வார்ச்சனைக்கும், அர்த்தசாமக்கட்டளைக்கும் ஆகத் தப்ளாம்புலியூர், புலிவலம்படுகை, மொசக் குளம் ஆகிய சிற்றூர்களில் 19¾ வேலி நிலம் கொடுத்தார்; இதற்கு வேலி ஒன்றுக்கு 12 சக்கரம் வரி செலுத்த வேண்டும்.[98] திருவாரூரில் கமலாலயக் கரையில்[99] கி. பி. 1747இல் பிரதாப சிங்கர் காசிவிசுவநாதர் கோயில்[100] பிரதிஷ்டை செய்து, இதற்குப் பூசை நிவேதனத்துக்காகச் சுங்கத்திலிருந்து நாடோறும் 3 பணம் வீதம் கொடுக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.[100அ] கி. பி. 1737க்குரிய ஆவணம் ஒன்று (கைலாஸவாஸி துக்கோஜி அல்லது பாபாசாகேப்) மகாராஜா திருவாரூரில் அன்னசத்திரத்துக்கும், தியாகேசப் பெருமானுக்கு முன்னே கொடுத்திருந்த தொகை தவிரச் சிறப்பு அபிஷேக நிவேதனத்துக்காக 500 சக்கரம் கொடுக்குமாறு ஆணையிட்டார். ஷெ அறம் நிலையாக நடத்தற்குத் தியாகராஜ பண்டாரி என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க விளமர், கீழ்ப்படுகை என்ற ஊர்கள் சர்வமானியமாக அளிக்கப்பெற்றன.[101]

திருவாரூர்த் தியாகேசப் பெருமானுக்குப் பங்குனித் தேர்த் திருவிழா 1843இல் மாசித் திங்கள் 8ஆம் நாள் முதல் சித்திரைத் திங்கள் 2ஆம் நாள் வரையில் 55 நாட்கள் நடைபெற்றதென்று ஒரு ஆவணக்குறிப்பு உளது.[102] இதுபற்றி உரியவர்க்கு எழுதிக் கேட்டபொழுது, இந்தப் பங்குனித்தேர்த் திருவிழா இந்நாட்களில் பங்குனி உத்திரப் பெருவிழா என்று அழைக்கப் பெறுகிறது என்றும், இந்தப் பெருவிழா ஒரு திங்கள் நடைபெறும் என்றும், ஒவ்வோராண்டும் மாசித்திங்கள் அத்தம் பெற்ற நாளில் கொடி ஏற்றப்பெற்றுப்

---

97. ச. ம. மோ. த. 15-2 97அ. 2-4 98. ச. ம. மோ. த. 10-23; 10-31; இதில்கண்ட 3 ஊர்களும் திருவாரூர்க் கோயில் பரிபாலனத்தில் உள்ளன என்று அன்பர் உயர்திரு ஜி. ஆர். தட்சிணாமூர்த்தி அவர்கள் எழுதியுள்ளார்கள்.

99. கமலாலயம் என்பது திருவாரூர்த் தியாகேசர் கோயில் மதிலைச் சார்ந்துள்ள குளம்.

100. கமலாலயக் கரையில் தென்கிழக்குக் கோடியில் 40 × 20 அடி அளவில் ஒன்றும், வடமேற்கு மூலையில் பிறிதொன்றும் ஆக இரு கோயில்கள் உள; முன்னது தனியார் நிர்வாகம்; பின்னது கோயில் நிர்வாகம் என்று அன்பர் உயர்திரு ஜி. ஆர். தட்சிணாமூர்த்தி அவர்கள் எழுதியுள்ளார்கள். 100அ. 8-160, 161.

101. 8-252, 253; விளமர், கீழ்ப்படுகை என்ற ஊர்கள் கோயில் பரிபாலனத்தில் உள்ளன என்று உயர்திரு ஜி. ஆர். தட்சிணாமூர்த்தி அவர்கள் எழுதியுள்ளார்கள்.

102. ச. ம. மோ. த. 8-9

பங்குனித் திங்கள் உத்திரநாளில் திருவிழா முடிவுறும் என்றும் விளக்கம் வந்தது.[103] இதனால் சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் 55 நாட்கள் நடந்த திருவிழா இந்நூற்றாண்டில் 30 நாட்கள் நடைபெறுகிறது என்பது போதரும்.

பந்தணை நல்லூர் என்பது பாடல்பெற்ற சிவத்தலம். அங்கு மராட்டிய மன்னர்தம் கோட்டையிருந்தது. அது திருப்பனந்தாட்கு அருகிலுள்ளது. அங்குக் கோயில் கொண்டிருக்கும் பசுபதீசுவரருக்கு ஒப்பந்தப்படி மொயின் கொடுக்கப்பெற்று வந்தது[104].

திருவாப்பாடீ என்பதும் திருப்பனந்தாளுக்கு அண்மையில் உள்ளது; பாடல் பெற்ற தலம் ; சண்டேசப்பெருமான் தாபதமணலாற் கூப்பி ஆவின்பால் அபிஷேகம் செய்த தலம் ; அதனால் இறைவன் பாலுகந்தநாதர்[105] ஆயினார் ; ஐதர் படையெடுப்புக்கு முன்னரே திருவழா நடக்கவில்லை; அதனால் திருத் தேரும் பழுதடைந்து விட்டது ; ஆகவே மன்னர் வழக்கமாக அளிக்கும் மொயி னுடன் தேரைப் பழுதுபார்த்து வைகாசிப் பெருவிழா நடத்துவதற்கு 100 சக்கரம் தருமாறு ஒருவேண்டுகோள் விடுக்கப்பெற்றது. இது கி. பி. 1789இல் நிகழ்ந்தது[106].

பட்டீச்சுரம் என்பது தாராசுரத்துக்கு அருகிலுள்ள ஒரு சிவத்தலம் ; இங்குக் கோயில் கொண்ட பெருமானுக்குப் பட்டிநாதர் என்பது பெயர் எனத் திருமுறைப் பதிப்புக்களில் காணப்படுகிறது. மோடி ஆவணக்குறிப்பில் தேனு புரீசுவரர் என்றுள்ளது. கி. பி. 1797இல் தேர்த்திருவிழா நடத்த ஒப்பந்தத் துக்கு மேல் 3 மாத மொயின் 65 சக்கரங்கள் கொடுக்கப்பட்டன[107].

மன்னார்குடி என்பது ஒரு சிறந்த வைணவத்தலம். இத் திருக்கோயிலில் பங்குனித்திருவிழாவில் 7ஆவது திருநாள் மண்டகப்படி நடத்தப்பெற்றுவந்தது[108].

ஜம்புகேசுவரம் என்பது திருவானைக்கா; திருச்சிக்கு அருகிலுள்ள தலம்; (பஞ்சபூதத் தலங்களில் அப்புத்தலம்) ; இறைவன் திருப்பெயர் ஜம்புகேசுவரர் என்று திருமுறைப் பதிப்புக்களில் காணப்பெறும். ஆனால் மோடி ஆவணக் குறிப்பில் ஜம்புநாதசுவாமி என்றிருக்கிறது. இத்திருக்கோயிலுக்கும் மொயின் ஆண்டொன்றுக்கு ரூ. 354—3—10 கொடுக்கப்பட்டு வந்தது[109].

வைத்தீசுவரன்கோயில் வைத்தியநாத குடி என்று மோடி ஆவணக் குறிப்பில் காணப்படுகிறது; (குடி—கோயில்). 1787க்குரிய ஆவணமொன்று இக் கோயிலுக்கு அமர்சிங்கு காலத்தில் ஆண்டுதோறும் 5400 சக்கரம் கொடுக்கப்

---

103. விளக்கி எழுதியவர்கள் மேலே அடிக்குறிப்பு 100, 101இல் கண்ட உயர்திரு ஜி. ஆர். தட்சிணாமூர்த்தி அவர்கள் ஆவர்.

104. ச. ம. மோ. த. 19-39

105. ஆவணக்குறிப்பில் க்ஷீரபுரீசுவரர் என்றுள்ளது

106. ச. ம. மோ. த. 5-46.

107. ச. ம. மோ. த. 20-6

108. ச. ம. மோ. த. 19-15 ; 28-47 ;

109. ச. ம. மோ. த. 1-17 ; 18-20

பெற்றதாகக் கூறுகிறது[110]. 1814இல் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு "ஆனந்த வல்லி" எனப் பெற்ற ஒரு யானைக்குட்டி கொடுக்கப்பெற்றது.[111]

திருமயிலாடி என்பது கொள்ளிடம் புகைவண்டி நிலையத்துக்கு அடுத்த ரயிலடி. இங்குள்ள கோயில் ஏகோஜி காலம் முதற் கொண்டு இருந்த கோயில் என்றும், இதற்குக் கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்றும், ஒரு விண்ணப்பம் உள்ளது; இது 1809க்குரியது.[112]

திருநள்ளாறு; இது ஏழு விடங்கத் தலங்களுள் ஒன்று; சனீச்வரருக்குரிய சிறந்த தலம்; இங்கும் 1766இல் திருத்தேர்த் திருவிழா நடைபெற்றது.[113]

திருவண்ணாமலை; இது பஞ்சபூதத்தலங்களுள் ஒன்று; இங்குக் கோயில் கொண்ட பெருமானுக்குக் கார்த்திகைத் திங்களில் நடைபெறும் பெருவிழா மிகச் சிறப்புடையது. இது பல ஆவணங்களில் குறிக்கப் பெறுகிறது.[114]

திருப்பதிக்கு ஆண்டுதோறும் சப்பரம் எடுத்துச் சென்று திருப்பிக் கொண்டு வரப்பெற்றதாகப் பல குறிப்புக்கள் உண்டு.[115] இத்தலத் தொடர்பான செய்திகள் சில இரண்டாம் சரபோஜி தலயாத்திரை என்ற தலைப்பிற் காணலாம்.

மதுரையில் அருள்மிகு சுந்தரேசப் பெருமானுக்கு நாகாபரணம் செய்ய 1352 சக்கரம் செலவு செய்யப்பெற்றது;[116] சுஹர்சன் ஆண்டு 1217இல் அளிக்கப் பெற்றது;[117] அதாவது கி. பி. 1816. இதுபற்றி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் உதவி ஆணையர் / செயல் அலுவலர் அவர்கட்கு மடல் எழுதியபொழுது,

" .................. நாகாபரணத்தில் கீழ்க்கண்டபடி வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. அந்த வாசகத்தின்படி[118] மொழி பெயர்த்துப் பார்த்ததில் "தஞ்சாவூர் சத்ரபதி சரபோஜி மகாராஜா உபயம் சாலிவாகன சகம் 1739 ஈஸ்வர சம்வத்சரம் என்று உள்ளது"

என்று பதில் வந்தது. சகம் 1739 என்பதுடன் 78 ஆண்டுகள் சேர்ப்பின் ஆங்கில ஆண்டு வரும். சகம் 1739 என்பது கி. பி. 1817 ஆகும். எனவே 1816–17இல் மதுரை அருள்மிகு சுந்தரேசுவரர் கோயிலுக்கு நாகாபரணம் அளிக்கப்பெற்றது என்று கருதலாம்.

---

110. 3-178 111. 2-259. 112. 4-360 113. ச. ம. மோ. த. 15-8
114. ச. ம. மோ. த. 19-42 115. ச. ம. மோ. த. 23-48. 116. 5-308
117. சுஹர்ஸன் ஆண்டுடன் 599 சேர்த்தால் ஆங்கில ஆண்டு வரும்
118. "தஞ்சாவூரசே சத்ரபதீ சரபோஜி மஹாராஜயாஞ்சே உபயம் சாலிவாஹன சக 1739 ஶே ஈச்வர ஸம்வத்சர" – இங்ஙனம் படியெடுத்து அனுப்பிய செயல் அலுவலர் அவர்கட்கு நன்றி.

மதுரையில் மீனாட்சியம்மனுக்குத் திருவாசலுக்குத் தங்க முலாம் செய்து கொடுத்ததாக ஒரு குறிப்பு உள்ளது ;[119] காலம் தெரியவில்லை.

திருவரங்கம் அரங்கநாதப் பெருமானுக்கு ஆண்டுதோறும் அரண்மனையிலிருந்து அகண்ட தீபம், துளசியருச்சனை, நைவேத்தியம் ஆகியவை நடந்து வந்தனவாதல் வேண்டும்.[120]

இராமேசுவரம் மராட்டிய மன்னர்தம் கொடைகள் பலவற்றைப் பெற்றிருத்தல் வேண்டும். 1779இல் இராமேசுவரத்தில் அருள்மிகு இராமநாதப் பெருமானுக்கு வில்வார்ச்சனை செய்யவும், கோதண்டராமசுவாமிக்குத் துளசியருச்சனைக்குமாக 330சக்கரங்கள் செலவு செய்யப்பெற்றன[121]. அவ்வப்பொழுது மன்னர்கள் இராமேசுவர யாத்திரை செய்தனர்; சத்திரங்களில் உணவு அளித்தனர்; பலருக்கும் யாத்திரை செய்ய உதவி அளித்தனர்.

வடநாட்டுத் தலங்களுள் பூரி ஜகந்நாதம்[122] என்ற தலத்தில் ஜகந்நாத சுவாமிக்கு நாடோறும் நிவேதனம் செய்ய ஆண்டுதோறும் ரூ. 800 அனுப்பப் பெற்று வந்தது.[123] 20—1—1821க்குரிய குறிப்பினால்[124] நாடோறும் ரூ. 2 செலவில் இறைவனுக்கு நிவேதனம் செய்து அந்த நிவேதனத்தைக் குருடர் முடவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும், 30—1—1821லேயே கோயில் முதன்மை அலுவலரிடம் ரூ. 720 கொடுக்கப் பெற்றது எனவும், 12 பானைகள் சோறும் பருப்பும் காய்கறிகளும் நிவேதிக்க வேண்டும் என்று திட்டம் வகுக்கப் பெற்றது எனவும் தெரிகிறது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துக்குத் தலைமை இடமாக 18, 19ஆம் நூற்றாண்டுகளில் காசிமாநகரம் திகழ்ந்தது. அங்குள்ள மடத்துக்குக் குமார சுவாமி மடம் என்பது பெயர். மராட்டிய மன்னர் காசியில் செய்ய வேண்டிய அறப்பணிகள் எல்லாவற்றையும் காசிமடத்து அதிபர்களே முன்னின்று நடத்தி வந்தனர் என்று தெரிகிறது. காசிமடத்து அதிபர்கள் "காசித் தம்பிரான்"என்றே மோடி ஆவணங்களில் குறிக்கப்பெற்றுள்ளனர். மராட்டிய மன்னர்கள் காசித் தம்பிரான் அவர்களிடம் கொண்ட தொடர்புகள் பற்றி " மடங்களும் மராட்டிய மன்னர்களும்" என்ற தலைப்பில் (31) விரிவாகக் கூறப்பெறும். சரபோஜி மன்னர் 1820-22இல் காசியாத்திரை மேற்கொண்டு 'காசித் தம்பிரான் மடத்தில்' தங்கியிருந்தார். கி. பி. 1851இல் காசியில் கேதார கட்டத்திலுள்ள அருள்மிகு கேதாரீசுவரர் கோயிலில் விளக்கு ஏற்ற 70,000 திரிகளை ஆவுசாயேப்[125]

---

119. 6-98 120. 6-98; எண் 90 (பக். 42) The Great Temple at Tanjore by J. M. S. அகண்டதீபம் ஏற்றுவதற்குரிய ஒரு பாவைவிளக்கு திருவரங்கக் கோயிலில் இருப்பதாகத் தஞ்சை அரண்மனை மூத்த இளவரசர் ராஜெஸ்ரீ ராஜாராம் ராஜா சாஹேப் அவர்கள் கூறுகிறார்கள்.

121. 5-8 122. சரபோஜி IIஇன் காசிப் பயணம்-பார்க்க

123. 4-429 ; 480; ச. ம. மோ. த. 9-10 ; 9-88 124. ச. ம. மோ. த. 6-181

125. இரண்டாம் சரபோஜியின் மனைவி; சிவாஜி IIன் தாய் ஆகலாம்

அவர்கள் அனுப்பியதோடு, விளக்குக்கு எண்ணெய் வாங்கவும், அன்று பிராமணர்கட்கு அன்னமளிக்கவும் ரூ. 125 காசித் தம்பிரான் அவர்கட்கு அனுப்பப் பெற்றது.[126] மேலும் கி. பி. 1849-50இல் சைதம்பாபாயி பெயரால் காசியில் சிவாலயம் கட்டவும் நாட்பூசைச் செலவுக்குமாகக் காசித்தம்பிரான் அவர்களிடம் ரூ. 2500 அளித்தாக ஓராவணம் கூறுகின்றது.[127]

யாழ்ப்பாணத்திலும்[127அ] மராட்டிய மன்னர்தம் தொண்டு இருந்து வந்தது. யாழ்ப்பாணத்தில் நைவேத்தியேசுவரருக்குப் பூசை நிவேதனத்துக்கு 1815இல் $31\frac{7}{8}$ சக்கரம் அனுப்பப்பெற்றதாக ஓராவணத்தில் உள்ளது.[128]

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வரிவசூல் உரிமையானது மராட்டிய மன்னரின் ஒப்பந்தப்படி கும்பினியாருக்கு உரியதாக இருந்தபோதிலும் சத்திரங்கள் பலவும் மராட்டிய மன்னர்தம் மாதேவியர்க்குரியனவாய் அவர்தம் நேர் பார்வையில் அலுவலர்கள் வழி ஆட்சி செய்யப்பெற்றிருந்தனவாதல் வேண்டும். அவ்வூர்களில் இருந்த கோயில்கள் அவ்வச்சத்திரங்கட்குரிய நிலவருமானத்தால் நடத்தப்பட்டு வந்தன. கி. பி. 1766இல் சக்வாரம்பாபுரத்தில்[128அ] ஸ்ரீசப்தபுரீசுவரருக்குப் புதிய தேர் செய்யப்பெற்றுத் தேர்த்திருவிழா நடைபெற்றது.[129] திரௌபதாம்பா புரத்தில்[130] பட்டாபி ராமசாமி அஷ்டபந்தனம் ஆடியதால் அஷ்டபந்தனம் செய்யச் சத்திரம் வருவாயினின்று செலவு செய்யப்பெற்றது.[131] இராஜகுமாராம்பாபுரத்தில்[132] கி. பி. 1778-79இல் ஒரு புதிய கோயில் எடுப்பிக்கப்பெற்றது; அருள்மிகு கல்யாணராமசாமி எழுந்தருள்விக்கப்பெற்று நாட்பூசை முதலியவற்றுக்காக ஆண்டொன்றுக்கு 2100 சக். மொயின் செய்து வேளாம்பத்து என்ற ஊர் அளிக்கப்பெற்றது.[133] யமுனாம்பாபேட்டை[134] கோதண்டராமசாமிக்கும் 50 சக்கரம் 8 பணம் கொடுக்கப்பெற்றது.[135] யமுனாம்பாபுரம் காசிவிசுவநாதசுவாமி கோயில் கோபுரம் பழுதடைந்துவிட்டது. கோபுரத்தைப் பழுது பார்க்கவும், பரிவார தேவதைகளை அமைக்கவும் ஆகும் செலவு சத்திரத்துக்குரிய பொருளினின்று செலவு செய்யப்பெற்றது.[136] மேற்சொன்ன ஊரில் அருள்மிகு சந்தான ராமசாமி கோவில் கருடசேவை பற்றி ஒரு குறிப்பு உள்ளது.[137]

---

126. 1-188 ; ச. ம. மோ. த. 27-14 127. 4-888, 889, 868

127அ. யாழ்ப்பாணத்துடன் முத்துசாமி என்பவர் வழி 1815இல் வாணிபத் தொடர்பு இருந்தது (ச. ம. மோ. த. 46-45 )

128. 2-119 ச. ம. மோ. த. 46-45 128அ. சக்வாரம்பா : பாவாசாகேப் என்கிற ஏகோஜி IIஇன் ஆறு மனைவியர்களில் ஒருவர் ( போன்ஸ்லே வம்ச சரித். பக். 81 )

129. ச. ம. மோ. த. 15-2 130. திரௌபதாம்பா – பிரதாபசிங்கரின் மனைவி ; துளஜாவின் தாய் ( மேற்குறிப்பிட்ட புத்தகம் பக். 82 ; 116 ) 8-117 பார்க்க

131. ச. ம. மோ. த. 8-10 132. ராஜகுமாரம்பா-துளஜாவின் மனைவிகளுள் ஒருவர்

133. 1-195 ; 4-63, 64 134. யமுனாம்பா-பிரதாபசிங்கரின் மனைவி 130 போல

135. ச. ம. மோ. த. 1-9 கோதண்டராமசாமிக்கு மட்டும் சக். 80 ( 5-298 )

136. ச. ம. மோ. த. 8-9 137. 4-85

மராட்டிய மன்னர் சைவ வைணவ ஆலயங்களுக்கு வேறுபாடின்றி உதவி வந்தமையும் புரந்து வந்தமையும் இதுகாறும் கூறியவற்றான் நன்கு அறியப்பெறும்.

இரண்டாம் சரபோஜி காலத்தில் நீலகண்ட குலால நாடகம் போன்ற நூல்கள் சிவனடியார்கள் பற்றி எழுந்தபோதிலும், சைவநாயன்மார் வழிபாடு பற்றித் தெளிவாகக்கூறும் மோடி ஆவணக் குறிப்பு யாதொன்றும் கிடைக்க வில்லை. எனினும் பன்னிரு ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் பற்றி ஒரு குறிப்புள்ளது. அது[139] "திரிணகிரி கல்யாண ரங்கநாதர் திருமங்கையாழ்வார் கார்த்திகை மாசம் உற்சவம் துவஜாரோகணம் குதிரை வாகனம் புஷ்ய தேர்த் தீர்த்தவாரி முதலான உத்ஸவ விவரங்கள்" என்பதாகும்.

இதில் திருணகிரி என்பது சீர்காழிக்கு அண்மையிலுள்ள திருவாலி திரு நகரி என்ற வைணவத் தலமாகும். இத்திருநகரியில்தான் திருமங்கையாழ்வார் தோன்றினார். கார்த்திகை மாசத்தில் கார்த்திகை விண்மீன் திருமங்கை யாழ்வாரின் பிறந்த நாள்மீனாகும். இவ்வாழ்வாரின் திருநாள் திருநகரியில் நடத்தப்பெற்றது.

மிகுந்த தெய்வ நம்பிக்கையும் பற்றும் உடையவராய் இருந்தமையின் மராட்டியர்கள் இறைவனுக்கு அர்ச்சனைகள் சிறப்புறச் செய்வித்தனர். பெரிய கோயில் சுவாமிக்கு லக்ஷம் எருக்கம்பூ; கொங்கணேசுவர சுவாமி கோயிலில் சனீசுவரருக்கு இலக்ஷம் செம்பரத்தம்பூ; ஸ்ரீபிரதாப வீர அனுமாருக்கு இலக்ஷம் துளசி; இங்ஙனம் பல.[140]

கோயில் திருவிழாவில் மண்டகப்படி அரசமாதேவியரும் பிறரும் செய்து வந்தனர். அருள்மிகு பிரஹதீசுவரருக்கு 1779இல் பூத வாகன மண்டகப்படி நடத்தியவர் திரௌபதீபாயி ஆவர்; யானை வாகன மண்டகப்படி நடத்தியவர் ராஜஸ்பாயி; விருஷப வாகன மண்டகப்படி நடத்தியவர் ராஜகுமாராபாயி. இவர்களுள் திரௌபதீபாயி பிரதாபசிங்கின் மனைவியாவர்; மற்ற இருவரும் பிரதாபசிங்கின் மகன் ஆகிய துளஜாவின் மனைவியர் ஆவர்[141].

கோயில்களைப் பரம்பரையாகப் பரிபாலனம் செய்யும் உரிமையுடைய வர் "ஸ்தானிகர்" எனப்பெறுவர். இத்தகைய தானிகர் சில கோயில்களுக்கு இருந்தனர் எனத் தெரியவருகிறது:—

"பிரகதீஸ்வரர் கோயில் ஸ்தானிகர் ஆறுமுகம் பிள்ளை"[142]

"கீழவாசல் சிங்கப்பெருமாள் கோயில் ஸ்தானீகர் கோபாலய்யங்கார்"[143]

"கருந்தட்டான்குடி கோயில் ஸ்தானீகர் கொடுத்த மனு"[144]

என்பன இதனை வலியுறுத்தும்.

---

139. ச. ம. மோ. த. 7–9 140. 2-165, 166;
141. போன்ஸ்லே வம்ச சரித்திரம், (தமிழ்) பக்கம் 7; 125; 109
142. ச. ம. மோ. த. 6–9 143. 6-106 144. 5-488

கி. பி. 1779க்குரிய சில ஆவணங்கள் கோயில் திருவிழாவுக்கு அளிக்கும் உதவித் தொகையை 4இல் ஒரு பங்கு குறைத்து அளித்ததாகக் கூறும்.

"பிரகதீசுவர சுவாமி திருநாளுக்காக மொயின் 1700 சக்கரம். இதில் 4இல் ஒரு பங்கு கழித்துக் கொண்டு மிகுதி ¾ கொடுத்த வகையில் 1275 சக்கரம்"[145]

"பிரசன்ன வெங்கடேசுவர சுவாமிக்கு ......... மாதம் ரபிலாகர் சித்திரை மாதம் தேர்த்திருவிழா திருநாள் குறித்துத் திருநாள் மான்யம் சக்கரம் 80; இதில் சென்ற வருஷம் 4இல் ஒன்று வஜா செய்து ¾ பங்கு கொடுத்த வழக்கப்படி தொகை 60 சக்கரம்".[146]

"பிரதாப்வீரஹனுமாருக்கு மாசிமாதம் தேர்த்திருவிழா வழக்கப்படி சக்கரம் 280இல் 4இல் 1தள்ளுபடி செய்து மிகுதி 210 சக்."[147]

"கொங்கணேசுவரர் தேர்த்திருவிழா, திருநாள் மொயின் வருஷ வழக்கப்படி 280 சக். இதற்கு மேற்கண்ட வருஷம் 4இல் 1 பங்கு கழித்துக்கொண்டு கொடுத்த சக். 210".[148]

இங்ஙனம் 4இல் ஒரு பங்கு குறைத்துக் கொடுத்தமைக்குரிய காரணம் ஊகித்தறியற்பாலது[149]. 17—9—1773இல் தஞ்சைக் கோட்டையைக் கும்பினியார் கைப்பற்றினர். துளஜா மன்னரும் அவரது தானைத்தலைவர் மானாஜியும், பிற அரசியல் தலைவர்களும் சிறைப்படுத்தப்பட்டனர். பல லக்ஷம் மதிப்புள்ள நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. தஞ்சைத் தரணி நவாபுக்கு அளிக்கப் பெற்றது. நவாபின் ஆட்கள் குடிமக்களைக் கசக்கிப் பிழிந்தனர். கும்பினியாரின் செயலுக்கு மேலிடத்தார் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆகவே கி. பி. 1776இல் கும்பினியார் துளஜாவை அரசு கட்டிலில் அமர்த்தினர். கி. பி. 1776இல் கும்பினியாருக்கும் துளஜாவுக்கும் ஒரொப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி கோட்டையில் வெள்ளையரின் நிலைப்படை அமைக்கப்பெற்றது. அந்நிலைப்படையின் செலவுக்காக மன்னர் ஒரு லக்ஷம் வராகன் கும்பினியாருக்குக் கொடுக்கவேண்டியதாயிற்று. இங்ஙனம் நிலையற்ற ஆட்சியும் செலவுப் பெருக்கமும் தோன்றியமையின் மன்னர் வழக்கமான செலவுகளில் ஓரளவு குறைக்கவேண்டியதாயிற்றுப் போலும்!

தேர்த்திருவிழா பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் நடைபெற்று வந்தது. இதுபற்றிப் பல ஆவணக் குறிப்புக்கள் உண்டு.

---

145. ச. ம. மோ. த. 13-17   146, 147. ச. ம. மோ. த. 18-18

148. ச. ம. மோ. த. 18-19

149. Maratha Rule in the Carnatic by C. K. Srinivasan, Pages 302 to 306 (அடிக்குறிப்பு 51 காண்க)

திருவலஞ்சுழி வெள்ளைப் பிள்ளையார் தேரிழுக்க 1769இல் 2450 பேர்[150] திருவையாறு பஞ்சநதீசுவரசுவாமி தேரிழுக்க 1794இல் 2360பேர்[151]. 1797இல் 3160; இவ்வளவுபேரும் பல ஊர்களினின்று அனுப்பப்பெற்றனர்;[152] அருள்மிகு பிரகதீசுவரசுவாமி தேர்த்திருவிழாவுக்கு 1776இல் பல ஊர்களினின்று 20,200 பேரும்[153] கி. பி. 1818இல் 27,394 பேரும் வருவிக்கப் பெற்றனர்[154]. திருவாரூர்த் தியாகராசப்பெருமான் தேரிழுக்க 5,000 பேர்[155] திருவிடைமருதூர்த் தேரிழுக்க 6000 பேர்.[156]

கோவில்கள் பழுது அடையின் பழுது பார்த்தும், கோயில் மூர்த்திக்குரிய அஷ்டபந்தனம் வலிமை குறையின் அஷ்டபந்தனம் செய்தும் கும்பாபிஷேகம் செய்வது மரபு. மராட்டிய மன்னர் பல கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்வித்தமைக்குப் பல குறிப்புக்கள் உள்ளன. 1779க்குரிய குறிப்பு ஒன்று தஞ்சாவூர்க் கோட்டை தேவஸ்தானத்தைச் சேர்ந்த நான்கு சிவ விஷ்ணு ஆலயங்கள் 800 சக். செலவில் கும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றன என்று தெரிவிக்கிறது.[157] தஞ்சைப் பெரிய கோயிலில் 1803இல் பிள்ளையாருக்கும், 133 சிவலிங்கங்களுக்கும், சுப்பிரமணியருக்கும், சண்டேசுவரருக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றதாகத் தெரிகிறது.[158] வேறொரு குறிப்பால்[159] கி. பி. 1843இல் பிரகதீசுவரருக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றதென அறியலாம். கி. பி. 1833இல் தெற்குவீதி காசிவிசுவநாத சுவாமிக்கு 100 சக். செலவில் கும்பாபிஷேகம் நடந்தது. அன்று 509 பிராமணர்களுக்கு உணவு அளிக்கப் பெற்றது.[160] கருந்தட்டாங்குடியிலுள்ள ஆனந்தவல்லி தஞ்சாபுரேசுவரருக்கு கி. பி. 1821இல் குடமுழக்கு விழா நடைபெற்றது.[161]

கி. பி. 1801இல் திருவையாறு பஞ்சநதீசுவரசுவாமிக்கு மகாபிஷேகம் நடத்தச் சக்கரங்கள் 10 செலவிட்டதாக ஒரு ஆவணம் கூறுகின்றமையின் 1801இல் பஞ்சநதீசுவரர் கோவில் கும்பாபிஷேகம் நடந்திருத்தல் கூடும்.[162]

" கும்பகோணம் ஆதிகும்பேசுவரர் கும்பாபிஷேகம் ஆகி 43 வருஷங்கள் ஆயின ; ஆகையால் கர்ப்பக்கிருகத்தின் மேல்மண்டபத் தளவரிசை வகையரா சிதலமாகி இருப்பதாலும், அம்மனுடைய கலசம் திருட்டுப் போயிருப்பதாலும், ஜீர்ணோத்தாரணம் செய்யத் திருப்பணிக்கு 5000, கும்பாபிஷேகத்துக்கு ரூ. 5000 வேண்டி இருக்கிறது. நாகூர் வகையரா வியாபாரிகளிடம் இருந்து யாசகம் செய்தது ரூ. 2000 என்றும்,[163]

---

150. *ச. ம. மோ. த.* 28-88 151. 1-145 152. *ச. ம. மோ. த.* 28-88
153. *ச. ம. மோ. த.* 28-90 154. 4-111, 112. 155. 1-145
156. 1-146 இவ்விரு கோயில்களிலும் உள்ள தேர்களில் திருவாரூர்த்தேர் சீக்கிரையாகி விட்டது ; திருவிடைமருதூர்த் தேர் பழுதாகிவிட்டது
157. 2-805, 806 158. 1-56 ; *ச. ம. மோ. த.* 24-17
159. 8-189 160. 1-292 161. *ச. ம. மோ. த.* 6-9
162. *ச. ம. மோ. த.* 1-10 163. 4-255, 256

"கும்பகோணம் கும்பேசுவரசுவாமி கும்பாபிஷேகத்துக்குக் கம்பெனி ரூ. 350" என்றும்,[164]

— காணும் குறிப்புக்களினின்று கி. பி. 1800லும், கி. பி. 1843லும் கும்பேசுவரசுவாமிக்குக் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன என்றறியப்பெறும்.

கும்பகோணம் சாரங்கபாணிக்கு[165] 1842லும், கும்பகோணத்துக்கு அருகிலுள்ள சாக்கோட்டை அமிருதகலசசுவாமிக்கு 1795லும்,[166] சுவாமிமலை சுவாமிநாதசுவாமிக்கு 1852லும்,[167] திருவிடைமருதூரில் 1846லும்[168] கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. திருவிடைமருதூர்க் கும்பாபிஷேகத்துக்குக் கும்பகோணம் கும்பேசுவரர் கும்பாபிஷேகத்துக்கு அளித்ததுபோல் ரூ. 350 அளிக்கப்பெற்றது.[169] நாகப்பட்டினம் நீலாயதாக்ஷி அம்மனுக்கு 1826லும்[170] வேதாரண்யத்தில் 1819லும்,[171] கும்பாபிஷேகத்துக்குப் பொருளுதவி செய்யப் பெற்றுள்ளது.

மதுரை ஸ்ரீமீனாட்சி அம்மன் கும்பாபிஷேகத்துக்கு 2030 ரூபாயும்,[173] உற்சவமூர்த்தி ஜடிபந்தனத்துக்கு[172அ] 1000 ரூபாயும் அளிக்கப் பெற்றன.[173] கும்பாபிஷேகம் 1849–50லும், ஜடிபந்தனம் 1854லும் நடைபெற்றனவாதல் கூடும்.

இங்ஙனம் மராட்டிய மன்னர்தம் கோயில் பணிகள் குறிப்பிட்டு அறியத் தக்கனவாய் மிகச் சிறப்பாய் அமைந்துள்ளன என்னலாம்.

தேவஸ்தானம் ஊழியர்களுக்கு "ஸ்ரீராம பிரஸாத்" என்று எழுதப் பெற்ற பித்தளை வில்லைகள் 1796இல் அளிக்கப்பெற்றன. அதில் தஞ்சாவூர்க் கோட்டை தேவஸ்தான சேவகன் என்று எழுதப்பெற்றது.[174]

கோவிலில் விளக்கு ஏற்றுவதற்கு நெய் எண்ணெய் ஆகியவை கொட்டியத்தினின்று எடுத்துச் செல்கையில் எடுத்துச் செல்பவருடன் அரண்மனையினின்று ஓராள் சென்று கோயில் எண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றுகின்றனரா என்று பார்க்கவேண்டும் என்றும் ஓர் ஆணை இருத்தலை ஓர் ஆவணம் உணர்த்துகிறது.[175]

கோவிலுக்குத் "தஸ்தூரி வரி" என்றொரு வரி விதிப்பதும் உண்டு. கோயிலுக்கு அருகில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு வழக்கமாக விதிக்கப்படும்

---

164. ச. ம. மோ. த. 3–9. 165. 2–279 166. 1–6
167. 1–122; ச. ம. மோ. த. 25–89 168, 169. ச. ம. மோ. த. 8–89
170. 4–251, 429 171. 1–156 (1819 என்றுளது) ச. ம. மோ. த. 24–12 (1801 என்றுளது)
172. 1–166; ச. ம. மோ. த. 30–45
172அ. ஜடிபந்தனம் – உற்சவமூர்த்தியைப் பீடத்தில் பதியவைக்கும் சடங்கு
173. ச. ம. மோ. த. 5–10; 6–88 (தேதிகளில் தவறுகள் உண்டு)
174. ச. ம. மோ. த. 4–11 175. ச. ம. மோ. த. 4–4

வரி "தஸ்தூரி வரி" என்று அழைக்கப்பட்டதாதல் வேண்டும்.[176] இந்த வரியுடன் கடைக்கும் வாடகைப் பணம் வசூலிப்பர். "கோவிலுக்குத் தஸ்தூரி வரி கடைக்கு வரிப்பணம் மீ"க்கு, 4, 2 பணம் வீதம் கொடுத்துக் கொண்டு" என்பதால் தஸ்தூரி வரி கடையை வைத்து வியாபாரம் செய்பவர் கடை வாடகைக்கு வேறாக அரசுக்கு வியாபார வரி செலுத்த வேண்டியிருந்தது என்றறியப்பெறும். வியாபாரம் செய்வோர் தரும் வரியே "தஸ்தூரி வரி" எனப் பெற்றது.

மராட்டிய மன்னர்களும் சிறு சிறு கோயில்கள் எடுப்பித்தனர் என்று முன்னர்க் கூறப்பட்டது. அன்னோர் அவற்றுக்குத் தேவைப்பட்ட கருங்கற்களை எங்கிருந்து கொணர்ந்தனர் என்பதை அறிய ஓராவணம்[177] துணை செய்கிறது. திருவண்ணாமலை, வடாற்காடு மாவட்டம் விரிஞ்சிமலை ஆகிய மலைகட்குச் சென்று தெய்வத் திருவுருவங்கள் செய்தற்குக் கற்களைக் கொணர்ந்தனர் என்று அவ் ஆவணக்குறிப்பால் அறியப்பெறும்.[178]

திருவலங்குறிச்சி, துறையூர் ஆகிய மலைகளிலிருந்தும் கற்கள்கொண்டு வருவதுண்டு என்று இருகுறிப்புக்களில் காணப்பெறுகிறது.[178அ]

தஞ்சை மராட்டிய மன்னர்கள் சமயப்பொறை மிக்குடையராய்த் திகழ்ந்தனர்; பிற சமயத்தவர்க்கு வேண்டிய ஆதரவுகளும் அளித்து அச்சமயங்களையும் புரந்து வந்தனர்.

பிரதாப சிங்கர் 1739இல் அரசரானவர்; இவர் 1740இல் நாகூருக்குச் செல்கிறபொழுது வழியில் "வடயாரங்குடி"க்கு அருகில் "பாவாசாகேப்பின் தர்க்கா" மசூதி குளம் மண்டபம் இவை பற்றி விண்ணப்பம் அளிக்கப்பெற்றது. அதில் தீபாநகரப் பேட்டை சுங்கத்தின்று ஒரு காசு வீதம் அளிக்கவேண்டும் என்று வேண்டுகோள் இருந்தது. அரசர் அங்ஙனமே தருக என ஆணை பிறப்பித்தார்.[179]

துளஜா ராஜா 1765இல் அரசரானார். இவர் கி. பி. 1776இல் மகம்மது ஸேக்குக்கு மன்னார்குடிக்குச் செல்லும் வழியில் "காகிதத்தின் மூட்டைகளின் குப்பைக்கு[180] அருகில் 12அடிக்கோலினால் 2 வேலி நிலம் இனாம் கொடுத்தார்.[181]

---

176. 6-157, 159 (தஸ்தூர் – Custom, usage; வழக்கம்) 177. ச. ம. மோ. த. 9-87

178. திருச்சியினின்று கருங்கற்களைக் கொணர்வதுண்டு என்று தமிழ்ப்பல்கலைக் கழகக் கல்வெட்டுத்துறை இணைப்பேராசிரியர் ஆக இருந்த டாக்டர் சி. ஆர். சீனிவாசன் அவர்கள் கூறினார்கள்; திருவக்கரையினின்று கொணரலாம் என்று திருவாரூர் திரு ஆமாத்தூர்த் திருமடத்து அடிகளார் கூறினார்கள். அவிநாசி திருமுருகன் பூண்டி ஆகிய தலங்களுக்கு அருகிலுள்ள கற்களும் பயன்படுவதுண்டு என்று அன்பர் திரு நாகராசன் கூறினார். 178அ. ச. ம. மோ. த. 18-88, 99

179. ச. ம. மோ. த. 14-45 180. காகிதப்பட்டறை போலும். 181. 5-802, 808

கி. பி. 1776இல் துளஜாராஜா தங்கத்திலும் வெள்ளியிலும் ஆக 34 அல்லாக்களும், தங்கக் குடைகள் இரண்டும் செய்தார் என்றோர் ஆவணக் குறிப்பால் அறியப்பெறும்.[182]

கி. பி. 1773இல் மல்லிம் சாஹேப் என்பார் கடைவீதியில் கோட்டையின் பக்கம் ஒரு மசூதி கட்டினார். அந்த மசூதியை நடத்துவதற்கும் ஃபக்கீர்களுக்கு உணவு அளிக்கவும், சாலியமங்கலம் வட்டத்தில் கடதம்பட்டு என்ற ஊரில் 10229 குழிகளும், வல்லார்பட்டு என்ற ஊரில் 2419 குழிகளும், ஆக 12648 குழிகள் இனாமாக அளிக்கப்பெற்றன.[183] அங்கு ஓர் ஊர் அமைத்து "முகமதுபுரம்" என்று பெயரிடப்பட்டது.

கி. பி. 1785இல் திருப்பூந்துருத்தியில் 1963 குழி நிலமும், மரஞ்செடி கொடி வகைகளில் நிலம் ¼ வேலி 3¼ மா ஹிஸ்லேக்மல் என்ற ஃபக்கீருக்கு இனாம் அளிக்கப்பட்டது.[184]

சூலமங்கலத்தில் 2¾ வேலி நிலம் 700 சக்ரம் கொடுத்து விலைக்கு வாங்கி அங்கு 'தர்கா' அமைக்கப்பட்டது. அதனைச் சர்க்கார் ஜப்தி செய்தனர். அந்த 'தர்கா'வை ஜப்தியிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று 1787இல் ஹஸன்ஸா ஃபக்கீர் வேண்டிக்கொண்டவண்ணம் ஆணை பிறப்பிக்கப் பட்டது.[185]

இங்ஙனம் மராட்டிய மன்னரிடம் நிலக்கொடைகள் பெற்ற தர்காக்கள் பலவாதல் கூடும்.

அல்லாப் பண்டிகைக்காக மன்னர் எல்லா தர்காக்களுக்கும் போய் வருதலுண்டு; அங்ஙனம் போகுங்கால் இனாம் அளிப்பதுண்டு;[186] அல்லாப் பண்டிகை நடத்தவும் நன்கொடை அளிப்பதுண்டு[187].

"அல்லாப் பண்டிகைக்கு பகீர்களுக்குக் கொடுப்பதற்காக மாதுஸ்ரீ ஆவுசாயேப் ரூ. 30; சைதம்பாபாயி சாகேப் ரூ. 30; காமாட்சியம்பா பாயி சாகேப் ரூ. 25; சுலக்ஷணபாயி அமணி ராஜேசாகேப் ரூ. 10; சக்வாரம்பா பாயி அம்மணி ராஜே ரூ. 10; ஆக 105"

என்ற ஆவணக்குறிப்பால்[188] அரசமாதேவியரும் சமயப்பொறையுடையவர்களாய் அல்லாப் பண்டிகைக்கு நன்கொடை அளித்தனர் என்பது போதரும்.

அப்தர் கானாவில்[189] ஒரு அல்லா வைப்பதற்கு 'லாடு' வாங்கிய வகையில் ரூ. 150 என்ற குறிப்பாலும்[190] 'அல்லாப் பண்டிகைக்காக அப்தர்கானாவில்

182. 1-154
183. ச. ம. மோ. த. 14-48
184. ச. ம. மோ. த. 14-45
185. ச. ம. மோ. த. 14-41
186. 2-88, 85, 86; 4-286
187. 1-124; 4-209; 2-281; 2-266
188. ச. ம. மோ. த. 8-9
189. தண்ணீர் தேக்கும் இடம்.
190. 1-120.

அல்லா வைக்கிற இடத்தில் ஹிந்துஸ்தானி சேவை செய்வதற்கு டக்காவின் ஜோடியொன்றைத் தயார்செய்ய" என்ற ஆவணக் குறிப்பாலும்[191] அரண்மனையில் அப்தார்கானாவில் ஓரல்லா வைக்கப்பட்டிருந்தமை போதரும். இதில் முன்னது 1852க்கும் பின்னது 1825க்குமுரியது.

பின்னதில் "ஹிந்துஸ்தானி சேவை செய்தற்கு டக்காவின் ஜோடியொன்று" என்பதும் சிந்திக்கத்தகுவது. அல்லா வைக்கிற இடத்தில் இந்துஸ்தானி மொழியில் ஃபக்கீர் வழிபாடு செய்வர் என்றும், அப்பொழுது டக்கா எனும் இசைக்கருவி அடிக்கப்பெறும் என்றும் தெரியவருகிறது.

"1827 நாகூர் காதிர்சாயபு தர்காவுக்கு......உற்சவத்துக்காகச் சர்க்காரிலிருந்து மூடுகிற வஸ்திரத்தை வழக்கப்படி அனுப்புவதற்கு சக்கரம் 20"

என்ற குறிப்பால் நாகூர் தர்காவுக்குத் திருவிழாக்காலத்தில் ஆண்டுதோறும் ஆடை அனுப்பிவந்தனர் என்பது போதரும்[191அ].

மக்கான்தார்களுக்கும்[192] துனியாதார்களுக்கும்[193] வேறுபாட்டுணர்ச்சியேற்படுவதுண்டு. அவர்கள் தம் வழக்கை அரசரிடம் முறையிடுவர். இத்தகைய வழக்கொன்று கூறும் ஆவணம் மோடிப்பலகணியில்[194] உள்ளது. அல்லா ஊர்வலத்துக்கு அரண்மனையிலிருந்து எடுபிடிகளைக் கொடுக்கும் வழக்கம் இருந்தது[195]. நாகூர் காதிர் சாயேப் தர்காவுக்கு நகரா வாத்தியம் செய்து அளிக்கப்பட்டது[196]. அல்லாவைத் திருவிழா 9ஆம் நாளில் ஊர்வலம் செய்வதற்கு கி. பி. 1834இல் தங்கத்தேர், வெள்ளித்தேர், யானைத்தந்தத்தேர் பெரியது, சிறியது, சங்கீதத்தேர் ஆக ஐந்து தேர்கள் வழங்கப்பெற்றன[197]. இங்ஙனம் அல்லாப்பண்டிகை காலத்தில் நன்கொடைகளும் தேர் முதலியனவும் அளித்து முகமதிய சமயத்தாரின் நன்மதிப்பையும் ஆதரவையும் மராட்டிய மன்னர் பெற்றிருந்தனர்.

அரசர் ஆதரவு பெற்றிருந்தபோதிலும் மக்களுக்குள் வேறுபாட்டுணர்ச்சி நிலவாமல் இல்லை. ஓரிரு சமயங்களில் சச்சரவுகள் நிகழ்ந்தனவாதல் வேண்டும்.

"கி. பி. 1769: கும்பகோணத்தில் காவேரியின் கரையில் ஒரு துலுக்கர் பிள்ளையார் சதுர்த்தி தினம் கற்களை எறிந்ததனால் ஒரு பிராமணனுடைய தலை உடைந்து அபாயம் நேரிடும்படியாக இருந்ததனால் அவருக்கு அபராதம் 3 பணம்"[198]

—என்ற குறிப்பினால் சிறு சச்சரவுகள் நிகழ்ந்திருக்கலாம் என்றும், அரசு தண்டனை விதித்தது என்றும் அறியப்பெறும்.

---

191. 4-448 191அ. 2-277 192. மேற்பார்வையாளர்
193. எதிரிகள்; சமயப்பற்றில்லாதவர் 194. 6-171 முதல் 181 வரை
195. 2-260, 261 196. 2-271 197. 1-287, 288 198. 2-28

கிறித்தவருடன் தொடர்பு பற்றிய ஆவணக் குறிப்புக்கள் சிலவே. துளஜா அரசர் சரபோஜி அரசரை ஸ்வார்ஷ் பாதிரியார் ஆதரவில் விட்டிருத்தார் என்றும், ஸ்வார்ஷ் பாதிரியாரிடத்தில் சரபோஜி மிக்க அன்புடன் இருந்தார் என்றும், அப்பாதிரியார் படுத்த படுக்கையில் இருந்தபொழுது அவரைத் தான் பார்ப்பது போன்று ஒரு படிவம் தஞ்சாவூர் ஸ்வார்ஷ் மாதாகோவிலில் சரபோஜி II அமைத்தார் என்றும் சொல்லப்படுகிறது. சிவகங்கைப் பூங்காவிலுள்ள ஸ்வார்ஷ் சர்ச்சு என்ற கிறித்தவ தேவாலயம் சரபோஜியின் உதவியால் எடுப்பிக்கப்பெற்றது என்று ஓராசிரியர் கூறுவர்.[199] ஆனால் அது கி. பி. 1779இல் ஸ்வார்ஷ் பாதிரியாரால் எடுப்பிக்கப்பட்டது என்று தஞ்சை ஜில்லா கெஜட்டியரில் சொல்லப்பட்டுள்ளது.[200] ஸ்வார்ஷ் பாதிரியின் வரலாற்றுக் குறிப்பு என்ற நூல் 10—3—1779இல் அந்தக்கோயில் எடுப்பிக்க அடித்தளம் போடப்பெற்றது என்று கூறும்.[201] சரபோஜி II 1798இல் அரசு எய்தினர்; எனவே அதனைச் சரபோஜி அமைத்தார் என்பது பொருந்தாது.

சரபோஜி மன்னர் கிறித்தவரிடத்து அன்பாக இருந்தமை மிகத் தெளிவாகத் தெரிகிறது. கி. பி. 1811இல் மருதப்ப மேஸ்திரி என்பவரைத் தரங்கம்பாடிக்கும் நாகப்பட்டினத்துக்கும் அனுப்பிக் கிறித்தவக் கோயிலின் மாதிரியைப் பார்த்துவரச் செய்தார்.[202]

தரங்கம்பாடியில் இருந்த மேஸ்தர் ஜ்யான் பாதிரி ஒரு ( ஆங்கிலப் ) பள்ளி நடத்திவந்தார். அதை நடத்துவதற்கு மாதம் 1க்கு 20 புலி ஹொன்னம் கொடுத்ததாக 1819க்குரிய ஒரு ஆவணக்குறிப்பும்[203], ஒவ்வொரு மாதமும் ரூ. 30 கொடுத்துவந்ததாக 1846, 1853க்குரிய ஆவணக்குறிப்புக்களும் உண்டு.[204] தஞ்சாவூர்க் கோட்டையிலேயே பாதிரியாரிடம் மாதம் 1க்கு 100 கலம் வீதம் 1852 ஜூலை 1ஆம் தேதி முதல் கொடுக்கப்பட்டு வந்தது என்று வேறொரு ஆவணம் பகர்கிறது.[205] மாயூரத்திலிருந்த பர்ன்கடிக் என்பவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 200 தரப்பெற்று வந்தது.[206] இரண்டாம் சரபோஜி, இரண்டாம் சிவாஜி

---

199. " He ( Serfoji II ) commemorated his love and esteem for the Father ( Schwartz ) by constructing a Church near Sivaganga Garden, Thanjavur. The marble plaque installed in the church depicts the visit of the Raja to see the ailing father Schwartz " – P. 14, Saraswathi Mahal, R. Jayaraman,

200. " The Schwartz Church stands in the North east corner of the fort. It was founded in 1779 by Schwartz who resided principally in Tanjore from 1778 until his death " – P. 272, Tanjore Gazetteer.

201. On 10th of March 1779 the General laid the foundation stone nine feet deep – P. 341. It is built upon the plan of the church at Trichi being 90 ft. long and 50 ft, broad - P, 369, Memoirs of Schwartz by Pierson.

202. 2-44. 203. ச. ம. மோ. த. 18-34 204. 27-45 ; ச, ம. மோ. த. 28-48

205. 1-165 206. 4-251 ; ச. ம. மோ. த. 4-45

ஆகியோர் காலத்தில் கிறிஸ்துமதத்துக்கு ஆதரவும் உதவியும் அளித்தபோதிலும் மக்கள் நேசமனப்பான்மை இழந்து முரண்பட்டிருந்தமை ஒரோவழி காணப்படுகிறது. ஆகையால் ஒரு சமயம் கிறிஸ்தவர்கள் பிற சமயத்தவரோடு சமயநெறிகள் பற்றி விவாதித்துச் சண்டை சச்சரவுகள் ஏற்படுத்துவதில்லையென்றும், தம் சமயப் பிரசாரத்தில் மட்டும் தம் எண்ணத்தைச் செலுத்துவதாகவும், சண்டைகள் ஏற்படின் அரச தண்டனை ஏற்றுக்கொள்வதாகவும் உறுதி கூறினர்.[207]

மராட்டிய மன்னர்தம் சமயப் பொறுமைக்கேற்ப இந்நாளிலும் மூத்த இளவரசர் ராஜேஸ்ரீ ராஜாராம் ராஜாசாகேப் அவர்கள் தம் முன்னோர்கள் போலப் பிற சமயங்களையும் மதிக்கும் பரந்த மனப்பான்மை உடையவர்களாய்ப் படேஉசேன் தர்காவைக் காக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார்கள்.[208]

## வரைபடத்தில் கண்ட கோயில்களின் பெயர்கள்

| நிரல் எண் | கோயில் பெயர் | மோடி ஆவண வரிசை எண் |
|---|---|---|
| 1. | ஸ்வார்ஷ் சர்ச்சு | ... |
| 2. | சங்கர நாராயணா | (3) |
| 3. | கொங்கணேசுவரர் | (10) |
| 4. | காசிவிசுவநாதர் | (12) |
| 5. | சுப்பிரமணியர் | (13) |
| 6. | இராமசாமி | (33) |
| 7. | காமாட்சியம்மன் | ... |
| 8. | நவநீதகிருஷ்ணர் | (30) |
| 9. | பிரதாப வீரஹனுமார் | (23) |
| 10. | அய்யங்குளம் விசுவநாதர் | (25) |
| 11. | தெற்குவீதி விசுவநாதர் | (15) |
| 12. | எல்லம்மாதேவி | (22) |
| 13. | பிரசன்ன வெங்கடேசுவரர் | (27) |
| 14. | மதனகோபாலசுவாமி சக்கரபாணி | (29) |
| 15. | படேஉஸேன் தர்கா | ... |
| 16. | ரத்னகிரீசுவரர் | (26) |

---

207. ச. ம மோ. த 9-41

203 தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக்கருத்தரங்கு-தஞ்வுச மராட்டிய அரசர்களும் கோயில்களும்-ராஜேஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப் அவர்கள், பக்கம் 6.

தஞ்சை, கருந்தட்டான்குடி, வெண்ணாற்றங்கரையிலுள்ள கோயில்கள் இருக்கும் இடங்களைக் காட்டும் வரை



| நிரல் எண் | கோயில் பெயர் | மோடிஆவண வரிசை எண் |
|---|---|---|
| 17. | குருகுல சஞ்சீவி | (17) |
| 18. | மங்களவிலாஸ் | ... |
| 19. | கலியுக வெங்கடேஷ் | (19) |
| 20. | வரதராஜப்பெருமாள் | (28) |
| 21. | மணிகர்ணிகேசுவரர் | (18) |
| 22. | ஐந்து அங்கண மாடி | ... |
| 23. | விட்டோபா கோவில் | (21) |
| 24. | கீழசிங்கப்பெருமாள் (லக்ஷ்மிநரசிம்மர்) | (20) |
| 25. | கீழ கோதண்டராமர் | (20) |
| 26. | வெள்ளைப்பிள்ளையார் | (24) |
| 27. | நாகநாதசுவாமி | (41) |
| 28. | விஜயமண்டப தியாகராஜர் | (5) |
| 29. | காளிகாதேவி | (4) |
| 30. | படித்துறை வெங்கடேசுவரர் | (50) |
| 31. | கருந்தட்டாங்குடி சுந்தரேசுவரர் | (45) |
| 32. | வசிட்டேசுவரர் | (36) |
| 33. | சித்திவிநாயகர் | (35) |
| 34. | கோடியம்மன் | (51) |
| 35. | ஆனந்தவல்லி சுந்தரேசுவரர் | (39) |
| 36. | மேலசிங்கப்பெருமாள் | (38) |
| 37. | மணிகண்டப்பெருமாள் | (40) |
| 38. | நீலமேகப்பெருமாள் | (37) |
| 39. | வரதராஜப்பெருமாள் | (47) |
| 40 | கல்யாணவெங்கடேசர் | (46) |
| 41. | சந்தியா மண்டபம் சுந்தரேசர் | (53) |

# 16

# இசை, நாடகம், நாட்டியம்

தஞ்சை இசையின் இருப்பிடம் என்னலாம். தஞ்சை மராட்டிய மன்னர் இசையை நன்கு வளர்த்தனர். தாமே இசையில் வல்லுநர்களாய், இசை நாடக நூல்கள் வரைந்தும், இசை வல்லாரை ஆதரித்தும், நாடகங்களை நடிக்கச் செய்தும், கருநாடக இசையுடன் இந்துஸ்தானி இசையைப் போற்றியும், மேனாட்டிசையைப் புரந்தும் பல வழிகளில் இசையைப் பேணினர்.

## ஸாஹஜி

ஏகோஜி என்ற வெங்காஜியின் முதல் மகன் **ஸாஹஜி**. இவர் கி. பி. 1684 முதல் 1712 வரை ஆட்சிபுரிந்தவர். இவரை "அபிநவபோஜன்" என்று புகழ்ந்துரைப்பர்[1]. இவர் பன்மொழிப் புலவர்; 30க்கு மேற்பட்ட இசைநூல்களை இயற்றியவர்[2]. இவர் இயற்றியவற்றுள், 'பல்லகி[3] **சேவா பிரபந்தம்**'' என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

" பல்லக்கி சேவா பிரபந்த - ஸாஹஜி கிருத – கிருஷ்ண சரித்திரம் – வரி 6 வீதம் பக்கம் 36 "

என்ற குறிப்பால், இந்நூல் "விஷ்ணு பல்லகி சேவா பிரபந்தம்"[5] என்ற நூலாதல் கூடும். "சங்கர பல்லகி சேவா பிரபந்தம்" என்ற நூலும் உண்டு.[6]

" பல்லகீ சேவை " என்பது தஞ்சை மாவட்டக் கோயில்களில் பரவலாக இருந்த ஒரு வழிபாட்டு முறை. இறைவன் உலா வருங்கால் இசையுடன் நடனமும் நடைபெறும். இவற்றுக்கு இலக்கிய நடையும் இசை மேன்மையும்

---

1. பக்கம் 64, Tanjore as a seat of Music — by Dr.S. Seetha
2. பக்கம் 65 ,, ,, ,,
3. பல்லகி—பல்லக்கு 4. 12-288 5, 6, பக்கம் 72, டாக்டர் சீதா

ஊட்டினார் அரசர் என்னலாம். இவை உற்சவ சம்பிரதாயம் கொண்டவை யாகும் என்பர் திரு. விசுவநாதம்.[7] விஷ்ணு பல்லகியைக் காட்டிலும் சங்கர பல்லகி எளிமையாகவும் சிறப்பாகவும் உள்ளது என்பர் டாக்டர் சீதா அவர்கள்.[8]

" தியாகராஜ விநோத சித்ர பி ரபந்த – ஸாஹராஜ கிருத – தைலங்க – பக்கம் 380 "

என்ற குறிப்பால்[9] ஸாஹஜி, " தியாகராஜ விநோத சித்திர பிரபந்தம் " என்ற ஒரு நூலைத் தெலுங்கு மொழியில் இயற்றினார் என்றும், இந்நூல் 380 பக்கங் களையுடையது என்றும் தெரியவரும். இது ஒரு மணிப்பிரவாளப் பிரபந்தம் என்றும், இந்நாடக நூலுள் ஆறு அங்கங்கள் உண்டு என்றும், இதில் சமஸ்கிருதம் தெலுங்கு மராத்தி தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் பாடல்கள் உள்ளன என்றும் தெரிகிறது.[10]

இச்சித்திரப் பிரபந்தத்தில் காணும்,

" வாதே சாஹேசா தேவா ராதேவ ராவ தேரா "

என்ற வரி **சித்திர கவிக்கு** உரியதாம்.

திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களுள் '**மாலை மாற்று**' என்ப தொன்று. ஒரு செய்யுளை முதலிலிருந்து படிப்பினும் இறுதியிலிருந்து மாற்றிப் படிப்பினும் ஒன்று போல் வருவது மாலைமாற்று எனப்பெறும்.

" வாமாமாநீ யாமாமா யாழீ காமா காணாகா
காணா காமா காழீயா மாமா யாநீ மாமாவா "

இது மாலை மாற்றாதலைப் படித்துணரலாம். இங்ஙனம் 11 பாடல்கள் உண்டு.[11] சம்பந்தர் பாடலில் இரண்டுவரிகள் மாலைமாற்றாக அமைந்திருந்து பொருள்தர ஸாஹஜி எழுதிய பாடலில் அரைவரி மட்டும் அங்ஙனம் மாற்றாக அமைந்துள்ளது.[12]

இவரியற்றிய நாடக நூல்களுள் வேறொன்று **மிருத்துஞ்சய சிரஞ்சீவி நாடகம்**" என்பது ஆகும். இது மராத்திய மொழி ; தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்றது ; 30 பக்கங்களையுடையது.[13]

---

7. தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக்கருத்தரங்கு — திரு. விசுவநாதம் கட்டுரை
8. பக்கம் 78, டாக்டர் சீதா
9. 12-290 ( எண் 2897 )
10. பக்கம் 79. டாக்டர் எஸ், சீதா.
11. சம்பந்தர் தேவாரம்
12. The Savayapasavya Samapada Liladaru in Regupathi Raga is available in the IV Act of the opera and is worth noting :
*சேடய ராது ராயிடிசே போடிமி காநி காமிடிபா*
*வாதே சாஹேசா தேவா ராதேவ ராவதேரா*
In the above each line is conceived in such a way that the sequence of the letters remains the same and gives the same meaning if the line is reversed - Page 80-81, Dr. Seetha
13. 12-290 ( அரே 28 )

" **லக்ஷ்மி நாராயண நாடகம்** " என்பதும் இவருடையதே. லக்ஷ்மி நாராயண வருணனை ; 92 பக்கங்களில் உள்ளது.[14]

" **தியாகராஜ விலாஸ யக்ஷ கானம்** " என்ற யக்ஷ கானம் ஸாஹஜி எழுதியதாகத் தெரிகிறது. இது மராத்தி மொழியில் தெலுங்கு எழுத்தில் எழுதப் பெற்றது.[15] யக்ஷ கானம் என்பது ஒருவகை இசை நாட்டிய நாடகம். " யக்ஷ " என்பது சிறு தெய்வம் என்றும், " கானம் " என்பது இசையென்றும் பொருள் படுதலின் யக்ஷ கானம் என்பது சிறு தெய்வங்களைப் பற்றிய பாடல்வகையென்று பொருள்படும்.[16]

" தைலங்க பாஷா – ஸரஸ்வதி கல்யாணம் – ஸாஹராஜ கிருதம் – தைலங்க, பக்கம் 34 "

என்ற குறிப்பால்[17] ஸரஸ்வதி கல்யாணம் என்ற நூல் தெலுங்கு மொழியில் ஸாஹஜியால் எழுதப்பெற்றது என்பது போதரும். டாக்டர் சீதா அவர்களும் இதனை ஸாஹஜி எழுதிய நூல்களின் பட்டியலில் தம் நூலுள் பக்கம் 70இல் 16 ஆவது எண்ணாகக் குறித்துள்ளார். ஆனால் சரஸ்வதி மகால் நூல் நிலையத் தெலுங்கு மொழிப் புலவர் திரு. விசுவநாதம் அவர்கள் சரஸ்வதி கல்யாணம் என்னும் நூலை இயற்றியவர் நிவர்த்தி சேஷாசலபதி என்பவர் ஆவர் என்று எழுதியுள்ளார்.[18]

பஞ்ச ரத்ன பிரபந்த நாடகமும்,[19] பஞ்சகன்யா பரிணய நாடகமும்[20] ஸாஹஜி எழுதியனவேயாம். முன்னது 176 பக்கங்களையுடையது; பின்னது 64 பக்கங்களையுடையது. பின்னதாகிய பஞ்சகன்யா பரிணய நாடகம் 12-292

14. 12-286 ( எண் 2349 )

15. 12-290 (எண் 2896)

16. The dictionary defines Yaksha as the name of certain demi gods attending on Kubera, God of wealth. And 'Gana' is defined as singing, a song, praise. By combining the dictionary definitions the term Yaksha gana might mean songs of the demi Gods - P. 17, Yaksha gana by Ashton & Christus; Govinda Dikshita says that Yaksha gana is a style of Song and Music - P. 63, Yaksha gana by Shivarama Karanth.

17. 12-290 ( எண் 2800 )

18. தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு - தஞ்சை மராட்டிய மன்னரும் தெலுங்கு இலக்கியமும், பக். 2, திரு. விசுவநாதம். கே. சத்தியவதி என்பார் எழுதிய " **தஞ்சாபுராந்த்ர ஸாஹித்ய சரித்ர** " என்ற தெலுங்கு நூலில், "அவதாரிகையில் சூத்திரதாரியின் வசனத்தில் இந்நூல் ஸாஹமஹாராஜர் எழுதியதாகவுள்ளது; எனினும் அதனை அநுசரித்து எழுதிய கவிதாசங்கிரக த்விபதத்தில் " **சேஷாசலபதி கவி விரசிதம்** " என்று சொல்லப்பட்டுள்ளது " என்றெழுதியுள்ளார்.
" This work is Saraswathi Kalyanam by Seshachalapathi who however surrendered his authorship to Saha Maharaj " – No. 632, A Descriptive Catalogue of Telugu Manuscripts of the Saraswathi Mahal Library.

19. 12-292 (எண் 2420) ; பக். 78–79, Tanjore as a Seat of Music.

20. 12-292 (எண் 2415)

(எண் 2415) என்றதன் குறிப்பில் "ஸாஹராஜ க்ருதம்" என்றுள்ளது. சரஸ்வதி மகால் நூல் நிலையத்துள்ள" List of Telugu Books arranged alphabetically in Devanagari Script" என்ற கையெழுத்துச் சுவடியிலும் "ஸாஹராஜ க்ருதம்" என்று எழுதப்பட்டுள்ளது. ஆந்திரப் பல்கலைக் கழகத்து வெளியீடாகிய "A descriptive Catalogue of Telugu Manuscripts, D. No. 539இல் இதன் ஆசிரியர் பாலகவி என்றுள்ளது. ஆங்கிலக் குறிப்பு, "This work Panchakanya Parinayamu relates the marriage of Sri Krishna and five Kanyas. It is doubtful whether the term Balakavi found in the work represents the name of the author or his title" என்பதாகும்.

"சிருங்கார மஞ்சரி - ஸாஹராஜ க்ருதம் - தைலங்க-பக். 200 - ஜீர்ணம்-சிருங்காரகதனம்"

என்று ஒரு குறிப்புள்ளது.[21] டாக்டர் சீதா அவர்கள் தம் நூலில் "சிருங்கார மஞ்சரி ஸாஹஜியம்" என்றொரு நூலைக் கூறி, அது பெரியப்பகவி இயற்றியது என்றும், ஸாஹஜியின் வரலாறு கூறுவதென்றும், திருவாரூர்ச் சித்திரைப் பெருவிழாவில் நடிக்கப் பெற்றதென்றும் கூறுவர்.[22]

சந்திர சேகர விலாஸ நாடகம் என்பது[23] ஸாஹஜி எழுதிய சமஸ்கிருத நாடகங்களில் ஒன்று. இது ஒரு அபிநய நாடகம் என்றும், இதில் சிவபெருமான் நஞ்சுண்ட செய்தி விளக்கப்பட்டுள்ளது என்றும், 16—2—1701இல் இந்நூல் இயற்றப்பெற்றது என்றும் தெரிகிறது.[24]

மேலும் குசலவ நாடகம்[25], திரௌபதி கல்யாண நாடகம்[26], காவேரி கல்யாண நாடகம்[27], காந்திமதி பரிணய நாடகம்[28], சாந்தா கல்யாணம்[29]என்பனவும் ஸாஹஜி எழுதியனவே. இவற்றுள் காவேரி கல்யாண நாடகம் என்பது தமிழ் மொழியில் தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்றது.

வள்ளி கல்யாண நாடகம் – ரதி கல்யாண நாடகம் – சீதா கல்யாண நாடகம் – ராம பட்டாபிஷேக நாடகம்[30], ஹரி ஹர விலாஸ – சதி பதி தான விலாஸ – சந்திர சேகர விலாஸ – கங்கா காவேரி நாடக - கோவர்த்தனோத்தார நாடக[31], ஜல கிரீடா – கிருஷ்ண லீலா – கௌரீ சம்வாத – லக்ஷ்மீ பூதேவி சம்வாத – ருக்மணி சத்யபாமா சம்வாத[32], பார்வதீ கல்யாண நாடக[33], கிராத விலாஸ நாடகம் – விசுவாதீத விலாஸ நாடகம் – விநாயக நாடகம் –

---

21. 12-299 (எண் 2498) 22. P. 68, Tanjore as a seat of Music, Dr. Seetha
23. 12-280 (எண் 2287) 24. P. 82 Tanjore as a seat of Music, Dr. Seetha
25. 12-292 (எண் 2422) 26. 12-292 (எண் 2428)
27. 12-298 (எண் 2429) 28. 12-281 (எண் 2289)
29. 12-291 (எண் 2401) 30. 12-286 (எண் 2850-2858)
31. 12-286 (எண் 2855, 2856, 2288, 2357, 2858)
32. 12-287 (எண் 2860-2864) 33. 12-287 (எண் 2807)

சங்கர நாராயண விலாஸ நாடகம்[34], பம்ஸிதர் விலாசம்[35], பக்தவத்ஸல விலாஸம்[35அ] ஆகியவை ஸாஹஜி இயற்றியனவே. இந்நூல்கள் மோடி தமிழாக்கக் குறிப்பில் "ஸாஹராஜ க்ருதம்" என்றில்லாமல் "பூர்வக" என்று குறிக்கப்பெற்றுள்ளன.

இவற்றுள் சந்திரசேகர விலாஸம் என்பது சமஸ்கிருத நாடகம் ஆகும்[36]. விசுவாதீத விலாஸ நாடகம் என்பது உத்திராதி (உருது) மொழியிலும்[37], பம்ஸிதர் விலாசம் இந்துஸ்தானி (உருது) மொழியிலும்[38], சங்கர நாராயண விலாஸ நாடகம் என்பது (ஆரவி) தமிழ் மொழியிலும்[39] எழுதப்பெற்றன.

"தியாகராஜ கோரவஞ்சி" என்றொருநூல் குறிக்கப்பெறுகிறது. இது தியாகேசக் குறவஞ்சியாதல் கூடும். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது ஸாஹஜி காலத்தில் திருவாரூரில் நடிக்கப்பெற்றதாதல் வேண்டும்[40].

"ஸாஹாஜி மஹாராஜாசே சாஹித்ய தியாகராஜா வரில் பத கீர்த்தன–சமஸ்கிருத பாஷா மஹாராஷ்ட்ர பாஷா மிலூன (சேர்ந்து)"

என்றொரு குறிப்புள்ளது.[41] இதனால் ஸாஹஜி தியாகராஜா பேரில் சில 'பதங்கள்' பாடினார் என்றும், அவை வடமொழியிலும் மராத்தியிலும் அமைந்தவை என்றும் தெரியவரும். இவை "தியாகேச பதங்கள்" எனப்பெறும்.

"தியாகராஜ ஸ்வாமி பக்திரஸ பதம்–ஸாஹராஜ க்ருதம்–லிபி தைலங்கி–பக். 28"[41அ]

என்றமையால் தியாகேச பதங்கள் மேற்கண்ட வண்ணம் சமஸ்கிருதம் மராத்தி ஆகியவற்றுடன் தெலுங்கிலும் இருந்தமை பெறப்படும்.[42]

"லக்ஷண பிரபந்த–ஸாஹஜ மகராஜ் விரசித–பக்கங்கள் 264"

என்ற குறிப்பால்[43] "லக்ஷண பிரபந்தம்" என்று நூலை ஸாஹஜி இயற்றினராதல் கூடும்.

"ஸாஹராஜ ஸாஹித்யம், தைலங்க லிபி, பக்கம் 150 சங்கீத விசாரஹ"[44]

"திராவிடபாஷா–ஸாஹராஜ ஸாஹித்யம்–திராவிட பத–தைலங்க லிபி–பக்கம் 80"[45]

---

34. 12-287 (எண் 2865-2868)
35. 12-288 (எண் 2784)
35அ. 12-200 (எண் 2898)
36. 12-286 (எண் 2288)
37. 12-287 (எண் 2866)
38. 12-288 (எண் 2784)
39. 12-287 (எண் 2868)
40. 12-294 (எண் 2441)
41. 12-185
41அ. 12-262 (எண் 2902)
42. They are collectively called Tyagesa Padas and are in Sanskrit, Marathi and Telugu - Tanjore as a seat of Music, Page 70 ; See 71 also.
43. 12-268
44. 12-262 (எண் 2908)
45. 12-262 (எண் 2904)

என்ற குறிப்புக்களால் சில சாஹித்யங்களும் இவரால் இயற்றப் பெற்றன என்பது அறியப்பெறும்.

ஸாஹஜியின் புகழை விரித்தும் கூறும் நூல்களில் ஒன்று "ஸாஹேந்திர விலாசம்" என்பதாகும்.[46] இந்நூலை இயற்றியவர் சிரீதர வெங்கடேச அய்யாவாள் என்பவர் ஆவர்.[47] இவர் திருவிசநல்லூரில் வாழ்ந்தவர்; ஸாஹஜி மன்னரின் சிவபக்தியும் கல்வியாற்றலும் அறிந்து இந்நூலைப் பாடினார்.

பிறிதொரு நூல் "ஸாஹஜிராஜ விலாசம்"[48]; இதனை இயற்றியவர் நிவர்த்தி சேஷாசலய்யீர் என்பவர் ஆவர்.[49]

ஸாஹஜி காலத்திலும் இவர் தம்பி சரபோஜி I காலத்திலும் விளங்கிய கிரிராஜ கவி என்பவர்[50] "ஸாஹராஜ கல்யாணம்" என்ற நூலை ஸாஹஜி பேரில் இயற்றியுள்ளார்.[51]

## முதலாம் சரபோஜி

1712 முதல் 1728 வரை ஆட்சிபுரிந்த முதலாம் சரபோஜி சிறந்த இசை வல்லுநராய்த் திகழ்ந்தார்.

"ஸரபோஜி ராஜ ஸாஹித்யம் – தைலங்க பாஷா பதம் – தைலங்க லிபி – பக்கம் 96 – பூர்த்தி—ஸரபோஜி ராஜ க்ருதம்"

என்ற குறிப்பால்[52] சரபோஜிராஜ சாஹித்யம் என்பது இவர் இயற்றிய சாகித்யங்கள் என்றும், தெலுங்கு மொழியில் எழுதப்பெற்றன என்றும், "பதங்கள்" என்ற இசை வகைக்குரியன என்றும் தெரியவரும். "சரபோஜி மகாராஜா வரில் பதம்" என்ற மோடி தமிழாக்கக் குறிப்பும்[53] இதனை வலியுறுத்தும்.

## முதலாம் துளஜா (1728 - 1736)

முதலாம் சரபோஜிக்குப் பிறகு ஆட்சி செய்தவர், துளஜா I ஆவர். இவர் முதலாம் சரபோஜியின் தம்பி. இவருக்குத் துக்கோஜி என்ற பெயரும்

46. 12-190 47. Tanjore as a seat of Music, Pages 191-192

48. 12-288 (எண் 2372) 49. தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணக் கருத்தரங்கு – தஞ்சை மராட்டிய மன்னர் தெலுங்கு இலக்கியம் – திருவிசுவநாதம்; A descriptive catalogue of Telugu Manuscripts of the Saraswathi Mahal Library, No. 632

50. "Of those who contributed substantially to the musical efflorescence of Tanjore during the reigns of Sahaji (1864-1712) and Sarabhoji I (1712-1728), a composer known as Giriraja Kavi was the most illustrious" - Dr. Seetha

51. 12-292 (எண் 2416) 52. 2-262 (எண் 2906) 53. 12-185

உண்டு. இவர் எழுதிய நூல் **சங்கீத சாராமிருதம்** என்பதாகும்[54]. இந்நூல் இராகங்களையும் இராக லக்ஷணங்களையும் மிகச் சிறப்பாகக் கூறுவது. சுருதி, சுத்த ஸ்வரம், விக்ருத ஸ்வரம், கிராமம், மூர்ச்சனை, சாதாரணம், வர்ணாலங்காரம், ஜாதி, கீதி, மேளம், ராகம், வாத்தியம், பிரபந்தம், தாளம், பிரகீர்ணகம் ஆகியவை 14 அதிகாரங்களில் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன[55].

“ சிவகாம சுந்தரி பரிணயம் ” என்பது இவர் தெலுங்கில் எழுதிய நாடக நூல் ஆகும்[56]. மகாதேவ பட்டணத்தில் இவர் தங்கியிருந்தபொழுது இந்நூல் எழுதப்பெற்றது என்றும், சிவபெருமான் பார்வதியை மணந்த வரலாறு கூறப் படுவது என்றும், இது மகாதேவபட்டணத்தில் ஆதிவராகசுவாமி கோயில் திருவிழாவில் நடிக்கப்பெற்றதாதல் வேண்டும் என்றும் தெரிகிறது[57].

## இரண்டாம் ஏகோஜி[58] (1736 - 1739)

இவர் முதலாம் துளஜாவுக்கு ஹம்ஸாம்பாவிடம் பிறந்தவர்[58அ]. இவருக்கு பாவாசாஹேப் என்றும் பெயருண்டு.

“ ஏகோஜிராஜ ஸாஹித்யம் - மஹாராஷ்டிர தைலிங்க மிஸ்ர பதம் - தைலங்க லிபி ” - ஏகோஜிராஜ கிருதம் - பக்கம் 44 ”

என்ற குறிப்பினால்,[59] மஹாராஷ்ட்ரமும் தெலுங்கும் கலந்த மொழியில் ஏகோஜி சில பதங்களைப் பாடியுள்ளார் என்று அறியலாம்.

சம்க்ஷேப ராமாயணம் இவர் எழுதியது என்று சொல்லப்பெறுகிறது. இப்பெயரால் 11 பிரதிகளும், சம்க்ஷேப ராமாயண வியாக்யானம் ஒரு பிரதியும் சரஸ்வதி மகாலில் இருந்தனவாதல் வேண்டும்.[60]

“ கமலாம்பா தியாகேச நாடகம் – ஏகராஜ க்ருதம் - தைலங்க 26 ”

என்ற குறிப்பினால்[61] தியாகேசர்பேரில் ஒரு நாடகம் எழுதியதாகத் தெரிகிறது. சாகுந்தலா நாடகமும் இவருடையதே.[61அ]

## பிரதாபசிங்கர் (1739 - 1763)

இவரும் முதலாம் துளஜாவுக்கு ( கத்திக் கல்யாணம் செய்து கொண்ட ) அன்னபூர்ணாபாயிடத்துப் பிறந்தவர்.[62]

---

54. 12-258 (எண் 2856)
55. Page Liii to Lxx of Preface to Sangita Saramruta, IX Detailed summary of contents, V. Raghavan.
56. 12-290 (எண் 2895)
57. Tanjore as a seat of Music, Page 90-92
58. இவர் ஒரு வருஷம் ஆட்சிபுரிந்தார் என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம் கூறும்– பக். 84
58அ. Tanjore as a seat of Music, P. 95.
59. 2-262 (எண் 2905)
60. 2-208 ( முதல் வரியும் மூன்றாவது வரியும் )
61. 12-292 ( எண் 2427 )
61அ. 12-290 ( எண் 2248 )
62. போன்ஸ்லே வம்ச சரித்திரம் ( தமிழ் ) பக். 81

பிரபோத சந்த்ரோதய நாடகம்[63], கிருஷ்ண ஜனன நாடகம்[64], முத்ரா ராக்ஷஸ நாடகம்[65], பிரதாபராம குறவஞ்சி[66], மித்ரவிந்தாபரிணயம்–துருவசரித்திர நாடகம் – உஷா கல்யாணம் – சீதா கல்யாணம் – மாயாவதி பரிணயம் – யயாதி சரித்திரம்[67] ஆகியவை பிரதாபசிங்கரால் எழுதப்பெற்றனவாதல் வேண்டும்.

இரண்டாம் துளஜா (1763–1767) பிரதாபசிங்கரின் மகன் ஆவர். இவருக்குப் பிறகு ஆட்சியெய்தியவர் இவர் தம்பி அமரசிங்கர் (1787–1798). இவ்விருவரும் இசை நூல்கள் எழுதியமைக்குக் கிடைத்துள்ள மோடி ஆவணத் தமிழாக்கக் குறிப்புக்களில் சான்று கிடைக்கவில்லை.

## இரண்டாம் சரபோஜி (1798 - 1832)

"தேவேந்திர குறவஞ்சி" என்பது இரண்டாம் சரபோஜி இயற்றிய குறவஞ்சி நாடகம் ஆகும்.[68] "சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்" என்பது சிவக்கொழுந்து தேசிகரால் பாடப்பெற்றது.[69] இவரியற்றியனவாகச் சில நூல்கள் மோடி ஆவணத் தமிழாக்கத்தினின்று அறியவரும். அவை ராதா கிருஷ்ண நாடகம் – மோஹினி மஹேஸ் பரிணய நாடிகா,[70] கணேச விஜய நாடகம்,[71] கணேஷ விஜயாவித்யன் நாடகம்,[72] மீனாட்சி பரிணயம்,[73] கணேச லீலார்ணவ நாடகம்[73அ] எனபனவென்று பின்வரும் குறிப்புக்களால் அறியப் பெறும் :-

"ராதாகிருஷ்ண நாடகம் - சரபேந்திர பூபால க்ருதம் - ராதாகிருஷ்ண விலாஸ வர்ணனம் - பக்கம் 30"

"மா – கணேச விஜய நாடகம் - ஸரபேந்தர க்ருதம்-கணபதி சரித்திரம்-10 வீதம் பக்கம் 44"

"மா – கணேச விஜயாபித்யன் நாடகம், ஸரபேந்திர க்ருதம் - தைலங்க-பக்கம் 106"

"மா – கணேச லீலார்ணவ நாடகம் - தநைவக்ருதம்-தைலங்க-பக்கம் 22"

"மா. பா. மீனாக்ஷி பரிணயம் - ஸரபேந்த்ர க்ருதம் - தைலங்க பக்கம் 36"

மேற்கண்ட குறிப்புக்களில் சரபேந்திர பூபால, ஸரபேந்திர என்றுள்ளமையின் இவை இரண்டாம் சரபோஜிக்குரியன என்று கொள்ளப்பட்டன.

---

63. 12-288 (எண் 2250)
64. 12-288 (எண் 2887)
65. 12-287 (எண் 2247)
66. 12-289 (எண் 2885)
67. 12-289 (எண் 2887-2891)
68. P. 114, Tanjore as a seat of Music; 12-289 (எண் 2884)
69. 12-298 (எண் 2487)
70. 12-289 (எண் 2879, 2880)
71. 12-289 (எண் 2892)
72. 2-290 (எண் அரே 58)
73. 2-291 (எண் 2408)

73அ. 2-290 (அரே 51)

## இரண்டாம் சிவாஜி (1832 - 1855)

அன்னபூர்ணாம்பா நாடகம் என்பது சிவாஜி II எழுதியது என்று தெரிகிறது. "தை. பா. அன்னபூர்ணாம்பா நாடகம் - சிவாஜி மஹாராஜ் க்ருதம் - தைலங்க, பக்கம் 96" என்ற குறிப்பால்[74] இது அறியப்பெறும்.

## இசை வல்லுநர்கள்

மராட்டிய அரசர்கள் சிறந்த இசை நாடக நூல்களை எழுதிமையோடு பல இசைவல்லுநர்களையும் ஆதரித்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர் வீணை காள ஹஸ்தி அய்யர் என்பவர் ஆவர். இவருக்கு இரண்டாம் துளஜா பெரன்னூர் கிராமத்தில் ஸர்வமானியம் (முற்றூட்டாக) நிலம் ஒரு வேலி, எட்டு மா, 1771இல் அளித்தார்[75].

இவ்வரசர் காலத்திலேயே வீணை குப்பையா என்றொருவர் இருந்தார். அவருக்கு கி. பி. 1782இல் சருவமானியம் அளிக்கப்பெற்றது[76].

"வீணை குப்பையா, லக்ஷ்மி நரசிம்மையா, சுப்ராயலு, அனந்தையா, சேஷய்யா முதலிய பதினான்கு பேருக்குத் தருமம் செய்ய ஆடுதுறை மாகாணத்தில் கடைகள் பங்குகள் சர்வமானியமாகக் கொடுக்கப்பெற்றன"

என்ற மோடி ஆவணத்தமிழாக்கக் குறிப்பால் பல இசை அறிஞர்கட்குக் கி. பி. 1855 இல் உதவியளிக்கப்பெற்றது என அறியவருகிறது. இவர்களுள் வீணை குப்பையர் மிக்க கீர்த்தி வாய்ந்தவர். இவர் நாராயண கௌள ராகத்தை ஆலாபனம் செய்வதில் மிக்க திறமையுள்ளவர். இவருக்கு 3 மக்கள் இருந்தனர்; அவர்களுள் திருவொற்றியூர் தியாகய்யர் ஒருவர்[77].

வீணை இராமசாமி என்பவர் 1813க்குரிய ஆவணக்குறிப்பில் காணப்பெறுகிறார்[78]

**ஜகந்நாத பட் கோசுவாமி** என்பாருக்குக் கி. பி. 1778இல் அதாவது இரண்டாவது துளஜா காலத்தில் சர்வமான்யம் கொடுக்கப்பட்டதாக ஒரு குறிப்பு உள்ளது.[78அ]

---

74. 2-291 (எண் 2409)

75. 3-265; Tanjore as a seat of Music, page 101; 109. *பெரம்நூர்* என்பதை பெரன்னூர் என்று மொழிபெயர்ப்பாளர் எழுதினர் போலும்.

76. *ச. ம. மோ. த.* 10-28

77. Tanjore as a seat of Music, P. 219

78. *ச. ம. மோ. த.* 2-22; "இவர் மைசூர் வேங்கடராமையர் குமாரர்; இவரும் இவர் சகோதரர் லட்சுமணையரும் வீணை சுகமாய் வாசிப்பார்கள்" என்று . கருணாமிர்த சாகரம் என்ற நூல் பக். 100இல் உள்ளது இவரைப்பற்றியதாகலாம்.

78அ. *ச. ம. மோ. த.* 29-3

பிற்காலத்தில் இவரின் வேறாகப் **பாலசரஸ்வதி ஜகந்நாத பட்கோ சுவாமி** என்பவர் ஒருவர் இருந்தார். இவர் பாலசரஸ்வதி என்ற இசைக் கருவியில் வல்லவர் என்றும், பாலசரஸ்வதி என்பது வடநாட்டு இசைக்கருவி என்றும், இதற்கு மாயூரி, தவுஷ் என்ற வேறு பெயர்களும் உண்டு என்றும், கச்சேரிகளில் இதற்குச் சிறப்பிடம் தந்தவர் ஜகந்நாத பட்கோசுவாமியே ஆவர் என்றும், மகா வைத்தியநாதையர் போன்ற இசைப்பேரறிஞர் இவரது இசைப் புலமையைப் போற்றினர் என்றும் தெரியவருகிறது.[78ஆ]

தஞ்சை மராட்டிய அரச பரம்பரையினரின் கி. பி. 1912க்குரிய 26ம் எண் அசல் வழக்கில் பிரதிவாதிகட்குரிய 23ஆவது சாட்சியாக ஜகந்நாத பட்கோ சுவாமி என்று ஒருவர் விசாரிக்கப் பெற்றார். இவர் ஏறத்தாழ கி. பி. 1855இல் பிறந்திருத்தல்கூடும். 1916இல் இவர் அறுபது வயதுடையவர். இவர்தம் வாக்கு மூலத்தில் இவர் தந்தையின் பெயர் வேதமூர்த்தி ராஜஸ்ரீ பாளம்பட்ட பட்கோசுவாமி என்றும், பாலசரஸ்வதி என்ற இசைக்கருவியில் 25 ஆண்டு களாகத் தாம் ஒருவரே வல்லமை படைத்துத் திகழ்வதாகவும் கூறியுள்ளார்.

" I introduced the instrument Balasaraswathi in these parts 25 years ago. I have not seen any other playing it. Those who liked it invited me alone "[78இ]

மகாவைத்தியநாதையர் காலம் 1844–1893 என்று கூறப்பெறுகிறது.[78ஈ] இதனால் ஜகந்நாத பட்கோசுவாமி மகாவைத்தியநாதையரின் சமகாலத்தவர் ஆதல் காணப்பெறும்.

பால சரஸ்வதி பட்கோ சுவாமியின் தந்தை **பாளம்பட்டு பட்கோ சுவாமி** என்பவரைப்பற்றி 1813, 1814, 1826 ஆகிய ஆண்டுகட்குரிய ஆவணக் குறிப்புக்களினின்று அறியப்பெறும். இவர் " ஸர்காரின் வாத்தியார் " என்று 1814இல் குறிக்கப்பெறுவதால் இவர் அரசகுரு ஆதலோடு இசை கற்பித்தவர் என்றும் ஊகிக்கலாம். இவருக்கு 5 கிராமங்கள் சர்வமானியமாக அளிக்கப் பெற்றன[79]. இவரிடத்தில் இரண்டாம் சரபோஜிக்குப் பெருமதிப்புண்டு போலும். ஆகவே இவர் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றார் என்றும், சென்றபொழுது ஆலத்தி எடுத்து வரவேற்கப்பெற்றார் என்றும் தெரியவருகிறது.[80] இவர் கி. பி. 1813க்குரிய ஆவணத்திலும் குறிக்கப்பெறுகிறார். அவ்வாவணக்குறிப்பு[81] பின்வருவதாகும் :

---

78ஆ. P. 253, Tanjore as a seat of Music, Dr. Seetha

78இ. D. W. 33 – In the Subordinate Judge's Court, Tanjore; the 3rd day of October 1916; O. S. No. 26 of 1912; Deposition of Jagannatha Bhat Goswami – P. 271, line 10 and P. 274, lines 37–38.

78ஈ. Page 67, Glimpses of Indian Music by Gowri Kuppuswami and Dr. K. Hariharan (1982)

79. 1–28 ச. ம. மோ. த. 18.11 பார்க்க   80. 1–171   81. 1–340

"1813: திருப்பயணத்தில்[82] ஆபத்சகாயேசுவரசுவாமி மாதத்திற்கு ஒரு கோதானம் கொடுப்பது பழக்கம். அது தற்பொழுது சேரவில்லை. அச்சுவேலை பிராமணர்களும் ரா. ரா. பாளம்பட்டு பட்கோ சுவாமியும் ரா. ரா. பெரிய மாப்பிள்ளை மூலம் பிராமணர்களுக்குக் கொடுத்தால் ஒரு கோதானத்தை ஸ்ரீசுவாமிக்குக் கொடுக்க உத்தரவாகவேண்டும்."

## திருத்தலயாத்திரை லாவணி

இரண்டாம் சரபோஜி காசியாத்திரை செய்தமை பற்றிய வருணனை நூல் ஒன்று உண்டு. அது தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலைய வெளியீடாகத் திரு. கிருஷ்ணசாமி மாடிக் ராஜேசாகேப் அவர்களால் பரிசோதித்து வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூல் "**திரிஸ்தல யாத்ரேச லாவண்ய**" என்ற பெயர் உடையது. இது மராட்டியமொழியில் உள்ளது. இதனை **இரண்டாம் சரபோஜி மன்னரே** எழுதினார் என்று இதனைப் பதிப்பித்த திரு. கிருஷ்ணசாமி மாடிக் அவர்கள் எழுதியுள்ளார். ஆனால் இதனை இயற்றியவர் **துண்டி சுத சிவ** என்னும் புலவர் ஆவர் என்று சரஸ்வதி மகால் நூல் நிலைய மராத்தி மொழிப் புலவர் கூறுகிறார்[83]. ஆனால் **உட்கே கோவிந்தாசாரியார்** என்ற கவிஞர் காசிப் பயண வர்ணனை செய்து லாவணி இயற்றினார் என்று சில ஆவணக் குறிப்புக்களால் தெரியவருகிறது. இக்கவிஞர் சரபோஜி காலத்தில் இருந்தவர். கி. பி. 1821க்குரிய ஆவணக்குறிப்பொன்று இவருக்கு மாதம் ஒன்றுக்கு 2 சக்கரம் ¼ பணம் கொடுத்ததாகக் கூறுகிறது. இது இவருடைய மாத ஊதியம் ஆகலாம்.[84] 1829க்குரியதும், ஸர்க்கேல் ராஜேஸ்ரீ சர்ஜேராவ் காட்கே அவர்களுக்கு எழுதியதும் ஆகிய கடிதத்தில்,

"காசிப்பயணம் குறித்து வர்ணனை செய்து உட்கே கோவிந்தாசாரியார் செய்த லாவணியின் நகல் (நான்கடிகள் கொண்டது 35க்கு) லாவணி 59க்கு எழுதிய லிஸ்டும் ......................... லாவணியின் காவியம் 35ம் ஹுஜுரிடம் சேர்ப்பித்தேன் ........."[85]

என்றும், 21—3—1831க்குரியதும், சாலுவநாயக்கன் பட்டணத்தில் அரசர் தங்கி இருந்தபொழுது எழுதப்பெற்றதும் ஆனகடிதத்தில்,

"உட்கே கோவிந்தாசாரியார் என்ற கவி காசிப் பிராயாண வர்ணனை செய்து சில லாவணிகளை ஹுஜுருக்குக் கொடுத்திருக்கிறார்கள்............"[86]

என்றும் காணப்படுவதால் காசியாத்திரை வருணனையுள்ளதும், "த்ரிஸ்தளி யாத்ரேச லாவண்ய" என்ற பெயருடையதும் ஆன லாவணி உட்கே கோவிந்தாசாரி என்பவரால் எழுதப்பெற்றதாதல் வேண்டும் என்பது தெரியலாகும்.

---

81. 1-340 82. திருப்பயணம்—திருப்பழனம்; திருவையாற்றுக்கருகில் கும்பகோணம் போகும் பாதையிலுள்ள சிவத்தலம். 83. சரஸ்வதிமகால் இதழ் எண் 30 – 1, 2, 3-1979. பக். 7 - சரபோஜி மன்னரும் மராத்தி இலக்கியமும்.
84. ச. ம. மோ. த. 18-10 85. ச. ம. மோ. த. 16-16, 17 86. ச. ம. மோ. த. 16-27

லாவணி என்பது ஒருவகை இசைப்பாடல்; பொது மக்களின் மனத்தைக் கவரவல்ல நாட்டுப்புறப் பாடல் வகையைச் சார்ந்தது; தஞ்சை மராட்டியர் காலத்துப் பெருவழக்கில் இருந்தது. இரு கட்சிகள்; ஒரு கட்சி ஒரு கருத்தைப் பற்றி வாதிடும்; பிறிதொரு கட்சி அதனை மறுத்து வாதிடும்; கட்சித்தலைவர் உடனுக்குடன் பாடல் புனைந்து பாடும் திறமையுடையவராய் இருப்பார். லாவணி பாடுவதில் ஆண்களே பங்கு கொள்வர்[86அ] என்பது பெருவழக்கு. இது,

"லாவணிப் பாட்டுப் பாடுகிற சிப்பாய்கள் 8 பேருக்கு இரவில் சாப்பாடு அளிக்கிறது"[86ஆ]

என்ற குறிப்பால் அறியப்பெறும். அங்ஙனம் பாடுங்கால் பெண்கள் ஆடுவதும் உண்டு என்று அறியப்பெறுகிறது. இது,

"லாவணிப் பாட்டில் ஆடுகிற பிராமணர்களின் பெண்கள் 2க்கு வருஷப் பிறப்பு வரையில் தினப்படி இரவில் சாப்பாடு"[86ஆ]

என்பதால் உறுதியெய்தும். இரவு முழுதும் விடிகிறவரை லாவணி நடைபெறும்; ஆகையால் இரவு உணவு அளிக்கப்பெற்றனர் போலும்.

## ஆதரிக்கப்பெற்ற புலவர்கள்

தஞ்சை மராட்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பெற்ற புலவர்கள் பலர்; அன்னோர் எழுதிய நூல்களும் பலவாம்.

ஸாஹஜி ராஜவிலாஸம் என்பது **சேஷாசலபதி** என்ற புலவரால் பாடப் பெற்றது என்று முன்னரே கூறப்பெற்றது.[87]

"திரா. பா. கோரவஞ்சி நாடகம்-முத்துகவிராய க்ருதம்--தைலங்க--பக். 72"

என்ற குறிப்பினால்[88] தமிழ் மொழியில் ஸாஹஜி பேரில் **முத்துக்கவிராயர்** என்னும் புலவரால் இக் குறவஞ்சி நாடகம் எழுதப்பெற்றது என்றும், அது தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்றது என்றும் அறியவரும். இது ஸாஹஜி மன்னர் மீது பாடப்பெற்ற குறவஞ்சி.[89]

ஸாஹஜி, அவர் மகன் முதலாம் சரபோஜி ஆகியோர் காலத்தில் வாழ்ந்த புலவர் **கிரிராஜகவி** எனப்பெற்றார். இவர் ஸாஹஜி பேரில் ஸாஹராஜ கல்யாணம்" என்ற நூலைப் பாடியமை முன்னரே கூறப்பட்டது.[90]

---

86அ. Tanjore as a seat of Music, P.360 86.ஆ 1-188

87. அடிக்குறிப்பு 18 காண்க 88. 12-290 (எண் 2394)

89. ஐந்து தமிழ் இசை நாடகங்கள்" என்ற பெயரில் சரஸ்வதிமகாலில் ஒரு நூல் வெளியிடப்பெற்றுள்ளது. அவ்வைந்து நூல்களுள் இக்குறவஞ்சி நாடகமும் ஒன்று; பிற நூல்கள்: 1-பூலோக தேவேந்திர விலாசம் (ஸாஹஜி); 2. சந்திரிகாஹாஸை நாடகம்; 3. விஷ்ணுசாகராச விலாஸம்; 4. காவேரி கல்யாணம் என்பனவாம்.

90. 12-292 (எண் 2416) அடிக்குறிப்பு 51

வாத ஜய நாடகம்[91], லீலாவதி கல்யாணம்,[92] (ராஜமோகனக்) குறவஞ்சி[93] சர்வாங்க சுந்தரி விலாஸம்[93அ] என்பனவும் இவருடையதாதல் கூடும்.

இக்காலத்திலேயே **துண்டிராஜர்** என்ற ஒருவர் இருந்தார். இவர் விசாக தத்தர் எழுதிய முத்ராராக்ஷஸம் என்ற நாடகத்துக்கு வியாக்கியானம் எழுதியுள்ளார்.[94]

பிறிதொரு கவி **ராமபத்திர தீட்சிதர்** எனப்பெற்றார். இவரும் ஸாஹஜி காலத்தவர்; திருவிசநல்லூரில் வாழ்ந்தவர். இவரியற்றிய நூல்கள் ஜானகி பரிணயம்[95] சிருங்கார திலக பாணம்[96] முதலியனவாம்.[97]

**நல்லாபூத கவி** என்றொருவரும் அந்நாளில் வாழ்ந்தவரே. அவர் பாடிய நூல்களுள் ஒன்று சிருங்கார சர்வஸ்வ பாணம்[99] என்பதாகும். இவரது இயற்பெயர் பூமிநாதர் என்பதாகும்.[100]

"அனங்க விஜய பாணம்"[101] என்ற நூலை இயற்றிய **ஜகந்நாத கவியும்** முதல் சரபோஜி காலத்தவரே ஆவர்.

ராகவாநந்த நாடகம்,[102] சபாபதி விலாஸ நாடகம்[103] என்பவற்றை இயற்றியவர் **வேங்கடேசகவி** என்பவர் ஆவர். இவர் ஸாஹஜி, சரபோஜி 1 காலத்தவர்.[104]

---

91. 12-291 (எண் 2404)
92. 12-291 (எண் 2402) Catalogue of Telugu Mss. D. No 568
93. 12-290 (எண் அரே 64) ,, ,, ,, 509
93அ. 12-286 (எண் 2354) ,, ,, ,, 658
94. 12-277 (எண் 2246) P. 3476-A descriptive catalogue of Skt. Mss. Vol. VIII; the work was composed in Saka 1635 (A. D 1713)
95. 12-279 (எண் 2271) 96. 12-282 (எண் 2885)
97. P. XXIX of Vol. XIX A Descriptive Catalogue of Skt. Mss.
99. 12-281 (எண் 2826) பாணம் என்பது நாடக நூல்களுள் ஒருவகை
" Banas as a rule deal with the social and moral drawbacks of the people with a view to give the people an opportunity to rectify themselves. All the Banas are devoted to the elucidation of the ways of immoral conjugal happiness so that people may detect those means and put a stop to them " - P. 3567, Vol. VIII, A descriptive catalogue of Skt. Mss. of the Saraswathi Mahal Library.
100. P. XXI of Vol. 19 of the descriptive catalogue of the Skt. Mss.
101. 12-282 (எண் 2882): This work was composed in Kali 4822 corresponding to A. D. 1722; P 3293 of Vol. VII, Descriptive catalogue of Skt. Mss. 102. 12-288 (எண் 295) 103. 12-284 (எண் 2808)
104. P. 3498 of Vol. VIII, A Descriptive Cat. of Skt. Mss,

ஸாஹஜி காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் **திரயம்பக பட்** **என்பவர் ஆவர்.**[105] **இவர் எழுதிய மராட்டிய நாடகம் இராஜகன்யா பரிணய** **நாடகம்**[106] **என்பதாகும்.**

**பகவந்தகவி** என்றொருவர் ஏகோஜி II காலத்தவர் ஆவர். இவரியற்றிய நூல்களுள் ஒன்று ராகவாப்யுதய நாடகம்[107] என்பதாகும்.

## மன்னர் முன்னிலையில் நடித்தல்

இதுகாறும் குறிப்பிடப்பெற்ற நாடகங்கள் பலவும் மராட்டிய மன்னர் முன்னிலையிலே நடிக்கப்பெற்றன என்பதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன.

சுஹர்ஸன் ஆண்டு 1254 அதாவது கி. பி. 1853இல் இரண்டாவது சிவாஜி காலத்தில் விநாயக சதுர்த்தி விழாவில் 22 நாட்கள் நாடோறும் சராசரி ஒரு நாடகம் வீதம் பல நாடகங்கள் நடிக்கப்பெற்றன. ராமச்சந்திர கோஸ்வாமி என்பாருடைய கதை நடந்தது. நாடகசாலையில் சில பெண்கள் நாட்டியம் ஆடினர்.[108]

நடைபெற்ற நாடகங்கள் ஆவன ; **சமந்தோபாக்யான நாடகம்,**[109] **சுபத்ரா கல்யாண நாடகம்,**[110] சசி புரந்தர நாடகம்,[111] கோவர்த்தன நாடகம்,[112] சர்வாங்க சுந்தரி நாடகம்,[113] ரதி கல்யாணம்,[114] விக்னேசுவர கல்யாணம்,[115] சதிபதி தான விலாஸம்,[116] சாந்தா கல்யாண நாடகம்,[117] சரஸ்வதி கல்யாணம்,[118] பஞ்ச பாஷா நாடகம், சங்கரநாராயண விலாஸம்[119] என்பனவாம்.

இவற்றுள் பஞ்சபாஷா நாடகம் பற்றி மோடி தமிழாக்கக்குறிப்பு[120] வேறொன்றினால் அறியப்பெறும். இது ஒவ்வொரு பாத்திரம் ஒவ்வொரு

---

105. P. 712 Vol. II, A Descriptive Catalogue of Marathi Mss.
106. 12-287 ( எண் 2870 ) 107. 12-281 ( எண் 2290 ) 108. 12-864, 865, 866
109. இது பிரதாபசிம்மன் எழுதியது ; மராட்டிய மொழி ; தெலுங்கு எழுத்து ; தெலுங்குச் சுவடி பி. 15298 / 28.
110. இது இரண்டாம் சரபோஜி எழுதியது ; மராட்டிய மொழி ; தெலுங்கு எழுத்து ; தெலுங்குச் சுவடி 15311/37
111. இது சாஹஜி எழுதிய யக்ஷகானங்களில் ஒன்று ( பக். 81, Tanjore as a Seat of Music )
112. இது கோவர்த்தனோத்தார நாடகம் எனப்பெறும் ; ஸாஹஜி எழுதியது ; மராத்தி மொழி ; 12-286 ( எண் 2858 )
113. 12-286 ( எண் 2854 ) இது கிரிராஜகவி எழுதியது ; 18-4
114. 12-286 ( எண் 2851 )
115. 12-287 ( எண் 2867 )
116. 12-286 ( எண் 2856 )
117. 12-291 ( எண் 2401 )
118. 12-290 ( எண் 3800 )
119. 12-287 ( எண் 2868 ) ; 18-6, 7
120. 18-5, 6

மொழியில் பேசுமாறு அமைந்துள்ளது; சமஸ்கிருதத்தில் கண்ணனும், தமிழ் தெலுங்கு, மகாராட்டிரம், இந்துஸ்தானி ஆகிய நான்கு மொழிகளில் நான்கு பேரும் பேசுகிறார்கள்.[121]

இந்நாடகங்கள் யாவும் ஹுஜூர் மாடிமேல், பிள்ளையாரின் முன்னால், நடைபெற்றனவாதல் கூடும்;[122] சிவகங்கைக் கோட்டையிலும் நடைபெற்றதுண்டு;[123] ஆங்கில நாட்டியமும் நடத்தப்பெறுவதுண்டு; அதில் ஆங்கிலேயர்களே கலந்து கொண்டனர்.[124]

22 நாட்கள் நடந்தேறிய இசை நாடக நாட்டிய நிகழ்ச்சிகளில் 20, 21 ஆவது திருவிழா நாட்களில் " வித்தியாதிகாரர்களின் கச்சேரி " நடைபெற்றதாக உள்ளது.[125]

## சங்கீத வித்யாதிக் பிரிவு

" வித்யாதிக் பிரிவு " என்றொரு பிரிவு இருத்தலைப் பல ஆவணக் குறிப்புக்களினின்றும் அறியவருகிறது. அப்பிரிவுகளில் இருந்த இசை வல்லுநர்களே வித்தியாதிகாரர்கள் என்று குறிக்கப்பட்டனர் போலும். இப்பிரிவில் வாய்ப்பாட்டில் வல்லவர் மட்டுமன்றிப் பல இசைக்கருவிகளையும் இயக்கவல்லவரும் இருந்தனர். இச்சங்கீத வித்யாதிகப் பிரிவிற்கு 1831இல் கண்காணிப்பாளராக இருந்தவர்கள் வராஹப்பையா இராமசாமி அய்யாவும் சேது அண்ணாஜியும் ஆவா.[126] ஆனால் கி.பி. 1821க்குரிய பிறிதொரு ஆவணம்,[127]

" ஸங்கீத வித்யாதிக தருமைய்யா ராமசாமிய்யா, சேது அண்ணாஜி "

என்று குறிப்பிடுவதால் தருமையா ராமசாமிய்யா ஸங்கீத வித்யாதிகப் பிரிவில் 1821 இல் இருந்தார் என்று அறியப்பெறும். தருமையா ராமசாமிய்யா மேலே கூறிய வராஹப்பையாவின் தந்தையாவர்.[128] இத் தருமையா ராமசாமிய்யா கி. பி. 1843இல் காசி யாத்திரை போய்வர 3 ஆண்டுகள் விடுப்புப் பெற்றார்;[129] திரும்பி வந்த பின்னர் 1847இல் பாகவத மேளாவில் பாட்டுப் பாடுபவராக அமைக்கப் பெற்றார்; கவீசுவரர் துறையில் சேர்த்துக் கொள்ளப் பெற்றார்; திங்கள் ஊதியம் 6 சக்கரம்.[130] இச்சங்கீத வித்யாதிகப் பிரிவில் உமார்கான் மீராகான் என்பவர் ஒருவர் இருந்தார்.[131] இவ் இசைத்

---

121. *சரஸ்வதி மகால் இதழ்* 1966  122. 18-4, 5, 6, 7.  123. 12-865
124. 18 – 8, 4; *இந்நாட்டியத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் ஜெரூஸ், ஜோசப், ஜோசப்பின் மனைவி; ஜெபராயின் மனைவி ஜோசர்வெட் என்பவராவர்.*
125. 12 - 866  126. *ச. ம. மோ. த.* 8 - 105
127. 1 – 228; Tanjore as a seat of Music, page 119
128. Tanjore as a seat of Music, p. 260
129. *ச. ம. மோ. த.* 8–1  130. *ச. ம. மோ. த.* 9–85  131. 4–415, 416;

துறையில் பெண் வேஷம் போட்டுக்கொள்பவர் உஸேன்கான் என்பவர் ஆவர். இவருக்கு ஒரு தாசி இக்கலையைக் கற்றுக் கொடுத்தாள்.[132]

இச் சங்கீத வித்யாதிகப் பிரிவுக்கு வேற்று நாட்டினின்றும் இசைவல்லு நர்கள் வந்திருந்தனர். கலியாணஸிங்கு என்று ஒருவர்; குவாலியரில்[133]இருந்து வந்தவர்; அவருடன் மூன்றுபேர் வந்திருந்தனர். திர்தார் ஆலி என்றொருவர் வந்திருந்தார்[134]. இந்துஸ்தானி பாடகர் ஒருவர் லகாராம் எனப்பட்டவர் அபராதம் விதிக்கப்பட்டார். பின்னர் மன்னிக்கப்பெற்றுக் கொடுத்த அபராதத் தைத் திரும்பப் பெற்றார்[135]. கடப்பையிலிருந்து ஒரு பாட்டு வித்வான் வந்ததாக ஒரு ஆவணம் கூறுகிறது.[136] மீர் ரஹிமான் என்பவர் இந்துஸ்தானி பாடகர் ஆவர். இவர் தன் குழந்தைக்கு முடியிறக்க நாகூர்க்குப் போய்வர விடுமுறை கேட்டார்.[137] இதனால் இசை வல்லுநர்களும் இசையை ஓர் உத்தியோகத் துறையாகக் கருதலாயினர் என்று ஊகித்தறியலாம். வேற்று நாட்டிலிருந்து இசை கற்றுக் கொள்வதற்கும் தஞ்சைக்குப் போந்தனர் எனத் தெரிகிறது. பல்லாரி மாவட்டத்திலிருந்து இருவர் – அப்புராவ் சுப்பராவ், ஆனந்த சுப்பராவ் என்ற பெயரினர்–இசை கற்றுத்தரவேண்டும் என்றும், உணவு அளிக்க வேண்டும் என்றும் விண்ணப்பித்தனர். அவர்கள் பல்லாரி மாவட்டத்தினின்று இங்கு ஏன் வரவேண்டும் என்ற வினாவுக்கு மறுமொழி தருவார் போல் பாட்டுக் களின் தராதரம் அறியலாம் என்று தாம் வந்ததாக அவ்வேண்டுகோளில் கூறினர்.[138] ஈசுவர சாஸ்திரி என்றொருவர்[139] மூக்கினால் புல்லாங்குழல் ஊதுவதில் வல்லுநராய் இருந்தார்.

## பாகவதமேளா

பாகவத மேளா என்பது இசை வல்லுநர் யாவரும் நன்கறிந்த இசை நாடகக்குழு ஆகும். கி. பி. 1769லேயே பாகவத மேளா குறிக்கப்பெறுகிறது. கோகுலாஷ்டமிக்கு ருக்மிணி கல்யாணம் நடித்ததாக அவ்வாவணம்கூறுகிறது[140] பாகவத மேளா கண்காணிப்பு, பாளம்பட்டு யாதவ பட் என்பவர் ஆவர் என்று 1793க்குரிய ஆவணக்குறிப்பால் அறியப்படும்[141]. பாகவத மேளாவுக்குச் சுரோத்திரியம் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.[141அ] அம்மேளாவில் விகடகவி களும் இருந்தனர்.[142] விகடகவி வைத்தியநாத லோகநாதன் என்பவர் புது

---

132. ச. ம. மோ, த. 6-46; இங்ஙனம் பயிற்றுவித்த தாசியின் வீட்டுக்கு உஸேன்கான் போனமையின் அவருக்கு அபராதம் 12 தேங்காய்கள்; அழைத்துக்கொண்டு போனவனுக்கு அபராதம் 12 தேங்காய்கள்.

133. 1 – 817. குவாலியர் என்பது மத்தியப் பிரதேசத்திலுள்ளது. இதன் வடக்கு, வடகிழக்கு, வடமேற்கு ஆகிய பகுதிகளில் சம்பல் என்ற ஆறு சூழ்ந்துள்ளது.

134 2-284 135. 1-841 136. 2-46

137. 2-191 138. 4-268 139. 2-244 140. 4-98

141. ச. ம. மோ. த. 18-76 141அ. ச, ம. மோ. த, 11-9

142. ச, ம, மோ. த, 18-1

நாடகத்துக்கு வருகிறேன் என்று விடுமுறையில் சென்றவர் நாடக நாளன்று வராமையால் தண்டனை 12 தேங்காய்கள் வசூலிக்கப்பட்டது என்றதால் இது அறியப்பெறும்.[143] இதன் அதிகாரியாக 1804இல் மல்லோரி நாகோஜி என்பவர் இருந்தார்.[144] கி. பி. 1819இல் வராஹப்பையா ராமசாமிய்யா கண் காணிப்பாளர் ஆனார்.[144அ] கி. பி. 1826 இல் குருவய்யா ஆதிநாராயணய்யா என்பவர் மேற்பார்வையாளராக இருந்தார்.[145] பாகவத மேளாவில் இருந்தவர் கட்குத் திங்கள் தோறும் ஊதியம் அளித்ததோடு[146] 8 நாட்களுக்கு ஒரு முறை அவர்கள் எண்ணெய் தேய்த்துக் குளிக்க எண்ணெயும் சீயக்காயும் தரப் பெற்றனர்.[147]

பாகவத மேளாவிடத்தில் இசை நாடகக் கருவிகள் யாவும் இருந் திருத்தல் எதிர்பார்க்கக்கூடியதே. நாடகம் நடனம் முதலியன நடக்கும் பொழுது அந்நிகழ்ச்சிகளுக்கு உரியவர்களிடம் அவர்கள் வேண்டுவனவற்றைப் பாகவத மேளா கொடுத்து உதவும். இதனை,

"தேவதாசியின் நடனத்துக்குப் பாகவத மேளாவினின்று சலங்கை நகை கொடுத்து வாங்குவது" [148]

என்பது வலியுறுத்தும்.

தஞ்சையில் மட்டும் பாகவத மேளா இருந்ததாகக் கொள்வதற்கில்லை. இந்நாளில் மெலட்டூர் பாகவத மேளா யாவரும் அறிந்ததொன்று. கிடைத் துள்ள மோடி ஆவணத் தமிழாக்கத்தினின்று மெலட்டூர் பற்றி எதுவும் தெரியவில்லை. ஆனால் மன்னார்குடியில் பாகவத மேளாவுக்குச் சுரோத் திரியம் கொடுத்ததாக ஒரு ஆவணச் செய்தி உள்ளது.[149]

## மேனாட்டிசை

**தஞ்சாவூர் பியாண்டு** ( Band ) என்பதும் யாவரும் அறிந்த ஒன்று. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து வெள்ளையரின் வரவு மிகுந்தமை யின் வெள்ளையரின் இசை இங்குப் பரவலாயிற்று; வெள்ளையரின் இசை நாட்டியம் இசைக்கருவிகள் இந்நாட்டில் பரவலாயின. வெள்ளையர் தம் இசைக்கருவிகளை இயக்கிப் பரிசு பெற்றனர். இந்நாட்டவரும் ஹிந்துஸ்தானி இசையில் பயிற்சி பெற்றாற்போன்று மேற்கத்திய இசையிலும் பயிற்சி பெறலாயினர்.

"1770 மேஸ்தர் அந்தோனி என்ற வெள்ளைக்காரன் சாபத் வாத்தியம் வாசித்தற்கு ரூ. 5"[150]

---

143. ச. ம. மோ. த. 14-30
144. ச. ம. மோ. த. 10-39
144அ. ச. ம. மோ. த. 18-25; 19-6
145. ச. ம. மோ. த. 28-65; 18-104
146. 4-46
147. ச. ம. மோ. த. 7-27
148. 5-487; 1-342; ச.ம.மோ.த. 24-22
149 2-221
150. ச. ம. மோ. த. 8-9

"30—4—1822 முகாம் திரௌபதாம்பாபுரம்; தஞ்சை வாத்தியக்காரன் - வெள்ளைக்காரன் - அக்னிஸ்புருஸ் இடம் ஐரிஷ் பைப் என்ற வாத்தியம் - அவனுக்குச் சம்பளம் - ரூ. 45"[151]

"1823 டாக்டர் சிவஸ்தர் மூலம் ஹாரப்பா (Harp) வாத்தியம் வாங்கினதற்கு 200 புலிவராகன்"[152]

"ஃபிடில் (Fiddle-Violin) தந்திகளை ராபர்ட் வெள்ளைக்காரனிடம் வாங்கியது"[153]

"பியானோ வாத்தியம் நன்கு செய்யும் மனவேல் நபராயி"[154]

என்ற ஆவணக் குறிப்புக்களினின்று சாபத் (?), ஐரிஷ் பைப், ஹார்ப், ஃபிடில், பியானோ முதலிய மேனாட்டு இசைக்கருவிகளை இயக்குபவர் பலரிருந்தனர் என அறியலாம். "பியானோ வாத்தியம் நன்கு செய்யும்" என்ற குறிப்பால் பியானோ முதலிய இசைக்கருவிகளைத் தமிழ்நாட்டிலேயே செய்யத் தொடங்கினர் என்பதும் போதரும்.

வெள்ளையர், செட்டைக்காரர்கள்[155] எனப்பட்டனர். (சட்டை அணிந்திருப்பவர் ஆதலின் சட்டைக்காரர்கள் எனப்பெற்றனர் போலும்) பியாண்டு வாசிப்பவர்கள் 42 பேர் என்ற ஒரு குறிப்பு இருக்கிறது.[156] இவர்களுள் கிளாரினெட், ஃப்ளூட் (Flute), வேய்ங்குழல், ஃபிரஞ்சு ஹார்ன் (French Horn), த்ரயம்பெட் (Trumpet) முதலியவற்றை இயக்குபவர் பலர் ஆவர்.

## பலவகை இசைக்கருவிகள்

ஸாரங்கி[157] போன்ற வடநாட்டு வாத்தியங்களும் பரவலாகப் பயிலப்பட்டிருந்தன. குப்புசாமி, கோபாலய்யா என்ற இருவரும் சாரங்கியில் வல்லவர் ஆவர்.[158]

அந்நாளில் நாதசுரம், சுருதி, ஜாலர், உடுக்கை, சந்திர சூரிய வாத்தியங்கள், புல்லாங்குழல், தித்தி, காகளம், இந்துஸ்தானி நகாரா, கர்ணா, டக்கா முதலிய இசைக்கருவிகளும் இருந்தன.[159]

"கர்ணாவுக்கு மட்டக்குதிரை, டக்காவுக்குக் குதிரை"[160] என்றுள்ளதால் இக்கருவிகளைக் குதிரைமேல் வைத்து இயக்கினர் என்று தோன்றுகிறது.

மிருதங்கம், ஸாரங்கி, ஸாபத் முதலியவை தோற்கருவிகள்[161] என்பது ஓர் ஆவணக் கூற்று.

151. 5-42 152. ச. ம. மோ. த. 5-89 153. 2-265
154. 1-160; ச. ம. மோ. த. 30-8; 5-8 155. 2-162
156. ச. ம. மோ. த. 16-45
157. The Music of India by H. A. Popley, Page 110 & 111
158. 1-248 159. 1-184, 185 160. 1-186 161. 1-228, 229

கி. பி. 1776க்குரிய ஆவணத்திலேயே வீணை குறிக்கப்பெறுகிறது.

"ஹுஜூரில் வீணையின் தந்தியை வாங்கிக் கொடுத்ததற்குப் பரங்கிப் பேட்டை வராகன் 8"

என்ற குறிப்பால்[162] மராட்டிய மன்னர் வீணை வாசித்தலில் வல்லவராய்த் திகழ்ந்தனர் என்பது அறியப்பெறும்.

"ஜெயபேரிகை (வெற்றி முரசு) எனும் வாத்தியமும் இருந்தது.[163]

"சௌ அகில்யாபாயி இடமுள்ள சங்கீதப்பெட்டி பழுதுபார்க்க ரூ. 7" என்ற குறிப்பால் சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம் அந்நாளில் இருந்தமை பெறப்படும்.[164]

தம்பூராவும் அந்நாளில் வழக்கிலிருந்தது.[165]

ஆங்கில இசையும் பேணப்பட்டு வந்தமையின் ஆங்கிலேய இசைநூல் களும் ஆங்கில நூல்களும் விலைக்குப் பெறப்பட்டன.[166]

பெண்களும் மேளம் வாசித்தார்கள் என்று தெரியவருகிறது.[167]

**பொம்மலாட்டம்** அந்நாளில் பரவலாக இருந்தது. இதில் வல்லவர் ராமசெட்டி என்று ஒரு ஆவணத்தினின்று அறியப்பெறும்;[168] மன்னாரு செட்டி என்று பிறிதொரு ஆவணத்தினின்று அறியப்பெறும்.[168]

**பொழுது போக்குக்காக** வேடம் தரித்து வேடிக்கை காட்டுவதுண்டு. சிலர் ஆட்டுக்கடா, புலி, கரடி, மான், பன்றி, சிங்கம் ஆகிய வேஷங்களைப் போட்டுக் கொண்டு நடித்தனர்.[169]

## நாட்டியம்

ஆண்களும் பெண்களும் நாட்டியம் ஆடினர். நாட்டியக்காரிகளைப் பற்றியும் நட்டுவனார்களைப் பற்றியும் பல செய்திகள் தெரியவரும். கி. பி. 1797இல் காமன் பண்டிகையை முன்னிட்டு நாச்சியார்குடியில் நாட்டியப் பெண்கள் பலர் இருந்தனர்.[170] திருவையாறு கோயிலில் நாட்டியப் பெண்கள் எண்மர் இருந்தனர்.[171] மகாராஜா சபையில் நாட்டியங்கள் அடிக்கடி நடைபெறும். தாசி காவேரி பெண் பெரியா, வெங்கடாசலம் பெண் உண்ணாமலை ஆகிய இவர்கள் 1801இல் அரசவையில் நாட்டியம் ஆடினர்.[172]

---

162. 1-155
163. 4-418
164. 4-226
165. ச. ம. மோ. த. 29-9
166. 2-199
167. 1-249
168. ச. ம. மோ. த. 27-21, 34
169. ச. ம. மோ. த. 4-1
170, 171. ச. ம. மோ. த. 19-35
172. ச. ம. மோ. த. 1-9

நாட்டியம் ஆடும் பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு. அன்னோர் சந்த்ரமா (?), வைர ராக்கடி, பேசரி, அட்டிகை, வெள்ளி மெட்டி, ஆகியவை அணிதல் கூடாது; நெற்றியில் குறுக்கே நீளமாகக் குங்குமம் இடக்கூடாது; சில குறிப்பிட்ட ரவிக்கை புடைவைகளை அணியக்கூடாது; கையில் உருமால் வைத்துக் கொள்ளக்கூடாது; வேலைப்பாடு செய்த நாடா அணிதல் கூடாது.[173] அரண்மனையில் நாட்டியம் ஆடும்பொழுது தெய்வத் தின்மேல் பதம் பிடிக்கலாம்; ராஜேஸ்ரீ மகாராஜ் சாகேப் மேல் பதம் அபிநயம் பிடிக்கலாம்; பிற 'நர ஸ்துதி' கூடாது.[174]

நட்டுவனார் சபையில் இருக்குங்கால் துப்பட்டாவோ அல்லது சால்வையோ கழுத்தில் அணியவேண்டும்; தலையில் அணியக்கூடாது; காலில் செருப்பு அணியக்கூடாது – என்பன நட்டுவனார்கட்குரிய சில கட்டுப் பாடுகளாம்.[175]

எனினும் இக்கட்டுப்பாடுகள் சுந்தரி என்றவளுக்கும் அவள் வமிசத்தார்க் கும் தளர்த்தப்பட்டிருந்தன. அவளுக்குப் பல அணிகலன்களும் இனாம் அளிக் கப்பெற்றன. கி. பி. 1819இல் அளிக்கப்பெற்ற இச்சலுகை, சுந்தரியினுடைய பாரம்பரியத்துக்கு இல்லை என்று, பிறிதொரு உத்தரவில் நீக்கப்பட்டது.[176] இச் சுந்தரிக்கு மேலும் சில சலுகைகள் தரப்பட்டன. ராஜேஸ்ரீ திவான் சாகேப் அவர்கள் "**சிலங்கணம்**" போய்வரும்பொழுது அவள் மகாராஜ் சபையில் ஆரத்தி எடுக்கவேண்டும்; அவளுக்கு ஜாம்தார் கானாவிலிருந்து சால்வை, கும்பினி ரூ. 20 தரப்படும்; அவள் நாட்டியம் ஆடினால் அவளுக்கு ரூ. 15 அளிக்கப்பெறும் – இங்ஙனம் அவட்குச் சில சலுகைகள் தரப்பெற்றன.[177] மேலும் தெலுங்கு ஆண்டுப் பிறப்பு, நவராத்திரி, தீபாவளி, சங்கராந்தி இப் பண்டிகை நாட்களில் முதல் நாட்டியம் சுந்தரிக்கு உரியது என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பெற்றது[178].

அரசாங்க உத்தியோகத்திலிருக்கும் நாட்டியம் வல்லவர் அரசு உத்தர வில்லாமல் வேறு ஊர்களுக்கு நாட்டியம் ஆடுவதற்குப் போகக்கூடாது. அங்ஙனம் சென்றவர் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர்.[179]

பெண்களும் அந்நாட்களில் நாடகத்தில் நடித்தனர்.[180] மிருதங்கம் வாசிக்கிற காமாட்சி[181] என்ற தொடரால் பெண்களும் மிருதங்கம் வாசித்தனர் என்று அறியப்பெறும். நாடகசாலையில் பெண்கள் உணவு அளிக்கப் பெற்றனர். 1825இல் உணவு நிறுத்தப்பெற்றுச் சம்பளம் அளிக்கப்பெற்றது.[182]

---

173. 9-2, 8 174. 9-4 175. 9-4; 5. 176. 9-5
177. 9-7, 8 178. 9-9 179. ச. ம. மோ. த. 6-18 180. 1-249
181. 8-201 182. ச. ம. மோ. த. 4-87

சங்கீத வித்யாதிகப் பிரிவினர் பெரிய அலுவலர்கள் வீட்டுக்குச் சென்று இசைப்பணி புரிதல் வேண்டும் என்ற ஒரு வழக்கமும் இருந்ததாதல் வேண்டும். இதனை,

"1834: ஸங்கீத வித்யாதிக பிரிவுக்குச் சொல்லி லக்ஷ்மண கோஸாவி அவர்களுடைய மேளவாத்தியங்களுடன் பகல் 2 மணிக்கு மந்திரிவர்ய சதாசிவ கேசவ பண்டிதருடைய வீட்டில் தயாராக இருக்கவேணும்"[183]

என்றமையான் அறியலாம்.

ஆண்களும் நாட்டியக்காரி வேஷம் போட்டுக்கொண்டு இரவில் ஊர்வல மாக வருவதுண்டு. அவ்வாறு வருங்கால் ஒரு சமயம் நாட்டியக்காரி வேஷம் போட்டுக் கொண்டு வந்த பிறிதொரு கூட்டத்துக்கும் மனவேறுபாடு ஏற்பட்டு ஒரு வழக்கு விசாரணை நடந்தது.[184] இங்ஙனம் பொழுது போக்குக்காக வேஷம் போட்டு நடித்துக்கொண்டு ஊர்வலம் வருதல் அந்நாட்களில் வெகு வாக நடைபெற்றது போலும்!

## நாடகம் நடத்த முன் அனுமதி

தனிப்பட்டவர்கள் நாடகம் நடத்துவதற்கு அரசாங்கத்திடம் முன் அனுமதி பெறவேண்டியிருந்தது.

வாணக்காரத் தெருவிலிருக்கும் அய்யாக்கண்ணுப் பிள்ளை என்பவர், குல தெய்வம் செங்கமல நாச்சியம்மனுக்கு விழாவெடுத்துத் தமயந்தி நாடகம் நடத்த அனுமதி வேண்டியுள்ளார். [185]

சகாநாயக்கன் தெரு வெங்குசாமி என்பவர் கண்டேராவ் சுவாமிக்கு முன் வள்ளியம்மை நாடகம் போட அனுமதி வேண்டினார். [186]

பறைத்தெருவிலிருக்கும் மூவர் இரண்டுநாட்கள் செவத்தரியார் என்னும் நாடகம் போடுவதற்கு அனுமதி கேட்டுள்ளனர். [187]

கருத்தட்டான்குடி ரோந்து பெருமாள், அனுமாருக்கு அபிஷேகம் செய்து ராமநாடகம் நடத்த அனுமதி வேண்டியுள்ளார். [188]

சக்வாரம்பாபுரம் சத்திரத்தைச் சேர்ந்த தேப்பெருமாநல்லூர்ப் பெரு மக்கள் வரதராஜசுவாமி ஸ்ரீராமநவமி உற்சவத்தில் 9ஆம் திருநாளில் கம்ஸவத நாடகம் சர்க்கார் மண்டகப்படியாக நடத்தவேண்டும் என்று வேண்டினர்.[189]

பச்சண்ணா சந்திலிருக்கும் காளியம்மனுக்கு மண்டகப்படி செய்து மார்க்கண்டேய நாடகம் போடுவதற்கு அனுமதி கேட்டுள்ளனர்.[190]

---

183. 2-220 184. 10-47 முதல் 58 முடிய 185. ச. ம. மோ. த. 10-7
186. ச. ம. மோ. த. 9-83 187, 188. ச. ம. மோ. த. 3-4
189. ச. ம, மோ. த. 5-16 190 ச. ம. மோ. த. 2-42

மாடியின் கீழ் அனுமாரிடம் அரிச்சந்திர நாடகம் நடத்தவும், சாமளா தேவிக்குக் கரகம் உக்ரகாளிக்குப் பூஜைகள் நடத்தி இரவில் இரணிய நாடகமும் நடத்த டபீர்குளம் சாலை 40 வீட்டினர் உத்தரவு வேண்டினர்.[191]

தெற்கலங்கத்தில் மளகீ கோபால நாயகர் என்பவர் வேங்கடாசலபதிக்குப் பூசை போட்டுத் தன் வீட்டுக்கு எதிரில் இரணிய நாடகம் நடத்த வேண்டுதல் விடுத்துள்ளார்.[192]

இங்ஙனம் உத்தரவு பெறாவிடில் கொத்தவால், டாணாக்காரர், மத்யஸ்தர் ஆகிய அலுவலர்கள் தடை செய்வர்கள் போலும். இக்காவலர்கள் தடை செய்யாமலிருத்தற்பொருட்டு முன் அனுமதி இன்றியமையாததாயிற்று.

## சில இசைக் கருவிகள் பெயர் மாற்றம்

சில இசைக்கருவிகட்குப் பெயர் மாற்றம் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.[193]

| முன்பேர் | மாற்றியமைத்த பேர் |
|---|---|
| தம்பூர் | கர்கரி |
| பெரிய தவுல் | பிருதுடுண்டுமா |
| சிறு நகாரா | லகுடுண்டுமா |
| ஜாங்கடை | ஜல்லரி |
| சிங்க | சிருங்க |
| துருதுரி | உத்தரி |
| இரும்பு முக்கோண வாத்தியம் | ஆப : கிங்கிணி |
| வெள்ளைக்கார கிளாரனெட் | மஞ்சுளசுவநா |
| துப்பாக்கி மாதிரியிருக்கும் வாத்தியம் | காஹாளம் |
| சுத்திக்கொண்டிருக்கும் கொம்பு | ஸர்ப காஹாளம்[194] |
| சலங்கையுள்ள தம்பட்டம் | சந்திரிகா |
| புல்லாங்குழல் | பாமா |

## இசை நூல்கள்

மோடி தமிழாக்கத்துள் குறிக்கப்பெற்றுள்ள சில அரிய இசை நூல்களைப் பற்றிக் கூறுதலும் இங்குப் பொருத்தமாகலாம்.

முதலாம் துளஜா சங்கீத சாராம்ருதம் என்ற இசைநூலை எழுதினார் என்பது முன்னர்க் கூறப்பட்டது. இது போன்ற பல இசை நூல்கள் மோடி ஆவணக் குறிப்புக்களிற் காணப் பெறுகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு :–

---

191. ச. ம. மோ. த. 8-31 192. 1-311. 193. ச. ம. மோ. த. 7-12, 18
194. Frontice piece, P. 123 of the Music of India by H. A. Popley.

சங்கீத ரத்னாகரம் (சம்ஸ்கிருதத்தில்)[195]
இந்துஸ்தானி மொழியில்; மூலம்
சாரங்கதேவர்[196]

சங்கீத தர்ப்பணம்[197] தாமோதரர் எழுதியது

சங்கீத மகரந்தம்[198]

சங்கீத ரத்னாகரம் தெலுங்கு எழுத்து[199]

சங்கீத சுதாகரம்[200] – ஹரிபாலர் எழுதியது

சங்கீத தீபிகா[201] தெலுங்கு எழுத்தில்

சங்கீத முக்தாவளி[202] தேவண்ணாசார்யர்

— இந்நூல்கள் யாவும் தஞ்சை மராட்டிய மன்னர் கற்றுணர்ந்தனராதல் கூடும்.

## சிவானந்த நட்டுவனர்

தஞ்சாவூரில் நாட்டியம் கற்றுக்கொடுப்பதில் வல்லவர்களும், தஞ்சையிலும் பிற இடங்களிலும் சிறப்புற வாழ்ந்தவர்களும், சுப்பராய ஓதுவார் என்ற நட்டுவாங்கம் வல்லவரின் மக்களும் ஆகிய பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியவர்களில் சிவானந்த நட்டுவனாரைப் பற்றி ஒரு ஆவணம்[202அ] கிடைத்துள்ளது. சிவானந்தம் தஞ்சைப் பெரிய கோவிலில் நட்டுவாங்க வேலையில் இருந்தபொழுது இரண்டாம் சிவாஜியின் மகள் ராஜஸா பாயி அம்மணி ராஜேசாயேப் அவர்களுடைய திருமணம் நடந்தது. அத்திருமணத்துக்குச் சிவானந்தம் சென்றிருந்தார். அப்பொழுது அரசர் தஞ்சையிலுள்ள தேவதாசிகள் எல்லோருக்கும் ஹிந்துஸ்தான் நாட்டியமும் கர்நாடக நாட்டியமும் கற்றுத்தரவேண்டும் என்று பணித்தார். அதன்படி சிவானந்தமும் அவர் உடன்பிறப்பினர் மூவரும் சேர்ந்து இரவும் பகலும் இடைவிடாது நாட்டியம் கற்றுக் கொடுத்தனர். எனினும் சிவானந்த நட்டுவனாரை ஹுஜூர் முன்னிலையில் நாட்டியம் செய்யக்கூடாது என்று பெரிய கோயில் மத்யஸ்தர் (அலுவலர்) தடைசெய்து விட்டார். அதனால் சிவானந்தம் முன்போல் அரசர் முன்னிலையில் நாட்டியம் ஆடுவதற்கு அனுமதி தரல் வேண்டும் என்று 10—10—1844இல் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.[203] இவ்வாவணத்திலிருந்து சிவானந்தம் மேற்குவீதியில் வசித்து வந்தவர் என்றும் தெரிய வருகிறது.[204]

---

195 12-257, 258,

196. யாதவ அரசர் இரண்டாம் சிங்கணன் காலத்தவர் (1210–1247)   197. 12–258

198. 12–258 (எண் 2895) இசை வகையுள் ஒன்றாகிய பிரபந்தங்களைப் பற்றிக்கூறுவது.
"In the musical parlance a **prabandha** denotes a composition with specific characteristics" - P. 271, Tanjore as a seat of Music.

199. 12 - 260 (எண் 2858)   200. 12 - 260 (எண் 2897)

201. 12 - 262 (எண் 2859)   202. 12 - 268 (எண் 2860)

202அ. பிற்சேர்க்கையில் இவ்வாவணம் கொடுக்கப்பட்டுள்ளது.   203. 204. 4-268, 264.

சரஸ்வதிமகாலில் இவ்வாவணத்தினை மொழிபெயர்த்தவர், 'சிவானந்தம் சிதம்பர நட்டுவனாரின் குமாரன்' என்று எழுதியுள்ளார். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நியமிக்கப்பட்டிருந்த மொழிபெயர்ப்பாளர் 'பரமானந்தத்தின் மகன்' என்று மொழி பெயர்த்துள்ளார். ஆனால் தஞ்சையில் நட்டுவாங்கத்தில் வல்லுநராக இருந்த நால்வரின் தந்தை சுப்பராய நட்டுவனார் என்று கருதப் படுகிறது.[205]

தந்தை பெயர் ஒத்துவரவில்லை. ஆவணத்தின்படி நோக்கினால் நால்வரும் 1840–1845இல் தஞ்சையிலிருந்தவராகவே தோன்றுகிறது. நால்வரும் இரவும் பகலும் நட்டுவாங்கம் சொல்லிக் கொடுத்தார்கள். சின்னையா மைசூர் சமஸ்தான வித்வான் ஆக இருந்தார்; வடிவேலு திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தார். பொன்னையா முத்துசாமி தீக்ஷிதரின் தாசராக இருந்தார். சிவானந்தம் சிவாஜியின் ஆதரவு பெற்றவராய்த் தஞ்சைப் பெரிய கோவில் நட்டுவாங்கம் உடையராய் இருந்தார். இந்நால்வரும் வெவ்வேறு இடங்களில் இருந்தவராகவே தோன்றுகின்றனர் ஆகையாலும், தந்தைபெயர் மாறுபட்டிருப்பதாலும், 'சிவானந்தம் என்ற பெயர் ஒற்றுமையாலும் சகோதரர் நால்வர் என்றமை கொண்டு சுப்பராய நட்டுவனாரின் மகன் இந்த ஆவணத் தில்கண்ட சிவானந்தம் என்று கொள்வது பொருந்துமா' என்று ஐயம் தோன்று கிறது. எங்ஙனமாயினும் இரண்டாம் சிவாஜி காலத்தில் நட்டுவாங்கம் வல்ல ஒருவர் வாழ்ந்தார் என்பதும், அவர் சிவானந்தம் என்ற பெயரினர் என்பதும், அவர் பலருக்கு ஹிந்துஸ்தானி கர்நாடக நாட்டியங்களைக் கற்றுத்தந்தார் என்பதும் உறுதி.

205. பக் 242, Tanjore as a seat of Music; நால்வர் – பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு.

# 17

# கல்வி நிலையங்கள் – சரஸ்வதி மகால்

முன்னாட்களில் இந்நாள் போல் யாவரும் கல்வி கற்பதற்கு வாய்ப்புக்களும் இல்லை; வாய்ப்புக்கள் இருந்தனவாகக் கொளினும் பயன்படுத்துவார் மிகச் சிலரே யாயினர். சமஸ்கிருதம் கற்றல் வேதியர்கட்குரியதாயிருந்தது; அன்னோர் வேதம் கற்க அக்கிரகாரங்களில் வசதிகள் இருந்தன. தஞ்சையில் மராட்டியர் ஆட்சி வருவதற்கு முன்னர் நாயக்கர் ஆட்சி நிலவியிருந்தது. அவர்கள் காலத்தில் தெலுங்கு மொழி ஆட்சி மொழியாக இருந்தது. முன்னதாகவே முஸ்லீம்கள் இந்நாட்டில் வேரூன்றிவிட்டனர். அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் இந்துஸ்தானி அரபி மொழிகள் வழக்கில் வந்தன. எனவே வடமொழி, தெலுங்கு, இந்துஸ்தானி ஆகிய மொழிகளிடையே தமிழும் வழங்கலாயிற்று. இந்நிலையில் மராட்டிய மொழி பேசும் மராட்டிய மன்னர்கள் தஞ்சையில் ஆட்சி செய்யத் தொடங்கியதும் அன்னோருடைய மொழி அரசாங்க மொழியாயிற்று. ஆகவே மராட்டிய மொழியையும் மக்கள் கற்க வேண்டிய நிலையுண்டாயிற்று. பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து ஆங்கிலேயரின் குறுக்கீடு ஏற்பட்டதால் ஆங்கிலமும் புகுந்தது; எனவே சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி, உருது, ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் தமிழ் மொழியும் கலந்து உறவாடித் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்து கொண்டிருந்தது[1] என்பது மிகையாகாது. எங்ஙனமாயினும் ஆங்கிலக் கல்வி புகட்டக் கல்விநிலையங்களை ஆங்கிலேயர் தொடங்கி நடத்தியமையின் மேனாட்டுக் கல்விக்கு வழி கோலப்பெற்றது[2] என்பது மன மகிழ்ச்சிக்கு ஏதுவாகிறது.

---

1. "Tamil the language of the Tamils was forced to fend for itself" - p. 286, last para, History of Tamil Nad, N. Subramanian
2. "Schwartz introduced English Schools in the Ramnad & Tanjore areas and for the first time in tha late 18th C. the window to the west was thrown open to the Tamils" – p. 286. History of Tamil Nad, N. Subramanian.

தஞ்சையில் "**சர்வ வித்யாசாலா**" என்ற பெயரில் கல்விநிலையம் இருந்ததாதல் வேண்டும். இதற்கு 1807இல் (?) "**நவவித்யா கலாநிதி சாலா**" என்று பெயர் மாற்றம் செய்யப்பெற்றது.[3] இந்நவவித்யா கலாநிதி சாலா தஞ்சைக்கோட்டையில் இருந்தது.[3அ] இக்கல்விநிலையத்தில் கி. பி. 1785இல் 85பேர் அத்தியயனம் செய்தார்கள்; அதாவது வேதம் கற்றனர் எனவும், ஆறு மொழிப் பள்ளியில் 385 பேர் படித்தனர் எனவும் தெரிகிறது.[4]

1797க்குரிய ஆவணம் நவவித்யா கலாநிதி சாலையில் இருந்த ஆசிரியர்கள் பற்றி விரிவாகக் கூறுகிறது.[5] அது வருமாறு:—

அ **வேதம் சொல்பவர்:** 16 பேர்

4 இருக்கு வேதம்; 4 யசுர் வேதம்; 2 சாம வேதம்; 2 அதர்வண வேதம்; 2 சுக்ல யசுர் வேதம்; 2 ஆறு சூத்திரம் சிரௌதி.

ஆ. **சாத்திர பாடம் சொல்பவர்:** 20 பேர்

2 தருக்கம்; 2 இலக்கணம்; 2 மீமாம்சை; 6 வேதாந்தம்; 2 துவைதம்; 2 அத்துவைதம்; 2 விசிட்டாத்துவைதம்; 2 தருமசாத்திரம்.

இ. **காவியம் முதலியன சொல்பவர்:**

4 காவியம்; 2 நாடகம்; 2 அலங்காரம்; 2 சோதிடம்; 2 ஸங்கீதம்; 2 சிற்பம்; வைத்தியம் – சாத்திரீயம், தமிழ், ஆங்கிலேயம், யுனானி.

ஈ. **எழுத்துக்களைக் கற்பிப்பவர்:** 26 பேர்

6 மகாராட்டிரம்; 2 தெலுங்கு; 2 தமிழ் கிரந்தம்; 6 துலுக்கு; 2 பார்சி; 2 அரபி; 2 தென்தேச பாஷை; 4 ஆங்கிலேயம்.

உ. கவாத்து 4; 4 கழிபட்டை (?); 4 குதிரைச்சவாரி.

ஊ. குழந்தைகளுக்குப் பாடம் எழுதிவைக்கிறவர்கள் 2

எ. பையன்களை அழைத்துக்கொண்டு வரும் வேலையாட்கள் – 4

நவவித்யா கலாநிதி சாலை உண்டியும் உறையுளும் கொடுத்துக் கல்வி கற்பிக்கும் நிலையமாக இருந்ததாதல் வேண்டும் என்று தெரிகிறது. ஆகையால் அக்கல்விநிலையத் தொடர்புடையவராக,

---

3. 4-62 3அ. ச. ம. மோ. த. 25-19

4. ச. ம. மோ. த. 5-40ஏ. 1832க்குரிய தமிழாக்கக் குறிப்பிலும் இங்ஙனமே உள்ளது. (ச. ம. மோ. த. 4-1) இதனுள் கண்ட ஆறுமொழிகள் – தமிழ், தெலுங்கு, மராட்டி, உருது, சமஸ்கிருதம், ஆங்கிலம் என்பன ஆகலாம்.

5. 1-2 முதல் 6

" சமையல்காரர் 10 ( இரண்டு பேர் தண்ணீர் நிறப்புகிறவர்; 2 பேர் பரிசாரகர் ); 1 கணக்குப் பிள்ளை ; 1 அம்பட்டன் ; 1 வண்ணான் "

என்று சமையல்காரர்களும் தொழிலாளிகளும் குறிக்கப்பெற்றனர்.

இக்கல்வி நிலையத்தில் வேதம் சமஸ்கிருதம் ஆகியவற்றைப் பார்ப்பனர் களே கற்றனர் என்பதில் ஐயமில்லை. தருக்கம், சோதிடம், மகாராட்டிரம், தெலுங்கு, தமிழ், ஆங்கிலம், உடற்பயிற்சி ஆகியவற்றைச் சத்திரியர் பயின்றனர். இங்ஙனம் ஓராவணம் குறிப்பிடுகின்றது.[6] இதனுள்,

" ஜம்பு சாஸ்திரி—தர்க்கம் சொல்லித் தருபவர் - மாணவர் க்ஷத்திரியர் 1 – யஜ்ஞேஸ்வர சாஸ்திரி – தர்க்கம் – மாணவர் அந்தணர் - 4 "

என்றிருப்பதால் பார்ப்பனர்கட்குத் தனியாகவும், க்ஷத்திரியர்கட்குத் தனியாகவும் பாடம் சொன்னார்கள் போலும் என்று நினைக்க இடம்தருகிறது.

கவாத்து[6அ] குதிரை ஏற்றம் ஆகிய உடற்பயிற்சிகளுக்குச் சிறப்பிடம் தந்தனர் என்பது அறியத்தக்கது.

பெண்களும் ஆசிரியராக இருந்தனர். "நவ வித்யாகலாநிதி பள்ளிக் கூடத்தில் சித்திரக்காரி செங்கம்மாளுக்கு மாசத்துக்கு 4 சக்கரம் சம்பளம்" என்பது இதனை வலியுறுத்தும்.[7]

படிக்கும் மாணவர்களைத் தரம் பிரித்துப் பாடம் கற்பித்தனர் என்பதும் தெரியவருகிறது.

"நவவித்யா கலாநிதி பள்ளிக்கூடத்தில் மகாராஷ்டிரம் எழுதும் பையன் கள், வஜிராதாவின் பையன்கள் 23, அரண்மனைப் பையன்கள் 27, பிராமணப் பையன்கள் 20, மராத்திப் பையன்கள் 46, சூத்திரப் பையன்கள் 7, சிப்பாய் பையன்கள் 6 ஆக 129."

"முதல் நெம்பர் பையன்கள் 16 பேர்களுக்கு எழுத்துக்களெல்லாம் பாளோபந்த்[7அ] மோடி எழுத்துப் படிக்கத் தெரியும்; கணக்கு ஐந்து விதமானதும் அமரம் 2ஆம் காண்டம் 6 வர்க்கமும், பாலபோதினி பிரதம பிரகரணமும் முக்கால் ஆகிவிட்டது."

" இரண்டாம் நெம்பர் பையன்கள் 13; எழுதப்படிக்கத் தெரியும்; பால போதினி $\frac{1}{4}$ பாகம்; அமரம் சற்றுத் தெரியும்; 5 பேருக்கு அமரம் தெரியாது."

" மூன்றாம் நெம்பர் பையன்கள் 30; எழுதப்படிக்கத் தெரியும்; அமரம் சற்றுத் தெரியும்; பாலபோதினி பிரதம பிரகரணம் தொடங்கியிருக்கிறது."

...... ...... ...... ...... ...... ...... ...
...... ...... ...... ...... ...... ...... ...

6. ச. ம. மோ. த. 25-19; 6-15; 20-7 6அ. போர்வீரர் புரியும் உடற்பயிற்சி
7. 2-39 7அ. மகாராட்டிரம்

"9ஆம் நம்பர் பையன்களுக்கு எழுத்துத் தெரியும்; அமரம் 2 சுலோகம் தெரியும் 15பேர்" ஆக 118 பையன்கள்.

— என்ற குறிப்புக்களால்[8] மாணாக்கர்களைத் தரம் பிரித்து அமைத்து அன்னோர் படித்துள்ள பாடங்களைக் கூறியுள்ளமையின், மாணாக்கர்களைத் தரம் பிரித்துப் பாடம் புகட்டிவந்தனர் என்று ஊகித்தறியலாம்.

பெரும்பாலும் ஆசிரியர்களுக்கு அரசே ஊதியம் அளித்து வந்ததாதல் வேண்டும். அவர்களுடைய மாத ஊதியம் 3 சக்கரம் முதல் 22 சக்கரம் வரையில் இருந்தது. வில்லியம் பரங்கி ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தவன் 21 சக்கரம் அளிக்கப்பட்டான். பார்சி ஆசிரியருக்கு 11 சக்கரம்; தெலுங்கு சொல்பவனுக்கு 4 சக்கரம்; ஓவியனுக்கு 3 சக்கரம்"[9]

நான்கு வீதிகளிலும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருந்தன.[10] அங்குப் பெரும்பாலும் படித்தவர்கள் பார்ப்பனர் அல்லாதவரேயாவர் என்று தோன்றுகிறது.

மாரியம்மன் கோயிலுக்குப் போகும் பாதையில் உள்ள பள்ளிக்கூடத்தில் 65 வயதுடைய சொக்கலிங்கம் என்ற ஆசிரியர் பணி செய்தார் எனவும், அவரிடம் படித்த மாணாக்கர் 31 பேர் எனவும், அவர்களுடைய வயது பெயர் விவரமும் ஓராவணக் குறிப்புக் கூறுகிறது.[11] ஆசிரியர்க்கு மாதச் சம்பளம் ரூ. 3—1—0 என்றும், ஓராண்டிற்குள் சில்லறையாக ரூ. 12-9-0 கிடைக்கும் என்றும், "ஒரு மாணவன் பள்ளியில் படிப்பதிலும் எழுதுவதிலும் நல்லவிதமாக வருவதற்கு 5 ஆண்டுகள் தேவைப்படும்" என்றும் தெரிகிறது.[12]

டபீர் குளத்துக்குப் போகும் பாதையில் ஒரு பள்ளி இருந்தது. இதில் மாணாக்கர் பதின்மூவர்; இங்கிருந்த ஆசிரியர் குப்பையாண்டிப் பிள்ளை; இவரும் மேலே கூறிய சொக்கலிங்கம் பிள்ளை போல மாணாக்கரிடமிருந்து சம்பளம் பெற்றுக் கொண்டு பாடம் சொல்லி வந்தவர் ஆவர்.[13]

டபீர் குளத்துக்குப் போகும் பாதையில் போலீஸ்காரரின் வீட்டருகில் நமச்சிவாய வாத்தியார் என்பவர் சொல்லிக் கொடுத்த பள்ளியிருந்தது. அவரிடமிருந்த மாணாக்கர் 14 பேர். இந்த ஆசிரியர்க்கு மாதந்தோறும் கிடைத்த தொகை ரூ. 4; ஆண்டொன்றுக்குக் கிடைத்தது ரூ. 1—8—0. இங்குப் படித்தவர்கள் நல்ல தேர்ச்சிபெற ஆறு ஆண்டுகள் ஆகும் என்று கண்டுள்ளது.[14]

வடக்கு வாசலுக்குக் கிழக்கில் கோந்தளக்காரனுடைய[15] வீட்டுக்கருகில் சிறுவர்கட்கு ஒரு பள்ளியிருந்தது[16]

---

8. ச. ம. மோ. த. 8-38  9. 11-16; 87  10. 1-316; ச. ம. மோ. த. 3-5; 2-48
11. 10-117, 118  12. 10-119  13. 10-119
14. 10-121  15. கோந்தளக்காரன்-அம்மன்பேரில் பாட்டுப்பாடுகிறவன்  16. 1-880

மேஸ்தர் ராமனுடைய[17] மாடியிலும் ஒரு பள்ளியிருந்தது; தஞ்சாவூர்க் கிடங்கில் காய்ச்சும் சாராயம் யானை குதிரை வகையராவுக்குப் போக, விற்று முதலான தொகை இப்பள்ளிக்கு அளிக்கப்பெற்றது.[18]

இதனால் சாராயக்கடை விற்றுமுதல் தொகையிலிருந்தும் கல்வி நிலைய ஆசிரியர்கட்குச் சம்பளம் அளிக்கப்பட்டது என அறியப்பெறும். இதை உறுதி செய்வது போன்று கீழ்க்கண்ட ஆவணக் குறிப்புக் காணப்படுகிறது :—

" நவ வித்யாகலாநிதி பள்ளிக்கூடம் படிக்கிற பிள்ளைகளுக்குக் காவிய பாடம் சொல்லுகிற சுப்பாசாஸ்திரிக்கு மாதத்திற்கு 15 சக்கரம் சம்பளத்தைச் சாராயப் பேட்டையின் தொகையிலிருந்து கொடுப்பது."[19]

மகர்நோன்புச் சாவடியிலும் பாதிரி நடத்திய பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது.[20]

1856இல் சிரேயஸ் சத்திரத்தில் இருந்த பள்ளிக்கூடத்தையும், தெற்கு வீதியில் இருந்த பள்ளிக்கூடத்தையும் எடுத்துவிட்டு, மேலவீதியில் ஒரு பள்ளிக்கூடம் தொடங்கப் பெற்றது. அதற்கு ஜேம்ஸ் என்பார் ஆசிரியராக நியமிக்கப் பட்டார்.[21]

'மங்களவாசம்' என்பது சிவாஜி II இன் காமக்கிழத்தியரின் மக்கள் வாழ்ந்த கட்டடம் ஆகும். இது தெற்குவீதியில் உள்ளது; அங்கும் ஒரு பாட சாலை இருந்ததாதல் வேண்டும்.[22]

தரங்கம்பாடியில், மேஸ்தர் ஜான் பாதிரி நடத்திய ஆங்கிலப்பள்ளி இருந்தது.[23]

முக்தாம்பாள் சத்திரத்தில் இருந்த பள்ளியில் 4 வேதங்களும், தர்க்கம், வியாகரணம், மீமாஞ்சை, வேதாந்தம், காவியம், ஆங்கிலம், மராட்டி, பார்ஸீ, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளும் கற்பிக்கப்பெற்றன; 435 பேர் படித்தார்கள்; இதில் தமிழ் கற்றவர்கள் 193 பேர்.[24]

கணபதி அக்கிரகாரத்தில் மாணாக்கரிடமிருந்து சம்பளம் பெற்றுச் சொல்லித் தந்த ஆசிரியர் நால்வர்; 72 பேருக்குப் பாடம் சொன்னார்கள்.[25]

ஈச்சங்குடி, கார்குடி, விசித்திரராஜபுரம், சோமேசுவரபுரம் ஆகிய ஊர்களிலும் மாணாக்கரிடமிருந்து சம்பளம் வசூலித்து நடத்திய பள்ளிகள் இருந்தன.[26]

---

17. ரெஸிடெண்ட் ஆக இருந்தவர்
18. 3-107; 7-672, 673
19. 2-86
20. 2-280
21. 3-83; 2-84
22. ச. ம. மோ. ச. 27-82
23. ச. ம. மோ. த. 13-108
24. ச. ம. மோ. த. 25-20
25. ச. ம. மோ. த. 25-21
26. 25-22

ராஜசாம்பாள்புரச் சத்திரத்திலும் மாணாக்கரிடம் சம்பளம் பெற்றுப் பள்ளிக்கூடம் நடத்தப்பெற்றது.[27]

வேற்றூர்களிலிருந்தும் வந்து படித்துச் சென்றனர் சிலர் என்று தெரிகிறது. பெனுகொண்டாவிலிருந்து ரங்கையா என்றொருவர் முக்தாம்பாள் புரம் இங்கிலீஷ் பள்ளிக்கு வந்து படிப்பு முடித்துக்கொண்டு தன் ஊர்க்குத் திரும்பிச் சென்றார். அவர் ஊர்க்குத் திரும்பிச் செல்ல ரூ. 10 அளிக்கப்பெற்ற தாக ஓராவணக்குறிப்பு நுவல்கிறது.[28]

ஐரோப்பியர் மட்டும் படிக்கும் பள்ளிகளும் இருந்தன.[29] ஐரோப்பிய பென்ஷன்தாரர்கள் முதலியோருடைய பெண்கள் படிப்பதற்காக நீலகிரியில் தருமப் பள்ளியிருந்தது.[30] இவ்விருவகைப் பள்ளிகட்கும் மராட்டிய மன்னர் உதவிகள் புரிந்தனர்.

1829இல் பத்து ஆசிரியர்கட்குச் சிறிது சம்பளம் குறைக்கப்பட்டதாகத் தெரிகிறது; பெயர்களும் குறைப்புத்தொகையும் காணப்படுகிறது; குறைத்த தற்கான காரணம் கூறவில்லை.[31]

நவவித்யாகலாநிதிசாலை எங்கிருந்தது என்ற வினாவெழக்கூடும். அது சரஸ்வதி பாண்டாரத்தில் அதாவது சரஸ்வதி மகாலில் இருந்ததென்பது,

"சரஸ்வதி பாண்டாரத்தில் நவவித்யா கலாநிதி சாலைக்கு இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துக்கு" ...........[32]

"சரஸ்வதி பாண்டாரம் திம்மதி — சேனாதுரந்தர ராமையா வராஹப் பையா சகம் 1771 கொடுத்த சீட்டு. மேற்கண்ட மகால் நவவித்யா கலாநிதி சாலைக்கு மாத நிஷ்பத்தி 18ஆம் பெருக்குக்காக ........."[33]

என்ற குறிப்புக்களால் தெற்றென அறியலாம்.

இந்நவ வித்யா கலாநிதி சாலையிலேயே சில மாணாக்கர்கள் தங்கி இருந்தனர் என்று தெரிகிறது. அன்னோர்க்குச் சனிக்கிழமையும் புதன்கிழமை யும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளவும், துடைத்துக்கொள்ளத் துண்டும், துப்பட்டியும் தரப்பெற்றன.[34]

அந்நாளில் உடற் பயிற்சிக்குச் சிறப்பிடம் தந்திருத்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கலாம். அதற்காக ஆசிரியரும் நியமனம் செய்யப் பெற்றிருந்தனர். "கவாத்" செய்வதற்கென்று நவவித்யா கலாநிதி சாலையில் தனி இடம் ஒதுக்கப் பெற்றிருந்தது.[35]

---

27. ச. ம. மோ. த. 25-22
28. ச. ம. மோ. த. 4-24
29. 1-162
30. 1-162, 168
31. ச. ம. மோ. த. 4-18
32. ச. ம. மோ. த. 2-28
33. ச. ம. மோ. த. 27-24
34. ச. ம. மோ. த. 2-12.
35. 2-188

அக்கல்வி நிலையத்திலே அச்சகமும் இருந்ததாதல் வேண்டும் என்று ஊகித்தறிய இடம் இருக்கிறது.[36]

நவவித்யா கலாநிதி சாலைக்குச் சொத்துக்கள் இருந்திருத்தல் கூடும். சமுத்திரத்தோட்டம் என்பது இக்கல்விக் கூடத்துக்கு 160 சக்கரம் கொடுத்து விலைக்கு வாங்கப்பெற்றது.[37]

## சரஸ்வதி பாண்டாரம் - சரஸ்வதி மகால்

சரஸ்வதி பாண்டாரத்தின் திம்மதிதார் ராஜேஸ்ரீ ராமையா வராஹப் பையா என்பவூர் ஆவர். இவ்வேலையில் இவர் இரண்டாம் சிவாஜி காலத்தில் இருந்தார்.

சரஸ்வதி பாண்டாரத்தைப் பற்றிக் கி. பி. 1776க்குரிய குறிப்பொன்று கிடைத்துள்ளது. அதில் சரஸ்வதி பாண்டாரத்தில் புத்தகம் பூசை செய்கிற வனைப் பற்றியுள்ளது. இராமபட்டன் என்றொருவன்; அவன் தகப்பன் வேலை செய்தபொழுது 6 சக்கரம் அவனுக்கு அளிக்கப்பெற்றது. அவன் இறந்தபின் இராமபட்டன் அவ் வேலைக்கு வந்தான். அவனுக்கு 3 சக்கரம் ஊதியம்; தன் தகப்பனுக்கு அளித்ததுபோல் 6 சக்கரம் தனக்கும் அளிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.[38]

1827க்கு உரிய குறிப்பொன்று கிருஷ்ணசாத்திரி என்பவர்க்கு ரூ. 10 சம்பளம் என்று கூறுகிறது.[39] ஆனால் அனுபவமுள்ள கிருஷ்ணாசாரி என்பவருக்கு 1828இல் சம்பளம் ரூ. 3 என்று காணப்படுகிறது.[40]

கி. பி. 1849க்குரிய குறிப்பொன்று "சரஸ்வதி மகாலிலுள்ளவர்கட்கு 11 பஞ்சாங்கங்கள்" என்றதால் சரசுவதி மகாலில் 11 பேர் வேலையிலிருந் தார்கள் என்று கொள்ள இடமிருக்கிறது. அரசு மறைந்தபிறகு (1858இல்) சரசுவதி மகாலில் மூவர் மட்டும் வேலை செய்தனர் என்று நினைக்க இடம் தருகிறது:–

"பூசை செய்கிறவன் கோபாலய்யா கண்ணய்யா ரூ. 3
காகிதப்புத்தகம் எடுக்கிறவன் சங்கர்பட் ரூ. 3
அச்சுப்புத்தகம் எடுக்கிறவன் குப்பாபட் ரூ. 3"

என்றமையால் இவ்வூகம் தோன்றுகிறது. ஓலைச்சுவடிகள் எடுக்கிறவன் இருந்தனனா என்று கேள்வி எழுகிறது. சகம் 1767 அதாவது கி. பி. 1845இல் பனை ஓலைப் புத்தகம் எடுப்பவர் நால்வர் இருந்தனர் என அறியவரு கிறது.[41] அங்ஙனமே காகிதப் புத்தகம் எடுப்பவர் அறுவர் இருந்தனர் எனத் தெரிகிறது;[42] ஆனால் 1875இல் ஒருவரே இருந்தார் என்பது உறுதி.[42அ]

---

36. 1-288 37. 8-148 38. 2-129 39. 4-428
40. 4-425 41. 12-188 42. 12-182 42அ. 8-81, 82

சரசுவதி மகாலில் புத்தக அட்டவணை தயார்செய்திருந்தனர். கி. பி. 1834க்குரிய குறிப்பு ஒன்று,

"ஸரஸ்வதி மகாலில் புத்தகங்களின் கணக்குக்காக கோரா கடுதாசி 5 தஸ்தாவை யுத்தசாலையினின்று கொடுக்கிறது"[43]

என்றிருப்பதால் கி. பி. 1834இல் புத்தகங்களின் அட்டவணை எழுதத் தொடங்கினர் என்று தெரியவருகிறது.

"சுக்லநாம சம்வத்சரம் தினுசுவாரி புத்தகங்களின் ஜாபிதா தய்யார் செய்த விபரம்"[44]

என்றுள்ள குறிப்பாலும் அதன் தொடர்ச்சியாலும், 24 தலைப்புக்களில் புத்தகங்களின் அட்டவணை தயார் செய்யப்பட்டதெனத் தெரிகிறது. அத் தலைப்புக்கள் பின்வருவன :—[45]

1. தரும சாத்திரம்
2. சப்த சாத்திரம்
3. தருக்க சாத்திரம்
4. மீமாஞ்சை
5. வேதாந்தம்
6. சோதிடம்
7. புராணம்
8. சமஸ்கிருத ராமாயணம் பிராகிருதம்
9. சமஸ்கிருத பாரதம் பிராகிருதம்[46]
10. சமஸ்கிருத பாகவதம் ,,
11. பகவத்கீதை
12. நிகண்டு
13. காவியம்
14. நாடகம்
15. மத்வ சாத்திரம்
16. அலங்காரம்
17. வைத்தியம்
18. சங்கீதம்
19. மந்திரம்
20. சிற்பம்
21. ஆகமம்
22. வேதம்
23. சிரௌதம்[47]
24. ஸ்ரோத்திரம்[48]

இந்நூல்களின் அட்டவணை 247 பக்கங்கள் கொண்டதாய் இருந்ததாதல் வேண்டும்.[49]

அவ் அட்டவணையில் ஒவ்வொரு புத்தகத்துக்கும் எழுதப்பெற்ற குறிப்புக்களுள் சில கீழே தரப்பெறுகின்றன :—

| நம்பர் | அரா | புத்தகப் பெயர் |
|---|---|---|
| 2231 | 623 | தொல்காப்பியம் வியாக்கியானம், தொல்காப்பிய முனி செய்தது, மூலம், அட்சரக்கிரமம் உச்சாரணக்கிரமம், திராவிடலிபி, பக்கம் 718, பாரத்துவாஜ நச்சினார்க்கினியர் செய்தது வியாக்கியானம் – பழுது.[50] |

— இக்குறிப்பு நிறைவுடையதன்று. அட்சரக் கிரமம் உச்சாரணக் கிரமம்

43. 1-807 44. 12-250 45. 12-250, 251
46. பிராகிருதம் – வடமொழித்திரிபாக உள்ளமொழி
47. சிரௌதம் – வேதங்களில் விதிக்கப்பட்டது
48. ஸ்ரோத்திரம் – தோத்திரம் போலும் 49. 12-250, 251 50. 12-252

என்றமையால் எழுத்தின்முறை பிறப்பு என்றவற்றைக் கூறும் பகுதியாதல் கூடும் எனக்கொண்டு, இந்நூல் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையாதல் கூடும் எனக்கொள்ளலாம். இதில் நெம்பர் என்பது நூல் நிலையத்துக்குரிய தொடர் எண்ணாகும். அரா என்பது நூல்கள் வைத்திருக்கும் அலமாரியின் பகுதி[50அ] எனத் தெரிகிறது.

" வீரசோழியம் மூலம், பக்கம் 388, முடிக்கப்படாதது, முன்னால் சொன்ன விஷயம் "[51]

— இதில் ஆசிரியர் பெயர் சொல்லவில்லை. 'முன்னால் சொன்ன விஷயம்' என்பது எதைக்குறிக்கும் எனத் தெரிய வாய்ப்பில்லை. தலைப்பு இலக்கணம் என்றிருப்பதால் நூலைப்பற்றித் தெரியாதவர்கள் இலக்கணம் என்று ஊகித்தறியலாம்.

" குளப்ப நாயக்கன் காதல் – நாராயண ஐயங்கார் செய்தது – ஸ்திரீ சிருங்கார விஷயம், பக்கம் 62 "[52] ( குளப்ப – கூளப்ப ).

— இதன் ஆசிரியர் பெயர் தவறாகவுள்ளது. இந்நாட்களில் கிடைக்கும் நூல் சுப்பிரதீபக் கவிராயர் இயற்றியது என்பர்.

" புகலூர் அந்தாதி – பாண்டியராஜா எழுதியது – பரமேஸ்வரர் துதி சொல்லப்பட்டிருக்கிறது – பக்கம் 24 – பழுது "[53]

— இதிலும் ஆசிரியர் பெயர் தவறாக இருக்கிறது. இந்நாட்களில் அச்சிடப்பெற்ற நூலில் நெற்குன்றவாண முதலியார் செய்ததாகக் காணப்பெறுகிறது.

" சடகோபரந்தாதி – சடகோபுரத்தாழ்வார் செய்தது, விஷ்ணு ஸ்துதி, பக்கம் 192, முடிக்கப்படாதது, பழுது"[54] இந்நாட்களில் இந்நூலாசிரியர் கம்பர் என்று கூறுவர்.

" கலிங்கத்துப்பரணி – மூலம் – ஸ்திரி சிருங்காரம் - பக்கம் 166 "[55]

— இதில் நூலாசிரியர் பெயர் கூறவில்லை. பரணி என்பது யாது என்று தெரியாதவர் இக்குறிப்பு எழுதியுள்ளார் என்பது தெரியவரும்.

---

50அ. " Ara in Telugu means a drawyer. On the Cadjan manuscripts the word " ara " is written......... The word " ara " means a compartment of the almirah " – Page 2 ( after P. 390 ) Deposition of D. W. 47. Kavi Govinda Row, Copyist Saraswathy Mahal Library – O. S. 26 of 1912 (31-10-1916)

51. 12-258 ( எண் 2288 ) 52. 12-258 ( எண் 2194) 53. 12-255 (எண் 2207)

54. 12-255 ( எண் 2209 ) 55. 12-257 ( எண் 2228 )

நூல் அட்டவணை தொகுத்தவர், ஸாஹஜியின் நாடகங்களைக் குறிப்பிடுங்கால், "மா. பா. லெக்ஷ்மிநாராயண நாடகம் - ஸாஹஜிராஜக்ருதம்" என்று குறிப்பு எழுதி, அடுத்துவந்த சில நூல்களுக்குப் 'பூர்வக' என்று குறித்தார். இதனான் அடுத்துக் குறிக்கப்பெற்ற அந்நூல்களெல்லாம் ஸாஹஜி எழுதியவை என்று கொள்ளக்கிடக்கிறது. ஆனால் இடையில், "தை. பா. சர்வாங்க[56] சுந்தரி விலாஸ நாடகம் – பூர்வக[57]" என்று காணப்படுகிறது. இது பற்றி நோக்கியபொழுது 'சார்வாங்க சுந்தரி நாடகம்' 'கிரி ராஜர்' என்ற கவிஞர் பாடியது என்று தெரியவந்தது[58].

— இங்ஙனம் தவறுபடக்குறிப்புக்கள் எழுதியனவும் சிலவுள.

சில சமயங்களில் 9 அல்லது 10 நூல்கள் எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து ஒரே எண் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

போஜ நிகண்டு, பிரயுக்தபத மஞ்சரி, ஐந்த்ர நிகண்டு, ஸ்லேஷார்த்த பத சங்க்ரஹ நிகண்டு, நாநார்த்த சப்தாநுசாஸன நிகண்டு, த்விரூப கோசம், மயூர நிகண்டு, பாஹ்ரிகேய நிகண்டு, த்ரிரூப கோசம் – ஆக 9 நூல்களுக்கு 1769 என்ற எண் கொடுக்கப்பட்டுள்ளது. இறுதியில் ஆக பத்ரம் (ஏடுகள்) 106க்குப் பக்கம் 212 என்று ஒரு குறிப்பும் உள்ளது[59].

இங்ஙனமே 1771 எண் கொண்டது 10 நூல்களையுடையதாக உள்ளது. இது பத்திரம் (ஏடுகள்) 105க்குப் பக்கம் 210 உடையது[60]. இது தெலுங்கு எழுத்தில் உள்ள ஓர் ஓலைச்சுவடி.

மேலும் ஒரு சுவடி 103 ஏடுகள் கொண்டது; 206 பக்கங்கள்; இச்சுவடியில் 19 நிகண்டுகள் உள்ளன என்று தெரிகிறது[61].

மேலே கண்டவண்ணம் குறிப்புக்களுடன் கூடிய நூல் அட்டவணையில் 3000க்கு மேற்பட்ட நூல்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன[62].

இங்ஙனம் குறிப்புக்களுடன் தொகுக்கப்பெற்ற அட்டவணை மட்டும் அன்றிச் சகம் 1785 (கி. பி. 1863) இல் "பனையோலைச்சுவடிகளின் ஜாபிதா" என்றொரு அட்டவணை எழுதப்பெற்றுள்ளது[63]. அவற்றுள் சிலவற்றில் ஒவ்வொன்றிலும் பல பிரதிகள் இருந்தமை காணலாம். உதாரணமாக: பிரதமயா கௌமதியில் 17 பிரதிகள்[64], காசிகா விருத்தியில் 10 பிரதிகள்[65], அமரமூலம் பிரதம காண்டம் 31 பிரதிகள், இரண்டாவது காண்டம் 32 பிரதிகள், மூன்றாவது

56 12-286 (எண் 2349) 57. 12-286 (எண் 2854)

58. Catalogue of Telugu Manuscripts, D. 658.

59. 12-278 60. 12-275 61. 12-274 (எண் 1770)

62. 12-301 (எண் 2992) 63. 2-160 64, 65. 12-174

காண்டம் 22 பிரதிகள்[66], நாநார்த்த ரத்னமாலா 11 பிரதிகள்[67], யசுர்வேத ஸடீகா பாஷ்யம் 21 பிரதிகள்[68], பராயித பாஷ்யம் 10 பிரதிகள், சங்கீத ரத்னா கரம் 7 பிரதிகள், அபிநய லக்ஷண ஸடீகா 9 பிரதிகள்[69], ராக லக்ஷணம் 13 பிரதிகள்[70], ரகு வம்சம், குமார சம்பவம் ஆகியவற்றுள் பல பிரதிகள்[71], ராமாயண சம்பு 8 பிரதிகள்; பாரத சம்பு 8 பிரதிகள்[72], குவலயாநந்தம் 10 பிரதிகள்[73], சாகுந்தல நாடகம் 10 பிரதிகள்[74], உத்தர ராம சரித்திரம் 9 பிரதிகள்[75], சமஸ்கிருத பாரதம் ஆதிபர்வம் 11 பிரதிகள், விராட பர்வம் 9 பிரதிகள், உத்யோக பர்வம் 8 பிரதிகள், ஹரி வம்சம் 11 பிரதிகள்[76], பகவத்கீதை 23 பிரதிகள்[77], திருவள்ளுவர் குறள் 10 பிரதிகள்[77அ] சௌந்தர்ய லகரி 12 பிரதிகள்[78], தொல்காப்பியம் 9 பிரதிகள், நன்னூல் 11 பிரதிகள்[79] — ஆக இங்ஙனம் பல நூல்களில் ஒவ்வொன்றிலும் பல படிகள் இருந்தமைக்குக் காரணம் நவவித்யா கலாநிதி சாலை மாணாக்கர் படித்தற்கேயாகலாம் எனத்தோன்றுகிறது. இப்புத்தகங்களின் " ஜாபிதாவை " நோக்கின் பிற்கண்ட தலைப்புக்களில் அவை அமையும்:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தரும சாத்திரம்[80] | நூல்கள் | 162 | பிரதிகள் | 363 |
| 2. | சப்த சாத்திரம்[81] | ,, | 37 | ,, | 113 |
| 3. | நிகண்டு[82] | ,, | 79 | ,, | 211 |
| 4. | வேதம்[83] | ,, | 62 | ,, | 174 |
| 5. | ஸ்ரௌத்த[84] | ,, | ... | ,, | 76 |
| 6. | சமஸ்கிருத வைத்திய சாத்திரம்[85] | | 53 | ,, | 131 |
| 7. | சங்கீதம்[86] | | — | ,, | 181 |
| 8. | காவியம்[87] | | — | ,, | 694 |
| 9. | அலங்காரம்[88] | | — | ,, | 100 |
| 10. | சமஸ்கிருத நாடகம்[89] | | — | ,, | 153 |
| 11. | மீமாம்சை[90] | | — | ,, | 58 |
| 12. | தருக்கம்[91] | | — | ,, | 143 |
| 13. | சமஸ்கிருத பாரதம்[92] | | — | ,, | 152 |
| 14. | பாகவதம்[93] | | — | ,, | 238 |
| 15. | சோதிடம்[94] | | — | ,, | 132 |
| 16. | ஆகம சாத்திரம்[95] | நூல்கள் | 43 | ,, | 56 |
| 17. | ஸம்ஸ்கிருத கீதை[96] | ,, | 23 | ,, | 67 |

66. 12-175 67. 12-176 68. 12-178 69. 12-188
70. 12-184 71. 12-185, 187 72. 12-188 73. 12-191
74. 12-192 75. 12-193 76. 12-197 77. 12-203
77அ. 12-222 78. 12-226 79. 12-228 (மூலம் மட்டும் இருப்பனபோலும்)
80. 12-169 81. 12-174 82. 12-175 83. 12-179
84. 12-181 85. 12-181 86. 12-185 87. 12-191
88 12-192 89. 12-194 90. 12-195 91. 12-196
92. 12-197 93. 12-200 94. 12-202 95. 12-208
96. 12-204

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | ராமாயணம்[97] | | — | ,, | 311 |
| 19. | பிராகிருத பத்ய காவியம்[98] | | — | ,, | 534 |
| 20. | பிராகிருத நாடகங்கள்[99] | | — | ,, | 254 |
| 21. | சில்ப சாத்திரம்[100] | நூல்கள் | 16 | ,, | 22 |
| 22. | தமிழ் வைத்யம்[101] | | — | ,, | 157 |
| 23. | தமிழ் நூல்கள்[102] | | — | ,, | 732 |
| 24. | சம்ஸ்கிருத புராணம்[103] | | — | ,, | 57 |

இங்ஙனம் கி. பி. 1863இல் புத்தக அட்டவணை தயாரித்தபின்னர் டாக்டர் ஏ. சி. பர்னல் நூல்நிலைய அட்டவணை தயாரித்ததாகத் தெரிகிறது. குப்பா பட்லு என்ற தெலுங்கர் நூல்நிலைய அலுவலர். அவர் இது பற்றி எழுதிவைத்த குறிப்புப் பின்வருமாறு :-

" 1871 ஸு மாறிச்சி மீ 24

பரனர்* துரையவர்கள் புஸ்தகங்களைப் பார்த்து னம்பர்கள் போட ஆரம்பிச்சது.

குப்பா பட்லு ( தெலுங்கில் )

ஷை ஸு மேன மீ 13
சேகரன் வேலை பார்க்கத் துடங்கினது "[104]

இதனால் 24—3—1871இல் பர்னல் நூல்நிலைய அட்டவணை தயாரிக்கத் தொடங்கினார்[105] என்றும், 13—5—1871இல் சேகரன் என்பான் உதவியாளனாக நியமிக்கப்பெற்றான் என்றும் அறியவருகிறது. பர்னல் நூல் அட்டவணை தயாரிக்குங்கால், காணப்படாத நூல்களையும் பிறர் எடுத்துச் சென்றிருந்து திருப்பித் தந்தவற்றையும் தனியே குறிப்பு வைக்குமாறு பணித்தார் என்று தெரியவருகிறது.[106]

நூல் அட்டணை தயாரிக்குங்கால், 17—7—1871இல் பர்னலுக்குச் சில சமஸ்கிருத அச்சுப்புத்தகங்கள் இனாமாக வழங்கப்பட்டன. அந்நூல்கள்

---

97. 12-பக்கம் 204 முதல் 208 வரை 98. 12-பக். 208 முதல் 214 வரை

99. 12-பக். 2.4 முதல் 217 வரை 100. 12-218

101. 12-பக். 218 முதல் 221 வரை 102, 103. 12-229 104. 8-80

105. In March 1871 the then Governor of Madras Lord Napier, deputed A. C. Burnell* to catalogue the Manuscripts. Dr. A. C. Burnell has catalogued the Sanskrit manuscripts in three volumes (P. 5. Saraswathi Mahal, R. Jayaraman). The then government of Madras by G. O. No. 71 dated 10th March 1871 appointed Dr. A. C. Burnell to catalogue the manuscripts in the Thanjavur Library ( P. 4 - do - ) 106. 12-48

ஆவன; குமார சம்பவ சம்பு, தருக்க சங்கிரகம், தருக்க சாத்திரம், தருக்க சங்கிரக தீபிகை, முக்தி ரத்னாவளி என்பனவாம்.[107] 2—2—1872இல் ரகுவம்சம் இரண்டு புத்தகங்கள் அளிக்கப்பெற்றன.[108]

சரஸ்வதி மகாலிலிருந்து பல நூல்களை அரசபரம்பரையச் சேர்ந்தவர் களும், பெரிய அலுவலர்களும், அரச மாதேவிகளும் எடுத்துச்சென்று படித்துள் ளார்கள் எனத் தெரியவருகிறது.

" சரசுவதி மகாலிலிருந்து அமரம், சப்தம், ஸமாஸ சக்ரம் இவை மூன்றும் மாப்பிள்ளையிடம் கொடுத்துத் திரும்பி வாங்குகிறது "[109]
— இது 1811இல் விடுத்த அரசு ஆணையாகும்.

" ஜிஜாம்பாபாயி சாயேபு அரண்மனைக்கு ஒரு மாசக் கெடுவுக்கு வைசாக மகத்துவம் "[110]

" சையம்பாபாயி சாயேபு அரண்மனைக்கு ஒரு மாசக்கெடுவுக்குச் சிராவண மகத்துவம் "[111]

" சூன் மீ 19 அசூர் கச்சேரி ராமய்யா அவர்களுக்கு அத்துவைத நிர்ணயம், சங்கீத கீதம் "[112]

" ஜயந்தி அம்பாபாயி சாயேபு அரண்மனைக்கு ஒரு மாசக்கெடுவுக்கு ராமாயணம் அயோத்தியா காண்டம் டிை வியாக்கியானம் "[113]

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடத்தில் மராட்டிய மன்னர்கட்கு மிகுந்த மரியாதையுண்டு. கி. பி. 1841இல் ஸ்ரீசங்கராசாரியார்க்குத் தருமா மிருத மகோததி என்ற நூல் வேண்டிவந்தது. ஆகவே சங்கராசாரியாரின் அலுவலர் கணபதி சாஸ்திரிகள் அந்நூல் இரண்டு மாதங்களுக்குள் படித்துத் திருப்பிவிடுவதாகக் கூறிப் பெற்றுச் சென்றார்.[114]

எனவே நூல்களைச் சிலருக்குக் கடனாகக் கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் பழக்கமும் சரஸ்வதி மகாலில் இருந்து வந்தது என்பது உறுதி.

நூல் பட்டியல் தயாரித்ததற்குப் பிறகும், நூல்களை அரசபரம்பரையினர் எடுத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிகிறது.

" 76 வருஷம் நவம்பர் மாதம் 30ஆம் தேதி வரை பாக்கி:— "

" மா. காமாக்ஷியம்பாபாயி சாயேபு அவர்கள் அரண்மனைக்கு ஒரு மாசக் கெடுவுக்குத் துலாகாவேரி மகத்துவ புஸ்தகம் – 1 "

---

107. 8-80  108. 8-81  109. 2-180  110. 8-87
111, 112. 8-87  113. 8-88  114. ச. ம. மோ, த, 8-88

" நவம்பர் 11 : ஜிஜாம்பாபாயி சாயேபு அவர்கள் அரண்மனைக்கு பிராகிருத பாரதம் அநுசாஸன பருவம் புத்தகம் – 1 "[115]

இவற்றான் இச்சரசுவதி மகால் நூல் நிலையம் மராட்டிய அரசரது பரம்பரை உடைமையாய் அவர்கட்குப் பயன்பட்டிருந்தமை வெளியாகிறது.

30—3—1826இல் பிஷப் ஹீபர் என்பார் தஞ்சையில் இரண்டாம் சரபோஜியுடன் நூல் நிலையத்தைப் பார்த்தார் என்றும், அங்கு இலத்தீன் முதலிய மொழிகளில் உள்ள நூல்கள் 10 அலமாரிகளிலும், மராத்திய சமஸ்கிருத ஏட்டுச் சுவடிகள் இரண்டிலும் இருந்தனவாகக் குறிப்பிடுகிறார்[116].

இரண்டாம் சரபோஜி காலத்தில்தான் பல ஏட்டுச்சுவடிகள் சேகரிக்கப் பட்டன. காசியினின்று கிரந்தங்களை எழுதியனுப்பத் திருப்பனந்தாளில் காசித்தம்பிரானிடம் ரூ. 1000 அளித்ததாகவும், அதற்கு அவர் பதில் கடிதம் எழுதியதாகவும், கி. பி. 1805க்குரிய ஆவணக்குறிப்பால் அறியப்பெறும்[117]. சிவரகசியம் என்ற நூல் 1824இல் விலைக்கு வாங்கிச் சேர்க்கப்பட்டது[117அ].

வேதசாலை சாம வேத ஆசிரியர் அண்ணாசாமி சிரௌதி வழி பூனா விலிருந்த மஹாதேவபட் என்பவரிடம் இருந்து 100 சக்கரங்கள் அளித்துச் சாமவேதச் சுவடிகள் பெறப்பட்டன[118].

பாலா தீக்ஷிதரிடமிருந்து 1828இல் சிரௌத[119] புத்தகங்கள் வாங்கப் பெற்றன.[120] 1835இல் இவரிடத்திருந்தே போதாயனக்னி பாஷ்யம், கனகசபாகிருத சோடச சம்ஸ்காரம், அபரபிரயோகம் என்பவை உள்ள ஓலைச் சுவடிகள் 4 சக்கரம் 5 பணம் கொடுத்து வாங்கப்பெற்றன[120அ].

ரானோஜி மகாலோஜி காட்கே என்பார் தம் நாட்டுக்குச் சென்றவர் திரும்பி வருங்கால் சோதிட நூல்கள் வாங்கிவர ரூ. 200 கொடுக்கப்பெற்றார்[121] இது 1828இல் நிகழ்ந்தது.

1829இல் உடையார்பாளையத்தில் அப்பைய தீக்ஷிதர் புத்தகங்கள் கொண்டுவரப் பெற்றன[122].

---

115. 8-89
116. Last days of Bishop Heber by Thomas Robinson, Page 159 : " A noble room with 3 pillars and handsomely furnished in the English style. On the one side there are portraits of the Maratha dynasty from Shahajee to Shivajee, ten book cases containing a very fair collection of French, English, German, Greek and Latin books and two others of Maratha & Sanskrit manuscripts "
117. 2-118 ; சரஸ்வதிமஹால் – திரு. ஆர் ஜெயராமன், பக்கம் 28   117அ. 5-87
118. 4-202   119. சிரௌதம் – வேதத்தில் விதிக்கப்பட்டது ; சிரௌதி–வேதத்தில் கூறப்பட்ட கருமங்களில் வல்லவன்.
120. 2-61   120அ. ச. ம. மோ. த. 4-89   121. 4-429   122. 4-242

கி. பி. 1829இல் ஆறுமுகம் பிள்ளையிடம் இருந்து தமிழ்ப் புத்தகங்கள் ரூ. 20 அளித்து வாங்கப்பெற்றன[123]. இதே ஆண்டில் காசியிலிருந்து காசித் தம்பிரான் அவர்கள் வழி ரூ. 299க்குப் புத்தகங்கள் வாங்கப்பெற்றன.[124]

வராஹப்பையாவிடம் வாத்தியங்கள் கற்றுக்கொள்பவர் வழி வாத்திய நூல்கள் ரூ. 6க்கு வாங்கப்பெற்றன[125].

ஆங்கிலப் புத்தகங்கள் பலவும் வாங்கப்பெற்றன. 18—7—1821இல் காசியிலிருந்து இரண்டாம் சரபோஜி தாம் எழுதிய மடலில் டூரியன் (Turin) என்பவர் இடமிருந்து ஒரு பெட்டி புத்தகங்கள் வருகின்றன என்றும், அப் புத்தகங்களை இளைய திவானிடம் அளிக்கவேண்டும் என்றும் குறித்துள்ளார்.[126]

கி. பி. 1807இல் மில்தர் ஹீபசி இடமிருந்து ரூ. 64க்கு ஆங்கிலப் புத்தகங்கள் வாங்கப்பெற்றன.[127]

கி. பி. 1829இல் இங்கிலீஷ் ஜான்ஸன் அகராதி 3 பிரதிகள் ரூ. 7½க்கு வாங்கப்பெற்றன.[128]

இந்த நூல்நிலையம் மராட்டிய அரச பரம்பரையினரின் உடைமையாகையால் இந்நூல் நிலையத்தை வளர்ப்பதில் அன்னோர் கண்ணுங்கருத்துமாய் இருந்தனர்.

1841இல் ரிஸிடெண்ட் மூலம் சென்னையிலிருந்து ஆப்பிரிக்கப் படப் புத்தகம் (Atlas) நான்கு பிரதிகள் வாங்கப்பெற்றன.[129] புதுச்சேரி முத்துசாமிப் பிள்ளையிடமிருந்து 11ஆவது நிகண்டு அச்சிட்டது 3 பிரதிகள் வாங்கப் பெற்றன.[130]

கல்கத்தாவில் 1846இல் வெளியிடப்பெற்ற லார்ட் பிஷப் பாதிரியின் சரித்திரம் 12 பிரதிகள் வாங்கப்பெற்றன.[131]

1—11—1860இல் உடையார்பாளையம் சாமாசாரியருடைய நூல்கள் சரஸ்வதி மகாலில் சேர்க்கப்பெற்றன.[132]

1853இல் சரஸ்வதி பாண்டாரத்தில் ஆங்கில நூல்கள் வைப்பதற்கு ஜீரத்கானாவில் மூர்த்தி இருக்கும் மண்டபத்தில் தெற்குப் பக்கம் சுவரையடுத்து

---

123. 4-229 124. 4-280 125. ச. ம. மோ. த. 4-24
126. 5-127; 86; இளையதிவான் – இளவரசராகிய சிவாஜி 127. 2-199
128. ச. ம. மோ. த. 4-24; கி. பி. 1842இலும் ஜான்ஸன் இங்கிலீஷ் அகராதி வாங்கியதாக அறியவருகிறது: ச. ம. மோ. த. 1-160; 129. ச. ம. மோ. த. 8-85
130 2-264, 265. 131. ச. ம. மோ. த. 5-8 132. 8-172

அலமாரிகள் 6; வடக்குப் பக்கச் சுவரையடுத்து 6 அலமாரிகள்; கிழக்குப பக்கச் சுவரையடுத்துத் தெற்குப்பகுதியில் அலமாரி 1; வடக்குப் பகுதியில் அலமாரி 1; மொத்தம் 14 புதிய அலமாரிகள் செய்து சேர்க்கப்பெற்றன.[133]

பழுதடைந்த அச்சு நூல்களைப் பழுதுபார்த்து மீண்டும் கட்டுதல் (பைண்டு செய்தல்) அந்நாளிலும் உண்டு. இதனை, "1828; தாவீத் பிள்ளை மூலம் ஆங்கிலப் புத்தகங்களைப் பழுதுபார்க்க ருஸ்தும்ஜியின் கடையில் காகிதம் 2 தஸ்தா ரூ. 2" என்ற குறிப்பால் அறியலாம்.[134]

சரபோஜி ஒரு அச்சகம் நிறுவி இருந்தார். பல மொழிகளிலும் நூல்கள் அச்சிட வசதியிருந்தது. சுப்பிரமணிய சாஸ்திரி என்பவர் "குமார சம்பவம் சம்பு"[134அ] என்ற நூல் எழுதினார். அதனை ஹுஜூர் மகாலில் அச்சிட வேண்டுகோள் விடுத்துள்ளார். இது 1813க்குரிய ஆவணக்குறிப்பு.[135] இது அச்சிடப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதை பர்னலுக்களித்த அச்சு நூல்களில் இஃதொன்றாக இருப்பதால் அறியலாம்.[135அ]

கி. பி. 1807க்குரிய குறிப்பொன்று,

"அச்செழுத்துக்களின் கணக்கு; இங்கிலாந்திலிருந்து சரபோஜி தன் அச்சகத்துக்காக அச்செழுத்துக்களை வாங்கினர்"[135ஆ]

என்பதால் 1807 லேயே அச்சகம் தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் அறியப்பெறும். மராட்டிய மொழியிலும் அச்சிட்டார்கள் என்று பிஷப் ஹீபர் எழுதிய 30—3—1825க்குரிய குறிப்பால் அறியப்பெறும்.[136]

"1827 ஆங்கிலேய புத்தகங்களைத் தயார் செய்யக் கும்பினி ரூ. 30"

என்ற குறிப்பால்[137] ஆங்கிலத்திலேயும் நூல்கள் அச்சிடப்பட்டன என்பது போதரும்.

சரஸ்வதி மகாலை வளர்த்தற்குரிய சிறந்த வழி பல புதிய ஏட்டுச் சுவடிகளைப் படியெடுத்தலும், பழுதடைந்த சுவடிகளைப் புதுப்பித்தலுமே என்பதை அறிந்த அரசர் பல மொழிகளிலுள்ள சுவடிகளை இடையீடின்றிப் பல மொழிகளில் வல்லவரை நியமித்துப்படியெடுக்கச் செய்தார். படியெடுத்தவர்கள் பலராதல் கூடும் என்பதை 1827இல் விலைக்கு வாங்கப்பெற்ற எழுத்தாணிகள் எண்ணிக்கையைப் பார்த்தும் அறியலாம்:—

"ராஜஸாம்பாபுரம் அன்ன சத்திரத்திலிருந்து ஸரஸ்வதி மகாலுக்கு 501 எழுத்தாணிகட்குச் சக்கரம் 43—8⅜" என்பது அக்குறிப்பு[138].

---

133. ச. ம. மோ. த. 28-88
134. 4-445
134அ. சம்பு – செய்யுளும் வசனமும் விரவிவரும் பிரபந்த வகை
135. 1-178
135அ. அடிக்குறிப்பு 107க்குரியது காண்க
135ஆ. 8-267
136. The rarest curiosity of an Indian Court is an English Printing Press working by native Christians in which they struck off a sentence in Maratha in the Bishop's presence in honour of his visit.
137. 4-212.
138. 4-198

ஏடு எழுதுவோர் மாதச் சம்பளத்திலும் நியமிக்கப் பெற்றிருந்தனர். அன்னோர்க்கு மாதம் 6 சக்கரம் அளிக்கப்பெற்றது[139].

மராட்டி மொழியிலும், தமிழ் மொழியிலும் ஏடுகளில் பெயர்த்தெழுதினர்.

பாளோபந்து (மராட்டி) புத்தகம் எழுதியவர் கிருஷ்ணபட் கோனேரிபட் என்ற பெயருடையவர். இவர் கி. பி. 1823இல் "பாகவதம் தசம ஸ்கந்தம் பூர்வார்த்தம்" ஏறத்தாழ 5700 கிரந்தங்கள் எழுதினார். இவருக்கு 100க்கு 1 சக்கரம் வீதம் கொடுக்கப்பட்டது.[140]

தமிழ் ஓலைச்சுவடி கம்பராமாயணமும் பெயர்த்தெழுதப்பட்டது. பக்கம் 1978; வரிகள் 14200; பணத்துக்கு 150 வரிசை வீதம் கொடுக்கப்பட்டது.[141]

ஸ்காந்த புராணம், கூர்ம புராணம் 1829இல் எழுதப்பெற்றன.[142]

வைத்திய நூல்கள் எழுத ஆயிரம் கிரந்தத்துக்கு 4 பணம்வீதம் அளிக்கப் பெற்றது.[143]

வேத புத்தகம் எழுத 1000 கிரந்தத்துக்கு ரூ.$1\frac{1}{2}$ வீதமும், யஜுர் வேத பாஷ்யம் கிரந்த லிபியில் 1000 கிரந்தம் எழுத ரூ. 3 வீதமும் அளிக்கப்பெற்றன.[144] இது குப்பாசாரிக்குக் கொடுத்தது. ஆனால் அனந்தாசாரி என்பவர் யஜுர் வேத பாஷயம் எழுதுகையில் இவர்க்கு 1000 கிரந்தத்திற்கு 1சக்கரம் வீதம் தான் கொடுக்கப்பெற்றது.[145]

தமிழ் எழுதுவதற்குத் திருவேங்கடம் பிள்ளைக்குக் கிரந்தம் 1000க்கு 10 சக்கரம் வீதம் அளிக்கப்பெற்றது.[146]

| | |
|---|---|
| "வேத சாலையில் எஜுர்வேத புத்தகம் 4ஆம் அஷ்டகம் கிரந்தம் | 1105 |
| 5ஆம் ,, | 1495 |
| மொத்தம் கிரந்தம் | 2600 |

2600 கிரந்தம் எழுதிய சீனிவாசாசாரிக்கு 3 சக்கரம் 9 பணம்.

| | |
|---|---|
| வேதசாலையில் ரிக்வேதம் சப்தமாஷ்டகம் கிரந்தம் | 1462 |
| ,, ஷஷ்டாஷ்டகம் ,, | 1639 |
| ஆகக் கிரந்தம் | 3101 |

3101 கிரந்தம் எழுதியுள்ளவர்க்கு 4 சக்கரம் 6 பணம் அளிக்கப்பெற்றது.[147]

139. 4-67
140, 141. ச. ம. மோ. த, 4-86
142. 4-229
143. ச. ம. மோ. த. 20-27, 28
144. 4-434
145. ச. ம. மோ. த. 4-7
146. ச. ம, மோ. த. 4-34
147. ச. ம, மோ. த. 10-21

இவற்றால் வேதம் படியெடுத்தல் வேதசாலையில் நிகழ்ந்ததென்றும், 1000 கிரந்தத்துக்கு $1\frac{1}{2}$ சக்கரம் வீதம் அளிக்கப்பெற்றது என்றும் போதரும்.

" சரஸ்வதி பாண்டாரம் ஓலைச்சுவடி கந்த புராணம் சம்பவ காண்டம் தமிழ் எழுத்து ஓலைகள் 358க்கும் பாடல்கள் 1712, பணத்துக்கு 60 பாடல்கள் வீதம் $29\frac{1}{2}$ பணம் " என்றொரு குறிப்பு உள்ளது.[148]

ஸ்காந்த புராணம் யுத்தகாண்டம் நாகரி லிபியில் 1829இல் படியெடுக்கப் பட்டது.[149] தமிழ்க் கந்தபுராணம் யுத்தகாண்டமும் படியெடுக்கப்பட்டது.[150]

பாளோபந்து (மராட்டி) புஸ்தகம் ஸ்மிருதி சந்திரிகா விவஹார காண்டம் 3 பேர்கள் பிரித்துக்கொண்டு படியெடுத்தனர்.[151] அத்யாத்ம ராமாயணமும் படியெடுக்கப்பட்டது.[152]

கந்த புராணம் அசுர காண்டம் தமிழ் படியெடுக்க 3 சக்கரம் $1\frac{3}{4}$ பணம் அளிக்கப்பெற்றது.[153]

1830இல் பாளோபந்து நூல்கள் அக்னேசுவர மகாத்மியம், பஞ்சநத மான்மியம், சந்திரகலாரத்னம், எஜுர்வேத பாஷ்யம் ஆகியவற்றைத் தனித்தனி ஒவ்வொருவர் படியெடுத்தனர். "[155]

யோகவாசிஷ்டம் நிர்வாக பிரகரணம், ஷை உத்தரார்த்தம், ஷை நகர கண்டம், பவிஷ்யோத்தர புராணம் ஆகியனவும் எழுதப்பெற்றன.[156]

ஓலைப் புத்தகங்கள் எழுதியவர்களின் பெயர்களும் காணப்படுகின்றன.[157]

ஓலைப் புத்தகங்கள் மட்டும் அன்றிக் காகிதங்களில் எழுதுபவரும் இருந்தனர். இத்துறையிலேயும் தகுதியுடையவராயின் தந்தைக்குப் பிறகு மகன் அவ்வேலையை ஏற்றிருத்தலைக் காண்கிறோம்.

" காகிதப் புத்தகம் எழுதும் கோவிந்தாசாரி இறந்து விட்டார். அவருக்குப் பதிலாக அவர் மகன் கிருஷ்ணாசாரி வாசுதேவாசாரிக்கு வ'பது 32, மாதம் $3\frac{1}{2}$ ரூபா "[158] என்பது இதற்குச் சான்றாகும்.

கி. பி. 1844இல் கிரந்தம் 1000க்கு ரூ. 2 வீதம் எழுத்துக்கூலி கொடுத்ததாகத் தெரிகிறது. இதனை,

"பாகவதம் தசமஸ்கந்தம் வியாக்கியானம் மட்டும் எழுதிய வகையில் கிரந்த எண்ணிக்கை 1862; 1000க்கு ரூ. 2 வீதம் கொடுக்க உத்தரவு"[159]

என்ற குறிப்பான் அறியலாம்.

---

148. ச. ம. மோ. த. 4-44
149. ச. ம. மோ. த. 4-12
150. ச. ம. மோ. த. 4-18
151, 152. ச. ம. மோ. த. 4-12
153. ,, 4-14
154. ச. ம. மோ. த. 5-27
155. 4-9
156. ச. ம. மோ. த. 7-29
157. 5-11
158. ச. ம. மோ. த. 2-41
159. ச. ம. மோ. த. 18-99

முழு நூல்களைப் படியெடுப்பது மட்டுமன்றிப் பழுதாய்ப்போன ஓலைகள் மட்டும் அகற்றப்பட்டுப் படியெடுத்து அவ்வவ்விடங்களில் வைக்கப்பெறும் என்றும் தெரியவருகிறது. இதனை,

"ஷை மகாலில் இருக்கிற சமஸ்கிருத இராமாயண புத்தகங்களில் பழுதாய்ப்போன பத்திரங்களைப் புதிதாய் எழுதின கிரந்த சங்கை :

| | | | | |
|---|---|---|---|---|
| நெ. | 1002இல் | பத்திரம் 1க்குக் | கிரந்த சங்கை | 50 |
| நெ. | 1007இல் | பத்திரம் 10க்குக் | ,, | 375 |
| நெ. | 949இல் | ,, 10க்குக் | ,, | 375 |
| | | | ஆக | 800 |

ஷை கிரந்த சங்கை 800க்கு 1000க்கு ரூ. 2-8-0; கூடுதல் ரூ. 2ம் ஷை புத்தகங்கள் எழுதின ஏகநாதய்யருக்குக் கொடுக்கும்படி உத்தரவாக வேணும். 26—2—77 குப்பா பட்லு (தெலுங்கில்)"

என்ற தமிழ் ஆவணத்தான்[160] அறியலாம்.

புதியனவாகப் புனையப்பட்ட நூல்களையும் விலைக்கு வாங்குவதுண்டு என்று தெரிகிறது. தமிழில் மருத்துவநூல் ஒன்று திருவெண்காட்டுப் புலவர் ஒருவர் பாடலாக எழுதினார். அந்நூல் 145 பாடல்களையுடையது. அது 4 சக்கரம் 3 பணம் கொடுத்து விலைக்கு வாங்கப்பெற்றது.

ஓலைப்புத்தகம் எழுதுபவர்கள் – மாதச்சம்பளத்தில் நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் தெரியவருகின்றன :

சதாசிவபட் சுப்பாபட் - கர்நாடக மொழி
சிதம்பர சாஸ்திரி – தெலுங்கு
மன்னார்குடி சீதாராமய்யர் – கிரந்தம்[161]
வேலாயுதம் பிள்ளை அழகம் பிள்ளை
வேலாயுத முதலி சுந்தரராஜ முதலி
சுப்பராய பிள்ளை வெங்கடாசலம் பிள்ளை
சாமிநாத பிள்ளை வாசுதேவ பிள்ளை — இந்நால்வரும் தமிழ் எழுதுபவர்கள் போலும்.[162]

அவ்வப்பொழுது சுவடிகளைச் சூடேற்ற வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகலின் 17—2—1875லும்[163] 24—2—1877லும் சரஸ்வதி மகாலில் இருந்த குப்பா பட்லு என்பவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அவர் வேண்டுகோளுக்கேற்பப் புத்தகங்களைக் காயப்போடுவதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 3½ சம்பளத்தில் ஒரு ஆள் நியமிக்கப்பெற்றார்.[165]

160. 8-88 (8) பக்கம் 84, 86 காண்க 161. 5-11 162. 4-85; ச. ம. மோ. த. 18-87
163. 8-81 (8) 164. 8-88 (22) 165. 8-81 (4)

சரஸ்வதி மஹால் நூல் நிலையத்துக்கு பிஷப் ஹீபர் சென்று பார்வை யிட்டபொழுது அங்கு ஒரு புறம் ஷஹாஜி முதல் சிவாஜி வரை ஆண்ட மராட்டிய மன்னர்களின் படங்கள் இருத்தலைக் கண்டதாகத் தம் நாட்குறிப்பில் எழுதி யுள்ளார்.[166] சரஸ்வதி மகாலில் மராட்டிய அரசர் படங்களும் பிற படங்களும் இருந்தமை 26—12—1868க்குரிய ஆவணக்குறிப்பால் அறியவருகிறது.[167] சரஸ்வதி பாண்டாரத்தில் 52 படங்கள் இருந்தன. கிருஷ்ணனின் படங்கள் 8; 20 அரசர்களின் படங்கள்; 18 அரசமாதேவிகளின் படம்; இடபாரூடராகப் பார்வதி பரமேசுவரர் படம் 1; அரச சபை 1; சேது கோசுவாமியின் படம் 2; பீரங்கி படம் 1; ஞானேசுவரரின் படம் 1; ஆக 52 படங்கள்.

சிறந்து விளங்கிய நூலகம் – மராட்டிய மன்னர்தம் குடும்பத்துக்கு உரியதாய் இருந்த நூலகம் 5—10—1918இல் விடுக்கப்பட்ட அரசாணையால் ஒரு குழுவினரால் நிர்வகிக்கப் பெறலாயிற்று.[168]

166. The Last Days of Bishop Heber by Thomas Robinson printed & published in 1829. 167. 12-288

168. சரஸ்வதி மகால் - ஆர். ஜெயராமன், பக்கம் 89-92

# 18

# நிலக்கொடை-சத்திரங்கள்-பலவகை அறங்கள்

## அ. சுரோத்திரியம்

காவிரிப் பாய்ச்சலால் வளம் கொழிக்கும் இந்நாட்டை ஆட்சிபுரிந்த மராத்திய மன்னர்கள் வேதம் வல்லார்க்கும், இசை வல்லார்க்கும், பிறருக்கும் ஆக நிலதானம் செய்துள்ளனர். வேதம் வல்ல பிராமணர்கட்கு விடப்பட்ட நிலம் சுரோத்திரியம்[1] என்று சொல்லப்பெறும்.

தஞ்சை மராட்டிய மன்னர்களுள் முதல் அரசராகிய ஏகோஜியின் மூன்றாவது மகன் துக்கோஜி அல்லது முதலாம் துளஜா காலத்தில் பலரேருக்குச் சுரோத்திரியம் அளிக்கப்பெற்றதாகத் தெரிகிறது.

"துளஜா ராஜா, கோட்டூர் மாகாணத்தில் **அனாதி தரிசுக்கு** லக்ஷ்மி நரசிம்மபுரம் என்று பேர்வைத்து மாதவாசாரியர், ஐவாசாரியர், சீனிவாசாசாரியர் ஆகிய 3 பேருக்கு 5 வேலி சுரோத்திரியம் செய்து கொடுத்தார்."

"மேற்படி ராஜா திருத்துறைப்பூண்டி மாகாணத்தில் 8 பேருக்கு ஒரே சன்னது 3 வேலி தாராதத்தம்[2] செய்து கொடுத்தார்.[3]

"துளஜா ராஜா பைங்காநாடு 15 வேலி 13 பேருக்குச் சுரோத்திரியம்"[4]

என்ற குறிப்புக்களால் முதலாம் துளஜா வேதம் வல்ல அந்தணர் பலருக்குச் சுரோத்திரியம் அளித்தமை பெறப்படும். இந்த நிலங்கள் இராஜ்யத்தின்

---

1. Srotriya - learned in the Veda, Conversant with sacred knowledge - Sir Monier Monier Williams, A Sanskrit English Dictionary
2. நீர்வார்த்துக் கொடுத்தல் 3. ச. ம. மோ. த. 5-12 4. ச. ம. மோ. த. 5-18

பல்வேறு பகுதிகளில் இருந்தமை மாகாணங்களின் பெயர்களைக் கொண்டு அறியலாம். அன்றியும் கோட்டூர் மாகாணத்தில் கொடுத்த ஐந்து வேலி நிலம் கொண்ட பகுதிக்கு லக்ஷ்மி நரசிம்மபுரம் என்றும் தனிப்பெயர் கொடுக்கப் பெற்றது.

கொடுக்கப்பெற்ற நிலங்கள் எத்தகைய நிலங்கள் என்பது கூர்ந்து அறியத்தக்கது. "அனாதி தரிசு" என்றமையால் பல ஆண்டுகளாக அவை உழுது பயிரிடப் பெறாமல் இருந்தனவாதல் வேண்டும். இவ்வனாதி தரிசு பெற்றமையான் வேதியர்கட்குப் பயன் என்ன என்ற கேள்வி எழலாம். நிலமும் உண்டு; நிலத்திற்குப் பாய்ச்ச நீரும் உண்டு; அதை உழுது பயிரிடக் குடிமக்களும் உண்டு; எனினும் ஏழைக் குடிமக்கள் பயிர்த்தொழில் செய்ய விதை வேண்டும்; "தசு கூலி" வேண்டும்; எரு வேண்டும்; காவல் வேண்டும்; களை கட்டல் வேண்டும்; இவை செய்யுங் காலத்தில் அவர்களும் உண்டு வாழ வேண்டுமே. இவற்றுக்கொல்லாம் பணம் தேவை.

இத்தகைய தரிசு நிலங்களைத் தானமாகப் பெற்றவர் தம் வாழ்நாள் முழுவதும் அந்நில வருவாயை அனுபவிக்கலாம். அந்நிலத்துக்கு அவர்கள் தீர்வை (வரி) செலுத்தவேண்டியதில்லை அல்லது மிகச்சிறு தொகையே செலுத்தவேண்டும். அன்னோர் வசதிபடைத்தவராக இருத்தலும் கூடுமாதலின் பயிரிடும் செலவுகளில் பெரும்பகுதி முன்பணமாகத் தரவியலும்; அவர்கள் மேற்பார்வையில் அந்நிலங்கள் "பயிரிலி நன்செய்" ஆக இருந்த நிலையி லிருந்து பயிரிடப்பெறும் நிலையை எய்தும்.

தரிசு நிலங்கள் அரசனுக்கே சொந்தம். அவன் அனுமதியின்றிப் பயிரிடமுடியாது. ஆகையால், விலைகொடுத்துப் பெறாமல் இலவசமாக இந்நிலங்களைப் பெற்றனர்; தரிசு நிலத்தைப் பயிரிடக்கூடிய நிலமாக ஆக்கினர்; வருவாயைப் பங்கிட்டு நுகர்ந்தனர். இவையே சுரோத்திரியம் பெற்றதனாலாய பயன்கள் எனலாம்.

சுரோத்திரியங்கள், தருவதற்கு முன், தரிசு நிலங்களே என்பதில் ஐயமில்லை:

"வடக்கு வட்டம் நல்லாடை மாகாணம் ரொம்ப நாளாகத் தரிசாக வெள்ளெருக்கு முளைத்து உடைப்பினால் சாகுபடி செய்யாமல் இருப்பதால் ஹரிஹரபுரம் என்று பேர்வைத்து 4 பேருக்குச் சுரோத்திரயம் செய்தது"

என்ற குறிப்பும்[5] இதற்குச் சான்று பகரும். இது கி. பி. 1777க்குரிய நிலக்கொடை; இரண்டாம் துளஜாஜி அளித்த சுரோத்திரியம் ஆகும். இதிலும் அச்சுரோத்திரியப் பகுதிக்கு "ஹரிஹரபுரம்" என்று வேறு பிரித்துப் பெயர் வைத்தமை உணரற்பாலதாம்.

---

5. ச. ம. மோ. த. 2-4

இவ்விரண்டாம் துளஜாஜியின் காலத்திலேயே தேசஸ்த கிருஹஸ்தர்களுக்குச்[6] சுரோத்திரியம் கி. பி. 1778இல் வழங்கப்பெற்றதாக வேறொரு குறிப்புள்ளது.[7] அதினின்று சுபா மன்னார்குடி, கச்சனம் தாலுக்கா, சேகல் மகாலில் தரிசு நிலம் 14 அடிக்கோலால் கோனேர் நரசிம்ம என்பவர்க்கு 44½ வேலி நிலம் அளிக்கப்பெற்றதாக அறியப்பெறும்.

மேலும் மன்னார்குடி மேல்முகம் தாலுகா ஜேபால் கிராமம், ஏரனூரைச் சேர்ந்த ½ வேலியும், கீழ்முகம் சித்தாம்பூர் – ஆலங்குடி 26 வேலி நிலமும் கி. பி. 1779இல் 14 பேருக்குச் சுரோத்திரியம் செய்யப்பெற்றது.[8]

இங்ஙனம் பெற்ற சுரோத்திரியங்கள், சுரோத்திரியதாரரின் வழித் தோன்றல்களுக்கு உரிமையுடையனவல்ல எனத் தோன்றுகிறது.

"ஆதிமூர்த்தியின் சுரோத்திரியம் – இவர்களின் பையன் குப்பா ஆதிமூர்த்தி – இவர்களின் பெயரில் ஆக்க வேண்டும் – நன்செய் 1½ வேலி புன்செய் 1½ வேலி."

"அம்பாஜி நாகோஜி – இவர்கள் சுரோத்திரியம் – இவர்கள் பையன் அப்பு – இவர்கள் பேரில் ஆக்கவேண்டும் – நன்செய் ½ வேலி; புன்செய் ¾ வேலி."

என்று இரு குறிப்புக்கள்[9] காணப்பெறுகின்றன. ஆதிமூர்த்தி என்பார் 1½ வேலி நன்செய் 1½ வேலி புன்செய் சுரோத்திரியம் பெற்றார். அங்ஙனமே அப்பாஜிநாகோஜி என்பவரும் நன்செய் ¼ வேலியும் புன்செய் ¾ வேலியும் சுரோத்திரியம் பெற்றார். ஆனால் அச்சுரோத்திரிய நிலம் அன்னோருடைய மக்களுக்கு உரியனவாதற்கு அரசாங்க ஆணைபெறவேண்டும். ஆகவேதான் மேற்கண்டவண்ணம் விண்ணப்பக் குறிப்புக் காணப்பெறுகிறது.

இரண்டாம் சரபோஜி காலத்துக்குப் பிறகும் தேசஸ்த கிருகஸ்தர்கள் பலருக்குச் சுரோத்திரியம் வழங்கியமைக்குச் சான்றுகள் உள்ளன.

கி. பி. 1833இல் 489 பேருக்கு மன்னார்குடி, பானகநல்லூர், சித்தவளி, மரியூர், சத்தியவாடி, சோளகச்சேரி முதலியவூர்களில் மொத்தம் 884½ வேலி அளிக்கப்பெற்றன.[10]

கி. பி. 1837இல் 19 ஆண்டுகளாகப் பயிரிடப்பெறாமல் 211¼ வேலி நிலங்கள் பந்தணைநல்லூர், மணல்மேடு முதலியவூர்களில் இருந்தன. அவை சிவாஜி அப்பா முதலான 36 பேருக்குச் சுரோத்திரியம் ஆக வழங்கப்பெற்றன.[11]

---

6. தேசஸ்தர் – மராட்டிய நாட்டினின்று வந்து தமிழ் நாட்டிற் குடியேறிய வேதியர்கள்; கிருஹஸ்தர் – இல்லறத்தார்
7. 1–187
8. 8–179
9. ச. ம. மோ. த. 20–4
10. ச. ம. மோ. த. 1–15
11. ச. ம. மோ. த. 5–12

சில சுரோத்திரியங்கள் வழிவழி அனுபவிக்குமாறு கொடுக்கப்பெற்றிருத்தலும் தெரியவருகிறது. எடையாத்தங்குடி சுரோத்திரியம்–இதற்குச் சரபோஜி ராஜபுரம் என்று பெயர். இச்சுரோத்திரியம் " சூரிய சந்திரர்கள் உள்ளவரையில் " அனுபவிக்குமாறு கொடுக்கப்பெற்றது. கொடுக்கப்பெற்ற நிலம் 23222 $\frac{5}{16}$ குழி. இது மூன்று பேருக்கு அளிக்கப்பெற்றது. இதில் ஒருவர் சிதம்பர பிள்ளை என்பவர் ஆவர். இவர் வேதியரா என்பது சிந்தித்தற்குரியது. வேறொருவர் சோனஜி அப்பா என்பவர் ஆவர்.[12] இந்நிலக்கொடை முதலாம் சரபோஜி காலத்ததாதல் வேண்டும்.[13]

கி. பி. 1805இல் தத்தாஜி அப்பாவுக்குக் கும்பகோணத்தில் 50 வேலி சுரோத்திரியம் கொடுத்துச் சரபோஜிராஜபுரம் என்று பேரிட்டதாக ஒரு குறிப்புக் காணப்பெறுகிறது.[14]

மேலே கண்ட சிதம்பர பிள்ளை, சோனஜி அப்பா, தத்தாஜி அப்பா ஆகியோர் வேதியரல்லர். தத்தாஜி அப்பா என்பவர் இரண்டாம் சரபோஜியின் காலத்தில் பெரிய அரசியல் அலுவலர். அரசாங்க ஊழியம் செய்தவர்கட்கு விடப்பட்ட இனாம் நிலமும் சுரோத்திரியம் என்று கூறப்படுவது உண்டு[15]; ஆகலின் இவர்கட்கு அளித்தது சுரோத்திரியம் எனப்பட்டது.

கோயிலுக்கு அனாதி தரிசு நிலத்தைச் சோத்திரியம் செய்து கொடுப்பதும், பெயரளவில் வரி பெறுவதும் வழக்கில் இருந்ததாதல் வேண்டும்.

மன்னார்குடியைச் சேர்ந்த சிவகங்கை விசுவநாதசுவாமி கோவில் — இந்த கோயிலுக்குக் கொரடாச்சேரியைச் சேர்ந்த மங்களம் அக்கிரகாரக் கிராமம் – அனாதிதரிசு - வெள்ளக்காடு – பலநாளாகப் பயிரிலியாக இருந்த நிலம் 25$\frac{3}{4}$ வேலி 2$\frac{1}{4}$ மா - இதனைப் பாடகசாலைத் தருமமாகச் சுரோத்திரியம் செய்து " விசுவநாதபுரம் " என்று பேரிடப்பெற்றது; கோவில்பேரில் சன்னது செய்து, ஆண்டொன்றுக்கு 100 சக்கரம் வரிகொடுக்கவேண்டும் என்று கூறப்பட்டது.[16] இது 1771இல் இரண்டாம் துளஜா செய்த தருமம். கி. பி. 1776க்குரிய குறிப்பொன்றும் இதனையே கூறுகிறது. இதில் நிலப்பரப்பு 35$\frac{3}{4}$ வேலி 2$\frac{1}{4}$மா என்று கூறிப் பின் நிலம் செம்மைப்படுத்தப்பெற்றது என்றும், இங்ஙனம் செம்மைப் படுத்தப்பெற்றது 14 அடிக்கோலால் 19$\frac{3}{4}$ வேலி 2$\frac{1}{2}$ மா என்றும் அதிகப்படியாகக் கூறப் பெற்றுள்ளது.[17] இதன்கண் குறிப்பிடப்பெற்ற பாடகசாலைத் தருமம் என்பது அறிவதற்குரியது. " பாடகம் சொல்லுதல் " என்ற தொடர்க்குப் புராண கதைகளை மனத்திற்படும்படி அபிநயித்துச்

---

12. 2-252 13. His ( Sarfoji I ) Dharmadhikari Aiyavayya seems to have given to Brahmins agraharams like Mangamadam in Tiruvenkadu & Sarfoji rajapuram in Tirukkadaiyur – p. 231, Maratha Rule in the Carnatic – C. R. Srinivasan. 14. 2-221 15. Tamil Lexicon M. U.

16. ச. ம. மோ. த. 7-9 17. ச. ம. மோ. த. 8-5

சொல்லுதல் என்று பொருள்தரப் பெறுகிறது.[17அ] அங்ஙனமாயின் பாடசாலை என்பது புராணகதைகளை மனத்திற்படும்படி அபிநயித்துச் சொல்லுவதற்குரிய பயிற்சியிடம் எனக்கொள்ளலாம்.

சத்திரங்களுக்கும் சில கிராமங்கள் கொடுத்தபொழுது சுரோத்திரியமாக வழங்கப்பெற்றன என்று தெரியவருகிறது.

கி. பி. 1783; மாதுஸ்ரீ மோகனாபாயிக்குரியது ராஜாமடம் சத்திரம்; அச்சத்திரத்துக்குப் புதுக்கோட்டை உப்பளம், மகிழங்கோட்டை உப்பளம், தாமரகோட்டை உப்பளம், ராஜாமடம் நாட்டு உப்புக் காளவாய் ஆகியவை சுரோத்திரியம் செய்யப்பெற்றனவாக ஒரு குறிப்பால் அறியப்பெறுகிறது.[18]

சுரோத்திரியம் பெற்றவர் தம் வாழ்நாள் முழுவதும் மட்டும் அச்சுரோத்திரியம் அநுபவிக்கலாம் என்றும், அவர் சந்ததியினர்க்கு உரிமை இல்லையென்றும், அரசர் அனுமதியின்பேரில் ஒரோவழி அவர் சந்ததியினர்க்குச் செல்வதுண்டு என்றும் மேலே கூறப்பட்டன. சுரோத்திரியம் பெற்றவர் அச்சுரோத்திரியங்களை விற்பனை செய்யலாம் என்றும், அங்ஙனம் விற்பதாக இருப்பின் அதனை அரசுக்கே விற்பனை செய்யவேண்டும் என்றும் தோன்றுகிறது.

கோந்தகை என்ற ஊர்; இதனைச் சுரோத்திரியமாக உடையவர்க்கு அதிகக் கடன் இருந்தது. அக்கடனைத் தீர்க்க ஒரு சுரோத்திரியத்தை விற்றுவிட்டார் போலும்! கடன் அடைபடவில்லை. ஆகவே கடன்காரர்களிடம் இருந்து விடுபடுவதற்குக் கோந்தகை என்ற பெயருடைய பிறிதொரு சுரோத்திரிய ஊரை அரசர் அருள்கூர்ந்து வாங்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததாக ஓர் ஆவணக்குறிப்புள்ளது.[19] இதனால் சுரோத்திரியத்தை ஒரு கட்டுப்பாட்டின்கீழ் நின்று விற்கும் உரிமை சுரோத்தியதாரருக்கு இருத்தல் புலனாகும்.

பாகவத மேளாவுக்குச் சுரோத்திரியம் வழங்குவதுண்டு. பூவநேந்தூர், குடிகாடு, பருத்திக்கோட்டை, கோரைக்கோட்டை, மேலவயல், சோணம்பேட்டை என்றவூர்கள் பாகவதமேளாவுக்குச் சுரோத்திரியமாக வழங்கப் பெற்றன.[20]

## ஆ. சர்வமானியம்

எந்தவிதமான தீர்வையும் செலுத்தாமல் அனுபவிக்குமாறு கொடுக்கப்படும் நிலக்கொடை சர்வமானியம் எனப்பெறும். சுரோத்திரியம் வேதம்

---

17அ Tamil Lexicon M. U.

18. ச. ம. மோ. த. 5-28

19. ச. ம. மோ. த. 21-32

20. ச. ம. மோ. த. 18-11

வல்லார்க்கோ அல்லது சிறப்பாக அரசாங்க ஊழியம் செய்தார்க்கோ வழங்கும் நிலக்கொடை ஆகும். இதனின் வேறாயது சர்வமானியம்.

ஏகோஜி தாம் அரசர் ஆனதும் கி. பி. 1676இல் நடாத்தூர் இராசகோபால அய்யங்கார் என்பவருக்குக் கும்பகோணம் - கருப்பூர் - பீமானூரில் ஒருவேலி நிலம் சர்வமானியம் அளித்தார்.[21]

ஏகோஜியின் முதல் மகன் ஸாஹஜி என்பவர் ஆவர். இவர் சூரியகிரகண காலத்தில் சங்கமுகியில் (காவிரி கடலோடு கலக்கும் இடத்தில்) யசுர்சாகை, ஆபஸ்தம்ப சூத்திரம், ஹரித கோத்திரம் அப்பாபட் என்பவருக்கு $\frac{3}{4}$ வேலி நிலம் சர்வமான்யம் செய்து கொடுத்தார்.[21அ]

முதல் ஏகோஜியின் பேரன் முதல் துளஜாவின் மகன் இரண்டாம் ஏகோஜி ஓரிரண்டாண்டே ஆட்சிபுரிந்தவராதல்கூடும். இவர்க்கு முன் ஏறத்தாழ 70 ஆண்டுகள் தஞ்சையில் மராட்டியர் ஆட்சி நடைபெற்று வரலாயிற்று. காசியில் அன்னசத்திரம் நந்தவனம் ஆகிய தருமங்களை நடத்துவதற்காக ஆண்டுதோறும் காசியிலிருந்த தம்பிரான் அவர்கட்கு 500 சக்கரம் அனுப்பப் பெற்றுவந்ததாதல் வேண்டும். கி. பி. 1737க்குரிய கால கட்டத்தில் காசியில் இருந்தவர் தருபுர மடத்தின் "சிஷ்யர்களில்"[22] ஒருவர்; "நாயிக் பண்டாரி"[23] எனப்பெற்றார். அவர் 1737இல், "காசியிலுள்ள அன்ன சத்திரம், நந்தவனம் நடத்தவேண்டிப் பேஸஜி 500 சக்கரம் கொடுத்துக் கொண்டிருந்தார்; ஆனால் காலாகாலத்தில் தொகை வந்து சேர்வதில்லை; ஆகையால் ஒரு கிராமத்தைச் சருவமானியமாய்ச் செய்துகொடுக்கவேண்டும்" என்று கேட்டார். அதற்கு அரசர் மனமுவந்து முன் கொடுத்துவந்த தொகையோடு 500 சக்கரமும் சேர்த்து ஆண்டுதோறும் 1000 சக்கரம் வருமானம் வரக்கூடிய நிலங்களைத் திருப்பனந்தாளுக்கு அருகில் உள்ள குறிச்சி தாலுகா "சோன்பட்"[24] என்னும் ஊரில் நன்செய் புன்செய் நிலங்களைச் சருவமானியம் செய்தார். இச்செய்தி ஓராவணக்குறிப்பினின்று அறியவருகிறது.

---

21. 3–142 21அ. ச. ம. மோ. த. 6–29

22. தருமபுரம் ஆதீனத்தில் தம்பிரான்களாக இருப்பவர்களில் ஒருவரே காசிமடத்து அதிபரால் தன் வழித்தோன்றலாக நியமிக்கப்பெறுவது மரபு

23. இக்கால கட்டத்தில் காசியில் குமாரசுவாமி மடத்தில் அதிபராக இருந்தவர்களும் திருப்பனந்தாளில் இந்நாளில் விளங்கும் காசிமடத்தைத் திருப்பனந்தாளில் நிறுவியவர்களும் ஆன தில்லைநாயக சுவாமிகள் ஆவர். நாயக் பண்டாரி என்பது தில்லை நாயக சுவாமிகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தில்லை நாயக சுவாமிகள் கி. பி. 1720 முதல் கி. பி. 1756 வரை ஸ்ரீகாசிமடத்து அதிபராக விளங்கினார்கள் – பக்கம் XVIII– குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு – ஸ்ரீகாசிமடம் பதிப்பு, ஜூன் 1952.

24. இந்நாளில் உள்ள "பட்டம்" என்றவூர் இதுவாகலாம்.

இரண்டாம் ஏகோஜிக்குப் பிறகு இரண்டாண்டுகள் கழித்துப் பட்டம் எய்தியவர் பிரதாபசிங்கர். இவர் இரண்டாம் ஏகோஜியின் தம்பியாவர்; இவர் 1739 முதல் 1763 வரை ஆட்சிபுரிந்தவர். இவர் 1739இல் சந்திரகிரகண காலத்தில் திருவிசநல்லூர் மேலக் காவேரியில் நன்செய் 2 வேலி புன்செய் ½ வேலி அனந்த நாராயண சாத்திரி என்பவருக்கும்,[25] 1748இல் பந்தணை நல்லூரில் 1¼ வேலி 3 மா இராமானுசாச்சாரி என்பவருக்கும் நிலம் தானம் செய்தார்.[26] மேலும் 1747இல் சந்திரகிரகண காலத்தில் அனந்தய்யங்கார் மகன் சக்ரோத அய்யங்காருக்குத் திருணகிரி[27] மாகாணத்தில் 14 அடிக்கோலால் ஒருவேலி நன்செய் நிலம் சர்வமான்யமாக அளித்தார்.[28]

மேற்கண்ட நாளிலேயே, "ஆதி தர்க்கம், வேதாந்த விசார ஆசரணம் செய்யும் ஆச்வலாயன சூத்திரம்[28அ] சாண்டில்ய கோத்திரம்[28ஆ] தோண்டோ பண்டிதர் பௌத்திரர் கங்காதர பண்டிதர் புத்திரர் நாராயண பண்டிதருக்குத் தாராதத்தம்[28இ] இனாம் ஒருவேலி நன்செய் நிலம் திருணகிரி மாகாணத்தில்" கொடுக்கப்பெற்றது.[29]

பிரதாபசிங்கர் முகமதியர்கட்கு அளித்த நிலக்கொடையும் உண்டு. பண்டாரவாடை தேவராயபேட்டையில் முகம்மதுகான் என்ற ஒருவர் சுங்க அதிகாரியாக இருந்தார். அவருக்கு 1340 குழி 1756இல் கொடுக்கப்பெற்றது.[30]

பிரதாபசிங்கர் மகன் துளஜா காலத்திலும் பல நிலக்கொடைகள் உண்டு. இவர் 1765 முதல் 1787 வரை ஆட்சி செய்தவர். இவர் 1767இல் யமுனாம்பாபுரம் பிராமணர்கட்கு 60 வேலி நன்செய் புன்செய் சர்வமானியம் அளித்தார்.[31] கி. பி. 1776இல் இசைப்புலமை கருதி ஜகன்னாத பட்கோஸ்வாமிக்குச் சருவமானியம் அளித்தார்.[32]

சிம்மராஜ பண்டிதர் என்ற ஒருவரும் இதே ஆண்டில் இவருடைய நிலக் கொடையைப் பெற்றுள்ளார்.[33] இதே ஆண்டில் உமாம்பாபுரம் கௌரிபதி சாஸ்திரி, கிருஷ்ணாசாரி மல்லார்ஜி, ஸ்ரீநிவாஸாசாரி, கனம் ஷாமா பண்டிதர், வைத்தியலிங்க சாஸ்திரி, வீணை வெங்கடராமய்யா முதலிய பலருக்குச்

---

25. 1-198 26. 8-144, 145

27. திருணகிரி – திருநகரி; சோயில் பணிகளும் சமயப் பொறையும் (கட்டுரை 15) அடிக் குறிப்பு 189க்குரியது காண்க 28. ச. ம. மோ. த. 8-48

28அ ஆச்வலாயன சூத்திரம் – ஒவ்வொரு குடியிலுள்ளாரும் நடக்கவேண்டிய விதிகளைக் கூறுவன கிருஹ்ய சூத்திரம் எனப்படும். ஆஸ்வாலயனர் கூறியவை ஆசுவலாயன சூத்திரம்

28ஆ. "குடியே உம்பல் கோத்திரம் ஆகும்" – பிங்கலந்தை 2207 ஆம் நூற்பா

28இ. தாராதத்தம் – நீர்வார்த்துக் கொடுத்தல். 29. ச. ம. மோ. த. 8-42

30. 1-188 31. 8-186 32. ச. ம. மோ. த. 29-8 இவரைப் பற்றியவற்றை இசை நாடகம் என்ற தலைப்பில் 78அ என்ற அடிக்குறிப்புக்கு உரியவற்றுள் காண்க.

33. ச. ம. மோ. த. 29-8

சர்வமானியங்கள் அளிக்கப்பெற்றன.[34] இதில் கண்ட ஷாமா பண்டிதர் என்பது இசைவல்ல சியாமா சாஸ்திரிகளைக் குறிப்பதாக இருக்கலாம். 1777இல் கோவிந்தராவ் போசலே என்பவருக்குத் திருவலஞ்சுழி மாகாணத்தில் 14 அடிக்கோலால் நிலம் வேலி 32, மா 3 அளிக்கப்பட்டது.[35] கி. பி. 1786இல் பாளம்பட் அவர்கட்குத் திருப்பூந்துருத்தி வைத்தியநாதம் பேட்டையில் ஒரு வேலி, 8 மா சர்வமானியம் அளிக்கப்பெற்றது.[36] சதாசிவ பாண்ட்யா என்பவருக்குத் திருப்பூந்துருத்தி பெரமூரில் 5 வேலி அளிக்கப்பெற்றது.[37]

இரண்டாம் துளஜாவின் ஆட்சியிறுதியில் முகமதியர்கட்கும் நிலக் கொடை நேர்ந்தமை பற்றிப் பல குறிப்புக்கள் உள்ளன. ஸேக் உஸ்மானின் தம்பி ஸாகினஸா ஃபக்கீர் என்பவருக்குப் பசுபதிகோவிலிலும், ஹஜரத் படேசா புரானி ஸேக் ஹுஸேன் சாயேபுக்குப் பட்டீச்சுரம் மாகாணத்திலும் இரண்டு கிராமங்கள் அளிக்கப்பட்டன.[38]

கோட்டைக்கு வெளியே ஒரு மசூதி கட்டப்பெற்றது. அதற்கு விளக்குக்கு எண்ணெய், வருஷத்துக்கு ஒருமுறை திருவிழா, ஃபகீர்களுக்கு உணவு இவற்றுக்காகச் சாலியமங்கலத்தில் அனாதி தரிசு நிலம் 12648 குழி கொடுக்கப்பட்டது. அப்பகுதிக்கு மஹமத்புரம் என்றும் பெயரிடப்பட்டது.[39]

இனி ஆண்டு குறிப்பிடப்பெறாமல் துளஜாராஜா காலத்து நிலக்கொடை பற்றிய செய்திகள் சில உண்டு. அவையாவன: கோபால தீக்ஷிதருக்குத் திருப்பூந்துருத்தியில் $1\frac{1}{4}$ வேலி 3 மா அளித்தமை; தொண்டைமான் போஸ் லேக்குக் கும்பகோணம்–சோழவரம் மாகாணம்–பூமி நன்றாக விளையாதது, $44\frac{3}{4}$ வேலி அளித்தமை; கவீசுவரர் வெங்கட சுப்பையாவுக்கு $1\frac{1}{4}$ வேலி 3 மா; சதாசிவபட்டுக்குத் திருப்பூந்துருத்தி வைத்தியநாதம் பேட்டையில் $2\frac{1}{4}$ வேலி; கிருஷ்ண பாகவதருக்குத் திருப்பூந்துருத்தியில் $1\frac{1}{4}$ வேலி 3மா-என்பனவாம்.[40]

கி. பி. 1796; அமர்சிங்கின் காலம்; திருவையாற்றில் காவேரியின் இக்கரையில் சத்திரத் தருமத்திற்காகக் கும்பகோணம் – இன்னம்பூர் தென் பாதியில் $6\frac{1}{2}$ வேலி 3 மா சர்வமானியம் அளிக்கப்பட்டது.[41]

அமர்சிங்கு பதவி நீக்கம் செய்யப்பெற்றதும் இரண்டாம் சரபோஜி அரசு கட்டில் ஏறினார். இவர் கி. பி. 1813இல் ஜான் பாதரிக்கு $1322\frac{1}{2}$ குழி நிலம் இனாம் வழங்கினார். இதற்குரிய ஆணையில் நிலத்தின் எல்லையும் விவரிக்கப்பட்டுள்ளது.[42]

---

34. ச. ம. மோ. த. 6-46
35. 6-194, 195
36. 4-867
37. 2-298
38. 2-810
39. 2-811
40. ச. ம. மோ. த. 5-12
41. 1-91
42. 3-146

மகாலிங்க ஜடாவல்லபர்[43] என்றொருவர், தஞ்சையில் இருக்கு வேதம் பயின்று ஜடாவல்லபர் ஆயினார். இவர் தந்தையும் பாட்டனும் ஜடாவல்லபர் களே. இவர் இங்ஙனம் சிறப்புற வேதாத்தியயனம் செய்தமையின் இவர்க்கு 1823இல் இரண்டாம் சரபோஜி மன்னரால் நன்செய் 8 வேலி, புன்செய் 3 வேலி 4 மா 14 அடிக்கோலால் அளந்து கொடுக்கப்பெற்றது.[44]

இங்ஙனம் பல சுரோத்திரியங்களும் சர்வமானியங்களும் வேதியர்கட்கு அளித்தமையாற்றான் இன்றும் தஞ்சைமாவட்டத்தில் பெரிய மிராசுதாரர் களாகப் பல பிராமணர்கள் இருத்தலைக் காணலாம்.

## இ. அக்கிரகாரங்கள்

கும்பகோணத்தில் டபீர் அக்கிரகாரம் என்று அக்கிரகாரம் உள்ளது. இது டபீர் பண்டிதர்[45] என்பவர் பெயரால் அமைக்கப் பெற்றது. இந்த டபீர் பண்டிதர் அக்கிரகாரத்தை அளந்து பைமாஷ்[45அ] செய்வதற்கு அரசாங்க அலுவலர் வந்தனர் என்றும், அதனை "வீடுகட்டும் நிலம்" என்று அவர்கள் குறித்துக்கொண்டார்கள் என்றும், அது சருவமானிய அக்கிரகாரமாகக் கருதப்பெற வேண்டும் என்று அன்னோர் ஆதரவுகளை ஸர்க்காரில் கேட்ட னர் என்றும் ஓராவணக் குறிப்பு உள்ளது.[46]

1763இல் பிரதாபசிங்கரின் இறுதிக்காலத்தில் திருவையாற்றில் ஒரு அக்கிரகாரம் அமைக்கப்பெற்றது.[46அ]

1765இல் இரண்டாம் துளஜா அரசர் ஆனதும் கும்பகோணத்தில் புதிய அக்கிரகாரம் கட்டித் தானம் செய்தார்.[46ஆ] இரண்டாம் துளஜாவின்

---

43. ஜடாவல்லபர் – வேதத்தை ஜடை என்ற முறையில் ஓதுதலில் வல்லவர். ஜடையாவது இரண்டு சொற்கள் மும்முறை திருப்பிச் சொல்லுங்கால் ஒருமுறை அச்சொற்களை முறைமாற்றிச் சொல்வது. A method of reciting the Veda in which a pair of words is repeated thrice, in one repetition being in inverted order – Tamil Lexicon, M. U.
44. ச. ம. மோ. த. 4–5
45. டபீர் பண்டிதர் என்பார் பிரதாபசிங்கர் (1739 - 1763) காலத்து அமைச்சராக இருந்தவர்; நிலச்சீர்திருத்தங்கள் செய்து அரசாங்கத்தில் சிறப்பிடம் பெற்றார். இவர் பிரதாபசிங்கரின் மகன் இரண்டாம் துளஜா காலத்திலேயும் அமைச்சராக இருந்தார். ஆனால் ஆட்சியிறுதியில் இரண்டாம் துளஜா இச்சிறந்த அமைச்சரைப் பதவி நீக்கம் செய்தார். இச்செயல் அந்நாளைய நவாபுக்குச் சினத்தைத் தூண்டியது. ஆதலின் மீண்டும் டபீர் பண்டிதர் அமைச்சராக ஆக்கப்பெற்றார். அவருடைய சீர்திருத்தம் "டபீர் முறி" என்று சொல்லப்பெற்றது. இதனை அரசர் அவ்வளவாக ஆதரிக்கவில்லை; 'அமானி' முறையையே ஆதரித்தார் – Maratha Rule in the Carnatic, p. 251, 314, 364

45அ. 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆங்கிலேயர்களால் செய்யப்பட்ட நில அளவு

46. 1-28, 24 46அ. 5-298 46ஆ. 2-9

இரண்டாவது மனைவி ராஜ்குமாராபாய் என்பவர் ஆவர்.[46]இ ராஜகுமாராம்பாள் புரம் சத்திரத்திடத்து[47] ஒரு அக்கிரகாரம் 1777இல் கட்டச்செய்தார்.[48] விண்ணாற்றங்கரையில் 1779இல் ஒரு அக்கிரகாரம் கட்டப்பெற்றது.[49] சிம்மராஜ நரஹரி பண்டிதர் என்பவரைக் கொண்டு நரசிங்கன்பேட்டையில் ஒரு அக்கிரகாரம் அமைக்கப்பெற்றது.[50] அந்த அக்கிரகாரத்தில் 30 வீடுகள் இருந்தன. வீடுகள் தானமாக அளிக்கப்பெற்றன. பாடசாலை, சத்திரம், குளம், கோயில் ஆகியவற்றுக்கு இரண்டு ஊர்கள் சர்வமான்யமாக விடப்பெற்றன என்று 1786க்குரிய குறிப்பொன்று கூறுகிறது.[51] திருவிடைமருதூரில் சுலக்ஷணம்பாபாய் பெயரில் ஒரு அக்கிரகாரம் இருந்தது.[53] சக்வாரம்பாபுரத்தில்[54] (அதாவது அம்மாசத்திரத்தில்) ஒரு அக்கிரகாரம் அமைக்கப்பெற்றது. அதில் தீ விபத்தினால் வீடுகள் எரிந்துபோயின. கி. பி. 1831இல் 12 வீடுகள் புதியனவாகக் கட்டிக் கொடுக்கப்பெற்றன.[55] திருவிடைமருதூரில் கட்டப்பெற்ற சுலக்ஷணபாயி அக்கிரகாரத்துக்கும் கோயிலுக்கும் அம் மாதேவியார் கி. பி. 1842இல் தமக்குச் சொந்தமான கோட்டூர்த் தோட்டத்தைத் தானம் செய்தார்; பின் 6, 7 மாதங்களில் இறந்து போனார். 30 பங்குகள் உண்டு; ஒவ்வொரு பங்குக்கும் 100 கலம் வீதம் அளிக்கப்பெற்றது.[56] கி. பி. 1842லும் 3000 கலம் அளித்ததற்குச் சான்றுளது.[57] மேலே குறித்த சக்வாரம்பாபுரம் அக்கிரகாரத்தில் 24 வீடுகள் இருந்தன போலும்.[58] அவற்றுள் இருந்த ஒருவர் "ஏக சந்த கிராகி."[59] அவர் பெயர் சுப்பிரமணிய சாஸ்திரி. முக்தாம்பாள்புரம் அக்கிரகாரம் (ஒரத்தநாடு) இரண்டாம் சரபோஜி அமைத்ததாகும்.[59அ] அதில் இருந்த ஒவ்வொரு வீட்டுக்குரிய அந்தணனுக்கு ஆண்டொன்றுக்கு 51 கலம் நெல் மானியம் கொடுக்கப் பெற்றுவந்தது என்று தெரிகிறது.[60]

இங்ஙனம் தஞ்சை மராட்டிய மன்னர்கள் அக்கிரகாரங்கள் அமைத்து, அந்தணர்களைக் குடியேற்றி, அவர்கட்கு ஆண்டுதோறும் ஐம்பது அல்லது நூறு கலம் நெல்லும் அளித்து, அக்கிரகாரங்களைப் பேணிப் புரந்தமை தெள்ளிதின் புலனாகும்.

## ஈ. சத்திரங்கள்

அக்கிரகாரங்களை அமைத்த மராட்டிய மன்னர்கள் அக்கிரகாரங்களோடு சத்திரங்களையும் அமைத்தனர். அவர்களால் நிலக்கொடை பெற்று நடத்தப்

46இ. பக்கம் 109 – போன்ஸ்லே வமிச சரித்திரம்
47. மீமிசல் என்றவூர் ; 1–194
48. 1–159 ; ச. ம. மோ. த. 29–35 ; 30–9
49. 2–306
50. 4–424
51. ச. ம. மோ. த. 15–22, 28
52. இவர் இரண்டாம் துளஜாவின் மனைவி, பக்கம், 125 – போன்ஸ்லே வம்ச சரித்திரம்
53. 2–313 ; ச. ம. மோ. த. 17–46
54. சக்வாரம்பாள் – இவர் பிரதாப சிங்கரின் மனைவியாகலாம் ; பக்கம் 82, போன்ஸ்லே வம்ச சரித்திரம், தமிழ்ப் பகுதி.
55. ச. ம. மோ. த. 4–3
56. 2–30, 31
57. 2–32
58. ச. ம. மோ. த. 8–41
59. ஒருமுறை ஓதியதும் நினைவில் கொள்பவர்
59அ. பக்கம் 186, போன்ஸ்லே வமிச சரித்திரம் – தமிழ்ப்பகுதி.
60. ச.ம.மோ.த. 28–28

பெற்ற சத்திரங்களின் அட்டவணை 1838, 1855, 1856 ஆகிய ஆண்டுகள் குறிக்கப்பெற்ற சில ஆவணங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. 14-10-1838ஆம் தேதி குறிப்பிட்ட பட்டியலில் கண்ட சத்திரங்களின் பெயர்[61] பின்வருமாறு :-

1. தஞ்சாவூர்க் கோட்டை அன்னசத்திரம்
2. முக்தாம்பாள்புரம் அன்னசத்திரம்
3. ராஜகுமாராம்பாபுரம் அன்னசத்திரம்
4. மோகனாம்பாபுரம் அன்னசத்திரம்
5. சக்வாரம்பாபுரம் அன்னசத்திரம்
6. ராஜஸம்பூாபுரம் அன்னசத்திரம்
7. யமுனாம்பாபுரம் அன்னசத்திரம்
8. சைதம்பாபுரம் அன்னசத்திரம்
9. சுலக்ஷணம்பாபுரம் அன்னசத்திரம்
10. மகாதேவபட்டணம் அன்னசத்திரம்
11. சைதாம்பாபுரம் ராமேசுவரம் பழைய சத்திரம், புது சத்திரம்
12. மல்லியம் அன்னசத்திரம்
13. பஞ்சநத மோகனாம்பாபுரம் அன்னசத்திரம்
14. ராஜகுமாராபாயிஅமணிராஜே அன்னசத்திரம்
15. மாதுஸ்ரீ அஹல்யாபாயி அன்னசத்திரம்

1908இல் வெளியிடப்பெற்ற "தஞ்சை-மதுரை மாவட்டங்களிலுள்ள அரசர் சத்திரங்களின் பரிபாலனம்-முன்னும் இப்பொழுதும்" என்ற வெளியீட்டில் வெண்ணாறு, புதுக்கோட்டை காசாங்குளம் சத்திரம், திரௌபதாம்பாள் புரம் சத்திரம், நடார் சத்திரம் ஆகியவை அதிகமாகக் கூறப்பெற்றுள்ளன.[62] இந்நூலில் தஞ்சைக்கோட்டை அன்னசத்திரம் – சிரேயஸ் (sreyas) என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளது. இச் சிரேயஸ் சத்திரம் இரண்டாம் சிவாஜியால் தான் விரும்பி வழிபடும் கடவுள் பெயரால் அமைக்கப்பெற்றது என்று அறிய வருகிறது.[63] கி. பி. 1743 முதல் 1837 வரையுள்ள காலத்தில் மேற்கூறப்பட்ட சத்திரங்கள் தோற்றுவிக்கப் பெற்றன. மேற்கண்ட 14—10—1838க்குரிய குறிப்பில் திரௌபதாம்பாள்புரம் சத்திரம் குறிப்பிடப் பெறாவிடினும் 1855லும்[64] 1856லும்[65] எழுதப்பெற்ற பட்டியல்களில் திரௌபதாம்பாள்புரம் சத்திரம் இடம் பெற்றுள்ளது. திரௌபதாம்பாள்புரம் என்பது மணமேற்குடியாகும். திரௌபதிபாயி (திரௌபதாம்பாள்) பிரதாபசிங்கனது மனைவியாவர்.[66] நடார் சத்திரமும் அங்ஙனமே 1855இல் குறிக்கப்பெற்றுள்ளது.

---

61. ச. ம. மோ. த. 5-18
62. Note on the Past and Present Administration of the Rajah's Chattrams, Tanjore & Madurai Districts, page - 1
63. -do- P. 1. The Sreyas Chattram at Tanjore was founded by the late Rajah Sivaji in honour of his favourite deity
64. ச. ம. மோ. த. 20-31 65. 8-288
66. பக்கம் 82, போன்ஸ்லே வமிச சரித்திரம், தமிழ்ப் பகுதி

## 1. இராச குமாராபாயி சத்திரம்

இது மிகப் பழமையான சத்திரம் ஆதல் கூடும். கி. பி. 1728க்குரிய குறிப்பொன்று இச்சத்திரமும் கோயிலும் அமைத்த செய்தியைத் தெரிவிக்கிறது.[67] ராஜகுமாராபாயி என்பவர், துக்கோஜி எனப்பெற்ற முதலாம் துளஜாவின் மனைவியாவர்.[68] துக்கோஜி 1728 முதல் 1736 வரை ஆட்சி செய்தவர். இச்சத்திரம் சூரக்கோட்டையில் உள்ளதாதல் வேண்டும்.

## 2. சக்வாரம்பாபுரச் சத்திரம்

கி. பி. 1756க்குரிய குறிப்பொன்று பிரதாப சிங்கர் காலத்தில் சக்வார்பாயி சாகேப் அவர்களுக்குரிய திருபுவனச் சத்திரத்துக்கும் அக்கிரகாரத்துக்கும் மொயின் கொடுத்தமை கூறுகிறது.[69] மேலும் ஓர் ஆவணம்[70] அச்சத்திரத்துக்கு மொயின் 3300 சக்கரம்; 100 பிராமணர்கட்கு உணவு அளிக்க 2600 சக்கரம்; தண்ணீர்ப்பந்தல் நாள்கிழமைகட்காக 5028 சக்கரம் வருமானம் தரும்படியாகத் தேப்பெருமாநல்லூர் சர்வமானியமாக அளிக்கப்பெற்றது என்று தெரிவிக்கிறது. சக்வாரம்பா பாயி என்பவர் பிரதாப சிங்கரது மனைவியாவர்.[71] இச்சத்திரம் தொடங்கியபொழுது 24 வீடுகள் கட்டப்பெற்றன; சேரமாநல்லூர் என்ற ஊரின் வருவாயினின்று வீடொன்றுக்கு 200 கலம் வீதம் கொடுக்கப்பெற்றது. இச்செய்திகளை 1837க்குரிய ஓராவணம் கூறுகிறது.[72]

## 3. இராசகுமாராம்பாள்புரம் சத்திரம்

இராசகுமாராம்பா என்பவர் இரண்டாம் துளஜாவின் மனைவியாவர்.[73] கி. பி. 1777இல் சத்திரம் கட்டி அக்கிரகாரம் கட்டினார்.[74] இச்சத்திரம் மீமிசல் (மீனமேசல்) என்னும் ஊரில் இருப்பதாகும்.[75] இச்சத்திரத்துக்கு அருகில் 1778இல் கல்யாணராமசாமி கோயில் எடுப்பிக்கப்பெற்றது. இதன் பூசை முதலியவற்றுக்காக 2100 சக்கரம் மொயின் செய்து நிலதானம் செய்யப்பெற்றது.[76] இராசகுமாராம்பா பாயிடம் அலத்தூர், வலிவயல், தாளனூர், மீனமேஸல் என்ற ஊர்களுடன் ஆவுடையார்குடி சோத்திரியம் சேர்த்து அளிக்கப்பெற்றது.[77]

---

67. 4-41 68. பக்கம் 81 : போன்ஸ்லே வமிச சரித்திரம், தமிழ்ப் பகுதி
69. ச. ம. மோ. த. 25-28 ; 'தஞ்சாவூர் மானுவல்' என்ற நூலில் பக்கம் 287இல் சக்வாரம்பாபுரம் சத்திரம் அம்மாசத்திரம் என்றவூரில் உள்ளது என்றும், சக்வாரம்பா என்பவர் துளஜாவின் மனைவி என்றும், இச்சத்திரம் கி. பி. 1776இல் தொடங்கப்பெற்றது என்றும் உள்ளது
70. 1-116, 117
71. பக்கம் 81, போன்ஸ்லே வமிச சரித்திரம், தமிழ்ப் பகுதி 72. 5-290
73. பக்கம் 109, போன்ஸ்லே வமிச சரித்திரம், தமிழ்ப் பகுதி ; தஞ்சாவூர் மானுவல் என்ற நூல் பக்கம் 287இல் இராசகுமாராம்பாள் துளஜாவின் தாய் என்றுள்ளது
74. 1-159 75. 1-194 ; (மீனமேஸலுக்குப் பிரதி பெயர் ராஜகுமாரம்பாபுரம்)
76. 1-195 77. 5-301, 302

## 4. மோகனாம்பாள்புரச் சத்திரம்

இது இராஜாமடம் சத்திரம் எனப்படும்.[78] இச்சத்திரம் 1784இல் நிறுவப பெற்றதாதல் வேண்டும்.[79] மோகனா சாஹேபாவும் இரண்டாம் துளஜாவின் மனைவியருள் ஒருவர்.[80]

## 5. திரௌபதாம்பாபுரம் அன்னசத்திரம்

திரௌபதாம்பாள், பிரதாபசிங்கரது மனைவியருள் ஒருவர் என்பதும், திரௌபதாம்பாள்புரம் என்பது மணமேற்குடியென்றும் மேலே கூறப்பட்டன. திரௌபதாம்பாள்புரச் சத்திரக் குத்தகை பாக்கிபற்றி ஓராவணக் குறிப்பு உள்ளது.[81] பாயிசாயேப் அவர்கள் காலத்திலிருந்து தென்னந்தோப்பு மாந்தோப்பு முதலியவற்றைப் (பிலவங்க முதல் விரோதிகிருதுவரை) ஐந்து ஆண்டுகள் அதாவது 1793 வரை குத்தகைக்கு வைத்துக்கொண்டிருந்தவர் அலி அவகர் மரக்காயர் என்பவர் ஆவர். குத்தகை பாக்கி 2514 சக்கரம் ஆகிவிட்டது. ஆகவே இதில் 1400 சக்கரம் கொடுத்து மீதியைத் தள்ளிவிட வேண்டும் என்று மரக்காயர் வேண்டிக் கொண்டார். அங்ஙனமே உத்தரவும் ஆயிற்று. இச்சத்திரத்துக்காகக் கீழக்காட்டூர்க் கிராமம் 850 சக்கரங்கள் கொடுத்து 1827 இல் விலைக்கு வாங்கப்பெற்றது.[81அ]

## 6. யமுனாம்பாள்புரம் சத்திரம்

நீடாமங்கலத்துக்கு யமுனாம்பாள்புரம் என்பது மறுபெயர். யமுனாம் பாள் என்பவர் பிரதாபசிங்கரின் மூன்றாவது மனைவியாவர்.[82] இச்சத்திரம் 1761இல் நிறுவப்பெற்றது.[83] இவ்வூரில் கி. பி. 1797இல் காசி விசுவநாத சுவாமி கோயில் மகாமண்டபம் கட்டப் பெற்றது.[84] இங்குள்ள இராமசாமி கோயிலும் சத்திர மேற்பார்வையிலிருந்தது.[85] இச்சத்திரத்திலும் வேதம் கற்பிக்கப்பெற்றதாதல் வேண்டும். யசுர் வேத பாடம் சொல்வதற்கு வெங்கு ஜடாவல்லபர் என்பார்க்கு நாடோறும் $\frac{3}{4}$ படி அரிசி சாமான்களுடன் கொடுக்கப் பெற்றது.[86] சத்திரதருமத்தில் இருந்து உபநயனம், திருமணம் முதலிய வற்றைச் செய்து வைக்கும் பழக்கம் உண்டு.[86அ] ஆகவே 1847இல் முகுந்த

---

78. 1-194 79. 1-182 80. பக்கம் 109; போன்ஸ்லே வமிச சரித்திரம், தமிழ்ப் பகுதி
81. 4-876, 877, 878 81அ. 4-199
82. பக்கம் 116; போன்ஸ்லே வமிச சரித்திரம், தமிழ் 83. பக்கம் 285; தஞ்சாவூர் மானுவல்
84. ச. ம. மோ. த 19-22 85. 5-218 86. ச. ம. மோ. த. 9-85
86அ. Those who apply to the chatram and state their inability to defray their expenses of receiving the Brahmanical thread,, of their marriage, of the performance of the ceremonies subsequence to their father's death, receive a sum of money proportionate to the occasion - Extract from the letter of Serfoji II dated 28—1—1801 addressed to the Resident, Page, 26 of Administration of the Rajah's Chatrams.

வாசுதேவ என்பவருக்கு "ஷஷ்டி பூர்த்தி"[87] சத்திர தருமத்திலேயே செய்யப் பெற்றது போலும்.[88] உத்தரக்கிரியையும்[88அ] சத்திர தருமத்திலேயே நடத்தப் பெறுவதுண்டு[89] (அடிக்குறிப்பு 86அ காண்க.)

## 7. இராமேசுவரம் சத்திரம்

இது கி. பி. 1784இல் இரண்டாம் துளஜாவால் அமைக்கப்பெற்றதாதல் வேண்டும் என்று தோன்றுகிறது. இதற்கு விடப்பட்ட ஊர் வடசேரி என்றும், 12 பேர்கள் மூன்று ஆண்டுகளுக்கு 2160 சக்கரம் வீதம் கொடுப்பதாகக் குத்தகை எடுத்தார்கள் என்றும், இழப்பு ஏற்படின் அரசுக்குத் தொந்தரவு தருவதில்லை என்றும், ஊர்க்கோவில்பூசை தண்ணீர்ப்பந்தல் முதலியன அன்னோரே நடத்துவதாகவும் கூறும் ஓராவணக்குறிப்பு உள்ளது.[90] இது கி. பி. 1829க்கு உரியது. இந்த அன்னசத்திரத்துக்கு இடும்பாவனம் மாகாணத்தினின்று நெல் அனுப்பப்படுவதுண்டு.[91] இராமேசுவரத்தீவில் இரண்டு சத்திரங்கள் இருந்தன ஆகலின் இது பழைய சத்திரம் எனப்பட்டது.

## 8. சுலக்ஷணாம்பாபுரம் சத்திரம் (வேளங்குளம்)

இச்சத்திர மராமத்துக்கு 1784இல் மூத்துப்பேட்டையிலிருந்து 3665 சக்கரம் செலவு செய்யப்பெற்றுள்ளதாகத் தெரிவதால் இச்சத்திரம் கி. பி. 1784 இல் அமைக்கப்பெற்றதாதல் கூடும்.[92] சுலக்ஷணாபாயி சாகேப் இரண்டாம் துளஜாஜியின் மூன்றாவது மனைவியாவர்.[93] கி. பி. 1784இல் அக்கிரகாரம் எல்லையைச் சேர்ந்த கட்டுக்கோப்பும் குளமும் 500 சக்கரத்துக்கு விலைக்கு வாங்கப்பெற்றது.[94] இந்த ஊர் அக்கிரகாரத்தில் 25 வீடுகள் கட்டித் தானம் செய்யப்பட்டன.[95] இச்சத்திரத்துக்கு உரிய கோயில் அக்ஷயபுரீசுவரர்கோயில் எனப்பெற்றது. கி. பி. 1830இல் சத்திரத்துக்கும் கோயிலுக்கும் செந்தலை உப்பளத்திலிருந்து விற்று முதலான உப்புக்குக் "காணி 1க்குக் கோவிலுக்கு $2\frac{1}{2}$ பணம், சத்திரத்துக்கு $\frac{1}{2}$பணம்" வீதம் அளிக்கப்பெற்றன.[96] கி. பி. 1841இல் இச்சத்திரத்தைச்சார்ந்த அக்ஷயபுரீசுவரர் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.[97] கி. பி. 1824இல் இச்சத்திரம் சௌ. அஹல்யாபாயி சாகேப் அவர்கள்

---

87. ஷஷ்டிபூர்த்தி – 60 ஆம் ஆண்டு நிறைவு விழா. 88. ச. ம. மோ. த. 8-41
88அ. உத்தரக்கிரியை – இறந்தவர்க்குச் செய்யப்பெறும் இறுதிச் சடங்குகள்
89. ச. ம. மோ. த. 8–88,
90. ச. ம. மோ. த. 4-18 91. ச. ம. மோ. த. 4-28 92. 1-180
93. பக். 125; போன்ஸ்லே வம்ச சரித்திரம், தமிழாக்கம் 94. 1-127, 128
95. ச. ம. மோ. த. 8-28 96. 5-3
97. ச. ம. மோ. த 4-7

பார்வையில் இருந்ததாகத் தெரிகிறது.[97அ] சுலக்ஷணாபாய் (இரண்டாம் துளஜா வின் மூன்றாவது மனைவி) இறந்தபிறகு இரண்டாம் சரபோஜியின் மூத்த மனைவி அஹல்யாபாயிக்கு இச்சத்திரம் உரியதாயிற்று என அறியலாம். யார் பெயரால் ஒரு சத்திரம் அமைக்கப்பட்டதோ அவர் மேற்பார்வையில் அச் சத்திரம் அவர் வாழ்நாள் வரையில் இருக்கும் என்றும், அவருக்குப்பின் உயிர் வாழும் மூத்த அரசமாதேவிக்குச் செல்லும் என்றும் ஒருமரபு இருந்ததாகத் தெரிகிறது.[97ஆ] இச்சத்திரத்துக்கு ஈரக்கொல்லை என்ற கிராமம் 1150 சக்கரம் கொடுத்து விலைக்கு வாங்கப்பெற்றது.[97இ]

## 9. இராஜஸாம்பாபுரம் அன்னசத்திரம்

இராஜஸாம்பாபுரம் அன்னசத்திரம் என்பது தாராசுரச் சத்திரத்தைக் குறிக்கும். இச் சத்திரத்தினின்று சரஸ்வதி மகாலுக்கு 1827இல் 501 எழுத்தாணிகள் அனுப்பப்பெற்றன.[79ஈ] இராஜஸாம்பாள் என்பவர் இரண்டாம் துளஜாவின் முதன் மனைவியாவார்.[97உ]

## 10. மகாதேவ பட்டணம்

இங்கு உமாபாயி சாகேப் சத்திரம் என்னும் ஒரு சத்திரம் இருந்ததாகத் தெரிகிறது.[98] இது 1786க்குரிய குறிப்பு.

## 11. முக்தாம்பாள் சத்திரம்

இது ஒரத்தநாடு சத்திரம் எனப்பெறும். இது 16—1—1802 துன்மதி 'புஷ்யசுத்த திரயோதசியில்' கட்டத் தொடங்கப் பெற்றதாதல் வேண்டும்.[99] இச்சத்திரத் தோற்றம் பற்றிப் போன்ஸ்லே வமிச சரித்திரம் தமிழாக்கம் பக்கம் 136இல் கூறப்பெற்றுள்ளது.

முக்தாம்பாள் என்பவர் சரபோஜி தம் திருமணத்துக்கு முன்னரே சேர்த்துக் கொண்டிருந்த காமக்கிழத்தியாவர். இவ்வம்மையார் தாம் இறக்கும்

---

97அ. ச. ம. மோ. த. 28-33

97ஆ. Raja Serfoji in his letter to the Resident of Tanjore stated that the superintendence of the Chatram "always descended from the elder to the younger queen, that it remained in the hands of the senior queen until her death and then descended to the wife of the reigning Raja" - Page 29, para 6, Note on the Past & Present Administration of the Raja's Chatrams, Tanjore & Madurai Districts, 1908

97இ. 4-199 97ஈ. 4-198 97உ. பக்கம் 100, போன்ஸ்லே வமிச சரித்திரம்

98. 8-169 99. 8-229, 230 ஒரத்தநாடு முக்தாம்பாள் சத்திரத்தின் நுழைவாயிலில் உள்ள மராத்தி கல்வெட்டு இதனை வலியுறுத்துகிறது. - ஒரத்தநாடு - அன்றும் இன்றும் - ஆர். இராமசேஷன், 1977-78, அரசினர் கல்வியியல் கல்லூரி மலர், பக்கம் 17

பொழுது தம் பெயரால் ஒரு அன்னசத்திரம் ஏற்படுத்த வேண்டும் என்று அரசரை வேண்டிக் கொண்டார். அவ்வேண்டுகோட்கிணங்க இரண்டாம் சரபோஜி இச்சத்திரத்தைத் தொடங்கினார்.

முக்தாம்பாள்புரம் சத்திரத்தில் நாடோறும் மூன்று வேளை உணவு அளிக்கப்பெற்றது; உலுப்பைகளும் தரப்பெற்றன.[100] சத்திரங்களில் இருந்த நடைமுறைக்கேற்பத் தரும கலியாணம் நடத்தப்பெற்றது.[101] இச்சத்திரத்துக்கு உமையாள்புரத்திலிருந்து கி. பி. 1825இல் 13007 கலங்கள் நெல் அனுப்பப் பெற்றது[102] என்றதினின்று அச்சத்திரத்தின் உணவுச் செலவு எவ்வளவாக இருந்திருக்கலாம் என்பதை ஊகித்தறியலாம். கி. பி. 1825இல் ரெஸிடெண்டு ஜான் ஃபைஃப் (Fyfe) இச்சத்திரத்துக்குச் சென்றிருந்தார். அவர் அங்கிருந்த ஐந்து கல்வி நிலையங்களைப் பார்த்தார்; எத்தனைப்பேர் ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் படிக்கிறார்கள் என்பதைக் கேட்டறிந்தார். படிக்கிற பையன் களின் எண்ணிக்கை 641. ஒரு நாளைக்கு 3 வேளையும் சாப்பிடுகிறவர்கள் 4020 பேர்;[103] பைராகிகளுக்கும், உலுப்பைதாரர்களுக்கும் ஓராண்டிற்குக் கொடுக்கும் நெல் 45,000 கலம்; மாதச் சம்பளக்காரர் செலவு ஆன தொகை ரூ. 9000 — என்று பல செய்திகள் ஓராவணத்தினின்று தெரியலாம்.[104] இச்சத்திரத்துக் கல்வி நிலையங்களில் ஆங்கிலப் படிப்பும் உண்டு. திருநெல்வேலியினின்று வெள்ளாளர் ஒருவர், சொக்கலிங்கம் என்ற பெயருடையவர், முக்தாம்பாள்புரச் சத்திரத்தில் ஆங்கிலப் படிப்பை முடித்துக் கொண்டு தன் ஊருக்குப் போனார்; அவர் ஊர்க்குச் செல்லும்போது ரூ. 10 இனாம் வழங்கப்பட்டது.[105]

முக்தாம்பாள்புரச் சத்திரம் நல்ல வருவாய் உடையது; ஆகையால் சத்திரத்துக்குரிய சேமிப்புத்தொகையினின்று பெருந்தொகை சர்க்காரில் கடன் வாங்கப்பெற்றது என்றும், அவ்வாறு பெற்ற தொகைக்கு வட்டி ஒரு மாதத்துக்குச் சக்கரம் 600 என்றும் ஓர் ஆவணம் கூறுகிறது.[106] இதனால் சத்திரத்தின் சேமிப்புத் தொகை வட்டிக்கு விடப்படுவதுண்டு என்பது போதரும். மாதத்துக்கு 600 சக்கரம் வட்டி எனின், 12 % வட்டியாகக் கொண்டு நோக்குமிடத்து, 60000 சக்கரம் சர்க்காரில் கடன் பெற்றிருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஒருசமயம் முக்தாம்பாள்புரம் சத்திரத்தில், அரிசி முதலியவற்றின் இருப்பு, கணக்குக்கு ஏற்ப இல்லை; குறைவாகக் காணப்பட்டது. இதற்குக் காரணம் அவை நாடோறும் களவாடப் பெற்றமையே என்பது கண்டுபிடிக்கப் பெற்றது. கணந்தங்குடிக் கள்ளர்களும் வலையர்களும் இரவில் மூன்று பேர்

---

100. 4-52 101. ச. ம. மோ. த. 8-45 (அடிக்குறிப்பு 86அ காண்க)
102. ச. ம. மோ. த. 18-120
103. கி. பி. 1814இல் ரம்சான் மர்தம் 9ஆம் நாள் 4570 பேர் சாப்பிட்டனர்; 1-880
104. 2-241 முதல் 248 வரை 105. 4-244 106. 4-420, 421

சத்திரத்தின் மேல் ஏறிவந்து திருடினார்கள்; இங்ஙனம் சில நாட்கள் நடைபெற்றன; ஒருநாள் அவர்கள் பிடிபட்டார்கள் – என்று ஓர் ஆவணம் கூறுகிறது.[107]

இச்சத்திரத்துக் கல்வி நிலையத்தில் பாடம் சொல்வதற்கு அங்கு இல்லாத நூல்களைத் "தஞ்சை, சரஸ்வதி பாண்டாரத்தில்" இருந்து எடுத்துச் சென்று திருப்புவதும் வழக்கமாயிருந்தது.[108]

## 12. மல்லியம் சத்திரம்

கி. பி. 1821க்குரிய குறிப்பு[109] மல்லியம் சத்திரம் அஹல்யாபாயி சாஹேபு மேற்பார்வைக்குரியது என்றும், நான்கு வேலி சர்வமான்ய நிலத்தை வாங்குவதற்கு ரூ. 2,000 சக்கரம் அரசு பொருள் நிலையத்திலிருந்து பெறப்பட்டதென்றும், ஓராண்டுக்குப் பின் பயிர் வருமானத்தில் திருப்பி வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது. இதனால் சத்திர தருமங்கட்கு நிலங்கள் அதிகமாக வாங்கப் பெறுவதுண்டு என்றும், தொகை சத்திரத்தில் இல்லையெனில் சர்க்கார் பொருள் நிலையத்திலிருந்து கடன் பெற்று வாங்கிச் சத்திர வருமானத்திலிருந்து ஓராண்டு கழித்துக் கடன் அடைப்பதுண்டு என்றும் பெறப்படும். 1850இல் மல்லியம் அன்னசத்திரம் பழுதுபார்க்கப்பட்டது.[110] இதனால் இச்சத்திரம் மிகப் பழமையதாதல் கூடும்.

## 13. தஞ்சாவூர்க் கோட்டை அன்னசத்திரம்

இந்தச் சத்திரத்துக்கு மேற்பார்வையாளராக இருந்தவர் சேனா துரந்தரர் ராஜேஸ்ரீ ராமையா வராஹப்பையா என்பவர் ஆவர்.[111] ஒரு தடவை சத்திரத்தில் உணவு அளித்த பிறகு அவர் சத்திரத்தைப் போய்ப் பார்த்தார். சமைப்பதற்கு வந்த அரிசியில் தவிடும் கல்லும் நொய்யும் இருந்தமையால் 10 படி அரிசியைச் செப்பனிடச் செய்தார். ஒருபடிக்குத் தவிடு ½ படி, நொய் ½ படி, ஒரு கையளவு கல் இருந்தமை அறிந்து உடனே சத்திரம் வேலை பார்க்கும் 7 பேருக்கும் சேர்ந்து இரண்டு ரூபா, இரண்டு வீசம் அபராதம் விதித்தார்.[112]

தஞ்சாவூர்க் கோட்டை சத்திரத்துக்குரிய நிலம் அன்னப்பேட்டை சர்வமானிய கிராமம் என்று தெரியவருகிறது.[113]

இந்தச் சத்திரத்தில், தண்ணீர்ப்பந்தல் தருமம்,[113] சத்திரத்தைச் சேர்ந்த பட்டாபி ராமசாமி கோயிலில் ராமநவமி திருவிழா,[114] கோகுலாஷ்டமி திருவிழா,[115] தீபாவளி,[116] பிருந்தாவன பூசை,[117] ராதாகிருஷ்ண திருவிழா,[118]

107. 1-261, 262　108. 1-270.
109. 1-242　110. ச. ம. மோ. த. 2-8　111. 12-96
112. 12-96, 97　113. 12-101, 109, 110, 112, 128
114. 12-108　115. 12-106, 121　116. 12-108
117. 12-109　118. 12-110

வைகுண்ட ஏகாதசி,[119] விநாயக சதுர்த்தி,[120] துளசி பூசை[121] ஆகியவை ஆண்டுதோறும் நடைபெற்று வந்தனவாதல் வேண்டும்.

இத் தஞ்சாவூர்க் கோட்டை அன்னசத்திரம் ராஜகுமாராம்பா பாயி அமணிராஜே சாகேபுக்கு உரியதாக இருந்தது.[122] இச்சத்திரத்துக்குரிய ஊர் அன்னம்பேட்டை என்பது. இதன் வருவாய் கி. பி. 1843இல் மிகக்குறைந்து விட்டதாகவும் அதற்காக மாதம் 4 கலம் நெல் சம்பளம் கொடுத்து ஒருவரை நியமித்தால் அவர் பராமரிப்பில் வருவாய் மிகலாம் என்றும் கூறப்பட்டது. அதற்கு 'ஸர்க்கேல்' அவர்கள் அந்த ஊரிலுள்ள பெரிய மிராசுதாரரிடத்திலேயே குத்தகை பேசி ஒப்படைக்கலாம் என்று கருதினார். எனினும் சேனாதுரந்தரர் வராஹப்பையா அவர்கள் அந்த அலுவலர் 150 கலம் அதிகம் வருவாய் வருமாறு செய்தால் ஓராண்டுக்கு நியமிக்கலாம் என்று உத்தரவிட்டார்.[123]

சகம் 1767 (கி. பி. 1845)இல் சேனாதுரந்தரர் ராஜேஸ்ரீ ராமையா வராஹப்பையா "ராஜ்யத்தில்" (அரண்மனையில்) வேலை செய்பவர்களின் பெயர்களை 48 தலைப்புக்களில் பிரித்துக் கொடுத்துள்ள நிரலில்,

"மாதோஸ்ரீ காமாட்சியம்பா சத்திரம், மாதோஸ்ரீ பத்மா சத்திரம், மாதோஸ்ரீ அஹில்யாபாயி சத்திரம்"[124] என்று சில சத்திரங்களும், ராஜகுமாரம்பா பாயி சத்திரமும் குறிக்கப்பெற்றன. மேற்குறித்த மூவர் எவ்வெச் சத்திரங்களுக்கு உரியவர் ஆயினர் என்பது தெரியவில்லை. இவர்களுள் காமாட்சியம்பா சிவாஜியின் மூன்றாவது மனைவி; பத்மா (பத்மாம்பா) இரண்டாவது மனைவி; பத்மா சிவாஜிக்கு முன்னரே காலமானார்.[124அ]

தஞ்சாவூர்க் கோட்டை அன்னசத்திரத்தில் கி. பி. 1854இல் வைகாசி மாதம் 26 ஆம் நாளில் எத்தனைப் பேருக்கு உணவு அளித்தனர் என்ற விவரம் தெரியவருகிறது. முதல் பந்தியில் 240பேர்; இரண்டாவது 70; மூன்றாவது 50; நான்காவது 33; ஆக 373 பேர்; ஸ்ரீவேஷ்டமம் 20; பைராகி உலுப்பை 38; ஆக 451 பேர் ஆவர்.[125] இதற்கு முன்நாளில் 469 பேர்.[126] நாடோறும் கொடுக்கப்பெற்ற உணவு விவரமும் அதில் தரப்பெற்றுள்ளது.

## 14. சைதம்பாபுரம் அன்னசத்திரம்

இது சூரக்கோட்டை அன்னசத்திரத்துக்கு அருகில் இருந்த சத்திரம். இதுவும் சூரக்கோட்டை அன்னசத்திரமும் ஒருங்கு சேர்க்கப்பட்டதெனத்

119. 12-111 120. 12-112 121. 12-118
122. 12-117, 128 123. 12-117 முதல் 119 வரை 124. 12-185, 186
124அ. Tanjore Manual, Part V, Para. 66 125. 12-859
126. 12-860

தெரிகிறது. இவ்விரண்டு சத்திரங்களுக்கும் இடையில் இருந்த தொலைவு ஒருமைல் கூட இல்லை.[127] பிற சத்திரங்கள் போலவே இச்சத்திரத்திலும் வேதம் முதலியன கற்பிக்கப் பட்டுவந்தன. அங்குப் படிக்கும் மாணாக்கருக்கு வேண்டிய நூல்களை (சரஸ்வதி மகாலிலிருந்து) பெற்றுத் திருப்பித்தர வேண்டும் என்று 1814க்குரிய ஓராவணம்[128] கூறுகிறது. அந்நூல்கள் மாக புராணம், நைஷதம், அமரம் என்பனவாம். இவை சமஸ்கிருத நூல்கள் என்பது வெளிப்படை. சைதம்பா என்பவர் இரண்டாம் சிவாஜிக்கு முன்னதாகவே இறந்தார்.[128அ]

15அ. கும்பகோணம் மகாமகக் குளத்துக்கு அருகில் ஒரு அன்ன சத்திரம் இருந்ததாகக் கி. பி. 1785க்குரிய ஆவணக் குறிப்பால் அறியப்பெறும்.[129]

15ஆ. பாயிமார்களில் அன்னபூர்ணா பாயி, மணிகர்ணிகா பாயி என்னும் இருவர் 600 சக்கரம் கொடுத்தனர். அதன் வட்டியில் திருவையாற்று அன்னசத்திரத்தில் இரவில் வரும் பரதேசி பிராமணர்கள் மூன்று பேருக்கு உணவு அளிக்கத் திட்டம் வகுக்கப்பெற்றது.[130]

## 16. லக்ஷ்மீராஜபுரம் சத்திரம்

இங்குள்ள கோயில் அமிர்த கடேசுவர சுவாமி என்கிற தளிகேசுவர சுவாமி கோயில் ஆகும்.[131] அமிர்தராவ் ராமோஜி ஸர்ஜேராவ் காட்கே என்பவரின் தந்தை தளிகேசுவரர் கோயிலை எடுப்பித்தார்; லக்ஷ்மீராஜபுரம் அக்கிரகாரம் அன்னசத்திரம் ஆகியவற்றை உண்டாக்கினார்; பூசை நிவேதனத்துக்காகத் தன் சம்பளத்தில் 50 சக்கரமும், அன்னசத்திரத்துக்காக 15 சக்கரமும் கொடுத்தார்.[132] இத்தருமங்களை நிறுவியவர் இரண்டாம் சரபோஜி மகாராஜாவின் தமக்கை கணவர் ஆவர்.[133] லக்ஷ்மீராஜபுரம் என்பது வெண்ணாற்றங்கரை வடபகுதி பள்ளியக்கிரகாரம் ஆதல் வேண்டும். இச்சத்திரம் கி.பி. 1813இல் அமைக்கப்பெற்றது.[134] இவற்றை எடுப்பித்தவர்கள் பரிபாலனத்திலேயே இவை இருந்தன.[135]

கி. பி. 1856இல் சேனா துரந்தரர் நீலகண்டராவ் ஆனந்தராவ் ஜாதவ் என்பவர் **சத்திரங்களின் செயல்முறை** பற்றி ஒரு சுற்றறிக்கை விடுத்து உள்ளார்.[136] அதனுள் சத்திரங்கள் எவ்வாறு செயல்படவேண்டும்; அங்கு

---

127. Page 1, Past & Present Administration of the Rajah's Chatrams – The Chatrams of Sydambalpuram and Surakkottai have since been amalgamated under G. O. No. 1226, L. Dis. dated 5—9—1907. They lay within a mile of each other.

128. 5-807  128அ. Tanjore Manual V, paragrah 66  129. 2-12

130. ச. ம. மோ. த. 4-41  131. த. தி. பக்கம் 46  132. 4-479, 480

133. த. தி. பக்கம் 46  134. 5-215  135. த. தி. பக்கம் 46

136. 8-280 முதல் 287 வரை; ச. ம. மோ. த. 6-82

யாருக்கு உணவு அளிக்கவேண்டும்; எவ்வளவு சேமித்தல் வேண்டும் முதலிய வற்றைப் பற்றிக் கூறியுள்ளார். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

சத்திரங்கள் இன்றியமையாத செலவைத் தவிர அதிகச் செலவைக் குறைக்க வேண்டும்.

சத்திரத்தின் வரவு குறைந்தாலோ, பஞ்சம் வந்தாலோ, பழுது பார்க்க வேண்டி வந்தாலோ, சத்திரத்துக்குக் கடன் ஏற்படும்; அதனால் தருமம் குறையும். ஆகவே வருவாயுட் கால் பங்கு ஆயினும் சேமிக்க வேண்டும்.

கால் பங்கு சேமிக்க முடியாத சத்திரங்களில் அதிகாரிகள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்; ஒரு சிறு தொகையாவது மிச்சப்படுத்த முயலவேண்டும்.

கதியில்லாதவர், பரதேசி, சக்தியற்றவர், வழிப்போக்கர், குருடர், முடவர், குழந்தை, கிழவர் இத்தகையோர்க்கே உணவளிக்கவேண்டும்.

வழிப்போக்கரில் நோய்வாய்ப்பட்டவர்க்குச் சத்திரத்தின் வயித்தியரைக் கொண்டு சிகிச்சை செய்தல் வேண்டும்; அவர்கள் நோய் நீங்கி நலம் பெறும்வரையில் பத்தியம்* வகையரா கவனிக்கப்பெற்றுவரும்.[137] பெரிய அலுவலர்கள் யாராயினும் வந்தால் அவரவர்களுடைய பெருமைக்கேற்ப உணவு மரியாதை செய்யலாம்.

சத்திரத்தில் உள்ள அலுவலர்கள் ஆட்கள் யாரும் சத்திரத்தில் உணவு கொள்ளக்கூடாது.

ஊரிலுள்ளவர்களில் கதியற்றவர்கட்கு உணவளிக்கலாம். ஆனால் ஊரிலுள்ள சோம்பேறிகளுக்கு உதவுதல் கூடாது.

— இத்தகைய கட்டுப்பாடுகளின்கீழ் எல்லாச் சத்திரங்களும் இயங்கி வந்தன வாதல் கூடும்.

1811ஆம் ஆண்டு "ரெவின்யூ போர்டு" 7ஆவது "ரெகுலேஷன்"படி சத்திரங்கள் பிற அறங்கள் இவற்றுக்கு விடப்பட்ட நிலங்களைப் பற்றிய செய்திகளை விசாரணை செய்யும் அதிகாரம் மாவட்டக் கலெக்டருக்கு உரிய தாயிற்று.[138]

இச்சத்திரங்களில் **உலுப்பைகள்** அளிப்பதுண்டு. சத்திரத்துக்கு வரவியலாதவர்கட்கும், பெரிய அதிகாரிகட்கும், வந்து உண்பதற்கு விரும்பாத

---

137, "Travellers who fall sick at the Chatram or before their arrival, receive medicine and the **diet proper for them*** and are attended to with respect and kindness till their recovery" - page 26 - Past & Present Administration of the Rajah's Chatrams - Extract from the letter of Serfoji II dated 28—1—1801 addressed to the Resident

138. 5-258, 259

வர்கட்கும்,[139] அரிசியும் அதற்குரிய பிற பொருள்களும் அளிப்பது வழக்கமாய் இருந்தது. இங்ஙனம் உலுப்பைகள் பெரும்பாலும் அந்தணர்கட்கும், பெரியோர் கட்கும், பைராகிகட்கும்,[139அ] வெள்ளையர்களாகிய பெரிய அலுவலர்கட்குமே தரப்படும் என்று அறியவருகிறது.

" திருவழுந்தூர் பெருமாள் ஐயங்கார் – பெருமாள் மூர்த்தி செய்கிறவர்– இவருக்குத் தஞ்சாவூர் அன்னசத்திரத்தில் நாளும் 3 உலுப்பை கொடுக்கிறது"[140]

" ஞானாநந்தநாதர் என்பவர் பிக்ஷை வாங்கி வருபவர் ; கோட்டைக்கு வந்ததிலிருந்து பிக்ஷைக்குப் போகமுடியவில்லை ; ஆகவே அவருடன் இருக்கும் ஐந்து பேருக்குமாக இரண்டு உலுப்பைகள் கொடுக்க உத்தரவு செய்ய வேண்டும் "[141]

" அன்னசத்திரம் – தஞ்சாவூர் ........... 38 உலுப்பை எண்ணிக்கை– பைராகி"[142]

"கர்னல்துரை ஈஸ்டென்ட் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்குப்போகிறார் ; கும்பகோணத்தில் இறங்கியபொழுது உலுப்பைகள் தட்டுகள் முதலியன "[143] — என்பனவற்றால் உலுப்பை அளிக்கப்பெற்றவர் யார் யார் என்பது பெறப்படும்.

" பாபாசாமி புத்திரர் ராமசுவாமி குத்தாலத்திலிருந்து வருகிறார். அவருக்கு ........ விடுதி செய்து கொடுத்து உலுப்பைகள் முதல்தரம் 25, இரண்டாம் தரம் 25 கொடுப்பது "[144]

" முதல்தரமான உலுப்பைக்குச் சம்பா பச்சை அரிசி "[145]

என்ற குறிப்புக்களால் உலுப்பைகளிலேயும தரங்கள் உண்டு என அறியப்பெறும்.

## உ. பலவகை அறங்கள்

**1. யாகசாலைத் தருமம் :** 1828இல் இரண்டாம் சரபோஜி, வெங்கட ராயர் என்கிற ரெட்டியாருக்குக் காவிரிக்குத் தென்கரையில் 133 குழி நிலத்தை யாகசாலைத் தருமமாய் நீர்வார்த்துக் கொடுத்தார்.[146]

---

139. "Those who do not choose to eat the boiled rice receive it unboiled with spices etc." - Page 26 Past & Present Administration of the Rajah's Chatrams. 139அ. பைராகிகள் – வடநாட்டுத் துறவிகள்.
140. 2–188 141. 1–885, 886, 887 142. 12–859
143. 2–9, 10 144. ச. ம. மோ. த. 4–10 145. 2–4
146. 2–258, 254 (பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, கொற்கை கிழான் நற்கொற்றன் என்பவனுக்கு அவன் வேள்வி செய்த இடம் இருந்த ஊரையே வேள்வி குடி என்று பெயரிட்டுத் தானம் செய்தமை நெடுஞ்சடையன் பராந்தகனுடைய **வேள்விகுடி** செப்பேடுகளால் அறியப்பெறுகிறது. இச்செய்தி இங்குக் கருதத் தக்கது – பாண்டியர் செப்பேடுகள் பத்து, பக்கம் 89 – 40 )

2. **தசதானங்கள் :** பிராமணர்களுக்கு விசேட காலங்களில் பசு, பூமி, எள், பொன், நெய், ஆடை, வெல்லம், நெல், வெள்ளி, உப்பு என்ற இவை பத்தும் கொடுக்கப்பெறும். இவை "தசதானங்கள்" எனப்பெறும்.[147] இவற்றுடன் மேலும் சிலவற்றைச் சேர்த்துச் "சோடச மகாதானம்" என்பர் (சோடசம்-16).

அ. **கோதானம்:** பசுக்களைத் தானம் செய்வது பெரும்பான்மை வழக்கு. பசுவைத் தானம் செய்வதற்கு மாறாகப் பணம் தருவதும் உண்டு; ஒரு கோதானத்துக்கு 20 சக்கரம் என்றும், அரைக்கோதானத்துக்கு 10 சக்கரம் என்றும் ஒரு குறிப்பில் காணப்பெறுகிறது.[148] உண்மையான பசுவைத் தானம் செய்வதற்கு மாறாகக் கொடுக்கும் தொகையில் பாதித் தொகை அரைக் கோதானத்துக்கு வழங்கப்பெறும். கி. பி. 1797இல் ராமாயண பட்டாபிஷேகம்; அவ்விழா நாளில் மராட்டிய மன்னர் அலங்கார கோதானம் செய்தார்.[148அ] இவ்வலங்கார கோதானத்தில் பசு எவ்வாறு அழகுபடுத்தப் பெறும் என்பது விளங்கவில்லை.

" திருப்பயணத்தில்[148ஆ] ஆபத்சகாயேசுவரசுவாமி கோயிலில் மாதத்திற்கு ஒரு கோதானம் கொடுப்பது வழக்கம்"[149] என்றதால் மாதந்தோறும் சில கோயில்களில் பசு தானமாகக் கொடுக்கப்பெற்றது என்பது தெரியவரும். ராமநவமி போன்ற பண்டிகை நாட்களில் கோதானம் செய்யப்பெறும்.[149அ] ஆயிரம் பசுக்களைத் தானம் செய்வது **"கோ ஸஹஸ்ரம்"** எனப்படும். பாண்டியர்களுள் கி. பி. 710இல் அரசு எய்திய அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்பவர் "எண்ணிறந்த கோசகசிர" தானம் செய்தார் என்பது செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் அறியப்பெறுவது.[150] கி. பி. 1819இல் மராட்டிய மன்னர் கோ சகசிரம் முதலிய தானங்கட்கு ஒரு பெருந்தொகை ரூ. 51,139 செலவு செய்ததாகத் தெரிகிறது.[151] கி. பி. 1832லும் பாத்தியூர்த் தமிழ்ச் சாத்திரிக்கு 1000 பசுக்கள் தானமாக அளிக்கப்பெற்றன.[152]

**ஆ.** பலவகைகளில் பொன் தானம் செய்வதுண்டு. இரண்டாம் சரபோஜி 1826இல் பெரிய கோயில் சுவாமிக்குத் தங்க விருஷப தானம் செய்தார்.[153]

இங்ஙனமே தங்க யானை வாகனமும் செய்து (பெரிய கோயிலுக்குத்) தரப்பெற்றது.[154] இவ் யானை வாகனம் தானம் செய்தபொழுது சுவாமி நான்கு தெருக்களிலும் வர ரூ. 200 செலவாயிற்று என்றும், அது போல் விருஷப

---

147. ச. ம. மோ. த. 6 – 7    148அ. 10-172, 177; ச. ம. மோ. த. 19-80
148ஆ. திருப்பழனம் – திருவையாற்றுக்கு அருகிலுள்ளது.    149. 1-840    149அ. 1-256
150. வேள்விக்குடி செப்பேடுகள் – பாண்டியர் செப்பேடுகள் பத்து – பக்கம்-40
151. 5-295; ச. ம. மோ. த. 5-86    152. ச. ம. மோ. த. 10-15
153. 4-252; ச. ம. மோ. த. 5-86    154. ச. ம. மோ. த. 5-86

வாகனம் நான்கு வீதிகளிலும் வலம் வருங்கால் அந்த அளவு செலவு செய்யலாம் என்றும் ஒரு ஆவணக்குறிப்பு இருப்பதால், தங்க யானை வாகனம் கொடுத்த பிறகே விருஷப வாகனம் கொடுக்கப்பெற்றது என அறியலாம்.[155] மேலும் 1832இல் வெள்ளி விருஷப தானம் செய்ததாக ஓர் ஆவணம் குறிப்பிடுகிறது.[156]

(இ) சோடச மகாதானங்களில் **கன்யாதானம்** என்பது ஒன்று. ஒரு பெண் பூப்படைவதற்கு முன்னே பொன்னும் மணியும் பூட்டி ஒருவனுக்குத் திருமணம் செய்விப்பது கன்யாதானம் என்பர். கன்யாதானம் செய்வித்தமைக்கு 1826க்குரிய ஒரு ஆவணக்குறிப்பு உள்ளது. அப்பொழுது ஒரு நாட்டியம் நடைபெற்றது; அதற்கு 27 சக்கரம் 5 பணம் செலவு.[156அ]

**3. துலாபார தானம் :**[157] துலாபாரதானமாவது துலாவின் ஒரு தட்டில் தான் அமர்ந்து, பிறிதொரு தட்டில் தன் எடைக்குரிய பொன்னும் மணியும் இட்டுப் பின்னர் அதனைக் கோயில்கட்கும் அந்தணர்கட்கும் அறிஞர் கட்கும் கொடுப்பது ஆகும்.

இராமேசுவரத்தில் (இரண்டாம் சரபோஜி) வெள்ளியையிட்டுத் துல்ாபார தானம் செய்தார். அந்தச் சமயத்தில் ஸர்க்கேலவர்கள் துணிமணிகளையும், ஐந்துவித உலோகங்களையும் இட்டுத் துலாபாரதானம் செய்தார்.[158]

**4. அன்னதானம் :** மக்களின் பசியைப் போக்குவது சிறந்த அறம். சங்க காலத்தில் சிறுகுடி கிழான் பண்ணன் என்பவன் இடையறாது சோறிட் டமையின் பசிப்பிணி மருத்துவன் எனப் பெற்றான் என்று புறம் 173ஆம் பாடல் கூறும். ஏழைகட்கும் பயணிகட்கும் உணவிடும்பொருட்டே மராட்டிய மன்னர் பல சத்திரங்களை அமைத்தனர். அவற்றுடன் சில சிறப்பான நாட்களில் லக்ஷம் பிராமணர்கட்கும் உணவளித்தல் பேரறமாகக் கருதினர். அங்ஙனம் 100 ஆயிரம் பிராமணர்கட்கு விருந்தளித்தமைக்குச் சில சான்றுகள் உள்ளன.

---

155. 4-480; ச. ம. மோ. த. 5-86 156. ச. ம. மோ. த. 10-15

156அ. ச. ம. மோ. த. 5-84

157. கி. பி. 640இல் பட்டம் ஏறிய அரிகேசரி மாறவர்மன் என்னும் பாண்டிய மன்னன் இரணிய கருப்ப தானமும் துலாபார தானமும் பற்பல செய்தான் என்றும்; அவன் வழியில் தோன்றியவனும், மான்தேர் மாறன் எனப்படுபவனும், கி. பி. 710இல் அரசு எய்தியவனுமான அரிகேசரி பராங்குச மாறவர்மன் "எண்ணிறந்தன கோசகசிரமும் இரணிய கருப்பமும் துலாபாரமும் மண்ணின்மிசைப் பல செய்தான்" என்றும் வேள்விக் குடி செப்பேடுகள் பகர்கின்றன. முதலாம் இராசராச சோழனும் திருவிசலூரில் துலாபாரம் புகுந்தமை அவ்வூரிலுள்ள சிற்பத்தாலும் கல்வெட்டாலும் அறியப்பெறும் : பாண்டியர் வரலாறு – சதாசிவ பண்டாரத்தார் பக்கம் 41, 46, 195, 196 (1969 ஆம் ஆண்டுப் பதிப்பு) 158. 7-621

" இலக்ஷம் பிராமண போஜனத்துக்குச் சாமான் வாங்கச் சக்கரம் 5,000 " என்ற குறிப்பால்[159] கி.பி. 1801இல் லக்ஷம் பிராமணர்கட்கு உணவளிக்கப்பட்டது என்பது போதரும். மேலும் இதேயாண்டில் முத்துலக்ஷ்மி பாயி என்பவர் " தாஸ்தான் " மகாலில் " லக்ஷ பிராமண போஜனம் " நடத்தியதாகத் தெரிகிறது.[160] மேலும் இத்தகைய பெருந்திட்டங்கட்கு மராட்டிய மன்னர் பிறருக்கு உதவி புரிந்தமையும் தெரியவருகிறது. மைசூர்ப் புரந்தர தாசருடைய வழியில் வந்தவர் – சீனிவாச கிருஷ்ணதாஸ் என்ற பெயருடையவர் - " லக்ஷம் பிராமண போஜனம் " நடத்த உதவி வேண்டினார். 1000. பேருக்கு வேண்டிய உணவுப்பண்டங்கள் கொடுக்கப்பெற்றன.[161] இது 1842க்குரியது.

**5. தண்ணீர்ப் பந்தல்:** தண்ணீர்ப் பந்தல் அமைத்து வேனிற் காலத்தில் பங்குனித்திங்கள் முதற்கொண்டு மூன்று முதல் ஆறு மாதங்கள் பயணிகட்கு நீர் வார்த்தல், நீர்மோர் வார்த்தல் ஆகியவை இந்நாட்டில் பெருவழக்காய் இருந்து வரும் தருமங்களில் ஒன்றாகும். மூன்று மாதங்கள் தண்ணீர்ப்பந்தல் தருமம் நடத்துவது பெரும்பான்மை. முதலாம் இராசராச சோழனது உக்கல் கல்வெட்டினின்று தண்ணீர்ப்பந்தல் தருமம் ஆறுமாதங்கள் நடக்கும் என்று தெரிகிறது. ஆனால் இரண்டாம் சிவாஜி காலத்தில் தஞ்சாவூரில் 12 மாதங்களும் தண்ணீர்ப் பந்தல் நடத்தப்பெற்று வந்தது எனத் தெரிகிறது.[162]

**6 தில பர்வத தானம்:** பத்துத் தானங்களில் எள்ளைத் தானம் செய்வதும் ஒன்று. தானம் பெறும் பிராமணர்கள் எள்ளைத் தானம் பெற்றுக் கொள்வதற்குச் சிறிது தயங்குவர். எள் தானம் பெறுபவர் அதிக தட்சணை கொடுத்தால் பெறுவதற்கு இசைவு காட்டுவர். ஆகவே எள் தானம் கொடுக்கும் பொழுது அதிக தக்ஷிணை கொடுத்தமை ஓராவணக் குறிப்பினால் அறிய வருகிறது.[163]

"சனீசுவர பீடா பரிஹாரார்த்தம் ஆயுஷ்யாபி விருத்தியர்த்தம் சத்சந்தான சித்தியர்த்தம் திலபர்வததானம்[164] – முக்கியமான திலபர்வத தானம் வாங்கும் பிராமணர்கட்குத் தக்ஷணை 500 சக்கரம்; மற்ற பர்வத தானம் வாங்குவோர்க்கு 200 சக்கரம் "

— இக்குறிப்பு 1784க்குரியது. பிறவற்றைத் தானமாகப் பெற்றவரைக்

---

159. 2–127 ; ( *இலக்ஷம் பிராமணர்கட்கு உணவளித்தமைபோல் பெரியகோயில் சுவாமிக்கு லக்ஷம் எருக்கம்பூ அருச்சனை ; கொங்கணேசுவரர் கோயில் சனீசுவரருக்கு ஒரு லக்ஷம் செம்பரத்தம்பூ ; பிரதாப வீர அனுமாருக்கு லக்ஷம் துளசி – ஆகியவை அருச்சனை செய்யப்பெற்றன;* 2–166 ) 160. 2–165

161. ச, ம. மோ. த. 2–41. 162. 12–108 163. ச. ம. மோ. த. 9–19

164. *" சனி என்னும் கோளால் ஏற்படும் துன்பங்களைப் போக்குதற்பொருட்டும், ஆயுள் வளர்தற் பொருட்டும், நன்மக்கட் பேற்றுக்கும் ஆக மலையளவு எள் தானமாகக் கொடுத்தல்"– என்பது இதன் தமிழாக்கம் ஆகலாம்.*

காட்டிலும் எள்ளைத் தானம் பெற்றவர்க்கு அதிக தக்ஷிணை கொடுக்கப் பெற்றமை தெளிவு.

7. **சாளக்கிராம தானம்:** திருமால் உருவாகக் கருதிப் பூசிப்பதற்கு உரியதும் கண்டகி நதியில் கிடைப்பதும் ஆகிய சிலை சாளக்கிராமம் எனப் பெறும். கண்டகி நதியானது நேபாளத்தில் தோன்றிக் காசிக்கருகில் கங்கையிற் கலக்கும் ஓராறு என்று கருதப்படுவது.[165] இச்சாளக்கிராம தானம் செய்ததாக மூன்று குறிப்புக்கள் கிடைத்துள்ளன.[166] இவற்றுள் ஒன்று கி. பி. 1781ஆம் ஆண்டில் இரண்டாம் துளஜா சாளக்கிராமமும் வராகமூர்த்தியும் தானம் செய்ததைக் கூறுகிறது.[167] இத்தானம் ஏகாதசி நாளில் செய்யப்பெறும் என்பதை மேலே காட்டிய மூன்று குறிப்புக்களினின்றும், 1846க்குரிய குறிப்பில் "ஏகாதசி சாலிக்கிராம தானம்" என்றமையானும் தெள்ளிதின் அறியப் பெறும்.[168]

8. **சாயாதானம்:** சாயாதானமாவது நெய் அல்லது நல்லெண்ணெயில் தன் முகத்தின் நிழலைப் பார்த்து இதனொடு சிறிது தக்ஷிணை இட்டுத் தான மாகக் கொடுப்பது. இத்தானம் பல இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளது.[169]

9. **பிறர் செய்த தருமங்கட்கு உதவி செய்தல்:** மராட்டிய மன்னர் தாம் தருமங்கள் செய்வதோடு பிறர் தர்மம் செய்தாலும் அதனை மதித்து அத்தர்மம் நன்கு செயல்பட வேண்டியவற்றைத் தாமும் அளிப்பதுண்டு.

நாகையில் சிதம்பரச் செட்டி என்று ஒருவர் இருந்தார். அவர் வாஞ்சூரில் மண்டபம், குளம், அக்கிரகாரம், 12 வீடுகள், கோயில் ஆகியவற்றை 1801இல் உண்டாக்கினார். இரண்டாம் சரபோஜி (அவற்றைப் பராமரித்தற்காக) ஆண்டொன்றுக்குத் தஞ்சாவூர்ச் சக்கரம் 100 அளித்தார்.[170]

10. **இனாம் செலவுகள்:** பெரிய அலுவலர்கள் வீட்டுக் கல்யாணம் முதலியவற்றுக்கு அளித்தலும், கவர்னர்கள், ராணுவ தளபதிகள் முதலிய ஆங்கிலேயர்களுக்குக் கிறிஸ்துமஸ் முதலிய பண்டிகை நாட்களில் பணம் ஆடை அணிகலன்கள் முதலாயவற்றைப் பரிசில்களாக அளித்தலும், யாகம் முதலாய காரியங்கள் நடத்த அந்தணர்கட்கு அளித்தலும் முதலாய நன்கொடைச் செலவுகள் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன.

"கி. பி. 1765இல் சுபேதார் ரகுநாத் அண்ணாஜி அவருடைய பிள்ளையின் கல்யாணத்துக்கு ரூ. 1000"[171]

---

165. Tamil Lexicon, M. U.
166. ச. ம. மோ. த. 19-11; 2-82; 8-4
167. ச. ம. மோ. த. 8-4
168. 10-171, 178, 176
169. 10-171, 178, 175, 176. பார்கவ் ஆதர்ஸ ஹிந்தி சப்தகோஸ் – 1980 (இந்தத் தானம் கிரீக்ஷணதானம் என்று சொல்லவும் பெறும் என்டர் அன்பர் திரு. ப. வெ. நாகராசன்) ஸய்யாதானம் என்பது இதனின் வேறானது,
170. 4-866
171. 2-18

"1771: புதுச்சேரி ஜெயித்ததால் ஜெனரலுக்கு இனாம் ஜரிகை ஆடை பதக்கம்"[172]

"ஜெனரல் சர் யேர்கூட் சீமையிலிருந்து வந்ததால் வஸ்திரம் வகையரு செலவு 1100 புலிவராகன்"[173]

"1776: சென்னைப் பட்டணக் கவர்னர் வகையருக்கள் ஜனவரி பண்டிகைக்கு உடுப்புக்கள் வாங்குவதற்காக வக்கீல் திரியம்பக சம்பாஜியிடம் ஹுண்டி செய்தனுப்பியது, இரண்டு தடவைகளில் 547 வராகன்"[174]

"1797: மேஸ்தர் கட்லோட் பரங்கி – ஜனவரி பண்டிகைக்கு இனாம் ஹோன்ன புலி 500"[175]

"1799: நீங்கள் அவ்விடம் கௌனருக்கும் அவருடைய சம்சாரத்துக்கும் 2 ஆயிரம் வராகனில் வாங்கிக் கொடுக்கிறது. ஜனரலுக்கு 13 ஆயிரம் வராகனுள்ள மோதிரத்தைக் கொடுக்கிறது."[176]

"1811: ஜனவரிப் பண்டிகைக்குப் பிளாக்பர்ன் சாயபுக்கு இனாம் 500 சக்கரம்"[177]

இங்ஙனம் பல்லாயிரக்கணக்கான தொகைகள் கல்யாணம் உபநயனங்களுக்கும் தந்தமையோடு, வெள்ளையர்கட்கும் இனாம் தரப்பெற்றமைக்குப் பலப்பல ஆதரவுகள் கிடைக்கின்றன.

ஆனல் கவர்னர் முதலிய ஆங்கிலேயர்கட்கு இனாம் தருதல் தடை செய்யப்பெற்றது எனத் தெரிகிறது.

---

172. 8–178
173. 8–174
174. ச. ம. மோ. த. 9–1
175. ச. ம. மோ. ச. 19–85
176. 5–418, 414
177. 2–85

# 19

# மருந்து அல்லது வைத்தியம்

தஞ்சை மராட்டிய மன்னர் சிறந்த படைகளை வைத்திருந்தனர். யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை ஆகிய மூன்றும் சிறந்து இருந்தன. மேலும் தஞ்சையில் இருந்த குதிரைப் படை மிகச்சிறந்து இருந்தது என்றும், இந்தியாவிலேயே தஞ்சையில்தான் குதிரைப் படையை வைத்துப் பேணுவதற்குச் சிறந்த சூழல் இருந்தது என்றும் சொல்லப்பெறுகிறது.[1] தஞ்சை அரண்மனையில் ஒட்டகங்களும் இருந்தன; மாடுகளும் பசுக்களும் கணக்கிலடங்கா. இவை நோயுறின் நோயைப் போக்க மருத்துவர் பலர் இருந்தனர். மாடு, குதிரை, யானை, ஒட்டகம் முதலியவற்றுக்குத் தனித்தனி மருத்துவர் இருந்தமையோடு, விஷ வைத்தியரும் (விஷத்தைப் போக்கும் மருத்துவரும்) இருந்தனர். தமிழ் மருத்துவர்களும், முஸ்லீம் மருத்துவர்களுடன் மேலை நாட்டு மருத்துவரும் இங்கு வைத்தியம் செய்தனர்.

இப்பொழுது கிடைத்துள்ள மோடி ஆவண மொழிப்பெயர்ப்புக் குறிப்புக்களில் மிகப் பழமையான வைத்தியக் குறிப்பாக 1797க்குரிய குறிப்பைக் கொள்ளலாம். அக்குறிப்பில்,[2]

"பீல்கானா – (யானைக்கூடம்) இதில் 52 யானைகள் இறந்து விட்டன. வெங்கடமாவுத்தன் யானை வயித்தியம் அறிந்தவன். ஒவ்வொரு யானைக்கும்

---

1. "No part of India or perhaps of the world is formed for producing and maintaining an effective body of cavalry than Tanjore" – Page 18, Memorial of the King of Tanjore to the Directors of the Honourable The East India Company (Booklet found in the University Library, Bombay University). 2. ச. ம. மோ. த. 20–4

நோய்க்குத் தகுந்தவாறு மருந்து கொடுத்து வந்தான். இவனுக்கு மாத ஊதியம் 9 சக்கரம். இவன் மருத்துவத்தில் தகுதியுடையவன் ஆகையால் (யானைகள் இறந்தமையைக் கருத்தில் கொள்ளாது) பெரிய மனம் வைத்து 9 சக்கரம் சம்பளம் கொடுக்க வேண்டியது" என்றுள்ளது.

## இந்நாட்டு வைத்தியர்கள்

1824இல் யானை வைத்தியம் செய்தவர் காசிம் கான்.[3] 1856இல் யானை வைத்தியம் செய்தவர் வீரவாகு என்பவர் ஆவர்.[4]

குதிரை வைத்தியம் செய்தவர் காசிம்கான் மீராகான்.[5] இவர் 1826–27இல் இருந்தவர்; கி. பி. 1859இல் சைத் மொகிதீன் என்பவர் வைத்தியம் செய்பவராக இருந்தார்.[6] 1858இல் திரியம்பக ராவ் லக்ஷ்மண் ராவ் ஜகதாப் என்பவர் இருந்தார்.[7]

இரண வைத்தியம் செய்பவர் வையாபுரி வைத்தியர்.[8] இவர் இரண வைத்தியம் செய்ய ஆயுதங்களைத் திருச்சியினின்று 12 புலிவராகனுக்கு வாங்கினார்.

வைத்தியம் குட்டிப்பா என்று ஒருவர் குறிப்பிடப்பெறுகிறார்.[9] இவர் தன் பேரனின் பூணூல் கல்யாணத்துக்கு இனாம் பெற்றிருத்தலின் இவர் அந்தணராதல் கூடும். 1858இல் வைத்தியர் சாமி சாஸ்திரி சுப்பு சாஸ்திரி என்று ஒருவர் பேசப்பெறுகிறார்.[10]

வைத்தியம் சிதம்பரம் பிள்ளை என்றொருவர்க்குப் பத்துச் சக்கரம் ஊதியம்; இதை 17 சக்கரமாக்க வேண்டும் என்று 1814இல் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.[11]

வைத்தியர் மஸ்தான் என்றும் ஒருவர் 1821இல் பேசப்பெறுகிறார்.[12]

1827இல் விஷ வைத்தியம் செய்தவர் இராமசாமி அய்யர் என்பவர் ஆவர்.[13] 1858இல் சிதம்பரசாஸ்திரி நாராயணசாமி என்பவர் இருந்தார்.[13அ]

பரங்கிப்பேட்டை சிங்கு வைத்தியர் மகன் நமச்சிவாய வைத்தியருக்கு 1829இல் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 ஊதியம் தரப்பெற்றது.[14]

---

3. 4-448 4. 1-250 5. 4-204, 427; ச. ம. மோ. த. 2-20
6. 4-458 7. 1-250 8. 2-199 9. 2-42
10. 1-250 11. ச ம. மோ. த. 2-11 12. 2-29
13. 4-205; 1828இல் வேலாயுதக்கவிராயர் என்பவர் விஷரோக சிகிச்சை என்ற நூலை எழுதினார். இது 505 பாடல்களால் ஆனது. சரஸ்வதி மகால் வெளியீடு எண் 52 (1956) 13அ. 1-250 14. 4-281

## ஆங்கில வைத்தியர்கள்

மிஸ்தர் கனடின் என்றொரு ஆங்கிலேய வைத்தியர் கி. பி. 1797இல் பேசப்பெறுகிறார்.[15] இவர் சிவாஜி சாம்பாஜி பண்டிதருக்கு மருந்து கொடுத்து நோயைப் போக்கியவர். ஆகையால் இந்த ஆங்கிலேயருக்கு 1000 வராகன் அளிக்கப்பெற்றது.

இரண்டாம் சரபோஜி 1920–21இல் காசிக்கு யாத்திரையாகச் சென்றார். அப்பொழுது 'ஸட்டன்' என்ற ஆங்கிலேய மருத்துவரை அழைத்துச் சென்றார்.[16] ஆனால் டாக்டர் ஸட்டன் 10—7—1821இல் காசியில் இறந்து போனார்.[17] இச்செய்தி வங்காளத்திலிருந்த கவர்னர் ஜெனரலுக்குத் தெரிவிக் கப்பெற்றது. டாக்டர் தலநைன் மக்லோட் என்பவர் டாக்டர் ஸட்டனுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டு 25—9—1821இல் காசியை அடைந்தார்.[18]

டாக்டர் ஸட்டன் அவர்கட்கு மாத ஊதியம் ரூ. 700; அவரிடம் உதவியாக இருந்த இந்திய மருத்துவருக்கு ரூ. 20.[19]

டாக்டர் ஸட்டன் ஊதியம் பின்னி கம்பெனியாரிடம் கொடுக்கப்பெற்று வந்தது. அவர் இறந்துபோனதும் உடன் இருந்துவந்த இந்திய வைத்தியர் சொற்படி டாக்டர் ஸட்டன் அவர்கள் வீட்டில் சம்பளப் பாக்கி கொடுக்கப்பட்டது.

சரபோஜி காசி யாத்திரையில் இருந்தபொழுது தஞ்சையில் இருந்த ஆங்கிலேய வைத்தியர் ஸர் தாமஸ் சிவேஸ்தர் என்பவர் ஆவர் என்றும், சிவாஜிக்கு அவர் வைத்தியம் செய்தார் என்றும் ஒரு குறிப்பு உள்ளது.[20] அங்ஙனம் வைத்தியம் செய்தமைக்கு வைத்தியருக்கு 100 புலி ஹோன்னங்கள் கொடுக்கப்பட்டன.[21]

1827இல் சரபோஜி கண் வைத்தியம் செய்துகொண்டார் ஆதல் வேண்டும். சென்னையினின்று டாக்டர் மெக்யாவின்[22] என்பவர் வந்து கண் வைத்தியம் செய்தார்.[23] இந்த ஆங்கிலேய டாக்டருக்கு ரூ. 4000 இனாம் வழங்கப்பெற்றது.[24] உடன் இருந்த டாக்டர் சிவேஸ்தருக்கு ரூ. 100 வெகுமதி தரப்பெற்றது.[25]

தன்வந்தரி மகால் பற்றிச் சரஸ்வதி மகாலிலிருந்து வெளியிடப்பெற்ற கட்டுரையில் மூன்ருவது பக்கத்தில் கண் மருத்துவருக்கு ரூ. 4000 கொடுத்தது அவர் தங்கியிருந்து கண் மருத்துவம் செய்த கால முழுமைக்கும் கொடுக்கப் பெற்றதா அல்லது ஆண்டு ஊதியமா எனத் தெரியவில்லை என்றும், ஆவணங்

15. 4–884
16. 5–66
17. 5–85, 86
18. 5–119
19. 5–77
20. 5–69, 197, 198
21. ச. ம. மோ. த. 17–42; 2–29
22. Dr. MC. Bean
23. 2–277, 278
24. ச. ம. மோ. த. 9–16
25. ச. ம. மோ. த. 2–32

களை ஆய்ந்து நோக்கின் உண்மை புலப்படும் என்றும் கட்டுரையாளர் எழுதியுள்ளார்.[26]

"சென்னைப் பட்டணத்திலிருந்து வந்த டாக்டருக்கு ஹுஜுருக்குக் கண் வைத்தியம் செய்ததற்கு இனாம் ரூ. 4000"

என்றுள்ளமையால்[27] இதனை அவருடைய சம்பளமாகச் கருதுவதற்கில்லை. அவர் வைத்தியம் செய்தமைக்குத் தரப்பெற்ற மொத்த மதிப்பு ஊதியம் (Remuneration – Honorarium) என்றே கொள்ளலாம்.

கி. பி. 1829இல் டாக்டர் பெல் என்று ஒருவர் குறிப்பிடப் பெறுகிறார். இந்த டாக்டர், மாமீஜி மோஹிதே அவர்களின் நோயைக் குணப்படுத்தினார்; ரூ. 2000 இவருக்கு வழங்கப்பெற்றது.[28]

1848, 1849இல் டாக்டர் ஸாமுவேல் புருகிங் என்பவரும், 1854இல் வில்லியம் ரௌஸ் என்பவரும் இருந்தனர். டாக்டர் ரௌஸுக்கு ரூ. 620 சம்பளம் ஆதல் கூடும்.[29]

ஸாமுவேல் புருகிங்[30] என்பார் 1841 முதல் 1855 வரை அரண்மனையில் இருந்தவர் ஆவர்.[31] இவர் இரண்டாம் சிவாஜிக்கு எழுதிய கடிதங்கள் இரண்டு கிடைத்துள்ளன. ஒன்று கும்பகோணத்தினின்று 20—7—1848இல் எழுதப் பெற்றது; பிறிதொன்று தஞ்சாவூரினின்று 28—5—1849இல் எழுதப் பெற்றது. முதல் மடலில் தன்னை நாகப்பட்டினத்துக்குச் செல்ல அனுமதி அளித்தமைக்கு நன்றி செலுத்தியதோடு தஞ்சையில் சிவாஜி ஏற்படுத்திய மருத்துவச்சாலையைக் குறிப்பிட்டிருக்கிறார்.[32] இரண்டாவது மடலில் கோட்டையில் ஒரு வண்டிக்காரனால் தனக்கு நேர்ந்த அவமதிப்புப்பற்றிக் குறிப்பிட்டதோடு, அவமதித்தவர் ஒரு ஆசிரியரின் மகன்; ராசி என்று பெயர் என்றும், விசாரணை நடத்தினாலும் தனக்குத் தீங்கு நேரிட்டிருக்குமென்றும், இனிக்கோட்டைக்குத் தான் வராமல் இருக்க இசைவு தர வேண்டும் என்றும், விசாரணை செய்தால் தனக்கு அடிவிழும் என்றும், அது தன் பெருமைக்கு இழுக்கு ஆகும் என்றும் எழுதியுள்ளார்.[33]

## ஆரோக்கிய சாலை

இரண்டாம் சிவாஜி தன் காலத்தில் ஒரு மருத்துவ சாலையை ஏற்படுத்திய செய்தியைப் புருகிங் குறிப்பிட்டமை மேலே கூறப்பட்டது. இச்செய்தி,

---

26. Glimpses into our Modi Raj Records – Dhanvantari Mahal, by Ganapathi Rao, Page iii: "Further scrutiny of papers may probably clarify whether this amount was the annual remuneraticn or the total amount paid to the doctor for the entire period of service"
27. ச. ம. மோ. த. 9-16
28. 4-249
29. 1-164
30. Danvanthari Mahal-by S. Ganapathi Rao, P. iii
31. ச. ம. மோ. த. 4-29
32. ச.ப.மோ.த. 22-14
33. ச.ம.மோ.த. 21-18, 19

"கி. பி. 1848இல் தெற்குவீதியில் வெங்கட்டராவ் போயியிடம் விலைக்கு வாங்கிய வீட்டில் புதிதாக ஆரோக்கிய சாலை வைக்கப்பட்டுள்ளது"

என்ற குறிப்பால்[34] உறுதிபெறும்.

இந்தத்தெற்குவீதி ஆரோக்கிய சாலையில் மருத்துவராகயிருந்த புருகிங் திங்கள் ஒன்றுக்கு ரூ. 700 ஊதியம் பெற்றுவந்தார்; ஆனால் 1—11—1855 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 கொடுக்கப்படவேண்டும் என்று ஓர். ஆணை பிறப்பிக்கப்பட்டது.[35]

## தன்வந்தரி மகால்

ஆரோக்கிய சாலை என்பது இந்நாட்களில் உள்ளதுபோல் பொது மக்கள் சென்று வைத்தியம் செய்துகொள்ளும் மருத்துவ சாலை ஆதல் வேண்டும். இதனின் வேறாகத் **தன்வந்தரி மகால்** என்று ஒரு மகால் இருந்தது. அங்கு மக்கள் விலங்குகள் பறவைகள் ஆகிய எல்லாவற்றுக்கும் வைத்தியம் செய்யக் கூடிய வைத்தியர்கள் இருந்து ஆய்வு செய்தனர் ஆதல் வேண்டும். இதனை,

'தன்வந்தரி மகால் – வைத்தியர்களின் சங்கதிகளை எழுத யுத்தசாலையிலிருந்து நகல் கடுதாசிகள் 4; ஹுஜுர் மகாலிலிருந்து பேனா 4; பென்சில் 4"

என்ற 1834க்குரிய குறிப்பு[36] வலியுறுத்தும். அந்தத் தன்வந்தரி மகாலில் வைத்தியர்கள் பல மருந்துகளைச் செய்து வந்தனர் ஆதல் கூடும். இதனை,

---

34. ச. ம. மோ. த. 2-30

35. ச. ம. மோ. த. 4–29; "புதிதாக ஆரோக்கியசாலை" என்றமையால் இதற்கு முன்னர் ஆரோக்கியசாலை இருந்தது என்பது போதரும். சரபோஜி ஆரோக்கிய சாலை நிறுவியிருந்தார் என்பது,

"மதமுகவன் நம்பியறு முகவன் கந்தன்
மலர்ப்பாதந் தனைப்போற்றி வைய கத்தோர்க்
கிதமுறவென் றாரோக்ய சாலை யொன்றை
ஏற்படுத்தி முன்முனிவர் சித்தர் யோகர்
பதமுறவே சொல்லியநூல் தம்மை யெல்லாம்
பார்த்துணர்ந்து நாடோறும் சரப பூபன்
முதல்வனிச்ச யித்தபடி சிரோரோ கந்தான்
மொழியஅயன் தேவிகலை வாணி காப்பாம்"

— என்ற சரபேந்திர வைத்தியச் செய்யுளால் அறியப்பெறும்.

— சரபேந்திர வைத்திய முறைகள் - சிரோரோக சிகிச்சை, காப்பு, செ. 2

36. 1-280

"1858: தன்வந்தரி மகால்; சௌ காமாட்சியம்பா பாயி சாஹேப் அவர்களுக்கு ஸ்நானத்திற்குத் தைலம் தயார் செய்வதற்கு வில்வவேர் சேர் 15; நன்னாரி சேர் 3......"

என்ற குறிப்பாலும்,[37]

"1859: தன்வந்தரி மகால்: லாயத்தில் ஆறுமுகம் என்பவனுக்குக் காயம் ஏற்பட்டதினால் பட்டிக் கட்டுவதற்கு மருந்து - வைத்தியர் தேவாஜி கோவிந்த ராவின் ஜாபிதா"

என்ற குறிப்பாலும்[38] அறியலாம்.

இந்த மருத்துவக் குறிப்பில் ( Recipe ) வைத்தியர் பெயர் கொடுக்கப் பட்டுள்ளது. இங்ஙனமே பலவற்றுள்ளும் குறிப்பிட்டிருத்தல் கூடும். குறிப்பு எழுதியவர் கையொப்பம் இடுவது போல் இது அமைந்துள்ளது. மேலும் அந்த மருந்திறுல் ஏதாவது குறைபாடு ஏற்படின் மருத்துவக்குறிப்புக் கொடுத்தவர்களுடன் தொடர்பு கொள்வதற்காக இது பயன்படும்.[39]

தன்வத்தரி மகால் சம்பளம் மட்டும் 1858ஆம் வருஷம் பன்னிரண்டு மாதங்களுக்கு ரூ. 2262—2—1 கொடுக்கப்பெற்றது எனக் குறிப்பு இருப்பதால்[40] அங்குப் பல வைத்தியர்கள் இருந்தமை புலப்படும்.

மேலே காட்டிய மருத்துவக் குறிப்புக்களை வைத்துக் கொண்டு தமிழ்ப் புலவர்கள் தமிழில் எளிய பாடல்களை எழுதிக்கொடுத்தனர். அவை **சரபேந்திரர் வைத்திய முறைகள்** எனப்பெறும்.

## வைத்தியக் குறிப்புக்களைக் கொண்டு வைத்திய நூல்கள் எழுதியவர்

"1827: திருவேங்கடம் பிள்ளை ஸாஹித்யம் செய்து கொடுத்த வைத்திய விஷயம், கர்ப்பிணியின் சிகிச்சை, பாடல் சுமார் 150க்கு சக். 4½"

என்ற குறிப்பாலும்,[41]

"1827: ஸரஸ்வதிமகால் – தமிழ் எழுத்து – தமிழ் மொழியில் வைத்திய விஷயம் சாகித்தியம் செய்து கொடுத்ததற்காகத் திருவேங்கடம் ஏடுகள் சுமார் 145, சக். 3½"[42]

---

37. 4-455 38. 4-453, 454
39. "In many of the recipes we find the name of the doctor who prescribed it. Probably it was meant to get in contact with the doctor in case of any complication as a result of the prescription or as a faithful record of the activity of the Dhanvantari Mahal" - Page iii, Dhanvantari Mahal by S. Ganapathi Rao
40. ச. ம. மோ. த. 8-6 41. 4-218 42. 4-217

என்ற குறிப்பாலும், **திருவேங்கடம் பிள்ளை** என்பார் கர்ப்பிணி சிகிச்சை பற்றியும் பிற மருத்துவச் செய்திகள் பற்றியும் தமிழ்ப் பாடல்கள் எழுதினார்[42அ] என்று அறியப்பெறும்.

திருவேங்கடம் பிள்ளை மட்டுமன்றி வேலாயுத வாத்தியார், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர், வெங்கடாசலம் பிள்ளை, சுப்பராயக் கவிராயர் ஆகியோரும் பாடல்கள் பாடினர் என்றறியப்பெறும்.

திருவேங்கடம் பிள்ளையைத் திருவேங்கடத்தா பிள்ளை என்றும் கூறுவர்.

" **திருவேங்கடத்தா பிள்ளை** பாடல் 200க்கு 1 ; 287க்கு 1 "

என்ற குறிப்பினால் இவர் இயற்றியவை இரண்டு சுவடிகளில் இருந்தன என்றறியப்பெறும்.[43]

" **வேலாயுத வாத்தியார்** சரபேந்திர பாடல் 379க்கு 1 ; பாடல் 297க்கு 1 ; 77க்கு 1 ; 210க்கு 1 ; 503க்கு 1 "

என்ற குறிப்பினால் இவர் இயற்றியவை ஐந்து சுவடிகளில் இருந்தனவாதல் கூடும்.[44] மேலும்,

" வேல வாத்தியார் பாடல் 705க்கு 1 ; பாடல் 52க்கு 1 ; 56க்கு 1; 314க்கு 1 "

என்ற குறிப்பில்[44] வேல வாத்தியார் என்று ஒருவர் குறிப்பிடப் பெறுகிறார். இவரும் வேலாயுத வாத்தியார் என்பவரும் ஒருவரேயாவர் என்னலாம்.

---

42அ. சரஸ்வதி மகால் தமிழ் நூல்களின் விளக்க அட்டவணை பாகம் III தொடர் எண் 82 : கர்ப்பிணி பால ரோக சிகிச்சை என்ற நூல் எழுதியவர் திருவேங்கடத்தா பிள்ளை என்றுளது, செ. 454 ; தொடர் எண் 83 – வாத ரோக சிகிச்சையை இயற்றியவரும் இவரே, செ. 288.

43. 12-220

44. 12-220 சரஸ்வதி மகால் சுவடிகளின் விளக்க அட்டவணை பகுதி III இல்,
தொடர் எண் 75 : சரபேந்திர நயன ரோக வைத்தியம், 379 செய்யுட்கள் ;
தொடர் எண் 76 : சரபேந்திர குன்ம ரோக வைத்தியமுறைகள் ;
தொடர் எண் 77 : சரபேந்திர நீரிழிவு முதலிய நோய்களுக்கு வைத்திய முறைகள், செ. 77 ;
தொடர் எண் 78: சரபேந்திரர் கரப்பான் முதலிய ரோகங்களுக்கு வைத்திய முறைகள் ;
தொடர் எண் 79 : சரபேந்திரர் வைத்திய முறைகள் 568 செ ;
தொடர் எண் 87 : சரபேந்திரர் விஷ வைத்தியம் செ, 505 ;
தொடர் எண் 89 : சிரோ ரோக சிகிச்சை செ. 401 ;
தொடர் எண் 90 : சரபேந்திரர் வைத்திய விரேசன முறை அதிசார சிகிச்சை, செ. 705 ;
தொடர் எண் 91 : சரபேந்திரர் வைத்தியம், காச ரோக சிகிச்சை செ. 452 ;

கொட்டையூர்ச் சிவமலேந்து பண்டாரம் என்றும், கொட்டையூர்ப் பண்டாரம் என்றும் கூறப்பெறுபவர், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் என்பதில் ஐயமில்லை.

"கொட்டையூர்ச் சிவமலேந்து பண்டாரம் பாடல் 436க்கு 1; 360க்கு 2" என்றும்,[45]

"கொட்டையூர்ப் பண்டாரம் பாடல் 365க்கு 1; 525க்கு 1; 360க்கு 1; 401க்கு 1"[45]

என்றும் உள்ள குறிப்புக்களால் **கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர்** யாத்தவை 6 சுவடிகளில் இருந்தன என்று அறியப்பெறும்.

"**வெங்கடாசலம்பிள்ளை** பாடல் 101க்கு 1; 100க்கு 1"

என்ற குறிப்பு[46] வெங்கடாசலம் பிள்ளை என்பவர் பாடியன 201 பாடல் என்றறியவரும்.

**சுப்பராயக்கவிராயர்** குதிரை வைத்தியம் பற்றிய பாடல்களை எழுதினார். இது,

"சுப்பராயக்கவிராயர் பாடல் அஸ்வ வைத்தியம் – 1"

என்ற குறிப்பால்[47] தெரியவரும்.

---

தொடர் எண் 92 : சரபேந்திரர் நீரிழிவு ரோக சிகிச்சை முதலியன, செ. 560; தொடர் எண் 93 : விரணரோக கரப்பான் ரோக சிகிச்சை செ. 315 ; – ஆகிய 11 நூல்களை எழுதியவராக **வேலாயுத வாத்தியார்** காணப்பெறுகிறார். இவர் அய்யாக்கண்ணு என்பவருடைய மகன் என்பதும், இவர் காரைக்குறிச்சி என்னும் ஊருக்கு உரியவர் என்பதும், விஷ ரோக சிகிச்சை என்னும் நூலைச் சகம் 1750 (1828) இல் பாடினார் என்பதும், சரஸ்வதிமகால் வெளியீடு எண் 72, செய்யுள் 507 – 508இல் காணலாம்.

நீரிழிவு சிகிச்சை என்ற நூலைச் சகம் 1749 (1827இல்) பாடினார் என்று சரஸ்வதி மகால் வெளியீடு எண் 88இல் பாடல்கள் 586-588ஆல் அறியப்பெறும்.

45. 12–220 ; சரஸ்வதி மகால் தமிழ்ச்சுவடிகளின் விளக்க அட்டவணை பகுதி III தொடர் எண் 80, வாத ரோக சிகிச்சை செ. 408; தொடர் எண் 81, சன்னி ரோக சிகிச்சை செ. 360; தொடர் எண் 88, உளமாந்தை க்ஷயரோக சிகிச்சை செ. 362 – இவை கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் எழுதியனவாக வெளியிடப்பெற்று உள்ளன.

46. 12–220; சரஸ்வதி மகால் தமிழ்ச் சுவடிகளின் விளக்க அட்டவணை பகுதி III தொடர் எண் 94, பாண்டு காமாலை சிகிச்சை செ. 101.

47. 12–220; ஷை வெளியீட்டில் தொடர் எண் 95, சுர ரோக சிகிச்சை – ஏடுகள் 57, சுப்பராயக் கவிராயர் எழுதியது என்று உள்ளது. ஆனால் தொடர் எண் 96, அசுவ வைத்தியம் ஏடுகள் 45; இதனைத் தமிழில் இயற்றியவர் "கொற்கைக் கோமான் குணராச சூரியன்" என்றுளது.

# சரபோஜி II
## காசிப்பயணத்தில் எடுத்துச் சென்ற மருந்துகள்

இரண்டாம் சரபோஜி காசிக்கு யாத்திரை மேற்கொண்டபொழுது ஒரு ஆங்கில மருத்துவருடனும் தமிழ்நாட்டு மருத்துவருடனும் சென்றதாக முன்னர்க்கூறப்பட்டது. தம்முடன் 8 பெட்டிகளில் ஆங்கில மருந்துகளையும், நம் நாட்டு மருந்துகளையும் எடுத்துச் சென்றார் என்று தெரியவருகிறது.[48]

## 37, 38, 39, 40, 41, 42, 43, 44 ஆகிய பெட்டிகளில் எடுத்துச் சென்ற மருந்துகள்

| No. of Box | No. of the medicine | Name of the medicine | |
|---|---|---|---|
| | | A | |
| 44 | 1 | Acid - Sulphuric or vitrolic | 1 vial |
| 44 | 2 | Acetire of Lead or sugar lead | 1 ,, |
| 42 | 3 | Acetous acid or white vine vinegar | 12 bottles |
| 43 | 4 | Alkcohal diluted or proof spirit of vine | 6 ,, |
| 37 | 5 | Antimonial powder or James powder | 3 ownces in a parcel |
| 44 | 6 | Aromatic spirit of Vinegar | 2 small vials |
| 42 | 7 | Aether Nitric or spirit of Nitre Dulce | 1 pint |
| 42 | 8 | Aether Sulphuric or Vitrolic | 1 pint |
| | | B | |
| 44 | 9 | Balsam - copahufera | 1 vial |
| 38 | 10 | Basilicon - yellow | 2 Tin poto |
| 37 | 11 | Bark Peruviana | 2 pounds in a parce |
| 44 | 12 | Bark Comp. Tint of | 3 vials |
| 44 | 13 | Blistering plaster | 6 |
| 38 | 14 | Blue ointment or Mercury ointment | 1 Tin pot |
| 40 | 15 | Brandy | 12 bottles |
| 38 | 16 | Brown cerete | 3 Tin pots |
| | | C | |
| 37 | 17 | Carbonate of Magnesia or Magnesia | 3 Tin pots |
| 38 | 18 | Calomal | 1 pound in a parcel |
| 38 | 16 | Cerate - Brown | 3 Tin pots |
| 37 | 19 | Camomile Flower | 4 ownces a parcel |
| 44 | 20 | Cinnomon oil | 1 vial |
| 42 | 21 | Cream of Tortor | 3 pounds in a bottle |

48 சரசுவதிமகால் நூல் நிலையம் – கையெழுத்துப்பிரதி (copied volume) எண் 818 பக்கம் 1-9

| No. of Box | No. of the medicine | Name of the medicine | |
|---|---|---|---|
| 44 | 9 | Copahufera Balsam | 1 vial |
| 42 | 22 | Comp – spirit of Lavender | 1 Decan ·( ter) |
| 44 | 12 | Comp. Tint of Bark | 3 vials |
| | | D | |
| 43 | 4 | Diluted alkcohal or Proof spirit of vine | 6 bottles |
| 39-43 | 23 | Drogue | 6 bottles |
| 38 | 24 | Dyachilom plaster | 3 |
| | | E | |
| 37 | 25 | Eau de cologne | 10 Boxes |
| 44 | 26 | ……………… de Lurce | 3 vials |
| 38 | 27 | Emetic tartor or yarfarized Antimony | ½ ounces in a parcel |
| 38 | 28 | Epsom salts | 3 pounds in a parcel |
| 44 | 29 | Essence of peppermint | 8 vials |
| 37 | 30 | Extract of Liquorice root | 6 ounces in a parcel |
| | | G | |
| 44 | 47 | Golard Extract | 1 vial |
| 38 | 31 | Gum plaster | 3 |
| | | H | |
| 44 | 32 | Hearts horn spirit of | 1 large vial |
| 44 | 12 | Huxman tint of Bark or comp. tint of Bark | 3 vials |
| | | I | |
| 37 | 33 | Ipevonha Root | 1 Pound in a parcel |
| 38 | 34 | ……………… powder | 1 ounce in a Parcel |
| | | J | |
| 37 | 5 | James powder | 3 ounces In a parcel |
| | | L | |
| 42 | 22 | Levender – comp spirit of | 1 decanter |
| 44 | 2 | Lead acetite of | 1 vial |
| 44 | 2 | Lead sugar of | 1 vial |
| 42 | 35 | Landanom | 2 bottles |
| 38 | 36 | Lint | 1 parcel |
| 37 | 30 | Liquorice Extract of | 6 ounces in a parcel |
| 44 | 48 | Lunar costic | 1 vial |
| | | M | |
| 37 | 17 | Magnesia | 3 ounces in a parcel |
| 38 | 37 | Mana | 5 pounds in a parcel |
| 38 | 14 | Mercury ointment | 1 Tin pot |
| 38 | 45 | ……………… plaster | 1 |

| No. of Box | No. of the medicine | Name of the medicine | |
|---|---|---|---|
| | | O | |
| 44 | 20 | Oil of cinnamon | 1 vial |
| 44 | 38 | ...... of peppermint | 4 small vials |
| 38 | 14 | Ointment mercury | ( 1 Tin pot ) |
| 44 | 39 | ......... of olive | 3 pints |
| 38 | 40 | Ointment spermacity | 1 Tin pot |
| 44 | 39 | Olive oil | 3 pints |
| | | P | |
| 44 | 29 | Peppermint Essence of | 8 small vials |
| 44 | 41 | Peppermint seed | 2 vials |
| 44 | 38 | ............ oil of | 4 vials |
| 37 | 11 | Peruvial Bark powder | 2 pounds in a parcel |
| 44 | 12 | ............... comp Tinct of | 3 vials |
| 44 | 13 | Plaster Blistring | 6 |
| 38 | 24 | ............... Dyachilome | 3 |
| 38 | 31 | ............... Gum | 3 |
| 38 | 45 | ............... Mercury | 1 |
| 43 | 4 | Proof spirit of wine | 6 |
| | | R | |
| 44 | 46 | Refined comphor | 1 vial |
| | | S | |
| 44 | 42 | Sarasaparilla Root | 5 pounds |
| 37 | 43 | Sinna Leaves | 6 ounces |
| 44 | 32 | Spirit of Harts horn | 1 large |
| 42 | 23 | Spirit of Levender comp | 1 decanter |
| 42 | 7 | ............ of Nitre Dulce | 1 pint |
| 38 | 40 | Spermacity ointment | 1 Tin pos |
| 44 | 2 | Sugar of lead | 1 vial |
| 44 | 1 | Sulphuric acid | 1 vial |
| 42 | 8 | ............ Aether | 1 pint |
| 38 | 28 | Sulphate of Magnesia or Epsom salt | 3 pounds |
| 44 | 44 | Sulphate of Zinc or white vitroil | 1 vial |
| 42 | 7 | Sweet spirit of Nitre or spirit of Nitric Dulce | 1 pint |
| 42 | 39 | ............ oil or oil of olive | 3 pints |
| | | T | |
| 38 | 27 | Tartarized Antimony | ½ ounce |
| 38 | 27 | Tartor Emetic or Tartarized Antimony | ½ ounce |
| 42 | 21 | ............ cream of | 3 pounds in a parcel |

| No of Box | No. of the medicine | Name of the medicine | |
|---|---|---|---|
| 42 | 21 | Tartorite potash or cream of tartor | 3 pounds in a parce |
| 44 | 12 | Tincture of Bark comp | 3 vials |
| 42 | 35 | ............ of opium or Lavdanam | 2 bottles |
| | | V | |
| 41-42 | 3 | Vinegar or white vine Vinegar | 12 bottles |
| 44 | 44 | Vitroil of Zinc or white vitroil | 1 vial |
| 44 | 1 | Vitrolic acid | 1 vial |
| 42 | 8 | ......... Aether | 1 pint |
| | | W | |
| 41-42 | 3 | White vine vinegar | 12 bottles |
| 44 | 44 | White Vitriol | 1 vial |
| | | Y | |
| 38 | 10 | Yellow Basilicom | 2 Tin pots |
| | | Z | |
| 44 | 44 | Zinc sulphate or white Vitriol | 1 vial |

# A List of Medical Instruments in 44th Box

| | | | |
|---|---|---|---|
| Tin syringe | 2 | Sizsers (Scissors) | 1 |
| ............... with base | 7 | Silvar costic base | 1 |
| Small tin syringe | 1 | Cork screw | 1 |
| Rubber syringe | 2 | Silver funnel | 1 |
| Empty vial | 2 | Iron spatula | 2 |
| White leathers | 3 | Ivory spatula | 1 |
| Box with scale & weights | 1 | Silver measure | 1 |
| Marble morter with pounder | 2 | Corks | 30 |

இரண்டாம் சரபோஜி காசி யாத்திரைக்குப் போகையில் தன்னுடன் எடுத்துச்சென்ற மருந்துகள் பின்வருமாறு:—[49]

கர்னாடக மருந்துகள் அடங்கிய பச்சைப்பெட்டி

கற்பூராதி குளிகை மாத்திரை

நவநீத பஸ்மம்

சிவநாம ரஸம்

கிராணி கவாட மாத்திரை

அயக்கடுக்காயும் வீரமும் சேர்ந்த செந்தூரம்

49. சரஸ்வதிமகால் நூல்நிலையம் – கையெழுத்துப்பிரதி எண்: 818, (copied volume) பக்கம் 158 – 162

குன்ம குடோரி மாத்திரை
சூதக மாத்திரை
ஆனந்த பைரவ மாத்திரை
விரத ராக்ஷஸ மாத்திரை
அண்ட வாயு மாத்திரை
சாதிக்காய் மாத்திரை
வாத கேசாங்குச மாத்திரை
கட்டு மாத்திரை
அமிருதாதி குளிகை மாத்திரை
பஞ்சார்னி மாத்திரை
குங்குமப்பூ பொட்டலம்
அப்பிரக சிந்தூரம்
ஜாதிலிங்கம் பொட்டலம்
கண்ணில் போடும் மாத்திரைகளின் பொட்டலம்
திருதி வகேறாவின் சின்ன சீசா
கிராம்பு திருதி[49அ]
பழைய கற்பூரத்தின் திருதி
ஜாதிக்காய் திருதி
ஜாதிப்பத்திரியின் திருதி
ஜீரகம் திருதி
ஓமத் திராவகம்
ஆறு இரஸம்

மொதத் தரம்

இரண்டாம் தரம்

காள கண்ட சிந்தூரம்
சின்ன தகர டப்பாவில் போட்ட டப்பி
தண்வாள சிந்தூரம் டப்பி
காந்த சிந்தூரம் டப்பி
லோஹ சிந்தூரம் டப்பி
சிந்தாமணி மாத்திரை 300 உள்ளவை
ரஸபூபதி மாத்திரை 200 உள்ளவை
வஸந்தாதி மாத்திரை 66 உள்ளவை
ஸ்வய மக்னீ மாத்திரையின் பை
திரிலோக சிந்தாமணி 400 மாத்திரையின் பை

**கர்னாடக இரஸ மருந்துகளின் மாத்திரையும் சிந்தூரமும்[50]**

இரஸ பூபதி மாத்திரை 200
திரிலோக சிந்தாமணி 400
சிந்தாமணி 300
சுவர்ண மால்ய வஸந்தம் 65
ஸ்வய மக்னி மாத்திரை குளிகை
லோஹ சிந்தூரம் ஒரு குழாய்
காந்த சிந்தூரம் ஒரு குழாய்
தண்டவாள சிந்தூரம் 2 குழாய்கள்

இதன்பின் அச்சுவடியில் மாத்திரை மருந்து ஆகியவை கொடுக்கும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

## விலங்கு வைத்தியக் குறிப்புக்கள்

மாடுகள் குதிரைகள் யானைகள் ஒட்டகங்கள் நாய்கள் ஆடுகள் கரடிகள் இவற்றுக்கு வந்த நோய்கள் சிலவற்றின் பெயர்களும், நோய்கள் போக்குவதற்குரிய மருந்துகளின் பெயர்கள் எடை முதலியனவும் கொண்ட மருத்துவக் குறிப்புக்கள் (Recipes) பல கிடைத்துள்ளன. அந்த மருத்துவக் குறிப்புக்களைக் கொண்டு அந்த மருந்துகளைச் செய்வது எங்ஙனம் என்பது தெரிந்து கொள்ளவியலாது. மாடு குதிரை யானை ஆகியவைகள் இருந்த

---

49அ. *திருதி – சாரம்*

50. *சரஸ்வதிமகால் நூல் நிலையம் – கையெழுத்துப் பிரதி,* எண் 818, பக்கம் 180

மகால்களில் அவற்றுக்குரிய வைத்தியர்கள் அக்குறிப்புக்களில் இருந்த மருந்துப் பொருள்களைப் பெற்று மருந்துகள் தயார் செய்து நோய் வாய்ப்பட்ட விலங்குகட்குக் கொடுப்பர் என்று கொள்ளலாம்.

## மாட்டு மருத்துவம்

மாட்டுக்குச் சூட்டினால் உடம்பின்மேல் "**காந்தி**" என்னும் சிரங்கு வந்தது; இரத்தமாக மாடு கழியத் தொடங்கியது. இதற்கு உள்ளுக்கு மருந்து தயார்செய்யப் பிற்கண்ட சரக்குகள்[51] எழுதிக் கொடுக்கப்பட்டன:—

| | | | |
|---|---|---|---|
| சீரகம் டாங்க் | 9 | மிளகு டாங்க் | 9 |
| வெங்காயம் சேர் | ¼ | இந்திரஜவம் டாங்க் | 9 |
| வெந்தயம் டாங்க் | 9 | மல்லி டாங்க் | 9 |
| பெருஞ்சீரகம் டாங்க் | 9 | நெய் சேர் | ½ |

தட்டி மகாலில் குஜராத்தி பசுமாட்டுக்கு "**வளு**" என்கிற வியாதி வந்தது. அதற்குரிய மருந்து சாமான்கள்[52] பின்வருவன:—

| | | | |
|---|---|---|---|
| கருஞ்சீரகம் சேர் | ½ | மரமஞ்சள் சேர் | ¼ |
| கல்லுப்பு சேர் | ¼ | சித்தரத்தை சேர் | ¼ |
| சுக்கு சேர் | ¼ | இரசகற்பம் டாங்க் | 9 |
| வேப்பெண்ணை சேர் | 2 | | |

வேப்பெண்ணை சேர் 2 என்றிருப்பதால் இது உடம்பின் மேல் தடவுவதற்குரிய மருந்தாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

**படுவான் வலி** என்று ஒரு வலி; இதனால் (மாட்டுக்குப்) பிளவு வந்தது; உடம்பில் உடைப்புக்கள் ஏற்பட்டன. இந்நோய் தீர இரண்டுவித மருந்துவக்குறிப்புக்கள் உள்ளன.

ஒரு குறிப்புப்[53] பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| சிராயித் சேர் | ½ | கடுகுரோகிணி சேர் | ½ |
| பித்தளை மூலம் சேர் | ¼ | அரிசித்திப்பிலி சேர் | ¼ |
| சுக்கு சேர் | ¼ | இந்துப்பு சேர் | ¼ |
| கந்தவீட் சேர் | ¼ | காயம் டாங்க் | 9 |
| சீனாக்காரம் டாங்க் | 9 | பூண்டு சேர் | ½ |
| வசம்பு சேர் | ½ | மொரப்பு சேர் | ½ |
| கருஞ்சீரகம் சேர் | ¾ | சாம்பிராணி | ¾ |
| புகையிலை சேர் | ¾ | மிளகாய் சேர் | ¼ |
| கஞ்சா சேர் | ½ | | |

51. 4-470 52. 4-471 53. 4-467, 468

மேலும் ஒரு குறிப்பு:—[54]

| | | | |
|---|---|---|---|
| சிராயித் சேர் | $\frac{1}{2}$ | கடுகுரோகிணி சேர் | $\frac{3}{4}$ |
| வசம்பு சேர் | $\frac{3}{4}$ | பூண்டு சேர் | 1 |
| குக்கில் சேர் | 1 | மொரப்பா சேர் | $1\frac{1}{4}$ |
| கருஞ்சீரகம் சேர் | $1\frac{1}{4}$ | முத்தாண்டவ சேர் | $\frac{3}{4}$ |
| கந்தவீட் சேர் | $\frac{3}{4}$ | இஞ்சி சேர் | $1\frac{1}{2}$ |
| செப்பு ஹிரோசேரி சேர் | $\frac{1}{2}$ | வெள்ளைகுண்டுமணிசேர் | $\frac{1}{2}$ |
| பெசாவர் கருஞ்சீரகம் சேர் | $\frac{1}{2}$ | துருசு சேர் | $4\frac{1}{2}$ |
| மிளகு சேர் | $\frac{3}{4}$ | புகையிலை சேர் | $\frac{3}{4}$ |
| பட்கடி சேர் | $\frac{1}{4}$ | வெண்குங்குலியம் சேர் | $\frac{1}{4}$ |

கல்யாண மகாலில் பசுமாட்டின் **கொம்பு இரணம்** ஆனதால் அதற்குப் பட்டிக்கட்டுவதற்குப் பின்வரும் மருந்துச் சரக்குகள் குறிக்கப்பட்டன:—

| | | | |
|---|---|---|---|
| செங்கொட்டை சேர் | 1 | களிப்பாக்கு சேர் | 1 |
| காசிக்கட்டி சேர் | 1 | துருசு சேர் | $\frac{1}{2}$ |
| கடுக்காய் சேர் | 1 | நீலம் சேர் | 1 |
| சாதாரண எலுமிச்சம்பழங்கள் | 14 | | |

மாடும் கன்றும் **காயலா (சுரம்) ஆக** இருப்பதால் அதற்கு மருந்து செய்யக் குறிப்பு :—[56]

| | | | |
|---|---|---|---|
| சுக்கு சேர் | $\frac{3}{4}$ | மிளகு சேர் | $\frac{3}{4}$ |
| பூண்டு சேர் | $1\frac{1}{2}$ | விறாலிமஞ்சள் சேர் | $1\frac{1}{2}$ |
| அரிசித்திப்பிலி சேர் | $\frac{3}{4}$ | ஓமம் சேர் | $\frac{3}{4}$ |
| வசம்பு சேர் | $\frac{3}{4}$ | சித்தரத்தை சேர் | $1\frac{1}{2}$ |
| கண்டத்திப்பிலி சேர் | $\frac{3}{4}$ | கருஞ்சீரகம் சேர் | $1\frac{1}{2}$ |
| தேசாவரிசீரகம் சேர் | $1\frac{1}{2}$ | உப்பு சேர் | 3 |
| திம்மலி சேர் | $\frac{3}{4}$ | | |

வண்டி மாலின் மாட்டுக்குக் **கௌமாரி** என்னும் வலிக்கு வயிற்றுக்குக் கொடுக்கப் பன்றி நெய் 5 சேர் கொடுக்குமாறு ஒரு குறிப்பு உள்ளது.[57]

எருமைக்கன்று – இது **வரளை வாயு**வினால் சாணம் சிறுநீர் போகாமலிருந்தமையால் உள்ளுக்குக் கொடுக்கக் கொட்டியத்திலிருந்து, "சுக்கு, போரெக்ஸ், மரமஞ்சள், மிளகு, சேர் உப்பு ஒவ்வொன்றிலும் 9 டாங்க்" வீதம் கொடுக்குமாறும், தோட்டத்திலிருந்து "இலைத் துண்டு 1; சங்க வேர் துண்டு 1" கொடுக்குமாறும் ஆணை ஒன்று உள்ளது.[58]

---

54. 4-469, 470 55. 4-472
56. 5-489; 1-279: இதில் கூறியுள்ள மருந்துக்குறிப்பு சிறிது வேறுபட்டுள்ளது.
57. 5-218 58. 4-478

வண்டி மாடு பாரத்தை இழுத்து **மார்பில் இரத்தம் கட்டி** மாடு நொண்டியதால் உள்ளுக்குக் கொடுக்கக் கர்க்கம், கோழி மசாலை ஆகிய வற்றைச் செய்யப் பின்வரும் மருந்து பொருள்கள்:[59]

"சுக்கு, மஞ்சள், மல்லி, குக்கில், மிளகு, வெந்தயம், கரியபோளம்– இவை ஒவ்வொன்றிலும் 9 டாங்க்; அதலிவ் 4½ டாங்க்; சாராயம் 1 சேர்; பூண்டு ¼சேர்; உகேமலி 4½ டாங்க்; தஞ்சாவூர் சுங்கத்திலிருந்து தினம் ஒரு கோழியைக் கொடுக்க" (கர்க்கம் – மருந்து உருண்டை)

வண்டி மாட்டுக்கு வாயுவினால் தொல்லை ஏற்பட்டது. அதற்கு உள்ளுக்குக் கொடுக்கப் பின்வரும் மருந்துப்பொருள்கள் வேண்டிவந்தன:[60]

"சுக்கு, மிளகு, வசம்பு, மரமஞ்சள், சித்தரத்தை, ஓமம் ஆகியவற்றுள் ஒவ்வொன்றிலும் 9 டாங்க்; பூண்டு சேர் ¼."

மாட்டுக்குக் **காலில் கட்டி** புறப்பட்டுக் கால் வீங்கியது; அதற்கு வயிற்றில் கொடுப்பதற்கு மருந்து செய்யச் "சுக்கு, சித்தரத்தை, கடுகு ரோகிணி, மிளகு, ஓமம், கருஞ்சீரகம் ஒவ்வொன்றிலும் 9 டாங்க்; காயம் 1 டாங்க்; பூண்டு, ஈசுவரவேர், சித்திரமூலம், சோப்சீனி ஒவ்வொன்றிலும் ¼ சேர்" ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.[61]

ஒரு காளைமாட்டு வாயிலிருந்து **மஞ்சள்** நிறமாக **நீர் ஊறியது**. அதை நிறுத்தப் பின்வரும் மருந்து சரக்குகள் கொண்ட மருந்து தயாரித்து மூன்று நாள் கொடுக்குமாறு மருத்துவக் குறிப்பு (Recipe) உள்ளது:[62]

"மிளகு, சீரகம், வெந்தயம், ஒவ்வொன்றும் 9 கழஞ்சு;[63] வெங்காயம் ¼ சேர்; நெய் 1 சேர்."

மாடு சூடு (வெப்பம்) காரணமாக **இருமினால்**, "சுக்கு 9 கழஞ்சு; வெல்லம் ¼ சேர்; மஞ்சள் 9 கழஞ்சு; கள்ளு 1 சேர்" ஆகியவற்றால் ஆகிய மருந்து 3 நாட்கள் கொடுக்குமாறு ஒரு குறிப்பு உள்ளது.[64]

வருமுன் காத்தலாக, வெக்கை கடுவை ஆகிய வியாதிகள் வாராமல் இருக்க லாயத்தில் இருந்த 211 காளைமாடுகட்கு 7 நாட்களுக்கு மசாலை செய்து கொடுக்கப் பின்வரும் திட்டம் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது:[65]

"கச்சேகருவாடு நாளொன்றுக்கு 9 டாங்க் வீதம் 26¼ சேர் 9 தோலா; வெங்காயம் 9 டாங்க் வீதம் 6¼ சேர் 9 தோலா; தயிர்படி 105½; சீரகம் 4½ டாங்க் வீதம் 13 சேர் 13½ தோலா; வெந்தயம் 4½ டாங்க் வீதம் 13 சேர் 13½ தோலா."

---

59. 1-178, 179 60. 1-295, 296 61. 2-257, 258 62. 2-215
63. கழஞ்சு – 40 குன்றிமணி எடை 64. 2-216 65. 1-278

கன்றுக்குட்டிக்கு வெக்கைநோய் வராமலிருத்தற்காகப் பன்றி நெய் தடவுதலும் உண்டு என்று ஒரு குறிப்பினால் தெரியவருகிறது.[66]

பசுமாட்டுக்கு **இளவேகுணல்** என்னும் **வலி** வந்தமைக்கு மருந்து ஒரு குறிப்பிலும்,[67] **வகவே** என்னும் **வலி** வந்ததற்கு உள்ளுக்குக் கொடுக்க வெந்தயம் படி $\frac{1}{4}$, நல்லெண்ணெய் 1 சேர் என்று ஒரு குறிப்பிலும்[68] கூறப் பட்டுள்ளன. **அனல் வகே** என்ற **வலிக்கு** மருந்து வேறு ஒரு குறிப்பில் உள்ளது.[69]

நகரசுத்திமகாலில் ஒரு மாட்டுக்குக் **கழுத்துவீங்கி**யிருப்பதற்கு ஒத்தடம் கொடுக்கக் கைலீ உப்பு $\frac{1}{2}$ படியும், மாட்டுக்குச் சிரங்கு வந்ததற்குத் தடவ வேப்பெண்ணையும் குறிக்கப்பட்டுள்ளன.[70]

## குதிரை வைத்தியம்

ஒரு குதிரைக்குப் **பேகம்பைகாண்ட்டே** என்னும் **நோய்க்கு** மருந்து உருண்டைகள் செய்து உள்ளுக்குக் கொடுக்கப் பின்வரும் மருந்துப்பொருள்கள் கூறப்பட்டுள்ளன:[71]

காசிக்கட்டி, மிஸரீ, அபின், இரஸ சிந்தூரம், அதிவிடையம், பூலாங் கிழங்கு, அகல்கரா, காயம் ஆகியவை ஒவ்வொன்றிலும் 9 டாங்க் வீதமும், நஹசரமாஹன் சேர் 10, டாங்க் 9; கோரோசனம், குங்குமப்பூ ஆகியவை ஒவ்வொன்றிலும் 2 டாங்க் வீதமும்; இஞ்சி 2 சேர்; நல்லவெல்லம் $\frac{1}{2}$ சேர்; அவல் படி $\frac{1}{2}$; எலுமிச்சம் பழம் 10 - ஆகியவையாம். இதன்கண்ணும் மருந்து செய்யும் முறை சொல்லப்படவில்லை.

தேவ ராம்பிரஸாத் என்ற குதிரைக்கு **உடல் வலிமை வருவதற்கு** 40 நாட்களுக்கு நாடோறும் கைலி மாவு அரிசி படி 1; நெய் $\frac{1}{2}$ சேர்; இராயபுரீ சர்க்கரை சேர் $\frac{1}{2}$ கொடுக்கவேண்டும் என்று ஒரு மருந்துக் குறிப்பு உள்ளது.[72]

"குதிரை **ரத்தமாகச் சிறுநீர்** கழிப்பதால் உள்ளுக்குக் கொடுக்க 14 நாட்களுக்கு, சுக்கு 1 சேர்; டாங்கணகார் 1 சேர்; குக்கில் 1 சேர்; குளாச 2 சேர்; அபின் 3 சேர்" என்ற குறிப்பு உள்ளது.[73] இது 1814இல் கொடுக்கப்பெற்ற மருத்துவக் குறிப்பு.

"மாடுகள் குதிரைகள் பறவைகள் - லக்ஷணங்களும் வைத்தியமும்" என்பது சரஸ்வதி மகால் வெளியீடு – 11 (1979). இதில் பக்கம் 156இல் 74ஆவது தலைப்பு இரத்தமாகச் சிறுநீர் இறங்கினால் தருவதற்குரிய மருந்து தரப்பெற்றுள்ளது :-

---

66. 1-274 : 1-291இல் *வேறு சில மருத்துவப் பொருள்களும் கூறப்பெற்றுள்ளன.*
67. 1-282  68. 1-285  69. 5-488  70. 1-245
71. 2-181  72. 5-220  73. 5-804

" நற்சீரகம், பெருஞ்சீரகம், கொத்தமல்லி, வகைக்குத்தோலா 2; நெல்லி முள்ளி தோலா 6; ரோஜாப்பூ தோலா 2; பொட்டிலுப்பு தோலா 1 - இவைகளை நன்றாகப் பொடி செய்து இதனுடன் தேனை வேண்டிய அளவு கலந்து பிசைந்து மூன்று உருண்டை செய்து இடைவிடாமல் மூன்று நாளைக்குக் கொடுக்க நீர் சுத்தமாகித் தெளிவடையும்" - என்பது மருந்தும், கொடுக்கும் விதமுமாகவுள்ளது. இந்த மருந்துக்கும் மோடி ஆவண மருத்துவக் குறிப்புக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

குதிரைக்குச் **சூடு தணிவதற்காக,** " 21 நாட்களுக்குப் பனங்கற்கண்டு $\frac{1}{4}$ சேர்; வெண்ணெய் $\frac{1}{2}$ சேர்; சீரகம் $4\frac{1}{2}$ டாங்க்; எலுமிச்சம்பழ விதை 9 டாங்க்."

மாதவன் என்னும் குதிரைக்கு உள்ளுக்குக் கொடுக்க தஹிபுத்தி (தயிர்ச் சாதம்) 14 நாட்களுக்கு நாடோறும் கைலி அரிசி படி 1; தயிர் சேர் 2; வெங்காயம் சேர் $\frac{1}{2}$; வெந்தயம் டாங்க் $4\frac{1}{2}$ "[74]

இதிற்கண்ட வெந்தயத்துக்குப் பதிலாகச் சீரகம் மல்லி கொள்ளு என்பவை பிறிதொரு குறிப்பில் உள்ளன. [75]

இரண்டு குதிரைகள் **அஜீரணம்** அடைந்தன; அதைப்போக்க 1859இல் ஷேக் மொகிதீன் என்னும் வைத்தியரிடம் பிற்கண்டவை கொடுக்கப் பெற்றன:-

" சுக்கு 2 சேர்; வெல்லம் 2 சேர்; வெங்காயம் 2 சேர்; மிளகு $\frac{1}{2}$ சேர்; மஞ்சள் $\frac{1}{2}$ சேர்; சாராயம் 4 சேர் "[76]

குதிரைக்கு **வாயுவுக்காகத் தைலம்** செய்து உடம்பு முழுவதும் தடவுவதற்காகக் கொடுக்கப்பெற்ற குறிப்பு :- [77]

" நல்லெண்ணெய், வேப்பெண்ணை, விளக்கெண்ணை, இலுப்பெண்ணை, கரிமஞ்சள் வகைக்கு 2 சேர்; வெள்ளைப் பாஷாணம், செவ்வீர், இரஸ கற்பூரம், சித்தரத்தை, மனச்சிலை, வெள்ளைராபி, மோர் தூத - வகைக்கு $4\frac{1}{2}$ டாங்க்; சித்திரமூலம் சேர் 1; நெல்லிக்காய் கந்தகம் டாங்க் 9; வெற்றிலை 200."

நீளா என்னும் குதிரைக்குப் **பத்துப்போட** மருத்துவக் குறிப்புப் பின் வருவது : [78]

" ருசியில்லாத மண் சேர் 1; சாம்பிராணி சேர் 3; உப்பு சேர் $1\frac{1}{2}$; புளி சேர் 12; செங்கொட்டை சேர் 2; சௌக்காரம் சேர் $\frac{1}{2}$; ஆட்டு இரத்தம் சேர் 2; சீயக்காய் சேர் 1; பூந்திக்கொட்டை சேர் 1; வெண்ணெய் சேர் $\frac{1}{2}$."

---

74. 5-440 75. 1-240 76. 4-447 77. 2-194, 195 78. 2-180

கைத் என்னும் குதிரைக்குப் **பத்துப்போடப்** "பாலைப்பட்டை 1; பெரிது பாதி 1; கோழிமுட்டை 25; சன்ன லவங்கம்பட்டை சேர் $\frac{1}{2}$; உப்பு படி $1\frac{1}{2}$; உளுந்து $\frac{1}{2}$ படி" என்ற ஒரு மருத்துவக் குறிப்பும்[79] உள்ளது.

இவ்விரண்டும் வேறுபட்டுள்ளமை கருதத்தக்கது. அவ்வவற்றின் நோய்க்கு ஏற்ற பத்துப் போடுதலுக்கு[80] உரிய மருந்துப் பொருள்களைத் தந்தனர் ஆதல் கூடும்.

## யானை வைத்தியம்

யானைக்குட்டி **இளைப்புத்தீர** மருந்து,[81] **சளியிருப்பதால்** தண்ணீர் கொஞ்சமாகக் குடிப்பதற்கு மருந்து,[82] வாயுவினால் **"ஜயாஹார பாத"** என்னும் **நோய்க்கு** உள்ளுக்குக் காரம்,[83] யானைக்குட்டிக்குக் **கன்னமும் கடைவாயும் வீங்கியது** தீர மருந்து,[83] ஸரஸ்வதி பிரஸாத் என்ற யானைக் குட்டிக்கு **மாதகி** என்ற **நோய்** போக்க மருந்து,[84] காமாட்சி என்னும் யானைக்குட்டி வாயுவினால் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிப்பதால் உள்ளுக்குக் குக்குவாத கவளம் என்ற மருந்து,[85] பவானி பிரஸாத் என்னும் யானைக்குட்டி முன் **இடதுகால்** வாயுவினால் **பிடிக்கப்பட்ட**தற்குத் தடவு வதற்கு மருந்து,[86] திருவையாறு கோயில் யானைக்குட்டிக்குக் **கண்ணிலிருந்து நீர் பெருகுவதற்கு** மருந்து – யானை பலவீனமாய் இருப்பதால் கீரையில் கலந்து கொடுக்க மருந்து – இரணம் மாறிய பிறகு பட்டிக்கட்டின இடம் கொண்டுள்ள **வீக்கம் தீர** மருந்து,[87] நடுவிரலில் நகங்கள் பெயர்ந்துபோய்ச் **சிரங்கு** ஆனதற்கு மருந்து,[88] காமாட்சியென்ற யானைக்குட்டி **நீர் அதிகம் போவதால்** உள்ளுக்கு மருந்து,[89] கன்னியாகுமரி என்ற யானைக்குட்டிக்கு வாயுவினால் **வயிறு புடைத்து** இருப்பதால் உள்ளுக்கு மருந்து,[90] யானைக்கு **ஜாஹர்பந்த்** (என்ற நோய்) வந்து மிகவும் இளைத்தமையால் உள்ளுக்குக் கொடுக்க (8 கோதும்பை ரொட்டி, 4 சேர் ந. எண்ணெய், 4 சேர் வெல்லம்)[91] இங்ஙனம் பலநோய்களுக்குரிய மருத்துவக் குறிப்புக்கள் உள.

விட்டலப்பிரஸாத் என்னும் யானைக்குட்டிக்கு மதம் பிடித்தமையால் **மதம் நீங்கத்** தலையில் $\frac{1}{2}$ சேர் நெய்யும் $\frac{1}{4}$ சேர் சிந்தூரமும் தடவியதாக ஒரு குறிப்புக் கூறுகிறது.[92]

யானைக்கு **நல்ல பசியுண்டாக** வேண்டும் எனின் நாடோறும் 10 சேர் வெல்லம் 100கரும்பு ஒரு மாதம் கொடுக்கவேண்டும் என்பது ஒரு குறிப்பு.[93]

---

79. 2-189 80. *பத்துப்போடுதல் – பற்றுப்போடுதல் – மருந்து தடவுதல்.*
81. 4-474 82. 1-238 83. 2-185 84. 1-827
85. 1-296 86. 5-485, 486 87. 4-103, 104, 105
88. 4-107, 108 89. 4-101, 102 90. 1-286, 287 91. 1-293, 294
92. 5-309 93. 5-232

## யானைக்குத் தீனி[94]

யானைக்கு 12 மாதங்களிலும் தென்னை மட்டை, பனை மட்டை, அரச மரக் கிளைகள், ஆல மரக் கிளைகள், கரும்பு, மூங்கில் தழை, தாழம்பூ மரத்தின் கட்டை, பாந்தரி இலை, வைக்கோல், கோரை, ஜம்பு ஆகிய வற்றைக் கொடுக்கலாம்.

பனை மட்டை, கபம் பித்தம் போக்கும்.

அரச மரக் கிளைகள், வாந்தி தடுக்கும் ; மதம், பித்தம் ஆகியவற்றைத் தடுக்கும்.

ஆலமரக்கிளைகள், வாதம், மேதை, மதம், பித்தம் ஆகியவற்றை நீக்கும்.

கரும்பு, வாதம், மேதை, மதம், பித்தம், கபம் ஆகியவற்றைப் போக்குவ தோடு, மல மூத்திரம் கட்டுப்படுத்தும்.

– இங்ஙனம் யானைத் தீனியால் ஆய பயன்கள் கூறப்பட்டிருப்பதோடு, புரட்டாசி மாதத்தில் கோரை ஜம்பங்கோரை போடுதல் வேண்டும் என்றும், கார்த்திகை முதல் தை முடியச் சோளக்களி, நேரியட்டி என்று சொல்லப்படும் கோரை தருதல் வேண்டும் என்றும், இன்னோரன்ன கூறப்பட்டுள்ளன.

யானைக்குத் தீனி கொடுக்கும்பொழுது அலுவலர்கள் யானைக்கு அருகில் இருக்க வேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.[95]

மோதிராஜ், ஸிரதாராஜ், விட்டலபிரஸாத், மாணிக்கராஜ்–இந் நான்கும் இரண்டாம் சரபோஜியிடமிருந்த அரச யானைகள். அவைகளில் மோதிராஜ் ஸிரதாராஜ் ஆகிய இரண்டும் சிதம்பரம் வரையில் வரமுடியாத நிலையில் உள்ளன என்று கேள்விப்பட்டதும், சரபோஜி அவைகளின் பாதுகாப்புச் சரியாக இல்லை என்று கருதி, மேற்குறித்த 4 யானைகட்கும் " தீபா அரிசி மாவினால் ரொட்டி செய்து நெய்யைத் தடவி, ரொட்டி திருட்டுப்போகாமல் யானை வயிற்றில் விழும்படி செய்கிறது" என்று 15—2—1822இல் எழுதியுள் ளார்.[96]

இதனால் யானை குதிரை முதலியவற்றைக் கண்ணுங்கருத்துமாக மராட்டிய மன்னர்கள் பாதுகாத்து இருந்தனர் என்பது நன்கு புலப்படும்.

## ஒட்டக வைத்தியம்

சூட்டினால் ரத்தமாகப் போவதால் அதற்கு மருந்து[97] ; பெண் ஒட்டகம் நலம் இன்றி இருப்பதால் மசாலை[98] ; சிரங்கு தீர்வதற்குத் தைலம்[99] ; ஒட்டகத்துக்கு நீர்கொண்டதனால் சுரம் வந்து தீனி தின்னாததால் உள்ளுக்குக் கொடுக்க மசாலை[100] – முதலியன பற்றிய குறிப்புக்கள் உண்டு.

---

94. 12-47, 48 95. 5-50 96. 5-45 97. 5-312
98. 4-857, 858 99. 4-864' 865 100. 1-180, 181

## நாய் வைத்தியம்

நாய் வைத்தியம் குமாரசுவாமி என்றும் குட்டப்பா என்றும் இருவர் பெயர் தெரியவருகிறது.[101] இவர்களுடன் காதர்கான் என்றொருவரும் நாய் வைத்தியராக இருந்தார்.[102]

## பிறவற்றுக்கு வைத்தியம்

**ஆடுகளுக்குச்** சொரி சிரங்குக்கு மேல் தடவ வேப்பெண்ணையும் மர மஞ்சளும் கூறப்பட்டுள்ளன.[103]

சுரமாக இருக்கும் **கரடிக்குக்** கஸ்தூரி $\frac{1}{2}$ வராகன் எடையும் 5 சேர் பாலும் கொடுத்ததாக ஒரு குறிப்புள்ளது.[104]

**மைனா** என்னும் பறவைக்கு வயிற்றில் புழுக்கள் இருப்பதைப் போக்க மசாலை கூறும் குறிப்பு ஒன்று உளது.[105]

**ஜவ்வாது பூனைக்கு** ஏலம் சீரகம் கல்கண்டு வெண்ணெய் ஆகியவற்றைக் கொடுக்கவேண்டும் என்ற குறிப்பும் காணப்படுகிறது.[106]

இங்ஙனம் விலங்குகட்குரிய மருத்துவமுறை பற்றிய குறிப்புக்கள் (Recipes) பல காணப்படுகின்றன. மக்கள் நோயைப் போக்குதற்குரிய மருத்துவக் குறிப்புக்கள் மிகச் சிலவே. மக்கள் பெற்ற குறிப்புக்கள் அவ்வவர் கையில் தரப்பட்டு அன்னோரிடமே தங்கியிருத்தல் கூடும். விலங்குகள் பற்றியவை மருத்துவரிடம் கொடுக்கப்பெறும் ஆகையால் அம்மருத்துவக் குறிப்புக்கள் பாதுகாக்கப்பட்டு இப்பொழுதும் கிடைத்துள்ளன.

## மக்கள் வைத்தியம்

சைனிக் விசித்ரராவ் பாண்டலேகர் என்பவரைப் புலி கடித்தது; அதனால் ஆன காயத்திற்கு மருந்து போட "நெய் சேர் $\frac{1}{4}$; வெங்காயம் 9 டாங்க்; எலுமிச்சம்பழம் 2; $1\frac{1}{2}$ முழம் நீளம் சவுக்கம்" என்று ஒரு மருத்துவக் குறிப்பு[107] உள்ளது. இங்ஙனமே காயம் ஏற்பட்ட ஒருவனுக்குக் காயம் குணப்படுத்தும் தைலம் 1 சேர் கொடுக்கப்பட்டது.[108]

சில நோய்களைக் குணப்படுத்த மாத்திரைகள் கொடுத்தனர் எனத் தெரியவருகிறது.

ஹுஜூர் வேலைக்காரன் கோவிந்தராவ் சங்கோஜி என்றொருவன்; அவனுடைய தங்கை சுரநோயுற்றாள். ஒரு மண்டலத்துக்குப் **பூர்ண**

101. 2-184 102. 1-345 103. 5-448 104. 1-806 105. 5-448
106. ச. ம. மோ. த. 2-1 107. 1-281 108. 1-274

**சந்திரோதய** மாத்திரையும், **சுவர்ண மாலே வசந்த** மாத்திரையும் கொடுக்குமாறு தந்வந்தரி மகாலுக்கு ஆணை விடுக்கப்பட்டது.[109]

**ஆரோக்கிய மசாலா** என்றொரு மருந்து – இதனைச் செய்வதில் **பாபு வைத்தியர்** என்றொருவர் சிறப்புற்று இருந்தார். அவ்வைத்தியரிடம் ஆரோக்கிய மசாலா செய்வதற்குப் பிற்கண்ட மருந்துப் பொருள்கள் தரப் பெற்றன:[110] சுக்கு, கண்டதிப்பிலி, மரமஞ்சள், கர்ச்சூர், சன்ன லவங்கப் பட்டை, நாகசேசரம் – இவற்றுள் வகைக்கு 9 டாங்க் ; மிளகு $13\frac{1}{2}$ டாங்க்; பெருஞ்சீரகம் $4\frac{1}{4}$ டாங்க்; முதல்தரமான எண்ணெய் 3 சேர். இது ஒரு தைலமாக இருக்கக்கூடும்.

இலகு சந்தனாதி தைலம், மகா சந்தனாதி தைலம் ஆகியவை செய்வதற்குரிய மருந்துப் பொருள்களின் விவரங்கள் தெரியவருகின்றன.[111]

## சத்திரங்களில் வைத்தியம்

முக்தாம்பாள் சத்திரம் போன்ற பெரிய சத்திரங்களில் வைத்தியர்கள் இருந்தனர். அங்குப் படிக்கும் மாணவர்கள் நோயுறின் மருந்து அளித்தனர்; சத்திரத்துக்கு வரும் பயணிகள் நோய்வாய்ப்படின் அவர்களுக்கு மருந்து அளிக்கப்பெறும். நோயாளிகட்குத் தகுந்த உணவும் அளிக்கப்பெறும்.[112] கி. பி. 1829இல் முக்தாம்பாள் சத்திரத்தில் வைத்தியம் செய்பவராய் இருந்தவர் கஸ்தூரிரங்கம் பிள்ளை என்பவர் ஆவர்.[113]

## கண் வைத்தியர் முதலியவர்

கண் வைத்தியம், குழந்தை வைத்தியம் ஆகியவற்றுக்கும் வைத்தியர்கள் இருந்தனர்.

இரண்டாம் சரபோஜி காலத்துக் கண்ணுக்குப் போடவேண்டிய மருந்துகள் பற்றி ஒரு சுவடியில் குறிக்கப்பெற்றுள்ளது.[114]

கண் வைத்தியம் செய்தவர் கி. பி. 1775இல் மீராகான் என்ற பெயருடையவர் என்று தெரிகிறது.[115]

109. 1–272 110. 1–177, 178 111. 2–173 முதல் 177 முடிய

112. "Travellers who fall sick at the Chatram or before their arrival receive medicine and the diet proper for them and are attended to with kindness and respect till their recovery" -- Page 26, Past and Present Administration of the Rajah's Chatrams – Extract from the letter of Serfoji II dated 28—1—1801 addressed to the Resident 113. 4–251

114. சரஸ்வதி மகால் நூல்நிலையம் கையெழுத்துப்பிரதி (copied volume) எண், 818

115. 2–149

## அவுஷதக் கொட்டடி

மருந்துகள் எல்லாம் வைக்கப்பட்டிருந்த அறை அவுஷதக் கொட்டடி எனப்பெற்றது. பல்வேறு விதமான மாத்திரைகள், லேகியங்கள், கற்கம், மசாலா முதலிய மருந்துகள் இவ்வறையில் வைக்கப்பட்டு யார் யார்க்குக் கொடுக்குமாறு ஆணை வருகிறதோ அன்னோர்க்கு அம்மருந்துகள் முதலியன அளிக்கப்பெற்றன. இது தன்வந்தரி மகாலின் ஒரு பகுதியாதல் கூடும்.

" அவுஷதக் கொட்டடி முத்துசாமியிடத்தில் சுவர்ண மாலிகா வசந்த மாத்திரை ஒன்று; அசுவ கெந்தாதி லேகியம் ஒரு சேரும் வாங்கிச் சவாரி ஆன தினம் சாயங்காலத்தில் நான் அக்காவிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்து அவர்களும் வெங்கோஜி பண்டிதர் இடத்தில் சேரப்பண்ணினார்கள் "

— என்ற ஆவணப் பகுதியினால்[116] 'அவுஷதக் கொட்டடி' என்பது மருந்துகள் உள்ள பகுதி என்பது உறுதிப்படும்.

## மன்னரின் வைத்தியர்

இரண்டாம் சரபோஜி காசிக்குச் சென்றபொழுது ஆங்கிலேய வைத்தியரும் உடன் சென்றார் என்பது அறிந்ததே. அம் மன்னரிடம் அப்பாசாமி என்ற வைத்தியரும் உடன் இருந்தனராதல் வேண்டும்.

" ஹுஜூரின் வைத்தியர் அப்பாசாமியின் மூலம் ராமதேவர் இயற்றிய வைத்திய சாத்திரம் கரீதி செய்ததற்கு 15 பணம் "

என்ற குறிப்பினால்[117] அப்பாசாமி என்பவர் அரசாங்க வைத்தியருள் ஒருவர் ஆதல்கூடும் என்றும், வைத்திய நூல்கள் விலைக்கு வாங்கப்பெற்றன என்றும் அறியப்பெறும்.

---

116. 7-880 117. 1-124, 125

# 20

# அரண்மனையில் நிகழ்த்திய விரதங்களும் பண்டிகைகளும்

## நாக பஞ்சமி விரதம்

இந்தியா முழுவதும் பாம்பை வணங்குவது பரவலாக இருந்து வந்துள்ளது. உயிருள்ள பாம்பையும் வணங்குவதுண்டு. பாம்புப் புற்றுக்குச் சென்று புற்றுக்கு வழிபாடு செய்து புற்றில் பால் வார்ப்பது வழக்கம். இவ்விரதம் சிராவணம் அதாவது ஆவணி மாதத்தில் மறைமதிக்குப் பிறகு 5ஆவது நாளில் வருவது ஆகும். உயிருள்ள பாம்புகளைப் பாம்பாட்டிகள் கொணர்வர். அத்தகைய உயிருடைய பாம்புகட்குப் பூசை செய்து பால் நிவேதனம் வைப்பதுமுண்டு.

மராட்டிய மன்னரது மாதரார் நாகபஞ்சமி விரதத்தை மேற்கொண்டு உயிருள்ள பாம்புகளைக் கொணரச் செய்து வழிபட்டனர்[1] என்று சில ஆவணக் குறிப்புக்களால் அறியப்பெறும். உயிருள்ள பாம்பு ஒன்றுக்கு 2 பணம் வீதம் விலை கொடுத்தனர் என்றும் பின்வரும் சான்றுகளால் தெரியவருகிறது :–

"1779 : கமாவிசி வேலாயுத முதலி : இவர்களிடத்தில் நாகபஞ்சமி பூசையை முன்னிட்டு நாக ஸர்ப்பம் பிடித்து வந்த வகையில் 34க்கு 1க்கு 2 பணம் வீதம் நாகப் பாம்புக்காரனுக்குக் கொடுத்தது 6½ சக்கரம் "[2]

---

1. " On the Panchami day real serpents are brought and Pooja made to them and milk offered " – P. 275, Deposition of D. W. 30 – Jagannatha Bhutgoswami, O. S. No. 26 of 1912

2. ச. ம. மோ. த. 18–5

" 1821 : நாக பஞ்சமியை முன்னிட்டுப் பூஜைக்கு 9 பாம்புகளைப் பிடித்துக் கொடுத்ததற்கு 1 சக். 8 பணம், ஒரு பாம்புக்கு 2 பணம் வீதம்."[3]

இந்நாளிலும் உயிருள்ள பாம்புகள் வழிபடப்பெறுதல் உண்டு என்பது ஈண்டு நினைவுகூர்தல் தகும்.[4] ஆகவே தஞ்சை அரண்மனையில் அந்நாளில் உயிருள்ள பாம்புகளைக் கொணரச் செய்து நாக பஞ்சமி நாளில் வழிபட்டனர் ஆதல் கூடும். முன்னாட்களில் அங்ஙனம் உயிருள்ள பாம்புகளைக் கொணரச் செய்து வழிபட்டமைக்கு மேனாட்டறிஞர் கூற்றும் சான்று பகரும்.[5]

## தீபாவளி

தீபாவளிப் பண்டிகை பற்றிப் பின்வரும் ஆவணக் குறிப்பு உள்ளது :[6]

" நிஜ ஆஸ்விஜ பகுள திரயோதசி முதல் நாள் திரயோதசி பகல் 25 நாழிகைக்கு மேல் சௌ. பாயி சாயபுமார்கள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது. அதே நாள் முன் இரவில் மாப்பிள்ளையின் பண்டிகை சூரியோதயத்திற்கு முன் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது"

— இதனால் தீபாவளி நாளின் முன்னாள் இரவிலே எண்ணெய் தேய்த்து நீராடுவது இவர்கள் வழக்கம் எனத் தெரிகிறது.[7]

## பாவுபீஜ் பண்டிகை

" 1852 : மஹால் கர்ச்போதே கணக்கு.........பாவுபீஜ் ஸ்ரீ திவான் சாயேபிடம் செலவுக்காக ரூ. 310-8-0"

என்ற குறிப்பு[8] பாவுபீஜ் என்ற பண்டிகையைக் குறிப்பிடுகிறது. இந்தக் குறிப்புடன் பாவுபீஜ் என்பதைப் பற்றிய விளக்கமும் தரப்பெற்றுள்ளது. அவ்விளக்கம், " தீபாவளி ஆகிக் கார்த்திகை சுக்லபக்ஷம் திவிதியை நாளில் தங்கை தன் தம்பி அல்லது தமையனுக்கு விருந்து அளித்துத் துணி

---

3. ச. ம. மோ. த. 18-107
4. (இமய மலைப்பகுதியில்) குஞ்சி என்ற இடத்தில் சர்ப்பக்கோயில் உள்ளது; அங்கே உயிருள்ள சர்ப்பங்கள் வழிபடப்பெறுகின்றன – பக்கம் 7, ஸ்ரீ குமரகுருபரர் (திருப்பனந்தாள்) – திங்கள் இதழ் – கயிலைச் சிறப்பிதழ் – செப்டம்பர் 1982.
5. " ... ... the Nag Panchami Festival occur on which Hindus go in search of snakes or have them brought to their houses by the " Sunpeli " the snake charmer. The snakes are then worshipped and offerings are made to them of milk " – P. 235, Appendix D – Tree and Serpent Worship — James Fergusson ( Nov. 1868 ) — Published by the Indological Book House, Varanasi, 1971.
6. 2-158
7. " On the night of Chathurdasi there is bath; the next day is Deepavali " - page 38, Deposition of M. S. Ghantigai, Ist witness for Ist & 2nd defendents, O. S. No. 26 of 1912.
8. 4-849

மணிகளைக் கொடுத்து ஆரத்தி எடுப்பது வழக்கம். அப்பொழுது தங்கைக்குத் தமையன் ஆரத்தித் தட்டில் பணம் போடுவார் "[9] என்பதாகும்.

## கௌரி பூஜை

"1786 : சௌ. பவானி பாயி சாயேபு அவர்கள் **கௌரி பூஜைக்கு** மஞ்சள் குங்குமம் பங்களா மஞ்சள் மெழுகு, சீப்பு 100, தோடுகள் 100, தாலிகள் 100, டப்பாக்கள் 100, கொண்டக்கடலை 15 படி, புஷ்பம், அபீர் தாண்டா 5, ஹாரம் 5, பலா 8, விசிறி 100"

என்ற குறிப்பினால்[10] இப்பூசை செய்யுங்கால் நூறு சுமங்கலிப் பெண்டிர்க்கு மஞ்சள் குங்குமம், சீப்பு, தோடு, தாலி, பழம் முதலியவற்றுடன் தாம்பூலம் அளிக்கப்பெறும் என்று தெரிகிறது. இதனை மகாலெட்சுமி பூசை என்றும் கூறப்படுவதுண்டு என்றே தோன்றுகிறது.[11]

"1828 : ஸ்ராவண சுத்த திருதியை கல்யாண மகால் ஸ்வர்ண கௌரீ விரத கிரகண உத்யாபனம்"

என்றொரு குறிப்பு[12] உள்ளது. எனவே இவ்விரதம் "சிராவணம்" (ஆவணி) மாசத்தில் செய்யப்பெறுவது எனத் தெரிகிறது.

"1828 : கல்யாண மகாலில் உபாங்க லலிதா விரத கிரஹண உத்யாபனம் செய்தது, ஸர்வதாரி ஆச்வீஜ சுத்த பஞ்சமி"

என்ற குறிப்பால்[13] உபாங்க லலிதா என்ற ஒரு விரதம் உண்டு என்றும், அது ஆச்விஜ (புரட்டாசி) மாசத்தில் சுத்த பஞ்சமியில் நடைபெறும் என்றும் தெரியவரும்.[14]

## ஹரதாளிகா விரதம்

இவ்விரதம் சுமங்கலிகள் நடத்துவது. பாத்ரபத மாசம் சுக்லபக்ஷம் திருதியையில் நடைபெறும்[15] என்றும், சிவ பார்வதிக்குப் பூசை[16] நடத்தப் பெறும் என்றும் தெரிகிறது.

---

9 "Bow biz is the feasting of a brother by a sister and vice versa. It is done on Karthikais, 2nd, 6th day after Deepavali" - page 38 - Deposition of M. S. Ghantigai, O. S. No. 26 of 1912   10. ச.ம.மோ.த. 8-28

11. "Mahalakshmi Pooja is the same with us as Gowri pooja" — P. 31 - Deposition of M. S. Ghantigai, O. S. No. 26 of 1912

12. ச. ம. மோ. த. 10-85   13. ச. ம. மோ. த. 10-85

14. "In Asvijam Upangalalitha on S. 5th" - P. 186, line 15 - Deposition of Swaminatha Sastrigal - D. W. 24, O. S. 26 of 1912.

15. "Harathalika is on Bhadrapatha S. 3rd by Sumangalis" P. 30, M. S. Ghantigai, O. S. 26 of 1912

16. "In Harithalika, Pooja is made to Siva Parvathi"-P. 19, M. S. Ghantigai, O. S. 26 of 1912

" 1823 : அஹில்யாபாயி சாயேப் அவர்கள் **ஹரி தாளகா** விரதத்துக்குப் பழ வகைறாக்கள்; தேங்காய் 520, வாழைப்பழம் 520, கொய்யா 520, விளா 520, வெள்ளரி 520, எலுமிச்சை 520, சர்க்கரை நாரத்தம் 520, பச்சை கொட்டைப் பாக்கு 520, நாகப்பழம் 520, மாதுளை 520, பேரீச்சம் 520, திராக்ஷை 520, அம்சூல் 520, தமர்தம் 520, கடாரங்காய் 520, மா 520 "

என்ற குறிப்பு[17] அவ்விரதத்தில் எவ்வெப்பொருள்கள் எந்த அளவுக்கு நிவேதனம் செய்தல் வேண்டும் என்பதைத் தெரிவிப்பதாக உள்ளது. எத்தனைப் பேருக்குத் தாம்பூலம் அளிக்கப்பெறும் என்று தெரிய வாய்ப்பில்லை.

வேறொரு குறிப்பு,[18] அமணி ராஜேசாயபு 1828இல் " பாத்ரபத சுத்த திருதியை"யில் இவ்விரத உத்யாபனம்[19] செய்ததாகக் குறிப்பிடுகிறது. இக்குறிப்பினைத் தொடர்ந்து "**அனந்த சதுர்த்தசி விரத உத்யாபனம்**" நடைபெற்றதாக உள்ளது. இவ்விரதம் பற்றி வேறொன்றும் தெரியவில்லை.

## குலதர்ம பூஜை

இது ஆண்டு முழுவதும் சந்திர மௌலீசுவர சுவாமிக்குக் குறிப்பிட்ட நாட்களில் செய்யப்பெறும் பூசையாகும். "அபிஷேக நிவேதனங்கள்" செய்து விட்டு அந்த இடத்தை விட்டு அந்தணர்கள் அகல்வர். பின்னர் அரசமா தேவிகள் வந்து சிறப்புப் பூசை செய்வர். காமாட்சி அம்பா பாயி அவர்கள் தம் வாழ்நாளில் இப்பூசையைச் செய்துள்ளார். ஆண்களுக்கும் இப்பூசைக்கும் தொடர்பில்லை.[20]

இறந்த அரசர்களுக்கும் சுமங்கலியாக இறந்த அரசமாதேவிகளுக்கும் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றுக்குப் பூசை செய்வர். இதுவே குலதர்ம பூசை எனப்படும்.[21]

காமாட்சியம்பா பாயி சாயேபு சுவீகாரம் எடுத்துக்கொண்ட சரபோஜி அவர்களின் மனைவிகளுள் ஒருவர் எமுனாம்பா பாயி சாயேப் ஆவர்.[22]

---

17. ச. ம. மோ. த. 5-40 18. ச. ம. மோ. த. 10-44.
19. உத்யாபனம்-விரதத்தை முடித்தல்,
20. "Kuladarma Puja is the occasional puja performed on specific days from Chitrai to Panguni in the Chandramouleeswara Temple. The Abishegam and Neivedyam are done by Brahmins and then they leave. The yejaman ladies then have special pooja. Males have nothing to do with Kuladarma Pooja. While she lived Kamakshibai did the pooja-**P. 28**, Deposition of M. S. Ghantigai, O. S. 26 of 1912.
21. " Pooja to the TONKS is called Kulatharma Puja " - P. 29, Deposition of Yogambal, O. S. 26 of 1912.
22. Deposition of A. 9, O. S. 26 of 1912.

இவர்தம் வாக்குமூலத்தில், காமாட்சியம்பாபாயி சாயேபு குலதர்மபூஜை செய்வர் என்றும், இவருடைய கணவரின் இரண்டாவது மனைவி சுமங்கலிகட்கு மஞ்சள் வெற்றிலை பூ இவைகளைத் தருவர் என்றும், பிராமணர் பூசை செய்தபிறகே இவர்கள் சந்திர மௌலீவர சுவாமிக்கு மலரிட்டுப் பூசை புரிவர் என்றும் கூறியுள்ளார்.[22அ]

ஆண்டு முழுவதும் எவ்வெந்நாட்களில் குலதர்மபூஜை நடைபெறும் என்பது பற்றி "மொயின் ஜாபிதா ஒரு வருஷத்துக்கு சுஹர்சன் 1247 குல தர்மத்துக்கான விவரம் ஸ்ரீ சந்திர மௌலீசுவர சுவாமிக்கு" என்ற தலைப்பில்[23] கூறப்பட்டுள்ளது.

அதிற்கண்டவண்ணம் தொகையும் நாட்களும் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| $\frac{1}{4}$ | | | – சம்வத்ஸரம் பிரதிபதா |
| $1\frac{3}{4}$ | 1 | வீசம் | – சித்ராபௌர்ணமி |
| $\frac{1}{2}$ | | | – ஆஷாடசுத்த ஏகாதசி |
| 1 | | வீசம் | – நாகபஞ்சமி |
| $\frac{1}{2}$ | | வீசம் | – பௌர்ணமி |
| $\frac{1}{4}$ | | | – கோகுலாஷ்டமி |
| 2, | 3 | வீசம் | – சோமவாரம் |
| $\frac{1}{4}$, | 2 | வீசம் | – விநாயக சதுர்த்தி |
| 2, | 2 | வீசம் | – ஜேஷ்டாகனிஷ்டா[24] |
| 50, | 1 | வீசம் | - நவராத்திரி |
| $\frac{1}{2}$, | 2 | வீசம் | – தீபாவளி |
| $1\frac{3}{4}$, | 2 | வீசம் | – கார்த்திகை சோமவாரம் |
| $\frac{1}{4}$, | 2 | வீசம் | - ஏகாதசி |
| 2 | | | – சம்பா சஷ்டி[25] |
| 1, | 2 | வீசம் 4 | – பாக சப்தமி |
| 1, | 2 | வீசம் 6 | - சுத்த பௌர்ணமி |
| $\frac{1}{2}$, | 1 | வீசம் 4 | - மகர சங்கிராந்தி |

22அ. P. 5, Deposition of Yemunamba Bai Saheb, 8th witness for 1 & 2 defendants, O. S. No 26 of 1912. 23. 10–169, 170.

24. "Jeshta Kanishta Puja is made to Gowri Goddess by Sumangalis, It comes in the month in which Pillaiyar Chaturthi comes. Widows cannot perform the puja; nor the unmarried girls – P. 10, Deposition of Yemunamba Bai.

25. சம்பா ஷஷ்டி என்பது மார்கசிர (மார்கழி) மாசத்தில் சுத்த பிரதமை முதல் ஷஷ்டி வரையில் நடக்கும் விரதம். "In Margaciram Champa Sashti begins on S. 1st; Champa Sashti ends on S. 6th" – Deposition of 24th witness, Saminatha Sastrigal.

$\frac{1}{4}$, 2 வீசம் – மாகமாசம் வசந்த பஞ்சமி
1 – 4 – மாக சுத்த பௌர்ணமி
$2\frac{1}{4}$ – மகா சிவராத்திரி
$3\frac{1}{2}$ 3 வீசம் 4 – பால்குண சுத்த பௌர்ணமி
3. 1 வீசம் – ஒவ்வொரு மாத பௌர்ணமிக்கும்
$1\frac{1}{2}$ – சனிப்பிரதோஷம், சோமவார அமாவாசை

## சோமவார அமாவாசை

அமாவாசை அதாவது மறைமதி, திங்கட்கிழமை வந்தால் அன்று சுமங்கலிப்பெண்டிர் அசுவத்தப்பிரதக்ஷணம் செய்வர்; அதாவது அரசமரத்தை 108 முறை வலம் வருவர். வலம் வருதலைக் கணக்கிடுவதற்கு ஏதாவது பழத்தையோ பொருளையோ இடுவர். பின்னர் அவற்றைச் சுமங்கலிகளுக்கு வெற்றிலைப்பாக்குடன் தருவர். இவ்விரதத்தைப் பாயிசாயேபுகள் நடத்தினர் என்பதை,

"1828 மாதுஸ்ரீ சிறிய ஆவுசாயேப், அஹல்யா பாயி, சுலக்ஷணாம்பா பாயி அமணிராஜே, ராஜம்மாபாயி அமணிராஜே, ராஜகுமாரம்பா பாயி, இவர்களிடம் சோமவார அமாவாசைக்கு வழக்கப்படி கொடுக்கிறது"

என்ற குறிப்பு[26] வலியுறுத்தும். கி. பி. 1808இல் யமுனாபாயி அஹல்யா பாயி ஆகிய இருவரும் "அசுவத்த பிரதட்சணத்துக்கு" வெள்ளி வாத்தியமும் ஜோடவியும் கொடுத்தனர் என்றும், ஒவ்வொருவருக்கும் 216 வீதம் மொத்தம் 432க்கு விலை 50 சக்கரம் என்றும், அப்பொருள்களை ஜம்தார்கானாவில் செய்து தரவேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பெற்றது.[27]

## நவராத்திரி

நவராத்திரியின்போது அரசவையில் "பயில்வான்கள்" தம் திறமையைக் காண்பிப்பர். கி. பி. 1797இல் 96 ஜோடிகள் தம் திறமையைக் காட்டி 970 சக்கரம் பரிசு பெற்றனர். இளைஞர்கள் 30 ஜோடிகள் 40 சக்கரம் தரப் பெற்றனர். கோயில் பயில்வான் 5 சக்கரம் அளிக்கப்பெற்றார்.[28]

நவராத்திரியில் பல தெய்வங்களுக்கும் பூசைகள் நிகழ்த்தப்பெறும்.[29] நவராத்திரி நாட்களில் நாடோறும் கோதானம் செய்வதுண்டு.[29அ] நவராத்திரி காலத்தில் ஆயுதபூசை நடப்பதுண்டு. அன்று அரசர் இரதத்தில் ஏறிச் "சிலங்கண சாவடி" வரையிலும் சென்று அரண்மனைக்குத் திரும்புவதும் வழக்கம் ஆகும்.[30]

---

26. ச. ம. மோ. த. 4-46 27. ச. ம. மோ. த. 20-7 28. ச. ம. மோ. த. 19-25
29. ச. ம. மோ. த. 4-11 29அ. 11-57, 58 30. 8-67

விசயதசமி நாளில் (1768இல்) டபீர் சுவாமிகள் (பந்த்) 1000 வராகன் மதிப்புடைய வைரப்பதக்கம் ஒன்று கொடுத்தார் என்ற ஆவணக் குறிப்பினால்,[31] மராட்டிய மன்னர்கட்குப் பெரிய அதிகாரிகள் காணிக்கை கொடுக்கும் வழக்கம் இருந்ததெனக் கொள்ளலாம்.

"1785 : ஸர்க்காருக்கு விசயதசமி தினம் செலவு கல்லிழைத்த வைரக் காப்பு ஜோடி 1க்கு 2000 வராகன் ; பச்சை பிசுவா (சின்னத்தில்) கல்லிழைத்தது 1க்கு 1000 வராகன்"

— என்ற குறிப்பு[32] மன்னர்கள் விலையுயர்ந்த அணிகலன்களையும் பெரிய அலுவலர்களுக்குப் பரிசாகத் தந்திருத்தல் கூடும் என ஊகிக்கலாம்.

## மகரசங்கிராந்தி

இது பொங்கல் பண்டிகையாகும். இது பற்றிய குறிப்பொன்று,

"1829 : கல்யாண மகாலில் மகர சங்கிராந்தி வெண்ணெயில் லிங்கம் செய்து கொடுக்கும் விரதத்தை உத்யாபனம் செய்யத் தக்ஷிணை ரூ. 5—4—0"

என்று காணப்பெறுகிறது.[33] இது பொங்கல் திருநாளில் வெண்ணெயால் லிங்கம் செய்து தானம் செய்தலைக் குறிப்பிடுகிறது. சங்கிராந்தி அதாவது பொங்கல் நாளில் செய்யும் வழிபாடு பிறர் செய்யும் வழிபாட்டு முறையினும் வேறுபட்டுள்ளதாகத் தெரிகிறது.[33அ]

## பிள்ளையார் சதுர்த்தி

பிள்ளையார் சதுர்த்தி விழா கி. பி. 1834க்குரிய குறிப்பில் உள்ளது.[34] சுஹுர்சன் 1254 அதாவது கி. பி. 1853இல் விநாயக சதுர்த்தி விழா இருபத்திரண்டு நாட்கள் நடந்தமையும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாடகம் நடிக்கப் பெற்றமையும், ஓராவணத்தால் அறியப்பெறும். நாடகம் நடத்தியதோடு நாடக சாலையில் சில பெண்கள் நாட்டியம் ஆடினர்.[35]

---

31. 2-6 32. 2-13

33. 4-224; "We have Sankranthi. We do Sakthi Pooja. New pots are filled with rice etc., and ornamented and worshipped. The Lingam is made of butter, Parvathi of jaggery and worshipped and presented to Brahmins" - Page 3, Deposition of Krishnaswami Bhosle, 13th witness, O. S. No. 26 of 1912.

33 அ. "Sankranti is common but the nature of the Puja differs. We worship the Sun. They have Navanitha Lingam and worship with certain fruits. I don't know the details. I have not seen the Puja" - Deposition of D. W. 24, Saminatha Sastrigal, O. S. No. 26 of 1912. 34. 5-8

35. 12-864, 865, 866. இசை நாடகம் என்ற 16 ஆம் கட்டுரை, அடிக்குறிப்பு எண் 106 முதல் 121 வரை காண்க.

"7, 1 வீசம் ரபீலாகர் தேதி 2, பாத்ரபத சுத்த 4 புதன்கிழமை புரட்டாசி தேதி 2, விநாயகர் சதுர்த்திக்காக 6, ஹுஜுரில் கணேச பூசைக்குத் தட்சணை"

என்ற குறிப்பு[36] விநாயக சதுர்த்தி நாளில் அரண்மனைப் பிள்ளையார்க்குப் பூசை நிகழ்த்தப்பெற்றதைக் காட்டும்.

## சிராவண சோமவாரம்

சிராவணம் – ஆவணி மாசத்தில் 4 திங்கட்கிழமைகளிலும் காவிரி நீரில் நீராடிச் சிவபூசை செய்வர்.[36அ] ஆகவே காவிரியிலிருந்து நீரைக்கொண்டு வந்ததாகக் குறிப்புள்ளது.[37] அது பின்வருமாறு:

"$\frac{1}{2}$, 6; இரண்டாவது சிராவண சோமவாரத்துக்குக் குடம் 2"
"$\frac{1}{2}$, 6; மூன்றாவது ,, ,, ,,
"$\frac{1}{2}$, 6; நான்காவது ,, ,, ,,

## கார்த்திகைச் சோமவாரம்

கார்த்திகை மாதம் 4 திங்கட்கிழமைகளும் விரதங்கள் அனுட்டிப்பதுண்டு. காமாட்சியம்பா பாயி அனுட்டித்ததாக ஓராவணக் குறிப்பு[37அ] உள்ளது.

## மகா சிவராத்திரி

மாசி மாசம் வரும் மகாசிவராத்திரி நாளில் சிவபூசை செய்பவர் நான்கு யாமங்களிலும் சிவபூசை செய்வர்; இரவு முழுவதும் தூங்கமாட்டார்கள். அந்த நாளில் இரவு முழுதும் தூங்காமல் இருப்பதற்குப் பெண்டிர் ஏதாவது விளையாட்டு முதலியவற்றுள் ஈடுபடுவதுண்டு. அந்த முறையில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது:[38]

"மாசி மாசம் மகாசிவராத்திரிக்காக விளையாடுவதற்கு,

| | | |
|---|---|---|
| சௌ. ராஜம்மாவிடம் சக். | 10, | காசு 500 |
| உபலாம்பா ,, | 10, | காசு 500 |
| மா. சந்திரரேகாபாயி பணம் | $7\frac{1}{2}$ | |
| | $20-7\frac{1}{2}$ | காசு 1000 |

இன்னும் பிற பாயிசாயேபுகளிடம் சக். 500, காசு 14000"

என்றமை காண்க. விளையாட்டிலும் பணம் வைத்து விளையாடுவர் போலும்!

## இராமநவமி

இராமநவமி விழா மிகச் சிறப்பாக நடைபெறுவதுண்டு. பல திருமடங்களில் அத்திருவிழா நடத்துவதற்கு உதவிகள் தந்துள்ளனர்.[39] இராமருடைய

---

36. 11-58
36அ. "On Sravana on each Monday my father did Sovapooja" – P 326, Deposition of Sivaji Rajah Sahab, grandson of Sivaji II, O.S. No. 26 of 1912
37. 11-64 37அ. 4-88 38. 2-42 39. ச. ம. மோ. த. 18-88

மூர்த்தியை ஊர்வலமாகக் கொணரும்பொழுது அரண்மனை மாடியிடம் வருங்கால் தட்சணை ஒரு சக்கரம் அளிக்கப்பெற்றது.[40] அரண்மனையிலும் இந்த நாட்களில் சிறந்த முறையில் பண்டிகை கொண்டாடினர்.

" கி. பி. 1786 ஸ்ரீராமநவமிக்கு உத்தரவு; மாதுஸ்ரீ அன்னபூர்ணா பாயி, பவானி பாயி, பார்வதி பாயி—இவர்கள் ஒவ்வொருவருக்கும் அவல் 20 படி; பொறி 15 படி; கடலைப் பருப்பு 5, பயத்தம் பருப்பு 5; பொட்டுக் கடலை 5; கசகசா 3; தேங்காய் 25; பழம் 50; சூடம் சாம்பிராணி வகையறா கொடுக்க வேண்டியது"

என்ற குறிப்பால்[40அ] ஒவ்வொரு பாயி சாகேபும் ராமநவமி கொண்டாடினர் என்பது போதரும்.

கி. பி. 1824க்குரிய குறிப்பு[41] சக்வாரம்பா பாயி கோகுலாஷ்டமி பூசை நடத்தியதாகக் கூறுகிறது.

## காமன் பண்டிகை

இது ஹோலி பண்டிகை என்றும் குறிக்கப்படும்.[42] இது பால்குண மாசத்தில் நடத்தப்பெறுவது.

" 1769 ஸர்க்காரில் காமன் பண்டிகைக்காக வெள்ளிப் பீச்சாங்குழலுக்காகத் தஞ்சாவூர் எடை சேர் $3\frac{1}{4}$ க்கு சேர் 1க்கு 19 சக். வீதம் சக். 61–$7\frac{1}{2}$"

என்ற குறிப்பால்[43] இப்பண்டிகையை வெகுவிமரிசையாக நடத்தினர் என்று ஊகிக்கலாம்.

## ஜனவரி பண்டிகை

கிருஸ்துமஸ் பண்டிகை, வெள்ளையர் ஆதிக்கம் இந்த நாட்டில் வந்தபிறகு சிறப்பான பண்டிகையாகக் கருதப்பெற்றது. தஞ்சையில் இருந்த வெள்ளையர்கட்கும், சென்னையில் இருந்த 'கவர்னர்' போன்றவர்களுக்கும் விலையுயர்ந்த பரிசுகள் அளிக்கப்பெற்று வந்தன. மாதிரிக்கு ஒன்று:[44]

" ஜனவரிப் பண்டிகைக்காக மிஸ்தர் பிளாக்பர்ன்[45] சாயேபுக்கு இனாம் 500 சக்கரம்"

என்பதால் கிருஸ்துமஸ் பண்டிகையை யொட்டிப் பெரும்பொருள் செலவு செய்யப்பெற்றமை அறியவரும்.

---

40. 4–206 40அ. 8–28 41. 4–89.

42. "Holi Pandigai is the same as what Tamils call Kaman Pandigai" — p. 188, Deposition of Saminatha Sastrigal, O. S. 26 of 1912. "In Sivangi Pournima we have both Kulatharmam in the morning and "Holi" at night i. e., the burning of Dhoda Rakshasi. It is a 2 day's festival as we do Puja to the ashes the next morning" – Page 19, Deposition of Ghantigai, O. S 26 of 1912. 43. 2–18. 44 2-85.

45. இவர் சரபோஜி II "கைலாசவாசி" ஆனபொழுது ரெஸிடெண்டாக இருந்தவர்.

# 21

# உடன்கட்டை யேறுதல்

கணவன் இறப்பின் மனைவி உடன் உயிர் நீப்பது பற்றிப் பல செய்திகள் தமிழ் இலக்கியத்திற் காணப்பெறும். தமிழிலக்கணங்களாகிய தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை முதலியவற்றுள்ளும் இதுபற்றித் துறைகள் சிலவற்றை இவ்விலக்கண நூலார் வகுத்துள்ளனர். கணவன் இறப்பின் விதவை யிடும்பையை வெறுக்கும் மகளிர் கணவனோடு உடன்கட்டை ஏறுதல் ஒரு பழமையான ஒழுகலாறு. இதனை '**ஸதி**'' என்றும், ''**சக கமனம்**'' என்றும் கூறுவர். உடன்கட்டையேறிய மகளிரைப் பற்றி இலக்கியங்களிலும் வரலாற்றிலும் பல செய்திகள் உண்டு.[1]

தஞ்சை மராட்டிய அரசர் காலத்தில் மராட்டிய அரசர்களின் மாதேவிகள் சிலர் உடன்கட்டை ஏறினர் எனப் போன்ஸ்லே வம்ச சரித்திரம் என்ற நூலினின்றறியப்பெறும்.

முதலாம் சரபோஜி 1710 முதல் 1728 வரை ஆட்சி புரிந்தவர். அவர் ''கைலாஸவாஸி'' ஆனபொழுது அவருடைய மூன்று மனைவிகளில் சுலக்ஷணா பாயி சாகேபும், ராஜஸ பாயி சாகேபும் உடன்கட்டை ஏறினர்.[2]

கி. பி. 1739 முதல் 1763 வரை ஆட்சி செய்தவர் பிரதாப சிங்கர். அவருக்கு மனைவியர் ஐவர்.[3] அவர் சகம் 1763இல் இறந்தார். அவருடைய மூன்றாவது மனைவியான யமுனா பாயி சாகேபும், ஐந்தாவது மனைவியான சக்வார் பாயி சாகேபும் உடன்கட்டை ஏறினர்.[4]

---

1. இலக்கியக் கேணி – கே. எம். வேங்கடராமையா, பக்கம் 97 முதல் 111 வரை, (1968)
2. போன்ஸ்லே வமிச சரித்திரம், தமிழ் – பக்கம் 88
3. ,, ,, பக்கம் 82
4. ,, ,, பக்கம் 116

"1735: துளஜா ராஜா கைலாஸவாஸி ஆனதற்கு சௌ. ராஜ குமாரம்பா உடன்கட்டை ஏறினார்" என்றொரு குறிப்பு உள்ளது.[5]

1735 என்று ஆண்டு குறிக்கப்பட்டிருத்தலால் துக்கோஜி எனப்பட்ட முதலாம் துளஜாவின் மனைவியருள் ஒருவராகிய **ராஜ்குமாரா பாயி** என்பவர் உடன்கட்டை ஏறியிருத்தல் கூடுமென ஊகிக்கலாம். ஆனால் இச்செய்தி போன்ஸ்லே வமிச சரித்திரத்தில் குறிப்பிடப் பெறவில்லை.

இரண்டாம் துளஜாவுக்கும், **ராஜகுமாரம்பா** என்றொரு மனைவி இருந்தார்.[5அ] அவர் உடன்கட்டை ஏறினரோ என்று கொள்ளலாம் எனினும் போன்ஸ்லே வமிச சரித்திரம் இதற்குச் சான்று பகரவில்லை.

ஸ்வார்ஷ் பாதிரியார் பற்றி ஒரு நூல் உள்ளது. அதில்[6] துளஜா அரசர் இறந்த செய்திபற்றிப் பின்வருமாறு எழுதப்பெற்றுள்ளது:—

"The body of the Rajah was burned; but no female was immolated on the funeral pile (serving to enrich the priest by means of the jewels of the women who are thus cruelly and untimely sent out of the world.)"

இதனால் துளஜா அரசர் இறந்தபொழுது அரசமாதேவியர் எவரும் உடன்கட்டை ஏறியதாகத் தெரியவில்லை.[6அ]

அமர்சிங்கர் துளஜாவுக்குப் பிறகு 1788 முதல் 1798 வரை ஆட்சி புரிந்தவர். இவர் 1802இல் இறந்தபொழுது அவரது இரண்டு மனைவியர் ஈமத்தீப்புகுந்து உயிர் மாய்ந்தனர் என்று கூறப்படுகிறது.[7]

இரண்டாம் சிவாஜி மன்னர் தம் தமக்கைகள் மூவரின் 3 பெண்களைத் திருமணம் செய்து கொண்டார். மூத்த மனைவியாகிய சைதம்பாபாயி, இளைய மனைவியாகிய பத்மாம்பாபாயி ஆகிய இருவரும் சிவாஜி இறப்பதற்கு முன்னதாகவே இறந்துவிட்டனர். எஞ்சியவர் காமாட்சியம்பாபாயி சாகேப் ஒருவரே. தமக்கு ஆண் சந்ததியில்லையே என்ற கவலையால் தான் இறப்பதற்கு 3 ஆண்டுகட்கு முன்னர் அதாவது கி. பி. 1852இல் 17 பெண்களை ஒரே நாளில் சிவாஜி மணம் செய்துகொண்டார். அவர்களுள் இருவர் சிவாஜி இறப்பதற்கு முன்னமேயே இறந்துவிட்டனர்.[8] எனவே சிவாஜி இறந்த

5. 8-266 5அ. போன்ஸ்லே வமிச சரித்திரம், தமிழ் – பக்கம் 109
6. P. 138, Part II, Memoirs of C. F. Schwartz
6அ. "Tulaja died at the age of 49. Two of his queens committed Sati" K Subramanian — Maratha Rajahs of Tanjore, P. 66. இது எங்ஙனம் பொருந்தும் என்பது விளங்கவில்லை.
7. p. 144, Administration and Society in the Carnatic, 1701 - 1801, Dr. K. Rajayyan-Sri Venkateswara University Publication - Historical Series, Number 7 (1966).
8. P. 838, Tanjore Manual (Part V, Political History, Chapter IV)

உடன்கட்டை ஏறியதனால் அவர்களுடைய சிரார்த்தம் செய்வதற்கு மகாராஜா சத்ரபதி தரும பராயணர் கோ பிராம்மண பிரதி பாலகர் தயை யுள்ளவர் ஆகையினால் போன வருஷம் அதற்கு முன் வருஷம் கோதானம் கொடுத்தது போல் இப்பவும் கொடுக்க வேண்டும்.'' 16

"1829: வண்ணாத்தங்கரை நரசிம்மாச்சாரியார் ஸர்ப்ப தம்ஸத்தால் இறந்தார். அவருடைய பாரியை சக கமனம் செய்யச் சக்கரப் 5" 17

மேற்கண்ட மேற்கோள்களால் அரச குடும்பத்தார் மட்டுமன்றிப் பிற மேல்நிலைப் பெருமக்களும் உடன்கட்டையேறும் வழக்கம் ஒரோவழி உடையராய் இருந்தனர் என்று அறியப்பெறும்.[18] எனினும் இவ் வழக்கம் மிக அருகியே காணப்படுகிறது.

தஞ்சை மராத்திய அரசர் சக கமனம் செய்யும் செய்தியைக் கேட்டதும் (அங்கு நடைபெறும் சடங்குகளின்) செலவுகட்காக 5 சக்கரம் இனாம் கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சக கமனம் அல்லது உடன்கட்டை ஏறுதல் அரிய செயல் ஆகலின் இங்ஙனம் உதவித்தொகை அளித்தனர்போலும்.

இச்சககமனச் செயலினால் உடன் உயிர் நீக்கும் "மா சத்தி"க்குப் புண்ணியம் இருக்கலாம்; புகழும் இருக்கலாம்; (எனினும் அது தற்கொலை தவிர்த்து வேறு எப்பெயராலும் குறிப்பதற்குத் தகுதியுடையதாக இல்லை). ஆனல் அப்பொழுது நன்மை பெறுபவர் அங்கு நீத்தார் கடன் செய்விக்கும் புரோகிதனே ஆவன் என்பதை ஸ்வார்ஷ் பாதிரியின் நினைவுக் குறிப்புக் களினின்றறியப்பெறும்.[19] உடன்கட்டையேறும் "மா சத்தி" அணிந்த நகைகள் எல்லாம் அந்தப் புரோகிதர் அடைவார் என்று குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது.

இஃது அநாகரீகமான, மனிதப் பண்புக்கு ஒவ்வாத, வன்முறையில் உயிர் போக்கும் செயல் எனக்கருதிச் சென்னை ஆங்கில அரசாங்கத்தார் 1830ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி இதனைத் தடை செய்தனர்.[20]

---

16. ச. ம. மோ, த. 6-34 17. ச. ம. மோ. த. 4-24
18. "In Tamil Nad royalty and nobility practised it. The Brahmins and the common folk if at all practised it rarely" - P. 287, History of Tamil Nad (1565-1956) by N. Subramanian
19. இக்கட்டுரை அடிக்குறிப்பு 6க்கு உரியது காண்க
20. "The Government of Madras legislated against Sati, by the Madras Regulation of 1830" - P. 288, History of Tamil Nad, N. Subramanian

# 22

# தேவதாசிகள் - பெண்களை விற்றல்

கோயில்களில் கோயிற் பணிகளைச் செய்ய மகளிர் நியமிக்கப் பெற்றிருந்தனர். சிலர் சுவாமி உலாப்போகுங்கால் நாட்டியம் ஆடுதலும் உண்டு. நல்ல இசை வாய்ப்பு உடையவர்கள் ஆடலுடன் பாடுதலும் உண்டு ஆகவே முன்னாட்களில் தளிப்பெண்டுகள் எனப் பெற்றவர் கோயில் பணிவிடை செய்து வந்தமையோடு, இசை நாடகம் நாட்டியம் ஆகியவற்றை வளர்த்தனர் என்னலாம். அன்னோருட் சிறந்தவர் "தலைக்கோல்" பட்டம் பெற்றனர். அத்தகைய தளிப்பெண்டுகள் 360 பேர் தஞ்சைப் பெரிய கோயிலில் நியமிக்கப் பெற்றிருந்தனர் என்று முதலாம் இராசராசசோழனின் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு விவரிக்கிறது.[1]

இங்ஙனம் கோயில் பணியில் இருந்தவர்கள் பொதுமகளிர் என்றோ விலை மகளிர் என்றோ கருதுவதற்கு இல்லை. அன்னோர் மணவாழ்க்கை விரும்பினால் கோயில் பணியைத் துறந்து மணவாழ்க்கை கொள்வதும் உண்டு.

ஆனால் பிற்காலத்தில் பெண்களைக் "கோயிலுக்குப் பொட்டுக் கட்டுதல்" ஆகிய பழக்கம் வந்துவிட்டது. தஞ்சை மராட்டியர் காலத்துக் கோயில்களில் பலர் பொட்டுக் கட்டிக்கொண்டனர் என்றும், அன்னோர் தேவதாசிகள் எனப்பெற்றனர் என்றும் தெரியவருகிறது :—

"1819: தேவஸ்தானம் முக்தம்பாள்புரம் காசிவிசுவநாத சுவாமி கோயில் தாசி ஹீரா கோவிலில் பொட்டுக்கட்டிக் கொள்வதற்கு வழக்கம் போல் சத்திரம் ஐவேஜில் கொடுக்கிறது"[2]

---

1. S. I. Vol. II    2. ச. ம. மோ. த. 9-18

என்ற ஆணை இதற்குச் சான்று பகரும். மேலும் ஒரு பெண் கோயிலில் பொட்டுக் கட்டிக் கொள்வதற்குக் கோயிலிலிருந்து ஒரு தொகைகொடுக்கப் பெறுவாள் என்றும் அறியலாம்; மற்றும் அவளுக்கு மாத ஊதியம் உண்டு.

கோயிலுக்கு இத்தகையோர்களை விலைக்கு வாங்குவதும் உண்டு என்று தெரிகிறது. சரபேந்திர பட்டணத்தில் ஒரு தாசி-ரமாமணி என்ற பெயருடையவள் — அவளுடன் ஐந்து பேர்களைச் சிதம்பரேசுவரர் கோயிலுக்குப் பொட்டுக் கட்டி வைக்க அரண்மனையாரவர்கள் விலைக்கு வாங்கினார்கள். ஊமாதம் 1க்கு ஒவ்வொருவருக்கும் 5 பணம் இரண்டு கலம் நெல் வீதம் சம்பளம் கொடுக்கப்பெற்றது.[4]

இவர்கள் கோயிலில் பொட்டுக் கட்டிக் கொண்டாலும் இவர்கட்குக் குழந்தைகள் இருந்தன. இதனை,

" திருவீழிமிழலையில் இருக்கும் தாசி சின்னிகுட்டி மகள் செல்லக்குட்டி மிகுந்த வணக்கத்துடன் எழுதிக்கொண்டது "

என்ற குறிப்பால் தெரிந்துகொள்ளலாம்.[5] தந்தை பெயர் கூறாமல் தாயின் பெயர் கூறியுள்ளமையால் அன்னோர் ,பதியிலார்' என்பது தெள்ளிதின் விளங்கும்.

" கோவிந்தசாமி மாமியார் ஆகிய தாசி அன்னத்தைக் கொண்டு ருசுப்படுத்தச் சிந்தமாய் இருக்கிறேன் "

என்றமையால்[6] தாசிகள் தம் பெண்களுக்குத் திருமணம் செய்வித்தலும் உண்டு என்று தெரியவருகிறது. எத்தகைய பெண்களுக்குத் திருமணம் செய்விப்பர் என்பது கவனிக்கத்தக்கது. தமக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளில் 'அரூபமாயும் தேவடியாள் தனத்துக்கு யோக்கியமில்லாதவளாகவும்"[7] இருந்தால் அத்தகைய பெண்களுக்குக் கல்யாணம் செய்து வைப்பர் போலும்.

பெண்கள் திருமணம் ஆவதற்குள்ளாகவே அதாவது சிறு வயதினராக இருக்கும் போதே பொட்டுக் கட்டுவர். இது,

"1842: எமுனாம்பாபுரம் சந்தானராமசுவாமி கோவிலில் பொட்டுக் கட்டிக் கொண்ட அன்னம் தாசி – வயது 10 – மாதம் 1க்கு நெல் கலம் 1; தினமும் சாதம் பட்டை $1\frac{1}{2}$ "

என்பதால்[8] உறுதி எய்தும்.

3. 7-691 ( அடிக்குறிப்பு 10க்குரியது காண்க )
4. 6-418
5. 6-408
6. 6-412
7. 6-418
8. ச. ம. மோ. த். 2-41.

சிறு வயதினளாக இருக்கும் பெண்களை விலைக்கு வாங்கிக்[9] கோவிலுக்குப் பொட்டுக் கட்டச் செய்வதுண்டு என்றும், அன்னோர் பிறஇடங் களுக்கு மாற்றப் பெறுவர் என்றும் தெரியவருகிறது. இரண்டாம் சரபோஜி காலத்தில் வீரலக்ஷ்மி என்ற ஒரு தேவதாசி இருந்தாள். அவளுக்கு நான்கு பெண்கள் இருந்தனர். அந்நால்வரையும் 'கிரயப்படுத்தி'ச் சரபேந்திரராச பட்டணத்தில் இருந்த சிதம்பரேசுவர சுவாமிக்குப் பொட்டுக் கட்டி ஒருவருக்கு 5 பணம் இரண்டு கலம் நெல் சம்பளம் ஏற்படுத்தினர். கணக்கில் "வீரலக்ஷ்மி வகையறா ஐவர்" என்று கண்டிருந்தது. சரபோஜிக்குப் பிறகு சிவாஜி காலத்தில் சில ஆண்டுகள் சரபேந்திரராச பட்டணக் கணக்கில் "சிவங்கிக் கோட்டையில்" சம்பளம் பெற்றனர். ஏறத்தாழ 1840இல் இந்து ஐந்து பேரையும் பெயர்கண்டு "சங்கீத பதக்கில்" எழுதினர். அங்குச் சிலநாள் சம்பளம் பெற்றனர். பின் ஏறத்தாழ 1845இல் "கச்சேரியில்" இவர்கள் பெயர் பதிய வைக்கப்பெற்றன. அங்குச் சில ஆண்டுகள் சம்பளம் வாங்கினர். சிவாஜி காலம் ஆனார். அரண்மனையாரவர்கள் இவர்களின் சம்பளத்தை நிறுத்திவிட்டனர்.[10] (பின்னர் நிலுவை தரப்பெற்றது).

இச் செய்திகளால் ஒரு தாய் தன் குழந்தைகளோடு விற்பனைக்கு உட்பட்டுத் தேவதாசியாகித் தொண்டுபுரிவதுடன், எந்த இடத்துக்கு மாற்றம் செய்த போதிலும் செல்வதுண்டு என்பது உறுதியாக அறியப்பெறும். உடன் பிறப்பினராய நால்வரையும் பிரிக்காமல் ஓரிடத்துக்கே மாற்றியது குறிப்பிடத் தக்கது ஆகும்.

ஒரு கோயிலிலிருக்கும் தாசி வேறொரு கோயிலுக்குப் பொட்டுக் கட்டிக் கொள்ள அனுமதி தருவதும் உண்டு. காமாட்சியம்மன் கோயில் தாசிகள் குளிவாய் (வயது 12) கம்பாலயம் (வயது 10) ஆகிய இருவரும் தஞ்சைப் பெரிய கோயிலில் பொட்டுக் கட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.[11] இது 1882இல் நடைபெற்றது.

கோயிலுக்குப் பொட்டுக் கட்டிக் கொள்ளச் சர்க்கார் அல்லது கோயிலார் அனுமதி தேவை. இஃது ஓர் அலுவல் ஆகையால் அனுமதி தேவைப்பட்டது போலும்.

கோட்டையில் எல்லையம்மன் கோயில் தெருவில் பெரிய கோயில் நாட்டியப் பெண் ஒருத்தியிருந்தாள். அவளுக்குக் கிருஷ்ணா என்ற ஒரே பெண்

---

9. "Another witness stated that dancing girls when they grow old, **obtain girls** and bring them up to follow their profession and that good looking girls are generally bought" ( - Indian Law reports, Madras Series XXIII, 1900 ) F. N. No. 17 of Castes and Tribes in South India by Edgar Thurston & K. Rangachari, Vol II C to J; Cosmo Publications 1909, reprinted 1975 ( - Devadasi).

10. 7-690 முதல் 696 வரை

11. ச, ம, மோ. த. 6-19

இருந்தாள். அப்பெண்ணைக் கோயிலுக்குப் பொட்டுக் கட்ட இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். கோயிலில் உள்ளவர் காலதாமதம் செய்தனர். அதனால் அவள் அரசனிடம் முறையிட்டாள். கோயிலில் இல்லாமற் போனாலும் அரசாங்கத்தில் வேறு எந்தத் துறையிலாவது பொட்டுக் கட்டவேண்டும் என்று வேண்டினாள். இதனால் தேவதாசிகளைக் கோவிலில் மட்டும் அன்றிப் பிற அரசாங்கத்துறைகளிலும் பொட்டுக்கட்டி அழைத்துக் கொள்வதுண்டு என்பது தெரிகிறது.[12] ஒவ்வொரு துறையின் மேற்பார்வையில் ஏதாவது ஒரு கோயில் இருக்கலாம்; அங்குப் பொட்டுக் கட்டுவர் என்று ஊகித்தறியலாம்.

கோயிலில் பணிவிடைக்குத் தடை நேராவண்ணம் ஒரு தேவதாசி போனதும் உடனே வேறொருவரை நியமிப்பர்.

"1843: சரபேந்திர ராச பட்டணம் தாசி வீர லக்ஷ்மி இறந்தாள். அவட்குப் பதிலாக நீலாவின் பெண் வெங்கட லக்ஷ்மி வயது 15 சேர்த்துக் கொள்ளப்பட்டாள்"

— இங்ஙனம் உள்ளது ஓர் ஆவணக்குறிப்பு.[13]

தேவதாசிகள் நாட்டியம் முதலிய கலைகளில் வல்ல கலைஞர் ஆக இருந்தபோதிலும் அவர்களுக்கும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.[14]

தாசிகள் சில நகைகள் அணிதல் கூடாது. சில வகையான ஆடைகளை உடுத்தல் கூடாது என்று ஒரு குறிப்பு உள்ளது:

"சந்திரமா, பரங்கப்பட்டா, கல்லிழைத்த ராக்கடி, பேசிர், மகரகண்டி, 5 கலசமுள்ள ஜிமிக்கி, காதுபட்டை, வெள்ளிகத்தி, விருவதி அணியலாகாது. பூராக்கடி ஹாரங்களுக்குக் கிளி எலுமிச்சை பஞ்சாபட்டை வகையறாக்கள் கூடாது. நெற்றியில் நீளமாகக் குங்குமம் இடலாகாது. மத்தாப்பு நிறமுள்ள ரவிக்கை புடவைகள், ஜாலராக்கள், குசும்பா புடைவைகள், வெள்ளை துப்பட்டா, கைஉருமாலை, வேலை செய்த நாடா, மோதிரம் ஆகியவை அணியலாகாது. இவைகள் எல்லாம் பொட்டுக்கட்டும்போது மாத்திரம் போட்டுக் கொள்ளலாம்"[15]

— இங்ஙனம் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும் **தேவதாசி சுந்தரி** என்பாளுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்பெற்றன என்பது "நாடகம் நாட்டியம்" என்ற தலைப்பில் எழுதப்பெற்றுள்ளன.[16] ஆண்டுக் காண்க.[16அ]

---

12, ச. ம. மோ. த. 22-24. 13. ச. ம. மோ. த. 4-6

14. 9-8 இசை நாடகம் நாட்டியம் என்ற தலைப்பில் அடிக்குறிப்பு 178க்கு உரியது காண்க.

15. ச. ம, மோ. த. 8-48 16. 9-5, 7, 8, 9 16அ. இசை நாடகம் நாட்டியம் என்ற 16ஆவது கட்டுரை அடிக்குறிப்பு 175, 176, 177, 178க்குரியவை,

5—8—1825; ரெஸிடெண்டு ஆற்றுப் பெருக்கைக் காண்பதற்கு ஹௌதாவில் வீற்றிருந்து செல்கிறார்; தேவதாசி 'அங்கு' என்பவளின் மகள் "நாகூ" என்பவள் வண்டியில் உட்கார்ந்து வருகிறாள். எதிரில் வந்த நாகூ இருந்த வண்டியை வண்டிக்காரன் ஓரமாக ஓட்டாமல் ரெஸிடெண்டு துரைக்கு எதிரே கொண்டுவந்தான். இக்குற்றத்துக்காக நாகுவிற்கு ஒரு சக்கரம் 2 பணம் அபராதம் விதிக்கப்பட்டது[17] இங்ஙனம் தாசிகட்குத் தண்டனை விதிக்கப்பட்டதுமுண்டு.

சில தேவதாசிகள் சிலரால் துன்புறுத்தப்பட்ட செய்திகளும் தெரிய வருகின்றன. அவ்வமயங்களில் அன்னோர் அரசின் ஆதரவைத் தேடி அலைந்தனர். பிறருடைய கெட்ட நடத்தையினால் தேவதாசிகள் தொல்லைக்குள்ளானார்கள் என்பது அவ்வாவணங்களால் அறியப்பெறும்:

"கோட்டைக்குள் மேலவீதி கொங்கணேசுவரசுவாமி கோவிலுக்கு அடுத்த சந்திலிருக்கும் ராவ் சாயபு அவர்கள் என் வீட்டுக்கு வரத்துப் போக்காயிருந்தார். இப்படியிருக்க ஷெயார் நாளடைவில் நடக்கப்பட்ட நடவடிக்கை எனக்குச் சம்மதம் இல்லாததினால் நான் வரவேண்டாம் என்று சொன்னதைப்பற்றி ஷெ ராவ் சாகேபு என்பவர் நான் கோவிலுக்கு வரும்போதும் அடித்துத் தொந்தரவு செய்ததைப்பற்றி அமீனா அவர்களிடத்துச் சொல்லிக்கொண்டதற்கு அமீனா அவர்கள் சேவகனை என்கூட அனுப்புவித்ததின்பேரில் அப்பால் என்கூட சேவகனும் இருக்கும்போது ராவ் சாகேபு கற்களால் அடித்துத் தொந்தரவு செய்தார் ................. 17—2—1846"[18]

— இங்ஙனம் தொல்லைக்கு உள்ளானவர்களும் உண்டு.

பெண்களை விலைக்கு வாங்கித் தாசிகளாக ஆக்கியதோடன்றிச் சிலரை வேலைக்காரிகளாவும் ஆக்கியுள்ளனர். இங்ஙனம் விலைக்கு வாங்கப் பெற்றவர் அடிமைகள் போல் – அடிமைகளாகவே இருந்து தம்மை விலைக்கு வாங்கியவரிடத்தில் ஆயுள் முழுவதும் வேலை செய்து மடிந்தனர்.

வெள்ளையரும் இவ் அடிமை வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது,

"சென்னையிலிருந்து லாட் பிகட் 16 பெண்களைத் தஞ்சாவூருக்கு அனுப்பினார்"

என்ற ஆவணக்குறிப்பினால் அறியப்பெறும். குழந்தைகளாக இருக்கும் பொழுதே விலைக்கு வாங்கிவிடுவர் போலும்.

(1776) "ஹுஜூர் குழந்தையை வாங்கினதற்குப் பரங்கிப்பேட்டை வராகன் 8"

என்ற குறிப்பு[19] இதற்கு ஆதரவாக உள்ளது.

---

17. 1-268 18. 6-402, 408 19. 2-141

கி. பி. 1814இல் மதுரையைச் சேர்ந்த கள்ளிக்கோட்டை கள்ளர் சாதி அங்காளி என்பவளின் மூன்று மாதத்துக்குழந்தையைக் குழந்தைக்காக 5 சக்கரம், புடவைக்காக 1 சக்கரம் கொடுத்துத் தஞ்சாவூர் ஃபகீர் மகமத் சமுத்வான் வாங்கி உள்ளார்.[20] ஃபகீர் முகமத் வாங்கியது, சமயமாற்றம் செய்வதற்காக இருக்கலாமோ என்று ஐயப்படுதற்கு ஏதுவாகும்.

கி. பி. 1785இல் திருமுல்லைவாசல் மாரியம்மன் கோயில் தெரு செவதாயி என்பவள் தன் உடன்பிறந்தான் பெண்ணைத் தரங்கம்பாடி வெள்ளைக் காரன் உஸ்மானுக்கு விற்றுவிட்டாள். 6 சக்கரம் 1 பணம் கொடுக்கப்பட்டது. கம்பெனி முத்திரைக் காகிதத்தில் எழுதிக்கொண்டு, பாதிரி கோயிலுக்கு அழைத்துச் சென்று "ஞானஸ்நானம் செய்வித்து வேதம் சொல்லித் தம் மதத்தில் சேர்த்துக் கொண்டார்; தம் வீட்டுப் பையனுக்குத் திருமணம் செய்விக்கலாம் என்ற 4 ஆண்டுகள் வளர்த்தார்; நகை முதலியன போட்டார். ஆனால் அந்தப் பெண் ஓடிப்போய் விட்டாள். எனினும் சீகாழியில் பிடிபட்டாள்"[21]

— இச்செய்தியால் சமய மாற்றம் செய்யவும் பெண்களை விலைக்கு வாங்கினர் என்பது உறுதிப்படும்.

கோட்டைக்கு வெளியே குடியிருக்கும் வெள்ளாளத்தி நல்லத்தாய் என்பவளின் கருமை நிறம் பொருந்திய 9 மாதப் பெண் குழந்தையை ஐய வாசல் (கீழவாசல்) கடையில் வெள்ளாளன் வேலாயுதம் என்பவன் 27பணத்க்கு வாங்கினான். இதற்குக் கொத்தவால் சாக்ஷி போட்டுக் கொடுத்தான்[22]

— இதனாலும் இதற்கு முன் சொல்லப்பட்ட விற்பனைச் செய்தியாலும் விலைக்கு வாங்கும்பொழுது முத்திரைக் காகிதத்தில் எழுதிக் கையொப்பம் பெறும் வழக்காறும் தெரியவருகிறது.[23]

பெண்களை அடைமானம் வாங்கிப் பின் விற்கும் வியாபாரமும் நடை பெற்று வந்ததாகத் தோன்றுகிறது.

புதுக்கோட்டையைச் சேர்ந்தவர் சிலம்பாயி; இவருக்கு 9 வயது மகள் ரங்காயி. இவர்களைத் தாசி விசாலாட்சி என்பாள் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். சிலம்பாயிக்கு 3½ ரூபாய்க்கு ஒரு சேலை எடுத்துக் கொடுத்துப் பிள்ளையைத் தன்னிடம் இருக்கச்செய்து, "ரூ. 3½ கொடுத்துவிட்டுப் பிள்ளையை அழைத்துச் செல்லலாம்" என்றாள். சின்னாட்பின்னர்ச் சிலம்பாயி ரூ. 3½ கொடுத்துவிட்டுத் தன் மகளை அனுப்புமாறு கேட்டாள். இதற்கிடையில் தாசி விசாலாட்சி, ரங்காயி என்ற அந்தப்பெண்ணைச் சர்க்காருக்கு 400 ரூபாய்க்கு விற்றுவிட்டாள். ஆகவே சிலம்பாயி ரெஸிடெண்டிடம் மனுச் செய்து கொண்டாள்.

---

20. ச. ம. மோ. த. 2–16
21. ச. ம. மோ. த, 6–46
22. 5–294, 295
23. ச. ம. மோ. த. 8–13

இதனால் பெண்களை அடைமானமாக வாங்கிப் பின் அவர்களை விற்றலாகிய செய்தியும் பெறப்படும். இது நிலங்களை ஒற்றி வைத்துப் பணம் பெறுவது போன்ற செயலுக்கு ஒப்பாக உள்ளது.

குறைந்த வயதுடைய பெண்களையே விற்றல் வாங்கல் நடைபெற்றுள்ளன என்பது பின்வருவனவற்றால் நன்கு அறியப்படும் :[23]

" சிதம்பரம் பிள்ளை அலிகானா சந்திலிருக்கும் வெள்ளாளர் அப்பு பிள்ளை **பெண்சாதியின் பெண்** காவேரி – வயது 12 – கிரயம் 10 சக் ".

" அப்பூராவ் காடிகே **வைப்பாட்டி லெக்ஷ்மியின் பெண்** சீதாபாயின் வயது 10 சர்க்காரில் விலைக்கு வாங்கினது. "

" நாடகசாலையில் கிருஷ்ணாவின் பெண் செல்லம் – வயது 10 சர்க்காரில் கிரயம் சக். 10 – **எழுதியவாத்தியாருக்கு 2 பணம்** "

" சுப்பராய பிள்ளை **பெண்சாதியின் சகோதரி** கருப்பாயி–வயது 11 – கிரயம் 35 சக். – எழுத்துக்கூலி 2 பணம் "

— இவற்றால் சொந்த மனைவிக்குப் பிறந்த மகளையும், வைப்பாட்டியின் மகளையும், மனைவியின் உடன்பிறப்புக்களையும் விற்றனர் எனத் தெரிகிறது.

முஸ்லீம்களும் சர்க்காருக்குத் தம் பெண் குழந்தையை விற்றமைக்குப் பின்வருவது சான்றாகும் :–

" இப்ராம் ஸாதான் வளர்த்துவந்த துலுக்கப் பெண் ஹமீன்ஷா – வயது 6 – சர்க்காரிலே கிரயம் சக் 6."

வீட்டில் பெற்றோர் இல்லாத நேரத்தில் பெண்களைப் பிடித்துக் கொண்டு போய் அரண்மனைக்கு விற்றதாகவும் ஓராவணத் தகவல் உண்டு.[24]

இங்ஙனம் செய்தமை அரண்மனை மாதரசிகளுக்குப் பணிவிடை அல்லது வேலைகள் செய்வதற்காகவேயாம் என்று ஊகித்தறியலாம்.[25]

" புதிய கல்யாண மகாலுக்கு வாங்கிய பெண்களில் 25 பேர்களை அவரவர்களிடம் இருந்த தஸ்தாவேஜிகளை வாங்கி ஆஸாமிக்கு 3 வாங்கி வெளியே விட்டார் "[26]

என்ற குறிப்பு, அங்ஙனம் விலைக்கு வாங்கப்பெற்ற பெண்களை மீண்டும் விடுதலை செய்தார்கள் என்பதற்குச் சான்றாகும்.

கல்யாணம் ஆன பெண்களையும் விலைக்கு வாங்கியதாக ஓர் ஆவணம் கூறுகிறது. இது 1842 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 10ஆம் நாள்

23. ச. ம. மோ. த. 3–13    24. 6–876    25. 5–229 (?)    26. 1–200

சென்னைக் கவர்னர் லார்ட் எல்ஃபின்ஸ்டன் என்பவரிடத்தில் கொடுத்த " பிராது " ஆகும்.[27]

சித்தூர் மாவட்டம் வேலூர்க் கோட்டையில் இருந்தவன் சோலையா. இவன் மகன் கும்பகோணம் சபாபதியாபிள்ளை. இவன் கும்பகோணத்தி லிருந்தபோது ஏறத்தாழ 1831இல் திருவையாற்றுக்கு வந்தான். அங்குப் பெரிய நாயக் கொத்தன் என்பவன் கள்ளச் சாதியைச் சேர்ந்தவன் – வேளாளன் என்று கூறிக் கொண்டு, தன் மகள் மீனாட்சி என்பவளைச் சபாபதியா பிள்ளைக்கு மணம் செய்து கொடுப்பதாகக் கூறினான். சபாபதியாபிள்ளை $21\frac{1}{4}$ ரூபா பரிசம் கொடுத்து ரூ. 100 வரையில் செலவு செய்து கல்யாணம் செய்து கொண்டான். இரண்டாண்டுகள் மாமனார் வீட்டிலேயே இருந்தான். பின்னர் வேலூருக்கு வேலை தேடிச் சென்றான். செல்லுங்கால் தன் மனைவியை உடன் அனுப்புமாறு சொன்னான். அப்பொழுது அந்த மீனாட்சிக்கு வயது ஏழு. ஆகவே அவள் பெரியவள் ஆனபின்பு அனுப்புவதாகப் பெண்ணின் தந்தை கூறினான். சபாபதியாபிள்ளை வேலூரில் $3\frac{1}{2}$ ரூ. சம்பளத்தில் அமர்ந்தான். சில ஆண்டுகள் கழிந்தன. திருவையாற்றிலிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை. அப்போது **கண்டியராஜா அவர்களின் தாய் தஞ்சைக்கு வந்தார்**. அந்தச் சவாரியில் சபாபதியாபிள்ளை வந்தான்; திருவையாற்றுக்குத் தன் மனைவியை 1842 ஜூலை மாசத்தில் பார்க்கச் சென்றான்; அவள் தஞ்சையில் அரண்மனைக்கு விற்கப்பட்டாள் என்றும், **ஆனந்தவல்லி என்று பெயர் மாற்றம்** செய்யப்பட்டாள் என்றும் சொல்லப் பெற்றான். ரெஸிடெண்டு N. W. கிஸ்டர்ஸிலி துரையினிடத்தில் " பிராது " கொடுத்தான். துரை அப்பெண்ணை விடுதலை செய்யாமல் கும்பினிக்குப் பிராது செய்துகொள்ளச் சொன்னார். அதன்படி சென்னைக் கவர்னரிடம் 10—8—1842இல் பிராது கொடுத்தான்.

30—8—1842இல் அரசாங்கத்தார் இதில் தலையிடுவதற்கு இல்லை என்று பதில் வந்தது.

இச்செய்தியினின்று திருமணம் செய்தவரராய் இருந்தபோதிலும் " மைனர் " பெண் ஆகையால் அந்தப் பெண்ணைத் தந்தையானவன் விற்றுவிட்டான். அரசும் தடை செய்யவில்லை என்பது பெறப்படும்.

27. 6–388 முதல் 389 முடிய.

# 23

# கல்யாண மகால் - மங்கள விலாஸ் - அக்காமார்

## கல்யாண மகால்

இரண்டாம் சிவாஜி இறந்த பிறகு ரெஸிடெண்டும் சிரஸ்தேதாரும் ஒரு நாள் அரண்மனையைப் பார்க்க வந்தார்கள்.[1] ஆவுசாயேபுடன் பேசி விட்டுப் புறப்பட்டபொழுது, "அஞ்சு அங்கணத்தின் மாடி"யைப் பார்த்து, "இந்த மாடியைக் கட்டியது யார்? அங்கு யார் இருக்கின்றனர்?" என்று அவர்களுள் ஒருவராகிய ரெஸிடெண்டு வினவினார். அவற்றுக்கு விடையாக, "அந்த மாடியைச் சரபோஜி கட்டினார்; அங்கே கல்யாண மகால் மங்களவாஸம் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள்" என்று கூறினர்.[2] "அந்தப் பெண்களெல்லாம் தாசிகளா?" என்று ரெஸிடெண்டு வினவச் சிரஸ்தேதார், "அவர்கள் மானத்துடனும் கௌரவத்துடனும் ஒரே புருஷனிடத்தில் இருப்பவர்; புருஷனுக்குப் பின்னர்ப் பிழைத்திருக்கும் வரையில் வெளியில் போகாமல் புருஷன் இறந்தபின்பு பெண்கள் இருக்க வேண்டிய முறைப்படி இருப்பார்கள்" என்று கூறினார்.[3]

இரண்டாம் சரபோஜியின் காமக்கிழத்தியர்கள் தங்கியிருந்த இடம் "கல்யாண மகால்" எனப்பெற்றது.[3அ] இது கி. பி. 1824இல் அமைக்கப் பெற்றது. இரண்டாம் சரபோஜி கைலாஸவாஸி ஆனபொழுது கலியாண மகாலில் 24பேர் இருந்தனர் என்று தெரிகிறது. அவர்களுக்காக நிலமும் பணமும் ஒதுக்கிவைக்கப்பெற்றன.[4] கல்யாணமகாலைச் சேர்ந்தவர்களாக

---

1. 4-119 2. 4-180 3. 4-181

3அ. " It (Kalyana Mahal) is said to be the residence of the concubines of of Serfoji " - P. 6, Deposition of W21 (O. S. No 26 of 1912)

4. தஞ்சை ஜில்லா மானுவல், பக்கம் 826 – 827

லாடு பாய், பாயம்மா பாய் என்றிருவர் குறிக்கப்பெறுகின்றனர். இவர்கள் 1828இல் ரூ. 10,000 (சர்க்காருக்கு) 3 வட்டி வீதம் கடன் கொடுத்தனர்.[4அ] லாடு பாய், சரபோஜி இறந்தபிறகும் கி. பி. 1836இல் குறிக்கப்பெறுகிறார்:—

"கல்யாண மகால் – துலா காவேரி ஸ்நானம் – கடைமுழுக்கு – தான தருமத்துக்கு லாடு பாயி அக்காவுக்கு ரூ. 25 கொடுக்கப்பட்டது. பாயிமார் 23க்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 15 வீதம் 545 கொடுக்கப்பட்டது"

என்ற குறிப்பால்[5] லாடுபாயுடன் மேலும் 23பேர் இருந்தனர் என்பது தெரிய வரும்.

மேற்குறித்த பாயிமார்களில் சிலர் உபதேசம் பெற்றனர் என்று ஓராவணக்குறிப்புள்ளது.[5அ] அவர்கள் பெயர் பின்வருமாறு:—

கண்டகிபாயி; சரசுவதிபாயி; நர்மதாபாயி; கோதாவரிபாயி; சுப்பாபாயி காமாட்சிபாயி; கிரிபாயி; பவானிபாயி; சாவித்திரிபாயி; சோணபத்ராபாயி; சுவர்ணரேகாபாயி; அருந்ததிபாயி; திரிவேணிபாயி.

பலவகை நாணயங்கள் சர்க்காரில் சேமித்து வைக்கப்பட்டன. அவற்றின் பெயர் விவரம் மட்டும் ஓர் ஆவணத்தில் உள்ளது.[6] அவை கல்யாண மகாலில் வைக்கப்பெற்றிருந்தனவாதல் வேண்டும் என்பது "கல்யாணமகாலில் நாணயவாரி" என்ற குறிப்பால் அறியலாம்.

## மங்கள விலாஸ்

இரண்டாம் சிவாஜியின் காமக்கிழத்தியர் பலர் ஆவர்; அவர்கள் மங்களவாசம் அல்லது மங்களவிலாஸ்[7] என்ற பெயரால் குறிக்கப்பெற்றனர். இரண்டாம் சிவாஜி இறந்தபொழுது மங்களவிலாஸ் "சத்மத்தில்" 42 பேரும் அவர்களுக்கு பிறந்த 5 ஆண் குழந்தைகளும் 11 பெண் குழந்தைகளும் இருந்தனர் என்று தெரிகிறது.[8]

"மங்களவாசத்தில் எத்தனைப் பேர் இருக்கிறார்கள்?" என்று ரெஸிடெண்டு கேட்டபொழுது, "மங்களவாசத்தார் 42 பேர்கள்; அவர்கள்

---

4அ. 4-424, 427 5. ச. ம. மோ. த. 8-26 5அ. ச. ம. மோ. த. 8-3 6. 7-569

7. "Sivaji had a large seraglio to which he gave the name of Mangala Vilas and which at the time of his death contained 60 women and with 17 children born among them" – P. 828, Tanjore Dt. Manual

8. Page L xxxvii, para 14 : "The persons who are included by Mr. Phillips in his list A of the immediate family are ...... 9. The late Rajah Sevajee's seraglio in number 59 persons including apparently 6 natural sons and 11 natural daughters of the Rajah" – Hickey – The Maratha Principality – Appendix (1874)

ஹுஜூர் மகாலிலும் ஐன் ( அசல் ) மகாலிலும் இருபாகமாக வாழ்கிறார்கள்" என்று விடை தரப்பெற்றது.[9]

மங்களவாசத்தில் இருந்தவர்களின் பெயர்கள் ஈரிடங்களில் கூறப் பட்டுள்ளன. ஓரிடத்தில் அம்மாமார் பெயர் என்று முப்பத்தெண்மர் பெயரும்,[10] பிறிதோராவணத்தில் நாற்பத்தொருவர் பெயரும்[11] கொடுக்கப் பெற்றுள்ளன. இவ்விரு ஆவணங்களை ஒப்பிட்டு நோக்குங்கால் ஓரிரு பெயர்கள் பொருந்து மாறில்லை.

"அக்டோபர் 1862; தஞ்சாவூர் ஆக்டிங் கவர்ன்மெண்டு ஏஜெண்டு ஜி. எல். மாரிஸ் எஸ்கொயர் இவர்களுக்கு ஸ்ரீமந் மங்களவாச சத்மத்தின் மாதோஸ்ரீ கிருஷ்ணபாயி பெரிய அம்மா அவர்கள் எழுதிக்கொடுத்த இரசீது: ஹானரபிள் கவர்ன்மெண்ட் நமக்குச் செய்துகொடுத்த மொயின் மாதவாரி ரூ. 150 பிரகாரம் மேற்கண்ட வருடம் ஜூலை ஆகஸ்ட் செப்டம்பர் மாதம் வரையில் ரூ. 450 நம் காரியஸ்தர் கோபாலஸ்வாமி இவர்கள் தரப்பில் தங்கள் ஆபீஸில் நாங்கள் ரொக்கமாகப் பெற்றுக் கொண்டவகையில் எழுதிக் கொடுத்த இரசீது" என்பதால்[12] இரண்டாம் சிவாஜி இறந்தபிறகு மங்கள விலாஸ் மாதரார் ஒவ்வொருவருக்கும் திங்களொன்றுக்கு ரூ. 150 வீதம் உதவித்தொகை கொடுக்கப் பெற்றது என்பது போதரும். மங்கள விலாஸத்தில் இருந்தவர் களுக்குக் கொடுக்கப்பெற்ற உதவித்தொகை பின்வருமாறு:—[13]

| | | | |
|---|---|---|---|
| '40 | மங்கள விலாஸ் மாதர்களுக்குத் தலைக்கு | | ரூ. 150 |
| 2 | ,, ,, | ,, | ரூ. 70[13அ] |
| 2 | ஆண் குழந்தைகள் (தாயிலிகள்) | ,, | ரூ. 100 |
| 4 | ஆண் குழந்தைகள் (தாயுள்ளவர்) | " | ரூ. 35 |
| 2 | பெண் குழந்தைகள் (தாயிலிகள்) | ,, | ரூ. 70 |
| 7 | பெண் குழந்தைகள் (தாயுள்ளவர்) | ,, | ரூ. 35." |

9. 4-165; "Half remained in Ayan Mahal and the other half in the Huzur Mahal within the palace" - P. 25, Deposition of Yogambal ( aged 86 on 15—2—1916 ), O. S. No. 26 of 1912. "There is a building called 'Mangala vilas' in the south street. The daughters and children of these ladies live there" — Page 6, Deposition of Rengaswami Madhikai Row O. S. 26 of 1912.

10. 6-400, 401 11. 6-485, 486, 487 12. ச. ம. மோ. த. 25-9

13. Para 71, Tanjore Dt. Manual, Part V, chap. IV

13அ. ரூ. 70 வீதம் உதவித்தொகை பெற்றவர் தாசிகள் போலும் "The names of Dancing girls are Hira and Komalam. They were included as Mangala Vilas Ladies. They had pension of 70 Rs. each" - Deposition of Ramachandra Rao - D. W. 32, p. 266, O. S. 26 of 1912

"1862: தஞ்சாவூர் ஆக்டிங் கவர்ன்மெண்டு ஏஜெண்டு ஜி. எஸ். மாரிஸ் அவர்களுக்கு மாதோஸ்ரீ கோரி லக்ஷ்மிபாயி அம்மா, ஹானரபிள் கவர்னர் செய்து கொடுத்த மொயின் மாதம் ரூ. 150 வீதம் காரியஸ்தர் கோபால ஸ்வாமி மோஹிதே இவர்களின் மூலம் பெற்றுக்கொண்ட வகையில் இரசீது" என்ற குறிப்பினால்[14] மங்கள விலாஸ மாதரார் ஒவ்வொருவருக்கும் திங்கள் 1க்கு ரூ. 150 வீதம் அளிக்கப்பெற்று வந்தமை உறுதி எய்தும்.

மங்கள விலாஸ மாதராருக்கு உதவியாகச் சில அலுவலாளர்கள் இருந்தனர் என்பது மேற்கண்ட "காரியஸ்தர் கோபாலசாமி மூலம் பெற்றுக் கொண்டேன்" என்றமையால் அறியவரும். ஓர் ஆவணத்தில்,[15]

"மிமோ மங்கள விலாஸம் காரியஸ்தர்களுடையவும் அம்மாமார் களுடையவும் பெயர்" என்று குறிப்பெழுதிக் "காரியஸ்தர்கள்" பதினால்வர் பெயர் தரப்பட்டுள்ளது. இதன்கண் அம்மாமார்கள் என்பது மங்கள விலாஸ் மாதர்களைக் குறிக்கும். அவர்களைப் "பாயி" என்றும் "அம்மா" என்றும் வழங்குவதுண்டு.[16]

மங்களவாஸ மாதரார் சிலருக்குக் குழந்தைகள் இருந்தனர். கி. பி. 1848இல் இருந்த மங்கள விலாஸம் குழந்தைகள் பின்கண்டவர்களின் பெயர் தரப்பெற்றுள்ளது:[17]

| | |
|---|---|
| விஜய சதானந்தஜி[17அ] | விஜய காமானந்தஜி[17அ] |
| விஜய வீர்யானந்தஜி | விஜய மோகானந்தஜி |
| விஜய வரதானந்தஜி[17அ] | விஜய நாகானந்தஜி |
| விஜ யீஸ்வரீ பாயி | விஜய நந்தம் பாயி |
| விஜய சம்வர்த்தனி பாயி | விஜய ஸ்ரீநாயகீ பாயி |
| விஜய ஸ்ரீராம் பாயி | விஜய வரதாம்பா பாயி |
| விஜய வரதவல்லி பாயி | விஜய சித்தவல்லி பாயி |

மேலும் சில ஆவணக்குறிப்புக்களில் இப்பெயர்களோடு வேறு பெயர் களும் காணப்படுகின்றன; ஓரிரு பெயர்கள் விடுபட்டுள்ளன.[18] ஒவ்வொரு குழந்தையின் பெயருக்கும் "விஜய" என்ற அடைமொழி கொடுக்கப்

14. ச. ம. மோ. த. 25-25 15. 6-899

16. The Mangala Vilas ladies were described as "Boi" and "Ammal" – p. 266, Deposition of Ramachandra Rao – D. W. 32 in the Subordinate Judge's Court, Tanjore, dated 28—9—1916; O S. No. 26 of 1912

17. ச. ம. மோ. த. 8-19 17அ. இவர்கட்கும் மேலும் சிலருக்கும் ஆசிரியராகத் திகழ்ந்தவர் ராமச்சந்திர ராவ் – D. W. 32, Deposition, p. 266

18. ச. ம. மோ. த. 8-19

பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மங்கள விலாஸ் குழந்தைகட்கு "விஜய ராஜேஸ்ரீ" என்று குறிப்பது அந்நாளைய வழக்கு.[19]

மங்கள விலாஸ மாதராருக்குப் பிறந்த குழந்தைகளுக்கு "ஜாதகர்மம் நாமகரணம் சூர்யாவலோகனம்[19அ] அன்னப் பிராசனம்" முதலிய சடங்குகள் நடைபெறுவதுண்டு. 1848இல் பார்வதீபாயி சத்யபாமாபாயி ஆகியோர்க்குக் குழந்தைகள் பிறந்தபொழுது "புண்னியாவாசனம் முடிந்ததும் ஆவு சாயேப் சௌ. சைதம்பா பாயி சாயேபு இவர்களுக்கு நமஸ்காரம் செய்துவிட்டுச் சுவாமிக்கு நமஸ்காரம் செய்து தங்கம் வெள்ளி புஷ்பங்கள் போட்டார்கள்; பாக்யலக்ஷ்மி பாயி, கிருஷ்ணா பாயி குழந்தைகள் மேற்கண்ட விதம்" என்றுள்ள ஒரு குறிப்பால்[20] எல்லாச் சடங்குகளும் மங்கள விலாஸ மாதராரது குழந்தைகட்கும் நடைபெற்றன என்றறியப்பெறும். ஆனால் மகாராஜா மணையில் உட்கார்ந்து இவற்றை நடத்துவது இல்லை என்று தெரிகிறது.[20அ]

இரண்டாம் சிவாஜி இறந்தபொழுது மங்கள விலாஸ ஆண் குழந்தைகள் மூன்று பேருக்குத் தாயில்லை; மகாராஜாவின் மூத்த மனைவி (காமாட்சியம்பா பாயி) அவர்களின் பொறுப்பிலிருந்தனர்"[21]

ஒரு குறிப்பில் "1850: மங்கள விலாஸ் சாவித்திரி பாயி, கிருஷ்ண பத்ரா பாயி, லக்ஷ்மு பாயி, ஹரிபாயி, பாகிரதி பாயி, சந்திரரேகா பாயி ஹீரா பாயி – 12பேர் மொயின் விபரம்" என்றிருத்தலின்[22] 1850இல் மங்கள விலாச மாதரார் பன்னிருவர் என்றும் பின்னர்ப்பலரும் சேர்க்கப் பெற்றனர் என்றும் தோன்றுகிறது. "மொயின்" என்றமையால் இவர்களுடைய கைச் செலவுகட்குத் தொகை தரப்பட்டமையும் பெறப்படும்.

மங்கள விலாஸத்தில் நகைகள் என்ற தலைப்பில்[23] மங்களவிலாஸ மாதரார் பெயர்கள் மேற்குறிக்கப்பட்டவரின் வேறாக மேலும் பன்னிருவர் பெயர்கள் 1855இல் காணப்படுகின்றன. இதனால் இச் "சத்மத்தில்" அவ்வப் பொழுது சிலரும் சேர்க்கப்படலாயினர் என்பதும் தெரிகிறது.

---

19. "Vijaya Raje Sri is used to Mangala Vilas Children" – p. 342, Deposition of Serfoji Rajah Saheb, D. W, 39 (grandson of Sivaji II); "At the time of Maharajah's death there were female children in Mangala Vilas" – Deposition of Yogambal, 6th witness for 1 & 2 defendents - p. 26

19அ. சூர்யாவலோகனம் என்பதன் பொருள் சூரியனைப் பார்த்தல் என்பதாகும். "Surya avalokanam – looking at the Sun" – Deposition of M. S, Ghantigai, 1st witness for 1 & 2 defendents, O. S. No. 26 of 1912

20. ச. ம. மோ. த. 8–26

20அ. "When Punyahavachanam was performed for Mangala Vilas children the Rajah did not sit but was seated opposite to them" – Deposition of Yogambal A. 7, page 47, O. S. No. 26 of 1912

21. 4–164 22. ச. ம. மோ. த. 8–14 23. ச. ம. மோ. த. 7–10

மங்கள விலாஸத்துச் சாவித்திரி பாய் 1835இல் "தெய்வகதி" அடைந்தார். "ஹுஜூரில் தெரிவித்ததற்கு 100 வராகனுக்கு உத்தரவாகிக் கமாவிசுதார் ஜாக்கிரதை செய்ய வேண்டியது" என்று ஆணையிட்டுப் பிறகு "ஹுஜூர் சவாரி ஆள் மாகாணங்களுடன் 6 நாழிகைக்கு வந்து ராபதாவை எடுக்கச்சொல்லி[23அ] மகாராஜா கூடவந்த ஐந்து பேர்களுடன் உள்ளே போய்ச் சற்று விசனப்பட்டு, பாயிமார்களுக்கும் அக்காமார்களுக்கும் சமாதானம் சொல்லிப் புறப்பட்டுப் போய்விட்டார். பிறகு மேளதாளத்துடன் பல்லக்கில் அரண்மனை ஜனங்களுடன் பாயிமார்களின் சகோதரனால் தகனம் வகையரா செய்யப்பட்டது"

— இவ்வெழுத்துச் சான்றினால்[24] மங்களவிலாஸ மாதரார் இறந்தபடின் அரசர் "சற்று விசனப்பட்டுப் பாயிமார்களுக்கும் அக்காமார்களுக்கும் சமாதானம் சொல்லிச்" செல்வர் என்றும், இறந்தவர்க்கு மகனில்லை எனில் இறந்தவரின் உடன்பிறப்பினர் இறுதிக்கடன்களைச் செய்வர் என்றும், எரிக்கும் இடத்துக்குப் பிணத்துடன் அரசர் செல்ல மாட்டார் என்றும் தெரியவரும்.[25]

மங்கள விலாஸ மாதரார்களின் பெயர் கூறும் ஓராவணத்தில்[26] கையெழுத்திடாதவர் (unsigned) என்று "தங்கதா பாயி அம்மா" என்று ஒரு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் கிறித்தவர் எனத் தெரிகிறது.[27]

இவ்வாவணத்தில் "லக்ஷ்மு அம்மா" என்று ஒருவர் பெயர் காணப் பெறுகிறது. இவர் ஒரு ஐயங்கார் பிராமணப் பெண் என்று சொல்லப் பெறுகிறது.[28] இதில்கண்ட சவுபாக்கிய லட்சுமிபாயி அம்மா என்பவர் "கவரை" சாதியைச் சேர்ந்தவர்.[29] இம்மாதராரின் மகன் விஜய சதானந்தஜி எனப்பட்டார்.[30]

---

23அ. "ராப்தாவை எடுக்கச் சொல்லுதல்" என்பது ஆண்களை வெளியே போகச் சொல்லிக் கதவுகளை மூடுவது; பின்னர்ப் பெண்கள் உள்ளே வருவர் – "The males were sent out and doors closed; this is called ராப்தா எடுக்கிறது and then ladies came to the place" – P. 36, Deposition of Yogambal..

24. ச. ம மோ. த, 4-89

25. "The Maharajah did not accompany the corpse to the cremation ground when Mangala Vilas ladies died" – Deposition of Yogambal, P. 39

26. 6-487

27. "In the Mangala vilas there was a lady by name Thangaththamma and I have heard that she was a Christian" – Deposition of Yogambal, P. 47

28. "There was a lady by name Laxmi Ammal and she was a Brahmin lady of Ayyangar caste" – P. 47, Deposition of Yogambal

29. "Sowbagya Lakshmi ammal, the mother of Vardanandaji was a Kavara" – Deposition of D. W. 32, Ramachandra Row, P. 261,

30. அடிக்குறிப்பு 18க்கு உரியதில் காண்க,

"1865: மங்கள விலாசம் விஜய சதானந்தஜி வகைறாக்கள் 10 பேர் கலியாணம் 1865 ஆகஸ்டு 28 முதல் 31 வரையிலும்"

– என்ற குறிப்பால்[31] அரண்மனையில் சந்திரமௌளீசுவரர் திருக்கோயிலில் மங்கள விலாச மாதரார் பெற்றெடுத்த பிள்ளைகட்குத் திருமணங்கள் நிகழ்த்தப் பெற்றன என்று அறியலாம்.[32]

மங்கள விலாஸக் குழந்தைகளைச் சீரும் சிறப்புமாகவே சிவாஜி வளர்க்கச் செய்தார். இது, "1850: மங்களவிலாசத்தில் புருஷக் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் ஜவுளி நகைகள் முதலியன" என்ற குறிப்பால்[33] உறுதி எய்தும்.

மங்கள விலாஸம் குழந்தைகள் இறந்துபடின் பெரிய அலுவலர் மேற்பார்வையில் இறுதிக்கடன்களைச் செய்விப்பது பழக்கம்.

"மங்களவிலாசத்தில் காசி பாயியின் ஆண் குழந்தை தெய்வகதி யடைந்தது; தகனம் செய்தார்கள்; சர்க்கீல் பண்டிதர் ராஜஸ்ரீ நீல கண்டராவ் ஆனந்தராவ் ஜாதவ் போய் வந்தார். ஷை விஷயமாக 11 பிராமணப் பையன் களுக்குச் சாப்பாடு போடப்பட்டது"

என்ற குறிப்பு[34] மங்கள விலாஸக் குழந்தைகளுக்கு எல்லாச் சடங்குகளும் கண்ணும் கருத்துமாகச் செய்யப்பட்டன என்பதைத் தெரிவிக்கும்.

மங்கள விலாஸத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சமையல் தனியாக நடை பெற்றது. அச்சமையல் செய்யும் வீடு கீழவீதியில் இருந்தது.[35]

மங்கள விலாஸத்தைச் சேர்ந்த நகைகள் பங்கிட்டுக் கொடுக்கும் பொருட்டுச் சர்க்கேல் வீராசாமிப்பிள்ளை ஓர் ஏற்பாடு செய்ததாகத் தெரிகிறது.[36]

மங்கள விலாஸத்தைச் சேர்ந்தவர்களின் செலவுக்கெனச் சில ஊர்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவை சுரோத்திரியம் வடமட்டம் பூங்குடி ஆகிய ஊர்களாம்.[37]

சிவாஜி இறந்துபோனபிறகு மங்கள விலாஸத்தைச் சேர்ந்த மாதரார் ஒழுக்கத்தில் சிலர் குறை கண்டிருக்கிறார்கள். குறைகள் ஏற்பட்டிருத்தல் கூடும். மங்கள விலாஸம் லக்ஷ்மிஅம்மாள் ஐயங்கார் பிராமணப் பெண் ஆவர்.

---

31. ச. ம. மோ. த. 7–27
32. "All the marriages of Mangala Vilas Children used to take place in that temple within the palace" – Deposition of Yogambal, P. 26
33. 1–5
34. ச. ம. மோ. த. 9–27
35. ச. ம, மோ. த. 8–38
36. 6–286, 287
37. 7–878, 879; 6–542.

அவரைப் பற்றித் தஞ்சை ஜில்லா கலெக்டர் எச். எஸ். தாம்ஸன் அவர்களுக்கு முத்துசாமிப் பிள்ளை என்பவர் 2—8—1875இல் கடிதம் எழுதி உள்ளார்.

லக்ஷ்மி அம்மாள் திருவையாறு புஷ்ப மண்டபத் தெருவில் வசித்து வந்தார். அப்பொழுது மங்கள விலாஸ கோவிந்தா பாயியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று தன் தம்பி சீனிவாச ஐயங்காருடன் நட்புக் கொள்ளச் செய்தார். இது தெரிந்து தஞ்சைக்குத் திரும்பிவிடவேண்டும் என்று கலெக்டர் ஆணையிட அவர் பொருட்படுத்தாமல் இருந்தார்; உதவித்தொகை நிறுத்தப் படும் என்றதும் தஞ்சைக்கு வந்துவிட்டார். சீனிவாச அய்யங்கார் இறந்தார்; அவர் வேலைக்குத் திருவேங்கடத்தான் என்பவரை நியமித்துக் கலெக்டருக்கு வக்கீல் வைத்துத் தெரிவித்தனர். கலெக்டர் ஒப்புதல் தரவில்லை. ஸர்க்கேல் வீராசாமிப் பிள்ளை இறந்த பிறகு திருவேங்கடத்தான் லக்ஷ்மி அம்மாள் வீட்டுக்குப் போகத் தொடங்கினார். மறுபடியும் கோவிந்தம்மாள் லக்ஷ்மி அம்மாள் வீட்டில் வந்து தங்கினார். இதைக் கவனிக்கவேண்டும் என்று முத்துசாமிப் பிள்ளை என்பவர் கலெக்டருக்கு எழுதியிருக்கிறார்.[38]

மேலே கண்ட மங்கள விலாஸ மாதரார் இருவரின் தவறான நடத்தை பற்றி ரங்கசாமி நாயகர் 16—8—1876இல் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.[39]

18—9—1876இல் வீறு பிள்ளை என்பவரும் இது பற்றியே ஸர்க்கேல் கோவிந்த ராவுக்கு எழுதியுள்ளார்.[40] மங்கள வாஸம் சோனா பாயி பேரிலும் ஒழுக்கக் குறைவுக்குற்றம் சாற்றி மானேசர் வீராசாமிப்பிள்ளைக்குப் '**பேர் விளங்கான்**' எழுதிக் கொண்ட கடிதம்[41] ஒன்றும் உள்ளது.

## அக்காமார்

பாயி சாயேபுகளின் பணிப்பெண்டிர் "அக்கா கூட்டம்" என்று குறிக்கப்பெற்றனர்.[42] "அவர்கள் சர்க்காரின் பரம்பரையின் குழந்தைகள்."[43] அவர்களுக்குச் சம்பளம் ரூ. 7 அல்லது 8 ரூ. வரையில் தரப்பெற்றது.

1912க்குரிய 26ஆம் எண் அசல் வழக்கு 1916இல் விசாரிக்கப் பெற்ற பொழுது யோகாம்பாள் என்பவர் ஆறாவது சாட்சியாக விசாரிக்கப் பெற்றார். 1916இல் இவர் 85-86 வயதுடையவர். இவர் அக்கா கூட்டத்தைச் சேர்ந்தவர். இவரைப்பற்றிச் செய்திகள் குறிப்பிடும்பொழுது இவருடைய தந்தை பெயர் சுப்பராவ் என்றுள்ளது; கணவன் பெயர் இல்லை; ஆகவே இவர் பதியிலார் ஆதல் கூடும். இங்ஙனமே அக்காமார் யாவரும் பதியிலார் ஆதல்கூடும். அவரைக் குறுக்கு விசாரணை செய்தபொழுது, அக்காமார் தாலி அணிவர்

38. 6-394 முதல் 399 வரை
39. 6-390, 391
40. 6-391 முதல் 394 வரை
41. 6-351
42. 43. 4-154

என்றும், அவர்கள் திருமணம் செய்து கொள்வதில்லை என்றும், தாலியை அணிகலனாகத்தான் அணிவர் என்றும் கூறியுள்ளார்.[44]

மங்கள வாசத்துக்கு அக்காமார் இருந்தமை போலவே கல்யாண மகாலிலும் அக்காமார் இருந்தனர்.

"கலியாண மகாலில் பெரிய அக்கா சின்ன அக்கா பாயிமார் வகைறாக்களுக்கு இப்போது கொடுத்துவரும் ஐவேஜி போதவில்லை என்று அவர்களுடைய காரியஸ்தர்கள் சொன்னதினாலே அடுத்த மாதத்திலிருந்து 225 சக்கரம் அதிகமாகக் கொடுக்கிறது"

என்ற எழுத்துச்சான்றால்[45] கலியாண மகாலிலும் அக்காமார்கள் இருந்தனர் என்பது உறுதியெய்தும்.

அக்காமார்களுக்கு உணவு கல்யாண மகால் அல்லது மங்களவாசச் சமையலிலேயே கிடைக்கும் என்பதும் தெரிகிறது.

பதியிலார் ஆகிய இவர்கள் மகப்பேறுடையவராய் இருந்தனர். இது,

"சௌ வீரம்மா பாயி அக்கா பிரசவித்துக் கொட்டகையினின்று மாடிக்கு வரும் தினத்தன்று வேண்டுதல்படி தெய்வங்கட்குப் பால் அபிஷேகம் பாயஸம் நைவேத்தியம் தேங்காய் பழம் பூஹாரங்கள் அர்ச்சனைக்குத் தங்கம் வெள்ளியில் வில்வதளங்கள் சரபோஜி ராஜா படம் பூசை"

என்பதால்[46] அறியப்பெறும். இதில் வீரம்மா பாயி அக்கா என்பது வீரம்மா பாயி இடம் பணிப்பெண் ஆகிய அக்கா என்பது பொருள் ஆகலாம். மேலும் யோகம்பாள் கொடுத்த வாக்குமூலத்தாலும் அவர்க்குச் சில குழந்தைகள் இருந்தமை பெறப்படும்.

"மங்கள விலாஸம் அக்காக்கள் பாயிமார்களுக்குப் பித்தளைக் குடங்கள் புதிது பேர் வாரியாகக் கொடுத்து எழுதியனுப்புவது"

என்ற ஆணை[47] பணிப்பெண்டிர்க்குப் பணி செய்தற்கு வேண்டியன தரப் பெறுதலைத் தெரிவிக்கும்.

---

44. "Akkamars used to wear Talis. They do not get themselves married. They wear Talis as ornaments" – Deposition of Yogambal, P. 41; "A married woman will not be called Akkal ......... All Akkal's children must be illegitimate because when a child of an Akkal marries she is called Bai – Deposition of M. S. Ghantigai, 1st witness to 1 and 2 defendents, Page 34.

45. ச. ம. மோ. த. 4–88 46, ச. ம. மோ. த. 8–48 47. ச. ம. மோ. த. 9–82

" காசியில் சிவபிரதிஷ்டை செய்த விபரம்: சௌ. பத்மாம்பாயி சாஹேப் பெயரால் ரூ. 1875; ஸ்ரீமங்கள விலாஸம் காசி பாயி அக்கா பெயரால் ரூ. 1875; ஆக ரூ. 3750 "

என்ற குறிப்பு[48] அக்காமார் அறம் செய்யும் சிந்தனையுடையராகவும் தெய்வ பக்தியுடையராகவும் இருந்தமையோடு காசியில் சிவலிங்கத்தை எழுந்தருள் வித்தல் ஆகிய சிவபுண்ணியச் செயல்கள் செய்தமைக்கும் சான்றாக அமையும்.

அக்கா கூட்டங்களின் நகைகள் என்ற தலைப்பில்,

" 1855 : லக்ஷ்மு அக்கா, வீரம்மா அக்கா, ரமா பாயி அக்கா, கிருஷ்ணா பாயி அக்கா, காமு பாயி அக்கா, ஸ்வர்ணவல்லி பாயி அக்கா – இவர்களுடைய நகைகளின் ஜாபிதா "

என்ற குறிப்பு[49] அக்காமார்களும் நகைகளை அணிந்து செழிப்புடனிருந்தனர் ஆதல் பெறப்படும். லக்ஷ்மு அக்கா முதலியன லக்ஷ்மு பாயி ஆகிய மங்கள விலாஸ மாதராரின் பணிப்பெண்டாகிய அக்கா என்று பொருள்படும்.

அக்கா கூட்டமும் அரண்மனையில் சிறப்பிடம் பெற்றுவாழ்ந்தனர் என்பதும் இதனுல் உறுதியெய்தும்.

---

48. ச. ம. மோ. த. 8–40 49. ச. ம. மோ. த. 7–10

# 24

# பழக்க வழக்கங்கள்

## அரச குடும்பத்துக்கு மரியாதை

கி. பி. 1829இல் இரண்டாம் சரபோஜி அரச குடும்பத்துக்கும் மற்றவர்கட்கும் மரியாதை செய்யவேண்டிய முறைபற்றி ஆணை பிறப்பித்திருக்கிறார்.[1]

"ஸ்ரீமந்த் ராஜஸ்ரீ மகாராஜா சத்திரபதி சாயேப், சிரஞ்சீவி இளைய திவான்சாகேப், மாதுஸ்ரீ பாயிசாகேப், சொ. சிரஞ்சீவி மாட்டுப் பெண், மாதுஸ்ரீ பாயிசாகேப் - இவர்கள் ராஜகுடும்பம் என்பது"

என்றமையால் அரசர், இளவரசர், அவர்தம் பட்டத்தரசிகள் மட்டுமே ராஜ குடும்பத்தவர் என்று கருதப்பட்டமை தெளிவாகிறது.

அவர்கள் வெளியே புறப்பட்டால் "சவாரி" தொடங்குவது முதற் கொண்டு மீண்டும் அரண்மனைக்கு வருகிற வரையில் வாத்தியக்காரர்களும் மற்றவர்களும் நேரம் பார்க்காமல் இரவு பகலும் பணிசெய்தல் வேண்டும்.

அரச குடும்பம் தவிர்த்து மற்றையோர் "**ஜோஹார் யந்திரம்**" என்று குறிக்கப்பெறுவர்.

**வாத்தியக்காரர்கள்** காலையில் "கர்காரி **கோஷத்**" துக்குப் பிறகு 2 நாழிகை வரையிலும், மாலையில் 10 நாழிகைக்குப் பிறகு (அதாவது சுமார் 4 மணிக்குப் பிறகு) "சந்தி காலம்" அதாவது பொழுது சாய்கிற வரையிலும் பணி செய்தல் வேண்டும்.

மரியாதைகள் மூன்றுவகை:—

---

1. ச. ம. மோ, த, 6–24 முதல் 28 முடிய

வாத்தியக்காரர்கள் வாத்தியங்களை மேலே தூக்கி மூன்று முறை சுற்றி வாசிக்கும் மரியாதை முதல் மரியாதை; இரண்டு சுற்றுச் சுற்றி வருவது இரண்டாவது மரியாதை; ஒரு சுற்றுச் சுற்றி வருவது மூன்றாவது மரியாதை. — இவற்றைத் தெரிந்து கொள்வது " பாராக்காரர்களது " கடமையாகும்.

அரசரது பெயரர்களுக்கு வாத்தியக்காரர்களும் " பாராக்காரர்களும் " முதல் மரியாதை செய்யவேண்டும்.

ராஜேஸ்ரீ மாப்பிள்ளைகளுக்கு இரண்டாவது அல்லது மூன்றாவது மரியாதை செய்யூலாம்.

சர்க்கேல் மஜூம்தாரிகளுக்கு[2] முதல் மரியாதை.

ஃபவுஜ்தார்[3] களுக்கு முதல் மரியாதை.

தஞ்சாவூர் கில்லேதாருக்கு வாத்தியக்காரர்கள் மூன்றாவது மரியாதை; பாராக்காரர்கள் முதல் மரியாதை.

ஜனங்களின் "மத்யஸ்தர்களு"க்குப் பாராக்கள் முதல் மரியாதை.

மற்ற மகால் மத்யஸ்தர், பங்க்நாயிக், வஜிராத்மா[4] மோஹிதே, போன்ஸ்லே — அரண்மனை அடையாளங்களுடன் வரின் பாராக்கள் இரண்டாவது மரியாதை.

அடையாளமுள்ள சமுத்வான், பாக்வான் இவர்களுக்குப் பாராக்கள் மூன்றாவது மரியாதை.

## காணாமற் போன பொருள்பற்றி

(அரண்மனையில்) பொருள்கள் காணாமற்போனால் அவரவர்களுடைய அஜாக்கிரதையினால் ஏற்பட்டதாகலின், அப்பொருள்களுக்கு அவர்களே பொறுப்பு; ஆகவே அவர்களுடைய சொத்திலும் வருமானத்திலும் ஈடு செய்ய வேண்டும்.

மேலும் மிக்க அஜாக்கிரதையால் பொருள்கள் கெட்டுப்போனால் அதன் மதிப்புக்கு ஏற்பவும் சட்டப்படிக்கும் தண்டனை கொடுத்தல் வேண்டும். உயர்பதவியில் உள்ளவர் ஆனால் அடையாளங்களைப் பறிமுதல் செய்யலாம்;

---

2. மஜூம்தார் – நிலவரிக் கணக்கு எழுதும் பொறுப்புடையோர்
3. ஃபவுஜ்தார் – " Fouj-army; dar-holder. Military Officer of a district. He administered criminal justice too " – Glossary – Administration & Society in the Carnatic – K. Rajayyan.
4. வஜிராத்மா – அரச குடும்பத்தைச் சேர்ந்த பெருமக்கள்.

சம்பளப் பிடித்தமும் செய்தல் வேண்டும்; ஒருநாள் முதல் 8 நாள் வரை சிறையிலும் போடலாம். இழிந்தவர் ஆயின் மூன்று அடி முதல் 6 அடி வரை கொடுக்கலாம்.

ஆணைகள் எல்லாவற்றையும் எழுத்து மூலம் கொடுக்கவேண்டும்.

அலுவலர்களை மாதம் ஒரு முறை மாற்ற வேண்டும்.

விஜயதசமிக்குத் துப்பாக்கிச் சுடும் மரியாதைக்குப் பத்து நாட்களுக்கு முன்னதாகவே பயிற்சி கொடுத்தல் வேண்டும்.

ஃபவுஜ்தார் அலுவலர்களுக்கு 15 நாள் விடுப்புக் கொடுக்கலாம்; விடுப்பு முடிந்து வந்துவிட்டார்களா என்றும் கவனிக்க வேண்டும்; உடம்பு சரியில்லை என்றால் மாற்றாள் நியமித்தல் வேண்டும்.

## கொடிக்கு மரியாதை

கவாத்துக்குப்[5] போய் வரும் துப்பாக்கி வீரர்கள் கொடியுடன் இருந்தால், கொடிக்கு ஹுஜூர் (அரசர்)க்குச் செய்யும் மரியாதை செய்தல் வேண்டும். இவ்வீரர்கள், எதிரில் வருபவர் பெரிய அலுவலர்கள் ஆயினும் அவர்கட்கு மரியாதை செய்யத்தேவையில்லை.

## அதிகாரிகளின் வரிசை

ஆயுதங்கள் வைக்கும் இடத்திற்கு "மந்திர்" என்று பெயர். அவ் ஆயுதங்களைக் காவல் புரியும் அதிகாரிக்கு "மந்திர் பிரதிக்வான்" என்று பெயர்.

ஆயுதங்கள் முதலியவற்றைக் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்வதும் பழுதுற்றவற்றைப் பழுது பார்ப்பதும் பிரேரக பிரதிக்வான் என்பவரது கடமையாகும்.

பிரேரக பிரதிக்வானின் மேலதிகாரி பாக்வான்.

அலுவலர்கள் நீராடுதல் உணவு ஆகியவற்றுக்கு வீட்டுக்குப் போகலாம்; மற்ற நேரங்களில் அரண்மனையில் இருக்கவேண்டும்.

ஹுத்தேகாரர்கள் (?) காலையிலும் மாலையிலும் எல்லாப் பட்டாளங்களையும் சுற்றிப்பார்க்க வேண்டும். சுற்றிப்பார்க்கும் நேரம் தவிர்த்து மற்ற நேரங்களில் அரண்மனையில் இருக்கும் பெரிய பட்டாளத்தில் இருக்க வேண்டும்.

---

5. கவாத்து – போர் வீரர்கள் செய்யும் உடற்பயிற்சி

ஹுஜூத்தேகாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழக்குகள் ஏற்பட்டால் ஃபவுஜ்தாரும் ஹுஜூத்தேகாரர்களும் சேர்ந்து வழக்கை முடித்துக் கொள்ளலாம். வாதி புனர்நியாயம் அதாவது மேல் முறையீடு செய்தால் " மத்யஸ்தர் " இடம் முறையிடலாம். மீண்டும் மேல்முறையீடு செய்ய விரும்பின் ஃபவுஜ்தார் " சப்னீஸ் " என்ற அலுவலரைக்கொண்டு விசாரிக்கச் செய்யலாம். இதற்கு மேல் விசாரணை இல்லை.

(ஆயுதங்கள் வைக்கும் இடமாகிய) மந்திரத்தில் இருக்கும் அலுவலர் பாதிப்பேர் இரவில் வீட்டுக்குப் போகலாம். எஞ்சிய பாதிப்பேர் மந்திரத்திலேயே படுத்துக்கொள்ளவேண்டும். இரவில் தங்கியவர்கள் காலையில் போய்விடலாம்.

வேலை பார்ப்பவர்கட்கு எண் கொடுக்கவேண்டும். பதவி உயர்வுக்கு " எண் " காரணம் ஆகும்.

முதல் எண் உடையவர் வலிமை குறைந்தும், நோயுற்றும், அறிவிலராயும் " போக்கிரி " ஆகவும் இருந்தால், அவர்க்கு அடுத்த இரண்டாம் எண் உள்ள ஆளுக்குப் பதவியுயர்வு கொடுக்கப்பெறும். சரியாக நடந்துகொள்பவர் எந்த எண்ணில் இருந்தாலும் முதல் எண் ஆகிப் பெரிய பதவிக்கு உயர்த்தப்படுவர்.

## பட்டாளத்துப் பதவிகள்

சிப்பாய் - தர்சி - பிரதிக்வான் - மந்திர பிரதிக்வான் – பிரேரக பிரதிக்வான் - பாக்வான் - பிரதி சமுத்வான் - சமுத்வான் - ஸபரசமுத்வான் - எல்லாருக்கும் மேல் முக்ய சமுத்வான்.

ஆறு ஆட்களுக்குத் தர்சி - 1 ; 12 பேருக்குத் தர்சி - 2 ; பிரதிக்வான் 1

12 - 24 பேருக்குத் தர்சி - 4 ; பிரதிக்வான் 1 ; பாக்வான் 1

48 பேருக்குத் தர்சி - 8 ; பிரதிக்வான் ; பாக்வான் அல்லது சமுத்வான் 1.

மாற்றுங்கால் மேல் பதவியில் உள்ளோரை மாற்ற வேண்டியதில்லை. தர்சி முதலானவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் பதவியுயர்வு கொடுத்துச் சிப்பாய்களையே நியமிக்க வேண்டியது.

இங்ஙனம் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்ததால் அவ்வண்ணமே அரண்மனைக் காவல் அலுவல் பார்க்கும் இவர்கள் தம் வேலையை நன்கு செய்துவந்தனர் ஆதல் கூடும்.

## வழிநடைச் சீட்டு

அரண்மனை அலுவலில் இருப்பவர்கள் விடுப்பு எடுத்துக்கொண்டு சென்னை, திருப்பதி, ஹைதராபாத், பண்டரிபுரம், பூனா முதலிய ஊர்களுக்குப்

போய் வரவேண்டும் எனில், வழியில் ஒருவரும் தடைசெய்யாமல் இருந்தற் பொருட்டு அரசாங்க முத்திரையுள்ள **வழிநடைச்சீட்டு**[6] அளிக்கப்பெற்று வந்தது. வழிநடைச் சீட்டுக்கு " **ரகதாரி** " என்று பெயர் காணப்படுகிறது.

"1818 ஜுலை 20ஆம் தேதி பாதசார ராமாஜி காட்கே சொந்த காரியமாகச் சென்னைப்பட்டணம் போய்வர " **றகதாறி** "[7]

"1818 ஆகஸ்டு 18ஆம் தேதி சாரங்கபாணி அய்யங்கார் திருப்பதி யாத்திரை போய்வர " றகதாரி "[8]

" 1818 ஜுலை 19ஆம் தேதி கலியாணமகால் தட்டி கிதாஜி கானோஜி பாலேகர் வகையறா ஆசாமி – 3; இவர்கள் பூனா பிராந்தியம் பண்டரி புரத்துக்குச் சமீபம் தாந்தூளவாடி கிராமத்துக்குப் போய்க் கல்யாணம் செய்துகொண்டு திரும்பி வருவதற்காகக் கவர்ன்மெண்டு றகதாறி "[9]

— இவற்றால் அந்நாளில் தம் நாட்டினின்று வேற்றுப் புலத்துக்குச் செல்லுங்கால் ஆட்சியாளரிடம் இருந்து 'வழிநடைச்சீட்டு'[10] ஒன்று பெற்றுச் செல்வர் என்பது தெரியவருகிறது.

## ஆசர் சாமீன்

சிறு சிறு குற்றம் செய்தவர்கள் அரசாங்கத்தில் காவலில் வைக்கப் படுவர். அவர்களை விடுவிக்க வேண்டும் எனில் அவர்க்கு வேறொருவர் புணை கொடுத்தல் வேண்டும். அரண்மனையார் எப்பொழுது அவனை அழைத்துவரச் சொல்கிறார்களோ அப்பொழுது அழைத்து வருமாறு உறுதி மொழி கூறிப் புணைபடுவது " ஆசர் சாமீன் " என்று கூறப்படும். "ஆசர் சாமீன் " பேரில் விடுதலை தருவது பற்றிச் சில ஆவணங்கள் கிடைத்துள்ளன. இங்ஙனம் புணைபட்டவன் தன் சொற்படிக்குக் குற்றவாளியைக் கொணர்ந்து நிறுத்தாவிடில் குற்றவாளியின் பேரில் உள்ள குற்றத்துக்குரிய தண்டனையைத் தான் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். " ஆசர் சாமீன் முச்சலிக்கையின் "[11] ஒரு பகுதி பின்வருமாறு:—

" பிரதியாரத்தில் வைத்திருக்கிற ஷை மானோசி ரானோசி மானே என்பானை நான் என் சாமீன்பேரில் பிரதியாரத்திலிருந்து விடுதலை செய்து கொண்டு போறபடியினாலே மேற்படியானை அரண்மனையார் எப்பொழுது என்னிடத்தில் ஆசிர்படுத்தச் சொல்வார்களோ அந்நேரத்தில் அவுனை அழைத்துவந்து ஆசர் படுத்துவேன். அப்படிக்கு மேற்படியான்னை ஆசிர் செய்யாவிட்டால் மேற்படியான்பேரில் சாட்டுதலையாயிருக்கிறதற்கும் அபராதத் தூக்கும் பாத்தியப்படுவேனாகவும். இந்தப்படி சம்மதித்து ஆசர் சாமீன் முச்சலிக்கை எழுதிக் கொடுத்தேன் 1835 பிப்பிரவரி மாசம் 1ஆம் தேதி."

---

6. ச. ம. மோ. த. 2-80 7. 6-810 8. 6-811 9. 6-874
10. ஜஹதாரி என்றும் காணப்படுகிறது; ஆங்கிலத்தில் Pass Port என்றுள்ளது. மாதிரிப் படிவம் 7-866, 867இல் காணலாம், 11, 8-55

## ஊதியப் பிடித்தம்

அரசு ஊழியத்தில் இருப்பவர்கள் விடுப்புப் பெற்றுச் செல்லவேண்டும் என்பது பொது விதி. சில சமயங்களில் உடல்நலம் காரணமாக நின்றாலும் சம்பளப் பிடித்தம் செய்வதுண்டு என்று தெரிகிறது. பதில் ஆளுக்குச் சம்பளம் கொடுத்தற்காகச் சம்பளம் பிடித்தம் செய்வர்.[12] ஒவ்வொரு சமயத்தில் வழிவழி ஊழியம் செய்பவராகவும் பெரிய குடும்பத்தையுடையவராகவும் இருந்தால் இக்காரணம் காட்டிச் சம்பளம் பிடித்தம் தவிர்க்குமாறு வேண்டினால் சம்பளம் தரப்பெறும்.[13]

## சிவபூசைக்கு நாடோறும் சிவலிங்கம் செய்து கொடுத்தல்

"லிங்கம் செய்பவர் இவர்கள் ஹுஜூர் பூஜைக்கு லிங்கம் செய்து கொடுக்கும் வேலை தவறிவிட்டதால் குற்றம் செய்தவர் 1. ராஜம்பட் பானுபட் 2. வெங்கட் பட் பானுபட்"

என்றொரு குறிப்பு[14] உள்ளது. இதனால் நாடோறும் பூசைக்குச் சிவலிங்கம் செய்துதருவர் என்றும் அதனைச் செய்து கொடுக்கத் தவறிவிட்டதால் ஒன்றும் அரையும் (பணம்?) அபராதம் விதிக்கப்பட்டனர் என்றும் அறியப்பெறும். காலம் சரியாகத் தெரியவில்லை. நாடோறும் லிங்கம் செய்து கொடுப்பவர் என்றமையால் மரத்தினாலோ விபூதியினாலோ மண்ணாலோ சிவலிங்கம் செய்துகொடுத்தனர் போலும்.[15] இரண்டாம் சரபோஜி சிறந்த சிவபக்தர்[16] ஆகலின் சரபோஜியின் சிவபூசைக்கு நாடோறும் சிவலிங்கம் செய்து கொடுத்தனர் ஆதல் வேண்டும்.

---

12. 6-274 13. 6-275 14. 12-159

15. "பூசித்தற்குரியவை பாணலிங்கமும் ஸாளக்கிராம லிங்கமும், ரத்னங்களால் செய்யப்பட்ட லிங்கங்களும் ஆம். இவற்றால் லிங்கங்கள் அமைக்கவில்லை எனில் தாமிரத்தாலாவது பித்தளையாலாவது கல்லினாலாவது அல்லது மண்ணாலாவது அமைத்துக் கொள்ளலாம். மண்ணால் ஆவது சிறப்புடையது அல்ல. எனினும் "ப்ருதிவியினாலாகிய லிங்கத்தை அருச்சனை செய்தால் அவன் நீண்ட ஆயுளையுடையோனும் பலமுடையோனும் புத்ரவானும் தனவானும் சுகியுமாயுமிருந்து வேண்டிய வரத்தைப் பெறுவான்" - வேதசாஸ்திர தத்துவம் - 4ஆம் பாகம் - பக். 16, 17, மருதூர் கணேச சாஸ்திரி, 1913.

16. இவரது சிவபக்தியைப் பின்வரும் சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகப் பகுதியால் அறியலாம் :-

"சித்தபரி சுத்தருக்குத் தேறுசிவ பத்தருக்குச்
சத்துவ குணத்தவர்க்குத் தண்மதி முகத்தருக்கு" (4)

"செஞ்சுடர் உதிக்குமுன் எழுந்து புனல்படிந்து
திருநீ றணிந்து ருத்திராக்ஷ மணிபூண்டு
நெஞ்சினில் எழுமன்பி னோடு சந்திவந்தனம்
நிலைதரு சிவபூசை புரிகுவ ருடனாண்டு" (27)

"முகாம் கயை : 4—5—1821 : தஞ்சாவூர் காளா அப்பாவின் பிள்ளை கிருஷ்ணன் சவாரியுடன் கூட இருந்து கொண்டு ஹுஜுருக்கும் பாயிசாபுக்கும் பிள்ளையார் இலிங்கம் செய்து கொடுத்து ஊழியம் செய்வதால் அவன் தகப்பனாருக்குத் தஞ்சை அன்னசத்திரத்தில் மற்றச் சாமான்களுடன் உலுப்பை இரண்டு கொடுப்பது"

— என்று கயையினின்று விடுத்த ஆணையால்[16அ] நாடோறும் சரபோஜிக்குச் சிவலிங்க பூசைக்குச் சிவலிங்கம் செய்து கொடுத்தமை உறுதி எய்தும்.

## சுவீகாரம் எடுத்துக் கொள்ள

தமக்குக் குழந்தைகள் இல்லை எனில் "சுவீகாரம்" எடுத்துக் கொள்வது தொன்றுதொட்டுள்ள வழக்கமாகும்.

சங்கரமூர்த்தி என்பவர்; இவர் உடல்நிலை குன்றியவர் ஆனார்; இவர்க்குக் குழந்தைகள் இல்லை; மனைவியின் உடன்பிறந்தவர் நாராயணன் என்பவர் இவரது பராமரிப்பில் இருந்தார். ஆகவே இந்நாராயணனைச் "சுவீகாரம்" எடுத்துக்கொள்ளவும், தன் அலுவலை அவருக்குக் கொடுக்கவும் மன்னரின் இசைவை 1843இல் வேண்டினார்.[17]

கி. பி. 1854; ஒரு முகமதியர்; முஜபர் பீர் குலாம் அலி தௌலத் லஷ்கர் என்ற பெயருடையவர்; அரண்மனை வேலையில் இருந்தவர்; இவருக்கு ஒரே மகன் இருபது ஆண்டுகட்கு முன் இறந்தார்; தன் மகளின் இரண்டாவது மகனைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளவும், தனக்குப் பிறகு சுவீகார மகனுக்குத் தன் வேலையைக் கொடுக்கவேண்டும் என்றும் வேண்டினார்.[18]

சேக் இஸ்மாயில் என்றொருவர் தன் மைத்துனியின் மகன் 9 வயது உடைய இப்ராஹிம் என்பவரைத் "தத்து" எடுத்துக் கொள்ள அரசு இசைவு வேண்டி உள்ளார்.[19]

— இவற்றால் முகமதியர்களாயினும் அரசு இசைவுபெற்றே சுவீகாரம் எடுத்துக் கொண்டனர் ஆதல் பெறப்படும்.

## தந்தைக்குப்பின் மகனுக்கு அலுவல்

மேலே கண்ட சங்கரமூர்த்தியும், முஜாபர் பீர் குலாம் அலியும் தம் சுவீகாரபுத்திரர்கட்குத் தம் வேலையைக் கொடுக்கவேண்டும் என்று வேண்டியது தந்தைக்குப்பின் மகன் தந்தையின் அலுவலைப் பெறும் பழக்கம் இருந்தமையாலே ஆகும்.

---

16அ. 5-98 "1831 : சரபோஜி மகாராஜா "அதிகாலை எழுந்து ஸ்நானம் சந்தி பிரம்மயக்ஞம் சிவபூசை முதலியன செய்து" என்ற ச. ம. மோ. த. 16–17 காண்க.

17. ச. ம. மோ. த. 8-8 18. ச. ம. மோ. த. 1–88 19. 10-86

"ஜிராத்கானா கார்கூன் சக்ரோ அப்பாஜி இறந்தார். அந்த உத்தியோகம் அவருடைய சுவீகாரபுத்திரனுக்குக் கொடுப்பது"

என்ற ஆணையும் இதனை வலியுறுத்தும்[19அ]

"சிவகங்கை என்பாளின் கணவன் இறந்தான். அவன் சம்பளம் அரண்மனையார் "கிராம வழக்கப்படி" அவன் மகனுக்குத் தந்தனர். பிறகு அவன் பேரால் சம்பளம் தரப்பட்டது; ஆனால் ரூ. 3, ரூ. 2 ஆக்கப்பட்டது. அவனைச் சேவகத்துக்கு வரச்சொன்னார்கள்"

— இதனால்[20] தந்தைக்குப்பின் மகனுக்குத் தந்தையின் வேலை செய்து தரப்படும் என்பது உறுதியாகத் தெரியவருகிறது.

தந்தை இறக்கும்பொழுது மகன் சிறுவனாக இருந்தால் பெரியவன் ஆகும்வரை பதில் ஆள் வைப்பதுண்டு. முக்தாம்பாள் சத்திரம் சுப்பராயர் என்பவன் இறந்துவிட்டான்; அவன்மகன் சிறுவன்; ஆகவே "பெரியவனாகும் வரை பதில் ஆள் வைத்து வேலைகள் செய்து உலுப்பை வாங்கிக் கொள்ளுகிறது" என்றுள்ள குறிப்பால்[21] இதனை அறியலாம்.

கணவன்பேரால் இருந்த "ஸ்தானீகம்" அவன் இறந்தபிறகு மனைவி பேருக்கு மாற்றப்பெறுதலும் உண்டு என்று ஒரு ஆவணத்தால் விளக்கமுறுகிறது.[22]

## மஞ்சள் நீர்ச் சாசனமுறி

ஒரு பையனைச் சுவீகாரம் எடுத்துக்கொள்ளும்போது அக்குழந்தையை மஞ்சள்நீர் குடிக்கச் செய்வர். இந்தச் சடங்குக்கு மஞ்சள்நீர் குடிப்பித்தல்[23] என்று சொல்வர். இங்ஙனம் மஞ்சள் நீர் குடிப்பித்தபின்னர்ச் சுவீகாரம் எடுத்துக்கொண்டு எழுதிக்கொடுக்கும் ஆவணத்துக்கு "மஞ்சள் நீர்ச் சீட்டு" அல்லது "மஞ்சள்நீர்ச்சாசனமுறி" என்பது பெயர். இத்தகையதொரு ஆவணம் கிடைத்துள்ளது.[24]

## பதில் ஆள் வைத்தல்

பதில் ஆள் வைக்கவேண்டிய இன்றியமையாமை சில வேலைகட்கு உண்டு. பதில் ஆளுக்குச் சம்பளம் எவ்வளவு என்பதுபற்றி அறிய வாய்ப்புள்ளது. பூசை செய்பவர் கோபால் சாத்திரி. இவர் விடுப்பு எடுத்துக்

---

19அ. ச. ம. மோ. த. 2-85

20. 6-548, 544, 545

21. ச. ம. மோ. த. 8-27

22. 6-106, 107.

23. Tamil Lexicon M. U. :— "பராசரபட்டரைப் பெருமாள் மஞ்சள்நீர் குடிப்பித்துப் புத்திர ஸ்வீகாரம் பண்ணியருளி" (குரு பரம்பரை – 354)

24. 8-41 42

கொண்டார். இவர்க்குப் பதில் வேணாசாரியார் புஜங்க சாத்திரி நியமிக்கப் பெற்றார். பதில் ஆளுக்கு " மாதம் ரூ. $2\frac{1}{4}$ ; மீதி $1\frac{3}{4}$ ஆசாமிதாரருக்கு " என்ற குறிப்பால் வேலைக்கு உரியவருக்கு ரூ. 4 என்றும், அச்சம்பளத்தில் பதிலிக்கு ரூ. $2\frac{1}{4}$ என்றும், எஞ்சிய தொகை ரூ. $1\frac{3}{4}$ நிலையாக வேலை செய்பவர்க்கு என்றும் அறியப்பெறும்.[25]

கடன் பாக்கியிருப்பின் அந்தக் கடனை வசூல் செய்வதற்காகப் பதிலியாக நியமித்துப் பதிலியிடம் கடனை வசூல் செய்வதுண்டு. அங்ஙனம் நியமிக்குங் கால் பாதிச்சம்பளம் கடனுக்காகப் பிடிக்கப்படும். இது,

" அகல்யாபாயி சத்திரம் கோயில் வகையறா-பாலே காரிணி **அலமேலு** வேலைக்கு வரவில்லை. பதில் **பெறுமி;** இவளுக்கு மாதம் 1க்கு ரூ. $\frac{1}{2}$, 2 வீசம் ; கடைத்தெரு பெரியதம்பி செட்டி மனைவி பத்திரை குத்தகை பாக்கி **அலமேலு** ஜாமீன் ஆனதால் பாக்கிக்காக ரூ. $\frac{1}{2}$, 2 வீசம் ஆக ரூ. $1\frac{1}{4}$ "

என்ற குறிப்பினால்[25அ] அறியப்படும்.

## கோந்தளம்

" குலதர்மபூசை " நவராத்திரி ஒன்பது நாட்களும் சந்திரமௌளீசுவரர் கோயிலில் நடைபெறும் என்றும், ஒன்பதாவது நாள் " கோந்தளம் " நடைபெறும் என்றும் தெரிகிறது. கோந்தளம் என்பது மராட்டியருக்குரிய ஒரு தனி நிகழ்ச்சி; பவானியம்மனுக்காகச் செய்வது. இக்கோந்தள நிகழ்ச்சி பலப்பல சமயங்களில் நிகழ்த்தப்பெற்றுவரும்.

" ரா. சிவஜீசாயேப் அவர்கட்குக் குடுமிக் கலியாணமும் அக்ஷராரம்பம் கத்தியைக் கட்டுவதற்கும், நிஜ வைசாக சுத்த துவாதசி சி. சௌ. அமணி ராஜே சுலக்ஷணா பாயி, சௌ ராஜம்மா பாயி இவருடைய விவாகத்துக்குப் போடவேண்டிய பாக்கியிருக்கிற "**கோந்தளம்**" குலதர்மம் செய்வதற்கு விவாகத்தின் 4 கோந்தளங்களில் 2 கோந்தளங்கள் போடப்பட்டன "

என்ற குறிப்பு[26] அரண்மனையில் நடைபெறும் கோந்தள நிகழ்ச்சிகளைப் பற்றி அறிவிக்கிறது. குடுமிக் கலியாணம் என்பதை " பர்ஸா " என்று மராட்டியர் கூறுவர். பர்ஸா என்பது மராட்டியச் சொல்.[27] அக்ஷராரம்பம்

---

25. 12-160. 25அ. 12-161. 26. 2-47

27. " They call Kudimi Kalyanam as Barsa. Barsa is a Marathi word "-P. 396, Deposition of Krishna Row, D. W. 49, O. S. No. 26 of 1912.

என்பது கல்வி கற்பதற்குத் தொடங்கும் சடங்கு. கத்தியைக் கட்டுதல் என்னும் சடங்கு கண்டேராவ்[27அ] என்னும் சுவாமியின் முன்னிலையில் நடைபெறும். இதற்கு,

"சி. சிவாஜி ராஜா சாயேப் அவர்கட்கு இடுப்பில் சின்ன கத்தியைக் கட்டுவதற்குக் கண்டேராவ் என்னும் சுவாமியின் முன்னிலையில் நடந்ததற்குச் செலவு"

என்பது சான்று.[28] இத்தகைய விழாக்கள் அல்லது சடங்குகள் நடைபெறுங்கால் "கோந்தளம்" என்ற நிகழ்ச்சி நடைபெறும். திருமணத்துக்கு 4 கோந்தளங்கள் என்று மேலே முதலில் கண்ட குறிப்பால் அறியப்பெறும். கோந்தளம் என்பது ஒரு தனித்த பறை; கோந்தளர் என்பவர்களால் அடிக்கப்படுவதாகும். அக்கோந்தளர் கொச்சையான மராட்டிய மொழியைப் பேசுபவர் ஆவர்.[29] கோந்தளம் இரவில் அடிக்கப்பெறும்.[30] இங்ஙனம் கோந்தளம் அடித்தல் அரண்மனையில் பரவலாக இருந்ததாதல் கூடும்.

"1841 : கோந்தளத்தின் விவரம்; பூத கோந்தளம், ரேணுகா தேவியின் கோந்தளம், ஸரஸ்வதியின் கோந்தளம் — நடிக்கின்ற பெண்களின் பெயர் — வாத்தியங்கள்"

— என்ற குறிப்பினால்[30அ] கோந்தளங்களில் வகைகளுண்டென்றும், பெண்களும் பங்குகொள்வர் என்றும் தெரியவரும்.

## ஹிஸ் ஹைனஸ் (His Highness)

பிரதாபசிங்கர் (1739–1763) காலத்திலேயே வெள்ளையர் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. கும்பினியார் இவரை "ஹிஸ் மெஜெஸ்டி" (His Majesty) என்று அடைமொழி கொடுத்துப் பெருமைப்படுத்தினர். பிறகு இரண்டாம்

---

27 அ. "Our Kula Daiwams are Bhavani, Shambo Mah Dev, Chandra moules-war, and **Khande Row**. Bhavani is a deity of Tulajapura in the Bombay Presidency...... **Khande Row** is a deity of Jejuri near Satara"-P. 328. Deposition of Sivaji Raja Saheb, Ist Defendent, O. S. No. 26 of 1912.

28 2-47, 48.

29. "It (Conchal) is the beating of a peculiar drum by Gondales who are a class of Mahrattas talking vulgar Mahratti" - p. 327, Deposition of Sivaji Rajah Saheb, Ist Defendent, O. S. No. 26 of 1912.

30. "Gondalam is beaten at nights" -p. 266, Deposition of Ekanath Bhatt - D. W. 41. 30அ. 1-249.

சரபோஜி காலத்தில் இருந்து "ஹிஸ் ஹைனஸ்" என்ற அடைமொழி சரபோஜியின் விருப்பப்படி அளிக்கப்பெற்றது.[31] ஹிஸ் ஹைனஸ்" என்ற அடைமொழி இரண்டாம் சிவாஜி காலத்திலும் தொடர்ந்து வந்தது என்பது,

" மகாராஜாவுக்கு ஹிஸ் ஹைனஸ் ராஜஸ்ரீ மகாராஜா சாஹேப் என்று கடிதம் தஸ்தாவேஜிகள் தீர்ப்பு வகையராக்களிலும் கண்டு எழுதுவது வழக்கம்"

என்ற குறிப்பால்[32] உறுதி எய்தும்.

## தீண்டாமை

சாதிப் பிரிவுகள், அவற்றின் விளைவுகள் தலைதூக்கி நின்ற காலம அது. ஒரு சாதியினர் பிறிதோர் சாதியினரைத் தீண்டுதலும் கூடாது என்று கருதி ஒழுகினர். தீண்டினால் நீராடுதல் வேண்டும். வெள்ளைக்காரர் ஒருவரை ராமச்சந்திர சூர்வே தொட்டுவிட்டாராம்; அதனால் அவர் " மந்திர ஸ்நானம் " செய்துகொண்டார்; தட்சணை ஒரு பணம்.[33]

## ஜாதி பிரஷ்டம்

மக்கள் உயர்சாதியினர் என்றும் தாழ்ந்த சாதியினரென்றும் அந்நாட்களில் பெரிதும் நினைத்திருந்தனர். ஒரு சாதியினர் தமக்குரிய ஒழுக்கங்களினின்று வழுவின் அச்சாதியினின்று நீக்கப்படுவர். இதனைச் " சாதிப்பிரஷ்டம் " என்பர். இங்ஙனம் நிகழாத்வாறு மக்கள் எச்சரிக்கையுடன் இருந்தனராதல் வேண்டும். இதனை, "உயிரையாவது விட்டு ஜாதிபிரஷ்டன் ஆகாமல் இருக்க வேண்டும் " என்ற கூற்றினின்று[33அ] அறியலாம்.

## நோய்புறின்

உடம்பு சரியில்லாமல் நோய்வாய்ப்படின் தஞ்சைப் பெரியகோயிலில் " ஜ்வர ஹரேசுவர "ருக்கு " அபிஷேகம் பூசை நைவேத்யம் " நடத்துவது வழக்கம்.[34] கி. பி. 1801இல் ரெசிடெண்டு பிளாக் பர்ன் அவர்களுக்கு உடல் நிலை கெட்டபொழுது சுரஹரேசுவரருக்கு அபிஷேகம் பூசை நைவேத்தியம் $\frac{1}{4}$ மண்டலத்துக்குச் செய்யப்பெற்றது[34அ]

அம்மை வார்த்தால் " சீதலா தோத்திரம் " ஜபம் முதலியன அந்தணர்களைக் கொண்டு செய்விப்பதுமுண்டு.[35] கால்நடைகளுக்கு நோய்வராமல் இருக்க " நாச்சியம்மன் " என்ற சிறு தெய்வத்துக்குப் பூசை செய்வர்;[36] அல்லது அய்யனாருக்குப் பூசை செய்வர்.[37]

31. P. 330, Maratha Rule in the Carnatic, Srinivasan, C. K.
32. 4-808 33. ச. ம. மோ. த, 9-13 33அ. 8-120
34. ச, ம. மோ. த. 9-38 34அ. ச. ம. மோ. த. 1-28 35. 4-464, 465,
36. ச, ம. மோ. த. 1-25 37. ச. ம. மோ. த. 4-16

## அனாதைப் பிணங்கள்

கி. பி. 1772 ; துளஜா பெரும் போர்களில் ஈடுபட்ட காலம்; நவாபுடன் போர் நடைபெற்ற சமயம்; பலர் அனாதைகளாகத் தஞ்சையில் இருந்தனர் போலும். அத்தகைய அனாதைகளிற் சிலர் இறந்து போயினர். அப்பிணங் களை அப்புறப்படுத்துவது அரசின் கடமையாயிற்று.

" 1772 : அனாதி சவங்கள் : கொட்டியக்காரன் வீட்டினிடம் பெண் 1; கீழவாசலில் பெண் 1 : துக்கோஜி கோனார் வீட்டினிடம் புருஷன் 1; பாதரி வீட்டிடம் புருஷன் 1; எல்லம்மன் கோவிலிடம் பெண் 1; நாயக்ஜி வீட்டிடம் புருஷன் 1; வல்லம் வாசலில் பெண் 1; கொடிமரத்து மூலையிடம் புருஷன் 1; இவை ஒவ்வொன்றுக்கும் பணம் ½ ; அப்புறப்படுத்துகிறது "

என்ற ஆணையால்[38] பலர் ஒரே நாளில் அனாதைகளாக இறந்தனர் என்பது உறுதி எய்தும்.

## சூதகம்

உறவினர்களின் பிறப்பு இறப்புக்களில் காக்கும் ( ஆசௌசம் ) தீட்டு[39] சூதகம் எனப்படும். 3 நாட்கள் முதல் பத்து நாட்கள் வரை இது காக்கப்படும். அரண்மனையில் சூதகம் (ஆசௌசம்) நன்கு காக்கப்பட்டது எனத் தெரிகிறது. ஆசௌசம் உடையவரைத் தீண்டுதலும் கூடாது ; அவர் கைப்பொருளையும் பெறுதல் கூடாது என்பது அந்நாளைய பழக்கம்.

" 1832 : கோட்டைவாசல் கோனார் பெண்சாதி இறந்தாள்; ஆகையால் அவனுக்குச் சூதகம் போகிறவரையில் ஹுஜுருக்கு வேறு கோனார் சங்கிராம பண்டாரத்திலிருந்து அனுப்புகிறது "

என்பது இதற்கு எழுத்துச் சான்று.[40]

## வயது குறித்தல்

விண்ணப்பங்களிலோ வேறு குறிப்புக்களிலோ கையெழுத்து இடுபவர்கள் தத்தம் வயது குறிப்பது இன்றியமையாத வழக்கமாகும். இது பின்வரும் குறிப்பால்[41] அறியவருகிறது :—

" அர்ஜி ரோகாக்களில் 5 அர்ஜிகளுக்கு வயது குறிக்காமல் எழுதியிருக் கிறார்கள். இது வழக்கத்திற்கு விரோதமானது. வயது குறித்துத்தான் அனுப்பவேண்டும். "

---

38. ச. ம. மோ. த. 10-24
39. Tamil Lexicon, M. U.
40. ச. ம. மோ. த. 5-50
41. ச. ம. மோ. த. 1-6,

"1851 : வீரா நாயக்கன், வயது 24 எழுதிக்கொண்டது" என்றமை வயது குறித்து எழுதும் பழக்கத்துக்குச் சான்றாகும்.

## ஓய்வூதியம் (பென்ஷன்)

அரண்மனையில் அலுவலில் இருப்பதற்கு வயது வரம்பு இல்லை என்றே கொள்ளலாம். மூப்பு அல்லது பிற காரணங்களால் ஓய்வு பெறின் ஓய்வு பெற்றவர்க்கு ஓய்வூதியம் தரப்படும். அவனுக்குப் பிறகு அவன் மனைவிக்கும் ஓய்வூதியம் தரப்படும் என்று ஊகிக்கலாம்.

"கிருஷ்ணீாபட் பட்கோசுவாமி பாரியை ; என் எஜமான் சரஸ்வதி மகாலில் வேலை பார்த்தார். இப்போது எனக்கு வேறு ஆதாரம் இல்லாததால் மாசம் ரூ. 2 பென்சன் கொடுக்கவேண்டும்"

என்று விண்ணப்பித்திருப்பதால்[42] இறந்துபட்டவருடைய மனைவிக்கு ஓய்வு ஊதியம் தரப்பெற்றிருக்கும் என்று கொள்ளலாம்.

## கைம்பெண் திருமணம்

கணவனை இழந்தவள் மறுமணம் செய்துகொள்ளும் பழக்கம் தாழ்ந்த குடிமக்கள் சிலரிடத்துக் காணப்பெறுவதாகும். இதனை,

"என் தகப்பனார் அருணாசல நாயக்கன் ரங்கப்பா நாயக்கன் 2ஆம் கலியாணம் செய்துகொண்டார். பழனி காவடி கொண்டுபோகும்போது காக்கா வலிப்பினால் இறந்தார். இரண்டாம் பெண்சாதி சிறுவயது ஆகையால் வேறு புருஷனைக் கலியாணம் செய்துகொண்டாள்........."

என்பதால்[43] அறியலாம்.

## பல மனைவியர்

மன்னர்கள் பல மனைவியர் உடையராதல் வெளிப்படை. பெருந்தரத்து அதிகாரிகளும் பல மனைவியரொடு வாழ்ந்தனர். தாழ்ந்த குடிமக்களும் பல பெண்களை மணந்தனர் என்பது பெரும்பான்மை.

"கல் இழைத்து வேலை செய்யும் வெங்கடராயுலு மூன்றாம் கலியாணத்துக்கு இனாம் ரூ. 150"[44]

என்பது போன்றவை பலதார மணத்துக்கு எடுத்துக்காட்டாகலாம்.

---

42. ச. ம. மோ. த. 1-40. 43. ச. ம. மோ. த. 5-41. 44. ச. ம. மோ. த. 1-4

## கோயில் பணியாளர் உபதேசம் பெறல்

திருவாரூரில் கோயிலில் இறைவன் திருமுன் பூசை நேரத்தில் சுத்த மத்தளம் வாசிக்கிறவன் குருக்களிடம் உபதேசம் பெற்றுச் சிவ தீக்ஷை பெற்றுக்கொண்டு சுத்த மத்தளம் வாசிப்பது தொன்று தொட்டு வந்த வழக்கம் ஆகும்.[45] ஆனால் கி. பி. 1830இல் கோயிலார் சிவதீக்ஷை பெற்றவனை நீக்கி உபதேசம் இல்லாத மேளக்காரனைக் கொண்டு சுத்த மத்தளம் வாசிக்கச் செய்தனர். இதுபற்றி அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது.[46]

இதனால் முன்னாட்களில் சிவதீக்ஷை பெற்றவர்களே கோயிற் பணியாளர்களாக இருந்தனர் என்று தெரிகிறது.

## வசூலில் கடுமை

அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரியை வசூலிக்கும்பொழுது கடுமையான முறை கையாளப்பட்டு வந்தது. கடுமையில்லாத காலத்தில் வசூல் குறைந்து விட்டதாகவும் தெரிகிறது. இதுபற்றி,

"1819 : கடைக்காரர்களின் ஐவேஜி வசூலுக்கு அவர்களைப் பாராவில் போட்டும் அடித்தும் வசூல் செய்வது வழக்கம். இப்பொழுது பாராவில் போடுவது இல்லை. ஆகையால் வசூல் பாக்கியிருக்கிறது. அவர்களைக் கண்டித்து ஜாமீன் மூலம் வசூலிக்கவேண்டியுள்ளது"

என்றுள்ளமை காணலாம்.[47] பாக்கிக்காகக் கைது செய்வதும் உண்டு என்பது

" 25—7—1793 : பாக்கிக்காகக் கைதான வட்டதாரர்கள் பெயர்[47அ]; பாக்கிக்காகக் கைதான பதக்தாரரின் பெயர்."[47ஆ]

என்ற குறிப்புக்களால் அறியப்பெறும்.

## மாதரசிகள் சிவபூசை - உபதேசம்

மன்னர்களின் மாதரசிகள் உபதேசம் பெறுதலும் சிவபூசை செய்தலும் உண்டு என்று தெரிகிறது.

"1834 : மாதுஸ்ரீ சைதம்பா பாயி, காமாட்சியம்பா பாயி, ஆவுசாயேப் இவர்களின் சிவபூசைகள் ஒருவருஷம் பூர்த்தியானதற்கு விசேஷ பூசைகள்"[48]

---

45. உ-100, 101
46. முன்னாளில் சிவதீக்ஷை பெற்றவரே சுத்தமத்தளம் வாசித்தனர் என்றும், இந்நாளில் இப்பழக்கம் இல்லையென்றும் திருவாரூர்த் தமிழ்ப் புலவர் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் எழுதியுள்ளார்.
47. ச. ம. மோ. த. 6-41
47அ. ச. ம. மோ. த. 80-27
47ஆ. ச. ம. மோ. த. 80-25
48. ச. ம. மோ. த. 8-2

" கலியாணமகால் பாயிமார்களின் உபதேசம் பெறுபவர் கண்டகி பாயி... ......திரிவேணி பாயி; இந்த 14 பேர்களுக்கு ஆளுக்கு ரூ. 30 வீதம் ரூ. 420 கொடுக்கப்பட்டது"[49]

என்ற எழுத்துச்சான்றுகள் அரசமாதேவிகள் மட்டுமன்றிக் கல்யாண மகால் பாயிமார்களும் உபதேசம் பெறுதலையும், அதனோடு சிலர் சிவபூசை யேற்றுப் பூசை புரிதலையும் தெரிவிக்கும். இவர்களுக்குத் தாரக மந்திரோப தேசம் செய்யப்பெறும் என்றும், சமர்த்த ராமசாமி மடாதிபதியாகிய அரசகுரு இவ்வுபதேசம் செய்வர் என்றும் தெரியவருகிறது.[50]

## எண்ணெய் முதலியன வழங்குதல்

வெள்ளிக்கிழமையன்று சுமங்கலிகளுக்கு எண்ணெய் மஞ்சள் முதலியன எல்லாச் சாதியினருக்கும் வழங்கப்பெறும். சனிக்கிழமை யன்று அந்தணர் களுக்கு மட்டும் வழங்கப்பெறும். உலுப்பைகளும் வழங்குவதுண்டு.[51]

## யாத்திரை போக உதவி

இராமேசுவர யாத்திரை செய்ய உதவுவது பெரும்பான்மை. பண்டரி புரம் முதலிய வடபுலத்துத் தலங்களுக்குச் செல்லவேண்டும் எனின் சாமான் களைக் கொண்டு செல்ல "மட்டக்குதிரை" தருவது பழக்கம். இதனை,

"1842 : அப்புராவ்: பண்டரிபுரம் யாத்திரை போகக் குதிரையும் மட்டக் குதிரையும் இனாம் கொடுப்பது வழக்கம். அதுபோல எனக்கு ஒரு மட்டக் குதிரை வேண்டும்; யாத்ராபலம் தங்கட்கே"

என்று அப்புராவ் என்பார் எழுதிய கடிதத்தினின்று[52] அறிந்துகொள்ளலாம்.

## நற்சகுனம்

சகுனம் பார்ப்பது இந்நாட்டு மக்கள் பெரும்பாலோர்க்குரிய பழக்கம் என்னலாம். இதற்கு மராட்டிய மன்னர் விதி விலக்கு அல்லர்.

"1827 : திவான் சாகேப் வெளியேயிருந்து அரண்மனையில் வரும் பொழுது எதிரில் பால்கொண்டு வந்தவனுக்கு ஒரு பணம்" என்பது[53]

49. ச. ம. மோ. த. 8-3
50. "As Rajaguru the chief thing we do is upadesam. We do upadesam even to the wives of the Rajas ..... The upadesam is of Tharaka Mantram. This upadesam can be made to both males and females. Upadesam can be given to the wife without giving to her husband" —Pages 1 & 5 – Deposition of Sethu Ramaswmi, 7th witness for defendents 1 and 2, O. S. 26 of 1912
51. ச. ம. மோ. த. 5-40 ஏ   52. 4-485, 486

சகுனம் பார்த்தலுக்கு உதாரணம் ஆகும். " திவான் சாகேப் அவர்கள் வேட்டைக்குப் புறப்படும்போது எதிரில் பாற்குடங்கள் கொண்டுவந்த குடியானவனுக்கு 2 அணா "[53அ] என்ற குறிப்பும் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

## தூய்மை காத்தல்

சிவகங்கைக் குளத்தில் இரண்டு பெண்கள் குடங்களை அலம்பினார்கள். அவர்களுக்கு $4\frac{1}{2}$ சக்கரம் அபராதம் விதிக்கப்பட்டது.[54] இதை அறியும் பொழுது தண்ணீரைத் தூய்மையாக வைத்திருக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கை நன்கு விளங்கும்.

## பிரபந்த வழிபாடு

கோயில்களில் திருவிழா நடக்குங்கால் சுவாமி ஊர்வலம் வரும்பொழுது சிவன் கோயிலாயின் ஓதுவார்கள் தேவாரம் ஓதிவருதலும், பெருமாள் கோயிலாயின் பாகவதர்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தம் விண்ணப்பித்தலும் தொன்று தொட்டு வந்த பழக்கமாகக் கொள்ளலாம். " திருப்பதியம் விண்ணப்பம் " செய்தமைக்கு மோடி ஆவணக்குறிப்பு இல்லை. ஆனால் திவ்யப்பிரபந்தம் ஓதியமைக்குச் சான்றுளது :—

" 1779 : மன்னார்குடி ராஜ கோபால ஸ்வாமிக்குத் தேர்த்திருவிழா வகையில் ஸ்வாமிகூடவே பாட்டுப்பாடும் பாகவதர்கள்—இவர்களுக்கு அங்க வஸ்திரம் ஜோடிகள் முதலியன கொடுக்க இனாம் வருட வழக்கத்தில் கொடுப்பதுபோல் சக்கரம் 50. இதற்கு 1777இல் கொடுக்கப்பட்டிருக்கிறது "

இதனால் மன்னார்குடி ராஜகோபாலசுவாமிக்கு நடைபெறும் திருவிழாவில் நாலாயிர திவ்யப்பிரபந்தம் சுவாமி புறப்பாட்டில் சேவை செய்துவர அரண்மனையார் ஆண்டுதோறும் 50 சக்கரம் அளித்தனர் ஆதல் வேண்டும் என்பது அறியப்பெறும்.

## மழை பெய்ய

மழையில்லாமல் போனால் மழை வருவிப்பதற்காக வருணஜெபம், உருத்திராபிஷேகம் செய்வித்தலுடன், மாபாரதத்தில் விராடபர்வம் வாசிப்பது வழக்கம் என்று சில ஆவணங்களால்[56] தெரியவருகிறது.

## பெண்களுக்கு வேலை

அரண்மனையில் பல்வேறு பணிகளில் பெண்கள் ஈடுபட்டிருந்தனர். எனினும் ஐரோப்பியப் பெண்களுக்கும் கிழக்கிந்தியப் பெண்களுக்கும் வேலை கொடுக்கக்கூடாது என்று 16—10—1949இல் ஓராணை[57] பிறப்பிக்கப்பெற்றது.

53. 4-222
53அ. ச. ம. மோ. த. 9-13
54. 4-426
55. ச. ம, மோ, த. 18-28.
56. 2- 181
57. 5-259, 260

## அபிசீனிய சாதி ஆட்கள்

அரண்மனையில் பணிகட்காகப் பெண்டிரை விலைக்கு வாங்குதல் பெரும்பான்மை. சிறுபான்மை வேற்று நாட்டு ஆட்களையும் விலைக்கு வாங்கியதாகத் தெரிகிறது.

"1831 : சர்க்காருக்கு அபிசீனிய ஆட்கள் வாங்கி வருவதற்கு வைத்ய பாபுவின் பையன் மகமத்சாப் என்பவரை மலைவாரப் பிராந்தியத்திற்கு அனுப்பியிருக்கிறது. அவர் அந்தச் சாதி இரு பைன்களை ரூ. 250க்கு விலைக்கு வாங்கி இருக்கிறார் என்று ஐயாக்கண்ணுப்பிள்ளைக்குக் கடிதம் எழுதியுள்ளார்........"

என்ற குறிப்பு[58] இச்செய்தியை அறிவிக்கிறது.

## ஆங்கில மன்னர் இறந்தமை

"1830 : சீமை தேசத்தின் ஆங்கிலேய மன்னர் ஜூன் மாசத்தில் பரலோகம் அடைந்ததால் நவம்பர் மாசம் 3ஆம் தேதிமுதல் துயரத்தோடிருக்க ஆரம்பிக்கவேண்டுமென்று கவர்னர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்"

என்றொரு குறிப்புள்ளது.[58அ] கி. பி. 1830இல் இறந்த ஆங்கில மன்னர் நான்காம் ஜார்ஜ் ஆவர்.[58ஆ] அவர் இறந்தபொழுது தஞ்சையிலும் துக்கம் கொண்டாடினர் என்று அறியப்பெறும்.

## இங்கிலாந்து அரசிக்கு மகன் பிறந்தமை

கி. பி. 1841இல் "ஹர் மெஜஸ்டி விக்டோரியா[59] குவீன்" அவர்களுக்கு மகன் பிறந்தார். அப்பொழுது மகாராஜாவின் சபை கூடியது. அச்சபைக்கு மாப்பிள்ளை சகாராம், நாராயணராவ் ஹம்பிராவ், சர்க்கேல் பாவாஜி ராமாஜி பண்டித், நியாயாதீச ராஜேஸ்ரீ ஹீரோஜி காளேராவ், சேனாதிபதி கிருஷ்ணாஜி கேசவ் தீக்ஷித் பண்டித், சேனாதுரந்தரர் நீலகண்டராவ் ஆனந்தராவ் ஜாதவ் ஆகியோர் காலை 8 நாழிகைக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று ஆணை[60] பிறப்பிக்கப்பட்டது.

---

58. ச. ம மோ. த. 17-4 58அ. 2-94

58ஆ. List of Governors of Madras - king of England, History of Tami Nadu, N. Subramanian

59. விக்டோரியா 1837 முதல் 1876 வரை இங்கிலாந்தில் இராணியாகவும் 1876 முதல் 1901 வரை பிரிட்டிஷ் பேரரசின் பேரரசியாகவும் இருந்தவர். 9—11—1841இல் இவர்க்கு இரண்டாவது குழந்தையாக, முதல் மகனாகப் பிறந்தவர் எட்வர்ட்.

60. "The audience consists of relations, Palace officials and rich gentry" - P. 323, Deposition of Sivaji Raja Saheb.

"ரிஸிடெண்ட் அவர்கள் கோட்டைக்குள் வரும்பொழுது 21 குண்டுகள் போடவேண்டும். சபையில் ஹுஜுர் நற்செய்தியுள்ள காகிதம் வாங்கும்போது 21 குண்டுகள் போடவேண்டும்"

என்று ஏற்பாடு செய்ததாக ஓராவணக்குறிப்புக்[61] கூறுவதால், பிரிட்டிஷ் அரசாங்க நற்செய்திகள் கேட்கும்பொழுது சபை கூடி மரியாதை செய்கிற பழக்கம் தெரியவரும். இதனால் சிறப்பு அவை கூடும்பொழுது 21 குண்டுகள் போடப்படும் என்றும், குறிப்பிட்ட மேன்மக்கள் மட்டும் அரசவைக்கு அழைக்கப் பெறுவர் என்றும் தெரிகிறது.

## விவசாயக்கடன்

நிலங்களைப் பயிர் செய்யும் ஏழைக் குடியானவனுக்குப் பயிர்ச் செலவுக்காகக் கடன் கொடுப்பதாகிய வழக்கம் உண்டு. கடன் பெற்றவர் மகசூலில் கடனைத் திருப்பித்தருவர். இங்ஙனம் வேளாண்மைக்குக் கடன் கொடுத்துத் திருப்பிப் பெற்றதாக ஒரு குறிப்புள்ளது :[62]

"கணக்கு, கௌன்ட் கரெண்டு பிரகாரம் 1803 முதல் 1804 ஏப்ரல் வரையில் அரசாங்கக்கடன் விவசாயிகளுக்குக் கொடுத்தவகையில் வசூல் விவரம்"

என்றதால் கம்பெனியார் வரிவசூல் தமக்குரிய கடமையாக ஏற்றுக் கொண்ட பொழுது வருவாய் பெருக்குதற்பொருட்டு விவசாயக் கடன்கள் கொடுத்துத வினர் என்று தெரிகிறது.

## நன்றாக வேலை செய்பவரை ஊக்குவித்தல்

சரபேந்திரராஜ பட்டணத்தில் "கார்கூன்" அலுவலில் நாகராஜ அப்பா என்றொருவர் இருந்தார். அவர் "தாமதமில்லாமல் அப்போதைக்கப்போது" கணக்குகளை அனுப்பிக்கொண்டிருந்தார். ஆகையால் "அவர்க்குச் சம்பளம் தாமதமில்லாமல் கொடுப்பது" என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.[63] எனவே நன்கு வேலை செய்தவர்கட்குத் தாமதமின்றி ஊதியம் அளிக்கப்பெற்றது என்றும், செய்யாதவர்கட்கு ஊதியம் கொடுத்தல் தாமதப்பட்டது என்றும் அறியப்பெறும்.

## அரசர்கட்குப் பொழுதுபோக்கு

புலிவேட்டைக்குச் செல்லுதல்'[64] பறவைகளை வேட்டையாடுதல்,[65] மான்களை வேட்டையாடிப் பிடித்தல்[66] முதலியன அரசர்க்குரிய பொழுது போக்குகளாகும். வேட்டைக்குப் போகும்பொழுது ஒரு தடவை 38 நாய்கள் உடன் சென்றன என்று தெரிகிறது.[67]

61. ச. ம. மோ. த. 8-84
62. ச. ம. மோ. த. 28-70
63. ச. ம. மோ. த. 8-18
64. 1-88; 4-218; ச. ம. மோ. த. 19-28; 28-16
65. 1-88
66. 1-144
67. 4-101

ஆடுகள் சண்டை இடுதலைக் காண்பதும் வழக்கம்போலும்.

"பெருமாள் நாயக் இடம் சண்டையிடும் ஆட்டுக்கடா வாங்கினதற்கு 3 சக்கரம்"[68]

என்பதால் இது அறியப்பெறும்.

"கி. பி. 1803 : மகாராஜாசபையில் 10 ஜோடி மல்லு ஜட்டிகள் குஸ்தி போட்டதற்கு இனாம் 720 சக்கரம்"[69]

"1846 : நவராத்திரியில் திவான்சாகேப் மகாராஜ சபையின் மேற்குப் பக்கம் மேடையிட்டுச் சண்டையிடும் குத்துச் சண்டை வீரர்கள் சண்டையிடச்செய்த வகையில் இனாம் 350"[70]

என்ற குறிப்புக்களால் மல்லர்களைக் கொண்டு மற்போர் செய்வித்துக் காண்டலும் மன்னர்க்குப் பொழுது போக்காதல் பெறப்படும்.

அரசர் முன்னிலையில் "ஜால வித்தை காட்டுதல்"[71] உண்டு. விகட கவிகள் என்பார் பலர் இருந்தனர். அவர்களும் தம் ஆற்றல்களைக்காட்டி நகைச்சுவை பொருந்தப் பேசி மகிழ்விப்பர்.

"சர்க்காரின் விகடகவி இருவரும் வேஷம் பூண்டு வந்ததற்கு இனம்"[71அ] என்ற குறிப்பால் வேடம்பூண்டு வருதலும் உண்டு என்றறியலாம்.

## கேட்பாரற்ற பொருள்கள்

மாடு முதலியவையோ பிற பொருள்களோ சொந்தம் கொண்டாடப் படாமல் இருந்தால் அவைபற்றி எடுக்கப்படும் நடவடிக்கையை ஒரு ஆவணம்[72] குறிப்பிடுகிறது. "எட்டு நாட்களாக வெள்ளைக் காளை மாடு ஒன்று அரண்மனைக்கு வந்திருக்கிறது. அதற்குரியவர் ஒருவரும் வரவில்லை. மூன்று வாரக்கெடுவில் உரியவர்கள் வந்து கொண்டுபோகாவிட்டால் ஏலம் போடப்படும்" என்று எழுதி விளம்பரம் செய்து கெடு ஆனதும் ஏலம் போடு மாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் கேட்பாரற்ற பொருள்கள் ஏலத்தில் விடப்பெறும் ஒழுகலாறு தெரியவரும்.

## திருமணம் பற்றி

பரிசம் போட்டுக் கலியாணம் செய்து கொள்ளுதல்,[73] பூப்பு எய்துவதற்கு முன்னமேயே கல்யாணம் நடத்துதல்,[74] காணாத்தாலி கட்டுதல்[75] ஆகியவையும் அந்நாட்களில் நடைபெற்றன.

---

68. ச. ம. மோ. த. 9-9 69. 1-55 70. ச. ம. மோ. த. 27-80
71. 1-120, 4-855 71அ. 4-247; 2-275, 276; 2-54; 1-249 72. ச.ம.மோ.த 4-80
73. ச. ம. மோ. த. 6-881 74. 6-885 75. 6-425

## குண்டுபோடுதல்

மரியாதை செய்தற்பொருட்டும், நவராத்திரி போன்ற பண்டிகை நாட்களிலும் அரண்மனையில் குண்டு போடுதல் ஆகிய பழக்கம் இருந்தது. அரசனது பிறந்தநாளில் அரசரது வயது எவ்வளவோ அதைக்குறிக்கும் வகையில் அத்தனைக் குண்டுகள் போடப்படும் என்று ஓர் ஆவணம்[76] குறிப்பிடுகிறது.

## நவராத்திரி காலத்தில்

நாடோறும் 12 பேர்களைக் கொண்டு ரிக் யசுர் சாமவேத பாராயணம் நடக்கும்; 12பேர் ராமாயண பாராயணம் செய்வர்; நால்வர் சப்த சதி; திரிஸதி லலிதா சகஸ்ர நாமம், பவானி சகஸ்ர நாமம் ஆகியவற்றுக்குத் தனித்தனி இருவர், விஷ்ணு ஸஹஸ்ர நாமம், சிவ ஸஹஸ்ரநாமம், லக்ஷ்மி சூக்தம், தேவி சூக்தம், நாராயண ஹ்ருதயம், லெக்ஷிமி ஹ்ருதயம், நாராயண ஜெபம், அமிர்த மிருத்யும் ஜய ஜபம் ஆகியவற்றுக்கு அறுவர்; நவக்கிரக ஜபத்திற்கு ஒன்பதின்மர் ஆக அறுபதின்மர் கலந்துகொண்டு பாராயணம் ஜபம் முதலியன நடத்துவர்[77]

## விஜயதசமி ஊர்வலத்தில் வருபவர்

விஜயதசமி நாளில் அரசர் பரிவாரங்களுடன் ஊர்வலம் வருவது வழக்கம். அவ்வூர்வலத்துக்கு யார் யார் உடன் வரவேண்டும் என்று ஒரு திட்டம் வகுக்கப் பெற்றிருந்தது.

கலெக்டர், அவருடைய உதவியாளர், ஹுஜுர் கச்சேரி ஹவில்தார், சிரஸ்தேதார், லாயம் சிரஸ்தேதார், துபாஷி அவருடைய உதவியாளர்கள், தலைமை ஜவாப்நீஸ், தேவஸ்தானம் மத்தியஸ்தர் (கோயில் மேலாளர்), காவல் மத்தியஸ்தர், கஜானாகாரர், தாலுகா தாசில்தார், சௌகீதார், பாளையக்காரர்கள், மிராசுதாரர்கள், அணக்குடி பிள்ளை, வடபாதிமங்கலம் முதலியார், கலியாணபுரம் வரதையங்கார், காசித் தம்பிரான் ஆகியவர்கள் உடன் வருவதற்குரியவர் ஆவர்.[77அ]

இங்ஙனம் செல்கையில் 21 குண்டுகளும், வரும்கால் 21 குண்டுகளும், வன்னிமரம் பூசை செய்யுங்கால் 21 குண்டுகளும் போடுவது வழக்கம்,

## ஒரு வட்டத்துக் கிராமம் வேறொரு வட்டத்தில் சேர்த்தல்

ஒரு வட்டத்திலுள்ள ஊர் வேறொரு வட்டத்தில் சேர்க்கப்பட்டால்,[78] அவ்வூரவர் சர்க்காருக்கு 2 சேர் வெள்ளி கொடுப்பது வழக்கம் ஆகும். இது,

---

76. 1-59 77. 11-20, 21, 22. 77அ. ச, ம, மோ.த. 6-18
78. 2-155, 156, 157

"வட்டம் திருவாரூர் மாஹல் தாலுகா பொன்னவாசல் மாகாணம் கிராமம் கீழராதாநல்லூர் தென்பாதி சேர்ந்ததற்காக வெள்ளி எடை சேர் 2"[79] என்றும்,

"வட்டம் காடாரம்பம் மாஹல் தாலுக்கா கலப்பால் (களப்பாள்) மாகாணத்தில் சேர்ந்த கிராமம் வட்டம் மன்னார்குடி மேல்முகம் தாலுகா ரங்கநாதபுரம் சேர்வை நரவழி கலப்பால் (களப்பாள்) அனந்தராமையன் சேத்தி சேர்ந்ததற்காக வெள்ளி எடை சேர் 2"[80]

என்றும் வந்துள்ள குறிப்புக்களால் உறுதி எய்தும்.

## நகை செய்பவர் முச்சலிக்கை தருதல்

அரண்மனையில் பலப்பல காலங்களில் தங்கம் வெள்ளி நகைகள் செய்தமை எதிர்பார்க்கக் கூடியதே. அங்ஙனம் செய்யுங்கால் பொற்கொல்லர் முச்சலிக்கை ஒன்று எழுதித் தருவர்.

"அரண்மனையில் தங்கம் வெள்ளி நகைகளின் வேலை பார்த்துவருகிறோம்; தவறுதலாக வேலையில் பிசகு ஏற்பட்டாலும் வைத்த இடத்தில் காணாமற் போய்விட்டாலும் சர்க்கார் சொல்லும் தொகைகளுக்கு நாங்கள் எங்கள் வீடு வாசல்களை ஈடு செய்து கொடுக்கிறோம்"

என்பது முச்சலிக்கை வாசகம் ஆகும்.[81]

## யானைக்குப் பட்டம் கட்டுதல்

1842இல் விநாயக சதுர்த்தி இரவு 10 நாழிகைக்குப் பட்டத்து யானை "**விஜய எசவந்த**" இறந்தது. பிள்ளையார் ரதத்தில் சக்கரம் தாழ்வாக்க் கட்டி யானையை "ம்லாக்கப்" படுக்கவைத்துத் தலையில் போர்வை மூடிப் பூமாலைகள் போட்டு, வண்டிக்கு முன் கொம்பு தம்பட்டத்துடன் சென்று அடக்கம் செய்தார்கள். மறுநாட்காலை "**விஜயபிரதாப**" என்ற யானைக்குப் "**புண்ணியாக வாசனம்**" **செய்து பட்டம் கட்டித் தாஸ்தான் மால் தோட்டத்தில்** "முகூர்த்தம்" செய்தனர். பின்னர் யானையைச் "சிங்காரித்து" நகரத்தைச் சுற்றி வரச் செய்தனர்.[82]

## பொதுமக்கள் தருமம் செய்தல்

அறம் செய விரும்பும் மக்கள் தம்மால் ஆன அறங்களைச் செய்துள்ளனர். கி. பி. 1779இல் ராஜஸ்ரீ சிம்மராஜ நரஹரி பண்டிதர் நரசிங்கம் பேட்டையில் புது அக்கிரகாரம் கோயில் அமைத்தார்.[83] வல்லத்து "இஞ்சினியர்"

79. 11-226 80. 11-227 81. ச. ம. மோ. த. 5-14
82. ச. ம. மோ. த. 9-26 83. ச. ம. மோ. த. 4-10

சிதம்பரம்பிள்ளை கோட்டைக்குள் அய்யங்குளம் வடகரையில் ஒரு கோயில் கட்டினார். "அது பழுதாயிருக்கிறது; அதைப் பழுதுபார்க்க வேண்டும் என்று 2—5—1846க்குரிய ஒரு கடிதம் உள்ளது, மேலும் அவரே கோட்டை வெளியில் நந்தவனம், தண்ணீர்ப்பந்தல், கஞ்சிச்சாவடி, பசுக்கள் தண்ணீர் குடிக்கத் தொட்டிகள் அமைத்தார்.[84] ராமப்பா என்பவர் வல்லத்துக்குப் போகும் வழியில் இருக்கும் குளக்கரைப் பக்கத்தில் சிவாலயம் கட்டி நந்தவனம் செய்து சரபேந்திரபுரம் என்று புதியவூர் அமைத்து அன்னசத்திரம், துவாதசிக்கட்டளை, அந்தணர்க்கு உணவு, தண்ணீர்ப் பந்தல் ஆகியவற்றை அமைத்தார்.[85]

## நரபலி

வடக்கு வீதியில் ராமராவ் ஜாதோ என்பவர் வடக்கேயிருந்து "பட்டு" என்ற பைராகியை வரவழைத்து, மேலவீதி சோமநாத பண்டிதர் வீட்டில் இருக்கச் செய்தார். ஒரு "ஜெப சாலை" அமைத்துப் பிராமணர்களைக் கொண்டு ஜெபம் செய்விக்கப்பட்டது. அன்றியும் ராமசாமி கோயிலில் பத்திரகாளி சிலையை அமைத்துக் காளிக்குப் பலி கொடுத்தால் காளி நேரே தோன்றுவாள் என்று கருதினார். ஆகவே ஒரு பெண்ணைப் பலியிடுவதற்கு விலைக்கு வாங்கினர். இச்செய்தியைச் சுப்பராம சாத்திரி என்பவர் ரெஸிடெண்டுக்குத் தெரிவித்தார். ரெஸிடெண்டு விசாரித்தபொழுது சர்க்காரிலிருந்து மறுப்பு வந்தது. இதனால் நரபலி தவிர்க்கப்பட்டது என்று அறியப் பெறும்.[86]

## அரசர் பெயரால் ஊர் அமைத்தல்

மேல் வல்லத்துக்குப் போகும் வழியில் **சரபேந்திரபுரம்** என்ற பெயரில் ஊர் அமைத்தது கூறப்பெற்றது. கி. பி. 1762 **துளஜா ராஜா** பெயரால் ஒரு ஊர் ஏற்படுத்த முகூர்த்தம் செய்யப்பட்டது.[87] தத்தாஜி அப்பாவுக்குக் கும்பகோணத்தில் 50 வேலி சுரோத்திரியம் கொடுத்து அதற்குச் **சரபோஜி ராஜபுரம்** என்ற பெயரிடப்பெற்றது.[88] மாரியம்மன் கோயிலுக்குக் கிழக்கே சந்தை முதலியன நடத்தும் பகுதிக்கு **யமுனாம்பா பேட்டை**[89] என்று 1788 இல் பெயர் தரப்பெற்றது.

## ஊர்களுக்குப் பெயர் மாற்றுதல்

கி. பி. 1786இல் அமர்சிங்கர் காலத்தில் மீனமேஸலுக்கு ராஜகுமாராம்பாபுரம் என்றும், இராஜாமடத்துக்கு மோகனாம்பாபுரம் என்றும் பெயர்கள் மாற்றப் பெற்றன. யமுனாம்பாள்புரம் என்பது நீடாமங்கலத்துக்குரிய மறு பெயர் ஆகும்.[90] ராஜம்மா பேட்டைக்கு அம்மாபேட்டை என்று பெயர் மாற்றம்

84. 6-100, 101    85. ச. ம. மோ. த. 28-84, 86
86. 6-140 முதல் 147 வரை; 5-244 முதல் 252 வரை.    87. 1-147
88. 2-221    89. 8-154, 158    90. 7-781

தரப்பெற்றது.[91] கி. பி. 1771இல் திருபுவனத்துக்கு "அமர்சிங்க மகாராஜபுரம்" என்று பெயர் வைக்கப்பட்டது.[92] விளங்குளம் என்ற ஊர்க்குச் சுலக்ஷணம்பாபுரம் என்று பெயரிடப் பெற்றது.[93]

## குதிரை யானை முதலியவற்றுக்குப் பெயர்கள்

மக்கள் தாம் விரும்பும் அல்லது வளர்க்கும் உயிரினங்களுக்குப் பெயர் வைப்பது கண்கூடு. அந்த முறையில் மராட்டிய அரசில் யானை முதலியவற்குப் பெயர் சூட்டியிருந்தனர்.

குதிரைகட்குச் சம்பூரண பிரசாத்[94], கிரி ராஜ்[95], லக்ஷ்மி வதா[99], லக்ஷ்மி ராஜ ஸாம்ராட்[67] என்ற பெயர்கள் இடப்பெற்றிருந்தன.

யானைகளுக்குப் பட்டாபி ராம்[98], மோதி ராஜ்[99], விட்டலப் பிரசாத்[100], ஸிரதா ராஜ், மாணிக்க ராஜ்[101], பவானி பிரசரத், கோதாவரி பிரசாத், விஜய ராமபாணா, சுக்கிரதீப, வல்லி பிரசாத், சரஸ்வதி பிரசாத், அன்னபூர்ணா பிரசாத்[102], விஜயலக்ஷ்மி[103] என்று பெயர்கள் இடப்பெற்றிருந்தன.

யானைக்கன்றுகளுக்குச் சம்பு பிரஸாத்[104], கன்னியாகுமாரி[105], ஸரஸ்வதி பிரசாத்[106], பவானி பிரசாத்[107], காமாட்சி[108], பார்வதி[109], ஜாவ்ஜீ பிரசாத்[110] என்பன பெயர்களாம்.

ராஜஸபாயி அமணி ராஜே இடம் இருந்த யானைக்குத் தரும சம்வர்த்தனி என்று பெயர்.[111] இது 1850இல் இறந்துவிட்டது.

1846இல் வைத்தீசுவரன்கோயிலில் தையல்நாயகி என்ற யானையும், திருவாலங்காட்டில் பெரியநாயகி என்ற யானையும், மன்னார்குடியில் செங்கமலம் என்ற யானையும், திருபுவனத்தில் தர்மசம்வர்த்தனி என்ற யானையும் இருந்தன.[112]

1814இல் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு ஒரு யானைக்கன்று அளிக்கப்பட்டது. அதற்கு ஆனந்தவல்லி[113] என்பது பெயர்.

---

91. 7-658
92. ச. ம. மோ. த. 7-9
93. 5-8
94. 1-228
95. 1-241
96. 2-178
97. 2-194
98. 1-166
99. 1-238
100. 5-809
101. 5-45
102. ச. ம. மோ. த. 8-19
103. ச. ம மோ. த. 4-10
104. 1-28
105. 1-286
106. 1-827
107. 1-828
108. 5-440
109. 5-217
110. 2-261
111. ச. ம. மோ. த. 5-4
112. 4-811
113. 2-259

## லக்ஷார்ச்சனை லக்ஷதீபம்

பெரிய கோவில் சுவாமிக்கு லக்ஷம் வில்வார்ச்சனை, கடைவீத் இராமசுவாமிக்கு லக்ஷம் பன்னீர்ப்பூ அர்ச்சனை, கிருஷ்ண சுவாமிக்கு பாரிஜாத புஷ்பார்ச்சனை நடத்தப்பெற்றன.[114] மோஹனாபாய் அவர்கள் 1780இல் லக்ஷம் தீபம் ஏற்றுவதற்கு இலுப்பை எண்ணெய் 30 ஆடம் அளிக்கப் பெற்றது.[115]

## சோதிடம்

சோதிடத்தில் மிக்க நம்பிக்கையுடையவராகப் பெரும்பான்மையோர் இந்நாட்டில் விளங்குவது கண்கூடு. மராட்டிய மன்னர்கள் பிராமணர் புடைசூழ அவர்தம் சொற்படி நடந்தமையின் சோதிடத்தில் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆகவே கோள்களினாய கெடுதிகளினின்று பரிகாரம் பெற ஆவன செய்தனர்.

"1827: ரா. திவான் சாகேப் ராசிக்கு 12ஆம் இடத்தில் ஏழரை நாட்டான் சனி வருவதால் ஸ்ரீ பஞ்சநதேசுவர க்ஷேத்திரத்தில் பிரணதாப்திஹர ஸ்வாமிக்கு 11 நாட்கள் ருத்திர பாராயணமும் அபிஷேகத்திற்கும் $3\frac{1}{2}$ பணம்"[116]

"1776: மகாராஜா அவர்களுக்குக் கிரகங்கள் சரியாக இல்லை ஆகையால் அதற்காக ஜபங்கள், சூரிய நமஸ்காரம், சூரிய ஜபம், சூரிய கவசம் சூரிய ஸ்தோத்திரம், அங்காரக ஜபம், அங்காரக ஸ்தோத்திரம்; பிரகஸ்பதி ஜபம், கவசம், ஸ்தோத்திரம், ராகு கவசம், ஸ்தோத்திரம், ஜபம், பிராமணர்கள் 26 பேர்; இவர்களுக்குத் தினமும் 7 சக்கரம் 8 பணம்; 30 நாள் ஒரு மண்டலம் கொடுக்கிறது"[117]

இங்ஙனம் நாளும் கோளும் சரியாக இல்லாத காலங்களில் மேலே குறித்தவண்ணம் தோத்திர பாராயணங்கள் முதலியன நடத்தப்பெற்றன.

## மகப்பேற்றுக்கு

கிரகசாரம் அதாவது தீய கோள்களினால் மகப்பேறு தடைப்படும் என்பது சிலருடைய நம்பிக்கை. ஆகவே தீயகோள்களினாய தீமைகளை போக்குவதற்கு அபிஷேக ஆராதனைகள் செய்வதுண்டு; மந்திரங்கள் ஜபித்தல் முதலியனவும் நடைபெறும்.

நாச்சியார்குடி என்பது ஒரு வைணவத்தலம். பெருமாளுக்குப் "புஷ்ய சுக்லபக்ஷம் திவிதியை அல்லது திருதியையில்" கொடியேற்றம் செய்ய

114. 1-248
115. 8-162
116. 4-208
117. ச. ம. மோ. த. 17-76

கொடியேற்றும் நாளில் " சுவாமி சன்னதியில் பூர்ண கும்பத்தில் மந்திரித்துத் தீர்த்தத்தை ஸ்தாபனம் செய்து பின் துவஜஸ்தம்பத்திடம் வைத்துப் பூசை செய்து தீர்த்தம் வழங்குவர். முதலில் தீர்த்தம் வாங்குபவருடைய மனோரதம் நிறைவுறும். அத் தீர்த்தத்தைக் கொணர்ந்து ஸ்ரீமந்த் ஸ்ரீசாயேபும் சௌ. பாயி சாயேபுகள் இருவரும் ஸ்நானம் செய்யவேண்டும்; அப்படிச் செய்தால் புத்திரன் உண்டாம் " என்று ஒரு ஆவணத்தில்[118] உள்ளது.

" ஒரு கோடி ஸந்தான கோபால மந்திரம் ஜபித்துப் பன்னிரண்டு கிராம்பு புத்திர சந்தானம் உண்டாவதற்காகக் கொடுப்பது " என்று பிறிதொரு குறிப்பு[119] உள்ளது.

" மேலே கண்ட மந்திரத்தை ஜபித்து அந்த ஜபத்தின் பிரபாவத்தினால் பஞ்ச பாண்டவர்கள் தோன்றினர். சௌபரி என்ற மந்திரத்தை ஜபித்து ஒருவனுக்கு ஆயிரக்கணக்கான புத்திரர்கள் தோன்றியுள்ளனர். இந்த மந்திரத்தை நேரில் உபதேசிக்க வேண்டும் " என்று ஒருவர் மன்னருக்கு எழுதியுள்ளார்.[120]

" மாசி மாசம் சுக்லபக்ஷம் திவிதியை திருதியை வெள்ளிக்கிழமை வியதிபாதம் இவை சேர்ந்தால் அது ஒரு சிறந்த காலம். அத்தகைய நாளில் புத்திர சந்தானத்துக்குப் பாயஸம் தானம் செய்யவேண்டும் என்பது ஸ்காந்த புராணம் மாக மான்மியத்தில் இருக்கிறது. இப்பொழுது எல்லாமும் சேர்ந்திருக்கிறது. அன்று பாயஸம் செய்து ஸ்வாமிக்கு நிவேதனம் செய்து ஜபம் செய்யும் பிராமணர்களுடன் 40, 45 பேருக்குத் தக்ஷிணையும் தரவேண்டும் " என்று கூறியதற்கிணங்கத் தரப்பட்டது.[121]

" மேலும் பாத்ரபதம் சுக்லபட்சம் புரட்டாசி மாதம் சப்தமியன்று தேவகியம்மையார் தமக்குக் குழந்தை உண்டாகவேண்டுமென்று பன்னிரண்டு " மாண்டே " என்னும் பலகாரத்தைச் செய்து ஒரு பிராமணனுக்குத் தானம் கொடுத்தாள். இதனால் கண்ணன் பிள்ளையாகப் பிறந்தான். ஆகவே மாக மாசம் சுக்லபக்ஷம் இரத சப்தமி உத்தமமான நாள்; இன்று " மாண்டே "[122] செய்து 12 வருஷங்களுக்கு உரிய அத்தனையும் ஒரே நாளில் 12 பிராமணர்களுக்கு 12 வீதம் தாம்பூலம் தக்ஷிணையுடன் கொடுக்கவேண்டும் " என்றமைக்கேற்பக் கொடுக்கப்பட்டது.[123]

—இதுகாறும் கூறப்பெற்றவை இரண்டாம் சிவாஜி காலத்தனவாகலாம்.

118. 1-86 119. 1-88 120. 1-88, 89 121. 1-89, 40

122. மாண்டே, ரவாவினால் செய்யப்படும் பணியாரம்; கூடையைக் கவிழ்த்தாற் போலிருக்கும்: 1-41

123. 1-41, 42

கி. பி. 1776இல் இரண்டாம் துளஜா காலத்தில், "சந்தான கோபால கிருஷ்ண ஜபம், இரண்டாவது மண்டலம், 45 நாட்களுக்கு 54 சக்கரம் ; நாள் ஒன்றுக்கு 12 பணம் வீதம்" என்ற குறிப்பினால்[124] துளஜா காலத்திலும் இம்மந்திரம் 90 நாட்கள் புத்திரப்பேற்றின் பொருட்டு ஜபம் செய்யப்பெற்றமை அறியலாம்.

## பஞ்சாங்கம் தயாரித்தல்

பஞ்சாங்கம் என்பது திதி வார நக்ஷத்திரம் யோகம் கரணம் ஆகிய ஐந்தையும் காட்டும் நாட்காட்டியாகும். தஞ்சை மராட்டிய மன்னர்கள் தாம் பயன்படுத்திக் கொள்வதற்காகப் பஞ்சாங்கங்கள் கணிக்கச் செய்தனர். கி. பி. 177இல் பஞ்சாங்கம் கணிப்பவராக எட்டுப் பேர்களின் பெயரை ஒரு ஆவணம்[125] கூறுகிறது. அவர்களுள் நால்வருக்கு ஆண்டொன்றுக்கு 150 கலம் வீதமும், எஞ்சிய நால்வருக்கு 100 கலம் வீதமும், ஆக 1000 கலம் நெல் தரப்பெற்றது. கி. பி. 1793இலும் பஞ்சாங்கம் கணிப்பவர் எண்மர் இருந்தனர். அவர்களுக்கு 1000 கலம் நெல் தரப்பெற்றது என்று ஓராவணக்குறிப்பு[126] உள்ளது. அச்சில்லாத காலத்தில் அவை கையால் எழுதப்பட்டனவாதல் வேண்டும். கி. பி. 1814க்குரிய குறிப்பினின்று[127] பஞ்சாங்கங்கள் அச்சிடப்பெற்றன என்று அறிய வருகிறது.[128] ஆண்டுதோறும் வருஷப்பிறப்பு நாளில் பஞ்சாங்கம் படிக்கப்பெற்றதாதல் வேண்டும்[129] கி. பி. 1801க்குரிய குறிப்பு[130] பஞ்சாங்கம் கணிப்போருக்குக் கொடுக்கப்பெற்றுவந்த "மான்யம்" (ஊதியம்) படிப்படியாகக் குறைக்கப் பெற்று வந்தமை தெரிவிக்கிறது.

## அலுவலர்கட்குக் கட்டுப்பாடுகள்

2—3—1827இல் (கலெக்டர்) ஆணையொன்று[131] அலுவலர்கட்குச் சில கட்டுப்பாடுகளை விதிப்பதாக உள்ளது. அது பின்வருமாறு :—

"கலெக்டர் கச்சேரி உத்யோகஸ்தர்கள் வீட்டுக்கு மிராசுதார்களோ அல்லது அவர்களுடைய காரியஸ்தர்களோ போகக்கூடாது. உத்தியோகஸ்தர்களும் மிராசுதாரர்கள் அவர்களுடைய காரியஸ்தர்கள் வீட்டிலோ வேறு எந்த இடங்களிலும் இரகசியமாய்ப் பேசக்கூடாது. உத்தியோகஸ்தர் ஒருவருடைய வீட்டுக்கு மற்றொருவர் சென்று அரசுச் செய்திகள் பேசுவதும் யோசனை செய்வதும் கூடாது. இதுபற்றித் தெரிந்தால் அவர்கள் நீக்கப் பெறுவர் ; அபராதமும் செலுத்தவேண்டிவரும்."

—இத்தகைய ஆணை கும்பினியார் ஆட்சியைக் கைப்பற்றிய காலத்ததாகும்.

---

124. 1-156
125. ச. ம. மோ. த. 15-20
126. ச. ம. மோ. த. 7-40
127. 2-257
128. 2-257
129. 5-222
130. 4-848 ; 2-279 ; ச. ம. மோ. த. 5-5
131. 1-57, 58 ; ச. ம. மோ. த. 24-37

ஏறத்தாழ இதே சமயத்தில் அதாவது 9—7—1828இல் சர்க்கார் அலுவலர்கட்கும் ஒரு எச்சரிக்கை தரப்பெற்றுள்ளது.

" உமையாள்புரம் – அவ்விடத்தில் யாராவது தொல்லை தந்தால் சர்க்காரைச் சேர்ந்தவர்கள் அடிதடி செய்யாமல் இருக்கவேண்டும். பிறர் வந்து நாலடி அடிக்கிற வரையில் பொறுத்துக்கொள்ளவேண்டும்; எதிர்த்துச் சண்டையிடக்கூடாது" என்பது அவ்வெச்சரிக்கையாகும்.[131அ]

## அரச குடும்பத்தார்க்குப் புத்தாடை

அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கட்குச் சில பண்டிகை நாட்களில் புத்தாடைகள் வழங்கும் வழக்கம் இருந்தமை புலப்படுகிறது. அந்நாட்கள்,

" நவராத்திரி, விஜய தசமி, தீபாவளி, வசந்த பஞ்சமி, ரத சப்தமி, மகா சிவராத்திரி, ஹுஜூரின் அப்த பூர்த்தி ( பிறந்தநாள் ), காமன்பண்டிகை ( ஹோலி ), மராத்தி வருஷப் பிறப்பு, நாக பஞ்சமி "

என்று ஓராவணக்குறிப்பில்[132] உள்ளன.

## கையொப்பமும் முத்திரையும்

சில ஆவணங்களின் தொடக்கத்தில் " பரவானகி "[133] என்றிருக்கும். " பரவானகி " என்பது அரசன் இடும் ஆணை. இவ்வாணையில் அரசரது கையொப்பம் இருக்காது எனத் தெரிகிறது.[133அ] கையொப்பம் இடுவதாயின் பெரும்பான்மை " ஸ்ரீராம் பிரதாப் " என்று கையொப்பம் இடுவது பழக்கம்.[134] " ஸ்ரீராம் பிரதாப் "[134அ] என்ற முத்திரையும் உண்டு.

அரசாங்க முத்திரையில் " பிரதாப வீரகரவாஸிநீ " என்று தேவநாகரி எழுத்தில் இருக்கும்.[135] சேவகர்கள் வெள்ளிவில்லை தங்கவில்லைகள் கொடுக்கப் பெற்றிருப்பர். வெள்ளி வில்லைகளில் ' ஸ்ரீராம் பிரதாப் ' என்றும், தங்க வில்லைகளில் ' வீரஸ்ரீ சிவாஜி மகாராஜா சத்ரபதி அவர்களின் சுபடர்சள் " என்றும் எழுதப்பட்டிருக்கும்.[136]

---

131அ. 6-450 132. ச. ம. மோ. த. 8–43

133. 1-146, 148, 161, 162 ; Purvana - A written command : P. 349, Glossary, History of Jagannath Temple, Prabhat Mukherjee, Calcutta, 1977

133அ. " It purports to be a parvanikai ; it does not bear signature ; ParvaniKai huzur means personal order " – P. 9, Deposition of M. S. Ghantigai, O. S. No. 26 of 1912

134. 5-1 134அ. 5–290 135. ச. ம. மோ. த. 2-14

136. ச. ம. மோ. த. 1-80, 81

## "ஸ்ரீபிரதாப வீரகரவாஸினி" பற்றிய குறிப்பு

வீரகரவாஸினி என்பது அரசாங்க முத்திரையாகும். இது கரவீரவாஸினி என்றிருத்தல் வேண்டும்; தஞ்சையில் மராட்டியர் அரசு அமைத்தபொழுது முத்திரையைச் செய்த தொழிலாளி "கரவீர" என்பதை "வீரகர" என்று தெரியாமல் மாற்றினராதல்[136அ] வேண்டும்; அங்ஙனமே பின்னர் வழக்கில் வந்திருக்கக்கூடும்; 'கரவீரவாஸினி' என்பது மகாலக்ஷ்மியைக் குறிக்கும்; கரவீர என்பது கோலாபூர்; இக்கரவீரத்து மகாலக்ஷ்மி அம்பா பாய் என்றும் குறிக்கப்படுவர்; அம்பாபாய் கோலாபூர் அரசரது குலதெய்வம் ஆகும்; இதுபோன்று கருதப்படும் தெய்வம் "பவானி" அம்மன்; இப்பவானியே சிவாஜி போற்றிய கடவுள் ஆவர். பிரதாப என்பது பிரதாப கடாவில் உள்ள தெய்வத்தைக் குறிப்பதாகலாம்; பிரதாப கடா என்பது சதாரா மாவட்டத்து மஹாபலேசுவரத்திலுள்ளது. ஆகவே கோலாபூர் சதாரா ஆகிய இவ்விரிடங்களிலும் ஆட்சிபுரிந்த அவரது இரு தெய்வங்களை இந்த முத்திரை குறிப்பதாக இருக்கிறது. பிரதாப என்பது வலிமை அல்லது பெருமை என்ற பொருளுடையதாகவும் கருதப்பெறலாம் - இங்ஙனம் மகாராட்டிரத்துப் பேராசிரியர் எஸ். ஜி. துல்பூல் ( Prof. S. G. Tulpule ) கருதுவது அறியத்தக்கது.[136ஆ]

## ஆண்டு முதலியன குறிப்பிடுதல்

ஆண்டு நாள் இவற்றைக் குறிப்பிடுதல் மிகச் சிறந்த முறையில் இருத்தல் குறிப்பிடத் தக்கது.

**சகரயாண்டு** குறிப்பிடுதல் பெரும்பான்மையென்னலாம். அதனுடன் பிரபவாதி ஆண்டுடன் சாந்திரமான முறைப்படி மாதம் பக்ஷம் திதி நாள் என்பவையும் குறிப்பிடப்பெறும்; ஓரெடுத்துக்காட்டு:—

"நிஜ ஆஸ்விஜ பகுள திரிதியா உபரி சதுர்த்தி ஸ்திர வாரம் அருணோதயம் சாலிவாகன சகே 1744 சித்ரபானு நாம சம்வத்ஸரம் ஸப்பர் 17வ."[137]

ஆஸ்விஜம் என்பது புரட்டாசித் திங்கள். சாந்திரமான முறையில் மாதங்களை எண்ணுங்கால் சில ஆண்டுகளில் 13 மாதங்கள் வரும். ஏதாவது ஒரு மாதம் இரட்டிக்கும். இரட்டிப்பின் முதல் மாதத்தை "அதிக மாசம்" என்றும், அடுத்ததை "நிஜ மாசம்" என்றும் கூறுவர்.

---

136அ. இங்ஙனம் தற்செயலாய் நிகழும் சொல் மாற்றத்தை ஆங்கிலத்தில் "Spoonerism" என்று குறிப்பிடுவர் எனத்தெரிகிறது

136ஆ. P. 38, The Modi Documents from Tanjore in Danish Collections - Edited, Translated and Analysed by Elisabeth Strandberg ( Franz Stainer Verlag, Wiesbaden ) 1983

137. 10-74.

பகுளம் என்பது தேய்பிறை; திரிதியா என்பது மூன்றாம் நாள் (திதி); உபரி – மேல்; சதுர்த்தி – நான்காம் நாள் (திதி); சகர ஆண்டுடன் 78 சேர்த்தால் ஆங்கில ஆண்டு வரும்; சித்ரபானு – "பிரபவ" என்பதை முதலாகக் கொண்ட 60 ஆண்டுகளில் ஒன்று; ஸ்திரவாரம் – சனிக்கிழமை.

ஸபர் – ஹிஜ்ரி அல்லது ஸுஹூர்ஸன் (முஸ்லிம்) ஆண்டுக்குரிய 12 மாதங்களில்[138] ஒன்று. **ஸுஹூர்ஸன்** ஆண்டு பின் வருவதில் குறிக்கப் பட்டுள்ளது:—

"சரஸ்வதி பாண்டாரம் ஜில்ஹாத் மாதம் 1ஆம் தேதி **சுஹூர்சன்** 1265 சைத்ர சுத்த 2, உபீரி 3, புதன்கிழமை பங்குனி மாதம் தேதி 18".

"**சுஹூர்சன்**" ஆண்டுடன் 599 ஆண்டுகளைச் சேர்த்தால் ஆங்கில ஆண்டுவரும். ஜில்ஹஜ் மாசமும் ஆச்வீஜ மாசமும் பொருந்திவரும். ஆனால் இக்குறிப்பில் சைத்ரம் என்று குறிப்பிட்டிருப்பதால் ஜில்ஹஜ் என்பது தவறு.

முஸ்லீம் ஆண்டுகளைக் குறிக்கும்பொழுது பிற்குறித்த வண்ணம் காணப்பெறும்:—

| | | | |
|---|---|---|---|
| "இஸனே | அர்பைன் | மயாதைன் | அலப்" |
| 2 | 40 | 200 | 1000 |

இது 1242 ஆகும். பிறிதொன்று,

| | | | |
|---|---|---|---|
| "ஸீத் | ஸல்லாசைன் | மயாதீன் | அலப்"[139] |
| 6 | 30 | 200 | 1000 |

இது 1236 ஆகும். மற்றொன்று,

| | | | |
|---|---|---|---|
| "ஸல்லால் | இஸரீன் | மயாதைன் | அலப்"[140] |
| 3 | 20 | 200 | 1000 |

இது 1223 ஆகும்.

---

138. முகரம், ஸபர், ரபி உல் அவ்வல், ரபிஉல் ஆஹிர், ஜமாதுவல், ஜமாதுல் ஆஹிர், ரஜப், ஷஃபான், ரம்ஸான், ஷவ்வால், ஜில்ஹாயிதா, ஜில்ஹஜ் என்பன ஹிஜ்ரி அல்லது சுஹூர்ஸன் ஆண்டு முறைக்குரிய பன்னிரு மாதங்களாம்.

139. 10-48 140. 10-82

140. "இஹிதே 1; இஸனே 2; ஸல்லாஸ் 3; அர்பா 4; கமஸ் 5; கீத் 6; சபா 7; சமான் 8; திசா 9; அஸர 10; அஸரீன் 10; இஸரீன் 20; ஸல்லாசைன் 30; அர்பைன் 40; கமஸைன் 50; சீதைன் 60; சபைன் 70; சமானைன் 80; திசேன் 90; மயா 100; மயாதைன் 200; அலப் 1000" – இவ்விளக்கத்தைத் தந்தவர் சரஸ்வதி மகால் மராட்டி பண்டிதர் திரு பீமராவ் அவர்கள்

"சந்த் 12உ ரஜப் மீ 1193 ஹிஜ்ரி; முத்திரை போடப்பட்டது; 1779 ஜுலை மீ 26உ அனுப்பியது.

"சந்த் 13உ ரஜப்மீ 1193 ஹிஜிரி; முத்திரை போடப்பட்டது 1779 ஜுலை மீ 28உ சேர்ந்தது "[141]

என்ற குறிப்பில் **ஹிஜ்ரி**[142] ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. ஹிஜ்ரி யாண்டுடன் 586 சேர்த்தால் ஆங்கில ஆண்டைப் பெறலாம் என்பது இதனால் அறியப் பெறும்.

**பசலி**[143] "1233 ஜுலை முதல் 1234 அக்டோபர் வரையிலுள்ள பாக்கித் தொகையைக் கஜானாவிலிருந்து கொடுக்கும்படி உத்தரவாகவேணும்"

என்ற குறிப்பில்[144] பசலி கொடுக்கப்பட்டுள்ளது. பசலி எண்ணுடன் 591 சேர்த்தால் ஆங்கில ஆண்டு வரும்.

"1801 ஜுன் 30ஆம் நாள் முதற் கொண்டு ஆங்கிலேய தேதி" என்ற குறிப்பால்[145] மேற்குறித்த முறை விடப்பெற்று ஆங்கில ஆண்டு குறிக்கிற வழக்கம் வரலாயிற்று என அறியலாம்.

## பறவைகள் முதலியன வளர்த்தல்

**பயிரி, லகட்** என்ற பறவைகள் வேட்டையாடுதலில் வல்லவை[146] எனத் தெரிகிறது.

1803இல் **பேசரி** என்னும் பறவை வாங்க 5 புலி வராகன் கொடுக்கப் பட்டது.[147]

1842இல் **ஐந்துவர்ணக்கிளி** ரூ. 3 கொடுத்து வாங்கப்பெற்றது.[148] ஆனால் 1834இல் ரூ. 24—4—0 கொடுத்து வாங்கப்பெற்றது என்றும், தரகு ரூ. 1—4—0 என்றும், கொண்டுவந்தவனுக்கு ஓராடை அளிக்கப்பெற்றது என்றும் ஒரு குறிப்பு[149] உள்ளது.

1829இல் கிளிகள் 50, குருவிகள் 50, மற்றப்பறவைகள் 44 வாங்கப்பெற்றன.[150]

---

141. 5-424, 425, 426
142. முகம்மது நபிகளின் மதீனா யாத்திரையினின்று கணக்கிடும் ஆண்டு முறை.
143. பசலி - கி. பி. 591 முதல் தொடங்குவதும் 1555ஆம் ஆண்டு அக்பரால் ஏற்படுத் தப்பட்டதுமான ஆண்டுமுறை
144. 5-1 145. 2-165 146. 1-38 147. 1-55
148. 1-161 149. 1-292 150. ச. ம. மோ. த. 4-12.

1821இல் **பேஷரா, சாயின்** என்ற பறவைகளும், பேசும் கிளிகள் நான்கும் பெறப்பட்டன.[151]

**ஸாரஸ்**[151அ] என்ற பறவைகள் இரண்டு ரூ. 64 கொடுத்து 1829இல் வாங்கப்பெற்றன. மேலும் 12—3—1821இல் காசிப்பயணம் செய்கையில் "ஸாரஸ என்னும் பறவைகள் 1 ஜோடி தாஸ்தான் மஹாலிலும் எஞ்சிய 4 சிவகங்கைத் தோட்டத்திலும் விட்டு நாடோறும் உயிருள்ள மீன்கள் அரிசி நெல் சாதம் வைத்து விரும்பியவண்ணம் திரியுமாறு அவற்றை விட்டுவிடுக" என்ற ஆணையுடன் அனுப்பப்பெற்றன.

உடையார்பாளையத்திலிருந்து **பேசர்வகண்டேகர்** என்ற பறவைகள் கொண்டுவரப்பெற்றன.[152]

24—3—1831இல் "**சேர்நவை**" என்ற சாதிப்பறவைகள் 13 வாங்கப் பெற்றுச் சிவகங்கைத் தோட்டத்தில் காப்பாற்றப் பெற்றன.[153]

1829இல் செர்மின் (German) தேசத்துக் கிளி வாங்கப்பெற்றது. திவான்சாகேப் வேட்டைக்குப் போனபொழுது **நாராயண பக்ஷி** என்றதை ஒரு வேட்டைக்காரன் கொடுத்தான்.'[154]

1829இல் வேட்டை மகாலுக்குரிய அலுவலன் சர்க்காருக்குச் **சிக்ளீ கிளிகள்** இரண்டு கொடுத்தனன் என்றும், அவ்விரண்டின் விலை ரூ. 200 என்றும் ஓராவணம் கூறுகிறது.[155]

வேட்டை மகால் மருதை யென்பவன் "**வன பூஷணம்**" என்ற பறவையைக் கொடுத்தனன்.[156]

1779இல் "டோல" என்னும் பறவை 2½ வராகனுக்கு வாங்கப்பெற்றது[157]

இங்ஙனம் பலவிதமான பறவைகள் வேட்டை மகாலில் சேகரிக்கப் பெற்றன என்று பல ஆவணக்குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

## ஜவ்வாது பூனை

ஜவ்வாது பூனைகள் வளர்க்கப்பெற்று வந்தமைக்குப் பல ஆவணக் குறிப்புக்கள் உண்டு.[158] ஜவ்வாது பூனைக்கு வெய்யில் தாக்காமல் குளிர்ச்சி பெறும் பொருட்டு இளநீர் கொடுக்கப்பெற்றதாகத் தெரிகிறது.[159]

---

151. ச. ம. மோ. த. 4-18 151அ. 5-203, 204; ஸாரஸ: சக்கரவாகம்-இரவில் இணை பிரிந்து வருந்துவதாகக் கூறும் பறவை. 152. ச. ம. மோ. த. 4-15; 9-39
153. ச. ம. தோ. த. 16-44 154. 4-250 155. 4-245
156. 4-227 157. 2-305
158. 1-289; 2-111, 112; 5-309, 810; 4-485. 159. ச. ம. மோ. த. 3-30

## பிற விலங்குகள்

யானை குதிரை ஒட்டகங்கள் பலப்பல இருந்தன என்பதற்குச் சான்று உண்டு. வேட்டை மகாலில் 493 விலங்குகள் இருந்தன என்றும், அவற்றுள் 9 புலிகள் என்றும் அறியப்பெறும்.[160] கருங்குரங்குகள் இரண்டு இருந்தன வாதல் வேண்டும்.[161] நெருப்புக்கோழிகளும் கொணரப்பட்டன.[162]

## மாடுகள்

கி. பி. 1774இல் *சீமையினின்று* பல கன்றுக்குட்டிகள் 620 வராகன் கொடுத்து வாங்கப்பெற்றன.[162அ]

## நாய்கள்

கி. பி. 1765இல் சீமையிலிருந்து சென்னைக்கு வந்த நாய்கள் பல தஞ்சாவூர்க்குக் கொண்டுவரப்பட்டன என்று ஒரு குறிப்பு[163] உள்ளது. கி. பி. 1832இல் வெங்கட்ராவ் மூலம் வேட்டை நாய்கள் ரூ. 2300க்கு வாங்கப் பெற்றன.[164]

## சில வழக்காறுகள்

" 24—4—1831 : இடையன் இராமசாமி நாயக்கன் தன்னுடைய கழுத்தை அறுத்துக் கொண்ட விஷயத்தில் சிகிச்சை செய்ய வைத்தியருக்கு ரூ. 15 கொடுத்துச் செலவு எழுதும்படி உத்தரவாக வேண்டும் என்று ஸர்க் கேலுக்கு எழுதியது "

என்று ஒரு குறிப்பு[165] உள்ளது. இடையன் ஏன் கழுத்து அறுத்துக் கொண்டனன் என்று தெரியவில்லை. மாடுகளைப் பராமரித்தல் முதலாய பணிகள் செய்தபொழுது எதிர்பாராத வண்ணம் கழுத்துக்கு ஊறு நேர்ந் திருக்கலாம் போலும். அலுவலில் இருந்தபொழுது "விபத்து" நேர்ந்தமை யால் சர்க்காரே வைத்தியச் செலவை ஏற்றுக் கொண்டதாதல் வேண்டும்.

**அமாவாசை** நாளில் பகல் 1 மணிவரையில் கச்சேரிக்கு **விடுமுறை** விடுவதும் ஒரு பழைய வழக்கு.[166]

" ஆஜர் பார்க்காமல் பென்ஷன் வழங்கக்கூடாது " என்று ஒரு குறிப்பால்[167] தெரிகிறது. இதனால் ஓய்வு ஊதியம் பெறுவோர் நேரில் சென்றே " பென்ஷன் " பெறவேண்டும் என்பதும் விதியாதல் பெறப்படும்.

---

160. 5-299
161, ச. ம. மோ. த. 5-44
162. ச. ம. மோ. த. 13-33
162அ. 3-174, 175
163. 2-9
164. ச. ம. மோ. த. 4-1
165. 1-222
166, 1-74
167. 1-114

இந்நாளில் கல்வெட்டுக்களைப் படியெடுத்தலில் வல்லுநர்கள் சிலர் உள்ளனர். அங்ஙனமே கி. பி. 1845இல் ஒருவர் இருந்தார். அவர் பெயர் திருவேங்கட அய்யங்கார் என்பதாகும்.

"சித்திரக்காரர் கோவிந்தசாமி மேஸ்திரியின் மூலம் திருச்சிராப்பள்ளி திருவேங்கடத்தையங்கார் – இவரிடம் கல்லில் எழுத்துக்கள் எழுதிக் காகிதத் தில் அச்சடிக்கும் வேலையைக் கற்றுக்கொள்ள மேற்கண்ட அய்யங்காருக்கு 30 சக்கரம்"[168]

என்றமையால் கல்லில் எழுதப்பெற்றிருந்த எழுத்துக்களைக் காகிதத்தில் பதிய வைத்துப் படிக்கிற கலையை அறிந்தவர் இருந்தனராதல் கூடும். சிலாலிகித அட்டலிபி சுப்பையா என்றொருவர் இருந்தார். அவர் எட்டு வகையான மொழிகளில் எழுதப்படும் எழுத்துக்களைப் படிக்கும் திறனுடையராக இருந்தார் எனவும் தெரிகிறது.[169]

168. ச. ம. மோ. த. 25-33 169. 2-279

# 25

# அந்தணர் செய்த யாகங்கள்

## அக்னிஷ்டோமம்

இது தலையாய யாகம்; வசந்தகாலத்தில் ஐந்து நாட்களில் செய்து முடிப்பது. "அக்னிஷ்டோம ப்ருஷ்டஸாமா" என்ற சாமவேத மந்திரத்தினால் முடிவதால் இதற்கு அக்னிஷ்டோமம் என்று பெயர்.

திருவாலங்காட்டில் வசிக்கும் அப்பய்ய தீக்ஷிதர் வழியினர் குப்பா தீக்ஷிதர் கி. பி. 1824இல் அக்னிஷ்டோம யாகம் செய்திருக்கிறார்.[1] சிவராமபுரியிலிருக்கும் ராமா வாஜபேயரின் தகப்பனார் இந்த யாகத்தை 1825க்கு முன்னர்ச் செய்துள்ளார்.[2]

கி. பி. 1836இல் மந்திரிவர்ய ராஜஸ்ரீ சதாசிவ கேசவ தீக்ஷித் பண்டித் அவர்களும், [2அ] சேனாதிபதி கிருஷ்ணாஜி கேசவ் தீக்ஷித் பண்டித் அவர்களும், சேனா துரந்தரர் பிரவேகாகாரிய ராஜேஸ்ரீ சோமநாத சதாசிவ தீக்ஷித பண்டித் அவர்களும், சேனா துரந்தரர் ராஜேஸ்ரீ கங்காதர ரக்மாஜி அவர்களும், சேனா துரந்தரர் வராகப்பைய தீக்ஷிதர் அவர்களும், தருமையா தீக்ஷிதர் அவர்களும் வெங்காஜி ரக்மாஜி தீக்ஷித் அவர்களும் மேற்கண்ட யாகம் செய்துள்ளார்கள்.[3]

இந்த யாகத்துக்காக "அவிஸ்"[3அ] பெறற்குரிய ஆடுகள் (பசு) விலை பற்றி மேலே குறிப்பிட்ட ஆவணக்குறிப்பு அறிவிக்கிறது.

---

1. ச. ப. மோ. த. 5-85
2. ச. ம. மோ. த. 4-87
2அ. 12 பக்கம் 880
3. ச. ம. மோ. த. 8-25
3அ. வேள்வித்தீயில் தேவர்க்குக் கொடுக்கும் உணவு

" தச்சன் கம்மாளன் குயவன் வகேறாக்கள் கேட்டுக்கொண்டது; அக்னிஷ்டோம யக்ஞத்தில் பசு 1க்கு 5 பணம் கிடைக்க வேண்டும்" என்பதால் (சிறந்த) உறுப்பு இலக்கணம் பொருந்திய பசுவொன்றுக்கு 5 பணம் கேட்டனர் எனத்தெரிகிறது.

## பசுபந்தம்

இது 18 வகை யாகங்களுள் ஒன்று; ஆண்டு ஒன்றுக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் செய்யப்பெறும்; இரண்டு அல்லது ஒரு நாளில் செய்யப்பெறுவது.

1827க்குரிய குறிப்பொன்று[4] குப்பா சுரௌதிகள் சிவகங்கைத் தென் கரையில் ஒரு பசுபந்தம் செய்தற்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தமை கூறுகிறது. மகாதேவபட்டுக்குமங்ஙனமே கொடுக்கப்பெற்றது. அதில் கிருஷ்ண தீக்ஷித் என்பவருக்கு "யக்ஞேசுவர தட்சணையாக 15 ரூபா மொகரா, நாகம்பட்டை கோசுவாமிக்கு 20 சக்கரம், ஆசிருதர் அப்பா தீக்ஷிதருக்குத் தங்கரூபா 1, கங்காதர தீக்ஷிதருக்கு 16 சக்கரம் கொடுத்தமை காணப்பெறும்.

நாகபட்டு சதாசிவபட்டு லாண்டகே என்பார் 1829இல் 'வர்ஷ பசு' செய்தார். அப்பொழுது அரசர் சென்று "யக்ஞேசுவரருக்குச் சக்கரம் 20" தக்ஷிணையாக அளித்தார்.[5]

## வாஜபேயம் - சோடசீ

இது அந்தணர்களாலும் அரசர்களாலும் செய்யப்பெறும் யாகங்களுள் ஒன்று. இது "சரத்ருது"[5அ]வில் செய்யப்பெறுவது. இதில் ரதாரோகணம் (தேரில் ஏறுதல்) சுவேதா சத்ர தாரணம் (வெண்குடை பிடித்தல்) முதலிய ஆறு அம்சங்கள் உண்டு.

"1825 : சிவராமபுரியில் ராமா வாஜாபேயர் ஆசிருதரின் பிதாமகர் (பாட்டனார்) வாஜபேய பௌண்டரீக சர்வதோமுக விஷ்வத்வசாத்யம் இவைகளை ஸ்ரீமந்த் சத்ரபதி வெண்குடை செலவும் கொடுத்து யக்ஞசித்தி செய்தார்கள்"

என்ற குறிப்பினால்,[6] "ராம வாஜபேயர் என்பவர் சிவராமபுரி[7] என்ற ஊரவர்; இவர் தந்தை "அக்னிஷ்டோமம்" செய்தவர்;[8] இவர் பாட்டனாவர்

---

4. ச. ம. மோ. த. 9-10 5. 4-288, 284

5அ. ஐப்பசியும் கார்த்திகையும் ஆகிய கூதிர்க்காலம் 6. ச. ம. மோ. த. 4-87

7. கும்பகோணத்துக்கு அருகில் உள்ளதும், பாடல்பெற்ற தலமும் ஆன 'சிவபுரி" என்ற தலம் ஆகலாம்.

8. அடிக்குறிப்பு 2க்குரியது காண்க.

னார் வாஜபேயம், பௌண்டரீகம் முதலிய யாகங்களைச் செய்தவர்; இந்த யாகங்களைச் செய்ய இரண்டாம் சரபோஜி பேருதவி புரிந்தமையோடு வாஜ பேய யாகத்தின் ஒரு அமிசமாகிய "சுவேதா சத்ர தாரணம்" ஆகிய வெண் குடை பிடித்துக் கொள்ளுதற்குரிய வெண்குடைச் செலவும் கொடுத்தார்கள்" என்பன அறியப்பெறும்.

இக்குறிப்பில் கண்ட பௌண்டரீகம் என்பது புண்டரீகம் என்ற வேள்வி யாகும். இது 36 நாட்கள் செய்யப்பெறும். இதற்கு ஏகாதசராத்ரம், மகா விரதம் என்ற பெயர்களும் உண்டு.

மேலே கண்ட ராம வாஜபேயருடைய பெரிய தகப்பனாருக்கு, வாஜ பேய வேள்வி செய்யுங்கால் இரண்டாம் சரபோஜி வெண்குடையும் பிற செலவு களும் செய்து கொடுத்து வேள்வியை முற்றுவித்தார்.

இங்ஙனம் சிவராமபுரி ராமா வாஜபேயர் – தம் பாட்டனார், தந்தை பெரியதந்தை, தாம் – ஆகிய யாவரும் வாஜபேயம் செய்து சிறப்புற்றமையால் "சர்வதோமுகம்" என்ற வேள்வியைச் செய்யவேண்டும் என்று வேண்டி யிருக்கிறார். இது "அபூர்வ கிருது" – புதிதாகச் செய்யப்பெறுவது. அக்னிஷ்டோம யாகமும் இரண்டு சோடசி யாகங்களும் செய்தால் "சர்வதோமுகம்" என்று பெயர். இந்த வேள்வியைப் "பஞ்சநத க்ஷேத்ரத்தில்" அதாவது திருவையாறு எனும் தலத்தில் செய்யவேண்டும் என்றும், மகாராஜா அவர்கள் செலவு கொடுத்து யாகத்தை முற்றுவிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.[9]

"சோடசீ" என்பது அக்னிஷ்டோமம் போலவே ஐந்து நாட்கள் செய்யப்பெறும் வேள்வியாகும். அக்னிஷ்டோமத்திற்கு 12 தோத்திரங்கள்; "உத்தியம்" என்ற வேள்விக்கு மேலும் 3 தோத்திரங்கள். அப் பதினாறா வதாகிய தோத்திரம் "ஷோடசீ ஸ்தோத்ரம்" என்ற ஒரு நீண்ட தோத்திரம் ஆகும். இந்தப் பதினாறாவதுடன் இவ்வேள்வி முடிவதால் இந்த வேள்விக்கு "ஷோடசீ" (16) என்று பெயர்.

## வைசுவ தேவம்

ராஜேஸ்ரீ சோமநாத சதாசிவ பண்டிதர் 1836இல் வைசுவ தேவம் தொடங்கினார் என்று ஓராவணக்குறிப்பு[10] உள்ளது. வைசுவ தேவமாவது விசுவதேவர் பொருட்டு நாடோறும் பகலில் உண்பதற்கு முன் செய்யும் சடங்கு[11] ஆகும். விசுவதேவர் என்பவர் தேவசாதியில் ஒருவகையினர்.

---

9. ச. ம. மோ. த. 4-37

10. ச. ம. மோ. த. 12-38

11. Tamil Lexicon, M. U.

## தர்ச பூர்ண மாஸா

இது சுக்கில கிருஷ்ண (வளர்பிறை தேய்பிறை) பிரதமைகளில் (முதல் நாள், செய்யும் சிரௌதச் சடங்கு.[12] சிரௌதமாவது வேதத்தில் விதிக்கப் பட்டது என்று பொருள்படும். 1836இல் வெங்காஜி ரக்மாஜி என்பார் "தர்ச பூர்ண மாஸா" என்ற சடங்கினைச் செய்ததாகத் தெரிகிறது.[13]

## ஆபஸ்தப்ப சோம பூர்வக அதானம்

ஆபஸ்தம்பம் என்பது தைத்திரீய சாகைக்குரியது. தைத்திரியம் என்பது யசுர் வேதம். இந்தச் சோமயாகம் எசுர்வேதிகள் செய்வதாகும். ராமையா வராஹப்பையா 1836இல் இந்த யாகத்தைச் செய்திருக்கிறார்.[14] சோமயாகம் என்பது யாகங்களுக்குப் பொதுவான பெயர். முத்துக்கொண்டான் சந்திர சேகர தீக்ஷிதரும் இந்த யாகத்தைச் செய்துள்ளார்.

சேனாதுரந்தரர் ராஜேஸ்ரீ கங்காதர ரக்மாஜி என்பவர், "போதாயன ஸோம பூர்வக யக்ஞம்" செய்தார் என்று ஒரு குறிப்பு[15] உள்ளது. போதா யனம் என்பது வைதிகச் சடங்குக்காகக் கூறும் கற்பநூல் வகையாகும்.[16] மந்திரிவர்ய ஸ்ரீ சதாசிவ கேசவ பண்டிதரும் இந்த யாகத்தைச் செய்தவராகக் காணப்பெறுகிறார்.[17]

ஆபஸ்தம்ப யக்ஞத்துக்கும் போதாயன யக்ஞத்துக்கும் என்ன வேறுபாடு என்று தெரியவில்லை.

## குண்டல இஷ்டி

"1801 : பிரதிஷ்டித சபை திவிதீயாத்யக்ஷ அப்பா சாஸ்திரி குண்டல இஷ்டி செய்வதற்கு இனாம் 20 சக்கரம்" என்ற குறிப்பு[18] உள்ளது.

பிரதிஷ்டித சபை என்பது இரண்டாம் சரபோஜி காலத்தில் இருந்த வழக்கு மன்றங்களில் ஒன்று.[19] திவிதீயாத்யக்ஷர் என்பது இரண்டாவது நீதிபதி என்று பொருள்படும். குண்டல இஷ்டி" என்பது இன்னது என்று தெரியவில்லை.

அக்னிஷ்டோமம் செய்தபிறகு "குண்டல இஷ்டி" செய்யப்பெறும் என்று ஒரு குறிப்பால்[20] தெரிகிறது. 1826 இல் நாகம்பட் பட்கோசுவாமியும், முத்துசுவாமி தீக்ஷிதர் மகன் கங்காதரரும் இந்த வேள்வியைச் செய்துள்ளனர்.

---

12. Tamil Lexicon, M. U.
13. 12-849.
14. 12-849
15. ச. ம. மோ. த 11-35
16. Tamil Laxicon, M.U.
17. ச.ம.மோ.த. 2-21
18. ச. ம. மோ. த. 2-21
19. 2-205, 206
20. ச. ம. மோ. த. 5-84.

பதினெண்வகை யாகங்களைப் பிங்கல நிகண்டு கூறும். அவற்றுள் குண்டல இஷ்டி என்பது காணப்படவில்லை. பிங்கல நிகண்டு கூறும் 18 யாகங்கள் :—

"சோதிட் டோமம், அங்கிட் டோமம்
உத்தியம், சோடசீ, வாச பேயம்
அத்தி ராத்திரம், சோம யாகம்
சாதுர் மாசியம், பவுத்திர பேதம்
* மணி, புண்டரீகம், அங்கி சயனே
இராச சூயம், அச்சுவ மேதம்,
பிரண்வ மேதம்** பாசுபந் தம்எனப்
பாற்படும் பதினெண் யாக மென்ப."

* சௌத்திராமணி

** பசுபந்தம்

---

குறிப்பு :— இதனுட் கண்ட யாகங்களைப்பற்றிய பல செய்திகளைத் திருச்சி அன்பர் குப்புசாமி ஐயர் அவர்கள் அன்புடன் உதவினார்கள். அவர்களுக்கு நன்றி.

# 26

# மிகுபெயலும் பெயலின்மையும்

மழை மிகுதியாகப் பெயினும் கெடுதி ; பெய்யாதிருப்பினும் கெடுதியே. தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சிக் காலத்தில் மிகுபெயலாலும் பெயலின்மையாலும் பெரும் பஞ்சங்கள் தோன்றின.

"கி. பி. 1776 : அந்நிய தேசத்திற்கு மழை பெய்வதற்காக வருண ஜெபம் செய்வதன் பொருட்டு"[1]

"1776 : **ஸ்ரீபிரஹதீஸ்வர சுவாமி கோயில் நந்திக்கு** மழை பெய்ய அபிஷேக நைவேத்தியத்துக்கு"[2]

"1779 : **ஸ்ரீபெரியகோயில் நந்திக்கு** மழை வரவழைப்பதற்கு அபிஷேகம் நைவேத்தியம்......7 நாட்களுக்கு"[3]

"1785 : நாட்டுக்கு மழை தண்ணீர் இல்லாததற்காக வருண ஜபம் ருத்ராபிஷேகம் முக்கால் மண்டலம் கார்த்திகை மாதம் 8இலிருந்து மார்கழி மாதம் 10 வரையிலும் 33 நாள்"[4]

"1785 : வருண ஜபம் ருத்ராபிஷேகம்"[5]

"1797 : மழை பெய்வதற்காக **ஸ்ரீ பெரியகோயிலிலுள்ள நந்திக்கு** அபிஷேகம் செய்ய முன்னால் அபிஷேகம் செய்ததற்குக் கொடுத்தபடி 16 நாட்கள்"[6]

---

1. ச. ம. மோ. த. 29-4
2. ச. ம. மோ. த. 29-6
3. ச, ம. மோ. த. 18-17
4. ச. ம. மோ. த. 7-18
5, ச. ம.மோ. த. 1-1
6. ச. ம. மோ. த, 19-40

"1799: வருணஜெபம் திருவையாறு கலியாணபுரம் வட்டம்"[7]

"1799 : வருணஜெபம் திருவையாறு கலியாணபுரம் முதலில் 1 மண்டலம் பின் ½ மண்டலம்"[8]

"1811: **பெரியகோயில் நந்திக்கு** மழை பெய்வதற்காக அபிஷேக பூஜை நிவேதனம் ஜபம் ¼ மண்டலம் தினமொன்றுக்கு 3½ சக்கரம்"[9]

"1827 : பெரிய **கோயில் நந்திக்கு** அபிஷேகம் பூசை நிவேதனம் நாள் 1க்கு 3½சக்கரம்"[10]

"1827 : வேதசாலையில் வருணஜெபம் செய்கிற ஆசாமி 6க்கு தினம் 1க்கு ஒரு பணம் வீதம் சக்கரம் 6–6"[11]

"1829: மோகனாம்பாள்புரம் அன்னசத்திரம் மழையில்லாததனால் தேவஸ்தானம் சுவாமிக்கு **ருத்ராபிஷேகம்*** பூசை நைவேத்தியம்"[12]

"1829: ராஜகுமாராம்பாபுரத்தில் மழையில்லாமல் இருப்பதால் திங்களூர் ஸ்ரீசகஸ்ரலக்ஷ்மி நாகேவரசுவாமிக்கு ருத்ராபிஷேகம்"[13]

"1830: **பிரகதீசுவரசுவாமி கோயில் நந்திக்கு** மழைக்காக அபிஷேகம் பூஜை"[14]

—இங்ஙனம் மழை பெய்வதற்காகப் பல ஆண்டுகள் பெரிய கோயில் நந்திக்கு அபிஷேகம் செய்வித்ததாக அறியப்பெறுகிறது.

"1775 : பெரிய கோயில் நந்திக்கு **மிளகு அபிஷேகம்** நாள் ஒன்றுக்கு 7 சக்கரம் வீதம் 7 நாட்களுக்கு 21 சக்கரம்"

என்று ஓராவணக்குறிப்பு[15] உள்ளது. மிளகு அபிஷேகமும் மழை பெய்வதற்காகச் செய்யப்பெற்றதே என்று இந்நாளில் தஞ்சையில் பலர் கருதுகின்றனர். அதற்கு ஏற்ப இந்த ஆண்டும் (1983) தஞ்சைப் பெரியகோயிலில் நந்திக்கு மிளகு அபிஷேகம் செய்வித்தனர்.[16]

---

7. ச. ம. மோ. த. 28-37 8. 1-151 9. 2-35 10. 4-425
11. 4-205 12. ச. ம. மோ. த. 4-24 13. ச. ம. மோ. த. 4-25
14. ச. ம. மோ. த, 2-8 15. 2-147
16. தினமணி நாள் ஏடு, 10—7—1983 (கோயிற்பணிகளும்......என்ற கட்டுரையில் அடிக்குறிப்பு 56)

திருவுருத்திர மந்திரத்தை ஓதிக்கொண்டு தண்ணீரை அபிஷேகம் செய்தலே **ருத்ராபிஷேகம்*** எனப்பெறும். திருவுருத்திரம் வேதத்தில் நடு நாயகமாக இருக்கும் மந்திரம்[17] ஆகும். வருணஜெபம் என்பதும் மழைக்குரிய கடவுள் ஆகிய வருணனை நோக்கி வேத மந்திரங்களை ஓதுவதாகும்.

தஞ்சைப் பெரிய கோயிலில் மட்டும் அன்றி, மழையின்மையால் பாதிக்கப்பெற்ற இடங்களிலும் வருண ஜெபம் முதலியன நிகழ்த்தப்பெற்றன என்று மேற்கூறிய ஆவணக்குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

சில ஆண்டுகளில் அளவுக்குமேல் மழை பெய்தமையும் தெரிகிறது.

1812 இல் மாயவரம் பேரளத்தில் வெள்ளச்சேதம் ஆகையால் குத்தகை தள்ளிக்கொடுத்ததாக ஒருகுறிப்பு உள்ளது.[18]

1826இல் பெருமழை; தஞ்சை முழுவதும் உள்ள பெருஞ்சாலைகள் மிக்க பழுதடைந்தன. ஆகவே அவற்றைச் செப்பனிட்டதாக ஒரு செய்தி தெரியவருகிறது.[19]

1843இல் எட்டுநாட்கள் விடாது மழை பெய்ததாகவும் சர்வமானியம் அன்னம்பேட்டையில் சாகுபடிக்கு விட்ட நாற்றும் ஆற்று வெள்ளத்தால் சேதமாகிவிட்டது என்றும் அவ்வாவணக் குறிப்பால் அறியப்பெறும்[20]

தொன்மைநாடு கிராமத்தில் ஆலத்தியேரி என்றொரு ஏரி. அதில் வடிமடை மேட்டில் வெட்டி விட்டதால் தண்ணீர் வடியாமல், தண்ணீர் தேங்கி, 40 வேலி நிலத்தில் நஞ்செய்ப் பயிர்கள் சேதம் அடைந்தன. ஆகவே வடிமடையை வெட்டிவிட வேண்டும் என்று ஆழியவாய்க்கால் என்ற ஊரவர் வேண்டினர். நியாயசபை நியாயாதிபதி அரிசக்கரபாணி என்பவர், ஆழியவாய்க்கால் கிராமத்தில் இருந்த இருவருடன் கண்ணங்குடி மேலையூர் மிராசுதார்களை நன்செய்ப் பயிர் நிலைமையைப் பார்க்குமாறு கட்டளை இட்டார். அவர்கள் தென் - வட வடிகால்களில் தண்ணீர்ப்போக்கைக் கண்டனர். தென்மடை ஒட்டமில்லை. நடுகீழ்க்கரையில் வடிமடை இருந்தால் தண்ணீர் வடியும். மற்ற ஏரிகள் போலத்தான் இங்கும் வடிமடை உண்டு. ஏரித் தண்ணீர் எதிர்ப்பினால் பயிர்ச்சேதமில்லை. ஆழியவாய்க்கால் சாகுபடி செய்யப்பெற்ற நன்செய்ப் பயிர்களுக்கும் சேதமில்லை—என்று கருத்துத் தெரிவித்தனர்.[21] இது 15—12—1831க்குரியது.

---

17. திருவுருத்திரத்தின் சிறப்பை ''ஸ்ரீருத்திராத்யாயம்'' என்ற கட்டுரையில் காணலாம்: பக்கம் 57-74; 'கல்லெழுத்துக்களில்' – கே. எம். வேங்கடராமையா (1966)

18. ச. ம. மோ. த. 2-9

19. ச. ம. மோ. த. 4-8

20. 12-112

21. 7-773 முதல் 776 வரை.

இதுபோன்றே கி. பி. 1748இல் கீவளூரிலும் பண்டாரவாடையிலும் வெள்ளச்சேதம் ஏற்பட்டதாகவும் ஓராவணக்குறிப்புள்ளது.[22]

மழையின்மையாலோ வெள்ளத்தாலோ பாதிக்கப்பட்ட காலத்தில் வசூல் குறைவு அல்லது குத்தகை தள்ளுபடி செய்திருத்தல் நடந்திருக்கும் என்பது உறுதி. கும்பினியார் அரசாங்க வரி வசூல் பொறுப்பும் ஏற்றுக் கொண்டிருந்தமையால், சென்னையில் 1855இல் பஞ்சம் ஏற்பட்டபொழுது பஞ்ச நிவாரணப் பணிக்காகத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் ரெஸிடெண்டு வழி அனுப்பப் பெற்று வந்தது என்று அறிய வருகிறது.[23]

மேலும் ஹைதர் அலி படையெடுப்பு,[24] முகம்மது அலியின் கடுமையான வசூல்[25] ஆகிய இவற்றுடன் மிக்க மழையாலும், மழையின்மையாலும் தஞ்சை மராட்டியர் ஆட்சியின் கீழ் வாழ்ந்த குடி மக்கள் பல சமயங்களில் துன்புறலாயினர் என்பது தெரிய வருகிறது.

22. 4-78 23. ச. ம. மோ. த. 4-29.

24. பக்கம் 307, 308, Maratha Rule in the Carnatic - Srinivasan, C. K.

25. பக்கம் 305 ஷ்டி ஷ்டி

# 27

# விலைவாசி

நெல்லின் விலையை ஒட்டியே மற்றெல்லாப் பொருள்களின் விலையும் இருக்கும் என்பது பொதுவிதி. நிலத்தின் மதிப்பும் அங்ஙனமே அமையும். ஆகவே நெல்லின் விலையை நிர்ணயித்தலும் அரசின் கடமையாக அந்நாட்களிலும் இருந்துவந்தது.

## நெல்-அரிசி விலை

கி. பி. 1776க்குரிய குறிப்புப் பின்வருமாறு:—[1]

" நாடுகளில் நெல் பிடிக்கும் விபரம் :

பணத்துக்குத் திருவாதியில் $3\frac{1}{4}$ மரக்கால்; கும்பகோணத்தில் $3\frac{1}{8}$ மரக்கால்;
மன்னார்குடி $3\frac{1}{2}$ மரக்கால் மாயூரம் $3\frac{1}{2}$ மரக்கால்
சீர்காழி $3\frac{1}{2}$ மரக்கால்

உடனுக்குடன் ரொக்கம் கொடுக்கிறவர்களுக்கு $\frac{1}{8}$ (மரக்கால்) போட்டுக் கொடுக்கவும். "

இக்குறிப்பினால், ஒரு பணத்துக்கு $3\frac{1}{2}$ மரக்கால் நெல் எனில் ஒரு கலத்தின் விலை $3\frac{3}{7}$ பணம் ஆகிறது. $3\frac{1}{4}$ மரக்கால் எனில் $3\frac{9}{13}$ பணம்; இது சுமார் 9 அணா ஆகிறது.[2]

---

1. ச. ம. மோ. த. 8-9
2. P. 309, Maratha Rule in the Carnatic, C. K. Srinivasan : 1776...... price per Kalam 0-9-0 (F.n. 2, Report of the Commission of 1799, Page 15)

" உடனுக்குடன் ரொக்கம் கொடுக்கிறவர்களுக்கு $\frac{1}{8}$(மரக்கால்) போட்டுக் கொடுக்கவும் " என்பது பணத்துக்கு எவ்வளவு " முடை " என்பதை ஊகித்து அறிய இடம் கொடுக்கும். நெல் அதிகம் இருந்தது; வாங்குவதற்குப் பணம் (casb) இல்லை என்பது கருத்து.

" 1777 : சம்பா அரிசி பணத்துக்கு $3\frac{1}{4}$ படி "[3] என்பது, "பணத்துக்கு $3\frac{1}{4}$ மரக்கால் நெல் " என்றதற்கு ஏற்ப அமைந்ததேயாகும்.

1777இல் பணத்துக்கு $3\frac{1}{4}$ படி அரிசி எனின் $6\frac{1}{2}$ பணம் அதாவது ஒரு ரூபாய்க்கு ($6\frac{1}{2} \times 3\frac{1}{4}$) $21\frac{1}{8}$படி ஆகிறது. கி. பி. 1768இல் முதல்தரமான சம்பா பச்சரிசி பணம் 1க்கு $2\frac{1}{4}$படி வீதம் விற்றதாகத் தெரிகிறது.[3அ] 1769இல் பணத்துக்கு 3படி.[3ஆ]

கி. பி. 1784இல்" ஒரு பணத்துக்கு $6\frac{3}{4}$படி நெல்" என்ற குறிப்பும் நெல் விலை ஒரேமாதிரியாக இருந்தமையை வலியுறுத்தும். ஆனால் கி. பி. 1784 இல் ஒரு கலம் நெல்லின்விலை 0—11—3 (பதினோரணா 3 பைசா) ஆக இருந்ததாக வரலாற்று நூல் கூறும்.[4]

கி. பி. 1799இல் ஒரு கலம் நெல் விலை $3\frac{1}{2}$பணம்[4அ].

சில ஆவணங்களினின்று 1 சக்கரத்துக்கு $2\frac{1}{2}$ கலம் நெல் என்று தெரிகிறது.[5] அதாவது ஒரு பணத்துக்கு $\frac{1}{4}$ கலம் அல்லது 6 படி ஆகும். " கி. பி. 1820இல் பழைய சம்பா நெல் பணத்துக்கு 6 படி "[6] என்பது இதனை வலியுறுத்தும்.

1825இல் முக்தாம்பாபுரத்தில் கலம் நெல்லின் விலை $\frac{1}{2}$ சக்கரம் என்றது சிறிது அதிகமாகத் தோன்றலாம்.[7]

கி. பி. 1830இல் நெல்லின் விலை கலம் $\frac{1}{2}$ சக்கரமாகவே இருந்ததாதல் கூடும்.

"ஸர்க்கார் சாகுபடிக்காக வைத்திருந்த விதை நெல் கோடை மழையில் நனைந்துவிட்டபடியால் விதைக்கு உபயோகமாகவில்லை. ஆகையால் திட்டையில் சிறுமணி கைவளிச்சம்பா கலம் 1க்கு $4\frac{1}{4}$ பணம் அல்லது 5பணத்துக்கு விற்பதை வாங்கி வண்டிச் செலவுடன் கொண்டுவந்து நாற்றுவிட்டுச் சாகுபடி செய்ய உத்தரவாகவேணும் "

---

3. 2-110 3அ. 2-4 3ஆ. 2-24
4. P. 309 Maratha Rule in the Carnatic. Srinivasan C. K: 1784............ O-11-3 ( F. n. 2, Report of the Commission of 1799 P. 15 )

4அ 1-185 5. 11-841 6. ச. ம. மோ, த. 6-8 7. 2-241

என்ற வேண்டுகோள்[8] நெல்விலை கலம் $\frac{1}{2}$ சக்கரமாக இருந்தமை வலியுறுத்தும் வதாக உள்ளது. கி. பி. 1824இல் புழுங்கல் அரிசி பணத்துக்கு 3 படி வீதம் விற்றது என்று ஓராவணம் கூறும்.[9]

" இந்த ஸம்ஸ்தானத்தில் பணத்திற்கு 3 படி அரிசி விற்கிறது. **அதனால்**[9அ] சுப்பா ஜெட்டிக்கு அன்னம் அபரூபமாக இருக்கிறது. இனி சாஹேப்பு உபேக்ஷை செய்தால் அவருடைய கதி என்னவாகும் என்று தெரியவில்லை"

என்றொரு குறிப்பு[10] அரிசி மலிவாகக் கிடைத்தபோதிலும் அதனையும் வாங்குவதற்கு இயலாத வறுமைக்கோட்டிற்கும் தாழ்வான நிலையில் சிலரோ (பலரோ) இருந்தமை தெரிகிறது.

கி. பி. 1855இல் ஒரு ரூபாய்க்கு $27\frac{3}{8}$ படி நெல் என்று ஓராவணம் அறிவிக்கிறது.[11] அதாவது 1 பணத்துக்கு $4\frac{1}{5}\frac{1}{2}$ படியாகும். கி. பி. 1776இல் திருவாதியில் ஒரு பணத்துக்கு $3\frac{1}{4}$ மரக்கால் அதாவது $6\frac{1}{2}$படி என்று தொடக்கத்தில் கூறப்பட்டது.

இவ்விரு விலைகளையும் ஒப்பிடும் இடத்து நெல் விலை 80 ஆண்டுகளில் 50% உயர்ந்தது என்று கொள்ளலாம்.

## உப்பு விலை

மராட்டிய மன்னர் ஆட்சிப் பரப்பில் உப்பளங்கள் மிகப்பெரிய பரப்பில் இருந்தன. ஓராவணம்[12] கி.பி. 1784க்குரிய உப்பு விலைபற்றிப் பேசுகிறது. அது,

" புதிய உப்பு விற்றுமுதல், கட்டளவு மரக்கால் 8வீதம் மரக்கால் 4082க்கு கலம் 340—2—0 நலி 1க்கு மரக்கால் 48 வீதம் நலி 85 மரக்கால் 2 வித்து முதல் சக்கரம் 51, $\frac{1}{4}$ பணம் "

என்பதாகும். இதனான் 4082 மரக்கால் உப்பு 51 சக்கரம் $\frac{1}{4}$பணம் எனத்தெரிகிறது. அதாவது 1 பணத்துக்கு 8 மரக்கால் உப்பு ஆகும்.

"1776 : தென்னம்பிள்ளை வைப்பதற்குப் பணத்துக்கு $4\frac{1}{2}$ படியாக உப்பு 100 படி" என்ற குறிப்பும் உள்ளது.[12அ] கி. பி. 1824இல் உப்பு ஒரு பணத்துக்கு $3\frac{3}{4}$ படி. இவை பிற்காலத்தில் சில்லறை விற்பனை விலையாகும்.[12ஆ]

8. ச. ம. மோ. த. 2-8
9. ச. ம. மோ. த. 1-48
9அ. 'அதனால்' என்றவிடத்து 'ஆனால்' என்று படித்தல் பொருந்தும்.
10. 3-39, 40
11. 2-169
12. 1-129, 130
12அ. ச. ம. மோ. த. 9-1
12ஆ. 5-2

## விளக்குக்கு எண்ணெய்

கி. பி. 1784இல் ஒரு சேர் (விளக்கு) எண்ணெய் $\frac{1}{2}$ பணம் என்று ஓர் ஆவணத்தால்[13] அறியவருகிறது. இலுப்பை எண்ணெய் $7\frac{1}{2}$சேர் $2\frac{1}{8}$பணம் என்று பிறிதோராவணம்[14] கூறும்.

## மளிகைப் பொருள்கள்

1784க்குரிய குறிப்பொன்று[15] பின்வரும் பொருள்களின் விலையைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது :

| | | |
|---|---|---|
| உளுந்து பணத்துக்கு | $1\frac{1}{8}$ | படி |
| எள் ,, | 1 | படி |
| மிளகு சேர் $\frac{3}{4}$க்கு | $1\frac{1}{2}$ | பணம் |
| வெந்தயம் பலம் $2\frac{1}{2}$க்கு | $\frac{3}{16}$ | பணம் |
| சீரகம் ,, | $\frac{1}{2}$ | ,, |
| சுக்கு ,, $13\frac{1}{2}$க்கு | $\frac{3}{16}$ | ,, |
| ஏலக்காய் 3வராகனெடை | $\frac{1}{4}$ | ,, |
| மஞ்சள் பலம் $4\frac{1}{8}$ | $\frac{3}{16}$ | ,, |
| காயம் 2 வராகனெடை | $\frac{1}{2}$ | ,, |
| புளி $28\frac{1}{2}$ சேர் | $2\frac{5}{8}$ | ,, |
| வெல்லம் $11\frac{1}{2}$ ,, | $9\frac{5}{8}$ | ,, |
| ந. எண்ணெய் 3 ,,9டாங்க் | $2\frac{3}{4}$ | ,, |
| கொட்டைப்பாக்கு 260க்கு | 2 | ,, |
| வெற்றிலை 490க்கு | $2\frac{13}{16}$ | ,, |

கி. பி. 1777இல் துவரம்பருப்பு $2\frac{1}{2}$ படி 1 பணம் என்றும், நெய் $2\frac{1}{2}$ சேர் 2 பணம் என்றும் தெரிகிறது.[16]

கி. பி. 1769இல் "கும்பகோணத்தில் பால் சேர் 10க்கு 1 பணம்; தயிர் சேர் 20க்கு 2 பணம்" என்று அறியப்பெறும்.[17]

கி. பி. 1783இல் புகையிலை தூக்கு 2 பணம் ஆகும்.[18] (தூக்கு $6\frac{1}{4}$ சேர்)

கி. பி. 1769இல் புடலங்காய் பணத்திற்கு 60; கத்தரிக்காய் தூக்கு 1க்கு $\frac{5}{16}$பணம்[19] (அதாவது 1பணத்துக்கு $3\frac{1}{5}$ தூக்கு).

---

13. 1-180 14. 1-180 15. 1-188, 184.
16. 1-157 17. 2-24, 25 18. 2-11 19. 2-22

கி. பி. 1785இல் நெய் 1 பணத்துக்கு $1\frac{3}{4}$ சேர்; தேங்காயெண்ணெய் 1 பணத்துக்கு 2 சேர்."[20]

குதிரைகள் நிறைய இருந்தமையால் கொள்ளு பல ஆயிரம் மூட்டைகள் சர்க்காரில் வாங்கப்பெற்றன.[21] 110 படி கொண்ட திருச்சி கொள்ளு மூட்டை ரூ. $6\frac{1}{2}$ என்றும், நாட்டுப் புறம் கொள்ளு மூட்டை $5\frac{3}{4}$ என்றும் தெரிகிறது.[22]

## ஆடுகள் விலை

"1804: தசராவுக்கு ஹுஜூர் செலவுக்காக 100ஆடுகள் 50சக்கரத்துக்கு" என்ற குறிப்பால் ஒருஆடு $\frac{1}{2}$சக்காம் விலை என்றறியப்பெறும்.[23] கி. பி 1797இல் "கம்பெனியின் ரிஜிமெண்டுக்கு 1000 ஆடுகள்; சில ஆடு ஒன்றுக்கு 6 பணம்; சில ஆடு 1க்கு 4 பணம் வீதம்" என்ற குறிப்பும் ஆட்டின் விலைபற்றிக் கூறும்.[24]

## மட்பாண்டங்கள்

கி. பி. 1827இல் குயவன் கோவிந்தனுக்கு மட்பாண்ட விலை உறுதி செய்யப்பட்ட குறிப்பு உள்ளது :[25]

'**ஒரு பணத்துக்குப்** பெரிய கலயங்கள் 30 ; சிறியன 60 ; 5 சேர் சாணக்கிகள் ( சானகி-மண்ணாற்செய்த தட்டு ) 56 ; 10 சேர் சாணக்கிகள் 26 ; 20 சேர் சாணக்கிகள் 13 ; பால் கலயங்கள் 65 ; குருவிக்கலயம் 114 ; அகல்கள் 114 ; சிறியன 200 ; பெரிய அடுப்பு 5 ; சிறியன 10 '.

## பழங்கள்

1827இல் ஒரு பணத்துக்கு 10 மாம்பழம் ;[26] பேரீச்சம்பழம் 1765இல் 10 சேர் விலை $2\frac{1}{2}$ பணம்[27]; வாழைப்பழம் 1843இல் 100க்கு விலை $\frac{1}{4}$ ரூபா "[28]

## செங்கல் சுண்ணாம்பு

" கி. பி. 1785இல் 1000 செங்கற்கள் விலை ஒரு சக்கரம். சுண்ணாம்பு நீறு கலம் 1 பணம் ; மணல் 10 கலம் 1 பணம்" என்று ஓராவணம் கூறுகிறது.[29]

---

20. 2-7
21. ச. ம. மோ. த. 8-12
22. ச. ம. மோ. த. 5-32
23. ச. ம. மோ. த. 2-26
24. ச. ம. மோ. த. 19-44
25. ச. ம. மோ. த. 10-19
26. ச. ம. மோ. த. 10-19
27. 2-14, 15
28. ச. ம. மோ. த. 5-17
29. 2-11

## தேங்காய் - தென்னம்பிள்ளை

1843இல் தேங்காய் 100க்கு விலை ரூ. 1¾ ¼ (ஒரு ரூபா, 14 அணா) என்று தெரிகிறது.[30] "1814: ஆவுடையார் கோயிலில் வாங்கிய தென்னம் பிள்ளை 215க்கு 5 சக்கரம் 3 பணம்"[31] என்றமையால் ஏறத்தாழ 1 பணத்துக்கு 4 தென்னங்கன்றுகள் என்பது தெரியவரும்.

## பசுக்கள்

"சிவப்புப்பசு — நீளக்கொம்பு — காளைக்கன்று விலை ரூ. 5; ஷை விலை ரூ. 4½; வெள்ளைப்பசு ஷை விலை ரூ. 4; வெள்ளையும் கருப்பும் ஷை விலை ரூ. 4" என்ற குறிப்பாலும்,[32]

"ரங்கநாத, சிவப்புப்பசு 1க்கு ரூ. 8; பிரபாகபட் பாபா, பசு 1க்கு ரூ. 7½" என்ற குறிப்பாலும்[33] பசுக்களின் விலை ரூ. 4 முதல் 8 வரையிலும் இருந்தன என்றறியலாம். இவை கோதானத்துக்குரியவை. சமஸ்தானத்தில் இருந்தபசுக்கள் விலையுயர்வுடையனவாக இருந்திருத்தல் கூடும்.

## பட்டாசு

தீபாவளிக்குப் பட்டாசு வெடித்தலும் அந்நாட்களில் உண்டு.

"1827: பட்டாசு கட்டு 100; ஒன்று ¾ பணம் வீதம் சக்.7–5" என்றும்,[34] "1839: தீபாவளிக்குப் பட்டாசு கட்டுகள் 300 வாங்கினதற்கு ரூ. 30, வீசம் ஒன்று" என்றும்[35] காணப்படும் குறிப்புக்களால் பட்டாசுக் கட்டுகள் ஒரு ரூபாய்க்கு 10 வீதம் கிடைத்தன என்றறியப்பெறும்.

## இலவர்பஞ்சு

"1777: இலவங்காய் விற்றுமுதல் சுமார் 9200க்குப் பணம் ஒன்றுக்கு 200 வீதம் சக். 4–6 பணம்" என்ற குறிப்பு[36] இலவம் காய்களின் விலையைத் தெரிவிக்கின்றது.

## ரொட்டி

"1811: ரா. சிவாஜி ராஜா சாயேப் அவர்கட்குக் குடுமிக் கலியாணம் செய்வதற்கு ரொட்டி சுமார் 785க்குப் பணம் 1க்கு 125 ரொட்டி வீதம் 6 பணம்" என்ற குறிப்பு[37] ரொட்டிகளைப் பற்றியதாக உள்ளது.

---

30. ச. ம. மோ. த. 5-17 31. ச.ம. மோ. த. 8-5 32. 12-806 33. 12-808, 809. 34. 4-201 35. ச. ம. மோ. த. 6-88 36. 2-114 37. 2-50

## தொப்பி - முண்டாசு

"மேஸ்தர் டானியல் கொலப் மூலம் தொப்பி ஒன்று விலைக்கு வாங்கினதற்கு 4 வராகன் கொடுக்கப்பட்டது"

என்ற குறிப்பால்[38] வெள்ளையர் அணிந்தாற்போன்ற தொப்பி (Hat) க்கு விலை மிகுதியாயிருந்தது என்று அறியப்பெறும். வெள்ளையர் தொப்பிகள் இந்நாட்டுக்குப் புதியவை ஆதலின் மிகுந்த விலை போலும்.

"முண்டாசு வெள்ளை 1க்கு விலை 2 சக்கரம்" என்றொரு குறிப்பினால்[39] முண்டாசு தொப்பியினும் பன்மடங்கு குறைவான விலையில் கிடைத்தமை தெரியவருகிறது.

## துப்பாக்கி

"1776: துப்பாக்கி விலை பரங்கிப்பேட்டை வராகன் 1½; இதற்குத் தரகு இல்லை" என்ற குறிப்பால்[40] துப்பாக்கிகளின் விலை அறியப்பெறும். இதற்குத் தரகு (கழிவு–Commission) இல்லை என்றமையால் இத்தகைய பிற போர்க்கருவிகட்குத் தரகு உண்டு என்பது போதரும்.

## பிராந்தி - சாராயம்

பிராந்தி சாராயம் முதலியவற்றைக் குடிப்பவர் அந்நாளிலும் பலர் இருந்தனர். பிராந்தி மருந்தாகவும் பயன்படுத்தப்பெற்றது.

"யந்திரச் சிப்பாய் குதிரைமேலிருந்து விழுந்தவனுக்குப் பிராந்தி சீசா 1க்கு ரூ. 1¾ க்கு வாங்கிக் கொடுத்தது"

என்ற குறிப்பால்[41] பிராந்தி ஒரு புட்டியின் விலை ரூ. 1–12–0 என்று தெரிகிறது.

சர்க்காரிலும் சாராய விற்பனையுரிமையைக் கொண்டிருந்தனர்.

"1811: கோட்டையில் காளேரா்வ் அப்பா காலத்தில் 10 சேர் செம்பினால் செம்பொன்றுக்கு 8 பணம் வீதம் விற்று ஒரு பணம் சம்பளம் போகப் பாக்கி 7 பணத்தைச் சர்க்காரில் வாங்கிக்கொண்டு வந்தார்கள்"

என்ற குறிப்பால்[42] ஒரு செம்பு சாராயம் 8 பணம் என்று தெரியவருகிறது.

செம்பு என்பது 4½ புட்டி என்றும், கோட்டைக்கு வெளியிலே சிலர் சாராயக்கடை வைத்திருந்தனர் என்றும் இந்தக் குறிப்பிலேயே அடுத்துக் காணப்படுகிறது.

---

38. ச. ம. மோ. த. 2–80    39. 11–225    40. 2–141
41. ச. ம. மோ. த. 5–27    42. 2–83, 84

## நிலத்தின் விலை

எல்லாப் பொருள்களின் விலை குறைவாகவும் மலிவாகவும் இருந்தமையின் நிலத்தின் விலையும் குறைவாகவே இருந்தமை எதிர்பார்க்கக்கூடியதே.

" கி. பி. 1787 : ஹஸரத் ஹஸம்சா பக்கீர் தனக்குப்பேலஜி தக்யால் செய்வதற்குச் சாலி மங்கலத்தின் குடி மக்களிடமிருந்து அனாதி தரிசு காலி இடத்தை $2\frac{1}{2}$ வேலி 700 சக்கரத்துக்கு வாங்கி "

என்ற குறிப்பு[43] ஒரு வேலியின் விலை சக்கரம் 280 என்று கூறுவதாக அமைந்துள்ளது.

" கம்பெனி உத்யோகஸ்தனாக இருந்தபோது நன்னிலம் தாலுகாவில் அகரநாடாங்குடி என்ற கிராமத்தில் இரண்டுவேலி நிலம் வாங்கியிருந்தேன் ; அதைக் கிரயம் செய்து ரூ. 250 பெற்றுக்கொண்டேன் "

என்று குறிப்பு[44] ஒருவேலி நிலத்தின் விலை ரூ. 125 என்று பகர்வதாகவுள்ளது.

ஆனால் சர்க்காரில் 1829இல் வைத்தியநாதம் பேட்டையில் சர்க்கேல் ராமோஜி சர்ஜேராவ் காட்கே அவர்கள் பெயரால் 1வேலி, 8–$19\frac{5}{8}$ மா நிலத்தை 2180 சக்கரத்துக்கு வாங்கியதாகத் தெரிகிறது. இது மிக அதிகமான விலை என்பது சொல்லாமே அமையும்.

" The average price of Nansei per veli during 1828-29 was Rs. 165 "

என்று தஞ்சை ஜில்லா மானுவல் என்ற நூல் கூறும்.[45] அந்நூலிலுள்ள பட்டியலில் 1852–53இல்தான் ஒரு வேலியின் சராசரி விலை ரூ. 261 என்று காட்டப்பெற்றுள்ளது. எனவே 19-ஆம் நூற்றாண்டில் மிக்குறைந்த விலையில் நிலம் மதிப்பிடப்பெற்றது என்பது விளங்கும்.

## தங்கம் வெள்ளி விலை

" 1769 : சேர் $3\frac{1}{4}$க்கு சேர் 1க்கு 19 சக்கரம் வீதம் சக். 61–7 "
என்று ஓராவணக் குறிப்பு[46] உள்ளது.

"கி. பி. 1776: வெள்ளிக்கட்டி நிறை $1\frac{1}{2}$சேர் வாங்கி ஒரு சேருக்கு 16 சக். 4 பணம் வீதம் $24\frac{1}{2}$ சக். 6 பணம்" என்ற குறிப்பாலும்,[47] " கி. பி. 1823: மேள வாத்தியத்திற்கு வெள்ளி முலாம்பூச $1\frac{3}{4}$ மணங்கு வாங்கிய வகையில் 1 சேருக்கு 17 சக்கரம் 8 பணம் வீதம்......" என்ற குறிப்பாலும்[48] வெள்ளி விலை சரிந்திருந்தமை காணலாம்.

---

43. 1–299 44. ச. ம. மோ. த. 16–7. 45. P. 322, Tanjore District Manual.
46. 2–18 47. ச. ம. மோ. த. 29–3 48. ச. ம. மோ. த. 27–26.

"1813 : தங்கம் 9 மாத்துள்ளது வராகனெடை 1க்கு சக். 2–8$\frac{1}{8}$ வீதம்"[49]

"1827 : தங்கம் 8 மாத்து வராகனெடை சக். 2$\frac{1}{2}\frac{1}{8}$"

" தங்கம் 7 மாத்து வராகனெடை சக். 1$\frac{3}{4}$ "

என்ற குறிப்புக்களினின்று[50] சிறிது மாற்றுக் குறைவான தங்கத்தின் விலை[51] அறியப்பெறும்.

"பொள்ளல்[51அ] தங்கம் என்பது துளைப்பொன் அதாவது தூய தங்கம் ஆகலாம். இது வராகனெடை சக். 2–4$\frac{1}{1}\frac{5}{6}$ என்று தெரிகிறது. இத்தங்கம் முலாம் பூசுவதற்குரியது என்பது "தங்கம்" கிலிட்" (gilt) கொடுப்பதற்குப் பொள்ளல்[51அ] தங்கம் 23 தோலா வாங்கினதற்கு 256 சக்." என்பதால் அறியப் பெறும்.

---

49. 1-888, 889 50. ச. ம. மோ. த. 10-19

51. "Ten "mattu" being characteristic of pure gold and correspondiag to twenty four carats" - p. 95, East India Company and S. I. Economy, C. Ramachandran, New Era Publications, Madras - 28 (1980)

51அ. பெள்ளல் என்றே எழுதப்பெற்றுள்ளது,

# 28

# தொழில்கள்

## படகுகள்

தஞ்சை மராட்டியர் ஆட்சிக்குரிய நாட்டில் காவிரி பல கால்களாய் ஓடி வளப்படுத்துகிறது. பல மாதங்களில், காவிரியின் கிளை ஆறுகளில் வெள்ளப்பெருக்கு உண்டு. இந்நாள்போல், அந்நாட்களில் ஆறுகளைக் கடக்கப் பாலங்கள் இல்லை. ஆகவே படகுகளிலேயே மக்கள் ஆறுகளைக் கடக்கவேண்டி யிருந்தது. எனவே படகுகளைக் கட்டும் தொழில் சிறந்த தொழிலாக முற்காலத்திலிருந்தது; மராட்டியர் காலத்திலும் அங்ஙனமே.

“ கி. பி. 1768 : சாதம்பங்குடி துறைக்குக் கொள்ளிடத்தில் படகைக் கட்டச்செலவு சக். 119–4 ”

“ கும்பகோணம் காவிரியின் படகைக் கட்டச் செலவு சக். 60–6$\frac{1}{16}$ ”[1]

“ 1811 : விண்ணாற்றின் படகு செய்யச் சாரங்கபாணி அய்யாவிடம் சக். 100 ”[2]

“ 1852 : திருவையாற்றில் 4 படகுகளைத் தயாரிக்கப் படகு ஒன்றுக்கு உத்தேசச் செலவு தளவாடம் மக்யாடு உட்படச் செலவு ரூ. 1000 ”[3]

“ 1852 சரபேந்திரராஜபட்டணத்தில் படகு ஜீர்ணமானவகையில் பழுதுபார்க்க ரூ. 535–0–3 ”[4]

---

1. 2–4, 5 2. 2–194 3. 4–851 4. ச. ம. மோ. த. 25–89

மேலேகண்ட குறிப்புக்களால், காவிரி பாயும் நாடு முழுவதிலும் படகுகளைக் கட்டும் தொழில் பெருவாரியாக இருந்தமை பெறப்படும். அப்படகுகள் இடத்துக்கேற்பப் பெரியனவும் சிறியனவும் ஆக இருந்தனவாதல் வேண்டும்.

இங்ஙனம் ஆறுகளைக் கடக்கப் படகுகள் பயன்பட்டமையோடு வெள்ளைக்காரர்கள் கேளிக்கைக்காகவும் அப்படகுகளைப் பயன்படுத்தினர்.

"11—6—1849 ரெஸிடெண்டு ஸர்கேலுக்கு எழுதிய கடிதம்: வெள்ளைக்காரருடைய வேடிக்கைக்காகக் கோடிக்கரையில் வைத்திருக்கும் படகுகளை ஸர்கேல் தயவு செய்து மகாராஜா சாயேபின் உத்தரவு பெற்றுக் கொண்டு கொடுத்தால் ரெஸிடெண்டுக்கு வெகு உபகாரமாயிருக்கும்" என்ற கடிதத்தினால் படகுகளைக் கேளிக்கைக்காகச் செலுத்துவதற்குப் பயன்படுத்தியமையும் தெரியவரும்.

வேதாரண்யம் கோடிக்கரை முகாமினின்று, "இரண்டு தோணிகள் தயாரிப்பதற்குப் புன்னைக்காய் மரங்களும் பலகையும் வருகின்றன; விட்டுவிடுக" என்று சுங்கத்துறைக்கு 1811இல் ஆணை பிறப்பித்ததாக இருக்கும் குறிப்பு, தோணிகள் செய்வது பற்றி அறிவிப்பதாய் உள்ளது.

## கப்பல் கட்டுதல்

அரசருக்குச் சொந்தமாகக் கப்பல்கள் இருந்திருத்தல் வேண்டும்; ஆனால் பழமையான சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் இரண்டாம் சிவாஜி காலத்தில் 25—1—1938ல் ஒரு கப்பல் சர்க்காரிலிருந்து வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். அந்தக் கப்பலில் அதிகம் பழுதுபார்க்கவேண்டியதில்லை என்றமையால்[5] இரண்டாம் சரபோஜி காலத்திலேயே பெரிய கப்பல்கள் கட்டப்பெற்றனபோலும் என்று எண்ணலாம்.

## தனியார் கப்பல்கள்

கி. பி. 1806க்குரிய ஆவணக்குறிப்பு ஒன்று தனியார் கப்பல்களைப் பற்றிக்கூறுகிறது.[6] கொல்பேனா, மலாக்கா[7] துறைமுகங்களுக்கு முத்துச் சிப்பி 15 தூக்கு, சாமிநாத செட்டியாரின் கப்பலில் நாகூர்த் துறையினின்று ஏற்றியனுப்பினர். ஸேக் மயாரன்கதா என்பவருடைய கப்பலில் முத்துச்சிப்பி 5 தூக்கு அனுப்பப்பெற்றது. இவ்விரு கப்பல்களிலும் ஏற்றிய சரக்கின் மதிப்பு $3344\frac{1}{4}$ வராகன் ஆகும். இவற்றை ஏற்றிச்செல்லக் கப்பற்கூலி மேற்படி தொகையில் 5% ஆகும்.

---

5. 6-12 6. 2-120, 121
7. சுமத்ராவுக்குக் கிழக்கே மலேஷியா தீபகற்பத்துக்கு மேற்கில் உள்ளது மலாக்கா கடற்பகுதி. மலேஷியா தீபகற்பத்தின் மேற்குக்கரையில் உள்ளது மலாக்கா.

கி. பி. 1777இல் **அதிராம்பட்டினம்** வியாபாரி கப்பலில் அரிசியையேற்றிக் கொண்டு கொழும்புக்குப் போனார். திரும்பி வருங்கால் கொட்டைப்பாக்கு ஏற்றிக்கொண்டு வந்தார்.[8] இந்தக் கப்பல் அதிராம்பட்டினம் வியாபாரி யினுடைய தாயிருக்கக்கூடும் என்றும், தஞ்சை மராட்டியர் காலத்து **மலாக்கா** முதலிய இடங்கட்குக் கடல்கடந்து சென்று வாணிபம் நடத்தினர் என்றும் தெரியவருகிறது.

1821இல் இரண்டாம் சரபோஜி, காசியாத்திரையில் இருந்தபொழுது, கப்பல் வேலையில் திறமை பொருந்திய ஒரு வெள்ளைக்காரனை ரூ. 180 சம்பளத்தில் நியமித்துத் தஞ்சைக்கு அனுப்பி, அவன் உதவிக்குத் தச்சர் கொல்லரைக் கொடுத்துச் சிறிய பெரிய கப்பல்களைக் கட்டச்செய்ய ஆணை பிறப்பித்தார்.[9]

1821 மார்ச்சுத் திங்கள் ஐந்தாம் நாள் கல்கத்தாவில் கப்பல் கட்டுகிற இடத்தை ( Naval Dock yard ) சரபோஜி பார்வையிட்டார். அங்குக் கப்பலின் நீள அகலத்துக்குத் தகுந்தபடி ஒரு பள்ளம் ; கப்பலின் உயரத்துக்குத் தக்கபடி ஆழம் ; சுற்றிலும் இறங்குவதற்குரிய படிகள் ; கப்பலுக்கு நங்கூரம் அப்பள்ளத்திற்கு மேற்புறம் கங்கையாறு; ஆற்றுநீர் பள்ளத்திற்கு வராம லிருக்கப் பலவகைக்கதவுகள்; ஊற்று நீர் தேங்கினால் அந்நீரை அப்புறப் படுத்தும் குழாய்கள்; கப்பல் வேலை முடிந்ததும் கதவுகளைத் திறந்தால் கங்கையாற்று வெள்ளம் வந்து நிரம்பும்; கப்பலை எளிமையாகக் கங்கை யாற்றுக்குக் கொண்டுசெல்ல முடியும். இங்ஙனம் 25-7-1821இல் காசியின்று எழுதிய கடிதத்தில் கண்டிக்கிறது.[10]

கல்கத்தாவில் வாங்கிய சாமான்கள் அங்கிருந்து நாகைக்குக் கப்பலில் ஏற்றியனுப்பியதாகத் தெரிகிறது.[11] இதனான் கல்கத்தாவினின்று தென்னாட்டுத் துறைகட்குக் கப்பல் போக்குவரவு இடையீடின்றி நடை பெற்றது என்பதும் உறுதி.

கப்பல் கட்டுவதற்குச் சுரபுன்னை மரங்கள் பயன்பட்டன; சாலுவ நாயக்கன் பட்டினத்தில் கப்பல்கள் கட்டப்பட்டன;[12] "பெரிய கப்பலின் வேலையும் பழக்கப்படி நடந்து கொண்டிருக்கிறது"[13] என்ற 1822க்குரிய குறிப்பு, பெரியகப்பல் கட்டும் தொழிலில் சர்க்கார் ஈடுபட்டிருந்தமைக்கு எடுத்துக்காட்டாகும்.

கி. பி. 1826இல் சாலுவநாயக்கன் பட்டினத்தில் அரண்மனையா ருக்குக் கப்பல் இருந்ததாகத் தெரிகிறது.[14]

---

8. 1-147 9. 5-63. 10. 5-151, 152
11. 5-158 12. 2-102 13. 10-74 14. 4-486

சரபோஜி காலத்துக்கு முன்னரே சர்க்காருக்குக் கப்பல்கள் இருந்திருத்தல் கூடும். எனினும் உறுதியாகச் சொல்வதற்குரிய சான்று கிடைக்கவில்லை.

இரண்டாம் சிவாஜி காலத்தில் சர்க்கார் கப்பல் ஒன்றை ஜேம்ஸ்ரோஸ் என்பவருக்கு 7 ஆண்டு (பத்தா கூலிக்கு) வாடகைக்கு விடுவதற்குரிய ஒப்பந்தம் பற்றியும் அது பற்றிய வழக்குப்பற்றியும் ஆவணங்கள் கிடைத்துள்ளன.[14அ]

சரபேந்திர ராஜபுரத்தில் சர்க்காருக்குரிய கப்பல் இருந்தது. அக் கப்பலைப் பார்த்தபொழுது அதிகமாய்ப் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்பட்டது. சில இடங்களில் செப்புத்தகடுகள் போயிருந்தன; தார்பூசல் வேண்டும்; கோழிவெட்டிக் கடலில்தள்ளவேண்டும். இவற்றுக்கு ரூ. 200 செலவாகும். கப்பலுக்குரிய செலவுகள் யாவும் செய்துகொண்டு ஆண்டொன்றுக்கு ரூ. 6000 (பத்தா கூலி) வாடகை கொடுப்பதாக ஜேம்ஸ் ரோஸ் என்பவர் 25—1—1838இல் கடிதம் எழுதினார்.[15]

அதன்படி 16—7—1838இல் சரபேந்திரராஜபட்டணம் மத்தியஸ்தர் கனகசபையாபிள்ளைக்கு ஜேம்ஸ் ரோஸ் "கப்பல் பத்தாகூலி உடன்படிக்கை" எழுதிக்கொடுத்தார். அந்தப் பாய்மரக் கப்பலுக்குப் பெயர் "பிரகதீசுவர பிரசாத்" என்பதாகும். பத்தாகூலி ஆண்டொன்றுக்கு ரூ. 6000; ஆண்டு தோறும் பழுதுபார்க்கும் செலவு ரூ. 400, போக மீதி ரூ. 5600 கொடுப்பது; ஸாலமன் தீவு[15அ] முதலாகிய தீவுகட்குப்போய்க் கொண்டுவந்த பொருட்களில் சர்க்காருக்குத் தேவையான பொருட்களின் விலை போக எஞ்சிய தொகையை ஆண்டுதோறும் ஜுன் 17ஆம் நாள் செலுத்தவேண்டும். பழுது பார்க்கும் செலவு 1200 ரூபாய்க்கு மேற்பட்டுவிட்டால் பழுது பார்த்த இடத்தில் இருந்தவர் களின் கையெழுத்துடன் கணக்குக் கொடுத்தால் பத்தாகூலியில் கழித்துக் கொள்ளலாம். சென்னையினின்று கப்பலுக்காகப் பெறவேண்டிய சீட்டை (Pass) நகல் எடுத்துச் சர்க்காரிடம் கொடுக்க வேண்டும். கப்பலுக்கு எதிர்பாராதவண்ணம் தெய்வத்தானாதல் அரசானாதல் ஏதாவது கெடுதி ஏற்படின் அது சர்க்கார் பொறுப்பு – இங்ஙனம் உடன்படிக்கை எழுதிக் கொடுத்தார் ஜேம்ஸ் ரோஸ்.[16]

ஜேம்ஸ் ரோஸ், சர்க்கேல் பாவாஜி ராமாஜி பண்டிட் அவர்கட்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதிலிருந்து சர்க்காருக்கும் ஜேம்ஸ் ரோஸுக்கும் கப்பல் பழுதுபார்ப்பது பற்றி மனவேற்றுமை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

---

14அ 6–11 முதல் 87 வரை 15. 6–11 முதல் 14 வரை

15அ. ஸாலமன் என்பது கிழக்கு இந்தியத் தீவுகளில் நியூகினியா தீவுக்குக் கிழக்கில் உள்ளது

16. 6–16 முதல் 20 முடிய

க்ப்பல் பழுதுபார்த்து வெளியே விடப்பட்டது; கப்பலில் தண்ணீர் கசியத் தொடங்கியது. கரைக்குத் திரும்பக் கப்பல் கொணரப்பட்டது. பழுது பார்க்க மூவாயிரம் ரூபா செலவாகும் என்று தெரிந்தது. அதிகத் தொகை யானதால் அரண்மனையார் தரவேண்டும் என்று ஜேம்ஸ் ரோஸ் கேட்டார். வையாபுரி மேஸ்திரி 'வேலை நடக்கட்டும், அரசரைப் பார்த்துச் சொல்லலாம்' என்று ரோஸுக்குக் கடிதம் எழுதினார். அரசரை ரோஸ் பார்க்கச் சென்றார்; பார்க்க முடியவில்லை. ஆனால் அரசர் பணம் அனுப்புவதாகச் சொன்னார் என்று வையாபுரி கூறினார். இரண்டு மாதம் காத்திருந்தும் பணம் வரவில்லை. ரோஸ் உடல்நிலை குன்றியது. சிலநாள் கழித்துக் கப்பல் வேலையை நிறுத்தி ரெஸிடெண்டு இடம் ரோஸ் விண்ணப்பித்தார். ரெஸிடெண்டு அரசரிடம் இதுபற்றி வினவியபொழுது மறுநாளே பணம் அனுப்பிவைப்பதாக அரசரிடம் இருந்து பதில் வந்தது. ஆனால் மறுநாளே உடன்படிக்கையை நீக்கி விடலாம் என்று அரசர் ரெஸிடெண்டுக்குக் கடிதம் அனுப்பினார். ரோஸ் 17 மாதகாலம் பழுதுபார்த்தலில் ஈடுபட்டிருந்ததாகவும் அதனால் தனக்கு அதிக இழப்பு என்றும் கூறிக் கணக்குக் கொடுத்தார்.[17]

இதற்கு 4—1—1842இல் அரண்மனையிலிருந்து ஸர்க்கேல் பதில் எழுதினார். இதன் சுருக்கம் 2—3—1842இல் ஜேம்ஸ் ரோஸ் ஸர்க்கேலுக்கு எழுதிய கடிதத்தின் முற்பகுதியில் 5 பக்கங்களில் காணப்படுகிறது.[18] எஞ்சிய பகுதியில் ஜேம்ஸ் ரோஸ் தன் கட்சிக்கு ஆதரவான செய்திகளைக் கூறியுள்ளார். குத்தகைக்கு எடுத்துக்கொண்ட ஜேம்ஸ் ரோஸ் சாதாரண மனிதர் அல்லர்; மிக்க திறமையுடையவர்; நன்கு கணக்கு எழுதுவதில் வல்லவர்;[19] கப்பல்களைப் "பத்தாகூலி" எடுப்பதில் மிக்க அநுபவம் உள்ளவர்; 1836இல் மேஸ்டர் பீடன் துரையினுடைய "வெங்கிட்ட ரெட்டி" என்ற கப்பலையும், 1837இல் பவாநகர் அரசருடைய "தவுலாத் பிரசாத்" என்ற கப்பலையும் "பத்தாகூலிக்கு"ப் பிடித்து அனுபவித்தவர்[20]. ஆகையால் அரண்மனையாரிடத்தில் சட்டப்படிக்கு வாதாடிக் கடிதம் எழுதினார்; முடிவு விவரம் தெரியவில்லை.

அரண்மனைக் கப்பலோட்டிகளின் சம்பளம் எவ்வளவு என்று தெரிய வில்லை. கம்பெனிக் கப்பலோட்டிகளுக்கு மாதம் 1க்கு 53 சக்கரம் சம்பளம் என்று ஓராவணத்தால் அறியவருகிறது.[20அ]

## மூலாம் பூசுதல்

மராட்டிய மன்னர் மேற்பார்வையில் பல கோயில்கள் இருந்தன. கோயில்களுக்குக் கொடுக்கும் வாகனங்கள் முதலியவை வெள்ளி முதலிய வற்றால் செய்யப்பெற்றிருக்கும். அவற்றுக்குத் தங்க மூலாம் பூசுதல் நடை

17. 6-21 முதல் 56 வரை. 18. 6-56 முதல் 62 வரை 19. 6-62 முதல் 84 வரை
20. 6-77, 78, 79 20.அ ச. ம. மோ. த. 5-25

பெறுவதுண்டு. பல வெள்ளி நகைகட்கும் தங்க மூலாம் பூசுவர். 1827க்குரிய ஆவணம் ஒன்று தங்க மூலாம் பூசுதலைப் பற்றியதாக உள்ளது.[21] அது பின்வருமாறு:

"முலாம் வேலையில் கை தேர்ந்தவன் வெங்கிடசாமி திருமலை என்று ஒருவன் இருந்தான்; பொய்க் காரணம் கூறி விடுமுறை பெற்றுத் திருச்சிக்குச் சென்றான்; துறையூரில் இருந்து அரங்கநாதப் பெருமானுக்கு உபயமாகக் கொடுக்கப்பெற்ற வெள்ளிச் சிங்காதனத்துக்குத் தங்க முலாம் கொடுத்தான்"

இதனால் முலாம் வேலையில் சிறந்தவர்பலர் தஞ்சையில் இருந்தனர் என்பது தெரியவரும்.

## பட்டுப்பூச்சி வளர்ப்பு

இரண்டாம் சரபோஜி, காசி யாத்திரை மேற்கொண்டபொழுது, புரஸ்தாபாதுக்கு அருகில் உள்ள ஹஸீம்பூர் என்ற ஊரில் இருந்து 23—3—1821இல் எழுதுவித்த கடிதத்தில், பட்டுப்பூச்சி வளர்ப்புப் பற்றி விரிவாகக் காணப்படுகிறது.

வங்காளத்திலிருந்து பட்டுப்பூச்சி அனுப்பப்பெற்றுள்ளது. அதில் மஞ்சள் நிறம், சிறிது மஞ்சள் நிறம், வெள்ளை நிறம் ஆகிய மூன்று வகைகள் உண்டு உயர்ந்த பட்டு ஆண்டுக்கொருமுறைதான் உற்பத்தியாகும். வெள்ளை நிறப்புழுக்கள் தஞ்சையை அடையும்வரை பிழைத்திருந்தால் முட்டைகளை ஒரு பானையில் காகிதத்துடன் போட்டுப்பானையில் வாயை மூடிக் காற்றோட்டம் இல்லாத இடத்தில் உரியில் வைத்திருக்கவேண்டும். மாசி மாதத்தில் பானையிலுள்ள முட்டைகளில், காகிதத்தை எடுத்துக் காற்றோட்டமாக வைத்தால், புழுக்கள் உண்டாகும். அவற்றை மூங்கில் தட்டில் வைத்து **இலந்தை**[21அ] இலைகளைப் பொடியாக நறுக்கிப் போடவேண்டும். புழுக்கள் வளர்ந்ததும் முழு இலைகளைப் போடலாம். இந்தப்படி ஆண்டுக்கொருமுறை பட்டுப்பூச்சிகளை வளர்க்கவேண்டும். இந்த முறையிலேயே மற்ற நிறப்பட்டுப் பூச்சிகளையும் வளர்க்கலாம் – இங்ஙனம் பட்டுப்பூச்சி வளர்ப்புப்பற்றி எழுதப் பெற்றுள்ளது.[22]

---

21. 4-219

21அ. "பட்டுப்பூச்சிகள் பெரும்பாலும் ஒவ்வோரினம் சிறப்பாக ஒரு மரத்தின் இலைகளையே உண்ணும். இவற்றில் முசுக்கட்டை, ஆமணக்கு, **இலந்தை**, வாதா, சிந்தூரம், கருவாலி, நாரத்தை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்" – பக்கம் 68; "காட்டில் இயற்கையாகக் கூடு கட்டி வாழும் புழுக்களைச் சேகரித்து வீடுகளில் வைத்துப் பராமரிப்பர்; வீடுகளில் கூடு கட்டச் செய்வர். இவை **இலந்தை** மரத்தழையைத் தின்று வளரும்" - பக்கம் 65, பட்டுச்செல்வம், கே. எஸ். லக்ஷ்மணன், பாரி நிலையம், சென்னை, 1962

22. 5-79 முதல் 82 முடிய

இரண்டாம் சரபோஜி காலத்தில் இத்தொழில் நன்றாக வளர்ந்திருத்தல் வேண்டும். மாத ஊதியத்துக்கு ஆள்களை அமர்த்திப் பட்டு நூற்புத் தொழிலை வளர்ச்சியடைவித்தமை பற்றிய குறிப்பு உண்டு.[23] அது,

"வாஞ்சிலிங்கம் பிள்ளையிடம் பட்டுப்பூச்சி வேலை செய்யும் ராமச்சந்திர செட்டிக்கு 3 சக். முத்துச்செட்டிக்கு 3 சக். வாஞ்சிலிங்கம் பிள்ளை மூலம் பட்டுப்பூச்சியிலிருந்து பட்டு எடுத்து ஐந்து வண்ணப் புடவைகள்" என்பதாம்.

"விடோஜி லோன்ஜி வழி பட்டுப்பூச்சிகளை வாங்க ரூ. 8"[24]

"பட்டுப்பூச்சி திருட்டுப்போனதைப் பிடித்துக்கொண்டு வந்தவனுக்கு இனாம் ஒரு அணா"[25]

"பட்டு வேலை செய்கிற பரிமணத்திற்கு மாதம் ரூ. 2–4–0"[26]

"பட்டுப்பூச்சியிலிருந்து பட்டு எடுப்பதற்குக் கூலி ரூ. 8"[27]

"பட்டுப்பூச்சியை வளர்க்கும் பட்டு நூல் காரனுக்கு ரூ. 3"[28]

"மராமத்து இலாகாவிலிருந்து பட்டுபூச்சி இயந்திரத்தைச்[28அ] சொல்கிறபடி செய்து கொடுக்கிறது"[29]

என்ற குறிப்புக்களால் அரண்மனையார் பட்டு வளர்ப்பில் மிக்க ஊக்கமுடன் ஈடுபட்டிருந்தனர் என்பது தெரியவருகிறது.

"பட்டுக்கு நாகப்பழநிறமும் பச்சை நிறமும் கொடுக்கக் கூலி1– 11–0" என்ற குறிப்பால் பட்டுக்குப் பல வண்ணங்கள் கொடுத்தலிலும் தேர்ச்சி பெற்று இருந்தனர் என்பது புலப்படும்.[30]

## கட்டிடத் தொழில்

தஞ்சையில் உள்ள கோட்டை மட்டும் அன்றிப் பல கோட்டைகள் மராட்டிய அரசில் இருந்தன. பல மிராசுதார்கள் செல்வந்தர்கள் முதலியோர் பெரிய வீடுகளில் வசித்திருந்தனர் என்பது சொல்லாமலே அறியவரும்.

---

23. ச. ம. மோ. த. 4-16 ; 13-39 ; 13-48
24. 4-227 25. 4-249 26. 4-416 27. 4-288 28. 4-281
28அ பட்டுப்பூச்சி வங்காளம் சென்னை ஆகிய இடங்களில் மூங்கில் தட்டுக்களில் விடப்படும். இத்தட்டுக்களுக்கிடையே போதுமான காற்று வசதி யிருக்க ஓரடி இடைவெளியிருக்கும். இவை சுமார் 6 அடி நீளமும் வட்ட வடிவமும் உடையனவாய் இருக்கும்"—பக்கம் 81, பட்டுச்செல்வம், கே. எஸ். லக்ஷ்மணன், பாரிநிலையம், சென்னை—1962
29. 5-445 30. 4-288

1807இல் தஞ்சை அரசாட்சியில் 62048 மிராசுதார்கள் இருந்தனர் என்று தெரிகிறது.[31] மிராசுதார்களும் பிறரும் சிறந்த வீடுகளில் வாழ்ந்திருத்தல் கூடும். 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆறுகளைக் கடக்கப் பல பாலங்களைக் கட்டினர். மேலும் பலதிருக்கோயில்கள் எடுப்பிக்கப்பெற்றன. இவற்றையெல்லாம் நிர்மாணிப்பதற்குரிய தொழிலாளிகளும் பலர் இருந்தனர். இத்தகைய அரண்மனைகளும், கோட்டைகளும், கோயில்களும் வெள்ளையர் மிராசுதார்கள் ஆகியோர் குடியிருக்கப் பங்களாக்களும் கட்டப் பெற்றமை யான் சுண்ணாம்பு வியாபாரம் மிகப் பெருகியிருந்திருத்தல் வேண்டும். கொல்லரும் தச்சரும் பல்கிப்பெருகிக் கட்டிடத்தொழிலில் ஈடுபட்டிருத்தல் கூடும் என்பது ஒருதலை.

சகரயாண்டு 1769 (1847) இல் சுண்ணாம்பு வியாபாரம் செய்யும் பத்துப்பேர் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டமையை ஓர் ஆவணம் குறிப்பிடுகிறது.[32] ஒப்பந்தம் செய்துகொண்ட பதின்மர் பெயர் வருமாறு :—

1. வெங்கடாசலம் கொத்தனார்
2. தாண்டவராய கொத்தனார்
3. மலையப்ப கொத்தனார்
4. மருதை கொத்தனார்
5. பழனி ஆண்டிக் கொத்தனார்
6. ரங்கசாமிக் கொத்தனார்
7. முத்துக் கொத்தனார்
8. பாவாடைக் கொத்தனார்
9. குமாரசாமிக் கொத்தனார்
10. பார்வதி

இறுதியில் கண்டவர் பெண்பாலர் ஆகலின் பெண்களும் இத்தகைய தொழிலில் ஈடுபட்டிருந்தனர் அல்லது பெண்கள் பெயரில் இத்தகைய வாணிபம் நடந்தது என்பது தெரியவருகிறது.

இதனால் வீடுகள் கட்டுவதற்குரிய தொழிலாளர்களும் அவர்கட்குரிய பிற தொழில்முறைகளும் சிறந்திருந்தமை பெறப்படும். அந்நாட் கம்மியர் எடுப்பித்த வேலைத்திறன் பொருந்திய பெரிய கட்டிடங்கள் பலவும் ஏறத்தாழ இரு நூறாண்டுகட்குப்பிறகும் சிறிதளவே பழுதுபார்த்தலுக்கு உட்பட்டு இன்றும் சிறந்து விளங்குதலால் அன்னோர் கட்டடக்கலைத் திறன் நன்கு மதிக்கப்படுதற்குரியதாகும்.

கொத்தனார்க்குக் கூலி 1 பணம் என்றும், சித்தாளுக்குக் கூலி ¾ பணம் என்றும் ஒரு குறிப்பினால் அறியலாம்.[33]

இங்ஙனம் மிகக் குறைவான நாட் சம்பளம் பெற்றிருந்தபோதிலும் வெண்ணாற்றங்கரைப்பாலம் கட்டிமுடித்தபிறகு, தலைமைக் கொத்தனார்க்கு இரண்டு தங்கத் தோடாக்கள் முகப்புடன் பரிசு அளிக்கப்பெற்றன. அவர்

---

31. பக்கம் 400-தஞ்சைஜில்லா மானுவல் 32. 10-42 33. 2-12

மகனுக்கு 4 தங்கக்காப்புக்களும், மராமத்துத் தலைமைக் கொத்தனாருக்கு எட்டு வடம் தங்கச் சங்கிலியும் பரிசாக அளிக்கப்பெற்றன. இதனால் தலைமைக் கொத்தனார்கள் கௌரவிக்கப் பெற்றமையும், அன்னோரின் தொழில் நிர்வாகத் திறமை பாராட்டுக்கு உரியதாயினமையும் தெரியவரும்.[33அ]

## காகிதப் பட்டறை

பனையோலையில் எழுதுவது குறைந்து காகிதங்களில் எழுதும் பழக்கம் மராட்டிய மன்னர் காலத்தில் மிகவும் பெருகிற்று என்பது சரஸ்வதி மகாலிலும் சென்னை ஆவணக்காப்பகத்திலுமுள்ள மோடி ஆவணங்களினின்று அறியப்பெறும்.

மன்னார்குடி, கும்பகோணம், பந்தநல்லூர்,[34] திருக்காட்டுப்பள்ளி, திருவாரூர் ஆகிய ஊர்களில் காகிதப்பட்டறைகள் இருந்தன. இவ்வூர்களில் பலவிதமான காகிதங்கள் தயார் செய்து சர்க்காருக்கும் கும்பினிக்கும் வேண்டிய காகிதங்கள் கொடுக்கப் பெற்றுவந்தன.[35]

இவ்வைந்தூர்களிலும் சேர்ந்து 19 சாவடிகள் இருந்தன; 21 பங்குகள். பங்குதாரர்கள் தம் பங்கை விற்க விரும்பினால், "21 பங்காளியைச் சேர்ந்தவரில் யாருக்கு வாங்கச் சக்தியிருக்கிறதோ அவருக்கு விற்கவேண்டும்; வேறு யாருக்கும் விற்கக்கூடாது"[36] என்ற நிபந்தனை இருந்தது. காகிதம் செய்து விற்கும் உரிமை இந்த 21 பங்குதாரர்களுக்கே அந்நாளில் இருந்தது போலும்.

ஒரு பங்குதாரருடைய வேலையாள் –தேங்காய் வியாபாரி– இராமசாமி என்ற பெயருடையவர் –கும்பகோணத்தில் தனியாகக் காகிதப் பட்டறையை ஏற்படுத்திக் காகிதம் செய்து விற்பனை செய்யத் தொடங்கினார். அவர் அங்ஙனம் செய்வதால் மேலே கூறப்பட்டவர் காகித வியாபாரத்தை விட்டுவிட வேண்டும்; ஆகையால் புதிய காகிதப்பட்டறை தொடங்கியவருக்குத் தடை விதிக்கக் கலெக்டரிடம் பரிந்துரை எழுதியனுப்ப வேண்டும் என்பது ஓர் ஆவணத்தில் உள்ள செய்தியாகும்.[37]

## சங்கெடுத்தல்

கடலில் மூழ்கிச் சங்கெடுத்தலாகிய தொழில் இருந்தது.[38] இத்தொழில் செய்பவர்கட்கு ஆயிரத்துக்கு 12 சக்கரம் 5 பணம் கொடுத்து வந்ததாகவும், பிறர் 14 சக்கரம் கொடுப்பதால் சர்க்காரும் 14 பணம் தரவேண்டும் என்றும்

---

33அ. ச. ம, மோ. த. 10–5

34. பந்தநல்லூர் (திருப்பந்தணைநல்லூர்) க்குச் சேர்ந்தாற்போல் இருக்கும் சிற்றூர் இந்நாளில் காகிதப்பட்டறை என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

35, 36, 2–86, 87, 37, 2–88 38. 1–884

ஆதம் முத்துத்துரை என்பவர் சர்க்காருக்கு 1780இல் விண்ணப்பித்து இருக்கிறார்.[39] இத்தொழிலால் முத்துக்கள் கிடைத்தமையோடு சங்கினால் செய்யலாகும் பொருள்களும் செய்யப்பெற்றனவாதல் வேண்டும்.

## நெட்டி வேலை செய்தல்

நெட்டியினால் கிளிகள் கரும்பு முதலிய பொருட்கள் தயாரித்தல் ஆகிய சிறுதொழில் அந்நாள்களிலும் உண்டு.[40] இரண்டாம் சிவாஜி இறந்தபிறகு 28—7—1858இல் ரெஸிடெண்டு அரண்மனையைச் சுற்றிப்பார்த்த பொழுது சில பொம்மைகளைப் பார்த்து "இவை எதனால் செய்யப்பெற்றன ?" என்று கேட்டார்; "அவை நெட்டியினால் இவ்வூரில் செய்யப்பெற்றன" என்று பதில் கிடைத்தது.[41]

## மர, உலோக, தந்த, வேலைகள்

மரத்தினால் உருவங்கள் செய்யப்படுகிற தொழிலும் நன்கு நடைபெற்றது.[42] இங்ஙனம் தச்சுத் தொழிலோடு செம்பு முதலிய உலோகங்களால் தெய்வத் திருவுருவங்கள் வார்த்தலும் ஓங்கியிருந்தது.[43]

" சைதாம்பாபாயி வீரராகு மூலம் யானைத்தந்தம் பொம்மைகள் வாங்கியதற்கு 6½ வராகன்" என்ற குறிப்பு[44] யானைத்தந்தத்தினால் வேலைப்பாடு அமைந்த பொருள்களைச்செய்யும் தொழில் அந்நாளிலும் மேம்பட்டிருந்ததாதல் வேண்டும்.

## இசைக்கருவிகளைத் தயாரித்தல்

தஞ்சை இசையில் சிறப்பிடம் பெற்றது என்பது தெரிந்ததே. இந்நாட்டு இசைக்கருவிகளும், மேல்நாட்டு இசைக்கருவிகளும் பயிலப்பட்டு வந்தன. மன்னரும் இசைக்கருவிகள் இயக்குவதில் வல்லவர். பிற இசை வல்லுநர்களும் பல்கி இருந்தனர். ஆகவே இசைக்கருவிகளைத் தயாரித்தல் – அவற்றுள்ளும் வீணைகள் தயாரித்தல் சிறந்த தொழிலாக இருந்தது என்பது மிகையாகாது.

## அச்சுத் தொழில்

சரபோஜி அச்சகம் ஒன்று நிறுவினார் ; அது கி. பி. 1807க்கு முன்னரே நிறுவப்பெற்றதாதல் வேண்டும்.[45] இவ்வச்சகம் கல்யாண மஹால் மாடியில் இருந்தது.[46] 8—3—1823இல் நவாப் அரண்மனைக்கு வந்தார். அச்சு

39. 8-164; 7-589
40. 1-282
41. 4-117, 176
42. 1-842
43. 1-888
44. ச. ம. மோ. த. 2-82.
45. 8-267
46. 1-247 ; 2-173

எழுத்துக்கள் தயார் செய்கிற வேலையைப் பார்த்தார்.[47] அச்சுவேலையில் பிராமணர்களும் ஈடுபட்டனர்.[48] நூல்கள் பல்மொழிகளிலும் அச்சிடப் பட்டிருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது. இதனுடன் பழுதடைந்த புத்தகங் களைக் கட்டுதல் (பைண்டு) செய்கிற தொழில் அந்நாளிலும் உண்டு எனத் தெரிகிறது.[49]

## அரண்மனையில் பலவிதத் தொழில்கள்

அரண்மனையில் நாடோறும் செய்யவேண்டிய பலப்பல தொழில்கள் உண்டு. அவை ஐம்பத்தாறு வகையின என்று தெரிகிறது.[50] அவற்றுட் சில :–

பூசை செய்தல்; வேதங்களைச் சொல்லிக்கொடுத்தல்; காகிதப் புத்தகங்களை எழுதுதல்; ஓலைச்சுவடிகளை எழுதுதல்; தண்ணீர் கொணர்ந்து நிரப்புதல்; (சத்திரம் முதலியவற்றுள்) சமையல் செய்தல்; கோயில் பரிசாரகம் செய்தல்; கணக்கு எழுதுதல்; கவிபாடுதல்; வேஷம் போட்டுக் கொள்ளுதல்; நட்டுவாங்கம்; விகட கவி; பிரசங்கி; மிருதங்கம், நாதஸ்வரம் வாசித்தல்; மணி சொல்லுதல்; அரண்மனை வண்டிகளை ஓட்டுதல், கோனார் (இடையர்); ஜெட்டி (வஸ்தாது - மல்லர்); துணி வெளுத்தல்; பூக்காரர்; துணி தைத்தல்;[51] தீவட்டி ஆள்[52] - முதலியன நாடோறும் அரண்மனையில் செய்ய வேண்டிய தொழில்களும், தொழிலாளர் களும் ஆம். பலவிதமான தொழில்களைச் செய்ய அரண்மனையில் 307 பேர் இருந்தனர்.[53]

இதுகாறும் கூறப்பட்ட தொழில்கள் எல்லாம் அவ்வத்தொழிலில் வல்லவர் செய்தனவாகலாம். கல்வியும் இன்றி, அறிவும் இன்றி, உடல்வளம் மட்டும் உள்ள பல்லோர் கூலிவேலை செய்தே பிழைத்தனர் ஆதல்வேண்டும். ஊர்கடோறும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டோர் தவிர்த்து அதில் ஈடுபட வாய்ப்பு இல்லாமல் சிலர் இருந்திருத்தல் கூடும். அத்தகையோர் தம் உடல் வலிமைக்கு ஏற்ற தொழில்கள் செய்தனராதல் கூடும். அந்நாட்களில் வண்டிகள் ஓட்டுதல், படகு செலுத்துதல், மாடு, குதிரை,[54] ஆடு முதலிய வற்றைப் பேணுதல் முதலியவை சிலர் செய்தவேலைகள் ஆதல் பொருந்தும். மேலும் பெரிய அலுவலர்கள், அரசர்கள், அரசமாதேவிகள் இவர்களைப் பல்லக்கு மேனா முதலியவற்றில் தூக்கிச்செல்லும் சவாரிக்குச் சிலர் வேலைக் காரர்களாக இருந்தனர்.

---

47. 3-81
48. ச. ம. மோ. த. 1-84; 1-340
49. 4-445
50. 12-148 முதல் 158 வரை
51. ச. ம. மோ. த. 29-10
52. ச. ம. மோ. த. 10-20
53. 12-152இல் 5ஆவது பத்தி
54. ச. ம. மோ. த. 5-5

"மாமாங்க சவாரிக்கு வேலைக்கார சனங்களைச் சேவகம் வைக்கிற தாய் நாங்கள் கேள்வி ஆகி வந்திருப்பதால்"[55]

என்று குறிப்பு இதற்குச் சான்று.

"என்ன வேலை தெரியுமென்றால், கரீதிமாலில் கரீதி பண்ணப்பட்ட தமுக்கு, தட்டு, மட்டத்தட்டு, பெரியகூடை, மண்தட்டு......... வேலைகளுக்குக் குச்சிகள் சீவுவோம்; வேட்டைக்குப்போனால் காடுகள் வெட்டி ஒழுங்கு படுத்துவோம்; அரண்மனைத் தோட்டங்களில் மூங்கில் வெட்டுவோம்; முள்ளு கழிப்போம்"[56]

என்ற மோடிப்பலகணியினின்று[57] சாதாரண வேலையாட்களின் தொழில் திறம் நன்கு விளங்கும்.

## சபர் போதல்

"கொழும்பு யாழ்ப்பாணம் முதலாய இடங்களுக்குத் தோணியில் சபர் போகச் சொல்லி உத்தரவு கொடுத்தார்கள்" என்ற குறிப்பில், "தோணியில் சபர் போதல்" என்பது காணப்படுகிறது. பாளையக்காரர்கள், சங்கு குளிக் கிறவர்கள் முதலான பேர்களைப் போகச் சொன்னதற்கு ஒருவரும் போக வில்லை என்றும், இருவர் மட்டும் போனதாகவும், மூன்று ஆண்டுக்காலம் '**சபர்**' செய்து வந்ததாகவும், அதற்குச் சொற்ப சம்பளம் என்றும், ஓராவணத்தில்[58] குறிக்கப்பெற்றுள்ளது. இதில் கண்ட 'சபர் போதல்' என்பது இன்னது என்று விளங்கவில்லை.

## பெண்களுக்குத் தொழில்

அரசமாதேவிகளின் பணிப்பெண்கள் "**அக்கா கூட்டம்**" அல்லது "அக்காமார்" என்று சொல்லப் பெற்றனர்.[59] "அவர்கள் சர்க்காரின் பரம்பரைக் குழந்தைகள்" என்றும் சொல்லப் பெற்றனர். அவர்கள் அரண்மனையில் வேலை பார்த்தனர். அவர்கட்குச்சம்பளம் ரூ. 3 முதல் 7 அல்லது 8வரை கொடுக்கப் பட்டது. அக்காமார் தவிர்த்துப் பிற ஏழைப்பெண்டிர் கூலி வேலை செய்தே பிழைப்பு நடத்தினர் என்று கொள்ளலாம்.

---

55. 7-812; ச. ம. மோ. த. 15-24
56. 7-818
57. மோடி ஆவணங்களின் இடையே கிடைத்த தமிழ் ஆவணங்கள் சிலவற்றைச் சரஸ்வதிமகாலில் உள்ள புலவர்கள் பெயர்த்து எழுதியுள்ளனர். அவை இரண்டு பாகங்களாக உள்ளன; தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் உள்ள 6, 7 என்ற பகுதிகளில் இவை காணப்பெறும்
58. 7-818
59. 4-154

## வண்டிக்காரர்

சிலர் வண்டியுடையராய் வண்டியோட்டிப் பிழைத்தனர். சென்னையிலிருந்து தஞ்சைக்கு இரண்டு வண்டிகளுக்கு வாடகை ரூ. 44 என்றாற்போன்ற குறிப்புக்கள்[60] இதனை வலியுறுத்தும்.

## தோட்டக்காரர், காவல்காரர்

மராட்டிய மன்னர்கட்குத் தோட்டங்களும் தோப்புக்களும் நிறைய இருந்தன. அவற்றுக்கு உரியவர்கள் மராட்டிய அரசமாதேவியர்களேயாவர். ஒவ்வொரு தோட்டத்துக்கும் ஒரு அலுவலர் இருந்தமையோடு காவல்காரரும் இருந்தனர். இங்ஙனம் காவல் தொழில் செய்பவர் மட்டுமன்றிப் பெரிய தோட்டங்களாக இருப்பின் நீர்ப்பாய்ச்சுதல் முதலியவற்றுக்குத் தற்காலிகமாகக் கூலியாட்களையும் அமர்த்தினர்.

" பழத்தோட்டத்துக்குப் பங்குனி முதல் வைகாசி முடிய நீர் பாய்ச்ச 108 பேருக்கு ஒருவருக்கு ½ பணம் வீதம் மூன்று மாதங்களுக்கு 5 சக்கரம் 4 பணம் "[61] என்ற குறிப்பு இதனை வலியுறுத்தும்.

## தோட்டப்பயிர்

தோட்டங்களில் மரங்கள் நடச்செய்து வளர்த்தல் மிகவும் கவனமாகக் கருதப்பட்டுவந்ததாகத் தெரியவருகிறது.

பதியன் நடவேண்டிய கன்றுக்கும் மரத்துக்கும் எருப்போடுவது எப்படி என்று கி. பி. 1806இல் சென்னை பள்ளிகொண்டான் மேஸ்திரி என்பவரிடம் இருந்து அறிவுரை பெறப்பட்டுள்ளது.[62]

இரண்டாம் சரபோஜி, காசியாத்திரை செய்தபொழுது, ஆங்காங்குச் சில மரம் செடி கொடிகளின் விதைகளைப் பெற்றுத் தஞ்சைக்கு அனுப்பி வைத்தார்.

25—7—1821இல் " பிலக, வஹடேல் " (?) என்ற மரங்களின் விதைகளையும்[63] 20—2—1821இல் "மிஸிரா" என்னும் தானியத்தின் விதையையும்[64] 5—3—1921இல் "சிம்சுபர்" என்ற மரத்தின் விதையையும்[65] தஞ்சைக்கு அனுப்பினார்.

1—2—1822இல் கருஞ் செங்கொட்டை மரத்தின் பழுத்த பழம் 19 டப்பாக்களில் வைத்தனுப்பி, அவ்விதைகளைத் தண்ணீர் தேங்காமல் இருக்கும் கருப்புக் களிமண் உள்ள மேடான நிலத்தில் விதைக்குமாறு ஆணை அனுப்பப்பெற்றது.[66]

60. 4-288 61. 12-130 62. 1-189
63. 5-128 64. 5-197 65. 5-200 66. 5-26

23—3—1821இல் "லுக்வியாத்" என்னும் மஞ்சள் நிறப்பழமும் "பொதச்சீ" என்ற வட்ட வடிவமுள்ள கருப்புப் பழமும் வங்காள தேசத்தில் கிடைத்தன. அவற்றின் விதைகளைப் "பாங்கி" தபாலில் அனுப்பி எல்லாத் தோட்டங்களிலும் போட்டுப் பயிர் செய்ய ஆணை அனுப்பப்பெற்றது.[67]

"தேண்டஸ்" என்னும் வெள்ளரி புடலங்காய்போல் இருக்கும்; மரத்தில் காய்க்கும். அதன் விதையும் வெண் கொண்டக்கடலையும், சின்ன பாகற்காய் விதையும் 4—5—1821இல் அனுப்பியும்[68], 26—4—1821இல் சுரைக்காய் விதை அனுப்பியும், அவற்றைப் பயிரிட்டுச் "சத்திர தருமத்துக்குக் கொடுக்க" என்று ஆணையும் உடன் அனுப்பப்பெற்றுள்ளது.[69]

18—4—1821இல் "குலேகைரா" என்னும் பூவின் விதையும் கத்தரிக் காய் விதையும் அனுப்பப்பெற்றன.[70]

26—6—1821இல் "சகத்தாளு, படஹாரா, பனஸா" இவற்றின் விதைகள் அனுப்பப்பெற்றன. இவற்றுள் சகத்தாளு என்னும் விதை நிலத்தில் போட்ட ஏழு மாதங்கட்குப் பிறகு இரண்டு மாதங்களில் முளை கிளம்பும் என்றும், தண்ணீர்த் தேக்கம் இல்லாத இடத்தில் விதைபோட்டு நாடோறும் தண்ணீர் விடவேண்டும் 'என்றும் ஆணை உடன்வந்தது[71]

இங்ஙனம் பலப்பல மரம் செடி வகைகளின் விதைகளை யனுப்பிப் பயிரிடச் செய்தமையான் தோட்ட வேலைத் தொழிலில் பலரும் ஈடுபட்டிருந் தனராதல் வேண்டும்.

## கடன் தருதலும் வட்டி விகிதமும்

வயலை உழுது பயிரிடும் குடிமகன் கடன் வாங்கினனோ என்பது தெரியவில்லை. பொதுமக்கள் ஒருவர் மற்றொருவரிடம் கடன் பெறுதலும், வட்டியொடு திருப்பிக்கொடுத்தலும், கொடுக்கவில்லையெனில் வழக்கு மன்றத் தில் வழக்கிட்டுப்பெறுதலும் அன்றாட நிகழ்ச்சிகளாகத் தெரியவருகின்றன.[72]

முதலாம் சரபோஜிக்குப் பிறகு, சிறப்பாகத் துளஜா அரசர் ஆன பிறகு, 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மராட்டிய மன்னர்கள் லக்ஷக்கணக்கான வராகன்களைக் கடன் வாங்கியே நவாபுக்கும் கும்பினியாருக்கும் கொடுத்து வந்தனர்.

"கி. பி. 1772: நவாபு முகம்மது அலிகானுக்கு வருஷத்திற்குப் பேஸஜி கொடுப்பது ரூ. 4 லக்ஷம்; தோபாவிற்கு ரூ. 30 ஆயிரம்; ஆக ரூ. 4,30,000; மிஸ்தர் ஜாஜியிடம் இருந்து ரூ. 100க்கு $2\frac{1}{2}$ வீதம் கடன் வாங்கிக் கொடுப்பது"[73]

67. 5-79 68. 5-92 69. 5-89 70. 5-110
71. 5-122, 123 72. 8-48 73. 3-142

"கி. பி, 1780: மேஸ்தர் சார்லஸ் ஸைமன் இடம் இருந்து $2\frac{1}{2}$ வட்டி விகிதத்தில் 6 மாதக்கடன் வாங்கின ரூபாயில் செலவு ஹொன்னம் 4000

வட்டி 5 மாதம் 18 நாட்களுக்கு $2\frac{1}{2}$ வீதம் 660

ஆக 4660

– இக்குறிப்பினால்[74] மாதம் 1க்கு 100க்கு $2\frac{1}{2}$ வட்டி அதாவது ஆண்டொன்றுக்கு 30% வட்டி எனத் தெரிகிறது. (இக்குறிப்பில் காட்டிய வட்டித்தொகை 560 என்றிருத்தல் தகும்; அல்லது 5 மாதம் 18 நாள் என்பதை 6 மாதம் 18 நாள் என்று திருத்தவேண்டும்).

"கடன் கொடுத்தவர் கூபர்; கடன் வாங்கியவர் திரியம்பக ஸம்பாஜி, வக்கீல்; கி. பி. 1778; கடன் புலிவராகன் 3000; இதற்கு வட்டி 100க்கு $2\frac{1}{2}$ வீதம் மாதமொன்றுக்கு என்று தீர்ந்திருக்கிறது ........"

என்ற இக்குறிப்பினாலும்[75] வட்டி விகிதம் மிக்கிருந்தமை பெறப்படும். மேற்கண்டவற்றால் வெள்ளையர் தாம் ஈட்டிய பொருளை மிகுந்த வட்டிக்கு விட்டனர் என்பதும் போதரும்.

பணத்தை வட்டிக்கு விடும் தொழில் செய்பவர்கள் "ஸாவுகாரர்கள்" எனப்பெற்றனர். "அவர்கள் கும்பினிக்கு அந்தந்த கெடுவுக்குப் பணம் கொடுப்பர்; இராஜ்யத்தில் வசூலாகிற தொகையைத் தங்கள் கடனுக்கு ஈடுசெய்து கொள்வர்; லாபநஷ்டங்களுக்குப் பாத்தியப்படமாட்டார்கள்; நெல் வாங்கினால் அமானத்து என்று வாங்குவர்; விலை தீர்த்து வாங்க மாட்டார்கள்; நாம் கடன் கொடுத்த தொகைக்குமட்டும் நெல் வாங்கிக் கொள்வர்"

என்ற மோடி தமிழாக்கப் பகுதியால் ஸாவுகாரர்களின் செய்தி தெரியவருகிறது.[76]

கடன் கொடுத்தவனையே வசூல் செய்துகொள்ளச் செய்வதோடு, கடன் வாங்கும்பொழுது கடன் பெற இனாமும் தரகும் கொடுக்கவேண்டி இருந்தது. இதனை,

"வட்டி 3 வீதம்; இனாம் லக்ஷத்திற்கு 5,000; தரகாணிக்கு 100க்கு 1; ராஜ்யத்தை அடமானம் வைப்பது" என்ற குறிப்பால் அறியலாம்.[77]

துளஜாவும் அவர்க்குப் பிறகு ஆட்சிசெய்த அமர்சிங்கும் பெருந்தொகைகளைக் கும்பினிக்குக் கொடுக்கவேண்டியவர் ஆனமையாலும், அரண்மனைச் செலவுகட்காகவும் பெருந்தொகைகளைப் பலரிடம் கடன் வாங்கினர் எனத் தெரிகிறது.

---

74. ச. ம. மோ. த. 12-77
75. 4-405, 406
76. 5-858, 854
77. 5-409

"கடன் வரவுகள்: பட்டணம் பாபு செட்டி 50,000; முத்தையமுதலி 15,000; பச்சப்ப முதலி 5000; கம்பெனிக்குக் கொடுப்பதற்கு மேஸ்தர் சல்வன் வெள்ளைக்காரர் வழி 15,000 வாங்கப்பெற்றன."[78]

"அரண்மனைக்குக் கடன் கொடுத்தவர்கள் :—

கோதண்டராமய்யங்கார்; அனந்தய்யா, கோபாலராவ்; சின்னையாமுதலி முத்துமுதலி; பச்சப்பமுதலி; கூடலூர் வெங்கடாசலமுதலி; ரங்கசாமி நாயக்; ரஹமத்கான்; மேஸ்தர் கேபர் டானர்—இந்த 11 பேர் கடனுக்குச் சீகாழி......... கள்ளப்பத்து மகசூல் ஐவேஜி கொடுக்கவேண்டியது"[79]

என்ற குறிப்புக்களால் அரண்மனையாருக்குக் கடன் கொடுத்தவர்கள் பெயர் தெரிவதோடு, மராட்டிய மன்னர்கட்குப் பெருந்தொகைகள் கடன் கொடுக்கக் கூடிய மிராசுதார்கள், ஸாவகாரர்கள், துபாஷிகள் பலர் இருந்தனர் என்பது தெரிய வருகிறது. பணத்தை வட்டிக்கு விடும் தொழில் மிக்க லாபகரமான தொழில்—எளிமையாகப் பணத்தைப் பெருக்குவதற்குரிய வழி எனக் கருதப் பட்டமை தெளிவு.

இந்த நிலை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசு மறைந்த பிறகும் நீடித்திருந்தது. இரண்டாம் சிவாஜியின் மருமகன் சக்காராம் சாஹேப் ஒரு தனிமனிதரிடத்தில்—கொட்டையூர்க் கோபால் செட்டியார் குமாரர் ராமய்ய செட்டியாரிடம், 88 "உருப்படிகளை" அடகு வைத்து 90 ஆயிரம் ரூபா கடன் வாங்கினார்.[80] இதனாலும் பெருந்தொகைகளைத் தனி மனிதர்களுட்சிலர் வட்டிக்கு விடும் அளவு செல்வ வளம் பெருகியிருந்தனர் என்றும், வட்டி வியாபாரம் என்றுமே சிறந்த தொழிலாக இருந்தது என்றும் அறியப்பெறும்.

## துபாஷிகள்

மேலை நாட்டினர் இந்நாட்டிற்கு வந்தபொழுது அவர்கள் மொழியை அறிந்து, அவர்களோடு பேசத் தெரிந்து, இரு மொழி அறிந்தவர்களாய்ச் செல்வம் உடையவராய்ச் செல்வாக்கும் உடையவராய்ச் சிலர் இருந்தனர். அவர்கள் துபாஷிகள் எனப்பட்டனர். அவர்களுட் சிறந்து விளங்கியவர் களுள் ஒருவர் பச்சையப்ப முதலியார் ஆவர்.

**பச்சையப்ப முதலியார்:**—"1779: கர்னல் மக்ளீன் பரங்கி இவர்களின் மொழிபெயர்ப்பாளர் பச்சையப்ப முதலி-இவர்களுக்குச் செலவுக்காகப் பரங்கிப் பேட்டை ஹோன்னம் 500" என்ற குறிப்பால்[81] பச்சையப்ப முதலி கர்னல் மக்ளீன் என்பவருக்குத் "துபாஷி"யாக இருந்தார் என்றும், அவர்க்கு மாத ஊதியம் 500 ஹோன்னம் என்றும் அறியப்பெறும்.

---

78. ச. ம. மோ. த. 6-5.
79. ச. ம. மோ. த. 5-46
80. 6-197 முதல் 204 வரை
81. ச. ம. மோ. த. 4-10; 18-11, 81

துபாஷிகளுக்குச் சர்க்காரிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெற்றது என்பது, "1778 ரம்ஜான் தேதி 15–கர்னல் மக்ளீன் பரங்கி அவர்களின் மொழி பெயர்ப்பாளர் இவர்களுக்கு மேற்கண்ட வகையில் பரங்கிப்பேட்டை ஹோன்னம் கொடுப்பது என்று கட்டளை வந்தது குறித்துத் தற்போது நடப்புப் புலி ஹோன்னம் கொடுப்பது புலி ஹோன்னம் 1000" என்ற குறிப்பால் ஊகித்தறியலாம்[82].

இவரும் பெருந்தொகைகளை வட்டிக்குக் கொடுக்கும் செல்வந்தராக விளங்கியவர். இதனை,

"கம்பெனிக்குக் கொடுக்க மேஸ்தர் ஸிப்பன், மேஸ்தர் ஈபஸ்லி– இவர்கள் துபாஷி பச்சையப்ப முதலியாரிடம் கடன் வாங்கியது புலிவராகன் 10, 000"[83] என்பது வலியுறுத்தும்.

"அரண்மனைக்குக் கடன் கொடுத்தபேர்கள்" என்ற சில குறிப்புக் களில்[84] பச்சப்பமுதலி இடம் பெறுகிறார். **பச்சையப்ப முதலி**யார் வழி வேறு சிலர் கடன் கொடுத்துள்ளனர்:

"1780 : பொன்னி நாராயணப் பிள்ளையிடம் **பச்சையப்ப முதலி மூலம்** கல்லிழைத்த நகைகள் 20க்கு மதிப்பு 11060 அடகு வைத்து வாங்கின 8960, வட்டி $1\frac{1}{2}$"

என்ற குறிப்பு[85] இதற்குச் சான்றாகும்.

"1783 : பொன்னி நாராயணப்பிள்ளையிடம் "**பச்சையப்பமுதலி**" மூலம் கல்லிழைத்த மகாதேவபதக்கம் அடகுவைத்து வாங்கினது 689 வராகன், 1 வட்டி"

"பட்டணம் பானசெட்டியிடம் **பச்சையப்பமுதலி** மூலம் 50 ஆயிரம் வராகன், $1\frac{1}{2}$ வட்டி ;

"முத்தையா முதலியிடம் **பச்சப்ப முதலி மூலம்** 15 ஆயிரம் வராகன் கடன் வாங்கியது"

– என்ற குறிப்புக்களும், பச்சையப்ப முதலியார் கடன் வாங்கிக் கொடுக்கும் தரகு வியாபாரம் உடையவராய் இருந்தார் என்பதற்குச் சான்று பகரும்.

கம்பெனி செய்யும் வியாபாரங்களுக்கும், இவர் உதவியாய் இருந்தார். அணைக்கட்டு வேலைகளைக் கம்பெனி கவனித்து வந்தது. வண்டிகள் பல அவ்வேலையில் ஈடுபடுத்தப்பட்டன. "அவ்வண்டிகட்காக 150 வராகன்

82. ச. ம. மோ. த. 13-18
83. ச. ம. மோ. த. 9-19
84. ச. ம. மோ. த. 5-46; 6-5
85. ச. ம. மோ. த. 9-20

துபாசி பச்சப்ப முதலியாரிடம்" கொடுக்கப்பட்டது என்ற குறிப்பால்[86] கம்பெனி செய்யும் தொழில்கள் சில பச்சையப்ப முதலியாரின் மேற்பார் வையில் இருந்தன என்று அறியப்பெறும்.

**வேலப்ப முதலி:** இவர் தூரியன் பரங்கியின் துபாஷியாவர். இவரைப் பற்றி 1797க்குரிய குறிப்புக் காணப்பெறுகிறது. இவர் தங்குவதற்கு வீடு தஞ்சையில் கட்டப்பெற்றதாதல் வேண்டும்.[87]

**முருகப்ப முதலி:** "கி. பி. 1797 மொழி பெயர்ப்பாளர் முருகப்ப முதலி என்று ஒருவர் குறிப்பிடப்பெறுகிறார். இவர் 1797 ஜில்ஹஜ் 17ஆம் தேதி இறந்தனராதல் வேண்டும். இவருக்கு மாத ஊதியம் 60 சக்கரம். இவர் இறந்துவிட்டபடியால் இவர் மகன் அய்யாசாமி முதலி தனக்குக் கொடுக்குமாறு விண்ணப்பம் செய்து கொண்டார்.[88] இவர் அமர்சிங்கிடம் துபாஷியாக இருந்தனர் போலும்.

**ராமா நாயிக்:** இவர் கி. பி. 1782இல் குறிக்கப்பெறுகிறார். இவர் அரசரின் துபாஷியாதல் கூடும். "கவர்னர் மேஜை சாமான்கள் வாங்குவதற் காகத் துபாஷி ராமா நாயக் இடம் 200 வராகன் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்பது இவரைப்பற்றிய குறிப்பு.[89]

**வெங்கடாசல முதலி:** 8—5—1787இல் திரியம்பகஸாம்பாஜி என்ற தம் வக்கீலுக்கு அமர்சிங் எழுதிய கடிதத்தில் வெங்கடாசல முதலியும் அவர் தம்பி செங்கல்வராய முதலியும் குறிக்கப்பெறுகின்றனர்.[90] வெங்கடாசல முதலி "பெத்தோர்"[90அ] என்பவரின் துபாஷி என்று குறிக்கப்பெறுகிறார். வேறோ ரிடத்தில் கர்னலுடைய துபாஷி எனப்பெறுகிறார்.[91] இவரிடத்தில் 18,800 வராகனுக்கு இவருடைய தம்பியால் 3 ஹூண்டிகளும், தமிழில் 2 கடிதங்களும் அனுப்பப்பெற்றன என்று தெரியவருகிறது. இவர்கள் இருவரும் கம்பெனியா நடைய துபாஷிகள் ஆகலாம்.

**கிருஷ்ணசாமி:** கி. பி. 1791இல் இவர் குறிக்கப்பெறுகிறார். ஒருநாள் அமர்சிங்கின் மனைவியர் அரண்மனைக் கோவிலுக்குச் சென்றபொழுது ஒரு கலகம் நடந்தது. அன்று நண்பகல் "பாதரி சாகேப்" வந்தார். அப்போது துபாசி கிருஷ்ணசாமி சிவ ராவ் ஆகியோர் வந்திருந்தனர். இக்கிருஷ்ணசாமி அரண்மனைக்குரிய துபாசியாவர் என்று தோன்றுகிறது.[92]

இத்தகைய துபாஷிகளாயிருந்தவர்கள் அரசுக்கும் கும்பினிக்கும் இடையே செயல்பட்டனர் என்றும், அவர்கள் மிக்க செல்வாக்குப் பொருந்தி யிருந்தனர் என்றும் அறியப்பெறும்.

---

86. ச. ம. மோ. த. 6-7
87. ச. ம. மோ. த. 20-1
88. ச. ம. மோ. த. 20-2
89. ச. ம. மோ. த. 8-29.
90. 3-272
90அ. Peter (?)
91. 3-281
92. 4-388.

# 29

# வலங்கை இடங்கைப் பூசல்

இந்நாட்டில் சாதிகள் பல; அச்சாதிகள் சில ஒரு கூட்டமாகவும், எஞ்சியவை வேறு ஒரு கூட்டமாகவும் இருந்துவந்தன. அச்சாதிகளைச் சேர்ந்தவர்களுக்குள் வேறுபாட்டுணர்ச்சி தோன்றுங்கால் அரசனிடத்தில் முறையிடுவது எதிர்பார்த்தற்குரியதே. அங்ஙனம் முறையிடுங்கால் அரசனது வலது பக்கத்தில் இருந்தவர் வலங்கையர் என்றும், இடது பக்கத்தில் இருந்தவர் இடங்கையர் என்றும் கூறப்பெற்றனர் என்பர்.[1]

இப்பிரிவுகளின் தோற்றம்பற்றிப் பல வேறு கருத்துக்கள் உண்டு. கரிகாற்சோழர் இரண்டு பிரிவுகளாக மக்களைப் பிரித்தார் என்றும், ஒவ்வொரு பிரிவிலும் 98 சாதியினரை அமைத்தார் என்றும், ஒரு சாரார் கூறுவர்.[2] காச்யபர் ஒரு வேள்வி செய்தார் என்றும், அதனை அழிக்க வந்த அசுரர்களை அழித்தற்பொருட்டு அவருடைய யாககுண்டத்தினின்று இடங்கைச் சாதியினர் தொண்ணூற்று எட்டுப் பிரிவினர் தோன்றினர் என்றும், சக்ரவர்த்தி அந்திமான் வேள்வி செய்தவர்களைச் சிறப்பித்து ஒரு பார்ப்பனச் சேரிக்குக் கொண்டுபோய் விட்டனன் என்றும், அவர்கள் திருவெள்ளறை முதலாகிய ஊர்களில் தங்கினர் என்றும், ஒரு கல்வெட்டில் விரிவாகக் காணப்பெறும்.[3]

---

1. A. R. E for 1921, Part II, Para 47
2. A. R. E for 1921, Part II, Para 47; Page 33 & 34, Chingleput District Manual quoted in the A. R. E. "Karikala Chola divided the people into these two parties assigning 98 tribes to each and appropriating to their use distributed flags and musical instruments for use at festivals and functions"
3. A. R. E for 1913 Part II, Para 39

பண்டைநாள் முதல் இவ்விரு வகையினருக்கும் இடையே ஏற்பட்ட பூசல்களைத் தீர்த்து வைத்தமைக்குப் பல சான்றுகள் உள்ளன. அங்ஙனமே தஞ்சை மராட்டிய மன்னர் காலங்களிலேயும் பூசல்கள் தோன்றின. இரண்டாம் சரபோஜியிடத்தில் முறையிட்டனர். நன்மை தீமை ஆகியவைகள் நடக்கும் பொழுது ஒவ்வொருவரும் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது. அங்ஙனம் ஒப்பந்தத்தின்படி "நடக்கத் தவறினால் சர்க்காருக்குச் சக்கரம் 120 அபராதம் செலுத்திச் சர்க்காரின் உத்தரவுக்கு ஆஜராகிறோம்" என்று 1830இல் உறுதிமொழி கொடுத்துள்ளனர்.[4]

"தஞ்சை மேலவீதியில் பச்சண்ணா[5] சந்தில் இருக்கும் வலக்கை இடக்கை என்னும் இரண்டு பாஞ்சாளர்கள்[5அ] தங்களுடைய கலியாணத்தில் புழங்கவேண்டிய முறைபற்றி ஸர்க்காரில் எழுதிக்கொடுத்த உடன்படிக்கை" — என்ற 1843க்குரிய குறிப்பால்[6] இரண்டாம் சிவாஜி காலத்தில் கல்யாண காலத்திய பழக்க வழக்கங்கள் பற்றி இரு சாராருக்கும் வேறுபாட்டுணர்ச்சி வந்திருத்தல் வேண்டும் என்றும், அதுபற்றி உடன்படிக்கை செய்துகொண்டனர் என்றும் தெரியவருகிறது.

1982–83இல் மோடி அறிந்த ஒருவரைக் கொண்டு மோடி ஆவணக் கட்டுக்களில் சில ஆவணங்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழாக்கம் செய்யப்பெற்றன. அக் கட்டுக்களில் மோடி ஆவணங்களின் இடையே, தமிழில் எழுதப்பெற்ற சில ஏடுகள் இருந்தன. அவற்றைப் படியெடுத்துக் கொண்டபொழுது சில ஏடுகளில் வலங்கை இடங்கைப் பூசல்களைப் பற்றிய வழக்கு விசாரணையும் தீர்ப்பும்[7] பற்றிக் காணப்பட்டன.

புதுக்கோட்டை ராஜதானி; அங்கு வலங்கை இடங்கை என்கிற இரு கட்சிக்காரர்கள்; இவர்களுக்குள் நன்மை தீமை முதலியன நடத்துவதில் மனவேற்றுமை ஏற்பட்டது. இவ்வேற்றுமையைப் புதுக்கோட்டையில் தீர்த்துக் கொள்ளாமல் தஞ்சாவூரில் தீர்த்துக் கொள்வதற்குப் புதுக்கோட்டை ரெஸிடெண்டு இடம் இருந்து பரிந்துரைக் கடிதம் பெற்று வந்தனர்.[8] வலங்கையைச் சேர்ந்தவர், "வலங்கை பெரியதனக்காரன் நாராயணசெட்டி மகன் அளகிரி செட்டி"; இடங்கையைச் சேர்ந்தவர், "இடங்கைப் பெரிய

---

4. 5–226; 227 5. இவர் இரண்டாம் துளஜாவின் அமைச்சர். "Tuljaji's minister Baccanna Pundit revised the Dabir's grain standard in some cases......" — P. 467, Tanjore District Manual

5அ. பாஞ்சாளர்கள் — "பஞ்சாளத்தார் — பஞ்சகம்மாளர் — தட்டான், கன்னன், சிற்பன், தச்சன், கொல்லன்" (Tamil Lexicon) ("யெடங்கையைச் சேற்ந்த பஞ்சாளக் காற கம்மாளர்" 8–15)

6. 2–198 7. 8–1 முதல் 29 முடிய 8. 8–29, 26

தனக்காரன் நாராயண ஆசாரி"[9]; இவர்கள் இருவரும், தஞ்சாவூர்ச் சமஸ்தானம் "ஹிஸ் ஹைனேசு ராஜஸ்ரீ மகாராஜா சாயபு அவர்களுடைய ஸர்க்கேல் ராஜஸ்ரீ பாவாஜி பண்டிதர்" அவர்களை[10] அணுகினர். அவர் ஆணையின் படி தக்க அலுவலர்கள் இவ்விருவரையும் விசாரித்தனர். விசாரணை செய்த நீதிபதிகளின் பெயர்களும் நன்கு தெரியவில்லை. விசாரணையின் முடிவில் அவ்விருசாராரும், "சமாதானம் ஆகிப்போனபடியினால்" ஓர் உடன்படிக்கை எழுதிக்கொணடு அதன்படி நடந்து கொள்வதாக எழுதிக் கொடுத்துள்ளனர்.[11]

இரண்டு தடவை விசாரணை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

முதல் விசாரணையில், "வலங்கையில் சேர்ந்த சாதிகள் யார்? இடங்கையில் சேர்ந்த சாதி யார்? விவரம் சொல்லுங்கோள்" என்று கேட்டதற்கு[12] வலங்கை சேர்ந்த சாதிகள் 22 என்றும், இடங்கை சேர்ந்த சாதிகள் ஆறு என்றும் பதில் வந்தது. அவர்கள் கூறிய பெயர் விவரம் பின்வருமாறு :—

## வலங்கை - 22

| | |
|---|---|
| 1. ரெட்டி வடுகர் | 2. கமல வடுகர் |
| 3. தொளுவ வடுகர் | 4. தொளுவ செட்டி |
| 5. வெள்ளாள செட்டி | 6. குத்தி கொல்லர் |
| 7. ரெங்காரி வடுகர் | 8. சேணியர் |
| 9. சலுப்பன் | 10. இடையர் |
| 11. சாலியக்காரன்[12அ] | 12. கோமுட்டி |
| 13. சுண்ணாம்புக்காரன் | 14. மாறாய செட்டி |
| 15. உப்பிலியன் | 16. சரணான் |
| 17. மேளக்காரன் | 18. வலையர் |
| 19. தெலுங்க அம்பட்டன் | 20. தமிழ அம்பட்டன் |
| 21. வண்ணான் | 22. வாணியன் |

## இடங்கை - 6

| | | |
|---|---|---|
| 1. பேல செட்டி | 2. கை காளர் | 3. பள்ளி |
| 4. படையாச்சி | 5. மறவர் | 6. மேளக்காரன் |

பிறிதொரு முறை விசாரணை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

9. 8-26 10 8-26 (இவர் இரண்டாம் சிவாஜியின் ஸர்க்கேல் ஆவர்)
11. 8-11 12. 8-1 12அ. சாராயக்காரன் என்றும் படிக்குமாறுள்ளது

[12ஆ] " வலங்கை யெண்டும் யிடங்கை யெண்டும் நீங்கள் கட்சிக்காறங்கள் சொல்லுக்குறீங்களே வலங்கை சேர்ந்த சாதியார் யார்? யிடங்கை சேர்ந்த சாதியார்? அதின் விபறம் சொல்லுங்கோள்" என்பது வினா.[13]

இதற்குரிய மறுமொழியில் வலங்கை சேர்ந்த சாதிகள் 24 என்றும் இடங்கை சேர்ந்த சாதிகள் ஒன்பது என்றும் கூறப்பட்டன. முதல் விசாரணையில் வலங்கை 22 என்று உள்ளது. இவற்றோடு கவரை செட்டி, பறையன் ஆகிய இருவரைச் சேர்த்து 24 என்றனர். முதல் விசாரணையில் கண்ட இடங்கை ஆறொடு பஞ்சாளத்தார், பள்ளன், சக்கிலியன் ஆகிய மூவரையும் சேர்த்து இடங்கை ஒன்பது என்று இரண்டாம் விசாரணையில் கூறப்பட்டது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில்[14] இருந்து படியெடுத்துக் கொணரப்பட்ட "இடங்கை வலங்கை சாதியார் வரலாறு" என்ற பெயருள்ள மெக்கன்சி சுவடியில்[15] தொடக்கத்தில் வலங்கை 98 சாதிகள் பெயரும், அடுத்து இடங்கை 98 சாதிகள் பெயரும் காணப்பெறுகின்றன.[16] கரிகாற் சோழன் வலங்கை 98, இடங்கை 98 என்று குடிமக்களைப் பிரித்தான் என்று முன்னர்க் கூறப்பட்டது.[17] இங்ஙனம் ஒவ்வொரு பிரிவிலும் 98 என்று கூறப்பட்டிருக்கப் புதுக்கோட்டையினின்று வந்த இருவரும் முதல் விசாரணையில் வலங்கை 22 என்றும் இடங்கை 6 என்றும், இரண்டாவது விசாரணையில் வலங்கை 24 என்றும் இடங்கை 9 என்றும் கூறியதன் கருத்து முற்றும் விளங்கவில்லை. எனினும் புதுக்கோட்டைப் பகுதியில் இருந்த சாதிகள் அவை மட்டுமேயாம் என்று அவர்கள் கொடுத்த "வாக்குமூலத்தால்" அறியப்பெறும்.[18]

மேலும் மெக்கன்சி சுவடியில் கொடுக்கப்பெற்றுள்ள பெயர்களோடு "வாக்கு மூலத்தில்" கொடுத்த பெயர்கள் ஒத்துவரவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

மேற்கொண்டு விசாரணை செய்தபொழுது கேட்ட மூன்றாவது "கேழ்வி"[18அ] யிலிருந்து அவர்களுக்குரிய சச்சரவு எதனால் தோன்றியது என்பது விளங்கும்.

முதல் விசாரணையில்,

[18ஆ] " உங்கள் ரெண்டு கட்சியைச் சேர்ந்த மேல்கண்ட 28 சாதியினரும் யெந்த விதமாயி பந்தல் போட்டு வாகந பிருதுகளுடன் கலியாணம் செய்து ஊர்கோலம் வருகுறது"[19]

---

12ஆ. ஆவணத்தில் இருந்த வண்ணம் தரப்பெற்றுள்ளது  13. 8-5.
14. Government Oriental Manuscripts Library  15. எண். R. 1572; D. 2751
16. எண் 489  17. அடிக்குறிப்பு 2இல் காண்க  18. 8-6  18அ. கேள்வி
18ஆ. ஆவணத்தில் உள்ளவாறு கொடுக்கப்பட்டுள்ளது  19. 8-2

என்றும், இரண்டாம் விசாரணையில்,

[19அ] "உங்கள் இறண்டு கக்ஷியைச் சார்ந்ததாயி நீங்கள் எழுதிவைத்திருக்கிறபடி 33 சாதியினரும் சுப சோபன முதலாகக் கலியாணத்துக்கு யெவ்விதம் பந்தல் போட்டு யெந்த பிருது வாகந வாத்தியங்களுடன் கலியாணம் செய்து யென்னமாய் ஊர் கோல வறுகிறது. அந்த ஜாதி விபறமாயி சொல்லுங்கோள்"[20]

என்றும் வினாவப்பட்டதினின்று, திருமணக்காலத்தில் பந்தல் போடுதல், வாத்தியங்கள் வாசித்தல், ஊர்வலம் வருதல், ஊர்வலத்தில் எத்தகைய ஆடையணிகலன்களைப் பூணுதல், எந்த வாகனங்களில் ஊர்வலம் வருதல் ஆகியவை பற்றி மனவேறுபாடு வந்திருத்தல் வேண்டும் என்று தெரிகிறது.

இவர்களுக்குள் வேறுபாட்டுணர்ச்சி வந்ததால் "சுபாசுப முதலான காரியங்களில்" அவரவர் விருப்பப்படிக்கு மகிழ்ச்சியுடன் அனுபவிக்க முடியாமற் போய்விட்டது. அதனால் அவர்கள் தீரயோசித்துப் பார்த்தார்கள். மனம் வேறுபட்டிருத்தல் "விவேகத்தாழ்வானது" என்று அறிந்தனர். அதனால் அவர்களுடைய "கெவுறவத்துக்கும் நியாயத்துக்கும்" விரோதம் என்று தெரிந்து கொண்டார்கள். ஆகவே சமாதானம் ஆகி அரண்மனையார் செய்த தீர்மானப்படி தவறாமல் நடந்துகொள்வதாக உறுதி கூறினர்.

## வலங்கையினர்க்கு[21]

வலங்கை கவரைச்செட்டி தெருவாசலில் பந்தல் போடலாம்; சிவப்பு வெள்ளை சிவப்பு கலந்து கட்டலாம்; தவிரவும் பந்தலுக்கு வாழைக்குலை, நெட்டி, பாக்கு முதலானவை கட்டலாம்; நல்மேளம் பெரிய மேளம் தப்பு கொம்பு நகரா பறமேளம் தாரை சங்கு ஆகிய வாத்தியங்களை இயக்கலாம்; மாப்பிள்ளையும் பெண்ணும் பட்டு ஆடைகள் ஆபரணங்கள் அணியலாம்; சதிர் நடத்தலாம்; "ஊர் கோலத்துக்கு" யானை வெள்ளைக் குதிரை பல்லக்கு இவற்றில் வரலாம்.

வாணியன் பந்தலுக்குச் சிவப்பு வெள்ளை கலந்து கட்டலாம்; மேளம் தப்பு இயக்கலாம்; யானை குதிரையில் அவர் தெருவில் மட்டும் ஊர்வலம் போகலாம்.

சாணார், வளையன், வண்ணான், தமிழ அம்பட்டன் கலியாணத்துக்குப் பந்தலில் சிவப்பு வெள்ளை கட்டலாம்; வாழைக் கூந்தல் கட்டலாம்; பற

---

19அ. ஆவணத்தில் உள்ளவாறு கொடுக்கப்பட்டுள்ளது. 20. 8-6,
21. 8-7 முதல் 10 வரை

மேளத்துடன் கலியாணம் செய்யலாம்; மாப்பிள்ளையும் பெண்ணும் குதிரை மேல் உட்கார்ந்துகொண்டு தீவட்டியுடன் அவர்கள் குடியிருக்கும் தெருவைச் சுற்றி வரலாம்.

தெலுங்க அம்பட்டன் மேற்கண்டவற்றுடன் சங்கீத மேளம் வைத்துக் கொள்ளலாம்.

பறையர், பறத்தெருவில் பந்தல் போட்டு அப்பந்தலுக்கு வெள்ளை சிவப்புச் சேலை கலந்து கட்டலாம்; வாழைக்கூந்தல் கட்டலாம்; பறமேளம் தப்புஅடிக்கலாம்; குதிரைமேல் மாப்பிள்ளையும் பெண்ணும் வைத்து வெள்ளைப் பாவாடை பிடித்து வெள்ளைக் குதிரையில் வெள்ளைக்குடை பிடித்துத் தீவட்டி பிடித்துக்கொண்டு அவர்கள் குடியிருக்கும் தெருவைச் சுற்றி வரலாம்; மேலும் வலங்கைப் பெரியதனக்காரர் வீட்டுக்குப் போவதாயின் அரண் மனையார் கூறும் வழியிலே சென்று சந்தனம் பாக்கு வெற்றிலை வாங்கிக் கொண்டு வரலாம்.

மற்றவர்கள் அவரவர் விருப்பத்தின்படி "வாத்தியம் பிருது வாகனங் களுடன் கலியாணம் செய்து ஊர்கோலம் வரலாம்". எனினும் சுண்ணாம்புக் காரன், சாறாயக்காரன், உப்பிலியன் ஆகியோர் ஆனைமேல் உட்கார்ந்து ஊர்கோலம் வரக்கூடாது.

கோமுட்டி கல்யாணத்துக்குப் பந்தலில் சிவப்பு வெள்ளைச் சேலை கட்டலாம்; வாழைக்குருத்துக் கட்டலாம்; அவர்கள் விரும்பிய ஆடை அணி கலன்கள் அணியலாம்; சங்கீத மேளம் வைத்துக் கொள்ளலாம்; ஊர்கோலம் போகும் பொழுது சர்க்கார் கூறும் பாதை வழியே போகவேண்டும்.

## இடங்கையினர்க்கு[22]

இடங்கை சேர்ந்த கைகாளர், பள்ளி, படையாச்சி, மறவர், மேளக் காரன் இவ்வைவரும் தாம்தாம் விரும்பியவண்ணம் மணம் செய்து கொள்ள லாம். "தேசாசாரத்துக்கும் சாதியாசாரத்துக்கும் அனுசரித்து மாத்திரம் இருக்கவேண்டும்."

எஞ்சியுள்ளவர்களுள் பேலசெட்டி கலியாணத்துக்குப் பந்தல் வெள்ளை சிவப்புக் கலந்து கட்டிக்கொள்ளலாம்; வாழைக்கூந்தல் நெட்டிமாலைகட்டலாம்; கொம்பு, தப்பு, சங்கீத மேளம் இவற்றுடன் திருமணம் நடத்தி ஊர் கோலத்தில் சிவப்புத்துணி பல்லக்குக் கட்டித் தீவட்டி மத்தாப்பு வாண வேடிக்கைகளுடன் அரண்மனையார் கூறும் பாதை வழியே போகலாம்.

---

22. 8–11, 12

இடங்கைப் பள்ளர்கள் கலியாணத்துக்கு வலங்கையின்படி செய்யலாம்; சிவப்புப்பாவாடை சிவப்புக் குதிரையும் உண்டு.

## பொது

தவிரவும் வலங்கையைச் சேர்ந்தவர்கள் கோயில் குளம் திருவிழா ஆகியவற்றுக்குப் போவதாயின் "அவ்வச் சாதிக்குச் சொல்லப்பட்டிருக்கிற வாகன வாத்தியங்களுடன்" போகலாம்.[23]

வலங்கையைச் சேர்ந்த தொழிலாளி இடங்கையாரிடத்துச் சேவகம் பண்ணும்படி நேரிட்டால், தடையின்றிச் சேவகம் செய்யலாம். இடங்கையைச் சேர்ந்தவர்கள் வலங்கையாருக்குச் சேவகம் செய்ய நேரிடின் யாதொரு தடையில்லாமல் செய்யலாம்.[24]

இங்ஙனம் தமிழ்நாடெங்கணும் அவ்வப்பொழுது பூசல்கள் நடந்து வந்தன என்றும், அவ்வக்காலங்களில் அரசு தலையிட்டுப் பூசல்களைத் தீர்த்துவைத்தது என்றும் அறிய வருகின்றன. அங்ஙனமே புதுக்கோட்டையில் நிகழ்ந்த பூசலைத் தஞ்சை சமஸ்தானத்தார் தீர்த்துவைத்தனர். இங்குக் கலியாணம் அது தொடர்பானவை பற்றிய பூசலே ஏற்பட்டது என்றும் அது தீர்க்கப்பட்டது என்றும் அறியலாம். பிற உரிமைகள்[25] பற்றி மோடி தமிழாக்கக் குறிப்புக்களினின்று அறிய வாய்ப்பில்லை.

23. 8-12 24. 8-13

25. "தாங்கள் புறப்படவேண்டும் இடங்களுக்குப் பாதரக்ஷை கோத்துக் கொள்ளவும்; தங்கள் வீடுகளுக்குச் சாந்திட்டுக் கொள்ளவும்" என்பன போன்றவை – தென்னிந்திய சாஸனங்கள், தொகுதி V, எண் 888 ; 562 of 1888.

# 30

# சிற்பமும் ஓவியமும்

அழகுக் கலைகளுள் சிற்பமும் ஓவியமும் சாதாரண மக்களையும் ஈர்க்கும் வலிமை வாய்ந்தவை. ஆகவே சிற்ப ஓவியத்துறைகளிலேயும் மராட்டிய மன்னர்கள் சிறிது எண்ணத்தைச் செலுத்தி ஓரளவு சாதனை புரிந்துள்ளனர் என்னலாம்.

## சரபோஜியின் சலவைக்கல் சிற்பம்

இந்நாளில் தஞ்சைக் கலைக்கூடம் சிறப்பு வாய்ந்த அருங்காட்சியக மாகத் திகழ்கிறது. அதில் முன்னாளில் ஜீராத்கானா என்ற பெயர் வாய்ந்ததும் ஆயுதசாலையாகத் திகழ்ந்ததுமான இடத்தையொட்டி, முன்னாளில் நாயக்க மன்னரது அரசவை ( Durbar Hall ) ஆக இருந்த இடத்தில், இரண்டாம் சரபோஜியின் சலவைக்கல் உருவம் அமைக்கப்பட்டுள்ளது.

21—1—1823இல் "பகல் 10மணிக்கு ரெஸிடெண்டும் அவருடைய அஸிஸ்டெண்டு தரடிசாயேபும், பிரதான கலெக்டர் காட்டனும், இஞ்சினீயரும் அவருடைய இன்னொரு துரையும் அரண்மனைக்கு வந்தார்கள்......அவர்கள் போகும்பொழுது ஜீராத்கானா (ஆயுதசாலையில்) உள்ள **சரபோஜி ராஜாவின் பிம்பத்தைப்** பார்த்துப் போனார்கள்"

என்று ஒரு குறிப்புள்ளது. இதனால் கி. பி. 1823க்கு முன்னதாகவே இந்தச் சலவைக்கல் உருவம் அமைக்கப் பெற்றமை தெளிவு.

30—3—1926இல் பிஷப் ஹீபர் என்ற பாதிரியார் இரண்டாம் சரபோஜியை அரண்மனையில் பார்த்துப் பேசினார். அவரிடம் விடைபெற்றுக்கொண்டு

---

1 3-205, 318

செல்லுங்கால் ஃப்ளாக்ஸ்மன் என்பார் செய்த சரபோஜியின் சலவைக்கல் உருவைக் கண்டு சென்றார் எனத் தெரிகிறது. "பிஷப் ஹீபர் (Bishop Heber) அவர்களின் இறுதி நாட்கள்"[2] என்ற நூலில் " இவ்வுருவம் ஃபளாக்ஸ்மன் செய்தார்"என்றும் கூறியிருக்கத் "தஞ்சை மாவட்ட கெஜட்டியர் " என்ற நூலில் சரபோஜியின் உருவம் "**சன் த்ரே**" (Chantray) என்பவரால் அமைக்கப் பெற்றது என்று காணப்பெறுகிறது.[3] கெஜட்டியர் எழுதியவர் சன்த்ரேயின் பெயரை எங்ஙனம் அறிந்தார் என்று தெரிய வாய்ப்பில்லை. ஃப்ளாக்ஸ்மன் பற்றிய நூலொன்றில்,[4] கி. பி. 1803இல் £ 1200 மதிப்பில் முழு அளவு உருவம் ஒன்று சலவைக்கல்லில் அமைத்துத் தருமாறு இந்தியாவிலிருந்து ஃப்ளாக்ஸ்மன் பணிக்கப்பெற்றார் என்றும், சரபோஜி லண்டனுக்குச் செல்லவில்லை என்றாலும், "ஸ்வார்ஷ் பாதிரியார் மரணப் படுக்கைக் காட்சி"யைச் சித்தரிக்கும் சிற்பம் அவரது மனத்தைக் கவர்ந்தமையால் தன் முழு அளவு சிற்பம் செய்யச் செய்தார் என்றும் கூறப்பெற்றுள்ளது. ஜான் ஃப்ளாக்ஸ்மன் என்ற நூலில் பக்கம் 22 முதல் 24 முடிய அவருடைய வாழ்க்கை வரலாற்றில்[4அ] சில குறிப்புக்கள் காலமுறைப்படி கொடுக்கப் பெற்றுள்ளன. அதில் 1807க்குரிய குறிப்பு :

"The tomb for the Rajah of Tanjore (Calcutta) is erected"

என்று காணப்படுகிறது. இதனால் 1807இல் ஸ்வார்ஷ் பாதிரியாருடைய

---

2. "When we took our leave, his (Sarabhoji's) minister shewed us a noble statue of the Rajah by Flaxman which stands in the Hall which was used by the ancient Hindu Court before the conquest by the Marathas" — Page 166, Last Days of Bishop Heber by Thomas Robinson (1829)

3. "The former (Nayak Durbar Hall) contains a remarkable slab of gneiss on whom the throne used probably placed but which now occupied by a fine statue of Sarabhoji by **Chantray**" - page 272, District Gazateer, Tanjore by F. R. Hemingway (1906).

4. "One of the earliest commissions for a lifesize statue, costing £ 1,200, came from India in 1803, from a client who wished to erect an image of himself during his own lifetime in his palace. Raja Sarfoji (Sarobhoji) of Tanjore never visited England, and presumably selected Flaxman because he liked his monument to the Reverend Christian Frederick Schwartz (Plate 205). Flaxman must have been sent an Indian miniature so that the features, as well as the unusual hat and dress, would be correct (Plate 259); the miniature had presumably also been used for the monument. Flaxman carved the figure of the Raja with his hands clasped in a gesture of reverence creating an imposing image when erected on its high pedestal in a private hall of the Palace" - P. 181, Chapter VIII, Portraits - John Flaxman 1755 - 1826 - Sculpture Illustrator Designer - David Irwin - London (1979).

4அ. (இக்கட்டுரையின் இறுதியிற் காண்க.)

நினைவுச் சின்னம் தஞ்சைக்கு அனுப்பப்பட்டதாதல் வேண்டும். சரபோஜியின் முழுவுருவச் சிலை செய்ய 1803இலேயே முன்பணம் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் 1807க்குப் பிறகே அது கொண்டுவரப்பட்டுத் தஞ்சையில் ஜீராத்கானாவில் அமைக்கப்பெற்றதாதல் கூடும் என்று ஊகித்து அறியலாம்.

கி. பி. 1859க்குரிய மோடி தமிழாக்கக் குறிப்பு,

"மகால் ஆயுதசாலையிலுள்ள சரபோஜி சிலாவிக்கிரகத்தின் முக்கோணி மரத்தினால் செய்த முண்டாசுக்குச் சிந்தூர வர்ணம் கொடுக்க உத்தரவாக வேணும்"

என்றுள்ளது[5]. இதனான் இச்சிலைக்கு வேறொரு தலைப்பாகை மரத்தினாற் செய்து வைத்திருந்தனர் என்றறியப்பெறும்.

## அரசர் அரசமாதேவிகளின் உருவம்

கி. பி. 1776க்குரிய மோடி ஆவணத்தமிழாக்கக் குறிப்பொன்றினால் அரசருக்கும் அரசமாதேவியர்க்கும் உருவம் அமைத்தல் பழக்கம் என்றும் நவராத்திரி சமயத்தில் பிற தெய்வ உருவங்களை வைத்துப் பூசை செய்யுங் கால் இவ்வுருவங்களையும் வைத்துப் பூசிப்பதுண்டு என்றும் தோன்றுகிறது. அக்குறிப்பு,[5அ]

"1776 ஐப்பசி மாதம் நவராத்திரிக்காக சுவாமிகளுக்குப் பூஜை விவரம் ...... மகிஷாசுரமர்த்தனி ...... கைலாஸவாஸி ரா. பெரிய மஹாராஜா, சௌ. யமுனாபாயி சாஹேப், சௌ. சக்வார்பாயி சாயேப் இவர்களுடைய உருவம் ஒன்று ......"

என்பதாகும். கி. பி. 1776இல் அரசாண்டவர் இரண்டாம் துளஜா. இதில் கண்ட ரா கைலாஸவாஸி "பெரிய மகாராஜா" என்றது அவருடைய தந்தை பிரதாபசிங்கரை. சௌ. யமுனாபாயி சாகேபாவும், சக்வார்பாயி சாகேபாவும், பிரதாபசிங்கர் கைலாசவாசி ஆகியபொழுது உடன்கட்டை ஏறியவர்கள்.[6] ஆகவே அவ்விருவரையும் "மாசத்திகள்" எனக்கருதி அவர்கட்கும் கைலாச வாசி ஆகிய பிரதாபசிங்கருக்கும் உருவங்கள் ஒரே பீடத்தில் அமைத்துப் பூசனை நடத்தப்பெற்றது என்று கருத இடமுண்டு. இவர்கட்கு மட்டுமன்றி எல்லா அரசர்கட்கும், சுமங்கலிகளாக இறந்த அரசிகட்கும் உருவங்கள் அமைக்கும் பழக்கம் இருந்தமை தெரியவருகிறது.[6அ]

---

5. 4-450 5அ, 2-136 6. பக்கம் 116, போன்ஸ்லே வம்ச சரித்திரம் (தமிழ்)

6அ. Tonks are kept of the deceased Maharajas and the Boi saibs who died in married state (as sumangalis)—Deposition of yogambal P, 11, l. 12—13; O. S. 26 of 1912

மேலும் சோழராஜா பங்கில், துளஜேந்திர மகாலில் அமைக்கப்பெற்ற சிலைகட்குப் பூசை செய்யப்பெற்று வந்தன[7] என்ற குறிப்பால், அங்கிருந்த சிலைகள் அரசருடையனவாதல் கூடும்.

கி. பி. 1776க்குரிய குறிப்பொன்று விக்கிரகங்கள் செய்தலைப்பற்றிக் கூறுகிறது. விக்கிரகங்களைச் செய்யும் திறன் படைத்தவர் திருவழுந்தூர் ஊரவர்; பெருமாள் அய்யங்கார் என்ற பெயரினர். இவர் தஞ்சையில் தங்கியிருந்து பெருமாள் மூர்த்தி செய்தார்[8].

## பொம்மைகள் செய்தல்

"பதினெட்டுச் சாதி பொம்மைகள் செய்யும் பேர்கள்" என்றொரு குறிப்பு உள்ளது.[9] இதனால் பல்வேறு சாதியினரின் உருவங்களைச் செய்து நவராத்திரி கொலுவில் வைத்தனர் போலும்.

மரப்பலகையின் மேல் மெல்லிய சுண்ணாம்பினால் பிருந்தாவனமும், ராதா கிருஷ்ணன் சத்தியபாமா ஆதிசேடன் முதலியவர்களையும் நுட்பமாக அமைத்துச் சாயம் பூசியதாக 1858க்குரிய ஓராவணக்குறிப்பு உள்ளது.[10]

## படங்கள்

8—3—1823இல் கியாப்டன் ஹரடி நவாபுடன் அரண்மனைக்கு வந்தார். தஞ்சைக் கலெக்டர் மிஸ்தர் காட்டனும் மற்றும் சிலரும் வந்தனர். அரசருடன் பேசிவிட்டு (ச்சதர்) மாடியிலுள்ள அரசர்களின் படங்களையும், வாத்தியங் களையும் பார்த்தனர் - என்று ஒரு ஆவணத்தில்[11] கூறப்பட்டுள்ளது. இவ் வெழுத்துச் சான்றினால் அரண்மனையில் மாடியில் மராட்டிய அரசர்களுடைய படங்கள் மாட்டப்பெற்றிருந்தன என்று தெரியவருகிறது. இங்ஙனம் மாடியில் படங்கள் இருந்தமையோடு இரண்டாம் சரபோஜியை 30—3—1826இல் பார்க்க வந்த பிஷப் ஹீபர், மன்னருடைய நூல் நிலையத்தில் மராட்டிய அரசர்களின் படங்கள் மாட்டப்பெற்றிருத்தலைக் கண்டார் என்று சொல்லப்படுகிறது.[12]

மேலே கூறப்பட்ட படங்கள் வண்ணப்படங்கள் ஆக இருந்தன; பல ஆண்டுகள் நிலைத்து இருக்கும் நிலையில் அவை இல்லை என்று தோன்று

---

7. 4-86 8. 2-188

9. ச. ம. மோ. த. 1-41 10. 4-456 11. 3-215, 216

12. "The Bishop paid a private visit to the Rajah who received us in his library a noble room with three rows of pillars and handsomely furnished with English style. On one side there are portraits of the Maratha Dynasty from Shaji to Sivaji" - P. 166, Last Days of Bishop Heber by Thomas Robinson, 1829.

கிறது. மேலும் அவை மிகச் சிறப்பாக வரையப்பெற்றனவாக இல்லை என்றும் கொள்ளலாம்.[13]

சித்திரம் வரைவதில் பெண்டிரும் ஈடுபட்டிருந்தனராதல் கூடும் :

" 1811: சித்திரக்காரி செங்கம்மாளுக்கு மாசத்திற்கு 3 சக்கரம் " என்பது இதற்கு எழுத்துச்சான்று.[14]

கி. பி. 1816இல் இரண்டாம் சரபோஜி குதிரைச் சவாரி செய்வதுபோல 4 படங்கள் வரையப்பட்டன.[15]

கி. பி. 1817இல் சித்திரக்காரன் வெங்கடப்பெருமாள், வெங்கடநாரணப் பையா ஆகிய இருவருக்கும் 700 சக்கரம் கொடுத்ததாக ஒரு ஆவணத்தால் தெரிகிறது;[16] காரணம் புலப்பட்டிலது.

இரண்டாம் சரபோஜி காசி யாத்திரையில் இருந்தபொழுது "படணா" (Patna) என்ற தங்குமிடத்திலிருந்து ஒரு ஆணை பிறப்பிக்கப்பெற்றது. அதன்படி ஹுஜூரின் படமும், இளைய திவான் சாஹேப் படமும் வரையப் பட்டன. ஹுஜூரின் படம் சீமைக் குதிரையில் கையில் ஈட்டியை வைத்து இருப்பது போலவும், இயைதிவான் படம் கையில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு சவாரிக்குக் குதிரையின்மேல் செல்லுவது போலவும் அமைய வேண்டும் என்பது ஆணை. படத்தின் அளவு ஒரு முழம் சதுரம். இங்ஙனம் இவை சித்திரக்காரன் சின்னசாமி நாயக்கனைக் கொண்டு வரையப்பெற்றன.[17] இவை தண்ணீர்ச் சாயத்தில் வரையப்பெற்றன.

இரண்டாம் சரபோஜி காசியாத்திரையில் இருந்தபொழுது இயற்கைக் காட்சிகளில் ஈடுபட்டு அவற்றை வரையச்செய்து தஞ்சைக்கு அனுப்பியிருக் கிறார். அவற்றை எழுதிய ஓவியன் தாமஸ் என்ற பெயரினன்; அவனுக்குத் திங்களொன்றுக்கு ஊதியம் 10 புலி வராகன். அவன் மசூலிபந்தர் என்ற ஊரில் இருந்தபொழுது நியமிக்கப்பெற்றான். தாம் கண்ட காட்சிகளைத் தஞ்சையில் உள்ள தம் உறவின் முறையார் யாவரும் கண்டு மகிழவேண்டும் என்ற காரணத்தால் எழுதியனுப்பியதாக, ஹஸன்கஞ்ச் என்ற முகாமிலிருந்து 18--4—1821இல் அரசர் எழுதுவித்துள்ளார்.[18]

---

13. In the Maratha Durbar Hall there are large pictures ( of small artistic merit) of all the Maratha Kings beginning with Shahji father of Venkoji – P. 272. District Gazateer, Tanjore by F. R. Hemingway (1906)

14. 2-89

15. 5-818, 814.

16. ச. ம. மோ. த, 18-41

17. 5-198, 199

18. 5-108, 109

23—3—1821 புருகாபாத் என்ற தங்குமிடத்திலிருந்து வந்த கடிதத்தில் கவர்னர் ஜெனரல் விரும்பியமையின் ஹாஜாரின்படம் மார்பளவு வரையில் எண்ணெய்ச் சாயத்தினால் சித்திரக்காரன் சின்னசாமி நாயக்கனைக் கொண்டு எழுதச்செய்து ரெஸிடெண்டு இடம் கொடுத்து கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பச்செய்யவேண்டும் என்று கண்டிருக்கிறது.[19]

18 சாதியினருடைய படங்களும் வரையப்பட்டன என்று 1824க்குரிய குறிப்பினால் அறியப்பெறும்.[20] இங்ஙனம் வரைந்தவன் சாரங்கபாணி என்ற பெயர் உடையவன். இவன் 80 படங்களை வரைந்துகொடுத்துப் படம் 1க்கு 1½ரூ. வீதம் ரூ. 140 பெற்றுக்கொண்டான்.[21]

மேலே கண்ட சாரங்கபாணிக்கு மாதவூதியம் 3 சக்கரம் என்றும் மற்றொரு ஓவியர் முத்துக்கிருஷ்ணன் என்பவருக்கு 3 சக்கரம் என்றும் ஓராவணம் கூறுகிறது.[22]

விட்டோபாவின் திருவுருவம்[23], கண்ணன் நான்கு கைகளுடன் தொட்டிலில் படுத்துத் தன்கட்டை விரலை வாயில் வைத்துக்கொண்டிருப்பது போன்ற திருவுருவம்[24] போன்றவையும் வரையப்பெற்றன.

சித்திரம் கோவிந்தசாமி என்றவர் 1831இல் இரண்டாம் சிவாஜியின் உருவம் எழுதிக் கொடுத்து ரூ. 200 பெற்றுக்கொண்டார்.[25]

கி. பி. 1832இல் சிவகங்கைக் கோட்டை அரண்மனையில் ஓவியர் மூவர் பணியிலிருந்தனர் என்றும்,[26] போதே மகாலில் கிருஷ்ணா என்றொருவர் புதுச்சேரியிலிருந்து வந்திருந்தார் என்றும்[27] தெரியவருகிறது.

கி. பி. 1836இல் சாரங்கபாணி என்றொருவர் இருந்தார். அவர் கோபுரங்கள் சிலவற்றை எழுதிக் கொண்டு வருவதற்காகச் சென்றிருந்தார் என்று ஓராவணக் குறிப்புள்ளது.[28]

ஓவியத்தில் விருப்புடையவராய் இருந்தமையின், 1841இல் கியாப்டன் ஹாரிஸ் என்பார் ஆப்பிரிக்க மிருகங்களின் படம் உள்ள புத்தகம் ஒன்று சென்னையிலிருந்து வாங்கி அரசருக்கு அனுப்பினார் என்று தெரியவருகிறது.[29]

மராட்டிய மன்னர்களின் மேற்பார்வையில் பல கோயில்கள் இருந்தன. அவற்றுள் சிற்ப ஓவிய வேலைப்பாடுகள் பல இருந்த போதிலும் கிடைத்துள்ள ஆவணங்களில் அவை பற்றிய சான்றுகள் இல்லை.

---

19. 5-101, 105, 106
20. 4-15 (அடிக்குறிப்பு 9 காண்க)
21. 1-126; ச. ம. மோ. த. 26-18
22. 11-16, 88
23. 4-484
24. 4-217
25. ச. ம. மோ. த.4-9
26. ச. ம. மோ. த. 11-42
27. 4-414
28. 1-222
29. 2-267

**ஃப்ளாக்ஸ்மன் வாழ்க்கைக் குறிப்புக்கள்**

6—7—1755இல் ஃப்ளாக்ஸ்மன் நியூயார்க்கில் பிறந்தார். அடுத்த ஆண்டே அவருடைய பெற்றோர்கள் லண்டன் மாநகரத்தில் தங்கினர். ஃப்ளாக்ஸ்மன் இளமையில் உடல்நலம் இல்லாதவராகவே யிருந்தமையின், கல்விக் கூடத்துக்குச் சரிவரச் செல்ல மாட்டார். ஆகவே தம் தகப்பனாரின் கடையிலேயே படித்தார்; தம் தந்தையிடத்திலேயே படம் வரையவும், மாதிரிகள் செய்யவும் கற்றுக்கொண்டார். 1770இல் இரண்டு படங்களுக்கு வரைவுகளும், கடல் தெய்வத்தின் (Neptune) மாதிரிப் படிவமும் எழுதிக் கொடுத்தார். அதனால் லண்டன் மாநகரத்திலுள்ள ராயல் அகாடெமி இவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கம் பரிசாக அளித்தது. கி.பி. 1782இல்இவர்க்குத் திருமணம். 1787இல் இவர் இத்தாலிக்குச் சென்றார்; 1792இல் இலியட் ஒடிஸி (Iliad & Odyssey) ஆகியவற்றுக்குப் பட வரைவுகள் கொடுத்தார்; 1794இல் இங்கிலாந்துக்குத் திரும்பினார்; 1797இல் ராயல் அகாடெமியில் உறுப்பினர் (Associate of the Royal Academy) ஆனார்; 1807இல் தஞ்சை அரசர் (இரண்டாம் சரபோஜி) பொருட்டு "ஸ்வார்ஷ் மரணப்படுக்கைக்காட்சி" (Tomb for the Rajah of Tanjore) சிற்பத்தை அமைத்துக்கொடுத்தார்; 1810இல் ராயல் அகாடெமியில் பேராசிரியரானார்; 9—12—1826இல் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

—John Flaxman P. A. London 1979 – Chronology, Pages 22 to 24.

# 31

# மடங்களும் தம்பிரான்களும்

தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சி செய்த வளம் பொருந்திய காவிரி நாட்டில் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய மூன்று சைவ மடங்கள் உள்ளன. அவற்றுள் திருப்பனந்தாள் காசி மடமும், இக்காசிமடத்துக்குரிய காசி குமாரசுவாமி மடமும் பல ஆவணங்களில் குறிப்பிடப் பெறுகின்றன.

தருமபுரம், திருவாவடுதுறை மடங்கள் பற்றிய குறிப்பு இல்லையெனினும் அவர்தம் பரிபாலனத்தில் உள்ள திருக்கோயில்களில் இருந்த தம்பிரான்கள் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன.

பிராமணருடைய மடங்களில் தஞ்சையிலுள்ள மடங்களும், கும்பகோணத்தில் உள்ள காஞ்சி காமகோடி பீடமும், வைணவர்களுக்குரிய அஹோபில மடமும் பற்றிய செய்திகள் சிலவுண்டு.

## திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம்

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தைப்பற்றி கி. பி. 1737க்குரிய பழமையான குறிப்புள்ளது.[1] அது பின்வருமாறு:

"1737 மா. சுஜான்பாயி சாயேப் அவர்கள்[2]

1. 1-198, 199
2. இவர் இரண்டாம் ஏகோஜி (1786-87)யின் அரசமாதேவியாவர். இந்த இரண்டாம் ஏகோஜிக்குப் பாபா சாகேப் என்றும் பெயருண்டு. இவருக்குப்பின் 1787இல் சுஜான்பாயி ஆட்சிப்பொறுப்பு ஏற்றார் — போன்ஸ்லே வமிச சரித்திரம் (தமிழ்) பக்கம் 84-95, சரசுவதிமகால் வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1980

காசியிலுள்ள, தருமபுரம் மடத்தின் சிஷ்யரான நாயிக்பண்டாரி அவர்கள் ஹுஜூரிடம் செய்துகொண்ட அர்ஜி:

காசியிலுள்ள அன்னசத்திரம் நந்தவனம் தருமம் நடத்த வேண்டி பேஸஜி 500 சக்கரம் கொடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் வருஷத்திற்குத் தொகை வந்து சேர்கிறதில்லை; ஆகையால் ஒரு கிராமத்தைச் சர்வமானியம் செய்துகொடுக்க வேணடும் என்று.

அதற்குப்பேஸஜி தற்போது தம்முடைய பேரால் அதிகம் தருமம் நடக்க 500 சக்கரம் ஜாஸ்தியும் முன்னிருந்த 500 சக்கரமும் சேர்த்து 1000 சக்கரம் மொயினுக்குத் தாலூகா குர்சீயைச்சேர்ந்த சோன்பட் என்னும் ஊரில் நன்செய் புன்செய் நிலங்களைச் சர்வமான்யம் செய்து கொடுத்தார்."

கி. பி. 1737க்குரிய இந்தக் கரலவட்டத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தில் அதிபராக விளங்கியவர்கள் ஸ்ரீகாசிவாசி தில்லைநாயக சுவாமிகள் ஆவர். இவர்கள் கி. பி. 1720 முதல் 1756 வரை வாழ்ந்தவர்கள். இவர்க்குமுன் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளை முதலாகக்கொண்டு 5 தலைமுறை காசியிலேயே கேதாரகட்டத்தில் ஸ்ரீகுமரசுவாமி மடத்தில் வாழ்ந்திருந்தனர். ஆறாமவர் ஆகிய ஸ்ரீகாசிவாசி தில்லைநாயக சுவாமிகள் கி. பி. 1720இல் தமிழ் நாட்டில் திருப்பனந்தாளில் இந்நாளில் விளங்கும் காசிமடத்தை நிறுவினார்.[3] இவ் ஆவணத்தில் குறிக்கப்பெற்ற "**நாயக் பண்டாரி**" என்பவர் தில்லைநாயக சுவாமிகள் ஆவர் என்று கொள்ளலாம்.

முதல் ஏகோஜியின் பேரன் அதாவது துக்கோஜி எனப்பெற்ற முதலாம் துளஜாவின் மகன் இரண்டாம் ஏகோஜி. கி. பி. 1720இல் திருப்பனந்தாளில் மடம் நிறுவிய தில்லைநாயக சுவாமிகள் முதலாம் துளஜா அல்லது அவரது தமையன் முதலாம் சரபோஜியிடமிருந்து காசியில் அன்னதானம் நந்தவனம் ஆகிய அறங்களை நடத்த 500 சக்கரம் வீதம் ஆண்டுதோறும் பெற்றனர் ஆதல் வேண்டும். அத்தொகை காலாகாலத்தில் கொடுக்கப்பெறவில்லை போலும். ஆகவே ஒரு ஊரைச் சருவமானியமாகச் செய்து கொடுக்கவேண்டும் என்று இரண்டாம் ஏகோஜியிடம் கி. பி. 1737இல் கேட்டுக்கொண்டார்.[4] ஆவணத் தொடக்கத்தில் சுஜான்பாயி சாகேப் என்று பெயர் குறிக்கப்பெற்று இருத்தலால் அவ்வரசமாதேவி அரசரிடம் பரிந்துரை செய்திருக்கக்கூடும். அரசரும் மனமுவந்து முன்னர் அளித்துவந்த தொகையோடு 500 சக்கரமும்

---

3. பக்கம் XVIII குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு-ஸ்ரீகாசிமடம் பதிப்பு-ஜூன் 1952

4. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணாக்கர் முத்துசாமி பிள்ளை எழுதிய பனைச் சிலேடை வெண்பா என்ற நூலில், "பொன்பூத்த" என்ற குருபரம்பரை விளக்கப்பாடலில், "தென்பூத்த" என்ற பாடலில் "தஞ்சை மான்யம் பெற்ற தில்லை நாயக முனிவர்" என்று இச்செய்தி கூறப்பட்டது காண்க.

சேர்த்து ஆண்டுதோறும் 1000 சக்கரம் வருமானம் வரக்கூடிய நிலங்களை (திருப்பனந்தாளுக்கு அருகில்) குறிச்சி தாலுக்கா 'சோன்பட்'[4அ] என்ற ஊரில் சருவமானியம் செய்தார்.

இவ்வாவணம் மிகச் சிறப்பு வாய்ந்ததாகக் கொள்ளத் தகுவது ஒன்றாகும். தருமபுர ஆதீனத்துத் தம்பிரான் ஒருவரே திருப்பனந்தாள் காசி மடத்து அதிபராக வருவதற்கு உரிமையுடையவர் ஆவர். எனவே 1737இல் காசிமடத்து அதிபராக இருந்தவர் தருமபுர ஆதீனத்து அடியார் கூட்டத்துள் ஒருவரே என்பதை இவ்வாவணம் '**தருமபுர மடத்தின் சிஷ்யரான 'நாயிக் பண்டாரி**' என்று குறிப்பிட்டு, இவ்வழக்கினுக்குச் சான்று பகருகிறது.

குமரகுருபரத் தம்பிரான் என்பவரிடம் நாரோபந்த் தபீர் என்பவர் மதுரைச் சக்கரம் 2000 கொடுத்தார். இதன் வட்டி வருமானத்தினின்று ராமேசுவரத்தில் வேதாத்தியயனம், தண்ணீர்ப்பந்தல், நந்தவனம் எப்போதும் நடத்த ஏற்றுக்கொண்டார். அவர்க்குப்பின் வந்தவர்கள் கி. பி. 1828வரை நடத்தினர். இக்காலத்துக் காசிமடத்துத் தலைவராக இருந்தவர்கள் ஸ்ரீகாசிவாசி சடையப்ப சுவாமிகள் ஆவர். இவர்கள் "நமது முன்னோர்போல் நாமும் தருமத்தை நடத்தினோம்; இப்பவும் ஒரு வட்டி கிடைக்கவில்லை. ஆகவே அந்தத் தொகையை வட்டியில்லாத ஐவேஜாக வைத்திருக்கிறோம்" என்று எழுதியிருக்கிறார்.[5] இங்குக் கண்ட குமரகுருபரத்தம்பிரான் என்பார் கி. பி. 1756 முதல் 1790 வரை காசிமடத்து அதிபராக இருந்தவர்கள்[6] ஆதல் கூடும். இதன்பேரில் அந்த முதற்பொருளும் கைவசம் இருந்த வட்டித் தொகையும் சேர்த்து ரூ. 3500 ஸர்க்கார் இடம் கொடுக்கப்பட்டது என்று

---

4அ இந்நாளில் திருப்பனந்தாளுக்கு அருகில் உள்ள "பட்டம்" என்ற ஊர் இதுவாக இருக்கலாம்.

5. ச. ம. மோ. த, 9–28

6. கி. பி. 1720 முதல் கி. பி. 1880 வரை காசிமடத்து அதிபர்களாக விளங்கியவர்கள் வருமாறு :—

| அதிபர் வரிசை எண் | பெயர் | ஆட்சியாண்டு |
|---|---|---|
| 6. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி தில்லைநாயக சுவாமிகள் | 1720—56 |
| 7. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி குமரகுருபர சுவாமிகள் \|\| | 1756—90 |
| 8. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சிதம்பரநாத சுவாமிகள் | 1790—98 |
| 9. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சடையப்ப சுவாமிகள் \|\| | 1798—1836 |
| 10. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கணபதி சுவாமிகள் \| | 1836—38 |
| 11. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி இராமலிங்க சுவாமிகள் \| | 1838—41 |
| 12. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் | 1841—52 |
| 13. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி கணபதி சுவாமிகள் \|\| | 1852—58 |
| 14. | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி இராமலிங்க சுவாமிகள் \|\| | 1858—80 |

—பக்கம் XVIII ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு - ஸ்ரீகாசிமடம் பதிப்பு (1952)

வேறொரு குறிப்பு[7] விளம்புகிறது. இவ்வாவணத்தில் "காசியில் தருமவிசாரணை செய்யும் சடையப்பத் தம்பிரான் " என்று கி. பி. 1828இல் இருந்த காசிமடத்து அதிபர் குறிக்கப்பட்டுள்ளார்.[8]

1836இல் காசித்தம்பிரான் அதாவது காசிமடத்து அதிபர் தஞ்சைக்கு வந்து ஓரிரு நாட்கள் தங்கினராதல் வேண்டும். இது, "1836 மொஹரம் 23: தட்டி மகாலுக்குக் காசித்தம்பிரான் ஊரில் இருக்கும் வரை பஹிலி மகால் எருதுகளுக்கு வைக்கோல் கொடுத்தவகையில்" என்ற குறிப்பால்[9] அறியப்பெறும். புதிதாக 1836இல் பட்டம் எய்திய காசிவாசி கணபதி சுவாமிகள் இரண்டாம் சிவாஜியைக் காண வந்தனர் போலும்.

இரண்டாம் சிவாஜி 1833இல் பட்டமெய்திய பிறகு பலருக்கும் நிலக் கொடை அளித்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர் திருப்பனந்தாள் சடையப்பத் தம்பிரான் என்பவர் ஆவர் என்பது ஒரு ஆவணச்செய்தியாகும்.[10] இங்குக் கண்ட சடையப்பத் தம்பிரான் அடிக்குறிப்பு 6 இல் வரிசை எண் 9 இல் குறிப்பிடப்பெற்றவர் ஆகலாம்.

"கைலாஸவாஸி"[11] சைதம்பா பாயி அவர்கள் பெயரால் கி. பி. 1850இல் காசியில் ஒரு சிவன் கோயில் எடுப்பிக்கவும், பூசை நிவேதனத்துக்காகவும் காசித் தம்பிரான் அவர்களிடம் ரூ. 2500 கொடுக்கப்பெற்றதாகத் தெரிகிறது.[12] இக்கோயில் காசியில் எங்கு எடுப்பிக்கப்பட்டது என்பதற்குச் சான்று இல்லை. 1850ஐ ஒட்டி இருந்தவர் ஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் ஆவர். சைதம்பாபாயி என்பவர் இரண்டாம் சிவாஜியின் முதல் மனைவி ஆவர்.[13]

கி. பி. 1851இல் மா. ஆவுசாகேப் அவர்கள்[14] காசியில் கேதார கட்டத்தில் உள்ள கேதாரீசுவரர் கோயிலில் விளக்குப் போடுவதற்காக 70 ஆயிரம் திரிகளை அனுப்பிவைத்தார். விளக்குக்கு எண்ணெய் வாங்கவும் விளக்கிடும் நாளில் அந்தணர்க்கு உணவளிக்கவும் ரூ. 125 காசித்தம்பிரான் அவர்கட்கு அனுப்பப்பெற்றது.[15] கி. பி. 1851இல் காசிமடத்து அதிபராயிருந்தவர்கள் ஸ்ரீ காசிவாசி சொக்கலிங்க சுவாமிகள் ஆவர்.

---

7. 4-426

8. அடிக்குறிப்பு 6இல் நிரல் எண் 9 காண்க.

9. ச. ம. மோ. த. 12-82

10. ச. ம. மோ. த. 4-14

11. இறந்தவர்களுக்குக் " கைலாஸவாஸி " என்று அடை கொடுத்துக்கூறுவது மரபு

12. 4-888, 889; 4-868; ச. ம. மோ. த. 9-84

13. In his youth Sivaji was married to three wives (daughter of his three sisters) of whom the eldest named Saidamba and the Youngest Padmamba died before him – P. 838, Tanjore Manual.

14. ஆவுசாகேப் என்பது இரண்டாம் சிவாஜியின் தாயார் அஹல்யாபாய் ஆவர்.

15. 1-188-189

கி. பி. 1854இல் திருப்பனந்தாள் காசித்தம்பிரான் அவர்கள் இரண்டாம் சிவாஜியைக் காணச்சென்றார். அரசரைக் காண்பதற்குக் காலம் நீடித்தது. "நான் முதலாவது பேட்டிக்கு வந்திருக்கிறேன்; அங்கு வியாஜ்ய காரியம் போகவேண்டியிருக்கிறது" என்று தெரிவித்தார். ஸர்க்கேலும் "முதலாவது பேட்டி ஆகையால் பேட்டியின் பிறகு போவது சர்க்காருக்கும் உங்களுக்கும் பெருந்தன்மை" என்று பதில் கூறினார் என்ற குறிப்பு உண்டு.[16] முதல் பேட்டியாவது காசி மடத்துப் பட்டத்துக்கு வந்தபின் முதல் தடவையாக அரசரைப் பார்க்க வந்தது ஆதல் கூடும். இங்ஙனம் வந்தவர் ஸ்ரீ காசிவாசி இராமலிங்க சுவாமிகள் II ஆவர்.

காசியில் 5 தலைமுறைகள் இருந்தபிறகு திருப்பனந்தாளில் காசிமடம் தலைமையிடம் ஆகியது. அதுமுதல் காசி மடத்து அதிபர்கள் திருப்பனந்தாளில் இருக்கத் தொடங்கினர். காசியிலுள்ள மடத்துக்குத் தலைமையிடத்திலிருந்து தம்பிரான் ஒருவரை அனுப்பிவைப்பர்; அத்தம்பிரான் திருப்பனந்தாளில் உள்ள அதிபருக்கு அடங்கி நடப்பர். இச்செய்தியைத் "திருப்பனந்தாள் ஊரிலுள்ள சொக்கலிங்கத் தம்பிரான் காசியிலுள்ள தன் மடத்திலுள்ள தம்பிரான் தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பது பழைய பழக்கம். ஸ்ரீகாசியாத்திரைக்கு ஹுஜூருடைய சவாரி சென்றபோதுகூட இங்கிருந்து போயிருந்த சட்டப்பத் தம்பிரான் காசியிலுள்ள மடத்துக்கு இப்பொழுதுள்ள அய்ஹூரப்பத் தம்பிரானை நியமித்தார்" என்ற குறிப்பு[17] வலியுறுத்தும்.

இதிற்கண்ட சொக்கலிங்கத்தம்பிரான் என்பார் 1841 முதல் 1852 வரை காசிமடத்து அதிபராக இருந்தவர்கள்[18] ஆகலாம். சரபோஜி காசியாத்திரை சென்ற சமயத்தில் உடன் போயிருந்த சட்டப்பத்தம்பிரான் என்பவர் 1798 முதல் 1836 வரை காசிமடத்து அதிபராக இருந்தவர்கள் ஆவர்.[19] இதிற்கண்ட அய்ஹாரப்பத்தம்பிரான் என்பதை அய்யாறப்பத்தம்பிரான் என்று திருத்திக் கொள்ளலாம்.

இங்குக் குறிக்கப் பெற்ற அய்யாறப்பத் தம்பிரானைக் குறிப்பிடும் குறிப்புக்கள் நான்கு உள்ளன;[20] அதில் ஒரு குறிப்பு,[21]

"சாசிக்கு அய்யாறப்பத் தம்பிரானுக்கும் கும்பினியின் தபால் கடிதம் அனுப்ப ரூ. 1"

என்று உள்ளது. இதனால் காசியிலிருந்த தம்பிரான், திருப்பனந்தாளில் இருந்த காசிமடத்து அதிபரின்வழி சர்க்காருடன் தொடர்பு கொள்ளாமல் நேரிடைத் தொடர்பு கொண்டிருந்தார் என்றும், அவருடன் சர்க்காரும் நேரிடைத் தொடர்பு கொண்டது என்றும் ஊகிக்கலாம்.

16. ச. ம. மோ. த. 1-188
17. 7-686 (8-125 பார்க்க)
18. அடிக்குறிப்பு 6இல் வரிசை எண் 12.
19. அடிக்குறிப்பு 6இல் வரிசை எண் 9
20. 4-218, 258, 432; ச. ம. மோ. த. 10-8
21. 4-218

"சிவாஜி மகாராஜா அவர்களுக்கு, காசி அய்யாறப்பத் தம்பிரான் எழுதிக்கொண்டது ………… மேலும் நமது திருப்பனந்தாள் மடத்துக்குக் காசி தருமம் சரிவர நடக்கவில்லை என்று மகாராஜாவின் கடிதத்துக்குத் தெரிவிக்கிறேன்"

என்பது இரண்டாம் சிவாஜிக்கு அய்யாறப்பத் தம்பிரான் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியாகும். இது இரண்டாம் சிவாஜிக்கு அய்யாறப்பத் தம்பிரான் நேரிடையாக எழுதியது. திருப்பனந்தாள் மடத்துக்கு அரசர் காசித்தருமம் சரிவர நடக்கவில்லை என்று எழுதியிருந்தார் ஆதல் வேண்டும். அதற்கு மறுமொழியாக அய்யாறப்பத்தம்பிரான் சிவாஜிக்குப் பதில் எழுதியுள்ளார்.[22] இம்மறுமொழி தக்க சமாதானம் (explanation) ஆக இருந்த போதிலும் காசியில் இருந்தவர் தலைமையிடத்து வழி தன் மறுமொழியை அனுப்பியதாகக் கடிதத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. இதனாற்றான் காசிமடத்து அதிபர் அய்யாறப்பத்தம்பிரான் தனக்கு அடங்கி நடக்காமல் தன் நிலையில் செயல்படுகிறார் என்று குறிப்பாக எழுதினார்[23] ஆதல் வேண்டும். ஆனால் அய்யாறப்பத் தம்பிரான் தலைமையிடத்துக்குக் குறைபாடில்லாத வண்ணம் மறுமொழி தந்திருப்பது கவனிக்கத்தக்கது. அம்மறுமொழி[24] பின்வருவது :—

"சிவாஜி மகாராஜா அவர்களுக்கு ஸ்ரீகாசி அய்யாறப்பத் தம்பிரான் எழுதிக்கொண்டது. அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது, அதிக மழையினால். இப்பவும் நாகபூர் மகாராஜா காசியாத்திரை வந்தார்கள். அவரிடம் 25,000 கொடுக்கப்பட்டது.

மேலும் நமது திருப்பனந்தாள் மடத்துக்குக் காசி தருமம் சரிவர நடக்கவில்லை என்று மகாராஜாவின் கடிதத்துக்குத் தெரிவிக்கிறேன். நமது மடத்தின் துவேஷி ஜனங்கள் அப்படிச் சொல்லுகிறார்கள். பிராமணர்கள் தருமத்தைப் பார்ப்பதில்லை; சுயகாரியத்தையே பார்க்கிறார்கள்; சில குடியானவர்களும் அவருடன் சேருகிறார்கள். மகாராஜாவின் நிபந்தனையின்படி தருமங்கள் நடந்து வருகின்றன. மகாராஜாவின் அன்னசத்திரம், பிராமண போஜனம், திரௌபதாம்பாபாயி சாயேப் அன்னசத்திரம், தேவாலயம், சிவபூசை. அபிஷேக நைவேத்தியம், தீபாராதனை, ஷிபாயி சாயேபுடையதும் பிரதோஷம் நந்தவனமும், விசுவேசுவரர் அன்னபூரணி பைரவ பூசைகள் நடந்து வருகின்றன.

நமது பார்வையில் சம்பாஜி நாயகர் தருமம், கலிகி அக்கா துவாதசி தருமம். மலையாள தருமம், கொச்சி தருமம், கள்ளிக்கோட்டை தருமம், சேதுபதி தருமம், தொண்டைமான் தருமம், மதுரை தருமம், துறையூர் தருமம், வெங்கடகிரி நெல்லூர் ஆர்க்காடு சைதாபூர் ஹைதராபாத் சென்னப்பட்டணம் விஜய

22. ச. ம. மோ. த. 10-8 23. 7-686 (அடிக்குறிப்பு 17) 24. ச. ம. மோ. த. 10-8

நகரம் தருமராஜ திவான் செட்டிப்பிள்ளைகள் தருமம், பிராமண போஜனம், சிவ பிரதிஷ்டை பூஜை, நந்தவனம், தருமசாலை வகையறாக்கள் சரிவர நடந்து வருகின்றன. மகாராஜாவின் தருமம் மாத்ருஸ்தானமாக நினைத்து நடத்துகிறோம். இப்படிக்கு, சிவஸ்மரணம், ஆசீர்வாதம் "

இக்கடிதத்தினின்று காசியில் திருப்பனந்தாள் காசி மடத்துச் சார்பில் பலருடைய தருமங்கள் ஏற்று நடைபெற்று வந்தன என்றும், தஞ்சை மராட்டிய மன்னர் நிறுவிய அறங்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கலாயினர் என்றும் தெரியவரும்.

காசிமடத்து அதிபர்கள் காசியிலிருந்து சிறந்த நூல்களைப்படி எடுக்கச் செய்தும் நூல்களை விலைக்கு வாங்கியும் தஞ்சைக்கு அனுப்புவது வழக்கம். அவற்றுடன் கங்கா தீர்த்தமும், கங்கோத்ரியினின்று தீர்த்தக்காவடிகளும் கொணரச் செய்து தஞ்சைக்கு அனுப்புவர். இவை பின்வரும் மோடி ஆவணத் தமிழாக்கக் குறிப்புக்களால் அறியப்பெறும்:-

"1805 காசியிலிருக்கும் கிரந்தங்களை எழுதியனுப்பத் திருப்பனந்தாள் காசித்தம்பிரானிடம் ரூ. 1000 அனுப்பினதற்குத் தம்பிரான் பதில் கடிதம்"[26]

"1842: காசித்தம்பிரான் மூலம் புத்தகங்கள் வாங்கினது ஜாபிதாபடிக்கு ருக்சாகா சம்மிதா பாஷியம், திரிதீய சதுர்த்த அஷ்டகம் 2; சப்தம அஷ்டக சம்பூர்ணம்; ருக்வேத பஞ்சக பாஷ்யம்; பிரதம துவிதீய பஞ்சகம்; அதர்வண பிராஹ்மண பூர்வோத்தர காண்டம்; நிர்ணய சிந்து – பிரதம திவிதீய திரிதீய பரிச்சேதம்"[27]

"1823: கங்கோத்ரியின் காவடிகள் 4–திருப்பனந்தாள் காசித்தம்பிரான் மூலம் சர்க்காருக்கு அனுப்பித்த வகையில் காசிக் காவடிகள் கொண்டு வந்த ஆத்மாராம் வகையறா ஆட்கள் 4 பேருக்கு இனாம் கம்பெனி ரூ. 100."

அந்நாளில் காசிமடத்து அதிபர்களுக்கு ஒரு வக்கீல் இருந்தார். அவர் பெயர் நாகோஜி மல்ஹார் என்பது பின்வரும் குறிப்பால்[28] அறியப்பெறும்:–

"1829: ஸ்ரீகாசி க்ஷேத்ரத்திலிருந்து காசித்தம்பிரான் மூலம் கங்கையின் காவடிகளும் புத்தகங்களும் வாங்கிக் கொண்டு வந்ததற்குத் தம்பிரானுடைய வக்கீல் நாகோஜி மல்ஹார் இடம் கொடுத்தது; புத்தகத்துக்கு ரூ. 299; கங்கையைக் கொண்டுவர 113."

---

25. 2–118 (பதில் கடிதம் திரு. ஆர். ஜயராமன் அவர்கள் எழுதிய சரஸ்வதிமகால் என்ற நூலில் பக்கம் 28இல் அச்சிடப்பெற்றுள்ளது)

26. ச. ம. மோ. த. 6–17  27. ச. ம. மோ. த. 28–8  28. 4-238

கி. பி. 1772க்குரிய மோடி ஆவணத் தமிழாக்கத்தில்,[28அ] காசி தருமத்துக்குத் திரிலோக்கி மாகாணத்தைச் சேர்ந்த எட்டுக் கிராமங்களும், குறிச்சி, மாகாணத்தில் உக்கடை, தரணி மாகாணத்தில் நலாதபடிஎன்ற கிராமங்களும் விடப்பட்டன என்றும், அவை 82,000 கலம் கண்டுமுதல் ஆகும் என்று "தஸ்தாவேஜு கச்சேரியில்" கண்டுள்ளது என்றும், 1770இல் 22,000 கலமும் 1771இல் 21 ஆயிரம் கலமும் குறைவாக இருந்தன என்றும், இங்ஙனம் காசி தருமத்துக்குக் குறைவாகக் கொடுத்தால் தருமம் நின்றுவிடும் என்றும், 1772 முதற்கொண்டு 10,000 கலம் தள்ளி 72,000 குத்தகை பெறவேண்டும் என்றும், குடிவாரம் 100க்கு 40 வீதம் கொடுக்கவேண்டும் என்றும், ஆண்டு தோறும் ஸர்க்காருக்குக் கொடுக்கவேண்டியதாக ஒப்புக்கொண்ட 500 சக்கரம் கொடுக்க வேண்டியதில்லை என்றும் கூறப்பட்டுள்ளன. இதன் கண்,

"1772: தினப்படிக்காகக் கல்லே குத்தகை காசீ கோனார் பண்டாரத்திற்குக் கொடுப்பது"

என்றுள்ளது. அதாவது "காசியில் நாடோறும் செய்யவேண்டும் என்று நியமித்த தருமங்களுக்காக இக்குத்தகை வருமானம் காசீ கோனார் பண்டாரத்திடம் கொடுப்பது" என்று பொருள்படும். "காசி கோனார் பண்டாரம்" என்றது யார் என்று தெரியவில்லை. இந்தக்கால வட்டத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் தலைவராக விளங்கியவர்கள் ஸ்ரீ காசிவாசி குமரகுருபர சுவாமிகள் II என்பவர் ஆவர்.[29] குமர" என்பது "கோனார்" என்று திரிந்ததாதல் கூடும். எங்ஙனமாயினும் இங்குக் குறிக்கப்பெற்ற திருலோகி வகையறா கிராமங்கள் சில இந்நாளில் திருப்பனந்தாள் காசி மடத்துக்குரியனவாக இருக்கின்றன.

தென்னாட்டிலிருந்து காசிக்குத் தொகைகள் அனுப்ப வேண்டியிருப்பின் அந்நாட்களில் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் செலுத்தினால் காசி குமார சுவாமி மடத்தில் கொடுக்கப்படும். அதற்கு ஓரளவு தொகை சேர்த்துக் கொடுப்பர். இதனை,

"காசியில் வசிக்கும் பிராமணர் ராதா மோகனபட் கௌரி மோகனபட் இந்த இருவருக்கும் ரூ. 200 கொண்டு போகும்படி செலவு ரூ. 10; மேற்கொண்டு 100க்கு ரூ. 5 வீதம் ரூ. 10 ஆக ரூ. 220 காசித் தம்பிரானுக்கு அனுப்பியது".

ஷை விஷயமாகக் காசியில் வசிக்கும் வியாகரணம் விட்டல் சாஸ்திரிக்கு வித்வத் சம்பாவனை ரூ. 100 கொண்டுபோய்ச் சேர்க்கும் செலவு ரூ. 10; ஆக ரூ. 110 காசித்தம்பிரானுக்கு அனுப்பப்பட்டது"என்ற குறிப்புக்கள்[30] உணர்த்தும்.

---

28அ. 5-829 முதல் 884 முடிய

29. அடிக்குறிப்பு 6இல் நிரல் எண் 7

30. ச, ம, மோ. த. 10-19

காசியில் பிராமண போஜனம் தனியாகவும் மற்றவர்கட்கு அன்னம் பாலிப்புத் தனியாகவும் நடத்தப் பெறுவது மரபு. இரண்டாம் சரபோஜி காசிவாசம் செய்யும் அந்தணர்கட்குக் காசியில் (குமாரசுவாமி மடத்தில்)உணவு அளிக்க ஏற்பாடு செய்திருந்தார். காசிவாசம் செய்தவர் கவலையின்றிக் கல்வி நலமும் பெற்று வாழ்ந்திருந்தனர். நரசு என்றொருவர்; கன்னார் வகுப்பைச் சேர்ந்தவர்; சு. பாலகிருஷ்ண பாகவதரின் மகன். இவர் பார்ப்பனர்களுடன் அமர்ந்து உணவு உண்ணவேண்டும் என்று முயன்றார். இவரிடம் தருமபுரம் அருணாசலத்தம்பிரான்[30அ] அன்புடையவர்; ஆகையால் இவரை அந்தணர் சாதியில் சேர்க்கவேண்டும் என்று முயன்றார்; பிராமணர்களுக்குத் தொந்தரவு கொடுத்தார்; சத்திரத்தை மூடினார்; பிராமணர்களுக்கு உணவு இல்லாதவாறு செய்தார். பிராமணர்கள் இணங்கவில்லை. விசுவேசுவரருடைய திருவருளால் அவர்களுக்கு வேறு இடங்களில் உணவு கிடைத்தது. சாதிப்பூசல் ஏற்படாமற் போயிற்று.

பின்னர் அந்த மடத்தில் இளைய தம்பிரான், அருணாசலத் தம்பிரானிடத்தில் பிராமண போஜனத்தை நிறுத்துவது சட்டப்படி நியாயமல்ல என்று கூறிச் சத்திரத் தருமத்தை நடக்கச் செய்தார். எனினும் அருணாசலத் தம்பிரானுக்கு " நரசு " என்பவர் பேரில் இருந்த அன்பு நீங்கவில்லை. எப்படியாவது நரசுவைப் பிராமணனாக்கிப் பிராமணர் வரிசையில் உட்காரச் செய்ய வேண்டும் என்று முயற்சி செய்தார்.

ஆகையால் மகாராஜா அவர்கள் பிராமணர்க்கு ஏற்பட்ட தொல்லையை நீக்குவதற்கு " சடப்பத்தம்பிரான் " அவர்களுக்குக் கடிதம் எழுதித் தொந்தரவு இல்லாமல் சோறிடச் செய்து, காசிவாசம் செய்யும் பிராமணர்களைப் பாதுகாக்க வேண்டும்.

– என்று இங்ஙனம் " சரபோஜி ராஜா சாஹேப் அவர்களுக்குக் காசிவாசி வித்துவான் ஜனங்கள் எழுதிய கடிதம் " என்றுள்ளது.[31]

அருணாசலத் தம்பிரான் என்பவர் காசியில் குமாரசாமி மடத்தில் இருந்த தம்பிரான்களில் ஒருவர். இவர் அந்தணர் அன்னம்பாலிப்பைக் கவனித்தவர் ஆதல்வேண்டும். " இளைய தம்பிரான் " என்பது திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் ஆக இருப்பவர்கட்குப் பின் உரிமையுள்ளவராதல் கூடும். அதனால் தான் அவர் கூறியதை அருணாசலத் தம்பிரான் கேட்டு அவர் சொற்படி நடந்தார். " சடப்பத்தம்பிரான் " என்பது அந்நாளில் காசிமடத்து அதிபராக இருந்த சடையப்ப சுவாமிகள் என்றவராதல்[32] வேண்டும். இக்கடிதத்தால், அந்தணருடன் உடன் உண்ணவேண்டும் என்று அந்நாளில் சிலர் கருதினர் என்றும், அதற்குச் சிலர் ஊக்கமளித்தனர் என்றும் தெரியவருகிறது. அந்நாட் சூழல் அதற்கு இடம் தரவில்லை.

---

30அ. துரோணாசலத்தம்பிரான் என்றுளது.

31. 1-24 முதல் 27 முடிய

32. அடிக்குறிப்பு 6இல் நிரல் எண் 9

**சரபோஜி II காசித் திருமடத்தில் தங்கியமை**

இரண்டாம் சரபோஜி 10—7—1821 பகல் 8 மணிக்குக் காசியை அடைந்தார். "ஆஷாட சுத்த தசமி[32அ] செவ்வாய்க்கிழமை ஜுலை மாதம் 10ஆம் நாள்" காசியை அடைந்ததாகவும், காசியில் காசித்தம்பிரானுடைய மடத்தில் இறங்கியதாகவும், வந்தநாள் "க்ஷேத்திர உபவாசமும் தீர்த்தவிதி"யும் செய்ததாகவும், மறுநாள் மணிகர்ணிகையில் நீராடுதலும் "தீர்த்த சிரார்த்தமும" செய்ததாகவும், மழைக்காலமாக இருப்பதால் சில காலம் தங்குவதாகக் கருதுவதாகவும், விஜயதசமி வரையில் தங்க நினைப்பதாகவும் 12–7–1821இல் எழுதச் செய்துள்ளார்.[33]

11—9—1821இல் காசியினின்று எழுதிய குறிப்பில்[34],

"நம்முடையவும் நம்முடன்கூட இருப்பவர் சந்தோஷத்துக்காகவும் பாத்ரபத பஹுள திவிதியை[34அ] வியாழன் செப்டம்பர் 13 வரையில் இங்குத் தங்கி 14ஆம் நாள் பிரயாகைக்குப் போய் அந்த யாத்திரை முடித்துக்கொண்டு"

என்றிருப்பதால் 13—9—1821 முடியக் காசியில் மன்னர் தங்கியிருந்தார் என்பது பெறப்படும். ஆனால் அதற்கு அப்பாலும் மன்னர் காசியில் தங்கியிருந்தார் என்பதும், அதற்குரிய காரணமும் 4—10—1821இல் காசியினின்று எழுதச் செய்த கடிதச் சான்றினால் தெரிகிறது[35] :–

"செப்டம்பர் மாதம் 13ஆம் தேதிக்குப் பிரயாகை யாத்திரை புறப்படுகிறோம் என்று எழுதியிருந்தோம். அதன்படியே ஸவாரியும் தயாராயிற்று. ஆனால் அதற்குமுன் நன்றாக நின்றிருந்த மழை கிழக்குத் திசையினின்று அடிக்கும் காற்றுடன் பெய்யத் தொடங்கியதால் பாத்ரபத பஹுள அமாவாசைக்குப் பிறகு ஆஸ்விஜ சுக்ல பாட்டிமை[35அ] முதல் எப்பொழுதாவது மழை இம்மாதிரி இருக்கிறது. இதனால் மேற்படி மாதம் (அக்டோபர்) 26ஆம் நாள் புறப்படுவதாக இருக்கிறோம்"

என்பதனால் 26—10—1821இல் காசியிலிருந்து புறப்பட நினைத்தார் என்பது பெறப்படும்.

19—10—1821இல் எழுதிய கடிதத்தில் ஆஸ்வீஜ கிருஷ்ண பக்ஷ பஞ்சமி திங்கட்கிழமை காலை 4 மணிக்குப் புறப்பட்டுப் பிரயாகைக்குப் போகிறோம்" என்றும்[36] 31—10—1821 கடிதத்தில்,[37] "23ஆம் தேதி பிரயாகைக்கு வந்து அங்குள்ள தீர்த்த விதிகளை ஒழுங்காகச் செய்தாயிற்று" என்றும் எழுதியுள்ளவற்றான் 23—10—1821இல் பிரயாகையை அடைந்தார் மன்னர் என்பது பெறப்படும்.

---

32அ. ஆனி மாதம் வளர்பிறை 10ஆம் நாள்.
33. 5–125 முதல் 127 வரை.
34. 5-72, 78
34அ. ஆவணி தேய்பிறை இரண்டாம் நாள்
35. 5-117 முதல் 120 வரை
35அ. பாட்டிமை-பிரதமை-முதல் திதி
36. 5-120
37. 5-121

# கும்பகோணத்தில் காஞ்சி காமகோடி மடம்

## கும்பகோணத்தில் மடம்

ஆதிசங்கரர் நிறுவிய மடங்கள் ஐந்தனுள்[38] தமக்கு உரிமையாகக் காமகோடி பீடத்தைக் காஞ்சியில் அமைத்துக்கொண்டார் என்று கூறுவர். தஞ்சை மராட்டிய மன்னர்களில் 1739 முதல் 1763 வரை அரசாண்டவர் பிரதாப சிங்கர். இவர் காலத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் உடையார் பாளையத்தில் தங்கியிருந்தார். இதனைக் கேள்வியுற்ற பிரதாபசிங்கர் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளைத் தஞ்சைக்கு வருமாறு வேண்டினார். காவிரிக் கரையில் தங்கியிருக்க வேண்டும் என்று விரும்பிய காமகோடி பீடாதிபதிகள் கும்பகோணத்துக்கு வந்தார்.[39] பிராதாபசிங்கரும் கும்பகோணத்தில் டபீர் அக்ரஹாரத்தில் மடத்தைக் கட்டிக்கொடுத்தார்; "மோகினி" நிலங்கள் அளித்தார்; அரியணையும் வெள்ளி தங்கம் ஆகியவற்றால் ஆகிய பாத்திரங் களும், அணிகலன்களும், குதிரையானை முதலியனவும் அளித்தார்.

இவை சிவாஜி மகாராஜாவுக்கு (கி. பி. 1851இல்) கும்பகோணத்தி னின்று சிலர் எழுதிய கடிதத்தினின்று பெறப்படும்.[40]

## மொயின் பெற்றமை

பிரதாபசிங்கர் காலத்திலிருந்தே சங்கராசாரியருடைய மடத்துச் சந்திர மௌலீசுவரர் பூசைக்கு மராட்டிய மன்னர் பெருந்தொகைகள் கொடுத்து வந்தனர் ஆதல்கூடும். கி. பி. 1768இல் சக். 1000 + 2000[41]; 1780இல் மொயின் 4500 சக்கரம்; ஆஷாட சுத்த பௌர்ணமி வியாஸபூசைக்குச் சக்கரம் 500[42]; 1786இல் சக். மொயின் 4600[43]; கி. பி. 1786இல் 4500 சக்கரம்[44]; 1794இல் 4624 சக்கரம்[45]; 1798இல் 4625 சக்.[46] — இக்குறிப்புக்களால் கி. பி. 1798 வரை நித்திய பூசைக்காகவும் வியாசபூசைக்காகவும் 4625 சக்கரம் ஆண்டுதோறும் கொடுக்கப்பெற்றிருத்தல் கூடும் என அறியலாம். இதற்குப்பின்னர் மொயின் கொடுக்கப்பெற்றதோ இல்லையோ தெரியவில்லை; வியாஸபூசைக்கு மட்டும் தொகை கொடுத்தனர் என்பதற்கும் ஆதாரமில்லை. ஆனால்,

---

38. அத்வைதசித்தாந்தம் நிலைத்தோங்க நமது நாட்டின் வடகோடியில் **பதரிகாச்ரமத் திலும்,** தென் திசையிலுள்ள **சிருங்கேரியிலும்,** மேற்குக் கோடியில். **துவாரகை யிலும்,** கிழக்குக்கோடியில் **ஜகந்நாதத்திலும்** மடங்கள் நிறுவித் தமக்கு உரிமையாக ஆதிசங்கரர் காமகோடி பீடத்தைக் **காஞ்சியில்** நிலைக்கச் செய்தார் – பக்கம் 81, சங்கர குருபரம்பரை – ஆத்ரேய கிருஷ்ண சாஸ்திரி – 1980
39. K. R. Subramanyam - The Maratha Rajas of Tanjore (1928) P. 48
40. 4-74, 75: Preceptors of Advaita (59) Sri Kamakoti Pitha (P.434) by. N. Ramesan
41. ச. ம. மோ. த. 21-6; 20-88
42. 8-168
43. ச. ம. மோ. த. 17-86
44. ச. ம. மோ. த. 8-27
45. ச. ம. மோ. த. 8-45
46. 4-286

"17—6—1844 ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீசங்கராசார்யர் வழக்கப்படிக்கு ஜம்புகேசுவரத்தில் வியாஸபூஜை நடக்கப்போகிறது. அரண்மனையிலிருந்து பூஜை வஸ்திரம் முதலியவைகளுடன் மத்யஸ்தர் வந்து நடத்தி வைக்கவேண்டும் என்று காரியஸ்தர் கணபதி சாஸ்திரிகள் கேட்டுக் கொண்டது"

என்ற குறிப்பினால் பூசைக்குரிய ஆடையுடன் மத்யஸ்தர் சென்று பூசை நடத்திவரும் வழக்கம் ஏற்பட்டது என்று தெரிகிறது.[47] மேலும் மடத்தில் பந்தல் போட்டு அழகுசெய்வதும் உண்டு; பன்னிரண்டு திருக்கோயில்களிலிருந்து பிரஸாதமும் வருவதுண்டு; தாசில்தார் முதலியவர்களும் வருவர்.[47அ]

### கனகாபிஷேகம்

கி. பி. 1801இல் "கும்பகோணத்தில் ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகட்குக் கனகாபிஷேகத்துக்குச் சக்கரம் 500" என்ற குறிப்பு உள்ளது.[48] இதனால் இரண்டாம் சரபோஜி காலத்தில் சங்கராசாரியருக்குக் கனகாபிஷேகம் நடைபெற்றதாதல் வேண்டும். அந்நாளில் அதிபராக வீற்றிருந்தவர்கள் நான்காவது மகா தேவேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் ஆவர். இவர்கள் 1783 முதல் 1814 வரை ஆட்சிசெய்தவர்கள் எனத் தெரிகிறது.[49]

இரண்டாம் சிவாஜி 1833, 1842, 1850 ஆகிய ஆண்டுகளில் சங்கராசாரிய சுவாமிகள் மடத்துக்குச் சென்று சுவாமிகளுக்குக் கனகாபிஷேகம் செய்திருக்கிறார்.[50] இந்தக் கால வட்டத்தில் கும்பகோணத்தில் பீடாதிபதிகளாக இருந்தவர்கள் ஐந்தாவது சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி அவர்கள் ஆவர். இவர்கள் காலம் 1814–1851.

### புதிய கோவில்

கும்பகோணம் ஸ்ரீசங்கராசாரியார் மடத்தில், இரண்டாம் சரபோஜி காலத்தில், புதிய கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. அதற்குக் கும்பகோணம் தோட்டத்திலிருந்து 286 சக்கரம் வழங்கப்பெற்றது.[50அ]

### தாடங்கம் அணிவித்தல்

மேலே கண்ட ஐந்தாவது சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் காலத்தில் சிருங்கேரி மடத்துக்கும் கும்பகோணம் மடத்துக்கும் திருவானைக்கா

---

47. ச. ம. மோ. த. 5-29; 248 47அ. 2-101, 102 48. 1-342
49. பக்கம் 89 – சங்கர குருபரம்பரை–ஆத்ரேய கிருஷ்ணசாஸ்திரி (1980)
50. 4-80; ச. ம. மோ. த. 5-6; 9-87
50அ. இதுபற்றிக் கும்பகோணம் மடத்திலுள்ள சிலாசாஸனம் பின்வருமாறு :–
"ஸ்ரீ சந்திரமௌளீசுவர சுவாமி ஸநிவாசார்த்த ராஜஸ்ரீ சத்ரபதிஸெரபோஜி மகாராஜ க்ருத ஆலய பிரதிஷ்ட சாலிவாஹன சக 1743 விருஷ நாம ஸம்வத்ஸர, மாக சுத்த பஞ்சமி பானுவார" – ஸ்ரீசங்கர குருபரம்பரை – பக். 50, அடிக்குறிப்பு

அகிலாண்டேசுவரி அம்மனுக்குரிய தாடங்கங்களை (காதணிகளை)ப் பழுது பார்த்து அணிவிக்கும் தொண்டு செய்வதில் உரிமை பற்றிய வழக்கு ஒன்று திருச்சியில் நடந்தது.[51] அது ஏழாண்டுக்காலம் நடந்ததென்றும், காஞ்சி மடத்துப்பக்கம் தீர்ப்பு ஆயிற்று என்றும், "தாடங்க பிரதிஷ்டை" தொடர்பாக ரூ. 5000 செலவாயிற்று என்றும், பிரயாணம் படிச்செலவுகள் ரூ. 2000 ஆகியுள்ளதென்றும், பீடாதிபதிகள் திருநெல்வேலி மதுரை சேது யாத்திரை செய்ய விருப்பம் என்றும், மகாராஜா அவர்கள் உதவி செய்யவேண்டும் என்றும், கணபதி சாஸ்திரிகள் என்று ஒருவர் அரசருக்கு விண்ணப்பம் செய்து இருக்கிறார்.[52] சரியான பதில் வந்ததாகத் தெரியவில்லை. கி. பி. 1848க்குரிய ஆவணக் குறிப்புப் பின்வருவது :–[53]

"சங்கராசார்ய சுவாமிகள் ஜம்புகேசுவரத்தில் இருந்து திருவாதி வழியாகத் தஞ்சாவூர்க் கோட்டை வருவதற்குச் செலவு சக். ரூ 600; கம்பெனி ரூ. 932, பைசா 8 கொடுக்கப்பட்டது. ஷை சுவாமிகள் அரண்மனை சந்திர மௌளீசுவரர் கோவிலில் அவர் கொண்டுவந்த சந்திரமௌளீசுவரர் பூசை செய்வதற்குக் கனகாபிஷேகம் ........... திவான்சாகேப் அவர்கள் ஷைசுவாமிகள் கும்பகோணத்துக்குப் போகும்போது விடோபா சுவாமி பஜனசாலையிலிருந்து நாலு வீதியும் பட்டணப்பிரவேசம் செய்து கொண்டு விடப்பட்டது.[54]

—இதனால் அரசர் சங்கராசாரியாரை வருவித்து மரியாதை செய்தார் என்று தெரிகிறது.

இதற்குப் பிறகு சங்கராசார்ய சுவாமிகள் காஞ்சிபுரம் சென்னை முதலிய இடங்கட்குச் சென்றார் என்று ஓர் ஆவணம் கூறுகிறது.[55]

"ஸ்ரீஸ்வாமிகள் அம்மனுக்குத் தாடங்கத்தை அர்ப்பணம் செய்தார். அந்தச் சந்தோஷத்துக்கும் ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி அம்மனுக்குக் கும்பாபிஷேகமும் ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை செய்த கீர்த்திக்கும் ராஜஸ்ரீ மகாராஜா சாஹேபைத் தவிர வேறொருவரும் இல்லை"

---

51. 4–75
1844க்குரிய 95ஆவது எண்ணாகச் சதர் அமீன் வழக்கு மன்றத்தில் சிருங்கேரி மடத்தார் வழக்குத்தொடுத்தனர் ; வழக்குத் தள்ளுபடி செய்யப்பெற்றது ; பிறகு திருச்சி சிவில் வழக்கு மன்றத்தில் 1846க்குரிய 109ஆம் எண் ஆக மேல்முறையீடு செய்யப்பெற்றது : அதுவும் 12–1–1848இல் தள்ளுபடி செய்யப்பெற்றது. பிறகு ஸதர் அதலத் நீதி மன்றத்தில் 11–9–1848இல் 106/1848 ஆக முறையிட்டனர். அதிலும் சிருங்கேரி மடத்கார் தோற்றனர். மறு விசாரணைக்கு அதே நீதி மன்றத்தில் வாதாடினர் ; 30–10–1848இல் இந்த மறு விசாரணையும் ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை. காஞ்சி காமகோடி பீடத்தினருக்குத் தாடங்கம் அணிவிக்கும் உரிமை உறுதி செய்யப்பெற்றது – (காஞ்சி ஸ்ரீ பெரியவர்களின் ஸ்ரீ பராபரகுருஸ்வாமிகளின் விருத்தாந்தம் – பிருந்தாவனம் டிரஸ்டு – கும்பகோணம் – 1981. (பக். 19–28)

52. 4–265 முதல் 271 வரை

53. ச. ம. மோ. த. 6–18.

54. 4–886 காண்க.

55. 4–75

—என்ற இந்தக் குறிப்பினால்[56] காஞ்சி காமாக்ஷியம்மன் கும்பாபிஷேகம் முன்னரே நடந்ததாதல் தெரிகிறது.[57]

மேலே கண்ட ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் சித்தி அடைந்ததும் ஸ்ரீமகாதேவேந்திர சரஸ்வதி அவர்கட்குப்பட்டம் கட்டப்பட்டது.[58] அப்பொழுது ஸர்க்காரிலிருந்து பாதகாணிக்கை வைக்கப்பெற்றது.[59] அவர்கள் பட்டத்துக்கு வந்ததும் கார்த்திகை மாசம் 14ஆம் தேதி புதன்கிழமை ஊர்வலம் நடத்தப் பந்தோபஸ்து வேண்டுமென்று 24—11—1850இல் விண்ணப்பம் அனுப்பப்பெற்றது.[60]

**சிறிது குழப்பம்**

மேற்கண்ட மகாதேவேந்திர சரஸ்வதி அவர்கள் பட்டத்துக்கு வந்த காலத்தில் சிறிது குழப்பம் இருந்தமை பற்றியும், இவர்க்கு முன்னவர் தாம் சித்தி அடைவதற்கு முன் அரசரிடம் சில செய்திகளைக் கூறவேண்டும் என்று விரும்பினார் என்றும், காரியப்பேர் எழுவர் அரசருக்குச் சுவாமிகள் நலமாக இருக்கிறார் என்று மட்டும் எழுதினர் என்றும், அவர் பின்னர்ச் சித்தி எய்தினார் என்றும், நீத்தார் கடமை செய்யவும் மற்றுள்ள கடன்கள் தீர்க்கவும் கருப்பூர் வாங்கவும் சேமிப்பு முழுவதும் செலவிட்டனர் என்றும், மாயூரம் நாராயண செட்டியிடம் நகைகள் பாத்திரங்கள் முதலியவற்றை அடகு வைத்தனர் என்றும், ஒருவேளைச் சோற்றுக்கே வருந்திய மடத்து மேலாளர் 30ஆயிரம் ரூபா வரவு செலவு செய்கிறார் என்றும், மிக்க செல்வந்தர் ஆகிவிட்டார் என்றும், வைத்தீசுவரன்கோயில் உலகநாதத்தம்பிரானிடம் ரூ.700 கடன் பெற்று, அத்தொகைக்குக் குடைகள் சாமரங்கள் முதலாகிய எடுபிடி களைக் கொடுத்துவிட்டார் என்றும், அவற்றை விலைக்கு வாங்கத் தம்பிரானுக்கு உரிமையில்லை என்றும், தம்பிரானைத் தடுத்தபொழுது பழுதுபார்க்க எடுத்துச்செல்வதாகக் கூறினார் என்றும், மடத்து விஷயங்களை மேற்பார்வை செய்ய ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்றும், அதில் பஞ்சதிராவிடர் களில்[60அ] இருவர் இருக்கவேண்டும் என்றும், சிவாஜி மகாராஜாவுக்குச் சிலர் முறையிட்டுள்ளனர்.[61] முடிவு தெரியவில்லை.

---

56. 4-268
57. 22—1—1840இல் கும்பாபிஷேகம் நிறைவேறியது— காஞ்சி ஸ்ரீபெரியவர்களின் ஸ்ரீபராபரகுரு ஸ்வாமிகள் விருத்தாந்தம்-பிருந்தாவனம் டிரஸ்டு, கும்பகோணம், 1981- பக்கம் 18( Sri Kamakoti Pitha, P. 441)
58. 4-863; 1-163; ச. ம. மோ. த. 2-7; 59. ச. ம. மோ. த. 30-48
60. 4-115 முதல் 117 வரை
60அ. விந்தியத்துக்குத் தெற்கேயுள்ள திராவிடம் ஆந்திரம் கன்னடம் மகாராட்டிரம் கூர்ச்சரம் என்ற ஐந்தும் பஞ்சத்திராவிடம் எனப்பெறும் (Tamil Lexicon)
61. 4-74 முதல் 85 முடிய

பொது

சங்கராசாரியார் விஸ்வரூப யாத்திரை (தலயாத்திரை)யாகச் சென்றால் சென்றவிடமெல்லாம் அவர்க்கு மரியாதை செய்யப்பெறுவதுண்டு. ஆகவே 4—3—1830இல் திருவாரூர்க்குச் சென்றபொழுது செய்தி தெரிவித்து மரியாதையும் பெற்றார்.[62]

சங்கரமடத்தில் ஏட்டுச்சுவடிகள் வேண்டும் எனில் சரஸ்வதி மகாலில் கேட்டுப் பெறுவதுண்டு[63] என்றும் தெரிகிறது.

## அஹோபில மடம்

ஆழ்வார்திருநகரியில் தோன்றிய வண்சடகோபர் என்பவரால் ஆந்திர நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட மடமே அகோபிலமடம் எனப்பெறும். கும்ப கோணத்துக்கு அருகில் நரசிம்மபுரத்தில் அகோபில மடத்தின் கிளை ஒன்று இருந்தது. அங்கிருந்த அகோபில மடம் ஆசாரியாருக்கு மராட்டிய அரசர்கள் மரியாதை செலுத்தி வந்தனர்.

ஓர் ஆவணக்குறிப்பு[64] "அஹோபில ஆசாரியருக்குத் தக்ஷிணை சக்கரம் 2000; ரூ. 1000" என்றுள்ளது. இதன் காலம் நன்கு தெரியவில்லை.

கி. பி. 1801இலிருந்து இரண்டாம் சரபோஜி அவர் மகன் இரண்டாம் சிவாஜி இவ்விருவர் காலங்களில் அகோபில மடத்துத் தொடர்பு இருந்தமை நன்கு தெரியவருகிறது.

வியாஸ பூசைக்கு அகோபில மடத்துக்கு மராட்டிய அரசர் நன்கொடை தருவதுண்டு. அந்தப் பூசைக்குத் தருமசபை நியாயாதிபதி அப்பு ஆசாரி என்பவர் 1801இல் சென்றுவந்ததாக ஓர் ஆவணமும்,[65] அவரே 7 பேருடன் 1821இல் சென்றதாகப் பிறிதோர் ஆவணமும்[66] கூறுதல் காணலாம். இப்பணிக்கு ரூ. 100 கொடுத்தனர்போலும்.[67]

அகோபில ஜீயர் சுவாமிகள் தஞ்சைக்கு 1811இல் எழுந்தருளினார்கள். அப்பொழுது கனகாபிஷேகமும் பாதுகை பூசையும் அந்தணர் அன்னம்பாலிப்பும் நிகழ்ந்தன என்று ஓர் ஆவணக்குறிப்பு[68] உள்ளது. அப்பொழுது செலவு 228 சக்கரம்.

இங்ஙனமே 1829இலும் ஜீயர் அரண்மனைக்கு வந்தனர் ஆதல் வேண்டும். அப்பொழுது "இவர்களின் முன்னோர்களுக்குக் கொடுத்துவந்த வழக்கப்படி கொடுப்பது" என்ற குறிப்பால் 1811இல் செலவு செய்ததுபோல் சர்க்காரில் செலவு செய்யப்பெற்றது என்று அறியலாம். அந்த "சுவாமிகள்

---

62. 5-226 63. 1-808 64. 2-141
65. ச. ம, மோ. த. 2-82 66. ச, ம, மோ. த, 18-116 67. 4-285 68. 2-44

அரண்மனை வேணுகோபாலசுவாமி மகாலுக்கு வந்தார்; பூஜை, நைவேத்யம், சமாராதனை அங்கீகரித்துக்கொண்டார்." அவர் வெண்ணாற்றங்கரையில் தங்கியிருந்தார். அவர் அங்கிருந்து செல்கிற வரையில் ஆகிற செலவுகள் தரப்பெற்றன.[69]

கி. பி. 1849இலும் அகோபில ஜீயர் தஞ்சைக்கு வந்தார் என்றும், விடோபா பஜனசாலையில் இறங்கினார் என்றும் தெரியவருகிறது.[70]

அகோபில மடம் ஜீயர் மடத்துக்கு விருத்தர் பானாசாரியர் அதிபர் ஆனார் என்று கி. பி. 1843க்குரிய குறிப்புக் கூறுகிறது.[71]

கி. பி. 1820–21இல் இரண்டாம் சரபோஜி காசியாத்திரைக்குச் சென்றபொழுது கயையில் 4—5—1821இல் தங்கினார். அங்கு அகோபில மடம் ஜீயர் "மந்திராக்ஷதை கொடுத்தார்; அதனை அரசர் தலையில் அணிந்து கொண்டார்"[72] இங்ஙனம் ஒரு செய்தி உள்ளது. கயையில் அகோபில மடம் இருந்ததா என்பது தெரியவில்லை.

"1829: அஹோபிலம் ஜீயர் சுவாமிகள் மடத்திலிருந்து சர்க்காருக்கு ஸ்ரீமுகபத்திரம் வந்ததற்குப் பத்திரத்துக்குப் பூசைகள் செய்து தக்ஷிணை கொடுத்தது ரூ. 7½"[73]

"1842: அஹோபில மடத்து ஜீயர் ஸ்வாமிகள் ஸ்ரீமுகத்தின் பூசைச் செலவுகளுக்கு"[74]

"1843: அஹோபிலம் ஜீயர் மடத்துக்கு அதிஷ்டானம் விருத்தர் பானாசாரியர் அதிபதியானார். அவர் மகாராஜாவுக்கு ஸ்ரீமுகம் எழுதியனுப்பினதற்கு மரியாதை பல்லக்கில் வைத்து வாத்தியத்துடன் கொண்டுவரப் பட்டது[75] என்றும்,

"சகம் 1785: ஸ்ரீசங்கராசார்யசுவாமி அனுப்பிவைத்த ஸ்ரீமுகம் கொண்டு வருவதற்கும் படிப்பதற்கும் – ஸ்ரீமுகம் பூஜை – ஸ்ரீவசிஷ்டேசுவரசுவாமிகோயில் ¼ ரூ; ஹுஜூரில் ஸ்ரீமுகப்பூசைக்கு தக்ஷிணை 10"

என்றும்[76] சில குறிப்புக்கள் உண்டு. இவற்றால் அஹோபில மடம் சங்கரமடம் ஆகிய பிராமண மடங்களினின்று வரும் கடிதங்களுக்குப் பூசை செய்து மரியாதையோடு கொணர்ந்து வாசிப்பது அந்நாளில் பழக்கம் என்று தெரிகிறது.

---

69. ச. ம. மோ. த. 4-14
70. ச. ம. மோ. த. 5-10
71. ச. ம. மோ. த. 9-27
72. 5-95.
73. ச. ம. மோ. த. 4-14
74. 4-80
75. ச. ம. மோ. த. 9-27
76. 11-62

## கும்பகோணம் பெரியமடம்

இது கும்பகோணத்தில் உள்ளது; மிகப்பழமையான மடங்களுள் ஒன்று,[77] 16—1—1846இல் கும்பகோணம் பெரியமடம் விசாரணை சுப்பையன் என்பார் ஸர்க்காரில் ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்.

அந்நாளில் கும்பகோணம் பெரிய மடத்து அதிபர் சாரங்க தேவர் எனப்படுவார். இவர் சர்க்காருக்குத் தெரிவித்து "வஸ்திரமும்" பெற்றுக் கொண்டு பட்டம் ஏற்றார்; பின்னர் மேலே கண்ட சுப்பையன் என்பவருக்குச் "சர்வாதிகாரம்" கொடுத்து அச் செய்தியைச் "சப்கலெக்டர்" அவர்கட்கும், அடியார் கூட்டத்துக்கும் தெரிவித்துத் தலயாத்திரை சென்றார். அவ்வமயம் முத்தண்ணா என்பவர் வேறு ஒருவரை 'இளவரசு' என்று புரட்டுச் செய்தார். அது சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டது. "ஸர்க்கேல்" அவர்கள் 'அவர் இளவரசு அல்ல" என்று தீர்ப்புக்கூறிச் சுப்பையனுக்கு அளிக்கப்பெற்ற "சர்வாதிகாரத்தை" உறுதி செய்தார். இது 1844இல் நடந்தது.[78]

– இதுபற்றிய ஆணையின் படியை விரும்பிச் சுப்பையன் விண்ணப்பம் அனுப்பினார். பெரிய மடத்தைப்பற்றி வேறு செய்திகள் கிடைக்கவில்லை.

## பிற இடங்களில் மடங்கள்

கி. பி. 1776க்குரிய அரசாங்க உத்தரவில் **திருவண்ணாமலையில்** "ஸர்க்காருடைய மடம்" இருப்பதாகவும் அதற்கு அரசர் (அமர்சிங்கு) ஸபாபதி மூர்த்தியைக் கொடுத்தார் என்றும் பூசை நிவேதனத்துக்காகப் பண்டாரம் வசம் 20 சக்கரம் அளிக்கப்பெற்றதாகவும் கண்டிருக்கிறது.[79]

**மன்னார்குடியில் மேரு சுவாமியார் மடம்** என்றொரு மடம் இருந்ததாகவும்[80] அதற்கு 1842இல் ஸ்ரீராமநவமிக்கு ரூ. 306–4–0 அளித்ததாகவும்[81] அறியவருகிறது.

**தஞ்சாவூரில் கீழ அலங்கத்தில்** சிவபூசைமடம் என்றொரு மடம் துளஜா மகாராஜா அவர்கள் காலத்தில் அருணகிரி விருபாக்ஷ தேவர் என்பவருடைய தகப்பனாருக்கு அளிக்கப்பெற்றது. இம்மடம் பற்றி ஒரு வழக்கு

---

77. சிவப்பிரகாசர் தம்பி வேலையர் எழுதிய வீரசிங்காதனபுராணத்தில் இம்மடத்தைப் பற்றிய செய்தியுள்ளது என்பர், புலவர் திரு. அடிகளாசிரியர் அவர்கள். தக்கயாகப் பரணி வாழ்த்துப்பகுதியில் இம்மடம் குறிக்கப்பெறுகிறது. 78. 6–168, 169.

79. 8–168 ; 7–590 80. 3–170; சிவாஜியின் ஞானாசிரியர், சமர்த்த ராமதாஸ் சுவாமிகள் தஞ்சைக்கு வந்து திரும்பியபொழுது பீமராஜ், ராகவர், ஆனந்த மௌனி என்ற மூவரைத் தஞ்சையில் விட்டுச் சென்றார். ஆனந்தமௌனியின் மாணாக்கர் மேரு சுவாமி. இவர் மன்னார்குடியில் அமைத்தது மேரு சுவாமி மடம்.

81. 1–162

நடந்திருக்கிறது.[82] கி. பி. 1843இல் அருணகிரி விருபாக்ஷி தேவர் என்பவர், மல்லிகார்ச்சுன விருபாக்ஷி தேவர் என்கிற அப்பு விருபாக்ஷி தேவர், சுப்பிரமணியன் ஆகியவர்கள் பேரில் வழக்குத் தொடுத்தார். அப்பு விருபாக்ஷி தேவர் சிவபூசை மடத்துச் சொத்துக்களைச் சுப்பிரமணியன் என்பாருக்கு ஒற்றி வைத்தார். 19—1—1843இல் ஒற்றி வைத்தது தவறு என்றும், அந்நிலங்களை அருணகிரிக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றும் 'முத்திரித சபையில்' தீர்மானித்தார்கள். 'தர்ம சபையில்' அவர்கள் எதிர்வழக்காடிய போதிலும் 24—6—1843இல் மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பெற்று இத்தீர்ப்புக்கு மேல் முறையீடு கெடுவும் முடிந்தது. 2—12—1843, 14—1—1844 ஆகிய தேதிகளில் மடத்தை ஒழித்துக்கொடுக்கும்படி மனுக்கொடுத்த போதிலும் பிரதிவாதிகள் சரியாக நடந்து கொள்ளவில்லை. இரண்டாவது பிரதிவாதி 'இசுபசால்' எனும் வழக்கு மன்றத்தில் மேல்முறையீடு செய்தார். 26—2—1845இல் மங்குமாரி துரையிடத்தில் முறையிட்டதும் "இசுபசால்" பிராது தள்ளுபடி செய்யப்பெற்றது. மடத்தைச் சுவாதீனம் செய்து கொடுக்கக் கொத்தவால் வந்தபோது மடம் பூட்டப்பட்டிருந்தது. கொல்லனைக்கொண்டு பூட்டுத் திறந்து வசப்படுத்திக்கொண்டபிறகும் முதல் பிரதிவாதி மீண்டும் மடத்தை ஒற்றி வைத்துவிட்டான். ஆகையால் இதுகாறும் கொடுக்கப்பெற்ற தீர்ப்புக்களின்படி மடத்தை வாதியின் சுவாதீனத்தில் சேர்க்கவேண்டும் என்று 26—11—1848இல் ரெஸிடெண்ட் பிஷப் அவர்கட்குப் "பிராது" கொடுத்தார். இவ்வழக்குத் தவிர்த்து வேறு செய்திகள் இம்மடத்தைப்பற்றித் தெரியவில்லை.

**தஞ்சாவூரில் கோசாமி மடம்**

கி. பி. 1824இல் கும்பகோணத்தில் வெங்கோபா கோசாமி என்று ஒருவர் இருந்தார். அவருடைய பாட்டனார் பாளாஜி கோசாமி* என்பவர் ஆவர்; அவர் பெயரால் தஞ்சையில் மடம் இருந்தது. அதற்கு மாதத்திற்கு ரூ. 7½ வீதம் கொடுக்கப்பட்டு வந்தது. அவ்வுதவித்தொகை சிறிதுகாலம் கொடுக்கப்படாமல் இருந்தது. அதனைக் கொடுக்கவேண்டும் என்று விண்ணப்பித்ததாக ஒரு ஆவணத்தில் உள்ளது.[83]

---

82. 6-114 முதல் 129 வரை

83. 5-1, 2; கி. பி. 1680இல் சிவாஜியின் ஞானாசிரியாகச் சமர்த்த ராமதாஸ் தஞ்சைக்கு வந்தார். தன்னுடைய சீடராகிய ஸ்ரீபீமராஜ் சுவாமிகளைத் தஞ்சையில் இருக்கச் செய்தார். இவர் 1741வரையில் இருந்தார். இவரது சீடர்கள் ஜோஸிராம் பாவா, **கோவிந்தபாளா*** ஆத்மாராம் என்று மூவர். இம்மூவரும் தனித்தனி மடங்களை நிறுவினர். கோவிந்தபாளா நிறுவிய மடம் சகாஜிநாயக்கன் தெருவிலுள்ளது. (இதிலும் அடிக்குறிப்பு 80லும் கண்ட செய்திகளைச் சரஸ்வதிமகால் மராட்டியப் புலவர் திரு. பீமராவ் அளித்தார்)
There are four other Ramasami Mutts in Tanjore. The names are Beema Row Swamiar's Mutt otherwise Ruthraji Bava. Then Anna Goswami's Mutt, Goliram Bava's Mutt, Govinda Balu Swami Mutt and Sethu

**உத்திராதி மடம்** என்றொரு மடம் குறிக்கப்பெறுகிறது. இம்மடத்திலிருந்து "ஸ்ரீமுகம் வந்ததற்குத் தக்ஷிணை 12½" என்றதால் இது அரசரால் மதிக்கப்பெற்ற பெருமை உடைய மடமாதல் கூடும்.[84]

**வியாஸராய மடம்** என்றொரு மடம்—இது எவ்வூரில் இருந்தது என்று தெரியவில்லை. அந்த மடத்தின் தலைவர் "ஸ்ரீவித்யா பூர்ண தீர்த்த ஸ்ரீபாதாசார்ய சுவாமி" என்பவர் ஆவர். அவர் "விஜய விலாஸத்தில்" அரசருக்கு எதிரில் சகம் 1787இல் ஜில்ஹேஜ் தேதி 3இல் பூஜையைநடத்தினார். அன்று தாஸ்தான் மஹால் தோட்டத்தில் அந்தணர்களுக்கு உணவு இடப்பெற்றது.

## தம்பிரான்கள்

திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய இரண்டு பெரிய சைவ மடங்களின் நேர் பார்வையில் தஞ்சை மாவட்டத்தில் பலதிருக்கோயில்கள் உள்ளன. பெரும்பாலும் ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு கட்டளைத் தம்பிரான் இருப்பர். அத்தம்பிரான்கள் மேலிடத்து (தருமபுரம், திருவாவடுதுறை ஆகிய மடங்களின் தலைவர்களுடைய) உத்தரவுகட்கு இணங்கவே கோயில் காரியங்களைக் கவனித்து வருபவர்கள் ஆவர். 18, 19ஆம் நூற்றாண்டுகளிலும் அந்நிலை இருந்திருத்தல் வேண்டும்.

**திருபுவனத்தில்** உள்ள திருக்கோவில் கம்பஹரேசுவார் கோயில் எனப் பெறும். கி. பி. 1813இல் திருபுவனத்தில் ஒரு தம்பிரான் இருந்தார். அவர் அரசரைக் காணச் சென்றனராதல் வேண்டும். திருபுவனத் தம்பிரானிடம் உள்ள ஆடை ஒன்றை "ஜாம்தர்கானாவில் வைக்கிறது" என்பது ஆவணக் குறிப்பு.[86] இந்நாளில் இக்கோயில் தருமபுரம் ஆதீனத்துக்குரியதாக உள்ளது.

**வைத்தீசுவரன் கோயில்** என்பது புள்ளிருக்குவேளூர் என்ற பெயரால் திருமுறைகளில் குறிக்கப்பெறும் ஒரு சிவத்தலமாகும். அக்கோயிலில் இருந்த தம்பிரான் கி. பி. 1813இல் அரசரைப் "பிரசாதத்"துடன் காணவந்தார்.[87] அவ்வமயம் அவர் ஒரு உருத்திராக்கமாலையும், பவழ மோதிரமும் கொணர்ந்து அளித்தார். அவை கணக்கில் வரவு வைக்கப்பெற்றன.[88]

கும்பகோணத்தில் சங்கரமடத்தில் (64) சுதர்சன மகாதேவேந்திர சரஸ்வதி அவர்கள் பட்டத்துக்கு வந்த காலத்தில் சிவராம சாஸ்திரி என்ற மடத்து மேலாளர், மடத்துப் பொருள்களையெல்லாம் அபகரித்துக் கொண்டார்.

---

Bavaswami Mutt. All five are the disciples of Ramadoss. (P. 349 last line & 350 l. 3—6; Deposition of D. w. 39 In the Subordinate Judge's Court, Tanjore. The 13th Day of October 1916, O. S. No. 26 of 1912 by Sivaji Raja Saheb.)

84. 2-86
85. 11-75, 77
86. 1-827
87. 1-827
88. 1-829

முன்னவர் சேமித்து வைத்திருந்த பணத்தைப் பல காரியங்களில் செலவு செய்தமையோடு, குடைகள், சாமரங்கள் முதலியவற்றையெல்லாம் வைத்தீஸ் வரசுவாமி அபிஷேகக்கட்டளைக்குரிய **உலகநாதத்தம்பிரான்** என்பவருக்கு விற்றுவிட்டார். அவரை "ஏன் எடுத்துக் செல்கிறீர்கள் ?" என்று கேட்ட பொழுது பழுதுபார்க்க எடுத்துச் செல்வதாகக் கூறினார். வள்ளலார் கோயிலுக்கு அவற்றை எடுத்துச் செல்லுங்கால் மாயூரத்தில் அவர் தடுக்கப் பட்டு, எல்லாப் பொருள்களையும் இழந்தார்.[89]

**திருவிடைமருதூர்** மகாலிங்கசுவாமி திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் மேற்பார்வையில் இருப்பது ஆகும். கி. பி. 1813இல் திருவிடை மருதூர்த் தம்பிரான் அரசரைக் காணவந்தார். அரசருக்குச் 'சாதரா' ஒன்றைக் (காணிக்கையாக) அளித்தார் என்று ஒரு ஆவணம் கூறுகிறது.[90]

மாணிக்கவாசகப்பெருமானுக்குக் குருந்தமரத்தின் கீழ் இறைவன் எழுந்தருளி அருள்பாலித்த தலம் **திருப்பெருந்துறை** ஆகும். அத்தலம் இந்நாளில் ஆவுடையார் கோவில் என வழங்கப்பெறும். இவ்வூரிலுள்ள கோயில் திருவாவடுதுறை ஆதீனத்துப் பரிபாலனத்தில் இந்நாளில் உள்ளது. கி. பி. 1811இல் இக்கோயில் "விசாரணை" ஒரு தம்பிரானிடத்தில் இருந்தது. அவர் திருவாவடுதுறை ஆதீனத்துத் தம்பிரான் ஆக இருத்தல்கூடும் என்று கருதலாம். அத்தம்பிரான் திருப்பண்ணவாசல் ( திருப்புனவாசல் ) கோயில் மேற்பார்வையாளர் ஆக இருந்துள்ளார்.

அத்திருப்புனவாசல் கோயில் குருக்கள், கணக்குப்பிள்ளை ஆகியோர் கோயில் சுரோத்திரிய நிலத்தை விற்றனர்; கண்டுமுதல் ஆன நெல்வகையறா கொண்டு சென்றனர்; கோயில் பூசை முதலியன சரிவர நடத்தவில்லை. இதனைத் தம்பிரான் அவர்கள் கலெக்டர் காட்டன் அவர்களிடம் தெரிவித் தார். கோவில் காரியங்களைச் சரிவரக்கவனித்தல்; சுரோத்திரியம் வகையறா வருமானத்தைச் சரிவர வசூலித்துக் கம்பெனிக்குச் சேரவேண்டியவற்றைச் சரிவர வசூலித்துக் கம்பெனிக்குக் செலுத்துதல்—ஆகிய திருப்புவனவாசல் கோவில் வேலைகளை ஆவுடையார்கோயில் தம்பிரான் சரிவரச்செய்து வந்தமையால் அக்கோயில் மேற்பார்வையை அத்தம்பிரானே செய்ய வேண்டியது. என்று மன்னார்குடி தாசில்தார் "சன்னது" கொடுத்தார்.[91] இதனால் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருப்புனவாசல் கோயில் மேற்பார்வை ஆவுடையார்கோயில் தம்பிரான் இடம் இருந்தது என அறியப் பெறும்.

---

89. அடிக்குறிப்பு 61 ; 4-74 முதல் 85 முடிய 90. 1-337 91. ச. ம. மோ. 80-5

# 32

# தமிழ்க்கு அளித்த ஆதரவு

மராட்டிய மன்னர் ஆட்சி செய்த சோழவளநாட்டில் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் பலர் ஆவர். அவர்கள் யாவரும் இம் மன்னர்களுடைய நேரிடை ஆதரவு பெற்றனர் என்பதற்குச் சான்றில்லை. எனினும், இவர்தம் நேரிடை ஆதரவில் எழுந்த நூல்கள் பல என்பதில் ஐயமில்லை. மராட்டிய மன்னரும் தமிழ்ப் புலமையெய்தி நூலாசிரியராகவும் திகழ்ந்தனர் என்று தோன்றுகிறது.

## ஸாஹஜி மன்னர் எழுதியது

ஸாஹஜி என்பவர் "காவேரி கல்யாண நாடகம்" என்ற ஒரு நாடக நூலைத் தமிழில் எழுதியவராக அறியவருகிறது.

"திரா. பா. காவேரி கல்யாண நாடகம் — ஸாஹராஜ க்ருதம்–தைலங்க– பக்கம் 40 விவாஹ"

—என்ற குறிப்பால்[1] 1684 முதல் 1710 வரை ஆண்டவரும், ஏகோஜியின் முதல் மகனாரும் ஆகிய ஸாஹஜி என்பவர் "காவேரி கல்யாணம்" என்ற நாடக நூலைத் (திராவிட பாஷையில்) தமிழில் இயற்றினார் என்றும், அது தெலுங்கு மொழிக்குரிய எழுத்தில் எழுதப்பட்ட ஓலைச்சுவடியென்றும் தெரிய வருகிறது.

"காவேரி கல்யாணம் அரவி பாஷை" என்றகுறிப்பு[1அ] இது தமிழ் மொழியில் எழுதப்பட்டது என்பதை வலியுறுத்தும்.

---

1. 12-198 (எண் 2429)

1அ. 12-217 (வரி 27)

இந்நூல் " ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள் " என்ற தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீட்டில் ஐந்தாவதாக அச்சிடப்பட்டுள்ளது.

" சூத்திரதாரன் வசனம் " என்ற பகுதியில்[2] " இந்தப்படிக்குச் சகசிராசப் பிரணீதமான காவேரி கல்யாணம் என்கிற நாடகத்திலே" என்ற பகுதியால் ஸாஹஜி இதன் ஆசிரியர் என்று கொள்ளக்கிடக்கிறது.

இந்த நூலில் பின்வருபவற்றுள் ஸாஹஜி பற்றிய குறிப்புக்கள் உள்ளன:

புகழ் பஞ்சநதி வாசா போசல குல ஈசா
சகசிராசா இரவும்பகலும் தான்பணியும் சர்வேசா ( பக்கம் 234 );

தரு கமலைமா தருளாலே புவியை – ஆளும் சகசி
இராச தேவேந்திரன் மேலே
கருணைசெய்வது போலே
கல்யாணம் செய்யும் இனிமேலே ( 236 );

போசல குல சகசேந்திரன்பணி – பஞ்சநதேசுவரா
சகசி மகா ராசனால் சோழ மண்டலத்தில்
தினமும் இந்தப் புவி விளையச் செய்து
ஸ்திரமாக எப்போதும் வாழ்ந்திரு நீ ( 241 – 242 );

தண்டமிழார் சகசேந்திரன் தானாக வளரும் சோழ
மண்டலத்தை வளர்க்கும் தேவிக்கு மங்களம் ( 242 ).

ஸாஹஜியைப்பற்றிய மேற்கண்ட குறிப்புக்களை நோக்கின் பிறர் ஒருவர் எழுதி ஸாஹஜி பெயரால் வெளியிட்டனரோ என்று கொள்ளத் தோன்றுகிறது. இவர் பன்மொழிப்புலவராகத் திகழ்ந்தமையின் இவர் இந்நூலை இயற்றினார் என்று கோடலும் பொருந்தும். இது கி. பி. 1704இல் எழுதப்பெற்றது.[3]

இந்நூல் பக்கம் 225இல்,

" திருசிற்றம் பலமோடு தேவாரம் சொரிந்தேன் "

என்றவிடத்துத் " தேவாரம் " குறிக்கப்பெறுகிறது.[4]

பக்கம் 23இல் தருவு 1இல் திருமால் வழிபாடு செய்கையில் ஒரு பூக்குறையத் தன் விழியை யிடந்து சாத்தியமையும், தருவு 2 இல் மார்க்கண் டேயன் பொருட்டு இயமனைச் சிவபெருமான் காலால் உதைத்தமையும், 3இல் பரவையாரைக் கூடிய சுந்தரர் பாடலுக்கு இறைவன் மகிழ்வதையும், 5இல்

2. பக்கம் 206, ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள்
3. தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக்கருத்தரங்கு – தஞ்சை மராட்டிய மன்னர் காலத்திய தமிழ் இலக்கிய வளம் – புலவர் சொக்கலிங்கம்
4. இந்நாளிலும் " தேவாரம் " என்றால் என்ன ? என்று கேட்பவர் பலருளா

சோமாசிமாறர் செய்த வேள்வியில் இறைவன் எழுந்தருளியமையும், 6இல் திருச்செங்காட்டங்குடியில் இறைவன் சிறுத்தொண்டர் இட்ட கறியமுதுண்டமையும், 7இல் மனுநீதிச்சோழன் மகனை முறைசெய்தமையும், 9இல் சுந்தரர் முதலையுண்ட பாலனை யழைத்தமையும் கூறப்பெற்றுள்ளன.

கவேர மன்னன் மகள் காவேரி. கவேர மன்னன் தன் மகட்குத் தக்க கணவனைத் தேடிவரத் தன் அமைச்சர்களை ஏவினான். கடலரசன் தனக்குப் பெண் தேட அகத்தியரை வேண்டினான். இருவரும் வழியில் எதிர்ப்பட்டனர்; மணம் பேசினர். திருவையாறு ஐயாறப்பர் திருமுன் திருமணம் நடந்தேறியது — இதுவே இந்நூலின் கற்பனைக் கதையாகும்.

## ஸாஹஜி மன்னரைச் சிறப்பித்து எழுதிய நூல்கள்

### 1. விஷ்ணு ஸாஹ ராஜ விலாஸம்

" திரா. ஸாஹஜி ராஜ விலாஸம் கர்த்தா — ஸாஹஜி ராஜ சரித்திரம் பக்கம் 56, வரி 6 வீதம் "

என்றொரு குறிப்புள்ளது.[5] இது விஷ்ணு ஸாஹராஜ விலாஸம் என்ற பெயரில் ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்களுள் ஒன்றாக அச்சிடப் பெற்றுள்ளது.

திருமால் திருவீழிமிழலையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானை ஆயிரம் மலர்கொண்டருச்சனை செய்ய, ஒருநாள் ஒரு மலர் குறையத் தனது விழியையே மலராக அருச்சனை செய்தார். இறைவன் மகிழ்ந்து " திருமாலே ! தஞ்சையில், போசலகுலத்தில் சகசி மன்னனாகப் பிறந்து தலங்கள் தோறும் வழிபட்டு வாழ்வாயாக " என்று வரமருளினார். திருமகளும் மண்மகளும் கலிங்கராசன் மகள்களாகப் பிறந்து சகசி மன்னனை மணந்தனர்.

— இதுவே இந்நூலிற் கண்ட கதைச்சுருக்கம்.

இந்நூலை எழுதியவர் பெயர் தெரியவில்லை.

இந்நூல் பக்கம் 173–174இல், ஆரூர், திருவையாறு, குத்தாலம், திருவிடைமருதூர், நீடூர், திருப்புகலூர், திருநீலக்குடி, குடந்தை, திருமங்கலக்குடி, திருமாந்துறை, திருப்பனந்தாள், திருக்கடவூர், மாயூரம், திருப்பாம்புரம், திருமறைக்காடு, வேளூர், திருத்துறைப்பூண்டி, திருவெண்காடு, திருநறையூர், திருவாலம்பொழில், வழுதூர், திருஅம்பர் மாகாளம், திருச்செங்காடு, திருமருகல், திருக்கொறுக்கை, திருநாகைக்காரோணம், திருக்குவளை ஆகிய தலங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

5. 12–288 ( என் 2872 ) ; 12–216 வரி 14 விஷ்ணு ஸாஹராஜ விலாஸம் அரவி பாஷை 3

'வாசி தீரவே' என்ற திருவீழிமிழலைத் தேவாரம் முதற்பாசுரம் பக்கம் 180இல் திரிகாலஞானியின் தருவில் பயின்றுள்ளது.

பிள்ளைக்கறியுண்டமை, பரவைக்குத் தூது சென்றமை ஆகிய பெரிய புராணச் செய்திகள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

ஒரு 'தருவு' முழுவதும் தெலுங்கு மொழியிலேயே உள்ளது (பக்கம் 185–186)

ஸாஹஜி ஏகோஜியின் புதல்வன் என்பது "ஏகராசன் செல்வன்" (பக்கம் 189), "ஏகராசன் அளித்த வீர சகசிராசனே" (பக்கம் 195) என்ற விடங்களில் காணலாம்.

## 2. குறவஞ்சி

"திரா. பா. கோரவஞ்சி நாடகம் – முத்துகவிராய க்ருதம் – தைலங்க பக்கம் 72"

என்ற குறிப்பினால்[6] முத்துக் கவிராயர் என்பார் ஒரு குறவஞ்சி நூலைத் தமிழிற் பாடினார் என்றும், அது தெலுங்கு மொழிக்குரிய எழுத்தில் உள்ளதென்றும் தெரியவரும். இக்குறவஞ்சி நூல் "ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்களில்" ஒன்றாக வெளியிடப்பெற்றுள்ளது.

"பொங்கமாய்ச் சகசி பூபதி மீதில்
அங்கித மாக அருந்தமிழ் தன்னால்
கருதிய முத்துக் கவியுரைத் தானே"

என்ற வரிகள் பாட்டுடைத் தலைவனையும், பாடியோரையும் குறிப்பிடுவனவாம்.[7]

இராசகன்னிகையென்பாள், "தேசமெல்லாம் பணியும் ஏகராசன் மகிழ் தீபாம்பிகை யளித்த பாலன் – சகசிராசன்"[8] மீது காதல் கொண்டு அன்னம், கிளி, வண்டு, குயில் ஆகியவற்றைத் தூது அனுப்பிக் குறத்தியைக் குறி கேட்டு அறிந்து ஸாஹஜி மகாராசனை மணந்த செய்தி கூறுவதாக அமைந்தது இந்நூல்.

புலவர்கள் "நயமுத்தமிழ் நாவாணர்" என்று குறிக்கப்பெற்றுள்ளனர் (பக். 97)

## 3 சந்திரகாகாசை விலாச நாடகம்

"திரா. பா. சந்திரிகாஹாஸவிலாசம்–நாடகம்–தைலங்க–கர்த்தா–பக்கம் 78" என்றொரு குறிப்பு உள்ளது.

---

6. 12-290 (எண் 2891)
7. ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள் பக்கம் 87.
8. ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள் பக்கம் 125.

இது[9] தமிழ் மொழியில், தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்றுள்ளது; ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்களுள் ஒன்றாக அச்சிடப்பெற்றுள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

மாளவநாட்டு மன்னன் மகள் சந்திரிகாஹாஸை என்பவள் தன் தோழி சுகவாணி என்பவளுடன் திருவாரூருக்கு வந்து வன்மீகரை வழிபடுகிறாள். அப்பொழுது ஒரு சித்தர் வருகிறார்; பலதேச மன்னர்களைப் பற்றிக்கூறுகையில் ஸாஹஜி மன்னரின் பெருமைகளைக் கூறுகிறார். சந்திரிகாஹாஸை ஸாஹஜி மன்னரை மணக்க விரும்புகிறாள். அவர்களுடைய பெற்றோர்களும் வருகின்றனர். அச்சித்தரே மணம் முடித்துவைக்கிறார்—இதுவே இந்நாடகத்தில் உள்ள கதையின் சுருக்கமாகும்.

இந்நூலில் ஸாஹஜி, "சத்தியத்தில் அரிச்சந்திரன்; தானத்தில் இராதேயன் (கர்ணன்), நித்தியத்தில் மார்க்கண்டேயன்; நிதியில் குபேரன்; புத்தியில் பிரகஸ்பதி; புசபலத்தில் பீமன்; வித்தையில் ஆதிசேடன்; வில்லில் விசயன்" என்று பலபடப் பாராட்டப்பெற்றுள்ளார் (பக்கம் 58–59)

இந்நூலிலும் ஸாஹஜி "தீபாம்பிகை குமாரன்" என்று கூறப்பெற்றுள்ளார் (பக்கம் 71)

## 4. பூலோக தேவேந்திர விலாசம்

"பனை ஓலை புத்தகங்களின் ஜாபிதா—சரஸ்வதி மகால்—சுஹர்ஸன் 1264—சாலிவாகன சகே 1785 ருத்ரோத்காரி நாம சம்வத்சரம்-மஹாலில் மஜ்கூரில் ஆஜர் உள்ளபடி" என்ற குறிப்பால்[10] சகம் 1785 அதாவது 1863இல் நூல் பட்டியல் தயாரிக்கப்பட்டமை தெரிய வருகிறது. அப்பட்டியலில், "பனை ஓலைப் புத்தகங்களின் ஜாபிதா பிராக்ருத நாடகங்கள்" என்ற தலைப்பில்[11] பல ஓலைச்சுவடிகளின் பெயர் தரப்பெற்றுள்ளன. அவற்றுள் "பூலோக தேவேந்திர விலாஸம்" என்பது ஒரு நூல்.[12]

இந்நூல் ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்களுள் முதலாவதாக அச்சிடப்பெற்றுள்ளது. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலிலும் ஸாஹஜி "ஏகேந்திரன் தரு சுதன்; தீபாம்பிகை தனயன்" என்று பேசப்படுகிறார். (பக்கம் 29; 40)

ஸாஹஜியைப் பூலோக தேவேந்திரன் என்று கூறியதால் இந்நூலுக்குப் பூலோக தேவேந்திர விலாஸம் என்று பெயர் வந்தது. தேவேந்திரனோடு ஸாஹஜியை ஒப்பிட்டுத் தேவேந்திரன் முனிபத்தினியை அணைந்த குறையுடையனாயினமையின், ஸாஹஜியே மேலானவன் என்று இந்நூல் பக்கம் 14இல் கூறப்பெற்றுள்ளது.

---

9. 12-292 (எண் 2417); 12-217
10. 12-169
11. 12-214
12. 12-26 (வரி, 15)

### தீபாம்பிகை பற்றிய குறிப்பு

ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்களிலேயும் "ஏகோஜியின் மகன் தீபாம்பிகை சுதன்" என்று ஸாஹஜி குறிக்கப்பட்டுள்ளமை காணலாம். ஏகோஜிக்குத் தீபாபாய், அண்ணுபாய் என்று இரு மனைவியர் இருந்தனர்.[13] தீபாபாய் இங்களே வமிசத்தைச் சேர்ந்தவர். இவர் மிகுந்த செல்வாக்குடையவர்; சிவாஜிக்கும் அவர் தம்பி ஏகோஜிக்கும் மனவேறுபாடு வந்த சமயத்தில், சிவாஜியின் கருத்தறிந்து அதற்கேற்ப ஏகோஜியை நடக்குமாறு செய்தார்; ஆகலின் சிறந்த அரசியல் சூழ்ச்சியுடையவர் எனத் தெரிகிறது.[14]

### பொது

அகனைத்திணைக்குரியனவாக இவற்றைக் கொள்வதற்கில்லை.

இந்நூல்கள் யாவும் சிற்றின்பம் பற்றியனவாக வுள்ளன. எளியமக்கள் விளங்கிக்கொள்ளும் முறையில் எளிய நடையுடன் கூடிய இசைப்பாடல்கள் கொண்டுள்ளமையின் இவை நடித்தற்கு எளிமையாக இருந்திருத்தல் வேண்டும்; மக்களும் விரும்பிப் பார்த்துக் கேட்டு மகிழ்ந்தனர் ஆதல் கூடும்.

எல்லா நூல்களின் முகப்பிலும், "**ஜயபார்வதீ ரமண**" என்று தொடங்கும் "**தோடய மங்களமும்**" "மகனீய தியாகேசுனிகி மங்களம்" என்று தெலுங்கு மொழி மங்களமும் காணப்பெறுகின்றன. ஸாஹஜியின் பேரில் குறவஞ்சி பாடிய முத்துக்கவிராயரும், இத்தோடய மங்களத்தைத் தம் நூலுள் சேர்த்துள்ளார். இத்தோடயமங்களம் "ஸாஹஜி மன்னரின் கிராத விலாஸம்" என்னும் சமஸ்கிருத நாடகத்தில் காணப்படுவது என்றும், இதனை முத்துக் கவிராயரும் பயன்படுத்தினார் என்றும் டாக்டர் வே. பிரேமலதா அவர்கள் கூறியுள்ளார்.[15]

தோடயம் என்பது நாடகத்தின் தொடக்கத்தில் வருவது. ஸாஹஜி, துளஜா இவர்கள் இயற்றிய யக்ஷகானங்களில் வாழ்த்துரைப் பாடலான நாந்தி "தோடயம்" அல்லது "ஜய" என்று கூறப்படுகிறது...... மராத்தியர் இயற்றிய யக்ஷகானங்களில் தோடயம் மங்களம் என்ற இரு பாடல்களும் தொடக்கத்தில் காணப்படுகின்றன.[16]

## தியாகேசர் குறவஞ்சி

"தியாகராஜகொரவஞ்சி பக்கம் 66 அபூர்த்தி ஜீர்ணம்"[17]

---

13. போன்ஸ்லே வமிச சரித்திரம், பக்கம் 79.
14. P. 240, New History of the Mahrathas–G. S. Serdesai (1946)
15. பக்கம் 88, முன்னுரை – தியகேசர் குறவஞ்சி, தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு (1970)
16. பக்கம் 19, தமிழ் முன்னுரை, சிவகாமசுந்தரி பரிணய நாடகம், பதிப்பாசிரியர் டாக்டர் எஸ். சீதா (1971), சரஸ்வதிமகால் வெளியீடு
17. 12–29 (எண் 2441)

என்ற குறிப்பால் தியாகேசர் குறவஞ்சி என்ற நூல் பற்றி அறியப்பெறும்.

இதுவும் ஸாஹஜி காலத்தில் எழுதப்பெற்ற குறவஞ்சி நூலாகும். இந்நூல் பாடல் 3இல்,

" தங்கமா மகுடம் சூடும் சகசி ராசேந்த்ரன் " என்றும்,

பாடல் 15, சரணம் 3இல்,

" ராஜராஜர் பணியேகராஜ னுதவு சகஜி " என்றும்,

25ஆம் பாடலில்,

" சிலைமதவேள் சகஜிராஜன் தினம் பணியும் வாசலிது " என்றும்,

பாடல் 31, சரணம் 4இல்,

" மண்டலாதிபதி சகஜி ராஜேந்திரன் வாழும் சோழ தேசம் " என்றும் பாடியுள்ளமையின் இந்நூலாசிரியர் ஸாஹஜி காலத்தவர் என்பது உறுதி எய்தும். இந்நூல் முத்துக்கவிராயரால் இயற்றப்பட்டிருக்கலாமோ என்று டாக்டர் வே. பிரேமலதா அவர்கள் கருதுவர்.[18]

இக்குறவஞ்சி திருவாரூரில் தியாகேசப்பெருமான் திருக்கோயிலில் தேவாசிரிய மண்டபத்தில் பங்குனி உத்தரப்பெருவிழாவில் நடிக்கப்பெற்றதாகக் கூறப்படுகிறது.[19]

இக்குறவஞ்சிக்கும் பிற குறவஞ்சிகளுக்கும் சிறிது வேறுபாடு உண்டு. பிற குறவஞ்சிகளில் காணப்படும் காப்பு, தோடயம், மங்களம் ஆகிய உருப்படிகளுக்குப் பிறகு கட்டியங்காரன் மேடையில் தோன்றித் தலைவன் பவனி வருவதை அறிவிப்பது இக்குறவஞ்சியில் காணப்படவில்லை. இக்குறவஞ்சியின் கதாநாயகியான ராஜமோகினி தியாகேசரைப் பார்த்ததை எங்கும் குறிப்பிடவில்லை. பிற குறவஞ்சிகளில் இருத்தல்போலக் குறவன் குறத்தியைத் தேடிவருதல் பற்றியவை மிகச் சுருக்கமாக இந்நூலில் உள்ளன. இக்குறவஞ்சியில் நாரதரே குறத்தியாக வந்தார் என்றும், தும்புரு சிங்கனாக வேடம் புனைந்து வந்தார் என்றும் உள்ளது. பிறவற்றுள் காணப்படாத அண்டகோளதருவு இதில் உண்டு.[20]

" வீணே காலம் போம் வார்த்தைகள் நிற்கும் ;
" காக்கும் வேலியே பயிர் அழித்தால் விளையும் வாறெப்படி ;
" எளியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் கேளாதோ "
( 10ஆம் பாடல், பக்கம் 15 )

---

18. பக். 32, தியாகேசர் குறவஞ்சி, டாக்டர் பிரேமலதா
19. பக்கம் 33-34 டாக்டர் பிரேமலதா
20. பக்கம் 31-32 டாக்டர் பிரேமலதா

" பார்த்தால் பசுப்போல ; பாய்ந்தால் புலியானாய் "
( பாடல் 11இல் 4, பக்கம் 18 )

" தீராத நெஞ்சுக்குத் தெய்வமே துணை "

" வாடும் பயிருக்கு இன்ப மழைபோல "

" வாசமும் மலரும் போலே " ( பாடல் 13 ),

" கையில் வரு நெல்லிக்கனி போல " ( பாடல் 51 )

" புலி பசித்தாலென்ன, புல்லைத் தின்பதுண்டோ " ( பாடல் 65–4 )

என்று பழமொழிகளில் சில இந்நூலிற் பயிலப்பெற்றுள்ளன.

"சுந்தரர் பொருட்டுப் பெருமான் பரவையாரிடம் தூது சென்றதைக், " கவிமழை பொழியும் நம்பிக்காய்த் தூது நடந்த தியாகர் " ( பாடல் 20, வரி 29, 30 ) "சுந்தரர் சொன்ன பன்னுதமிழ்க் கொரு தூதர் " (பாடல் 35, சரணம் 3 ) என்றும், சுந்தரரைத் " துதிபெறு முத்தமிழுக்கரசாகிய சுந்தரர் " என்றும் ( பாடல் 36 ), சுந்தரர் தேவாரத்தைச் "சுந்தரர் செந்தமிழ் " (பாடல் 41 தாழிசை 17 ), " சுந்தரர் முத்தமிழ் வாழி " (பாடல் 66) என்றும் குறித்தமை போலத் தேவார மூவரையும் அவர்தம் தெய்வப் பாடல்களையும், " மெய்யுரை செய் மூவர்தமிழ் விளங்கா நிற்கும் வாசலிது " ( பாடல் 25 இல் 2 ) என்று இந்நூலாசிரியர் பாடியுள்ளார். இதனால் இவர் தேவார மூவரிடத்தும், மூவர் தமிழிலும், சிறப்பாகச் சுந்தரரிடத்தும் பத்திமை பூண்டவர் என்றும், செந்தமிழோர் வாழி என்றமையால் ( பாடல் 67 ) தமிழ் மக்களிடத்துப் பெரும் பற்றுடையவர் என்றும், ' ஏர் சிறந்த வேளாளர் எந்நாளும் வாழி " (பாடல் 67) என்றமையால் இவர் வேளாண்குலத்தவர் என்றும் அறியப்பெறும்.

குறத்திதோன்றுதல் என்ற தலைப்பில் 108 வரிகள் கொண்ட ஒரு அகவற்பா உள்ளது. இவ்வகவலில் முசுகுந்தன் வணங்கிய தியாகர் ( வரி 35, 36 ), மனுநீதிச் சோழன் தன் மகனை முறை செய்தமை (வரி 37–79), சிவபெருமான் பசுவாகவும் இயமன் கன்றாகவும் வந்தமை (வரி 40) ஆகிய செய்திகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

குற்றாலக் குறவஞ்சி போலவும், சரபேந்திர பூபால குறவஞ்சி போலவும் சிறந்து விளங்கும் பெருமை இக்குறவஞ்சிக்கு உள்ளது.

## ஸாஹஜி காலத்துப் பிற தமிழ் நூல்கள்

### 1. சங்கர நாராயண விலாஸ நாடகம்

" ஆரவி — சங்கரநாராயண விலாஸ நாடகம்—பூர்வக சிவவிஷ்ணு சரித்திர—பக்கம் 48 " [21]

---

21. 12-287 ( எண் 2368 ) (12-215)

என்ற குறிப்பால் தமிழில் "சங்கர நாராயண விலாஸம்" என்ற நாடக நூல் ஸாஹஜி காலத்தில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. "சங்கர நாராயண கல்யாணம்" என்ற நூல் ஆபத்சகாயபாரதி என்பவரால் தமிழில் இயற்றப் பெற்றது என்று டாக்டர் சீதா அவர்கள் கூறுவர். இதுவும் சங்கர நாராயண விலாஸ நாடகமும் ஒன்றா வேறா என்று தெரிய வாய்ப்பில்லை.[22]

**2. கும்பகோணப் புராணம்**

இது சொக்கப்ப நாவலர் பாடியது; ஸாஹஜியின் அவையில் அரங்கேறியது.[23] இந்நாளில் அச்சாகியுள்ளது.

**3. வாசுதேவகவி** என்பாரும் **இராமபாரதி** என்பாரும் ஸாஹஜிமன்னர் பேரில் **சிருங்கார** பதங்கள் பாடியுள்ளனர். இவற்றுள் பெரும்பாலானவை தமிழிலும் சில சமஸ்கிருதத்திலும் உள்ளன; எளிய தமிழ்; இன்பச்சுவை பொருந்தியவை; பகைஞரைப் பார்த்து எச்சரிக்கை கூறும் பாடல்களும் சிலவுண்டு.

"சுற்றிச் சுற்றி யிங்கே சுழலவேண்டாம் சொன்னேன்
புத்தியல்ல ஓடிப்போனால் உயிர் பிழைக்கும்
எத்தன் ஏகராஜன் புத்திரன் ஸஹஜிராஜன்
கத்தி கொண்டால் கையில் கத்திக்கிரையிடுவன்"[24]

என்பது ஒரு பாடலின் பகுதி.

## முதலாம் சரபோஜி

இவர் ஸாஹஜியின் தம்பி. இவர் ஆட்சியிலும் தமிழ்ப் புலவர்கள் ஆதரிக்கப் பெற்றனர். சிவரகசியம் என்ற நூல் ஒப்பிலாமணிப் புலவர் யாத்தது. இது முதலாம் சரபோஜியின் அவையில் 3—1—1718இல் அரங்கேறியது.[25] இவர் அவையிலேதான் சருக்கரைப் புலவர் பாடிய "மிழலைச் சதகம்" அரங்கேறியது.[26]

---

22. Sahaji was never indifferent towards fostering the Tamil Language. Many operas like Bhuloka Devendra vilasam, Rupavathi Kalyanam by Kutta Kavi, Sankaranarayana Kalyanam by Apat Sahaya Bharathi and padas composed by Ramabharathi & Vasudeva kavi belong to the reign of Sahajl (12-224) p. 85, Tanjore as a seat of Music, Dr. Seetha
23. தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக்கருத்தரங்கு – புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கள் கட்டுரை, பக்கம் 2.
24. எண் 52, வாசுதேவ கவி பாடல்கள், தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம், சுவடி எண். 818 / 11649
25, 26. தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக்கருத்தரங்கு–புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கள் கட்டுரை, பக்கம் 4–5

## இரண்டாம் துளஜா

இரண்டாம் துளஜாகாலத்தில் இராமநாடகம் இயற்றிய அருணாசலக் கவிராயர் துளஜா அவைக்கு வந்து பரிசில் பெற்றதாகத் தெரியவருகிறது :

" 1776, தேதி 23, மாதம் சௌவல்; சீயாழி அருணாசலக்கவிராயர். இவர் களுக்கு பக்ஷீஸ் பரங்கிப்பேட்டை ஹோன்னம் 30 சக்கரம் கொடுப்பு "

என்ற குறிப்பு[27] அருணாசலக் கவிராயரைத் துளஜா ஆதரித்தார் என்பதை அறிய உதவுகிறது.

## இரண்டாம் சரபோஜி

இவர் காலத்தில் விளங்கிய புலவர் பெருமான் கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர் ஆவர். இவர் இயற்றிய நூல்களிற் சிறந்தவை கோடீச் சுரக்கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் என்பனவாம்.

" கொரவஞ்சி நாடகம்–சிவகோளந்த பண்டார க்ருதம் –பிரஹதீஸ்வர மஹாத்மியம்–பக்கம் 154 " என்ற குறிப்பில்[28] சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் குறிக்கப்பெற்றுள்ளது,

கோவை, உலா, குறவஞ்சி ஆகியவற்றுள் வகைக்கொன்று இலக்கிய நயம் பொருந்த எழுதித் தமிழ் மொழியின் இலக்கிய வளத்தை அந்நாட்களில் மிகுத்த பெருமை கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகருக்கேயுண்டு என்னலாம்.

## வைத்திய நூல்கள்

இரண்டாம் சரபோஜி காலத்தில் பல வைத்திய நூல்கள் தமிழில் இயற்றப் பெற்றன என்றும், அவ்வாறு இயற்றியோர்[29] கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர், வேலாயுத வாத்தியார், திருவேங்கடத்தாபிள்ளை, வெங்க டாசலம்பிள்ளை, சுப்பராயக் கவிராயர் என்பவர் ஆவர் என்றும், அவர்கள் இயற்றிய நூங்கள் எவ்வெந்நோய்களைத் தீர்ப்பவை என்றும் ' வைத்தியம் ' என்ற தலைப்பிற் காணலாம்.[30]

17ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 18ஆம் நூற்றாண்டிலும் சோழ நாட்டில் மிகச் சிறந்த புலவர்கள் வேறு பலரும் வாழ்ந்தார்கள். அவர்கள் யாத்த நூல்கள் பல. அவைபற்றி இங்குக் கூறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

---

27. ச. ம. மோ. த. 48–28 28. 12–293 (எண் 2487) 29. 12–220
30. " மருந்து (அ) வைத்தியம் " அடிக்குறிப்பு 41 முதல் 44 வரை; அவற்றுக்குரிய செய்திகளும் பார்க்க,

# 33

# கானாக்களும் மகால்களும்

பன்னிரண்டு மகால்கள் என்றும் 18 கானாக்கள் என்றும் சொல்வது மரபாகத் தெரிகிறது.[1] அவற்றின் விளக்கம்போன்று சில ஆவணங்களில் செய்திகள் தரப்பெற்றுள்ளன.[2] அளவிலும் தரத்திலும் அழகிலும் சிறந்த கட்டடங்கள் "மஹால்" என்றும், அரசுக்கு இன்றியமையாத தேவைகட்கு இடமாயுள்ள அமைப்பில் கட்டப்பெற்ற மண்டபம், கொட்டில், மேடை, அறை ஆகியவற்றைக் "கானா" என்றும் கூறினர் எனத் தெரிகிறது.[3] இப்பன்னிரண்டு மகால்களும், பதினெட்டுக்கானாக்களும் பின்வருமாறு :—

## 18-கார்கானா

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜாம்தார் கானா[4] | — | ஜவுளி, நகை[4அ] |
| 2. | ஸர்பத் கானா[5] | — | குளிர்பானம் |
| 3. | ஜிராத் கானா[6] | — | ஆயுதசாலை |
| 4. | ஹத்தி கானா[7] | — | யானை கட்டும் இடம் |
| 5. | அப்தார் கானா[8] | — | தண்ணீர்ப்பந்தல் |
| 6. | தாரு கானா[9] | — | வெடிமருந்து |
| 7. | சராப் கானா | — | சாராயம் |
| 8. | நகார் கானா[10] | — | டமாரம் |

---

1. 5-380
2. 8-221, 222; 4-845, 846
3. தஞ்சாவூர் மகால்களும் கானாக்களும்—சி கோவிந்தராசனார்.
4. 1-282.
4அ. "Wearing apparel store', P. 7, line 39, Deposition of M. S. Ghantigai
5. 1-248, 282
6. 1-812, 818
7. 1-281, 258
8. ச. ம, மோ, த. 26-12, 18.
9. 1-258, 848
10. 1-188; 289.

9. தாலிம் கானா[11] — உடற்பயிற்சி, மல்யுத்தம்
10. தோப் கானா — அதிர்வேட்டு, பீரங்கி
11. சேத் கானா — நெல், வயல்கள்
12. தவா கானா — மருத்துவ மனை
13. அம்பார் கானா[12] — நெல் கிடங்கு
14. தப்தர் கானா — பதிவு வைப்பறை (ரிகார்டுரூம்)
15. பராஸ் கானா — சட்டி, பானை செய்யும் இடம்
16. தஸ்த கானா — வரி கட்டும் இடம்
17. துஸ்த கானா — முண்டாசு
18. ஜர்கர் கானா[13] — காசுக்கடை

## 12—மஹால்கள்

1. போத்தே மாஹால் — கஜானா
2. பாகா மாஹால்[15] — குதிரை லாயம்
3. தர்ஜி மாஹால் — தையல் கூடம்
4. ஆடே மாஹால்[16] — தண்ணீர்ப்பந்தல்
5. கோட்டி மாஹால் — தானியக்கிடங்கு
6. தட்டி மாஹால்[17] — மாட்டுப்பண்ணை
7. பால்கி மாஹால் — பல்லக்குக் கூடம்
8. முபதக் மாஹால்[18] — சமையல் கூடம்
9. இமாரதி மாஹால்[19] — மராமத்து வகை
10. டங்க மாஹால் — தங்கசாலை
11. ஜாசுத மாஹால் — தூத் (தூதுவர் – C. I. D.)
12. தாஸ்தான் மாஹால்[20] — நெற்களஞ்சியம்

### ஜாம்தார் கானா

இது அரசகுடும்பத்தவர்க்குரிய ஆடைகளும் நகைகளும் வைக்கப்பெற்ற இடம் ஆகும்.

---

11. அடிக்குறிப்பு 85க்குரிய கவாத்து கானா காண்க. 12. 1–126
13. 1-276, 277. 14. 2–292 15. ச. ம. மோ. த. 18-110
16. Adaimal is the name of the place where from water is taken to each kitchen dept. (Muthupoke) P. 48 Deposition of Yogambal.
17. 1–274 18. முபதக் - முதுபோகி (Muthupoki) 19. 1–288 20. 2-292

"வண்ணான் நாகமுத்து வெளுத்த துணியில் முள் இருந்ததினால் அவனுக்கு அபராதம் தேங்காய்கள் 6"

என்ற எழுத்தால்[21] ஆடைகள் ஜாம்தார்கானாவில் வைக்கப்பட்டிருந்தன என்பது போதரும்.

ஒவ்வொரு கானாவுக்கும் ஒவ்வொரு அலுவலர் இருந்தனராதல் வேண்டும். இது,

"ஜாம்தார்கானா வரவு செலவு கணக்குகள் 1843: சுபான்ஜீ புதாஜீ மோஹிதே அவர்களுக்கு ஒரு மாசத்திற்குச் சம்பளம் ரூ. 124க்கு ஒரு ரூபாய்க்கு 37 படி நெல் வீதம் நெல் கலம் 191–2 மரக்கால்"

என்ற குறிப்பால்[22] உறுதி பெறும்.

"1821 : சௌ. சி. சக்வார்பாயீ சாகேப் அவர்களிடம் ஜாம்தார் கானாவிலிருந்து ஒரு ஜோடு (பாதரக்ஷை) தைத்துக் கொடுக்கிறது"

என்றும்,[23] "ஜாம்தார்கர்னாவில் 32 கொடிகளைத் தயார் செய்யவேண்டியது" என்றும்[24] உள்ள குறிப்புக்களால் அரச குடும்பத்தாருக்கு வேண்டிய ஆடைகள், அணிகள் அரசாங்கத்துக்கு வேண்டிய கொடிகள் ஆகியவை தயாரித்துவேண்டிய காலங்களில் கொடுத்துவரும் இடம் எனத் தெளிவாகத் தெரியலாகும்.

## ஹத்தி கானா

ஹஸ்தி–ஹத்தி–யானைகள் கட்டுமிடம், ஹஸ்திகானா எனப்பட்டது.

"1821 யானைக் கானா–சம்பு பிரஸாத் என்னும் யானைக்குட்டி வாயுவினால் ஆகாரம் செல்லாததால் உள்ளுக்குக் கொடுக்க"

என்ற மருத்துவக் குறிப்பில்[25] யானைகள் இருக்கும் இடமாகிய யானைக் கூடம் குறிக்கப்பெற்றது. இது பீல்கானா எனறும் கூறப்பட்டது.[26]

## நகார் கானா

நகார்கானா என்பது டமாரம் போன்ற பலவிதமான ஒலிக்கும் கருவிகள் வைக்கப்பட்ட இடமாதல் கூடும்.

"நகாரா கானாவில் மேளத்தின் வாத்தியங்களுக்கு முலாம்செய்ய" என்ற குறிப்பினால்[27] நகாரா கானாவில் பலவித இசைக்கருவிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது.

21. 1-282
22. 2-115
23. 1-245
24. 1-245
25. 1-281
26. ச, ம, மோ. த 18-110
27. 1-184

"1809: ஹஜாரி வாசலின்[27அ] வடவண்டை வாசற்படி மண்டபத்தின் மேல் நகார்கானா கொறடின் சுவர் போடுவதற்குச் செலவு சக். 2–15/16"

என்ற இக்குறிப்பால்[28] நகார்கானா இருந்த இடம் ஒருவாறு தெரியவரும். திரு. கோவிந்தராசனுர், "இதற்கமைந்த உயரமான மண்டபம் கீழவாயிலைச் சேர்ந்திருந்ததென்றும், அரண்மனை வெளி மதிலின் மேல்நிலைகளில் ஒன்று எனவும்" கூறுவர்.

## ஜீராத்கானா

இதனை ஆயுதசாலை என்பர். "வாத்தியங்களைத் தயாரிக்க ஜீராத் கானாவிலிருந்து தம்பூருக்கு "என்றும்,[29]

"1837: ஜீராத் கானாவிலிருந்து வெள்ளைக்காரருடைய வீட்டிற்குச் சக்கரை பொம்மைகளையனுப்பக் கோரா காடுதாசி 2 தஸ்தா, தட்டு, தாம்பாளம், மூங்கில் பெரியதட்டு கொடுக்கிறது"

என்றும்[30] வரும் குறிப்புக்களால் தட்டுமுட்டுச் சாமான்கள் செய்கருவிகள் (Instruments) முதலியன இருக்கும் இடமாகக் கருதலாம்.

## அம்பார்கானா

நெற்களஞ்சியம் இருக்கும் இடம்[31] அம்பார்கானா எனப்பெற்றது. இது ஓர் ஆவணத்தில் குறிப்பிடப்பெறுகிறது.[31அ]

"1820: அம்பார்கானாவுக்கு எதிரே புதிய மஹாலில் மண்டபம் சௌகண்டி[32] எத்திக்கட்டு இவைகளைக் கட்டத் தளவாடம் கூலி......... "

என்பதால் அம்பார்கானா என்ற இடத்துக்கு 'எதிரில் ஒரு புதிய மஹால் கட்டப்பெற்றதாகத் தெரிகிறது.

## அப்தார்கானா

தண்ணீர்ப்பந்தல் இருக்கும் இடம் அப்தார்கானா எனப்பட்டது. இதுவும் ஓர் ஆவணத்தில் கண்டது.[32அ]

---

27அ. "The Hazaram gate is next to the market" – Page 39, line 35, Deposition of Yogambal

28. 1-289 29. 1-812 30. 1-818.

31. இவ்விடம் தஞ்சையில் கல்யாணசுந்தரம் மேனிலைப்பள்ளி விளையாட்டிடம் ஆகும் என்பர் திரு. கோவிந்தராசனுர்.

31அ. 1-20 32. சவுக்கண்டி–சதுரத்திண்ணைக் கொட்டகை.

32அ. ச. ம. மோ. த. 26-12, 18

"1820: சகம் 1743 மஹால் நகரபரிஷ்கார் திம்மதி சிதம்பரம்பிள்ளை மேற்கண்ட மகாலிடத்து அப்தர்கானாவின் எதிரில் புதிய மகாலில் மண்டபச் சுவர் கட்டத் தளவாடம்........."

என்ற குறிப்பால் அப்தார்கானா என்பது நகர பரிஷ்கார மகாலில்[33] இருந்த தாதல் வேண்டும் என்றும், இந்த அப்தார்கானாவின் எதிரிலும் ஒரு புதிய மஹால் கட்டப்பெற்றதென்றும் அறியப்பெறும். மேலே காட்டிய அம்பார் கானாவின் எதிரிலும், இங்குக்கண்ட அப்தார்கானாவின் எதிரிலும் அமைக்கப் பட்ட புதிய மகால்கள் யாவை என்று அறிய வாய்ப்பில்லை.

## கவாத்து கானா

"1214 (+ 599 = 1813) கிருஷ்ணவிலாஸத்திலுள்ள கவாத்துகானாவின் புண்யாஹவாசனத்துக்கு வழக்கப்படி கொடுக்கிறது"

என்ற குறிப்பொன்று[34] கிடைத்துள்ளது. மல்லர்கள் பயிற்சி செய்யும் இடம் கவாத்துகானா எனப்பெற்றது. "தாலிம் கானா" என்று கானாக்களின் பட்டியலில் காணப்பெறுவது கவாத்து கானாவாகும்.[35]

## ஜர்கா கானா

இது காசுக்கடை ஆகும். "ஜர்கா கானாவிலிருந்து வியாபாரிக்குக் கொடுத்த ரூ. 3, 500 அரண்மனைக்கு வெளியே எடுத்துக்கொண்டுபோக உத்தரவு கொடுக்கவேண்டும்" என்ற குறிப்பு[36] இதனை வலியுறுத்தக்கூடும்.

## போதே மகால்

அரசாங்கப் பொருள் நிலையம் போதே மகால் எனப்பட்டது.

"1777: ஆங்கிலேயம் எழுதுகிற முத்து கிருஷ்ண முதலியாருடைய வீட்டை ஸர்க்காரில் எடுத்துக்கொண்டு அதன் கிரயத்தை மகால் போதேயிலிருந்து கொடுக்கிறது"

—என்ற குறிப்பால்[37] போதே மகால் என்பது பொருள் நிலையம் (பொக்கிஷம்; கஜானா) என்று கொள்ளப்படும்.

"1837: மஹால் போதேயிலிருந்து ஸேநாதுரந்தரர் கங்காதர் ரக்மாஜி அவர்களுக்குச் சக்கரம் 2000"

---

33. 1-232 34. 5-215
35. 3-22, "தாலிம் – குஸ்தி செய்யும் இடம்" என்றமை காண்க
36. 1-276, 277 37. 2-292

—என்ற குறிப்பாலும்[38] போதே மஹால் என்பது அ ர சா ங் க ப் பொருள் நிலையம் (கருவூலம்) [38அ] ஆதல் பெறப்படும்.

## தட்டி மகால்

மாடுகள் இருக்கும் இடம் அதாவது மாட்டுக்கொட்டில் தட்டி மகால் எனப்பெறும்.

"1834: தட்டிமகாலில் கன்றுக்கு வக்கையின் உபத்திரவம் வராமலிருக்கப பன்றியின் நெய் போடுவதற்கு இலவம் பஞ்சு 3 சேர் யுத்தசாலையிலிருந்து கொடுப்பது"

—என்ற ஆணையாலும்,[39]

"1884 :**வேட்டைமகாலில்*** காயலாவாக இருக்கும் கரடிக்கு மருந்துக்கு கொட்டியத்திலிருந்து கஸ்தூரி வராகனெடை ½; தட்டி மகாலிலிருந்து பால் சேர் 5 கொடுக்கிறது"

—என்ற ஆணையாலும்[40] தட்டி மகால் என்பது மாடுகள் கட்டப்பெறும் இடம் என்பது அறியப்பெறும்.

"1821: தட்டி மகாலில் பிறந்த காகார்ணி என்னும் பசுமாட்டுக்கு" —என்ற குறிப்பும் உள்ளது.[41]

## வேட்டை மகால்

மேலே வேட்டை மகால்* என்று ஒரு மகால் கூறப்பட்டுள்ளது. பிறிதோரிடத்து,[42]

"வேட்டை மகாலுக்குத் தினந்தோறும் கொடுக்கவேண்டிய மொயின் தொகையும் சாமான்களுடையவும் ஜாபிதா"

—என்று கண்டுள்ளது. இதனாலும், மேலே காட்டிய "வேட்டை மகாலில் காயலாவாக இருக்கும் கரடி" என்ற குறிப்பாலும் வேட்டையாடிப் பிடித்துக் கொணர்ந்த விலங்குகள் இருக்கும் இடம் ( ZOO ) வேட்டைமகால் எனப் பெற்றது எனக்கருதலாம்.

"1807: வேட்டைமகால் மூன்று சிறுத்தைகளுக்கும் கொட்டியத்திலிருந்து மசாலை"

— என்ற குறிப்பு[43] இதனை வலியுறுத்தும்.

---

38. 1-814 38அ. Pothe mahal (treasury) P. 413, Deposition of 52nd witness, O. S. 26 of 1912.
39. 1-274 40. 1-806 41. 1-282 42. 1-252 43. 1-229

## இமாரதி மகால்

அரண்மனையிலும் பிற இடங்களிலும் நடைபெறும் மராமத்து வேலையைக் கவனித்தலாகிய அலுவலுக்கு "இமாரதி" என்று பெயர். இமாரதி என்ற அலுவலர் பணி செய்யும் அலுவலகம் இமாரதி மகால் எனப் பெற்றது. மராமத்துக்கு வேண்டிய தளவாடங்கள் அவ்வலுவலகத்தில் இருக்கும்.

"1809: நவவித்யா கலாநிதி பள்ளிக்கூடம் அச்சு வேலைக்காக யந்திரத்தின் கட்டை உடைந்து போனதற்குப் போட $1\frac{1}{2}$ முழம் நீளம் ஒருசாண் அகலம் கருப்புக் கட்டையும், தச்சனும் இமாரதி மகாலிலிருந்து வரவேண்டும்"

— என்ற குறிப்பினால்[44] இமாரதி மகாலில் மராமத்துக்குரிய தளவாடங்களும், தச்சர் முதலிய தொழிலாளர்களும் இருத்தல் கூடும் என்பது தெரியவரும்.

## வேறு சில மகால்கள்

மேலே முதலில் குறிக்கப்பெற்ற 12 மகால்கள் மட்டுமன்றி **வேறு சில மஹால்களின்** பெயர்களும் தெரியவருகின்றன.

**சரஸ்வதி மஹால்** என்பது யாவரும் அறிந்தது. இது சரஸ்வதி பாண்டாரம் என்றும் வழங்கப்பெற்றது. இதுபற்றிப் பிறிதொரு கட்டுரையில் காண்க.[44அ]

**செட்டி மகால்** என்பது மற்றொன்று. "கரும்பு கிளிகள் வகையறா அநேக மாதிரி சாமான்கள் தயாரிக்க நெட்டி மகாலுக்கு உத்தரவிடுகிறது"

என்ற குறிப்பு[45] நெட்டியினால் பல பொருள்கள் தயாரிக்கும் பகுதி நெட்டிமகால் எனப்பெற்றதாதல் கூடும்.

**சாயிதான் மகால்** என்றொரு மகால் பேசப்படுகிறது.

"1834: ரா. ஸ்வாமியார் நாளைக்கு இராமநவமிக்குக் கதை செய்ய வருகிறார்; நலி பங்க் வாசற்படிக்கு முன்னால், ஸர்க்கார் பங்க் அனுமாரின் எதிரில் கிழக்கில் உள்ள வாசற்படியின் வழியாய்ச் **சாயிதான் மகாலுக்குப்** போகும் வழியில் வழக்கப்படி வாகனத்தில் இருந்து இறங்குகிறது. பின்பு **சாயிதான் மகாலின்** தென்னண்டை வாசலின் வழியாய், அவரிடம் உள்ள இருவர், ஹுஜுருடன் மகால் போதேயின் வழியாய் **இராமசுவாமி மகாலுக்குப்** போகிறது"

என்ற ஆணை[46] சாயிதான் மகால் என்ற ஒரு மகாலைக் குறிப்பதோடு, இராமசுவாமி மகால் என்று பிறிதொரு மகாலையும் குறிப்பிடுவதாக உள்ளது.

---

44. 1-283, 284    44அ. இந்நூல் கட்டுரை 17 காண்க    45. 1-282
46. 1-271

## தன்வந்தரி மகால்

இதுபற்றி "வைத்தியம்" என்ற தலைப்பில் (19) எழுதப்பெற்றுள்ளது. இதனை மருத்துவ ஆராய்ச்சிக்கூடம் என்னலாம். அங்கு நோயாளிகளுக்குச் சர்க்கார் ஆணையின்பேரில் மருந்து தரப்பெற்றுவந்தது. இதனை,

"1834: தன்வந்தரி மகால் ஹுஜூரின் வேலையாள் கோவிந்தாரவ் சாங்கோஜியின் தங்கை காயலாவாக இருப்பதால் ஒரு மண்டலத்துக்குப் பூர்ண சந்த்ரோதய மாத்திரையும் சுவர்ண மாலே வசந்த மாத்திரையும் கொடுக்கிறது" என்ற குறிப்பு[47] வலியுறுத்தும்.

## கல்யாண மகால்

இதுபற்றிய விளக்கம் கல்யாணமகால்[48] என்றதில் எழுதப்பெற்றதைக் கொண்டு அறியலாம்.

"1825, தேதி 29 ரம்ஜான், திவான் அரண்மனையிடத்துக் கல்யாண மகால் வேலைக்குத் தளவாடங்கள் மெக்யாடு கூலி வகையறா...சக் 10,000"

என்ற குறிப்பால்[49] கி. பி. 1825இல் கல்யாணமகால் கட்டி முடிக்கப் பெற்றிருத்தல் கூடும் எனத்தோன்றுகிறது. பிறிதோர் ஆவணம் 1825 தேதி 29 ரம்ஜான் கல்யாணமகால் வேலைக்குச்சக்கரம் 10,000 கொடுத்தமையைக் குறிப்பிடுகிறது[50]

## சிவபூசை மகால் முதலியன

"சிறிய பழைய சிவகங்கைக்குச் சமீபத்தில் இருக்கும் **சிவபூசைமகால்**" என்றவிடத்துச்[51] சிவபூசை மகால் என்றொரு இடம் குறிக்கப்பட்டுள்ளது.

**கர்டா மகால்** என்றொரு மகால் 1845இல் கூறப்படுகிறது.[52] மோடி தமிழாக்கம் செய்தவர் "இரவுபகல் வேலை செய்யும் அல்லது கெட்டுப்போன ஆவணங்களைப் புதுப்பிப்பதோ பாதுகாப்பதோ இதன்வேலை" என்றெழுதியுள்ளார்.

"1785: லாஞ்சனமகால் – கொத்தமங்கலம் வட்டம் – மன்னார்குடி சுபா" என்றும்,[53]

"1785: பண்டாரவாடை தாலுகா எல்லூர் மாகாணம் லாஞ்சனமகால்" என்றும்[54] பல இடங்களில் **லாஞ்சனமகால்** என்றொரு மகால் பேசப் படுகிறது. இலாஞ்சனை என்பது அரசனது முத்திரை என்று பொருள்படும்.

47. 1-272 48. கட்டுரை எண் 28 காண்க 49. ச. ம. மோ. த, 26-21
50. ச. ம. மோ. த. 26-11 51. 7-585 52. ச. ம. மோ. த. 14-81
53 ச. ம, மோ. த, 18-185 54. ச. ம. மோ, த. 18-126

பேரூர்களில் ஆவணங்களில் அரசனது முத்திரையைப் பெறும் இடங்களாக இம் மகால் இருந்திருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது. இதற்கு வேறு பொருள் கூறுவாரும் உளர்.

"1231 ( +599 = 1830 ) அல்லிகுளத்துக்கு அருகில் "குத்தே" மகால் கட்டுவதற்கு மெய்யாடு செலவு"

என்ற குறிப்பால்[55] **குத்தே மகால்** என்றொரு மகாலும்,

25—4—1861இல் மகாராஜா சபையின் தென்பக்கத்தில் "**நவகோடி மகால்**" என்றொரு மகாலும்[56] இருந்தனவாதல் கூடும்.

## சங்கீத மகால்

"1857: ஸங்கீத மஹால் மண்டபம்; இராஜ்ய மாயினுடைய தோட்டத்திலிருந்து சுவர் போட்டது; மேற்படி மண்டபத்தின் மேலண்டை சக்ரீ மண்டபம் பழுதுபார்த்தல்"

என்ற குறிப்பில் "சங்கீத மகால்" குறிக்கப்பெறுகிறது.[57] இது நாயக்க மன்னர் காலத்திலேயே அமைக்கப்பெற்றது என்பர்.[58]

இதுகாறும் 12 மகால்கள் 18 கானாக்கள் என்று கூறப்படினும் மேலும் சிலமகால்களும் கானாக்களும் இருந்தன என்பது மோடி ஆவணத் தமிழாக்கக் குறிப்புக்களால் அறியப்பட்டன.

## கைலாச மகால்[59]

இது அரசர்களும் அரசமாதேவிகளும் இறந்தபின் தகனம் செய்யப்படும் சுடுகாடு ஆகும். பிற மராட்டியர்க்கு அங்கு இடமில்லை. இது வடவாற்றுக்கு அருகில் உள்ளது.[60]

---

55. 5-481, 482 56. 8-171 57. 5-289

58. மகால்களும் கானாக்களும்-மோடி ஆவணக்கருத்தரங்கு

59 Kailasa Mahal - Cremation ground. P. 39, l. 36, Deposition of Yogambal

60. The Cremation ground for the Ranis etc. is the Kylas Mahal near the Vadavar. The other Mahrathas don't cremate there- P. 37, Deposition of M. S Ghantigai - 1st witness of 1 & 2 defendants.

# 34

# 1798க்குப் பிறகு

இரண்டாம் சரபோஜி 1798இல் பட்டத்துக்கு வந்தவர். தஞ்சை ஆட்சி முழுமையும் கைப்பற்ற முனைந்த ஆங்கிலேயர் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தம் " தஞ்சை அரசருக்கும் கும்பினிக்கும் உள்ள நட்பையும் தொடர்பையும் வலுப்படுத்தவும், தஞ்சை ஆட்சியை நிலையான அடிப்படையில் அமைக்கவும் " செய்துகொள்ளப்பெற்றதாகக் கூறப்பட்டது.[1] இவ்வொப்பந்தம் 25—10—1799இல் கையெழுத்து இடப்பட்டது. இதில் 15 பிரிவுகள் உண்டு. இவ்வொப்பந்தத்தால் இரண்டாம் சரபோஜி இடத்திலிருந்து ஆட்சிப் பொறுப்பு நீங்கியது. தஞ்சைமாநகரம் மட்டும் அவர் மேற்பார்வையில் அமையலாயிற்று. அவருக்கு ஓய்வூதியம் தரப்பெற்றது. ஆகவே அவர் ஆட்சிப் பொறுப்பினின்று நீங்கித் தம் வாழ்நாள் முழுவதும் கலைகளின் வளர்ச்சியில் ஈடுபடலானார்.

தஞ்சை மாநகரம் தவிர்த்து எஞ்சிய பகுதிகள் யாவும் ஆங்கிலேயரின் நேர் ஆட்சிக்கு வந்தன. ஆங்கிலேயருடைய நேர் பார்வையில் அமைந்த ஊர்கள் 5062 என்று ஓராவணம் கூறுகிறது. இது,

" 1804: மேஸ்தர் ஜான் பாலீஸ் கலெக்டர் 1214ஆம் பசலி முன்னால் கம்பெனியில் கணக்கு எழுதிய வகையில் ஊர்கள் முழுமைக்கும் 5056; தற்போது அதிகமான ஊர்கள் 6 "

என்ற குறிப்பால் அறியப்பெறும்.[3]

---

1. " Treaty for cementing the friendship and alliance between the Company and the Rajah of Tanjore and for establishing the Govt. of Tanjore on a permanent foundation " -p. 109, A History of British Diplomacy In Tanjore-K.Rajayyan
2. ச. ம. மோ, த. 14–42, 48
3. 8–48 முதல் 49 முடிய

## கிராம முன்சீப்பு நியமனம்

இந்த ஊர்களுக்குக் கிராம முன்சீபுகள் நியமிக்கப்பெற்றனர். 19—1—1827ஆம் தேதியிட்ட கடிதத்தில் " கலெக்டர் " அவர்களுக்கு பாபாஜி (சர்க்கேல்) எழுதிய கடிதத்தில்[3] " ஸர்க்கார் இலாகாவில் கிராம முன்சீப் நியமிக்கிற விஷயம் " பற்றிக் கூறப்பட்டுள்ளது. கி. பி 1826 ஏப்பிரல் திங்களிலேயே தம் மேற்பார்வையில் உள்ள ஊர்களுக்கு அரசரே " கிராம முன்சீப்பு " களை நியமித்துவிட்டதாக அக்கடிதத்தில் உள்ளது.

தம்மால் நியமிக்கப்பட்ட அவ்வலுவலர்களை நீக்கும் அதிகாரம் மராட்டிய மன்னருக்கு உண்டு என்பது,

" 1742 : வைதளம்பூர் முல்லைவாசல் மிராசுதார்கள் கண்டு முதலான நெல்லைக் களத்தில் போட்டு அளந்துதரவேண்டிய பாக்கியைக் கொடுக்காமல் கொண்டு போனதைத் தடுப்பதற்காக, மணியகாரரை விலக்கி, ஹர்கார் 2, காவல்காரர் 4 நியமித்திருக்கிறது "

என்ற எழுத்துச்சான்றினால்[4] உறுதியெய்தும். மேலும் இதனால், அதிகாரிகள் அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய நெல்லை வசூலிப்பர் என்றும், அங்ஙனம் வசூலிக்கத் தவறினால் அவ்வலுவலர்கள் நீக்கப்பெறுவர் என்றும் அறியப் பெறும்.

இதனால் கிராம அதிகாரிகள் கும்பினியார் பார்வையில் இருந்த கிராமங் களுக்கும் நியமிக்கப்பெற்றனர் என்பது தெளிவு.

கிராம முன்சீபுகளை நியமிப்பதற்குச் சென்னைக் கோட்டை ஆலோ சனைச் சபையில் கவர்னர் பிறப்பித்த சட்டம் ஒன்று உண்டு.[5] அச்சட்டத்தின் படி ஊர்களில் உள்ள பெரியதனக்காரர்கள் கிராம முன்சீபு ஆக நியமிக்கப் பெற்றார்கள். இவர்களுக்கு உதவியாகக் கிராமக் கணக்கரும் இருந்தனர்.

" 1813 : கம்பெனி ஊர்களுக்குத் தலையாரி நியமன விவரம் கும்பகோணம் தாலுகா மொத்த ஊர்கள் 699 "

என்ற எழுத்துக்குறிப்பு[6] ஒவ்வொரு ஊருக்கும் ' தலையாரி ' என்ற அலுவலரை நியமித்தல் பற்றிக்கூறுகிறது.

இந்தத் தலையாரிகள் அல்லது காவல்காரர்கள் காவல் ( போலீஸ் ) வேலையைச் செய்தனர்.[6அ]

---

4. ச. ம மோ. த. 5–18
5. கிராம முன்சீபுகளைக் குறித்த 1816ஆம் ஆண்டு 4ஆவது சட்டம், தமிழாக்கம், தமிழ்ப் பல்கலைக் கழக நூல்நிலையத்தில் உள்ளது 6, ச. ம. மோ. த. 28–53
6அ. " The Kavalkars or Talaiyaris performed Police duties " – p. 93, Administration and Society in the Carnatic " – K. Rajayyan,

## போலீஸ் அதிகாரம்

முகாசா கிராமங்களில், மராட்டிய மன்னர் நியமித்த மத்யஸ்தர்களுக்குப் போலீஸ் அதிகாரமும் அளிக்கப்பெற்றது.

"27—5—1827......... ரா. மகாராஜா சாயேப் அவர்கள் நியமித்திருக்கும் மத்யஸ்தர்களுக்குப் போலீஸ் அதிகாரம் வேண்டும் என்று நாம் உத்தரவிடச் சம்மதிக்கிறோம். கும்பினியின் தாசில்தார் வகைறாக்கள் போலீஸ் சங்கதியில் எப்படி விசாரணை செய்கிறார்களோ அதேமாதிரி விசாரணை வாக்குமூலம் விதிப்பது, தண்டனை செய்வது இவற்றையெல்லாம் நமக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும். பக்ஷபாதம் செய்யக்கூடாது"

—என்ற குறிப்பால்[7] கும்பினி தாசில்தார்கள் "போலீஸ்" தரப்பில் விசாரணை செய்து தீர்ப்புக்கூறுவது உண்டு என்றும், அதுபோன்றே மத்யஸ்தர்களும் செய்வதோடு கலெக்டருக்குச் செய்திகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் கலெக்டர் விதித்தார்.

"கிராம முன்சீபுகள்" சிறுசிறு வழக்குகளை விசாரிக்கும் உரிமை உடையவர்கள் ஆக இருந்தனர்.

"சில்லரை வியாஜ்யம் சிறிதாயிருந்தால் கிராம முன்சீப்பின் நியாயப்படி 6 அடிகள் வரையில் அடிக்கிறது. கொஞ்சம் அபராதம் விதிக்கலாம். கொஞ்ச நேரம் காவலில் வைக்கிறது. இவ்வேலைகள் எல்லாம் செய்யலாம்"

என்பது ஆவணப்பகுதி[8].

கும்பினி போலீஸ்காரர்கள் 'சர்க்கார்' அலுவலர் பேரில் வழக்குத் தொடுக்க வேண்டியிருப்பின் சர்க்காருக்குத்தான் தெரிவிக்கவேண்டும். அது கலெக்டருக்கு விசாரணைக்கு வந்தால் அதைக் கலெக்டர் ஏற்றுக்கொள்ள மாட்டார்; தள்ளிவிடுவார் என்றும் தெரிகிறது.[9]

